Mrinalini's

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின்

வைணவக்கொடை

முனைவர் கு அரிகரசுதன்

ஆய்வேட்டின் நூல்வடிவு

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின்

வைணவக்கொடை

முனைவர் கு அரிகரசுதன்

பாரதியார் பல்கலைக்கழக
முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெற்ற ஆய்வேட்டின் நூல்வடிவு

ந சுப்பு ரெட்டியார்100

Centenary Committee Publications

பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின்

வைணவக்கொடை

Published by:



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications
AD-13, 5th Street
Anna Nagar West
Chennai – 600 040

March 2021

Price: Rs.625.00

ISBN 978-81-948697-6-4

9 788194 869764 >

Printed at:
DJ Printers, Chennai – 600 09

பதிப்புரை

பேராசிரியரின் நூற்றாண்டில் (2015-2016), நூற்றாண்டுக்குழு பன்னிரெண்டு நூட்களை வெளியிட்டது. அவரது நூல்கள் இணையதளத்தில் அனைவருக்கும் பயன்பெறும் வகையில் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன. (**https://archive.org/details/@centenary1916nsr2016**)

‘***பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின் வைணவக்கொடை***’ எனும் இந்நூல், முனைவர் கு அரிகரசுதன் அவர்களால் பாரதியார் பல்கலைக் கழகத்தில் 2019-ல் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வேட்டின் நூல்வடிவு. 2020-ல் முனைவர் பட்டம் வழங்கப்பெற்றது.

1993-ல் முனைவர் உலகநாயகி பழனி அவர்கள் பேராசிரியரின் நூட்களில் ஆய்வு மேற்கொண்டு, ‘***தமிழ்வள மேம்பாட்டில் டாக்டர் ந சுப்புரெட்டியாரின் பணி***’ எனும் ஆய்வேட்டினை சென்னை பல்கலைக்கழகத்தில் அளித்து முனைவர் பட்டம் பெற்றார்.

2017-ல் முனைவர் க ஜோதிமணி அவர்கள் பேராசிரியரின் நூட்களில் ஆய்வு மேற்கொண்டு, ‘***ந சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணிகள்***’ எனும் ஆய்வேட்டினை மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் அளித்து முனைவர் பட்டம் பெற்றார்.

பேராசியரின் நூட்களை மையமாகக் கொண்டு ஆராய்ச்சி மேற்கொள்ள விழையும் ஆராய்ச்சி மாணவர்கள் வரவேற்கப்பெறுகின்றனர்

நூற்றாண்டுக் குழு

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் வைணவக் கொடை

பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (Ph.D.) பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்
திரு. கு. அரிகரசுதன்

நெறியாளர்
முனைவர் சு. சதீஷ்குமார்
உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை
கொங்குநாடு கலைஅறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
(தேசிய மதிப்பீடு மீள்தர நிர்ணயக்குழுவின் ‘A’ தகுதி பெற்றது)
(பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் தனிச்சிறப்புத்திறன் கல்லூரித் தகுதி பெற்றது)
கோயம்புத்தூர்–641 029

நவம்பர் – 2019

நன்றியுரை

முனைவர்பட்ட ஆய்வினை மேற்கொள்ள வாய்ப்பு நல்கிய கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தலைவர் **முனைவர் மா.ஆறுச்சாமி ஐயா** அவர்களுக்கும் கல்லூரிச் செயலர் மற்றும் இயக்குநர் **முனைவர் சி.ஏ.வாசுகி** அவர்களுக்கும் என் இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

ஆய்வுப்பணிக்கான உதவிகளைச் செய்தளித்த கல்லூரியின் முதல்வர் **முனைவர் மா.இலட்சுமணசாமி** அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆய்வுக்கு நெறியாளராக அமைந்து கருத்துக்கள் பல வழங்கி நெறிப்படுத்திய நெறியாளர் **முனைவர் சு.சதீஷ்குமார்** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆய்வுக்குத் தேவையான உதவிகளைச் செய்த தமிழ்த்துறைத்தலைவர் **முனைவர் க.முருகேசன்** அவர்களுக்கும் **தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்** அனைவருக்கும் என் நன்றி உரியது.

ஆய்வு செம்மையுற அமைவதற்காக ந.சுப்புரெட்டியாரின் நூல்களனைத்தினையும் கொடுத்தும் உதவித்தொகை வழங்கியும் பேருதவி செய்த ந.சுப்புரெட்டியார் **100** அறக்கட்டளையின் நிறுவனர் **முனைவர் சு. இராமலிங்கம்** அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியது.

ஆய்வுக்குத் தேவையான நூல்களைக் கொடுத்து உதவிய கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் நூலகர் **முனைவர் ஆர். செந்தில்குமார்** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆய்வினைச் சிறப்பாகச் செய்வதற்கு ஊன்றுகோலாக இருந்து என்னை ஊக்கப்படுத்திய என் சகோதரர் **திரு. கு.அன்னராஜ்** அவர்களுக்கும் இந்நிலவுலகில் இல்லாது போனாலும் என் இதயத்தில் என்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் என் பெற்றோருக்கும் எனது நன்றி.

ஆய்வேட்டைச் சிறப்பான முறையில் கட்டமைப்பு செய்து கொடுத்த வசந்தி பிரிண்டர்ஸ் நிறுவனத்தினருக்கும் நன்றி கூறி மகிழ்கின்றேன்.

சுருக்கக் குறியீட்டு விளக்கங்கள்

1.	அம.பிரான்.,	–	அமலனாதிபிரான்
2.	இராம. நூற்.,	–	இராமாநுசர் நூற்றந்தாதி
3.	இரண். திருவந்.,	–	இரண்டாம் திருவந்தாதி
4.	உபதேச.,	–	உபதேச இரத்தினமாலை
5.	க. நு.சிறு.,	–	கண்ணிநுண் சிறுத்தாம்பு
6.	குறள்	–	திருக்குறள்
7.	சோழ நாட். திருப்.,	–	சோழநாட்டுத் திருப்பதிகள்
8.	திருவாய்.,	–	திருவாய்மொழி
9.	திருக்குறுந்.,	–	திருக்குறுந்தாண்டகம்
10.	திருச். விருத்.,	–	திருச்சந்த விருத்தம்
11.	திருவிருத்.,	–	திருவிருத்தம்
12.	திருவரங். கலம்.,	–	திருவரங்கக் கலம்பகம்
13.	தே.பி.,	–	தேசிக பிரபந்தம்
14.	தொல். பொருள். மர.,	–	தொல்காப்பியப் பொருளதிகாரம் மரபியல்
15.	தொல்.பொருள். அகத்.,	–	தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல்
16.	தொல்.பொருள். புறத்.,	–	தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியல்
17.	தொண். நாட். திருப்.,	–	தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
18.	நாச். திரு.,	–	நாச்சியார் திருமொழி
19.	நான். திருவந்.,	–	நான்முகன் திருவந்தாதி
20.	நூ.,	–	நூற்பா
21.	நூற். திரு. அந்.,	–	நூற்றியெட்டுத் திருப்பதிக் கோவைஅந்தாதி
22.	ப.,	–	பக்கம்
23.	பக்.,	–	பக்கங்கள்
24.	பா.,	–	பாடல்
25.	பாண்டி. நாட். திருப்.,	–	பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
26.	பெரிய. திரு.,	–	பெரியதிருமொழி
27.	பெரிய . திருவந்.,	–	பெரிய திருவந்தாதி
28.	பெரியாழ். திரு.,	–	பெரியாழ்வார் திருமொழி
29.	பெரு. திரு.,	–	பெருமாள் திருமொழி

30. மலை நாட். திருப்.,	–	மலைநாட்டுத் திருப்பதிகள்
31. முதல் திருவந்.,	–	முதல் திருவந்தாதி
32. மூன். திருவந்.,	–	மூன்றாம் திருவந்தாதி
33. வட நாட். திருப்.,	–	வடநாட்டுத் திருப்பதிகள்
34. ஸ்ரீவச. பூச.	–	ஸ்ரீவசனபூசணம்

பொருளடக்கம்

முன்னுரை

தமிழ்மொழி வளர்ச்சியிலும் இலக்கிய வளர்ச்சியிலும் பக்திக்குத் தனியிடமுண்டு. ‘பக்தியின் மொழி’ என்றும் ‘சமயம் வளர்த்த தமிழ்’ என்றும் போற்றப்படும் அளவுக்குத் தமிழ்மொழியால் சமயம் செழித்தோங்கியது. சைவம், வைணவம் ஆகிய இருபெரும் சமயங்களைச் சார்ந்த அருளாளர்கள் தங்களுடைய பக்தியனுபவத்தையும் இறைவனின் பெருங்கருணையையும் வலியுறுத்த பன்னிரு திருமுறைகளையும், நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தையும் பாடியருளினர். நாயன்மார்கள் அருளிச் செய்த பன்னிரு திருமுறைகள் சைவ சமய மேன்மையை உணர்த்துகின்றன. வைணவ சமயம் சார்ந்த நூலாக ஆழ்வார்கள் பாடியப் பாசுரத் தொகுப்பாகிய நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் திகழ்கிறது. நெறியுடைய மண்ணுலக வாழ்வின் வழியே வானுறையும் பேற்றினைப் பெறலாம் என்பது வள்ளுவர் வகுத்தளித்த வாழ்வியல் கோட்பாடாகும். இப்பேருண்மையை உணர்ந்த அருளாளர்கள் பக்தி நெறி வழியே உடலாலும் உள்ளத்தாலும் பண்பட்டு வாழ்வாங்கு வாழ்ந்தனர். பக்தியாகிய அனுபவத்தின் வழியே எங்கும் நிறைந்த இறைவனின் இருப்பினைத் தம்முள் உணர்ந்து இன்புற்றனர். உலகியலைத் துறந்து உறுதிப் பொருளான இறைவனைப் பற்றுகின்ற வகையில் அருளியல் வாழ்வினை மேற்கொண்டனர். இவ்வாறு இறைநெறியில் நின்ற ஆழ்வார் பெருமக்கள் அருளிச் செய்த பனுவல்களைத் திறனாய்ந்தும், அவர்கள் சென்று வழிபட்ட திருத்தலப் பெருமையினை விளக்கியும், வைணவத்தின் முடிமணியாகத் திகழும் மெய்யியல் உண்மைகளைத் தெளிவு படுத்தியும் பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரால் எழுதப்பட்ட நூல்களை ஆராய்ந்து அவரது ஆழ்ந்த வைணவப் புலமையை இவ்வாய்வு கண்டுரைக்க முனைகிறது.

ஆய்வின் நோக்கம்

ஒரு மொழியினை வளப்படுத்தி அம்மொழி சார்ந்த சமுதாயத்தைப் பண்படுத்துவதே இலக்கியத்தின் தலையாயக் கடமையாகும். அவ்வகையில் தமிழ் மொழியில் தோன்றிய பக்திப் பனுவல்கள் மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தி வருகின்றன. தமிழகத்தின் தொன்மைச் சமயங்களில் ஒன்றான வைணவத்தை வளர்த்த ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தினை களமாகக் கொண்டு பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் திறனாய்வு நூல்களைப் படைத்துள்ளார். சில நூல்கள் பயண நூல்களாகவும் அமைந்துள்ளன. இவற்றின் வழி வெளிப்படும் பேராசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தையும் அவர் படைத்த வைணவ சமயச் சார்புடைய நூல்கள் அனைத்தும் வைணவத்திற்கு மிகப்பெரிய கொடையாக விளங்கும் திறத்தையும் வெளிப்படுத்திக் காட்டுவது இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

ஆய்வின் எல்லை

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் படைத்த வைணவ சமயம் சார்ந்த பதினாறு (16) நூல்கள் இவ்வாய்விற்கு எல்லையாக அமைகின்றன.

ஆய்வுத் தலைப்பு

இவ்வாய்வின் தலைப்பானது **“பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் வைணவக் கொடை”** என்பதாகும். இவ்வாய்வில் ந. சுப்புரெட்டியாரின் சமயம் சார்ந்த நூல்களில் வைணவ சமயம் சார்ந்த நூல்கள் பதினாறு **(16)** மட்டும் முதன்மை ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றினை ஆய்விற்கு உட்படுத்தி ந. சுப்புரெட்டியாரின் தமிழலக்கியப் பணிகளைத் திறனாய்ந்து மதிப்பீடு செய்வதாக அமைகிறது.

ஆய்வின் கருதுகோள்

‘‘பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் வைணவம் சார்ந்த நூல்களனைத்தும் அவர்தம் நுண்ணறிவையும் திறனாய்வுப் பார்வையையும் அருளியல் அனுபவத்தையும் வெளிப்படுத்தி வைணவ சமயத்திற்குக் கொடையாக அமைந்து வளம் சேர்க்கின்றன’’ என்ற கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வு முன்னோடிகள்

சிறந்த தமிழறிஞராக விளங்கிய பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் படைப்புகளை ஆய்வுக் களமாகக் கொண்டு இதுவரையில் தமிழ் ஆய்வுலகில் மிகச் சில ஆய்வுகள் மட்டுமே நிகழ்ந்துள்ளன. பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் எழுதிய அனைத்து நூல்களையும் ஆய்விற்கு உட்படுத்தி ‘‘தமிழ்வள மேம்பாட்டில் டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் பணி” எனும் தலைப்பில் ஆராய்ந்து உலகநாயகி பழனி என்பவர் **1993** ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். ‘‘ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணிகள்” என்ற தலைப்பில் முனைவர் க.ஜோதிமணி என்பவர் **2017** ஆம் ஆண்டு மதுரை காமராஜர் பல்லைகக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். மேற்கண்ட ஆய்வுகளை அடித்தளமாகக் கொண்டும் அவற்றிலிருந்து மாறுபட்டும் இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வு ஆதாரங்கள்

இவ்வாய்விற்கு முதன்மை ஆதாரங்களும் துணைமை ஆதாரங்களும் ஆய்வு ஆதாரங்களாக அமைகின்றன.

முதன்மை ஆதாரங்கள்

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் வைணவ சமயம் சார்ந்த நூல்களில் பதினாறு நூல்கள் **(16)** இவ்வாய்விற்கு முதன்மை ஆதாரங்களாகின்றன.

1. அர்த்த பஞ்சகம்

2. ஆழ்வார்களின் ஆராஅமுது

3. பரகாலன் பைந்தமிழ்

9. சடகோபன் செந்தமிழ்

10. முக்தி நெறி

11. நவவித சம்பந்தம்

4. விட்டுசித்தன் விரித்த தமிழ்
5. சிலநோக்கில் நாலாயிரம்
6. வைண உரைவளம்
7. வைணவமும் தமிழும்
8. கலியன் குரல்
12. சோழநாட்டுத் திருப்பதிகள் (பகுதி – 1, 2)
13. பாண்டி நாட்டுத் திருப்பதிகள்
14. வடநாட்டத் திருப்பதிகள்
15. மலைநாட்டுத் திருப்பதிகள்
16. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்

துணைமை ஆதாரங்கள்

பக்தி இலக்கியம் தொடர்பான நூல்கள், திறனாய்வு நூல்கள், கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள் கலைக் களஞ்சியங்கள், அகராதிகள் ஆகியவைத் துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

ஆய்வின் அணுகுமுறைகள்

இவ்வாய்வில் பகுப்புமுறைத் திறனாய்வு அணுகுமுறையும் (Analytical Approach) விளக்க முறைத் திறனாய்வு அணுகுமுறையும் (Descriptive approach) மேற்கொள்ளப்படுகின்றன.

ஆய்வேட்டின் கட்டமைப்பு

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாகக் கீழ்க்காணும் நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல் 1 திருத்தலப் பயண அனுபவங்கள்

இயல் 2 திருத்தல அமைப்பு முறைகளும் வழிபாட்டு முறைகளும்

இயல் 3 வைணவ மெய்யியல்

இயல் 4 ஆழ்வார்களின் அருளிச் செயல் அனுபவங்கள்

இயல் விளக்கங்கள்

முன்னுரை

முன்னுரைப் பகுதியில் ஆய்வின் நோக்கம், ஆய்வுத் தலைப்பு, ஆய்வின் எல்லை, ஆய்வின் கருதுகோள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வு ஆதாரங்கள், ஆய்வேட்டின் கட்டமைப்பு, இயல் விளக்கங்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இயல் – 1 திருத்தலப் பயண அனுபவங்கள்

பயண அனுபவங்களைக் கூறும் நூல்கள் தமிழுக்குப் புதிதல்ல. சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள ஆற்றுப்படை நூல்களிலேயே இதற்கான தோற்றுவாயைக் காணமுடிகிறது. அதனைத் தொடர்ந்து சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகியின் வழிநடைச் செலவு இடம்பெற்றுள்ளது. பக்தியிலக்கிய காலத்தில் தோன்றிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல்வேறு தலங்களுக்குச் சென்று அங்கு உறையும் கடவுளரைப் பாடிப் பரவியுள்ளனர். அவ்வகையில் அமுதத் தமிழ்ப் பாடிய ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட மலைநாட்டுத் திருப்பதிகள்,

வடநாட்டுத் திருப்பதிகள், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், பாண்டி நாட்டுத் திருப்பதிகள், சோழ நாட்டுத் திருப்பதிகள் ஆகிய தலங்களுக்கு நேரில் சென்று பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் பெற்ற அனுபவங்கள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

இயல் – 2 திருத்தல அமைப்பு முறைகளும் வழிபாட்டு முறைகளும்

ஆழ்வார்களால் வழிபடப்பட்ட திருத்தலங்களின் அமைவிடம், கருவறை, விமானம், திருச்சுற்று உள்ளிட்ட தல அமைப்புகள், திருத்தலச் சிறப்புகள், அத்திருத்தலங்களின் வழிபாட்டு முறைகள், வழிபட்டுப் பேறுபெற்றோர், அத்தலத்திற்குத் தோன்றிய தலபுராணம் உள்ளிட்ட சிற்றிலக்கியங்களின் வாயிலாகப் புலப்படும் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்பு ஆகியன இவ்வியலில் ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளன.

இயல் – 3 வைணவ மெய்யியல்

இறையுண்மை, இறைவனின் கலியாண குணங்கள், பெருங்கருணை, ஐவகை அவதார நிலைகள், உயிர் உண்மை, உயிர்களின் எளிமை, உயிர்கள் இறைவனை அடையும் வழி, பக்தி மற்றும் பிரபத்தியின் அருமை, சரணாகதி, முக்திநிலை உள்ளிட்ட வைணவ மெய்யியல் கொள்கைகள் ஆழ்வார் பாசுரங்களில் இடம்பெற்றுள்ள தன்மையும் ஆழ்வார்களுக்குப் பின் தோன்றிய ஆச்சாரியர்கள் உரைக்கும் மெய்யியல் நுட்பங்களும் பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரால் எளிமைப்படுத்தப்பட்டு அனைவரும் உணரும் வகையில் எடுத்துரைத்துள்ள திறம் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

இயல் – 4 ஆழ்வார்களின் அருளிச்செயல் அனுபவங்கள்

இவ்வியலில் ஆழ்வார்கள் பற்றிய வரலாறு, பன்னிரு ஆழ்வார்கள் அருளிச் செய்த பிரபந்தங்களின் பாசுரச் சிறப்புகள், அப்பாசுரங்களில் அமைந்துள்ள அழகியல் உத்திகள் ஆகியவற்றைக் குறித்துப் பேராசிரியர் ஆராய்ந்துள்ள ஆய்வின் நுட்பங்களும், ஒப்பீட்டு முறைகளும் சான்று காட்டும் பாங்கும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

முடிவுரை

மேற்கண்ட நான்கு இயல்களின் வழியே ஆராய்ந்து கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகள் இப்பகுதியில் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. மேலும் பேராசிரியரின் வைணவ நூல்களில் எதிர்காலத்தில் மேற்கொள்ளத்தக்க புதிய ஆய்வுக் களங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

துணை நூற்பட்டியல்

ஆய்விற்குத் துணை நின்ற நூல்களின் பட்டியல் அகர வரிசையில் தொகுக்கப்பட்டுத் துணைநூற் பட்டியலாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பின்னிணைப்புகள்

பின்னிணைப்பில் ஆய்வாளரின் ஆய்வுக் கட்டுரைகள், 108 வைணவத் திருத்தலங்களின் திருமால்–திருமகள் திருநாமங்கள், தீர்த்தங்கள், அமைவிடங்கள் ஆகியவை அட்டவணைப் படுத்தப் பட்டிருப்பதோடு 108 வைணவத் திருத்தலங்களின் புகைப்படங்களும் ஆய்விற்கு வலுசேர்க்கும் வகையில் பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளன.

இயல் 1

திருத்தலப் பயண அனுபவங்கள்

திருத்தலப் பயணம் என்பது ஒருவரோ, பலரோ ஒரு திருத்தலத்திற்கோ அல்லது பல திருத்தலங்களுக்கோ செல்லும் பொருட்டு திருத்தலப் பயணம் மேற்கொள்ளுதலாகும். அத்தகைய திருத்தலப் பயணங்களை மேற்கொண்டு அப்பயணம் பற்றி எழுதும் நூல்கள் திருத்தலப் பயண நூல்களாகின்றன.

திருத்தலங்களை நோக்கிப் பயணம் செய்வதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் அதில் முதன்மைக் காரணமாகக் கருதப்படுவது இறைவன் மீதுள்ள அளப்பறிய அன்பினால் திருத்தலப் பயணத்தின் மூலம் காணுகின்ற ஒவ்வொன்றும் இறைவனைக் காண்பதற்குச் சமமாகும் என்ற மனநிலை மேலோங்கி இருந்தமையே ஆகும்.

இவ்வாறு திருத்தலப் பயணம் செய்வது வடமொழியில் 'யாத்திரை' என்று அழைக்கப்படுகிறது. இத்திருத்தலப்பயணம் மேற்கொண்டு அந்த அனுபவத்தினால் எழுதப்படும் நூல்கள் "பயண நூல்கள்" என்றும் அழைக்கப்படுகின்றன.

இவ்வகையில் திருத்தலப் பயணம் மேற்கொண்டு பலரும் தங்களது பயண அனுபவத்தின் விளைவாகப் பல பயண நூல்களைப் படைத்துள்ளனர். அதில் சோமலே எழுதிய "இமயம் முதல் குமரி வரை", பரணிதரன் எழுதிய "அருணாசல மகிமை", "காசியாத்திரை", "கேரள விஜயம்" ஆகிய நூல்களும், சொக்கலிங்கம் எழுதிய "திருத்தலப் பயணம்", தி.சு.அவினாசிலிங்கம் எழுதிய "திருக்கேதாரகயிலாய யாத்திரை" , ஆர்.ஏ.சாஸ்திரி எழுதிய "திருக்கேதார பதரிகாச்சிரம யாத்திரை", குருசாமி தேசிகர் எழுதிய "மகா கயிலாய யாத்திரை", ஆர்.ஏ.சாஸ்திரி எழுதிய "மகா மேரு யாத்திரை", காளத்தி நடேச முதலியார் எழுதிய "வடநாட்டு வளப்பமும் வாரணாசி யாத்திரையும்", பாஸ்கரத் தொண்டைமான் எழுதிய "வேங்கடம் முதல் குமரி வரை" போன்ற நூல்கள் குறிப்பிடத்தகுந்த திருத்தலப் பயண நூல்களாகும்.

சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் உள்ள ஐந்து ஆற்றுப்படை நூல்களான திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகியன ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் வழிகளைப் பற்றி மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. சங்க இலக்கியத்திற்குப் பின் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கவுந்தியடிகள் ஆகியோர் சென்ற மதுரைப் பயணம் குறித்த செய்திகள் விரிவாக இடம்பெற்றுள்ளன. இவ்வாறு பல்வேறு காலங்களில் எழுதப்பெற்ற நூல்களைப் பயண நூல்கள் என்றும் பிறவகை நூல்களென்றும் பட்டியல் படுத்தும் முறை ஐரோப்பியர் தமிழகத்திற்கு வந்த பின்னர்தான் நடைமுறைக்கு வந்தது. **"ஐரோப்பியரான 'ஜான் மர்டாக் (John Murdoch) என்பவர்தான் அச்சான தமிழ் நூல்களையெல்லாம் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து வகைப்படுத்தி அண்மைக்காலம் வரையிலும் ஒவ்வொரு வகை நூல்களையும் தனித்தனியாகப் பிரித்து பட்டியல் தயாரிக்கும்**

தயாரிப்பு முறையினை நடைமுறைப் படுத்தினார்." (பயண நூல்கள் வழிப் பண்பாடு, ப.2) என்பர்.

தமிழில் வெளிவந்த முதல் பயண நூல், 1832ல் வெளியான ஏனுகுல வீராசாமி ஐயரின் **"காசி யாத்திரை"** பற்றிய நூலாகும். இந்த நூலின் பிரதி கிடைக்காததால், சேலம் பகடாலு நரசிம்மலு நாயுடு என்பவர் 1889இல் எழுதிய **"ஆரிய திவ்ய தேச யாத்திரையின் சரிதம்"** என்ற நூல்தான் தமிழின் முதல் பயண நூலாகக் கருதப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந் நூலினைப் பற்றிக் குறிப்பிடும் முனைவர் கே. பகவதி, **"கல்கத்தாவில் நடைபெற்ற இந்து சன சமூக மகாசபைத் தொடர்பான கோயம்புத்தூர் மாவட்டப் பிரதிநியாக நூலாசிரியர் சென்ற பயண அனுபவங்கள் இந்நூலின் அடிப்படையாக அமைகின்றன. இந்நூலைத் தொடர்ந்து வெளிவந்த நூல்கள் குறுகிய காலத்து அமைந்த மிகப்பெரிய வளர்ச்சியாக நிற்றலை இப்பயண இலக்கிய வரலாறு நமக்குக் காட்சி தருகின்றது" (தமிழ் இலக்கியக் கொள்கை, ப.158)** என்று சுட்டிக்காட்டுகிறார்.

மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு கூறாகப் பயணம் விளங்குகிறது. தொடக்க காலத்தில் உணவுத் தேவைக்காக மனிதன் பயணத்தை மேற்கொண்டான். தற்காலத்தில் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளால் பயண முறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

உலக அளவில் வரலாற்றை அறிய உதவும் மூலங்களாகப் பல காரணிகள் உள்ளன. அவற்றுள் இலக்கியமும் ஒன்று. தமிழக வரலாற்றை அறிவதற்குத் தமிழ் இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன. இவ்விலக்கியங்களின் வழி தமிழர்களின் பயண முறைகளைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

தொல்காப்பியத்தில் பயணக் குறிப்புகள்

தமிழின் தொன்மையான இலக்கணமான தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள,

"ஓதல் பகையே தூது இவை பிரிவே" (தொல்.,பொருள்., அகத்., நூ.25)

என்ற நூற்பாவிலும்,

"மேவிய சிறப்பின், ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்
இழைத்த நண்பொருள் முடியவும் பிரிவே"(தொல்.,பொருள்., அகத்., நூ.28)

என்ற நூற்பாவிலும் பிரிவு நிலைகளைக் குறித்து தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இவை அன்றைய பயணத்தின் இயல்பைத் தெரிவிக்கின்றன.

மேற்குறிப்பிட்ட பிரிவுகள் மட்டுமன்றி ஒத்த அன்புடையத் தலைவன் பொருள் ஈடுபடுவதற்காகத் தலைவியை விட்டுப் பிரிந்து செல்வதையும் அப்பயணம் கடல் கடந்த பயணமாக இருப்பின் தலைவியை உடனழைத்துச் செல்லும் வழக்கம் இல்லையென்பதையும்,

"முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை" (தொல்.,பொருள்., அகத்., நூ.34)

என்ற நூற்பாவின் வழி அறிய முடிகிறது.

சங்க இலக்கியங்களில் பயணம்

சங்கப் பாடல்களில் பொருள்வயின் பிரிந்த தலைவனையும், வரைவிடை பிரிந்த தலைவனையும், போருக்காகப் பிரிந்த தலைவனையும், உடன்போக்கு மேற்கொண்ட தலைவியையும், அவளைத் தேடிச்சென்ற செவிலியையும், தலைவன் ஊர் சென்று தலைவி நடத்தும் இல்லறத்தைக் கண்டு வந்த தோழியையும் காண முடிகிறது. இத்தகைய கருத்தமைந்த பாடல்களில் செல்லும் வழியின் தன்மை அங்குள்ள இயற்கைக் காட்சிகள், விலங்கினங்கள் மற்றும் புள்ளினங்களின் வாழ்க்கை முறை வழியில் உள்ள ஏதம் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன.

பயண இலக்கியத் தோற்றம்

இலக்கிய வரிசையில் தர்சமயம் கிடைக்கப்பெற்ற நூல்களின் வரிசையில் பகடாலு நரசிம்லுநாயுடு, ஏ.கே.செட்டியார், சோமலே ஆகியோர் பயண இலக்கிய வரிசையின் முன்னோடிகளாகக் கருதப்பட்டாலும் தொல்காப்பியப் புறத்திணையியலில்,

"பெற்றப் பெருவளத்தினைப் பெறாா்க்கு அறிவுறுத்திச்
சென்று பயனெதிர சொன்ன பக்கம்" **(தொல்.,பொருள்., புறத்., நூ.30)**

எனக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கும் தன்மை தொல்காப்பியக் காலத்திலிருந்தே பயண இலக்கியம் வேரூன்றி இருந்த நிலையினை உணர்த்துகிறது.

பயண இலக்கியத்தில் பக்தி நிலை

பலரும் பல நோக்கங்களுக்காகப் பயணம் மேற்கொண்டிருந்த போதிலும் சமயம் சார்ந்த பயணமே மிக நீண்ட பயணமாகவும், உயிருக்கு உறுதி பயக்கும் பயணமாகவும் இருப்பதினால் ஏனைய பயணங்களைக் காட்டிலும் சமயம் சார்ந்த பயணங்கள் மிகவும் சிறப்பிடம் பெறுகின்றன.

சமுதாயத்தில் பொதுநலனின் உள்ளார்ந்த உயர் இயல்புகளை அனைவரும் அறிந்து கொள்ளவும் திருத்தலத்தின் அமைப்பு, சிறப்புகள், அங்குள்ள இறை நிலை, தீர்த்தச் சிறப்புகள் ஆகியவற்றை எளிதில் புரிந்துகொள்ள ஏதுவாய்த் திருத்தலப் பயணங்கள் அமைகின்றன.

பக்தியினைப் பரவச் செய்யும் மூலதாரமாக இருக்கும் சமயச் சார்புள்ள பயண நூல்களனைத்தும் மக்களிடையே பக்தியுணர்வை ஊக்குவிக்கும் காரணிகளாக அமைகின்றன. அவ்வகையில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் மேற்கொண்ட திருத்தல பயணங்களும் பயணத்தின் வழி பெற்ற ஆன்மீக அனுபவங்களும் இவ்வியலில் ஆராயப்பட உள்ளன.

ந.சுப்புரெட்டியாரின் திருத்தலப் பயணம்

சைவ சமயத்தினைச் சார்ந்தவரான ந.சுப்புரெட்டியார், வைணவ சமயத்தின்பால் அதிக ஈடுபாடு கொண்டதன் காரணமாகக் பல ஆண்டுகளாக விடாது முயன்று தனது முனைவர் பட்ட ஆய்விற்காக வைணவ சமயத்தினை தேர்ந்தெடுத்துத் துறையூர், காரைக்குடி, திருப்பதி ஆகிய மூன்று இடங்களில் முயற்சி செய்து இறுதியாக வைணவத் திருத்தலமாகிய திருப்பதியில் இசைவு பெற்றார். அதன் காரணமாக நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் தத்துவத்தினை மட்டும் தனது ஆய்விற்காக எடுத்துக் கொண்டார். அவர் பதிவுபெற்ற துறையும்

வடமொழித்துறை, அங்குள்ள இணைப்பேராசிரியர் ஒருவரும் வைணவர். அவ்வைணவப் பேராசிரியரும் வைணவத்தில் நன்குப் பயிற்சி பெற்றிருத்ததால் அவரை நெறியாளராகக் கொண்டு தனது ஆய்வினைத் தொடங்கினார். தனது ஆய்வுப் பணிக்காக மட்டுமின்றி வைணவத்தின் சிறப்பினை முழுதும் உணர வேண்டுமாயின் வைணவத் திருத்தலங்க அனைத்தினையும் தாமே நேரில் பார்த்து அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தினை ஏற்படுத்திக்கொண்டு, தமது ஆய்வுக் காலங்களில் கிடைத்த விடுமுறை நாட்களில் முப்பத்தாயிரம் ரூபாய் செலவில் திவ்விய தேசங்களைக் கண்டு மகிழ்ந்தார். அவ்வாறு தான் கண்ட பயண அனுபவங்களில் அத்திருத்தலங்களின் இருப்புமுறை, அவைகள் அமைந்திருக்கும் சூழ்நிலை, அத்திருத்தலங்களுக்குச் செல்லும் வழிகள் ஆகியவற்றினை தம்முடைய பயண நூல்களில் ஆங்காங்குக் குறிப்பிட்டிருப்பதோடு, ஆழ்வார்கள் தம் பக்தி மிகுயால் செழித்திருகும் பாசுரங்களின் சொல்வளம், ஆசாரியர்களின் உரை நயம், அகப்பொருள் துறைப் பாசுரங்களின் சிறப்பு ஆகியவற்றினை தான் சுவைத்து மகிழ்ந்ததோடு வைணவ சித்தாத்தங்களின் அடிக்குறிப்புகளைச் சுட்டிக்காட்டும் அழகிலும் படிப்போரிடையே வைணவ இலக்கியத்தின்பால் அவாவினையும், பக்தி உணர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளார். (மலை நாட்., திருப்., நூல் முகம், ப.1)

பயணச் சிந்தனை

பொதுவாக, திருத்தலப் பயணத்தினை மேற்கொள்ளும் அருளாளர்கள் அத்திருத்தலங்களுக்குச் செல்லும் முன் இறைவனை உள்ளூற நினைத்து தியானம் செய்தே தம்முடைய பயணத்தைத் தொடங்குவதுபோல ந.சுப்புரெட்டியாரும் வைணவத் திருத்தலப் பயணத்தின் போது தான் செல்லுகின்ற திருத்தலத்தின் தத்துவக் கருத்துக்களை மனதில் அசைபோட்டுக் கொண்டே ஒவ்வொரு திருத்தலத்திற்கும் ஏகுவதை அவருடைய ஆறு பயண நூல்களிலும் காண முடிகிறது.

- திருவண்பரிசாரத்திற்குச் செல்லும் முன் ‘அடியோமோடும் நின்னொடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு’ என்ற பெரியாழ்வாரின் திருவாக்கினை நினைத்துப் புறப்படுகின்றார். இப்பாசுரத்தினை அசைபோட்டுக் கோண்டே செல்கிறார். (மலை நாட்., திருப்., ப.1)
- திருவட்டாறு திருத்தலத்தினைச் சேவிக்கப் புறப்படும்முன் இறைவனுடைய ஐந்து நிலைகளான பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் ஆகிய ஐந்து நிலைகளையும் சிந்தித்துக்கொண்டே, இந்நிலைகளில் அர்ச்சவாதாரத்திலேயே அனைத்துக் குணங்களும் நிறைந்திருக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் புறப்படுகின்றார். (மலை நாட்., திருப்., ப.14)
- திருகாட்கறை என்ற திருத்தலத்தினைக் காணப் புறப்படும்முன் இறைவனை அனுபவிக்கும் முறைகளைச் சிந்தனையில் தேக்கிக் கொண்டு அவற்றை நினைத்த நிலையில் ‘எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே’ என்ற பாசுர வாக்கியத்தினை நினைத்துப் புறப்படுகின்றார். (மலை நாட்., திருப்., ப.159)

- காஞ்சி என்ற தொண்டைநாட்டுத் திருப்பதிக்குச் செல்லும் முன் முக்தி தரும் ஏழு நகரங்களுள் 'அருளாளர் காட்சிக்கு ஒவ்வாது' என்ற தேசிகரின் வாக்கினை நினைத்துக்கொண்டு புறப்படுகின்றார். புறப்பட்டுப் போகும்போது மாதவச்சிவஞான போகியாரின் காஞ்சி புராணத்து 'கச்சிமா நகர் வோர் தட்டும்' என்ற திருநகரப் படலச் செய்யுளை அசைபோட்டு கொண்டே செல்கின்றார். (மலை நாட்., திருப்., ப.1,2)
- காஞ்சி வைகுண்ட பெருமாள் சந்நிதிக்குப் புறப்படுவதற்கு முன்பு பிராட்டியாரின் புருஷகாரத் தத்துவதை உணர்ந்த நிலையில்,

"(ஈசுவரன்) ரட்சிக்கும்போது பிராட்டி சந்நிதி வேண்டுகையாலே
இதிலே ஸ்ரீசம்பந்தமும் அநுசத்தேயம்" (முமுட்சுப்படி—40)

என்ற முமுட்சுபடி வாக்கியத்தை நினைந்தவாறே செல்கின்றார் (தொண்., நாட்., திருப்., ப.70)

- திரு எவ்வுள் என்ற திருத்தலத்திற்குப் புறப்படும்முன் திருவதரி ஆசிரமத்தில் வாழ்ந்த சாலிஹோத்திரர் என்ற மாமுனிவர் ஒருவர் வீட்சாரண்யம் என்ற பெயர்கொண்ட திருத்தலத்திற்கு வந்து தவம் செய்த வரலாற்றை நினைவில் கொண்டு புறப்படுகின்றார். (தொண்., நாட்., திருப்., ப.127)
- திருக்கோட்டியூர் என்னும் பாண்டி நாட்டுத் திருத்தலத்திற்குச் செல்லும்முன் இராமானுசருடைய பரந்த மனப்பான்மையை நினைக்கச் செய்யும்,

"காரேய் கருணை இராமாநுசா! இக்கட லிடத்தில்
ஆரே அறியவர் நின்அருளின் தன்மை" (இராம., நூற்., 25)

என்ற திருவரங்கத்தமுதனாரின் இராமாநுச நூற்றாந்தாதி திருப்பாசுரத்தை நினைத்த நிலையில் செல்கின்றார் (பாண்டி., நாட்., திருப்., ப.1)

- திருக்கோவலூர் என்ற திவ்விய தலத்திற்குப் புறப்படும்முன் நம்மாழ்வார் திருவாய்மொழியின்,

"அடியார் அடியார் அடியார் அடியார்தமக்கு
அடியார் அடியார்தம் அடியார் அடியார்களே" (திருவாய், 3:7:10)

என்ற அடியார்க்கும், அடியனாகிய பாகவத சேஷத்துவாதிசயத்தைப் பேசுவது பவகத்சேஷத்துவத்தின் உறைப்பையே பேசினபடியாகும் எனச் சிந்தித்தவாறே புறப்படுகின்றார். (பாண்டி., நாட்., திருப்., ப.163)

- வடநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான சிங்கவேள் குன்றம் என்ற திருத்தலத்திற்குச் செல்லும்போது ,

"சரணம் ஆகும்தன தாள்அடைந் தார்க்குஎலாம்
மரணம் ஆனால்வை குந்தம் கொடுக்கும் பிரான்" (திருவாய், 9:10:5)

என்ற நம்மாழ்வாரின் வாக்கினைச் சிந்தித்த நிலையில் புறப்பட்டு இப்பாசுர பிராத்தகர்மமாகிய நுகர்வினையை விளக்கும் பாசுரம் என்பதை உறுதிப்படுத்துகிறார். (வட நாட்., திருப்., ப.22)

- நேபாளத்தில் உள்ள சாளக்கிராமத்திற்குத் திருத்தலப் பயணம் மேற்கொள்வதற்கு முன்பு பகவத் விஷயத்திலுள்ள (தொகுதி 68–இல் உள்ள) ஒரு இதிகாசத்தை நினைவு கூர்கிறார். வெற்றிலைப் பெட்டியிலுள்ள சாளக்கிராமத்தின் சுவையான வரலாறாய் அமைகிறது இது. இதனை ஒரு வீர வைணவர் வாங்கிச் சென்று சாத்திர மரியாதைகள் சிறிதும் குறையாது வழிபாடு நடத்தியதையும் எம்பெருமான் அதைப் பொறுக்காது அவர் கனவில் தோன்றி முன்பு இருந்த இடத்திற்கே கொண்டு போய் விடும்படி கூறியதையும் சுவைபட விளக்கும் கதை இது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். (வட நாட்., திருப்., ப.55)
- திருவெள்ளறை என்ற திருத்தலத்திற்குப் புறப்படும் முன்னர் சரீர–சரீரி பாவனையைக் காட்டும் நம்மாழ்வாரின் 'உடல் மிசை உயிர் எனக் கரந்துளன்' (திருவாய்., 1:1:2) என்ற வாக்கினைச் சிந்திப்பதுடன் ஈட்டாசிரியர் குறிப்பிடும் ஓர் அருமையான இதிகாசத்தையும் நினைவு கூர்கிறார். சிறையில் இருக்கும் அரசனும் குற்றவாளியும் உறவு முறையில் எம்பெருமானுக்கும், ஆன்மாவுக்கும் ஒப்புமையாகத் தொடர்பு படுத்தி விளக்குகிறார். (சோழ., நாட்., திருப் (1), ப.51)
- திருநறையூர் என்ற திருத்தலத்திற்குப் பயணம் தொடங்கும் முன் 'மேதாவி' என்ற திருநாமம் கொண்ட முனிவர் ஒருவர் அத்திருத்தலத்தில் தவம் செய்த வரலாற்றை நினைவு கூர்கிறார். திருமகளே தமக்கு திருமகளாக அவதரிக்க வேண்டுமென்ற அம்முனிவரின் விருப்பத்திற்கேற்ப அவரது தவச்சாலையின் அருகில் ஒரு சிறு பெண் குழவியாக அவதரித்த பெரிய பிராட்டியை எடுத்து வஞ்சுளவல்லி என்ற திருநாமமிட்டு வளர்த்து திருமாலுக்கே திருமணம் செய்து வைக்கின்ற நிகழ்வினைச் சிந்திக்கின்றார். (சோழ., நாட்., திருப்., ப.101)
- திருவண்புருடோத்தம் எனப்படும் திருத்தல பயணத்தின்போது ஸ்ரீ என்று பெரிய பிராட்டியாருக்குத் திருநாமம் (முமுட்சுப்படி 123) என்ற வாக்கியத்தினை நினைவு கூர்ந்து, ஈசுவரனுக்கு எங்ஙனம் 'அ' என்பது ஒரு சிறந்த நாமமோ அங்ஙனம் பெரிய பிராட்டியாருக்கு ஸ்ரீ என்னும் திருநாமம் சிறந்தது. 'அ' என்பது இரட்சக–இரட்சியத்தை தெரிவிப்பது. 'ஸ்ரீ' என்பது புருஷகாரத்தை நினைவு கூர்வது என்பதனையும் சிந்திக்கின்றார். (சோழ நாட்., திருப்., தொகுதி–2, ப.148)
- சோழ நாட்டுத் திருக்கடலூர் என்ற திருத்தலத்திற்குப் பயணம் தொடங்கும் முன்னர் திருவாய்மொழி அர்த்த பஞ்சக ஞானத்தினை நல்கும் கருத்தினை நினைவு கூர்கிறார். அதோடு அர்த்தபஞ்சகம் என்பது இறைநிலை, உயிர்நிலை, நெறிஇயல், தடைஇயல், வீட்டியல் எனும் ஐந்து பொருள்களைக் கூறி உணர்த்துவதையும் நினைந்து பார்க்கிறார். (சோழ நாட்., திருப்., தொகுதி–2, ப.142)

திருத்தலங்களின் வரலாற்றுக் குறிப்புகள்

பேராசிரியார் ந.சுப்புரெட்டியார் தமது திருத்தலப் பயண நூல்களில் அத்திருத்தலங்கள் சார்ந்த வரலாற்றுக் குறிப்புகளையெல்லாம் முடிந்த வரையில் சுட்டிக்காட்டி அத்திருத்தலங்களின் வரலாற்றினைத் தெளிவுபடுத்துகிறார்.

திருநறையூர்

கோச்செங்கணான் கட்டிய மணிமாடக் கோயிலைப் பின்னர் வந்தவர் விரிவடையச் செய்துள்ளனர். சடாவர்மன் சுந்தரபாண்டியன் நறையூர் நம்பிக்கு ஒரு தலத்தையே சாசனம் செய்துள்ளான் என்பதனையும், தஞ்சை இரகுநாத நாயக்கன் நாச்சியாருக்கு ஒரு மண்டபம் கட்டியுள்ளான் என்பதனையும் சுட்டிக் காட்டுகிறார் (சோழ., நாட்., திருப்., பகுதி–2, ப.114)

திருமோகூர்

கிரேக்க நாட்டு வானநூல் அறிஞரான தாலமி, திருமோகூரைப் புவியியல் படத்தில் குறித்துள்ளார். இக் கோயிலில் இடைக்கால கல்வெட்டுகள் நிரம்ப காணப்படுகின்றன. இத்திருத்தலத்தில் பழையன் என்ற குறுநில மன்னன் அமைத்த பலத்த கோட்டை இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன. திருமோகூர் தென்பரம்பு நாட்டின் ஒரு பகுதியாகத் திகழ்ந்திருந்ததையும் அறிகின்றோம். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாயக்கர் மன்னனின் ஆட்சியில் இத்திருக்கோயிலைக் கோட்டையாகப் பயன்படுத்திய செய்தியும் அறியப்படுகின்றது என்கிறார். (பாண்டி., நாட்., திருப்., ப.89–90)

திருவன்பில்

இத்திருக்கோயில் சுவரில் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன. அவையெல்லாம் படி எடுக்கப்பெற்று விளக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ள செய்தியை எடுத்துரைத்துள்ளார். (சோழ நாட்., திருப்., பகுதி–1, ப.63)

அத்திகிரி

அத்திகிரி அண்ணலை நினைக்கும் பொழுது அவருடைய திருவருளுக்கு பாத்திரமான இராமநுசர், வேதாந்த தேசிகர், திருக்கச்சி நம்பி, கூரத்தாழ்வான் போன்றோர்களின் வரலாற்றினையெல்லாம் சுட்டிக்காட்டித் தமது பயணத்தின் ஊடாக இறையடியார்களின் பெருமையைக் கற்போர் எளிதில் உணர்ந்து அவர்களைப் போல் பெருமாளிடம் பக்தி செய்ய வேண்டும் என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளார். (தொண்., நாட்., திருப்., ப.13–16)

இலக்கியக் குறிப்புகள்

பேராசிரியர் தமது திருத்தலப் பயணத்தில் இலக்கியக் குறிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றினை சுட்டிக்காட்டி விளக்குவதிலும் தனித்துவம் பெறுகிறார்.

திருக்கோட்டியூர்

சிவகங்கை மன்னர்கள் இத்திருக்கோயிலின் வழி வழி அறங்காப்பாளர்களாக இருந்ததையும் சங்க இலக்கியமான நற்றிணையில் இருபத்தோராம் பாடலைப் பாடிய புலவர்

கோட்டியூர் நல்லாந்தையன் இவ்வூரைச் சார்ந்தவராகக் கருதப்படுவதையும் குறிப்பிட்டுள்ளார். கவிஞர் சுப்பராயர் என்ற மாத்துவ அந்தணர் 'திருக்கோட்டியூர் பிள்ளைத்தமிழ்' என்ற நூலையும், பெருங்கருணை சதாவதானம் முத்தழகு அய்யங்கார் என்ற புலவர் 'திருக்கோட்டியூர் கலம்பகம்' என்ற நூலையும் இயற்றி உள்ளதையும் இவரது பயண நூல்களால் அறிய முடிகின்றது. பராசரபட்டார் ஆண்டாள் மீது இயற்றியுள்ள 'நீளாதுங்க' என்ற வடமொழி தனியன் இந்த ஊரில் இயற்றப்பட்டது என்பதையும் இதே அறிஞர் சௌமிய நாராயணன் மீது 'கோஷ்டித்தஸ்வம்' என்ற வடமொழி நூலையும் இயற்றியுள்ளார் என்பதனையும் பதிவு செய்திருக்கிறார். (பாண்டி., நாட்., திருப்., ப.15)

திருக்கண்ணபுரம்

இத்திருக்கண்ணபுரத்து அம்மான் மீது 'திருக்கண்ணபுர கலம்பகம்' என்ற ஒரு நூலை திருவல்லிக்கேணியைச் சேர்ந்த டி.எஸ்.ராஜகோபாலன் என்பவர் அருளியுள்ளார். இவர் இக் கலம்பகத்தினை சொற்சுவை, பொருட்சுவை ததும்ப அமைத்துள்ளதால் படிப்போரை மகிழ்விக்கும் மாண்புடையது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். (சோழ நாட்., திருப்., பகுதி–2, ப.59)

தேரழுந்தூர் (திருவழுந்தூர்)

கம்பன் பிறந்த ஊராதலால் கம்பனின் பெருமைகளையும், கம்பன் பாடிய இராம காதையின் சிறப்பினையும் ஆங்காங்கே பதிவு செய்து தனது பயணத்திற்குச் சிறப்பு சேர்த்திருக்கிறார். (சோழ நாட்., திருப்., பகுதி–2, ப.64–70)

திருக்கண்ணமங்கை

இத்திருத்தலத்தின்மீது முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் பாடிய 'திருக்கண்ண மங்கை மாலை' என்ற நூலில் திருமகள் தோத்திரமாக தேவி வழிபாட்டிற்கு உரியதாக அமைந்துள்ள பாடல்கள் சொல் நயமும் பொருள் நயமும் மிக்க பக்திச்சுவை செறிந்ததாகத் திகழ்வதோடு பாராயணத்திற்கு ஏற்ற நூலாக அமைந்திருப்பதனையும் சுட்டிக்காட்டுகிறார். அதோடு திருமகள் தோத்திரமாகத் தமிழில் வேறு நூல்கள் கிடைப்பது அரிது என்பதனையும் வலியுறுத்துகிறார். (சோழ நாட்., திருப்., பகுதி–1, ப.172)

திருப்பேரெயில்

திருப்பேரெயில் எனும் திருத்தலம் இலக்கிய வளம் பெற்றது என்பதைக் குறிப்பிடும் பேராசிரியார் ந.சுப்புரெட்டியார் தென்பாண்டி நாட்டை ஆண்ட வடமலையப்ப பிள்ளையன் புலவர்களைப் போற்றும் வள்ளன்மை மிக்கவர். இவர் காலத்தில் வாழ்ந்த நாராயண தீட்சிதர் என்பார் அரசிறை கட்டத் தவறியதால் சிறைச்சாலையில் இருக்க நேர்ந்தது. இவர் இயற்றிய 'குழைக்காதர் பாமாலை' எனும் நூல் இன்றும் பாராயண நூலாகப் பயன்பட்டு வருகிறது. இக்குறிப்பைத் தென் திருப்பேரெயில் ஆசுகவி காளமேகம் அனந்த கிருஷ்ண அய்யங்கார் அவர்களிடமிருந்து உ.வே.சாமிநாதையர் அவர்கள் பெற்று கலைமகளில் 1939ல் வெளியிட்டு சிறப்பு செய்ததும், பின்னர் அவரது திருக்குமரார் 1947ல் இந்தப் பாமாலையைச் சிறு நூல்

வடிவில் வெளியிட்டும் வழங்கின குறிப்பைச் சுட்டிக் காட்டுகிறார். (பாண்டி., நாட்., திருப்., பக்.197–200)

புராணக் குறிப்புகள்

பொதுவாக, சமய நூல்களின் ஆசிரியர்கள் இறைவனின் பெருமைகளையும் சமய மரபுகளையும் விளக்க சான்றோர்களின் கூற்றுகளையும், அவர்களின் புராணக் குறிப்புகளையும் எடுத்தாள்வது இயல்பு. இதனை விளக்கும் ப.அருணாசலம், **"வைணவ ஆழ்வார்களும், ஆசாரியர்களும், 'முன் சொல்லப் பெற்ற' கருத்துக்களை மீண்டும் கூறுவர். அதனால் இவர்களுக்குப் 'பேசிற்றே பேசும் ஏக கண்டர்' என்ற பெயருண்டு" (வைணவ சமயம், ப.134)** என்று சுட்டிக் காட்டுவர்.

இவ்வகையில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரும் தமது திருத்தலப் பயண நூல்களில் வைணவப் பெருந்தகையாளர்கள் எடுத்தாண்ட பல புராணக் குறிப்புகளையும் சுட்டிக் காட்டித் தமது பயண இலக்கியத்திற்கு வளம் சேர்க்கிறார்.

திருக்கோட்டியூர்

இந்த ஊரின் பேரைக் குறிப்பிடும் போக்கில் ஒரு புராணக் குறிப்பைத் தருகின்றார். இவ்வூரின் அருகில் உள்ள மணிமுத்தாற்றங்கரையில் உள்ள இந்தத் திருத்தலம் முற்காலத்தில் கதம்ப முனிவரின் ஆசிரமமாக இருந்தது. இரணியன் மூவுலகங்களையும் ஆட்சி செய்து தேவர்களை துன்புறுத்துகின்றான். அவனை எப்படி ஒழிப்பதென்று தெரியாமல் தேவர்கள் தடுமாறுகின்றனர். கதம்ப முனிவர் உறையும் இத்திருத்தலத்தில் அரக்கன் யாரும் புகமுடியாது என்ற சாபம் இருந்ததால் மும்மூர்த்திகளும் தேவர்களும் சூழ்ந்து ஆழ்ந்து யோசிக்க இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்து ஒன்று கூடுகின்றனர். திருமால் நரசிங்க அவதாரம் எடுத்து தனது வாளுகிலினால் இரணியனை வதைப்பது என்று முடிவு செய்கின்றனர். தேவர்கள் யாவரும் கோஷ்டியாகச் (கூட்டமாக) சேர்ந்து ஆலோசனை செய்த இடமாதலால் இத் திருத்தலத்தினை 'கோட்டியூர்' என்று வழங்குகின்றனர். இத்திருத்தலத்திற்கு மற்றொரு புராண வரலாறும் உண்டு. புரூரவன் என்னும் அரசன் கங்கை நீராடத் தேரின் மீது ஏறி செல்லுங்கால் கதம்ப முனிவரின் ஆசிரமத்தருகில் அவன் இவர்ந்து வந்த தேர் மேல்செல்ல இயலாதபடி தடுத்து நிறுத்தப் பெற்றது. அரசன் தேரினின்று இறங்கி கதம்ப முனிவரை வணங்கினான். பின் அவர் விருப்பப்படி கங்கைக் கரையிலிருந்து 1500 பாகவதர்களை அழைத்துக் கொண்டு வந்து குடியேறினான் என்ற புராணக் குறிப்பினையும் சுட்டிக் காட்டுகிறார்.

திருக்கரம்பனூர்

உத்தமர் கோயில் என்றும் இத்திருத்தலத்திற்கு மற்றொரு பெயருண்டு என்பதைக் கூறும் ந. சுப்புரெட்டியார் இத்தலத்தின் புராண குறிப்புகளைப் பற்றி குறிப்பிடுகையில் கதம்ப முனிவர் பரப்பிரம்மத்தைக்காண இங்கு நெடுங்காலம் தவம் புரிந்ததினால் சிவபெருமானும், நாராயணனும் முனிவருக்கு விஸ்வரூப தரிசனம் அருளிய புராண வரலாற்றினைப் பதிவு செய்கிறார்.

இதனால்தான் இத்தலம் 'கதம்பவனம்' எனப் பெயர் பெற்றதையும், இம்முனிவரைத் தவிர மார்கண்டேயர், சனகர், சதானந்தர், சனத்குமாரர், திக்குப் பாலகர்கள், கருடன் ஆகியோரும் தவம் புரிந்த தலமாக இத்திருத்தலம் புகழ் பெருகிறது என்பதனையும் சுட்டிக் காட்டுகிறார். அதோடு மட்டுமின்றி, 'அரியும் அரனும் ஒன்று' என்ற பக்தர்களின் எண்ணத்திற்கு ஏற்ப சிவனும், திருமாலும் குடிகொண்டுள்ள தலமாக இத்திருத்தல் அமைந்திருப்பதனையும் புராணக் குறிப்புகளின் வழியே எடுத்துரைக்கிறார். (சோழ நாட்., திருப்., பகுதி–1, ப.39)

திருநறையூர்

இத்திருத்தலத்திற்கும் மேதாவி என்ற முனிவருக்கும் இடையேயான உறவினை விளக்கும் புராண வரலாற்றை எடுத்தியம்பும் ந.சுப்புரெட்டியார் **"மேதாவி முனிவர் திருநறையூர் என்ற திருத்தலத்தில் தவம் செய்து வருகின்றார். திருமகளே தனக்கு மகளாகப் பிறக்க வேண்டுமென்ற அவரது விருப்பத்திற்கேற்ப அவரது தவச் சாலையின் அருகில் மஞ்சுள மரத்தடியில் ஒரு பெண் மகவாக அவதரித்த பெரிய பிராட்டியினை 'வஞ்சுள வல்லி' என்ற திருநாமம் இட்டு வளர்க்கின்றார். மங்கைப் பருவம் வந்தவுடன் எம் பெருமான் அவளைத் தேடிக்கொண்டு வருகிறார். அவ்வாறு வரும் எம்பெருமான் தனியாக வராமல் சங்கர்ஷனன், பிரத்துமனன், அனிருத்தன், புருஷோத்தமன், வாசுதேவன் என்ற ஐந்து உருவம் தாங்கி வருகின்றான். ஐவரில் வாசுதேவனுடைய கண்கள் வஞ்சுளவல்லியின் கண்களைச் சந்திக்கின்றன. விருந்துண்டு கை கழுவச் செல்லும்போது வாசுதேவன் வஞ்சுள வல்லியின் கைகளைப் பற்ற, அதனால் வஞ்சுளவல்லி கூக்குரலிட, அதைக் கேட்ட முனிவர் ஓடிவரவே வாசுதேவன் கையும் களவுமாகப் பிடிபடுகிறான். அவனது அடாத செயலைக் கண்டு சீற்றம் கொண்ட முனிவர் சாபம் கொடுக்க முனையும் போது வாசுதேவன் திருவாலி, திருச்சங்கு ஏந்திய வண்ணம் தன் உண்மைத் திருக்கோலத்தினை காட்டி நிற்கின்றான். அதனால் வஞ்சுளவல்லி வாசுதேவன் திருமணம் நடைபெறுகிறது. நறையூரில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் வஞ்சுளவல்லிக்கே முதன்மை இடம் என்ற முனிவரின் வேண்டுகோளுக்கு இணங்க இன்று வரை இங்கு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் வஞ்சுள வல்லிக்கே முதன்மை இடம் கொடுக்கப்படுகிறது. அதோடு மதுரையில் மீனாட்சிக்கு முதலிடம் இருப்பது போல் நறையூர் என்ற திருப்பெயரும், 'நாச்சியார் கோயில்' என்ற புதுப்பெயர் பெற்றுத் திகழ்கின்றது. இதனால் நறையூர் நம்பியும் மணாட்டிக்கு அடங்கிய மணாளனாகவே இத்திருத்தலத்தில் தங்கி விடுகிறான்" என்ற புராண வரலாற்றை எடுத்துரைக்கிறார். (சோழ நாட்., திருப்., பகுதி–1, பக்.101–102)**

தேரழுந்தூர்

இத்திருத்தலத்தின் பெயர்ச்சிறப்பிற்குத் தனிப் புராண வரலாறு உண்டென்பதை எடுத்துக்கூறும் ந.சுப்புரெட்டியார் அதற்கான புராண வரலாற்றினை எடுத்துரைக்கிறார். **"உபரி சரவசு என்ற ஓர் அரசன். இவனிடம் இருந்த ஒரு தேர் வானவீதியில் உருண்டோடும் தன்மையது. இவன் தேவர்கட்கும் இருடிகட்கும் இடையில் எழுந்த வழக்கில் ஒருதலைச்**

சார்பாகத் தீர்ப்புக் கூறியதில் முனிவர்கள் அவன் தேர் பூமியில் அழுந்தட்டும் எனச் சாபமிட்டனர். அவர்கள் சாபம் இவ்வாறு பலித்தது. ஒரு சமயம் அவன் வானவீதியில் சென்றபோது இவ்வூர்த் திருமால் திருக்கோயிலுக்கு நேராக இவன் தேர் செல்ல நேர்ந்தது. இதனைச் சிறிதும் பொறுக்க முடியாத பெரிய திருவடி தம் மந்திர ஆற்றலால் தேரைக் கீழே இழுத்து பூமியில் அழுந்த வைத்து விடுகிறார். பின்னர் உபரி சரவசு எம்பெருமானை வணங்கி மன்னிப்பு பெற்றுத் தேரோடு திரும்பியதாகப் புராண வரலாறு. அவ்வாறு தேர் பூமியில் அழுந்தியதால் இவ்வூர் திருஅழுந்தூர் (தேரழுந்தூர்) எனப் பெயர் பெற்றது" (சோழ நாட்., திருப்., பகுதி–2, ப.63) என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

திருத்தேவனார் தொகை

திருமகளுக்கும் இத்திருத்தலத்திற்கும் இடையேயுள்ள நெருங்கிய புராண வரலாற்றை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் பாற்கடலைக் கடைந்தபோது வெளி வந்த திருமகளை இத்திருத்தலத்தில்தான் எம்பெருமான் திருமணம் செய்து கொண்டதாகவும், அத்திருமணக் கோலத்தில் இங்கு எழுந்தருளி உள்ளதாகவும் புராண வரலாறு கூறுவதோடு இத்திருமணத்திற்கு தேவர்கள் திரண்டு வந்தமையால் இதற்குத் திருத்தேவனார் தொகை என்ற திருநாமம் ஏற்பட்டது என்ற புராணச் செய்தியனைச் சுட்டிக்காட்டுகிறார். (பாண்டி., நாட்., திருப்., ப.175)

தமிழகத் திருக்கோயில்கள் அனைத்தும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பிடமாகவும், பக்தி எல்லையின் விளிம்பாகவும் அமைந்திருக்கும் தன்மையினை உணர்ந்த ஆழ்வார்கள் இறைவனை அடையும் பொருட்டு வைணவத் திருத்தலங்களை நேரில் கண்டு மங்களாசாசனம் செய்து சிறப்பித்துள்ளனர். இதனை நன்கு உணர்ந்தே பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் வைணவ திவ்ய தேசங்களான 108 திருப்பதிகளில் 106 திருப்பதிகளைத் (திருப்பாற்கடல், ஸ்ரீவைகுந்தம் தவிர) தன் பயண அனுபவத்தின் மூலம் நேரில் கண்டு அத்திருத்தலங்களின் அமைப்புகள், வழிபாட்டு நடை முறைகள், நிருவாக அமைப்புகள் ஆகியனவற்றையும் அத்திருத்தலங்களுக்குச் செல்லும் வழிகள், அங்குள்ள வசதிகள், ஆழ்வார்களின் பாசுர அனுபவங்கள் அத்துடன் ஆங்காங்கே சில வைணவத் தத்துவங்கள் ஆகியவற்றினையும் தமது பயண நூல்களில் மிகத் தெளிவாகப் பதிவு செய்திருக்கிறார். பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார் தமது திருத்தலப் பயணத்தின் மூலம் வைணவ திவ்ய தேசங்கள் (திருப்பதிகள்) 106–ஐ நேரில் கண்டுள்ளதால் திருத்தலப் பயணம் மேற்கொள்வோருக்கு ஒரு சிறந்த முன்னோடியாக விளங்குகிறார்.

தமது திருத்தலப் பயணத்தின் விளைவாக 1) மலை நாட்டுத் திருப்பதிகள் (1971), 2) தொண்டை நாட்டுத் திருப்பதிகள் (1973), 3) பாண்டி நாட்டுத் திருப்பதிகள் (1977), 4) வடநாட்டுத் திருப்பதிகள் (1980), 5) சோழ நாட்டுத் திருப்பதிகள் (முதற்பகுதி–1981), 6) சோழ நாட்டுத் திருப்பதிகள் (இரண்டாம் பகுதி, 2004) ஆகிய பயண நூல்களை யாத்தளித்துள்ளார். அதோடு தான் இயற்றிய பயண நூல்களில் ஒவ்வொரு திருத்தலத்தினையும் நேரில் கண்டு வழிபட்டு இன்புற்ற நிலையினைத் தன் பயண வரிசைப்படி விளக்கியிருப்பதோடு சோழ நாட்டில்

சில திருத்தலங்கள், மலை நாட்டில் சில திருத்தலங்கள், பாண்டி நாட்டில் சில திருத்தலங்கள் என மாறி மாறி திருத்தலப் பயணம் மேற்கொண்டாலும் தனது பயண வரிசைப்படி ஒவ்வொரு நூலிலும் தான் தரிசித்த திருத்தலங்களை வரிசைப்படுத்தியுள்ளார்.

வைணவத் திருப்பதிகள்

வைணவப் பெரியோர்களால் அனுசந்திக்கப்படும் நூற்றியெட்டு (108) வைணவத் திருத்தலங்கள் முறையே சோழ நாட்டுத் திருப்பதிகள், நடு நாட்டுத் திருப்பதிகள், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், வட நாட்டுத் திருப்பதிகள், மலை நாட்டுத் திருப்பதிகள், பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் என வழங்கப்பட்டு வருவது மரபு. பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரும் தன் பயண அனுபவத்தின்படி ஒவ்வொரு திருத்தலத்தையும் விசைப்படுத்திப் பட்டியலிடுகிறார். பேராசிரியரின் 108 வைணவத் திருத்தலங்களின் வரிசையானது,

"ஈரிருப தாம் சோழம் ; ஈரொன்ப தாம் பாண்டி;
ஓர் பதின்மூன் றாம்மலைநாடு ஓரிரண்டாம் – சீர் நடுநாடு
ஆறோ(டு) ஈரெட்டுத் தொண்டை, அவ்வட நா(டு)
கூறுதிரு நாடாகக் கொள்" **(நூற்., திரு., அந்., 6)**

என்ற திவ்வியகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் திருப்பாசுரத்தின் வரிசைப்படி அமைத்திருப்பது தனிச்சிறப்பானதொரு அமைப்பாக அமைகிறது. இதனடிப்படையில் பேராசிரியர் 108 திருத்தலங்களையும் வரிசைப்படுத்தியிருக்கிறார்.

1. திருவரங்கம் (பெரிய கோயில்), 2. திருவுரையூர், 3. திருத்தஞ்சை,4. திருவன்பில், 5. திருக்கரம்பனூர், 6. திருவெள்ளறை, 7. திருப்புள்ளம் பூதங்குடி, 8. திருப்பேர் நகர், 9. திரு ஆதனூர், 10. திருவழுந்தூர், 11. திருச்சிறுபுலியூர், 12. திருச்சேறை, 13. திருத்தலைச் சங்க நான்மதியம், 14. திருக்குடந்தை, 15. திருக்கண்டியூர், 16. திருவிண்ணகர், 17. திருக்கண்ணபுரம், 18. திருவாலி, 19. திருநாகை, 20. திருநறையூர், 21. திருநந்திபுர விண்ணகரம், 22. திருவிந்தளூர், 23. திருச்சித்திர கூடம், 24. திருக்காழிச்சிராம விண்ணகரம், 25. திருக்கூடலூர், 26. திருக்கண்ணமங்கை, 27. திருக்கண்ணங்குடி, 28. திருக்கவித்தலம், 29. திருவெளியங்குடி, 30. திருமணிமாடக் கோயில், 31. திருவைகுந்த விண்ணகரம், 32. திருஅரிமேய விண்ணகரம், 33. திருத்தேவனார் தொகை, 34. திருவண் புருடோத்தமம், 35. திருச்செம்பொன் செய்கோயில், 36. திருத்தெற்றியம்பலம், 37. திருமணிக் கூடம், 38. திருக்காவளம்பாடி, 39. திருவெள்ளக்குளம், 40. திருப்பார்த்தன் பள்ளி, 41. திருமாலிருஞ்சோலை, 42. திருக்கோட்டியூர், 43. திருமெய்யம், 44. திருப்புல்லாணி, 45. திருத்தண் காலூர், 46. திருமோகூர், 47. திருக்கூடல், 48. திருவில்லிப்புத்தூர், 49. திருக்குருகூர், 50. திருத்தொலைவில்லி மங்களம், 51. ஸ்ரீ வரமங்கை, 52. திருத்தென் திருப்பேரை, 53. திருவைகுண்டம், 54. திருப்புளியங்குடி, 55. திருவரகுண மங்கை, 56. திருக்குளந்தை, 57. திருக்குறுங்குடி, 58. திருக்கோளூர், 59. திருவனந்தபுரம், 60. திருவெண் பரிசாரம், 61. திருக்காட்கரை, 62. திருமூழிக் களம், 63. குட்ட நாட்டுத் திருப்புலியூர், 64. திருச்செங்குன்றூர், 65. திருநாவாய், 66. திருவல்லவாழ், 67. திருவண் வண்டூர், 68.

திருவாட்டாறு, 69. திருவித்துவக்கோடு, 70. திருக்கடித்தானம், 71. திருவாறன்விளை, 72. திருவயிந்திபுரம், 73. திருக்கோவலூர், 74. திருக்கச்சி – அத்திகிரி, 75. திரு அட்டபுயகரம், 76. திருத்தண்கா, 77. திருவேளுக்கை, 78. திருப்பாடகம், 79. திருநீரகம், 80. திருநிலாத் துண்டம், 81. திருவூரகம், 82. திருவெஃகா, 83. திருக்காரகம், 84. திருக்கார் வனம், 85. திருக்கள்வனூர், 86. திருப்பவள வண்ணம், 87. திருபரமேச்சர விண்ணகரம், 88. திருப்புட்குழி, 89. திருநின்றவூர், 90. திருஎவ்வுளூர், 91. திருநீர் மலை, 92. திருஇட எந்தை, 93. திருக்கடல் மல்லை, 94. திருவல்லிக்கேணி, 95. திருக்கடிகை, 96. திருவேங்கடம், 97. திருச்சிங்கவேழ் குன்றம், 98. திரு அயோத்தி, 99. திருநைமிசாரணியம், 100. திருச்சாளக்கிராமம், 101. திருவதரியாச்சிரமம், 102. திருக்கங்கைக் கரைக் கண்டம், 103. திருப்பிரிதி, 104. திருவடமதுரை, 105. திருத்துவராகை, 106. திருவாய்ப்பாடி, 107. திருப்பாற்கடல், 108. திருநாடு என்ற வகையில் 108 வைணவ திவ்யத் தலங்களை ஒப்பிடுவதில் மட்டுமின்றி பல இடங்களிலும் பிள்ளைப்பெருமாளின் பாசுரங்களை பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் எடுத்தாண்டிருக்கிறார்

மலை நாட்டுத் திருப்பதிகள்

> **“வடக்குத் திசைபழநி வான்கீழ் தென்காசி**
> **குடக்குத் திசைகோழிக் கூடாம் – கடற்கரையில்**
> **ஓரமோ தெற்காகும் உள்ளென் பதின்காதம்**
> **சேரநாட்டிற் கெல்லையெனச் செப்பு” (பழம் வெண்பாப் பாடல்)**

என்ற பழம்பாடல் உணர்த்தும் எல்லை வரையறைகளுக்கு ஏற்ப மலைநாட்டுத் திருப்பதிகளான 1) திருவனந்தபுரம், 2) திருவண்பரிசாரம், 3) திருக்காட்கரை, 4) திருமூழிக்களம், 5) குட்ட நாட்டு திருப்புலியூர், 6) திருச்செங்குன்றூர், 7) திரு நாவாய், 8) திருவல்ல வாழ், 9) திருவண் வண்டூர், 10) திருவாட்டாறு, 11) திருவித்துவக் கோடு, 12) திருக் கடித்தனம், 13) திருவாறன்விளை ஆகிய திருப்பதிகளைத் தனது ‘மலைநாட்டுத் திருப்பதிகள்’ எனும் பயண நூலில் தான் தரிசித்த பயண முறைப்படி வரிசைப்படுத்தி விவரிக்கிறார் ந. சுப்புரெட்டியார் அவ்வாறு அவர் விவரிக்கும் பயண வரிசையானது,

1. திருவெண் பரிசாரம், 2. திருவாட்டாறு, 3. திருவனந்தபுரம், 4. திருவாறன் விளை, 5. திருச்செங்குன்றூர், 6. திருக்கடித்தானம், 7. திருவல்லவாழ், 8. திருவண் வண்டூர், 9. திருப்புலியூர், 10. திருள்காட்கரை, 11. திருமூழிக்களம், 12. திருவித்துவக்கோடு, 13. திருநாவாய் என்ற முறையில் அமைகிறது.

தொண்டை நாட்டுத் திருப்பதிகள்

> **“மேற்கு பவளமல்லி வேங்கட நேர்வடக்காம்**
> **ஆர்க்கும் உவரி அணிகிழக்குப் – பார்க்குளுயர்**
> **தெற்குப் பினாகி திகழிரு பதின்காதம்**
> **நற்றொண்டை நாடெனவே நாட்டு” (பழம் வெண்பாப் பாடல்)**

என்ற பழம் பாடலின் கருத்திற்கிணங்கி தொண்டை நாட்டுத் திருப்பதிகளான 1) திருக்கச்சி–அத்தகிரி, 2) திரு அட்டபுயகரம், 3) திருத்தண்கா, 4) திருவேளுக்கை, 5) திருப்பாடகம், 6) திருநீரகம், 7) திருநிலாத் துண்டம், 8) திருஊரகம், 9) திருவெஃகா, 10) திருக்காரகம், 11) திருக்கார் வானம், 12) திருக்கள்வனூர், 13) திருப்பவள வண்ணம், 14) திருப்பரமேச்சுர விண்ணகரம், 15) திருப்புட்குழி, 16) திருநின்றவூர், 17) திருஎவ்வுளூர், 18) திருநீர் மலை, 19) திருஇட எந்தை , 20) திருக்கடல் மல்லை, 21) திருவல்லிக்கேணி, 22) திருக்கடிகை ஆகிய இருபத்தி இரண்டு (22) திருப்பதிகளையும் அதனுடன் சேர்த்து நடுநாட்டுத் திருப்பதிகளான 1) திருவயிந்திபுரம், 2) திருக்கோவலூர் ஆகிய இரண்டு திருப்பதிகளையும் சேர்த்து மொத்தம் இருபத்தி நான்கு திருத்தலங்களையும் தனது **“தொண்டை நாட்டுத் திருப்பதிகள்”** எனும் பயண நூலில் தனது பயண வரிசைப்படி விளக்குகிறார். அவரது பயண வரிசையானது; 1) திருக்கச்சி–அத்தகிரி, 2) திருவெஃகா, 3) திருவட்டபுயகரம், 4) திருநீரகம், 5) திருக்காரகம், 6) திருக்கார்வனம், 7) திருஊரகம், 8) திருபரமேச்சுர விண்ணகரம், 9) திருப்பாடகம், 10) திருநிலாத் துண்டம், 11) திருக்கள்வனூர், 12) திருவேளுக்கை, 13) திருத்தண்கா, 14) திருப்பவள வண்ணம், 15) திருப்புட்குழி, 16) திருக்கடிகை, 17) திருவெள்ளூர், (திருஎவ்வுள்ளூர்) 18) திருநின்றவூர், 19) திருவல்லிக்கேணி, 20) திருநீர்மலை, 21) திருஇட எந்தை, 20) திருக்கடல் மல்லை, 23) திரு அயிந்திரபுரம், 24) திருக்கோவலூர் என்ற முறையில் அமைகிறது.

பாண்டி நாட்டுத் திருப்பதிகள்

> **“வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாம்**
> **தெள்ளார் புனற் கன்னி தெற்காகும் – உள்ளாரா**
> **வாண்ட கடல் கிழக்காம் ஐம்பத் தறு காதம்**
> **பாண்டி நாட் டெல்லை பதி”   (பழம் வெண்பாப் பாடல்)**

என்ற பழம்பாடலின் பகுப்பிற்கேற்ப வடநாட்டுத் திருப்பதிகளான 1) திருமாலிருஞ்சோலை, 2) திருக்கோட்டியூர், 3) திருமெய்யம், 4) திருப்புல்லாணி, 5) திருத்தண் காலூர், 6) திருமோகூர், 7) திருக்கூடல் 8) திருவில்லிப் புத்தூர், 9) திருக்குருகூர், 10) திருத்தொலைவில்லி மங்களம், 11) ஸ்ரீவர மங்கை, 12) திருத்தென் திருப்பேரை (திருப்பேரெயில்), 13) திருவைகுண்டம், 14) திருப்புளியங்குடி, 15) ஸ்ரீ வரகுண மங்கை (திருவரகுண மங்கை), 16) திருக்குளந்தை, 17) திருக்குறுங்குடி, 18) திருக்கோளூர் ஆகிய பதினெட்டு திருப்பதிகளையும் ந.சுப்புரெட்டியார் தமது திருத்தலப் பயணத்தின்படி 1) திருக்கோட்டியூர், 2) திருமெய்யம், 3) திருப்புல்லாணி, 4) திருக்கூடல் (மதுரை கூடல் அழகர்), 5) திருமோகூர், 6) திருமாலிருஞ்சோலை, 7) திருவில்லிப்புத்தூர், 8) திருத்தண் காலூர், 9) திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி), 10) திருக்கோளூர், 11) திருப்பேரெயில், 12) திருவைகுண்டம், 13) திருவரகுண மங்கை, 14) திருக்குளந்தை, 15) திருப்புளியங்குடி, 16) திருத்தொலைவல்லி மங்களம், 17) ஸ்ரீ வரமங்கை (வானமாமலை), 18) திருக்குறுங்குடி என்றவாறு வரிசைப்படுத்துகிறார். இத்திருப்பதிகளில்

'தொலை வில்லி மங்களம்' **(16)** நவ திருப்பதிகளில் இரண்டாகவும், பதினெட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதாகவும் கூறுகிறார்.

வடநாட்டுத் திருப்பதிகள்

வட நாட்டுத் திருப்பதிகள் பன்னிரெண்டு **(12)** என வகைப்படுத்துவர் வைணவச் சான்றோர். அவைகளாவன: **1)** திருவேங்கடம், **2)** திருச்சிங்கவேழ் குன்றம், **3)** திருவயோத்தி, **4)** திரு நைமிசாரண்யம், **5)** திருச்சாளக்கிராமம், **6)** திருவதரியாச்சிரமம், **7)** திருக்கங்கைக்கரை கண்டம், **8)** திருப்பிரிதி, **9)** திருவடமதுரை, **10)** திருத்துவாரகை, **11)** திருவாய்ப்பாடி, **12)** திருப்பாற்கடல் என்பனவாகும்.

இத்திருத்தலங்களை உள்ளது உள்ளபடி தனது திருத்தல பயண அனுபவத்தின்படி பதிவு செய்ததுடன், 'திருப்பாற்கடல்' மற்றும் 'திருநாட்டுத் திருப்பதி' என்றழைக்கப்படும் திருநாடு (வைகுந்தம் அல்லது பரமபதம்) குறித்தும் தன் கருத்தினை பதிவு செய்திருக்கிறார். இவற்றில் **"திருப்பாற்கடல் மற்றும் பரமபதம் என்றழைக்கப்படும் ஸ்ரீவைகுந்தமாகிய இரண்டு திருப்பதிகளும் இவ்வுலகில் பார்க்க முடியாத விண்ணுலக திருப்பதிகள்" (வைணவம் அறிவோம் வாரீர், ப.32)** என்பார் புலவர் பி.ஆதிகேசவன்.

எனவே மீதமுள்ள **106** திருப்பதிகளையும் ந.சுப்புரெட்டியார் தமது திருத்தலப் பயணத்தினால் நேரில் கண்டு வழிபட்டது திருத்தலப் பயணம் செய்பவர்களுக்குப் பெருந்துணையாக அமைந்திருக்கிறது.

சோழநாட்டுத் திருப்பதிகள்

"கடல் கிழக்குத் தெற்கு கரைபொரு வெள்ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையாம் – வடதிசையி
லேனாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதம்
சோனாட்டுக் கெல்லையெனச் சொல்"   (பழம் வெண்பாப் பாடல்)

என்ற பழம் பாடலின் செறிவினைச் சீர்தாங்கும் சோழநாட்டுத் திருப்பதிகளான **1)** திருவரங்கம் (பெரிய கோயில்) **2)** திருவுறையூர், **3)** திருத்தஞ்சை, **4)** திருவன்பில், **5)** திருக்கரம்பனூர், **6)** திருவெள்ளறை, **7)** திருப்புள்ளம் பூதங்குடி, **8)** திருப்பேர் நகர், **9)** திரு ஆதனூர், **10)** திருவழுந்தூர் (கம்பர் பிறந்த ஊர்), **11)** திருச்சிறு புலியூர், **12)** திருச்சேறை, **13)** திருத்தலைச் சங்க நான்மதியம், **14)** திருக்குடந்தை, **15)** திருக்கண்டியூர், **16)** திருவிண்ணகர், **17)** திருக்கண்ணபுரம், **18)** திருவாலி, **19)** திருநாகை, **20)** திருச்சித்திரக் கூடம், **24)** திருக்காழிச் சிராம விண்ணகரம், **25)** திருக்கூடலூர், **26)** திருக்கண்ணமங்கை, **27)** திருக்கண்ணங்குடி, **28)** திருக்கபித்தலம், **29)** திருவெள்ளியங்குடி, **30)** திருமணிமாடக் கோயில், **31)** திருவைகுந்த விண்ணகரம், **32)** திரு அரிமேய விண்ணகரம், **33)** திருத்தேவனார் தொகை, **34)** திருவண் புருடோத்தமம், **35)** திருச்செம்பொன் செய்கோயில், **36)** திருத்தேற்றியம்பலம், **37)** திருமணிக் கூடம், **38)** திருக்காவளம் பாடி, **39)** திருவெள்ளக் குளம், **40)** திருபார்த்தன் பள்ளி ஆகிய நாற்பது திருப்பதிகளையும் தனது திருத்தலப் பயணமுறையின்படி வரிசைப்படுத்தி எழுதியுள்ளார்.

1)திருவரங்கம், 2) திருவுறையூர், 3) திருக்கரம்பனூர், 4) திருவெள்ளறை, 5) திருவன்பில், 6)திருப்பேர்நகர், 7) திருத்தஞ்சை, 8) திருக்கண்டியூர், 9) திருக்குடந்தை, 10) திருவிண்ணகர், 11) திருநந்திபுர வண்ணகரம், 12) திருநறையூர், 13) திருச்சேறை, 14) திருவெள்ளியங்குடி, 15) திருப்புள்ளம் பூதங்குடி, 16) திரு ஆதனூர், 17) திருக்கபித்தலம், 18)திருக்கண்ணங்குடி, 19)திருநாகை, 20) திருக்கண்ண மங்கை, 21) திருச்சித்திரக் கூடம், 22) திருக்காழிச்சிராம விண்ணகரம், 23) திருஇந்தளூர், 24) திருத்தலைச்சங்க நாண்மதியம், 25) திருச்சிறுபுலியூர், 26) திருக்கண்ணபுரம், 27) திருவழுந்தூர், 28) திருவெள்ளக் குளம், 29) திருவண் புருடோத்தமம், 30) திருவைகுந்த விண்ணகரம், 31) திருமணிமாடக் கோயில், 32) திருத்தெற்றியம்பலம், 33) திருத்தேவனார் தொகை, 34) திரு அரிமேய விண்ணகரம், 35) திருவாலி, 36) திருத்தேவனார் தொகை, 37) திருக்கூடலூர், 38) திருமணிக் கூடம், 39) திருக்காவளம்பாடி, 40) திருபார்த்தன் பள்ளி என்றவாறு சோழ நாட்டுத் திருப்பதிகள் நாற்பதினையும் முறையே தனது திருத்தலப் பயணத்தின்படி விவரிக்கும் அழகு நேர்த்தியானதாய் அமைகிறது.

பெருமாளின் திருக்கோலங்கள்

வைணவத் திருத்தலங்கள் 108இல் உள்ள பெருமாளின் திருக்கோலங்கள் நின்ற கோலம், இருந்த கோலம், கிடந்த கோலம், நடந்த கோலம் என்ற நான்கு வகையான கோலங்களில் அமைந்தது. திருமாலின் நூற்றியெட்டு திருத்தலங்களில் திருநீர்மலை எனும் திருத்தலத்தில் மட்டும்தான் இந்நான்கு நிலைகளிலும் திருமால் காட்சியளிக்கிறார். அதோடு நின்ற, இருந்த, கிடந்த ஆகிய மூன்று கோலங்களில் திருக்கோட்டியூர், திரு மதுரை, திருநாகை ஆகிய இடங்களில் காட்சியளிப்பதாகவும் கூறும் ந.சுப்புரெட்டியார் நான்கு வகையான கோலங்களில்,

1. நின்ற கோலம் – ஸ்தானக மூர்த்தம் என்றும்
2. அமர்ந்த கோலம் – ஆசன மூர்த்தம் என்றும்
3. கிடந்த கோலம் – சயன மூர்த்தம் என்றும்

4.இயங்கு கோலம் – யானக மூர்த்தம் என்றும் அழைக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறார். இந்நான்கு வகை கோலங்களாலும் காட்சி தரும் தொண்டை நாட்டுத் திருப்பதியான ‘திருநீர்மலை’ எனும் திருத்தலம் பற்றி ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகையில் திருநீர்மலை எம்பெருமான்மீது திருமங்கையாழ்வாருக்கு ஒரு தனி அன்பு உண்டு என்றும் கூறுகிறார். ஆதலால் தான் **“போதுமோ நீர்மலைக்கு என்னும்” (பெரிய., திரு., 2:7:8) “நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்” (திருநெடுந்தாண்டகம், 18) “நீர்மலை என்று வாய் வெருவினாள்” (பெரிய., திரு., 3:1:1)** என்ற ஆழ்ந்த காதலால் பாசுரங்கள் பாடிப் பரவியுள்ளார் என்பதனை எடுத்துரைக்கிறார். மேலும் இந்நால் வகை கோலங்களில் மலையின் மீதுள்ள திருக்கோயிலில் தெற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு ‘கிடந்த கோலத்தில்’ காட்சி தரும் அரங்கநாதன் கொண்டுள்ள சயனக் கோலம் மாணிக்க சயனம் என்று கூறும் ந.சுப்புரெட்டியார் இவ்வரங்க நாதன் பாலகனாய் ஏழுலகு உண்டு ஆலிலை மேல் துயிலும்

நிலையும், உறங்குவான் போல் யோகு செய்யும் நிலையும் கொண்டவனாக இருக்கும் திருநீர்மலையின் சிறப்பினை வெறும் சொற்களால் சொல்லி தலைகட்ட முடியாது என்றும் இத் திருப்பதி தன்னைப் பணிவோருக்கு எவ்வித வினைகளும் இல்லாத நிலைமை உருவாவதால், மதி கெட்ட நீசர்கள் நெருங்கிவிட முடியாத எம்பெருமான் இங்கு சயனக் கோலம் கொண்டிருப்பதனை,

"பேசுமள வன்றிது வம்மின் நமர்!

பிறர் கேட் பதன் முன்பனி வார்வினைகள்

நாசமது செய்திடும் ஆதன்மையால்

அதுவே நம துய்விடம் நாள் மலர் மேல்

வாச மணி வண்டறை வைம்புறவில்

மனமைந்தொடு நைந்துழல் வார், மதியில்

நீசரவர் சென்றடை யாதவனுக்

கிடம்மா மலை யாவது நீர்மலையே" (பெரிய., திரு., 2:4:9)

என்ற பாசுரத்தின் வழியாகத் திருமங்கையாழ்வார் அரங்கநாதப் பெருமாளின் கிடந்த கோலத்தினை எடுத்துரைப்பதை உணர்த்தவதோடு அமர்ந்த கோலத்தில் பிரகலாதனுக்குக் காட்சி தந்த வீரநரசிங்க மூர்த்தி, சாந்த மூர்த்தியாக இருந்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருப்பதை திருமங்கையாழ்வார்,

"தாங்காது ஓர் ஆள் அரிஆய், அவுணன் தனை

வீடமுனிந்து அவனால் அமரும்

பூங்கோதையார் பொங்குளரி மூழ விளைத்து

அது அன்றியும் வென்றிகொள் வாள்அமரில்

பாங்குஆக முன்ஐவரொடு அன்பு அளவி,

பதிற்றைந்து இரட்டிப் படைவேந்தர்பட

நிங்காச் செருவில் நிறைகாத் தவனுக்கு

இடம்மா மலைஆவது நீர்மலையே" (பெரிய., திரு., 2:4:4)

என்ற பாசுரத்தின் வழியாக வெளிப்படுத்துவதனையும் திருக்கோயிலின் முதல் பகுதியில் நின்ற திருக்கோலத்தில் வீற்றிருக்கும் நீர்வண்ணப் பெருமாளைக் குறிப்பிடுகையில் திருநறையூரில் நின்ற திருக்கோலமாகவும், திருவாலியில் நரசிங்க உருவில் வீற்றிருந்த திருக்கோலமாகவும், திருக்குடந்தையில் பள்ளிகொண்ட திருக்கேலமாகவும், திருக்கோவலூரில் உலகளந்த திருவடிகளே நீட்டி நடக்கும் திருக்கோலமாகவும் சேவை சாதிக்கும் எம்பெருமான் அந்த நான்கு வகைத் திருக்கோலங்களையும் இத்திவ்வியத் தேசம் ஒன்றிலேயே கொண்டு சேவை சாதிக்கும் திருக்குணத்தை திருமங்கையாழ்வார் உணர்த்துவதனையும் குறிப்பிட்டுள்ளார். கோயிலின் சுற்றுப்பிரகாரத்தினை வலம்வரும்போது கண்முன் முதலில் படுவது உலகளந்த பெருமாள்

நடந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் கோலமாகும் என்று தான் கண்ட காட்சியை எடுத்துரைத்துள்ளார். இந்த மூர்த்தியை,

"காண்டாவனம் என்பதுஓர் காடு அமரர்க்கு
அரையன்னது, கண்டுஅவன் நிற்க, முனே
மூண்டுஆர் அழல்உண்ண முனிந்ததுவும்;
அது அன்றியும் முன் உலகம் பொறைதீர்த்து
ஆண்டான், அவுணன் அவன் மார்வு அகலம்
உகி ரால்வகிர் ஆக முனிந்து, அரியாய்
நீண்டான், குறளாகி நிமிர்ந்தவனுக்கு
இடம் மா மலை ஆவது நீர் மலையே" **(பெரிய., திரு., 2:4:2)**

என்ற பாசுரத்தினால் பாடியுள்ள திறத்தைப் போற்றியுரைத்துள்ளார். நான்கு வகை கோலங்களில் இறைவனாகிய எம்பெருமான் தோய்ந்திருப்பதாலும், தோயாகிய தண்ணீர் அதிகளவு கொண்ட அத்திரி (மலை) என்ற பொருளினாலும் இத்திருநீர்மலை 'தோயாத்திரி' என்ற பெயர் கொண்டது எனப் பெயராய்வு செய்துள்ள திறம் பேராசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றது. **"இம்மலையினை தோயாத்ரி என்கின்றனர் வைணவப் பெருமக்கள். 'தோயாத்ரி' என்பதற்கு நீர்மலை என்றுப் பொருள்" (வைணவ திருத்தலங்கள் வரலாறு,** ப.186) என்பார் கூற்றும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

இவ் வைணவ திருத்தலங்கள் ஒவ்வொன்றிலும் (நூற்றியெட்டு திருத்தலங்கள்) திருமால் இந்நான்கு வகைக் கோலங்களில் ஒன்றாகக் காட்சி தரும் அமைப்பானது தனிச்சிறப்பு பெறுகின்றது. திருமால் நின்ற திருக்கோலத்தில் அறுபது (60) திருப்பதிகளிலும், கிடந்த கோலத்தில் இருப்பத்தியேழு (27) திருப்பதிகளிலும், அமர்ந்த திருக்கோலத்தில் பத்தொன்பது (19) திருப்பதிகளிலும், இயங்கு கோலத்தில் இரண்டு (2) திருத்திலங்களிலும் காட்சி தருகிறார். இத்தகைய நான்கு கோலங்களிலும் நின்ற திருக்கோலங்களில் தான் அதிகளவில் திருமாலின் திருக்காட்சிகள் அமையப்பெற்றிருந்தாலும், திருமாலின் தனிச்சிறப்பான திருக்கோலமாகக் கருதப்படுவது கிடந்த திருக்கோலமான சயனத் திருக்கோலமாகும்' என்ற வைணவர்களின் கருத்தினை மனதில் வைத்து, எம்பெருமானின் திருக்கோலங்களில் சிறப்புப்பெற்ற திருக்கோலத்தை சயனத் திருக்கோலமே என்பதனையும் எடுத்துரைக்கிறார். இந்த சயனத் திருக்கோலத்தை சயன மூர்த்த கோலம் என்பர் வைணவச் சான்றோர்கள், அதற்கேற்ப சோழ நாடு, தொண்டை நாடு, வடநாடு, மலை நாடு மற்றும் பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் திருமாலின் சயனத் திருக்கோலத்தின் சிறப்பினை பேரா. ந.சுப்புரெட்டியார் மிக நேர்த்தியாக எடுத்துரைத்துள்ளார். இத்திருக்கோவில்களில் கிடந்த கோலமான (சயன மூர்த்த கோலம்) திருமால் பிரதிட்டை செய்யப்படுவதில் எட்டு வகைகள் உள்ளன. அவை,

1. உத்தியோக சயனம்
2. மாணிக்க சயனம்

3. தல சயனம்
4. தர்ப்ப சயனம்
5. போக சயனம்
6. வீர சயனம்
7. வட பத்ர சயனம்
8. புஜங்க சயனம் (புயங்க சயனம்) என்பனவாகும்.

“இவ்வகை கோலங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான கிடப்பு நிலைகளைக் கொண்டதாக அமைகின்றன” (நலந்தரும் தமிழக திருக்கோயில்கள், ப.16) என்பார் கோ. பாலசுப்ரமணியம். சோழ நாட்டுத் திருப்பதிகளில் தொடங்கி, தொண்டை நாடு, வடநாடு, மலைநாடு மற்றும் பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் இந்த எண் வகை திருக்கோலங்களைக் குறிப்பிட்டுக்காட்டி பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் விளக்கியருக்கும் மாண்பு நேர்த்தியானது.

ஒவ்வொரு திருத்தலத்தையும் விவரிக்கும் பேராசிரியர் அத்திருத்தலத்தின் மூலம் ஆழ்வார்கள் ஆழ்ந்து, அனுபவித்த பாசுரச் சிறப்புகள், அத்திருத்தலத்தின் அமைப்பு முறைகள், திருத்தலம் சார்ந்த புராண வரலாறுகள், அத்திருத்தலங்களின் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றினை முன்னிலைப்படுத்தி ஆராய்ந்து தனது பயண அனுபவத்தினை பதிவு செய்துள்ளார். அவ்வாறு தான் நேரில் கண்ட 106 திவ்ய தேசங்களிலும் பெரும்பாலும் இதே வழி முறையினைக் கையாண்டிருப்பது தனிச்சிறப்பு.

சோழ நாட்டுத் திருத்தலச் சிறப்புகள்

வைணவத் திருத்தலங்கள் 108இல் அதிக அளவிலான திருத்தலங்களைக் கொண்டது (40 திருப்பதிகள்) சோழநாடாகும். சோழநாட்டுத் திருப்பதிகளில் திருமால் கிடந்த கோலமாகிய ‘புயங்க சயன’ கோலத்தில் பதினான்கு (14) திருப்பதிகளில் காட்சி தந்து அருள்பாலிக்கின்றார். அவைகளில்,

1. திருவரங்கம் (பெரிய கோயில்)
2. திருக் கரம்பனூர்
3. திருவன்பில்
4. திருப்பேர் நகர்
5. திருவெள்ளியங்குடி
6. திரு ஆதனூர்
7. திருபுள்ளம் பூதங்குடி
8. திருக்கபித்தலம்
9. திருசிறுபுலியூர்
10. திருவைகுந்த விண்ணகரம்
11. திருத்தெற்றியம்பலம்
12. திருக்குடந்தை

13. திருத்தில்லைச் சித்திரக் கூடம்

14. திருஇந்தளூர்

ஆகிய திருத்தலங்களின் தலச் சிறப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில் சோழ நாட்டுத் திருத்தலங்களில் ஏனைய திருத்தலங்களை விட இச்சயனக் கோலத் திருத்தலங்கள் தனிச் சிறப்புடன் விளங்குகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

திருவரங்கம்

பெரியகோயில் என்றழைக்கப்படும் திருவரங்கம் உட்பட ஏனைய பத்து திருத்தலங்களையும் திருமங்கையாழ்வார் மட்டிலுமே மங்களாசாசனம் செய்திருப்பது தனிச்சிறப்பு என்று கூறுகிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார். இதற்கு **"வைணவத் திவ்வியத் தலங்களை அதிக அளவில் மங்களாசாசனம் செய்து, மிகுதியான திருத்தலங்களைத் தரிசித்தவர் என்ற பெருமை உடையவர் திருமங்கையாழ்வார். அவர் மங்களாசாசனம் செய்த திருத்தலங்கள் 45, அவர் தரிசித்த திருத்தலங்கள் மொத்தம் 86" (வைணவம் அறிவோம் வாரீர், ப.38)** என்ற கூற்று உறுதுணையாக அமைகின்றது.

சோழ நாட்டுத் திருப்பதிகளில் மிக முக்கியமானதாகவும், தனிச் சிறப்பு பெற்ற திருத்தலமாகவும், 'திருவரங்கம்' திகழ்கிறது. வைணவப் பெரியோர்கள் திருவரங்கத்தைப் 'பெரிய கோயில்' என்றழைப்பதற்கேற்ப உண்மையில் இது பெரிய கோயில்தான் என்பதை உறுதிப் படுத்துகிறார். இத்திருத்தலத்தின் தலச்சிறப்புப் பற்றிக் கூறும் பேராசிரியர் பக்தி வளத்திற்குப் பேர்போன இத்தலம், 'பூலோக வைகுந்தம்' எனப் போற்றிப் புகழப்படுவதாய்க் கூறுகிறார். திருவரங்கம் பெருமாள் இந்த ஞானப் பேரூரில் கிடந்த கோலத்துடன் காட்சி தருவதை,

"வண்டினம் முரலும் சோலை
மயிலினம் ஆலும் சோலை
கொண்டல் மீ(து) அனவும் சோலை
குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோன் அமரும் சோலை
அணிதிரு அரங்கம்" (திருமாலை, 14)

என்ற பாசுரத்தால் திருவரங்கத்தில் அரங்க நகர் அப்பனுக்கு அடிமைத் தொழில் புரிந்த தொண்டரடிப்பொடியாழ்வார் அழகான சொல்லோவியத்தில் எடுத்துக்காட்டுவதையும்,

"திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக் கையால் அடிவருடப் பள்ளிகொள்ளும் கருமணி" (பெரு., திரு., 1.1)

என்ற பாசுரத்தால் இந்நகரில் திருமால் அரவணைப் பள்ளியில் அரி துயில் கொண்டுள்ளதாக குலசேகரப் பெருமாள் கண்டுள்ளதையும்,

"ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனைதான்
இன்று மறப்பேனோ, ஏழைகாள் ? நான்

கருஅரங்கத் துள்கிடந்து கைதொழுதேன் கண்டேன்

திருவரங்கம் மேயோன் திசை" (முதல் திருவந்., 6)

என்ற பாசுரத்தால் பொய்கையாழ்வார் பெரும் பக்தியில் திளைத்து திருவரங்கத் திருமாலை வழிபட்ட விதத்தினையும்,

"தென்நாடும் வடநாடும் தொழநின்ற

திருவரங்கத் திருப்பதி" (பெரியாழ்., திரு., 4:9:1)

"பக்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்

முனிவர்களும் பரந்த நாடும்

சித்தர்களும் தொழுது இறைஞ்சத்

திசை விளக்காய்" (பெரியாழ்., திரு., 4:9:6)

என்றெல்லாம் பெரியாழ்வாரும் கூறும் திருவாக்கிற்கேற்ப அரும்பெரும் சிறப்பினைப் பெற்றது திருவரங்கம் என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார். மேலும் இத்திருவரங்கத் திருப்பதியினை மதுரகவியாழ்வாரைத் தவிர ஏனைய பதினொரு (11) ஆழ்வார்களும் பாசுரங்கள் பாடிப் பரவியுள்ளனர் (245 பாசுரங்கள்) என்பதையும் எடுத்துக் காட்டுகிறார்.

வ. எண்.	ஆழ்வார்கள்	பாசுரங்கள்
1.	பொய்கையாழ்வார்	1
2.	பூதத்தாழ்வார்	4
3.	பேயாழ்வார்	1
4.	திருமழிசையாழ்வார்	14
5.	திருப்பாணாழ்வார்	10
6.	குலசேகர ஆழ்வார்	31
7.	பெரியாழ்வார்	35
8.	ஆண்டாள்	10
9.	தொண்டரடிப்பொடியாழ்வார்	55
10.	திருமங்கையாழ்வார்	72
11.	நம்மாழ்வார்	12
மொத்த பாசுரங்கள்		245

என்றவாறு 245 பாசுரங்களால் ஆழ்வார் பெருமக்கள் சிறப்பு செய்யும் தன்மையினைச் சுட்டிக் காட்டும் ந.சுப்புரெட்டியார் இதிலிருந்து திருவரங்கத்தின் பெருமையை அறிந்து கொள்ள முடிகிறது என்கிறார்.

திருக்கரம்பனூர்

திருச்சியிலுள்ள திருக்கரம்பனூர் எனும் திருத்தலம் பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருத்தலத்து எம்பெருமானை திருமங்கையாழ்வார் மட்டுமே மங்களாசாசனம் செய்துள்ளரென்றும், இத்திருவரங்கப் பெருமானை மங்களாசாசனம் செய்யும்போது திருப்போர்

நகர், திருக்குறுங்குடி, திருத்தண்கால் எம்பெருமான்களுடன் கரம்பனூர் உத்தமனையும் சேர்த்து மங்களாசாசனம் செய்கின்றார் (சோழ நாட்டு, திருப் பகுதி., பக்.3, 8)என்று கூறும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்,

"பேரானை குறுங்குடிஎம்

பெருமானை திருத்தண்கால்

ஊரானை கரம்பனூர்

உத்தமனை" (பெரிய., திரு., 5:6:2)

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரப் பகுதி **"உத்தமன் திருக்கோயில் கொண்டுள்ள இடமாதலால் உத்தமர் கோவில் என்ற திருநாமம் பெற்றிருக்கிறது" (சோழ நாட்டு., திருப்., பகுதி–1, ப.36)** என்பதனையும் சுட்டுகிறார்.

இக்கரம்பனூர் திருத்தலத்தினைப் பற்றிக் குறிப்பிடும் முனைவர் கு.முத்துராசன், **"இப்பதியில் சேவை சாதிக்கும் எம்பெருமான் கதம்ப முனிவருக்கு சேவை சாதித்தமையால் கதம்பனூர் எனப் பெயர் பெற்றது. இப்பதியில் எழுந்தருளியுள்ள புருடோத்தமனாகிய எம்பெருமான் 'உத்தமன்' என்றும் போற்றப்படுவான். அதனால் இப்பதி உத்தமர் கோவில் என்றும் பெயர் பெற்றுள்ளது" (தெய்வீகத் திருத்தலங்கள், ப.49)** என்று எடுத்துரைப்பதும் நோக்கத்தக்கதாய் அமைகிறது.

மேலும், கரம்பனூர் உத்தமர் கோயிலின் சிறப்பினை எடுத்துரைக்கும் பொருட்டு திவ்வியகவி இயற்றிய,

"சிலமா தவம் செய்தும் தீவேள்வி வேட்டும்

பலமா நதியிற் படிந்தும் – உலகில்

பரம்பர நூல் கற்றுப் பயனில்லை நெஞ்சே!

கரம்பனூர் உத்தமன்பேர் கல்" (நூற்., திரு., அந்–5)

என்ற பாசுரத்தில் "பகவானை அடைவதற்கு விரோதியாய் உள்ள உடலுறவினை அறுத்துத் தள்ளி எம்பெருமானை அடைய வேண்டும் என்ற கருத்தால் அரும்பெரும் தவம் செய்தல் பெருவேள்விகள் செய்தல், சிறந்த நதிகளில் நீராடல், விரிவாகச் சாத்திரங்கள் பயில்தல் ஆகிய இவற்றால் யாதொரு பயனும் இல்லை. அதற்கு மாறாகக் கரம்பனூரில் எழுந்தருளியிருக்கும் புருடோத்தமன் திருநாமத்தைப் பலதரம் கூறுவாயாக என்று தம் நெஞ்சிற்கு உபதேசம் செய்ததை பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் கூறுவதன் வாயிலாக அத்தலத்தின் சிறப்பையும் அங்கு உறையும் திருமாலின் பெருமையையும் அறியமுடிகிறது.

திருவன்பில்

திருச்சியிலுள்ள திருஅன்பில் எனும் திருத்தலம் பற்றிக் குறிப்பிடுகையில் கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்துள்ள இத்திருத்தலத்தின் சிறப்பினை திருமழிசையாழ்வார்,

"நாகத்தனைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்

நாகத்தனை யரங்கம் பேர்அன்பில் – நாகத்து

அணைப்பால் கடல் கிடக்கும் ஆதி நெடுமால்

அனைப்பார் கருத்தன் ஆவான்" (நான்., திருவந்., 36)

என்ற பாசுரத்தின் வழியே எடுத்துரைப்பதாய்க் கூறும் பேராசிரியர் ஏனைய ஏழு திருத்தலங்களுடன் அன்பில் என்ற திருத்தலத்தினையும் சேர்த்து மங்களாசாசனம் செய்திருப்பதை உணர்த்துகிறார். (சோழ., நாட்டு., திருப்., பகுதி–1, ப.48) மேலும் திருவன்பில் எனும் திருத்தலம் குறித்து பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருப்பாசுரமாகிய,

"போற்றிசெய் ஓர்குடைக்கீழ்ப் பொன்நாடும் இந்நாடும்

நாற்றிசையும் ஆண்டாலும் நன்கில்லை– தோற்றமிலா

எந்தைஅன்பில் ஆதிஇணைத்தா மரை அடிக்கே

சிந்தையன்பு இலாதார் சிலர்" (நூற்., திருப்., அந்–4)

என்ற பாசுரத்தின் வழியே **"அழியாப் பேரின்பத்தைப் பெற்று உய்யுமாறு எம்பெருமானிடத்து பக்தி செய்வதை விட்டு அழித்தொழியும் தன்மையாகிய சிற்றின்பத்திற்கே இடமான இந்திர பதவி முதலிய சிறப்புகளை ஒருங்கே அடைந்து எல்லா உலகங்களையும் தனிச் செங்கோல் செலுத்தும் பெருமை பெற்றாலும், அது நற்கதி பெறுவதற்குக் காரணம் ஆகாததால் அதனால் யாதொரு பயனுமில்லை" (சோழ நாட்டு., திருப்., ப.49)** என்ற திவ்விய கவியின் குறிப்பினைக் கொண்டு ந.சுப்புரெட்டியார் திருவன்பில் திருத்தலத்தின் சிறப்பினை பதிவு செய்கிறார்.

திருப்பேர் நகர்

திருச்சியிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் கிழக்குத் திசையில் உள்ள இத்திருத்தலம் பற்றிப் பேராசிரியர் குறிப்பிடுகையில் இத்திருத்தலத்து எம்பெருமான் சேவை சாதிக்கும் திருக்கோயில் இருபது அடி உயரத்தில் உள்ளதென்றும், இத்திருத்தலத்தினை திருமழிசையாழ்வார் (ஒரு பாசுரம்), நம்மாழ்வார் (2 பாசுரங்கள்), பெரியாழ்வார் (3 பாசுரங்கள்), திருமங்கையாழ்வார் (22 பாசுரங்கள்) ஆகிய நான்கு ஆழ்வார்கள் மட்டுமே மங்களாசாசனம் செய்துள்ளதாகக் கூறுகிறார். திருமழிசையாழ்வார் பல திருத்தலங்களுடன் திருப்பேர் நகரின் பெயரையும் கூறி இவையெல்லாம் எம்பெருமான் அடியார்களின் மனதில் தங்குவதற்குரிய பாலாலயங்கள் என்பதாகவும் பெரியாழ்வாரோ, குழந்தைக் கண்ணனே திருப்பேர் நகரில் கோயில் கொண்டுள்ளான் என்றும் கோட்டியூர், திருப்பேர் நகர் போன்ற இடங்களில் விளையாடுபவனும் குழந்தைக் கண்ணனே என்றும் பாடி, இறை அனுபவம் பெறுவதாகவும் திருமங்கையாழ்வாரோ சாளக்கிராமத்திலிருப்பவனும், திருவரங்கத்து எம்பெருமானும், திருவழுந்தூர் ஆமருவி அப்பனும் திருப்பேர் நகர் எம்பெருமானை ஆரா அமுதாய் அனுபவிக்கும் திறனையும்,

"திருமாலிருஞ் சோலை

மலைஎன்றேன் என்ன

திருமால் வந்துஎன் நெஞ்சு

நிறையப் புகுந்தான்” (திருவாய்., 10:8:1)

என்ற பாசுரத்தின் மூலம் இத்திருத்தலத்து திருமலாகிய எம்பெருமான் என் நெஞ்சு நிறையப் புகுந்தான் என்பதை அறிவிப்பதையும்,

“பேரே யுரைகின்ற
பிரான் இன்று வந்து
பேரேன் என்று என்
நெஞ்சு நிறையப் புகுந்தான்” (திருவாய்., 10:8:2)

என்ற பாசுரத்தின் வழியே திருப்பேர் நகரில் வீற்றிருக்கும் எம்பெருமானின் சிறப்பைப் பேசுவதையும் பேராசிரியர் எடுத்துரைக்கிறார்.

திருவெள்ளியங்குடி

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவெள்ளியங்குடி எனும் திருத்தலம் பற்றிக் குறிப்பிடுகையில் காய்கள் நிறைந்து ஓங்கிக் கிடக்கின்ற பாக்கு மரங்கள், வாழை மரங்கள், தென்னை மரங்கள் இவை மலந்திருக்கும் சோலைகளில் சென்று பாயும் மண்ணியாற்றின் தென்கரையில் உள்ளது திருவெள்ளியங்குடி என்பதை திருமங்கையாழ்வாரின் திருப்பாசுரமாகிய,

“காய்ந்தநீர் கழுகும் கதலியும் தெங்கும்
எங்கும்ஆம் பொழில்களின் நடுவே
வாய்ந்த நீர் பாயும் மண்ணியின் தென்பால்
திருவெள்ளி யங்குடி அதுவே” (பெரிய., திரு., 4:10:1)

என்ற பாசுரத்தின் வழியே எடுத்துரைப்பதிலிருந்தும்,

“அள்ளியம் பொழில்வாய் இருந்துவாழ் குயில்கள்
அரிஅரி என்றவை அழைப்ப
வெள்ளியார் வணங்க விரைந்தருள் செய்வான்
திருவெள்ளி யங்குடி அதுவே” (பெரிய, திரு., 4:10:7)

என்ற பாசுரத்தின் வாயிலாக அறிவிப்பதிலிருந்தும் திருவெள்ளியங்குடியின் சிறப்பினை அறிய முடிகிறது என்கிறார் ந.சுப்புரெட்டியார். மேலும் தேவர்கட்கு துன்பம் இழைத்த இரணியனை நரசிங்கமாக வந்து தம் மடியில் வைத்து அவன் மார்பைக் கிழித்து உயிர் குடித்த பெருமான் வராக அவதாரம் எடுத்துப் பூமிப்பிராட்டியாரை தம் கோட்டிடை வைத்து அருளியவனும், தெளிந்த அலைகள் தம் திருவடிகளின் மீது மோதும்படியாகத் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருள்பவனாகிய எம்பெருமானே திருவெள்ளியங்குடியில் எழுந்தருளியிருப்பவன் என்பதை,

“முடியுடை அமரர்க் கிடர்செயும் அசுரர்
தம்பெருமானை அன்று அரியாய்
மடியிடை வைத்து மார்வம்முன் கீண்ட

மாயனார் மன்னிய கோயில்" **(பெரிய., திரு., 4:10:8)**

என்ற பாசுரத்தின் மூலம் திருமங்கையாழ்வார் கூறுவதிலிருந்தும் புலப்படுத்தும் பேராசிரியர் அதோடு நில்லாமல் திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருப்பாசுரத்தினையும் இதற்குச் சான்றாக்கி,

"கால் அளவும் போதாக் கடன்நாலத் தோர்கற்ற
நூலளவே யன்றி நுவல்வாரார் – கோலப்
பருவெள்ளி யங்குடியான் பாதகவூண் மாய்த்த
திருவெற்றி யங்குடியான் சீர்" **(நூற்., திரு., அந்., 29)**

என்ற பாசுரத்தின் வழியே எம்பெருமானின் அனந்த கல்யாணக் குணங்கள் முழுவதையும் தெளிவாகத் தெரிவிக்கின்ற நூல்களும் இவ்வுலகிலில்லை. **"நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு என்பதற்கேற்றவாறு எம்பெருமானாகிய இறைவனின் குணங்களைச் சிறிதளவே கூறுகின்ற அந்நூல்களைக் கற்றவர்கள், எம்பெருமானின் திருக்குணங்களைச் சிறிதளவே கூறவல்லர். மாறாக முற்றும் உணர்ந்து கூறக்கூடியவர் ஒருவரும் இலர்" (சோழ நாட்டு., திருப்., பகுதி–1, ப.130)** என்று திருவெள்ளியங்குடியின் திருமால் சிறப்பினை எடுத்துரைப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

திருப்புள்ளம் பூதங்குடி

திருச்சி செல்லும் வழியில் சுவாமி மலைக்கு அருகில் உள்ள திருப்புள்ளம் பூதங்குடி எனும் திருத்தலம் பற்றிக் குறிப்பிடுகையில் திருமங்கையாழ்வார் மட்டுமே இத்திருத்தலத்தினை மங்களாசாசனம் செய்த பாங்கினை விவரிக்கிறார்.

"பள்ளச் செதுவில் கயலுகளப்
பழனக் கழனி யதனுள்போய்
புள்ளுப் பிள்ளைக் கிரைதேடும்
புள்ளம்பூதங் குடிதானே" **(பெரிய., திரு., 5:1:2)**

என்ற பாசுரத்தின் வழியே திருமங்கையாழ்வார் திருப்புள்ளம் பூதங்குடி நாதனை சிறப்பித்திருப்பதிலிருந்தும், திவ்வியகவியின் திருப்பாசுரமாகிய,

"விரும்பி னவைஎய்து வினையனைத்தும் தீரும்
மரும்பரம வீடும் அடைவீர் – பெரும்பொறிகொள்
கள்ளம்பூ தம்குடிகொள் காலம்உடை யீர்அடிகள்
புள்ளம்பூ தங்குடியிற் போம்" **(நூற்., திரு. அந்., 7)**

என்ற பாசுரத்தின் வழியே **"திருப்புள்ளம் பூதங்குடி எனும் திருத்தலத்தை விரும்பி அணுகினால் இம்மையில் விரும்பும் எல்லாப் பலன்களும் கிட்டி, வினையனைத்தும் தீரும். அதோடு மறுமையில் வீடுபேறும் கிடைக்கும்" (சோழ நாட்டு., திருப்., பகுதி–1, ப.1370)** என்பதைத் தெரிவிக்கிறார் பேராசிரியர்.

திருஆதனூர்

திருஆதனூர் எனும் இத்திருத்தலம் புள்ளம்பூதங்குடியிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதென்று கூறும் ந.சுப்புரெட்டியார் திருமங்கையாழ்வார் மட்டிலுமே இத்திருத்தலத்தையும் "ஆதனூர் ஆண்டு அளக்கும் ஐயனை" (பெரிய திருமடல், 70) என்று மங்களாசாசனம் செய்துள்ளாரென்றும் கூறி, திவ்விய கவியின் திருப்பாசுரமாகிய,

"இடரான ஆக்கை இருக்கை முயல்வார்
மடவார் மயக்கின் மயங்கார் – கடவுளர்க்கு
நாதனூர் ஆதரியார் நானெனதென் னார்அமலர்
ஆதனூர் எந்தையடி யார்"   (நூற்., திரு., அந்., 9)

என்ற பாசுரத்தின் வழியாகவும் **"திருமாலடியார்கள் தேகாபிமானம் கொள்ளாமலும், காம மயக்கத்திற்கு உட்படாமலும் நின்று சிற்றின்ப ஆசையினை அறவே ஒழித்து, அகப்பற்று புறப்பற்றுகளின்றி இருக்கக்கூடிய சிறப்புகளை அருள்பவன் இத்திருத்தலத்து எம்பெருமான்" (சோழ நாட்டு., திருப்., ப.141)** என திருஆதனூர்த் திருத்தலத்தின் சிறப்பினை எடுத்துரைக்கிறார்.

திருக்கபித்தலம்

பாபநாசம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருக்கபித்தலம் எனும் திருத்தலத்தின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுகையில் **"இத்திருத்தலத்தில் காட்சி தரும் பெருமான் அனுமனுக்குச் சேவை சாதித்தமையால் இத்திருக்கோயில் அமைந்துள்ள ஊர் திருக்கபித்தலம் (கபி–குரங்கு, அனுமன்) எனப்பட்டது" (சோழ நாட்., திருப்., பகுதி–1, ப.143)** என்கிறார். இத்தலத்து எம்பெருமானை,

"கூற்றமும் சாரா; கொடுவினையும் சாரா; தீ
மாற்றமும் சாரா; வகையறிந்தேன் – ஆற்றங்
கரை கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரை கிடக்கும் உள்ளத்து எமக்கு"   (நான்., திரு., 50)

என்ற ஒரு பாசுரத்தால் திருமழிசையாழ்வார் மட்டுமே மங்களாசாசனம் செய்துள்ள நிலையினை, **"நான்முகன் முதலிய தேவர்களுக்கு அடையத் தக்கவனாய்த் திருப்பாற்கடலின் திருக்கண் வளர்ந்தருள்பவனே திருக்கபித்தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ளான். இப் பெருமானே பண்டொருகால் பாரதப்போரில் தேர்த்தட்டில் நின்று பார்த்தனைப் பொருளாகக் கொண்டு அனைவருக்கும் உய்யும் பொருளான 'சரம சுலோகத்தை' அருளிச் செய்தனன்; இந்தத் தத்துவம் என் நெஞ்சில் பதிந்திருப்பதனால் இனி நான் எம பயம் அணுகாமலும், கொடிய பாவங்கள் அணுகாமலும், தீய வினைகள் அணுகாமலும் இருக்கத் தக்க உபாயத்தை அறிந்தவனானேன்" (சோழ நாட்., திருப்., ப.144)** என்பதே திருமழிசையாழ்வாரின் கூற்றாகக் குறிப்பிடுகிறார் பேராசிரியர். மேலும் இப்பாசுரத்தில் 'கபித்தலம்' என்ற திருநாமம் தெளிவாக இல்லையாயினும் ஆழ்வாரின் திருவுள்ளக் கருத்தை உள்ளது உள்ளபடி கூறும் பேராற்றலுடைய நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமனார் பட்டர் முதலான ஆசாரியப் பெருமக்கள் இது கபித்தலத்தினை

நோக்கிய திருப்பாசுரமேயாகும் என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர் என்பதை பெரியவாச்சான் பிள்ளைக்கு முற்பட்டவரான திவ்விய கவியின்,

“காணியும் இல்லமும் கைப்பொருளும் ஈன்றோரும்

பேணிய வாழ்க்கையும் பேருறவும் – சேனில்

புவித்தலத்தில் இன்பமும் பொங்கரவம் ஏறிக்

கபித்தலத்தில் கண்துயில்வோன் கால்” (நூற்., திருப்., அந்., 27)

என்ற பாசுரத்தின் வழியாக, **“அனுபவப் பொருளும், அனுபவக் கருவியும், அனுபவ இடமும் எனக்கு எம்பெரமானின் கழலினைகளாகத் திருக்கபித்தலத் தரிசனம் தான்” (சோழ., நாட்., திருப்., பகுதி–1, ப.145)** என்பதை உறுதிப்படுத்துகிறார் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார். இதன் வாயிலாக அவரது ஆராய்ச்சித் திறன் புலப்படுவதை அறிய முடிகிறது.

திருச்சிறுபுலியூர்

தமிழகத்தின் மருதநில வளத்திற்குப் பேர்போன கீழ்த்தஞ்சையிலுள்ள நன்னிலம் வட்டத்தில் உள்ள திருச்சிறுப்புலியூர் எனும் திருத்தலம் பற்றிக் குறிப்பிடுகையில் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ள இத்திருத்தலம் கடல் வெள்ளம் அலையெறிந்து நவமணிகளைக் கொண்டுவந்து கொழிக்கும் நீர்க்கரைகளையுடைய பேறு பெற்றுத் திகழ்வதைக் குறித்து,

“வெள்ளம்முது பரவைத்திரை விரிய கரைஎங்கும்

தெள்ளும் மணி திகழும் சிறு புலியூர்” (பெரிய., திரு., 7:9:1)

“அரையும் புனல் ஒருபால்; வயல் ஒரு பால்; மொழி ஒரு பால்;

சிரைவண்டு இனம் அறையூர் சிறுபுலியூர்” (பெரிய., திரு., 7:9:3)

என்ற பாசுரத்தினாலும்,

“முழுநீலமும் அலராம்பலும் அரவிந்தமும் விரவிக்

கழுநீரொடு மடவார்–அவர் கிண்வாய்முகம் மலரும்

செழுநீர்வயல் தழுவும்சிறு புலியூர்” (பெரிய., திரு., 7:9:6)

என்ற பாசுரத்தினாலும் இத்திருத்தலத்தின் சிறப்பினை திருமங்கையாரின் வழியே எடுத்துரைக்கும் பேராசிரியர் இத்திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டிருக்கும் இறைவனைத் தவிர வேறொன்றையும் அறியாதவர் எனக்கூறி,

“பறையும்வினை தொழுதும்ம்மின்நீர்

பணியும் சிறு தொண்டீர்

....

புலியூர்ச்சல சயனத்து

உறையும் இறை அடியல்லது

ஒன்றிறையும் அறியேனே” (பெரிய., திரு., 7:9:4)

“சலசயனம் தொழுநீர்மையுடையார்

அடிதொழுவார் இலரே" (பெரிய., திரு., 7:9:6)

என்ற பாசுரங்களின் வழியே திருச்சிறுபுலியூர் இறைவனின் மேல் திருமங்கையாழ்வார் கொண்டுள்ள பற்றினை எடுத்துரைத்து அடியார்களின் பாவங்களும், துன்பங்களும் தீரும் சிறப்பு மிகுந்தது இத்திருத்தலம் என்கிறார். மேலும் திவ்விய கவியின் திருப்பாசுரமாகிய,

"ஆமருவ மேய்த்த அரங்கர்எதிர் ஆர்நிற்பார்
தாமருவி வாணனைத்தோள் சாய்ந்தநாள் – சேம
முறுபுலியூர் வன்றோல் உடையான் உடைந்தான்
சிறுபுலியூர் எந்தைமேற் சென்று" (நூற்., திரு., அந்., 11)

என்ற பாசுரத்தின் வழியாகவும் திருச்சிறுபுலியூர் திருத்தலத்தின் சிறப்பினை எடுத்துரைக்கிறார். இந்தத் திருச்சிறுபுலியூர் திருவரங்கத்தினைப் போலவே தனிச்சிறப்புப் பெற்றது என்னும் பேராசிரியாரின் கூற்றுக்குச் சான்றாக **"108 வைணவ திருத்தலங்களில் இரண்டு திருத்தலங்களில் மட்டும் பெருமான் தெற்கு நோக்கி சயனம் கொண்டிருக்கிறார் ஒன்று திருவரங்கம், மற்றொன்று திருச்சிறுபுலியூர்"** (தினத்தந்தி, 30.01.2018) என்பதையும் இங்கு ஒப்பு நோக்கலாம்.

திருவைகுந்த விண்ணகரம்

திருவைகுந்தம் விண்ணகரம் எனும் இத்திருத்தலம் சீர்காழி இருப்பூர்தி நிலையத்தின் கிழக்கே எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதென்று கூறும் பேராசிரியர் இத்திருத்தலத்து எம்பெருமானை திருமங்கையாழ்வார் மட்டும் ஒரே ஒரு திருமொழியால் மங்களாசாசனம் செய்திருப்பதாய்க் கூறுவதோடு நம்மாழ்வார், ஆண்டாள் முதலியோரும் இத் திருத்தலத்திற்குத் தம் பாசுரங்களால் பெருமை சேர்த்திருப்பதையும் விவரிக்கிறார்.

"வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல்
செல்ல வீவில்சீர்
ஆற்றல் மிக் காளும் அம்மானை" (திருவாய், 4:5:1)

என்ற பாசுரத்தின் வழியே இத்திருத்தலத்தில் வீற்றிருந்த திருக்கோலமாய்ச் சேவை சாதித்தலால் இத்திருத்தலம் வைகுந்த விண்ணகரம் என்ற திருநாமம் பெற்றிருப்பதாய் நம்மாழ்வார்கள் எடுத்துக்காட்டுவதிலிருந்தும்,

"பொங்கோதம் சூழ்ந்த
புவனியும் விண்ணுலகும்
அங்கானும் சோராமே
ஆள்கின்ற எம்பெருமான்" (நாச்., திரு., 11:3)

என்ற பாசுரத்தின் வழியே இத்திருத்தலத்து எம்பெருமான் பெரிய பிராட்டியோடு வீற்றிருந்து உலகமெல்லாம் செங்கோல் செலுத்துவதாகவும் அச்செங்கோல் செலுத்துவதற்கு உண்டாகிய ஞானம், சக்தி முதலிய திருக்குணங்களை நிரம்பப் பெற்றவனாகக் காட்சி தருவதாகவும்

ஆண்டாள் எடுத்துரைப்பதிலிருந்தும் புலனாகிறது என எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் மேலும் திவ்வியகவியின் திருப்பாசுரமாகிய,

"வணங்கேன் பிறதெய்வம் மாலடியார் அல்லாக்
குணங்கேடர் தங்களுடன் கூடேன் – இணங்கி நின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவேன் ஈதன்றோ
வைகுந்த விண்ணகர வாழ்வு" (நூற்., திரு., அந்., 31)

என்ற பாசுரத்தின் வழியே **"வைகுந்தத்திற்குச் சென்றாலும் அங்கு உண்டாகும் நல்வாழ்வு திருமால் அடியார்களுடன் கூடி எம்பெருமானைத் துதித்தலேயாகும். அத்தகைய பேற்றினை இப்பூவுலகத்தில் வைகுந்த விண்ணகரத்தில் வழிபட்டு அடைவேன்" (சோழ நாட்டு, திருப்., பகுதி–2, ப.92)** என்று திவ்வியகவியார் கூறுவதிலிருந்தும் இத்திருத்தலத்தின் சிறப்பினை அறிந்து கொள்ளலாம் என்கிறார் பேராசிரியர்.

திருத்தெற்றியம்பலம் (திருநாங்கூர்)

சீர்காழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருநாங்கூரின் ஒரு பகுதியான திருத்தெற்றியம்பலம் எனும் இத்திருத்தலத்தினை திருமங்கையாழ்வார் மட்டும் மங்களாசாசனம் செய்திருப்பதாய்க் கூறும் ந.சுப்புரெட்டியார்,

"நூற்றிதழ்கொள் அரவிந்தம் நுழைந்த பள்ளத்(து)
இளங்கமுகின் முதுபாளை பகுவாய் நண்டின்
சேற்றளையில் வெண்முத்தம் சிந்து நாங்கூர்த்
திருத்தெற்றி அம்பலம்" (பெரிய., திரு., 4:4:1)

என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார் திருத்தெற்றியம்பலத்து வயலிலுள்ள நண்டுகள் உணவிற்காகத் தாமரைப்பூவில் சென்று புகும்போது பாக்குப் பாளைகளிலிருந்து உதிரும் வெண்முத்துக்கள் இறைக்கப்பட்டு நண்டின் வளை மூடப்படும் சிறப்பினைப் பெற்றிருப்பது இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பு என்பதை வலியுறுத்துவதைச் சுட்டிக்காட்டுகிறார். மேலும் அழகு பொருந்திய சோலைகளையுடைய இத்திருத்தலத்துச் சிறப்பினை,

"மான்போலும் மென்நோக்கி செய்ய வாயார்
மரகதம்போல் மடக்கிளியைக் கைமேல் கொண்டு
தேன்போலும் மென்மழலை பயிற்று" (பெரிய., திரு., 4:4:6)

என்ற பாசுரமானது நாங்கூர் நகர் வீதியிலுள்ள ஒன்றோடொன்று சேர்த்து நெருங்கி வரிசை வரிசையாக அமைந்திருக்கும் மாடங்கள் தோறும் மதுர மொழிகளையுடைய மகளிர் தம் புருவ நெரிப்பினால் மனதைக் கவரும் இயல்புடையவராய் இருந்து தெருக்கள் தோறும் நான்மறைகள், அறு அங்கங்கள், இதிகாசப் புராணங்கள் இவற்றின் முழக்கத்தினை விடாமல் முழங்கிக் கொண்டிருப்பார் என்பதைக் கூறுவதிலிருந்து இத்திருத்தலத்தின் சிறப்பினை வலியுறுத்தும் பேராசிரியர் இத்தலத்தில் காட்சிதரும் பெருமானை வராக அவதாரமாக உருவகித்துப் பாடும் திருமங்கையாழ்வாரின் பாசுரமாகிய,

"சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரிய மேரு

திருக்குளம்பில் கணகணப்பத் திருவா காரம்

குலுங்கநில மடந்தைதனை இடந்து புல்கிக்

கோட்டிடைவைத் தருளியஎம் கோமான்" (பெரிய., திரு., 4:4:8)

என்ற பாசுரத்தின் மூலம் திருமால் இத்திருத்தலத்தில் வராக பேரவதாரத்தினைச் சிறப்பு செய்வதனையும், திவ்விய கவியின் திருப்பாசுரமாகிய,

"சென்றது காலம் நிரைநரை மூப்பு ஆனஇனி

என்றுகொல் சாவுஅறியோம் என்நெஞ்சே! –கன்றால்

உருவத்தெற்றி அம்பலத்தை ஓர்விளவின் வீழ்த்தான்

திருத்தெற்றி அம்பலத்தைச் சேர்" (நூற்., திருப்., அந்., 36)

என்ற பாசுரத்தின் வழியே **"பழுதாகவே பல பகலும் போயினவென்றஞ்சி ஒடுங்கிக்கொண்டே வருகின்ற முதுமைப் பருவத்திலும் நெஞ்சம் இறப்பின்றியே நின்றதென்று சிந்தனைச் சிறிதுமின்றி உலகப் பற்றுகொண்டு உழல்வதுகண்டு விளவெறிந்து இரண்டு அசுரர்களை ஒருசேர மாய்த்த திருமாலாகிய எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தெற்றியம்பலம் எனும் இத்திருத்தலத்தைச் சார்ந்து உய்வுபெறுவாய் நெஞ்சே" (சோழ நாட்டு திருப்., பகுதி–2, ப.107)** என்று திவ்வியகவியார் உணர்த்தியிருப்பதைக் கூறி திருத்தெற்றியம்பலத்தின் சிறப்பினை உணர்த்துகிறார் பேராசிரியர்.

மேலும் புயங்க சயனக் கோலத்தில் பெருமாள் அருள்பாலிக்கும் இப்பதினோரு சோழநாட்டுத் திருப்பதிகளையும் விடுத்து, உத்தியோக சயனத்திலும் (திருக்குடந்தை), போக சயனத்திலும் (தில்லைச் சித்திரக்கூடம்), வீர சயனத்திலும் (திருஇந்தளூர்) சோழ நாட்டுத் திருத்தலங்களிலும் சயனக் கோலத்தில் திருமால் அர்ச்சாவதார நிலையி காட்சி தரும் சிறப்பினையும் எடுத்துரைக்கிறார்.

திருக்குடந்தை

கும்பகோணத்திலுள்ள இத்தலத்து சார்ங்கபாணிப் பெருமாள் உத்தியோக சயனக் கோலத்தில் இருக்கும் சிறப்பினை நம்மாழ்வார், "ஆரா அமுதே" (திருவாய், 58) என்ற திருவாய் மொழியின் மூலம் அறிவதோடு, வைணவத்தின் பெருமை பேசும் 'நாலாயிரம்' என்னும் பக்திப் பனுவல் கிடைப்பதகுத் திறவு கோலாக இருந்தது என்பதனையும் எடுத்துக் கூறும் பேராசிரியர், இத்திருத்தலம் ஏழு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற சிறப்பு பெற்றதென்றும் கூறுகிறார். பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசையாழ்வார் ஆகிய ஏழு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்று 'குடமூக்கு' என்றழைக்கப்படும் கும்பகோணத்தின் அடையாளத்துடன் தனிச்சிறப்பு பெற்றது இத்திருத்தலம் என்பதை பூதத்தாழ்வார்,

"படமூக்கின் ஆயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்

குடமூக்கில் கோயிலாகக் கொண்டு" (இரண்., திருவந்., 97)

என்ற பாசுரத்தின் வழியே இத்திருத்தலத்தின் சிறப்பினையும், பக்திசாரர் என்றழைக்கப்படும் திருமழிசையாழ்வார் இத்திருத்தலத்து பெருமான் வாய்திறந்து ஒரு சொல் பேசாமலும் கைகோலி அணைத்தருளாமலும் கண் வளரும் நிலையினை அர்சாவதார சமாதி என்று திருவுள்ளம் பற்றாமல், அளவில்லா சிரமத்தினாலே இங்ஙனம் ஆழ்ந்து உறங்குவதாகக் கருதியதை,

"நடந்த கால்கள் நொந்தவோ ?

நடுங்க ஞாலம் ஏனமாய்

இடந்த மெய்கு லுங்கவோ ?

விலங்கு மால்வ ரைச்சுரம்

கடந்த கால்ப ரந்தகா

விரிக்க ரைக்கு டந்தையுள்

கிடந்த வாறெழுந் திருந்து

பேசு வாழி கேசனே" (திருச்., விரு., 61)

என்ற பாசுரத்தின் வழியே எடுத்துரைப்பதையும் விவரித்து, இவ்வாரா அமுதனிடம் அளவற்ற ஈடுபாடு கொண்டவள் ஆண்டாள் என்பதனை,

"ஆரே உலகத்து ஆற்றுவார் ?

ஆயர்பாடி கவர்ந்து உண்ணும்

காரேனு உழக்க உழக்குண்டு

தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை

ஆரா வமுதம் அணையான்தன்

அமுத வாயில் ஊறிய

நீர்தான் கொணர்ந்து புலராமே

பருகி இளைப்பை நீக்கிரே" (நாச்., திரு., 13:4)

என்ற பாசுரத்தின் வழியே கண்ணனின் மீது கட்டுமீறி காதல் கொண்டு தன்வயம் இழந்து கிடந்த நிலையினைக் கூறுவதிலிருந்தும், இத்தலத்து எம்பெருமானை "குடந்தை உத்தமன்" (பெரி., திரு., 1:5:4), "தன் குடந்தை நகராளன்" (பெரி., திரு., 3:6:5), "கொந்துலாம் பொழில்சூழ்க் குடந்தை தலைக்கோலினை மறக்கேனே" (பெரி., திரு., 7:3:3) என்றும் திருமங்கையாழ்வார் உள்ளமுருகிப் பாடுவதிலிருந்தும்,

"தூவிசேர் அன்னம் மன்னும்

சூழ்புனல் குடந்தையானைப்

பாவியேன் பாவியாது

பாவியேன் ஆயினேன்" (திருக்குறுந்., 14)

என்ற பாசுரத்தின் வழியே திருக்குடந்தைப் பெருமானைத் தொழாத சிந்தனையால், "பழுதாகவே பல பொழுதுகள் போயின" என்று கூறி வருந்துவதையும், திருக்குடந்தையின் அஞ்சனக் குன்றம் தன்னை சேவிக்கும்போது பெருமான் ஆழ்வாரின் மனக்கண்முன் காட்சிதரும் நிகழ்வை,

"பேரானை குடந்தைப்

பெருமானை இலங்கொளிசேர்

வாரார் வளமுலையாள்

மலர் மங்கை நாயகனை

ஆரா இன்னமுதைத்

தென்அழுந்தையில் மன்னி நின்ற

காரார் கருமுகிலை

கண்டு களித்தேனே" (பெரிய., திரு.,, 7:6:9)

என்று எக்களிப்புடன் பாடுவதையும், எம்பெருமான் ஆசாரியனாக நின்று அவரிடம் திருமந்திர உபதேசம் பெற்ற திருமங்கையாழ்வார் ஆரா அமுதப் பெருமானைத் திருக்குடந்தையில் சேவித்ததால் தீய பொருள்களைப் பேசிய வாயாலேயே திருமந்திரத்தை அனுசந்தித்து முக்தி பெற்றேன் என்பதை,

"தூவிசேர் அன்னம் துணையோடு புணரும்

சூழ்புனல் குடந்தையே தொழுதுஎன்

நாவினால் உய்யநான் கண்டு கொண்டேன்

நாராய ணாஎன்னும் நாமம்" (பெரிய., திரு., 1:1:12)

என்ற பாசுரத்தின் வழியே எடுத்துரைப்பதிலிருந்தும், நம்மாழ்வாரின் திருவாய் மொழிப் பாசுரமாகிய,

"செறுநீர்த் திருக்குடந்தை

ஏரார் கோலம் திகழக்

கிடந்தாய் கண்டேன் எம்மானே" (திருவாய்., 5:8:1)

என்ற பாசுரத்தின் வழியாகவும் திருக்குடந்தையின் சிறப்பினை எடுத்துக்கூறி விளக்கியிருக்கிறார் பேராசிரியர்.

திருத்தில்லைச் சித்திரக்கூடம்

சிதம்பரத்திலுள்ள புகழ்பெற்ற தில்லைச் சித்திரக்கூடம் எனும் இத்தலத்தில் வீரசயனத்தில் வீற்றிருக்கும் பெருமானின் சிறப்பினை இத்திருக்கோயிலின் பெயர் ஆராய்ச்சியில் ஈடுபட்ட பேராசிரியர், "**ஆதியில் இத்தலம் தில்லை (Excoecaria Agallocha Linn) என்ற ஒருவகைப் புதர்ச்செடிகளால் சூழ்ந்த வனமாக இருந்ததால், 'தில்லை' என்ற பெயர் பெற்றதாகவும், 'சித்திரக்கூடம்' என்பது விசித்திரமான சிகரங்களையுடையது எனப் பொருள்படும் காரணப் பெயராகும்" (சோழ நாட்டு திருப்., இரண்டாம் தொகுதி, ப.3)** என்று எடுத்துரைக்கிறார். அதோடு "**இராமபிரான் வனவாசம் செய்த காலத்து அவனது திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காய் இருந்தது இம்மலை; அதனைப் போலவே இத்தலமும் எம்பெருமானுடைய திருவுள்ளத்திற்குப் பாங்காயிருப்பதனாலேயே அப்பெயரே இத்தலத்திற்கும்**

இடம் பெற்றது" (மேலது, ப.3) என்கிறார். இத்திருத்தலத்தின் சிறப்பை உணர்ந்துதான் திருமங்கையாழ்வார்,

"மூவாயிர நான்மறை யாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ரக் கூடம் சென்றுசேர் மின்களே" (பெரிய., திரு., 3:2:8)

என்ற பாசுரத்தின் வழியாக "தில்லைச் சித்ரகூடம் சென்று சேர்மின்களே" என்று ஒருமுறைக்கு ஒன்பது முறையாகத் தம் பாசுரத்தால் ஆற்றுப்படுத்துவதன் மூலம் இத்திருத்தலத்தின் சிறப்பினை அறியலாம் என்றும் எடுத்துரைக்கிறார். மேலும் குலசேகர ஆழ்வார் தன்னுடைய பெருமாள் திருமொழியில்,

"தில்லை நகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
அந்தணர்கள் ஒருமூவா யிரவர் ஏத்த" (பெரு, திரு., 10:2)

என்ற பாசுரத்தின் வழியாகத் தில்லைச் சித்ரக்கூடமானது தில்லைப்பெருமான் கோவிந்தராசரின் சிறப்பினைப் பரப்புவதாகவும், இத்திருத்தலத்து கோவிந்தராசரை குலசேகர ஆழ்வாரும், திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்திருக்கும் நிலையினால் பெருமை பெற்றிருப்பதையும் எடுத்துக்காட்டி அதோடு திவ்யகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் திருப்பாசுரமாகிய,

"அடியால் உலகெல்லாம் அன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியே நெஞ்சே – கொடிதாய
குத்திர கூடங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்
சித்திர கூடம் கருதிச் செல்" (நூற்., திருப்., அந்., 22)

என்ற பாசுரத்தின் வழியே இறப்பதற்கு முன்னர் சித்ரக்கூடம் சென்றால் தில்லைக் கோவிந்தனை வழிபட்டு நற்கதி அடையலாம் என்று தம் நெஞ்சுக்குச் சொல்வதோடு, மானிடர் அனைவரையும் அவ்வழியே செல்லத் தூண்டுவதையும் உணர்த்துவதாய் அமைந்து கோவிந்தன் என்ற திருநாமம் பசுக்களைக் காத்தவன், உயிர்களை அடிமையாக நான்முகனுக்கு உபதேசித்தவன், வராக அவதாரம் செய்து பூமியை அடைந்தவன் என்ற பொருட்களையெல்லாம் தாங்கி நிற்கின்றது என்பதைப் பேராசிரியர் வலியுறுத்துவதிலிருந்து இத்திருத்தலத்தின் சிறப்பினை அறிய முடிகின்றது.

திரு இந்தளூர்

மயிலாடுதுறை நகரின் வடக்கு முனையில் உள்ள திருஇந்தளூர் எனும் திருத்தலத்தின் சிறப்பு பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் திருமங்கையாழ்வார் மட்டுமே இத்திருத்தலத்தினை மங்களாசாசனம் செய்திருப்பதை,

"ஆசையெனும் கடலில் வீழ்ந்து
இங்கு அயர்ந்தோம்

அயலாரும் ஏசுகின்றது

இதுவே காணும் இந்தளூரிரே"　　　　(பெரிய., திரு., 4:9:3)

என்ற பாசுரத்தின் வழியே ‘திருமங்கை மன்னன் திருஇந்தளூர் பெருமானைக் காண ஆசைப்பட்டு அது பெறாதே முடிந்தான் என்ற பேச்சு நாற்சந்தியில் கிளம்பினால் அதனைக் காட்டிலும் பெரிய குற்றம் வேறு உண்டோ ? நான் உலகுக்கெல்லாம் சேதி; எல்லோரையும் நான் குளிர நோக்கா தொழியலாமா ? (சோழ, நாட்டு, திருப் பகுதி–2, ப.22) என்று பரவசப் படுவதிலிருந்து திருஇந்தளூரின் பெருஞ்சிறப்பினை அறியலாம் எனக்கூறும் பேராசிரியர் அதோடு நில்லாமல்,

"காசின் ஒளியில் திகழும் வண்ணம்

காட்டீர் ? எம்பெருமான் !

வாசிவல்லீர் இந்த ளூரீர்

வாழ்ந்தே போம்நீரே"　　　　(பெரிய., திரு., 4:5:4)

என்ற பாசுரத்தின் வழியாகவும்,

"நல்லார் அறிவீர்; தீயார்

அறியீர்; நமக்கிவ் வுலகத்தில்

எல்லாம் அறிவீர் ஈதே

அறியீர் இந்தளூ ரீரே"　　　　(பெரிய., திரு., 4:9:6)

என்ற பாசுரத்தின் வழியாகவும் திருஇந்தளூர் பெருமான் எழுந்தருளியுள்ள இத்தலத்தினை சிறப்பு செய்திருப்பதனையும் எடுத்துக்காட்டி அத்திருத்தலத்தின் பெருமையைக் காட்டும் பேராசிரியர் திவ்விய கவியின் திருப்பாசுரமாகிய,

"நாடுதும்வா நெஞ்சமே நாராய ணன்பதிகள்

கூடுதும்வா மெய்யடியார் கூட்டங்கள் – கடுதும்வா

வீதியிந்த ளத்திதகலின் வீசுபுகை வாழும் எழும்

ஆதியிந்த ளூரான் அடி’　　　　(நூற்., திருப்., அந்., 22)

என்ற பாசுரத்தின் வழியே திருமாலின் திருப்பதிகளுள் ஒன்றாகிய திருஇந்தளூருக்குச் சென்று அங்குள்ள அடியார் கூட்டத்துடன் கூடி எம்பெருமானின் திருவடித் தாமரைகளை முடிக்கு அணியாகச் சூடுமாறு கூறுவதிலிருந்து இத்திருத்தலத்தின் சிறப்பு விளங்குகிறது என்பதனையும் பதிவு செய்திருக்கிறார்.

பாண்டிய நாட்டுத் திருத்தலச் சிறப்புகள்

பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டில் ஆறு திருப்பதிகளில் மட்டும் பெருமாள் சயனக் கோலத்தில் சேவை சாதிக்கிறார் அவை (1) திருக்கோட்டியூர், 2) திருமெய்யம், 3) திருப்புல்லாணி, 4) ஸ்ரீ வில்லிபுத்தூர், 5) திருப்புளிங்குடி, 6) திருக்கோளூர் என்பனவாகும். இத்திருத்தலங்களின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் இத்திருத்தலங்களின் சிறப்புகளெல்லாம் படிப்போரின் உள்ளங்களைப் பிணித்து ஆழ்வார்களின்

திருப்பாசுரங்களையெல்லாம் சேவித்து அனுபவிக்கத் தூண்டும் கருவிகளாக அமையுமென்பதனையும் எடுத்துரைக்கிறார்.

திருக்கோட்டியூர்

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்புத்தூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூரில் உள்ளது திருக்கோட்டியூர் எனும் இத்திருத்தலமென்றும், இத்திருத்தலத்தில் "ஸ்தித நாராயணன்" என்ற திருநாமத்தால் அழைக்கப்படும் பெருமாள் புயங்க சயனக் கோலத்தில் காட்சி தருகிறாரென்றும், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய ஐந்து ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட சிறப்பினைப் பெற்றது இத்திருத்தலம் என்பதை வலியுறுத்துகிறார்.

"சீதநீர் புடைசூழ்
செழுங்கழனி யுடைத் திருக்கோட்டியூர்" (பெரியாழ்., திரு., 4:4:11)

"நாவகாரியம் செல்லிலாதவர்
நாடொறும் விருந்தோம்புவார்
தேவ காரியம் செய்து வேதம்
பயின்று வாழ்திருக் கோட்டியூர்" (பெரியாழ்., திரு., 1:1:11)

என்றெல்லாம் பெரியாழ்வார் தம் பாசுரங்களால் திருக்கோட்டியூர் திருத்தலத்தினை அலங்கரிப்பதிலிருந்தும்,

" ஆலும் மாவலவன், கலிகன்றி, மங்கையர்
தலைவன் அணி பொழில்
சேல்கள் பாய் கழனித் திருக்கோட்டியூரானை" (பெரிய., திரு., 9:10:10)

என்று திருமங்கையாழ்வார் தம் பாசுரத்தால் திருக்கோட்டியூர் திருத்தலச் சிறப்பையைப் புலப்படுத்துவதிலிருந்தும் இத்தலத்தின் பெருமையை எடுத்துரைத்துள்ளார்.

"இன்றா அறிகின்றேன் அல்லேள் இருநிலத்தைச்
சென்றாங் களந்த திருவடியை; அன்று
கருக்கோட்டி யுள்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருக்கோட்டி எந்தை திறம்" (இரண்., திருவந்., 87)

என்ற பாசுரத்தால் பூதத்தாழ்வார் தாம் கருவிலிருக்கும் போதே திருக்கோட்டியூர் பெருமானின் தன்மைகளைக் கண்டு அனுபவித்த நிலையைக் குறிப்பிட்டு அடியார்களைப் பேராசிரியர் ஆற்றுப்படுத்தியுள்ளார்.

"குறிப்பெனக்கு கோட்டியூர் மேயானை ஏத்த;
குறிப்பெனக்கு நன்மை பயக்க; வெறுப்பேனோ
வேங்கடத்து மேயோனை; மெய்வினைநோய் எய்தாமல்
தான்கடத்தும் தன்மையான் தான் ? " (நான்., திருவந்., 34)

என்ற பாசுரத்தால் திருமழிசையாழ்வார் திருகோட்டியூரில் நித்தியவாசம் செய்கின்ற பெருமானை துதிப்பதிலுள்ள பெருமையை உண்டாக்கிக் கொள்வதிலேயே தனக்கு ஆனந்தமென்றும், அவ்வாறு அப்பெருமானை துதிப்பதால் உள்ளத்திற்கும், உடலுக்கும் ஏற்படக்கூடிய கருமங்களும், நோய்களும் அண்டாமல் காக்கக்கூடிய நாராயணனின் திருவடிகளை நான் மறந்திருப்பேனா ? என்று கூறுவதிலிருந்தும்,

“விண்ணகரம், வெஃகா, விரிதிரைநீர் வேங்கடம்
மண்நகரம் மாமாட வேளுக்கை – மண்ணகத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம், தென்கோட்டி
தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு” **(முதல் திருவந்., 42)**

என்ற பாசுரத்தினால் ‘தென் கோட்டி’ என்றழைக்கப்படும் தென் திருக்கோட்டியூரைக் குறிப்பிடும் பேயாழ்வார் திருவிண்ணகரம், திருவெஃகா, திருநீர் மலை, திருவேளுக்கை, திருக்குடந்தை, திருவரங்கத்தினைப் போன்றே திருக்கோட்டியூரும் பெருமான் விரும்பி உறையும் தலம் என்று குறிப்பிடுவதிலிருந்தும், அத்தலப்பெருமையை வியந்துரைத்து வாழ்வில் ஒரு முறையேனும் அங்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியுள்ளார். மேலும் திவ்வியகவியாரின் திருப்பாசுரமாகிய,

“வான்பார்க்கும் பைங்கூழ்போல் வாளா வுனதருளே
யான்பார்க்க நீ பார்த்து இரங்கினாய் – தேன் பார்ப்பின்
ஓசைத் திருக்கோட்டி ஊரானே இன்னமும்என்
ஆசைத் திருக்கோட்டி ஆள்” **(நூற்., திருப்., அந்., 42)**

என்ற பாசுரத்தினால் வழியே பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் திருக்கோட்டியூர் பெருமான் தன்னை ஆட்கொள்ள வேண்டி விருப்பம் தெரிவிப்பதிலிருந்தும் இத்திருத்தலத்தின் சிறப்பினை அறிய முடிகிறது என்கிறார். (பாண்டி, நாட்டு, திருப்., ப.**15)**

திருமெய்யம்

திருச்சி – மானாமதுரை இடையேயான இருப்பூர்திப் பாதையில் ‘திருமயம்’ என்ற நிலையத்தில் இறங்கினால் இத்திருத்தலம் வந்தடையலாமென்றும், பாண்டி நாட்டுத் திருப்பதிகளில் இத்திருத்தலம் மிகவும் புகழ் பெற்றதென்றும் கூறும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் **“திரு அரங்கத்திற்கு அடுத்தபடியாகச் சிறப்புடையது இத்திருக்கோயில் என்பது வைணவப் பெருமக்களின் கருத்து. அவர்கள் இதனை ‘ஆதிரங்கம்’ என்றே வழங்குகின்றனர்” (பாண்டி., நாட்., திருப்., ப.25)** என்று எடுத்துரைக்கிறார்.

மேலும், **“இத்திருத்தலத்தில் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கி திருமுக மண்டலங்கொண்டு சேவை சாதிக்கும் சத்தியகிரி நாதனாகவும், இச்சந்நிதிக்கு மேற்குப் புறமுள்ள பாறையில் குடைந்தெடுக்கப்பெற்ற குடவரைக் கோயிலில் பெருமாள் ‘போக சயன மூர்த்தி’ யாகக் காட்சி தரும் அவரது அனந்த சயனத்திருக் கோலம் கருவறை உட்பட மலையைக் குடைந்து அமைக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்புப் பெற்றனவாகத் திகழ்கிறது” (மேலது,**

ப.31) என்பதனையும் எடுத்துரைக்கிறார். இத்தகைய சிறப்பு மிக்க இத்திருத்தலத்தினை திருமங்கையாழ்வார் மட்டுமே மங்களாசாசனம் செய்து,

"தண்ணார்ந்த வார்புனல்சூழ் மெய்ய மென்னும்

தடவரைமேல் கிடந்தானைப் பணங்கள் மேவி" (பெரிய., திரு., 2:5:8)

என்ற பாசுரத்தின்படி ஆழ்வாராகவும்,

"வேயிருஞ் சோலை விலங்கல் சூழ்ந்த

மெய்ய மணாளர் இவ்வையம் எல்லாம்" (பெரிய., திரு., 9:2:3)

என்ற பாசுரத்தின்படி உலகாழ்வாராகவும்,

"அருவிசேர் வேங்கடம், நீர்மலை என்றுவாய்

வெருவினாள்; மெய்யம் வினவி இருக்கின்றாள்" (பெரிய., திரு., 8:2:3)

என்ற பாசுரத்தில் தாயின் நிலையிலிருந்து தாய்க்கூற்று நிகழ்த்துபவராகவும்,

"கலையாளா அகலல்குல் கணவனையும்

கையாளா என்செய் கேன்நான்

விலையாளா வடியேனை வேண்டுதியோ

வேண்டாவோ ? என்றும் மெய்ய

மலையாளன் வானவர்தம் தலையாளன்

மராமர மேழெய்த வென்றிச்

சிலையாளன் என்மகளைச் செய்தனகள்

அம்மனையீர் ! அறிகி லேனே ! (பெரிய., திரு., 5:5:2)

என்ற பரகால நாயகியின் பாசுரமாகவும்,

"மையார் கடலும் மணிவரையும் மாமுகிலும்

கொய்யார் குவளையும் காயாவும் போன்றிருண்ட

மெய்யாரை மெய்ய மலையானைச் சங்கேந்தும்

கையானைக் கைதொழாக் கையல்ல கண்டேன்" (பெரிய, திரு., 11:7:5)

என்ற பாசுரத்தின் வழியே கடல்போல் எல்லைகாண திருமால் திருவழகு சொல்லுந்தரமன்று, அத்திருவழகு கடல்போல் நெஞ்சங்கவர்வது; காளமேகம் போல் குளிர்ந்து அடியார் துன்பங்களையெல்லாம் தீர்க்க வல்லது; குவளைப் பூவும் காயா மலரும் போல் வைத்தகண் வாங்காது பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்படியான பேரழகு வாய்ந்தது. இத்தகைய பெருமான் அடியார்கட்கு முற்றுட்டாகத் தன்னைக் கொடுத்துக்கொண்டு சங்கேந்தும் கையுடன் திருமெய்ய மலையில் காட்சியளிக்கும் நிலையினைக் கண்டு தொழாத கை கையல்ல; உலக்கையே என்றவாறு திருமங்கையாழ்வார் கூறும் இத்திருத்தலச் சிறப்பினை எடுத்துரைக்கிறார். மேலும்,

"கட்டேறு நீள் சோலைக் காண்டவத்தை தீமூட்டி

விட்டானை மெய்யம் அமர்ந்த பெருமானை" (பெரிய., திரு., 6:8:7)

என்ற பாசுரத்தின் வழியும் திருமெய்யத்தில் சயனத் திருக்கோலம் கொண்டிருக்கும் பெருமான் உறங்குவான் போல் உலகப் படைப்பினைச் சிந்தித்துக் கொண்டிருக்கும் தன்மையுடையவன் என்பதனைத் தெரிவிப்பதோடு திவ்விய கவியின்,

"ஆளாய் உனக்கன்பாய் ஆசையாய் நாணிலியா
வாளா மனைவியென்று வாழ்வேனைக் – கேளாய்
திருமெய்ய மாயா! சிலைகால் வளைத்து
வரும்எய்ய மாயா மதன்" (நூற்., திருப்., அந்., 43)

என்ற திருப்பாசுரமும் திருமெய்யத்தின் சிறப்பினை விளக்குவதனையும் சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர்.

திருப்புல்லாணி

திருப்புல்லாணி எனும் இத்திருத்தலம் இராமநாதபுரத்திற்குத் தெற்கே கீழக்கரை எனும் ஊருக்குச் செல்லும் வழியில் ஏழு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளதென்றும், இந்தத் திவ்விய தேசத்தில் சேது கட்டத் தீர்மானம் ஆனதால் இத்தலம், 'ஆதிசேது' என்றும் வழங்கப்படுகின்றது (பாண்டி., நாட்., திருப்., ப.39) என்று கூறும் ந.சுப்புரெட்டியார் இத்திருத்தலத்தினை திருமங்கையாழ்வார் மட்டுமே மங்களாசாசனம் செய்திருப்பதனையும், இத்திருத்தலத்தில் தர்ப்ப சயனக் கோலத்தில் பெருமான் தவக்கோலத்தில் காட்சி தருகிறாறென்பது வைணவ பெருமக்களின் கருத்தாக இருப்பினும், இத்திருத்தலத்தில் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் கிழக்கு நோக்கி திருமுக மண்டலங்கொண்டு சேவை சாதிக்கும் கல்யாண ஜகந்நாதனைத்தான் திருமங்கையாழ்வார், **"வேதமும் வேத வேள்வியும் விண்ணும் இருசுடரும் ஆதியும் ஆனான்" (பெரிய, திருமொழி, 9:4:9)** என்ற பாசுரத்தினால் மங்களாசாசனம் செய்திருக்கும் நிலையினை எடுத்துக்காட்டி திருப்புல்லாணியின் சிறப்பை உணர்த்தும் திருமங்கையாழ்வார்,

"இலங்கு முத்தும் பவளக்
கொழுந்தும் எழில்தாமரை
புலங்கள் முற்றும் பொழில்சூழ்ந்து
அழகாய புல்லாணி" (பெரிய., திரு., 9:3:10)

என்ற பாசுரத்தின் வழியே கூறுவதோடு மட்டுமின்றி,

"புள்ளும் அள்ளற் பழனங்களும் சூழ்ந்த புல்லாணி" (பெரிய., திரு., 9:3:6)
"புனையார் மணிமாடப் புல்லாணி" (பெரிய., திரு., 9:4:7)
"பொழுது முந்நீர்க் கரைக்கே மணியுற்று புல்லாணி" (பெரிய., திரு., 9:3:2)
"போதுநாளும் கமழ்பொழில் சூழ்ந்த புல்லாணி" (பெரிய., திரு., 9:3:3)
"செழுந்தடம் பூஞ்சோலை சூழ்புல்லாணி" (பெரிய., திரு., 9:4:6)
"பூஞ்செருந்தி பொன்சொரியும் புல்லாணி" (பெரிய., திரு., 9:4:8)
"போதலரும் புன்னைசூழ் புல்லாணி" (பெரிய., திரு., 9:4:9)

ஆகிய பாசுரங்களாலும் திருப்புல்லாணித் திருத்தலத்தினை எடுத்துக்காட்டுவதிலிருந்தும் இத்திருத்தலத்தின் சிறப்பினை அறிய முடிகிறது என்கிறார் பேராசிரியர்.

திருவில்லிப்புத்தூர்

விருதுநகர் – தென்காசி இருப்பூர்தி வழியில் உள்ள திருவில்லிப்புத்தூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து நடக்கும் தொலைவிலுள்ள இத்திருத்தலம் மிகவும் புகழ்பெற்ற திருத்தலமாகும். இவ்வூரில் தான் 'விஷ்ணு சித்தர்' என்றழைக்கப்படும் பெரியாழ்வார் மற்றும் அவரது வளர்ப்பு மகளான ஆண்டாள் ஆகிய இரு ஆழ்வார்களும் அவதரித்திருப்பதால் இவ்வூர் தனிச்சிறப்பு பெற்றதைப் போல் இத்திருத்தலமும் தனிச் சிறப்பு பெற்றுள்ளது என்று கூறும் பேராசிரியர் இவ்விரு ஆழ்வார்கள் மட்டுமே இத்திருத்தலத்தினை மங்களாசாசனம் செய்திருப்பதனையும் ஈண்டு காட்டுகிறார். இந்த வில்லிபுத்தூர் பழங்காலத்தில் 'புத்தூர்' என்றும் 'புதுவை' என்றும் வழங்கப்பட்டு வந்ததை பெரியாழ்வாரும், ஆண்டாளும் தம் திருப்பாசுரங்களால் உணர்த்துகின்றனர். 'புத்தூர்' என்பதைப் பெரியாழ்வார்,

"திருவிற் பொலிமா மறைவாணர் புத்தூர்" (பெரியாழ், திரு., 3:5:11)

"ஒத்தன சொல்லி உரைத்த மாற்றம் ஒளி புத்தூர்" (பெரியாழ், திரு., 1:5:10)

என்ற பாசுரங்களாலும் ஆண்டாள் தனது நாச்சியார் திருமொழியில்,

"வேதவாய்த்தொழி லார்கள்வாழ் வில்லிபுத்தூர்" (நாச்., திரு., 2:10)

என்றும் பரவி இருப்பதனையும் 'புதுவை' என்பதனை பெரியாழ்வாரும், ஆண்டாளும்,

"செஞ்சொல் மறையவர் சேர் புதுவைப் பட்டன் சொல்
எஞ்சாமை வல்லர்க்கு இல்லை இடர்தானே" (பெரியாழ், திரு., 1:4:10)

"பொருப் பன்ன மாடம்பொ லிந்தோன்றும் புதுவை" (நாச்., திரு., 1:10)

"பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த புதுவை" (நாச்., திரு., 3:10)

"போகத்தில் வழுவாத புதுவை" (நாச்., திரு., 8:10)

என்ற பாசுரங்களால் பரவசப்பட்டிருக்கும் நிலையினையும் எடுத்துக்காட்டுகிறார். அதோடு இத்திருத்தலத்தின் மூலவரான ஆலிலைப் பள்ளியான் (வடபத்ரசாயி) புயங்க சயனத்தில் கிழக்கு நோக்கி சேவை சாதிப்பது தனி அழகென்றும் கூறுகிறார். இவ்வாலிலைப் பள்ளியான் (ரங்க மன்னர்) கிடந்த கோலத்தில் காட்சி தரும் சிறப்பினை இரண்டு பாசுரங்களால் தம்மை உருக்கியிருக்கும் நிலையினை,

"மின்அனைய நுண் இடையார்
விரிகுழல்மேல் நுழைந்த வண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்
இனிது அமர்ந்தாய்" (பெரியாழ், திரு., 2:2:6)

என்ற பாசுரத்தால் பெரியாழ்வாரும்,

"மென்னடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத் தூருறை வான்றன்

பொன்னடி காண்பதோ ராசையினால் என்

பொருகயற் கண்ணினை துஞ்சா" (நாச்., திரு., 5:5)

என்ற பாசுரத்தால் பரவசப்படும் ஆண்டாளும் திருவில்லிப்புத்தூரின் சிறப்பினை எடுத்துக் காட்டுவதிலிருந்தும் இத்திருத்தலத்தின் சிறப்பு விளங்குகின்றதென்றும் கூறுகிறார்.

திவ்விய கவியின் திருப்பாசுரமாகிய,

"குறித்தொருவர் கொண்டாடும்

கொள்கைத்தோ கோதை

நிறத்தவூர் விண்டு சித்தர்

நீடுர் – பிறப்புலியூர்

தாழ்வில்லி புத்தூரென்

றைவர்க்கு தானிரந்தான்

வாழ்வில்லி புத்தூர் வளம்" (நூற்., திருப்., அந்., 48)

என்ற பாசுரத்தின் வழியாகத் திவ்வியகவியார் எடுத்துரைக்கும் திருவில்லிப்புத்தூரின் சிறப்பு தனிச்சிறப்பு என்பதைனையும் வலியுறுத்துகிறார். **(பாண்டி., நாட்., திருப்., ப.128)**

திருக்கோளூர்

ஆழ்வார் திருநகரியிலிருந்து இரண்டு கல் தொலைவில் தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் அமைந்திருக்கும் 'வித்தின் கோயில்' என்று வைணவச் சான்றோர்களால் அழைக்கப்படும் திருக்கோளூர் எனும் திருத்தலம் பற்றிக் குறிப்பிடுகையில், **"நவதிருப்பதிகளுள் ஒன்பதாவதாக வரும் இத்திருத்தலம் நம்மாழ்வாரின் அந்தரங்க சீடரான மதுரகவியாழ்வார் அவதரித்த திருத்தலம்" (பாண்டி., நாட்., திருப்., ப.166)** என்று குறிப்பிடுகிறார்.

இத்திருத்தலத்தின் பெயர்ச்சிறப்பு பற்றிக்குறிப்பிடும் முனைவர் கு.முத்துராசன், **"நவநிதிகள் இங்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று அதருமம் குமரேசனுக்குக் கோள் சொல்லிய இடமாதலால் இத்திருப்பதி திருக்கோளூர் எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்" (தெய்வீகத் திருத்தலங்கள், ப.164)** என சுட்டிக்காட்டுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

மேலும் இத்திருத்தலத்து மூலவரான வைத்தமாநிதிப் பொருமாள் **(நிசேஷ பவித்தன்)** புயங்க சயன கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கும் சிறப்பினை அறிய திருவாய்மொழி முழுவதையும் மிடற்றொலியாக ஓதினால் ஓதியவர் வாழ்வு சிறக்குமென்பதை வலியுறுத்தி இத்திருத்தலத்தின் சிறப்பினை எடுத்தியம்புகிறார். அதோடு இத்திருத்தலத்தினை நம்மாழ்வார் தன் திருவாய்மொழியில்,

"மண்ணினுள் அவன்சீர் வாமிஞ்

கவன்ஊர் வினவி

திண்ணம் என்இன மான்புகு

ஊர்திருக் கோளூரே" (திருவாய், 6:7:11)

என்ற பாசுரத்தில் "சித்தம் வைத்துரைப்பார் திகழ்பொன் னுலகாள்வரே" (திருவாய், **6:7:11)** என்று குறிப்பிடுவதிலிருந்தும், இத்திருத்தலத்து மாநிதிப் பெருமானின் குணச்சிறப்புப் பற்றி ஆசாரிய ஹிருதயம் குறிப்பிடும்,

"கைம் முதல் இழந்தார் உண்ணும்

நிதியின் ஆபத்சகத்தவம், புகும் ஊரிலே

சம்ருத்தம்" (ஆசாரிய ஹிருதியம், சூத்திரம்–169)

என்ற சூத்திரத்தினாலும் நன்கு அறியலாமென்றும் அதற்குச் சான்றாக திவ்விய கவியாரின்,

"பிறப்புஅற்று மூப்புப்

பிணியற்று நாளும்

இறப்பு அற்று வாழ

இருப்பீர் – புறப்பற்றுத்

தள்ளுங் கோள் ஊர் அரவில்

தாமோ தான்பள்ளி

கொள்ளுங்கோ ளூர்மருவுங் கோள்" (நூற்., திருப்., அந்., 58)

என்ற திருப்பாசுரமும் இத்திருத்தலத்தின் மாண்பினை விளக்குவதாக அமைந்திருப்பதை எடுத்துரைக்கின்றார்.

திருப்புளியங்குடி

திருவைகுண்டத்திலிருந்து சுமார் நான்கு கல் தொலைவிலுள்ள 'திருப்புளியங்குடி' எனும் இத்திருத்தலம் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் இத்திருத்தலம் நவ திருப்பதிகளில் நான்காவது தலமென்றும் இத்திருத்தலத்தில் புயங்க சயனக் கிடந்த திருக்கோலத்திலிருக்கும் காய்சின வேந்தனை நம்மாழ்வார், "என்றைக்கு இங்கு திருக்கண் வளர்ந்தருளப் புகுந்தாயோ அன்று முதல் இன்று வரை ஆடாமல் அசையாமல் சயனித்துக் கொண்டிருக்கின்றாயே உனக்கு அப்படி என்ன சிரமமோ **?**" என்று வினவியவாறு தனது திருவாய்மொழியில்,

"கொடியார் மாடக் கோளூர்

அகத்தும் புளிங்குடியும்

படியா தின்னே நீதுயில்

மேவி மகிழ்ந்து தான்

அடியார் அல்லல் தவிர்த்த

அசைவோ ? அன்றேல் இப்

படிதான் நீண்டு தாவிய

அசைவோ ? மணியாயே" (திருவாய், 8:3:5)

என்ற பாசுரத்தினால் ஏனைய திருத்தலங்களைவிட இத்திருத்தலத்தில்தான் மூலவரான காய்சின வேந்தன் ஆழ்ந்த சயனத்தில் இருக்கும் சிறப்பினை எடுத்துக்காட்டி இருக்கிறார். அவ்வாறு ஆழ்ந்த சயனத்தில் இருக்கும் பெருமாள் நீண்ட சயனக் கோலத்திலிருந்து நீங்கி

இத்திருப்புளியங்குடியில் ஒருநாள் வீற்றிருந்த கோலத்தில் அன்பர்களுக்குக் காட்சி தரவேண்டும் என்று,

"எங்கள்கண் முகப்பே உலகர்கள் எல்லாம்

இணையடி தொழுதெழுந் திறைஞ்சி

தங்களன் பாரத் தமதுசொல் வலத்தால்

தலைத் தலைச் சிறந்துபூ சிப்ப" (திருவாய், 9:2:8)

என்ற பாசுரத்தினால் திருப்புளியங்குடி எம்பெருமானின் சிறப்பை உணர்த்துவதோடு இவ்வுலகத்தாரெல்லாம் இவ்வெம்பெருமானின் திருவடிகளின் நேர்த்தியழகு கண்டு திருவடிகளில் விழுவதும் எழுதுவமாகித் தோத்திரங்கள் செய்து வழிபடுன்ற காட்சிகளைத் தான் கண்டு களிக்க வேண்டுமென்ற பேராவலினை வெளிப்படுவத்துவதிலிருந்தும்,

"காய்சினப் பறவை பூர்த்து பொன் மலையின்

மீமிசைக் கார்முகில் போல

மாசின மாலி மாலிமான் என்றங்

கவர்படக் கனன்றுமுன் நின்ற

காய்ச்சின வேந்தே! கதிர்முடி யானே!

கலிவயல் திருப்புளிங்குடியாய்

காய்சின ஆழி சங்குவாள் வில்தண்

டேந்திஎம் இடர்கடி வானே" (திருவாய், 9:2:6)

என்ற "காய்சின வேந்தன்" பெயராலேயே வழங்கப்படுகின்ற பாசுரத்தினால் இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பு விளங்குகிறதென்றும் குறிப்பிடுகிறார். திவ்வியகவியின் திருப்பாசுரமாகிய,

"தெளியும் பசும்பொன் சிறைக்காற்று வீச

விளியும் துயர்போய் விடுமே – எளியேற்கு

கருளப் புளியங்குடிவாழ் அச்சுதனைக் கொண்டு

கருளப்புள் இயங்குவந்தக் கால்" (நூற்., திரு., அந்., 54)

என்ற பாசுரத்தின் வழியாகவும் திருப்புளியங்குடி எம்பெருமானை வணங்குவதால் **"எளியவர்களுக்குத் துன்பங்களெல்லாம் களைந்து போகச் செய்யும் சிறப்பு மிக்கது திருப்புளியங்குடி எனும் திருத்தலமேயாகும்" (பாண்டி., நாட்., திருப்., ப.235)** என்ற கருத்தினையும் வலியுறுத்துகிறார் பேராசிரியர்.

வடநாட்டுத் திருத்தலச் சிறப்புகள்

வடநாட்டிலுள்ள வைணவத்திருத்தலங்கள் மொத்தம் பன்னிரண்டு என்ற வகையில் பேராசிரியர் திருவேங்கடத்தில் தொடங்கி சிங்கவேழ் குன்றம், நைமிசாரண்யம், துவாரகை, அயோத்தி, வடமதுரை, ஆயர்பாடி, பிருந்தாவனம், கோவர்த்தனம், கண்டம் கடிநகர், திருப்பிரிதி, பதரியாச்சிரமம் என்ற வகையில் தனது திருத்தலப் பயணத்தினை நிறைவு செய்வதோடு இத்திருத்தலங்களில் திருக்கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான்களின் சிறப்புகள்,

பிருந்தாவனம், கோவர்த்தனம் ஆகிய இடங்களில் கண்ணன் கன்றுகளை மேய்க்கும் போது ஆற்றிய வீரச் செயல்கள். ஆயர்பாடியில் வளரும்போது ஆற்றிய அருஞ்செயல்கள் ஆகியவற்றையும், திருப்பாற்கடல் மற்றும் பரமபதத்தில் இறைவனின் இருப்பையும் மிக எழில்பட எடுத்துரைக்கின்றார். இவ்வடநாட்டுத் திருத்தலங்களில், 'திருப்பிரிதி' எனும் ஒரே ஒரு திருத்தலத்தில்தான் எம்பெருமான் பரமபுருடனாக காட்சி தரும் சிறப்பினையும் விவரிக்கின்றார்.

திருப்பிரிதி

இமயமலையிலுள்ள இத்திவ்ய தேசம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 3000அடி உயரத்தில், ஹரித்துவாரத்திலிருந்து 200 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதென்று கூறும் பேராசிரியர் இங்கு பள்ளி கொண்டிருக்கும் எம்பெருமான், பரமபுருடன் என்றழைக்கப்படுவதாகவும், அவர் கிழக்கு நோக்கி புயங்க சயன கோலத்தில் காட்சி தருவதையும் எடுத்துரைத்து திருமங்கையாழ்வார் மட்டுமே இத்திருத்தலத்து பரமபுருடனை மங்களாசாசனம் செய்திருக்கும் நிலையினை,

"கரைசெய் மாக்கடல் கிடந்தவன்
கணைகழல் அமரர்கள் தொழுதேத்த
அரைசெய் மேகலை அலர்மகள்
அவளோடும் அமர்ந்தநல் இமயத்து
வரைசெய் மாக்கன்று இளவெதிர்
வளர்முனை அனைமிகு தேன்தோய்த்துப்
பிரச வாரிதன் இளம்பிடிக்கு
அருள்செய்யும் பிரிதிசென்று அடைநெஞ்சே" (பெரிய., திரு., 1:2:5)

என்ற பாசுரத்தால் "தேவர்கள் அனைவரும் துதிக்கும்படியான சிறப்பினைப் பெற்று இமய மலையின் கண் உள்ள திருப்பிரிதியில் பள்ளிகொண்டிருக்கும் பரமபுருடனைக் காண நெஞ்சே நீ அங்குச் செல்க" என்று தன் நெஞ்சுக்குக் கூறுவதாய் அமைந்து திருப்பிரிதியின் சிறப்பினை உணர்த்துவதாகவும், திவ்விய கவியாரின்,

"வழங்கும் உயிரனைத்தும்
வாரிவாய்ப் பெய்து
விழுங்கும் கவந்தன்
விறல்தோள் – கிழங்கைப்
பொருப்பிருதிக் குங்கிடந்தால்
போல் துணித்து வீழ்ந்தான்
திருப்பிரிதிக் கென்நெஞ்சே செல்!" (நூற்., திரு., அந்., 103)

என்ற பாசுரமோ, **"திருமால் எழுந்தருளியிருக்கும் திருப்பிரிதி எனும் திருத்தலத்தினை போய் அடைவாயாயின் எல்லா வகையான விரோதிகளும் நீங்கி நற்கதி பெறுவது திண்ணம்" (வட.,**

நாட்., திருப்., ப.96) என்ற கருத்தினை முன்வைப்பதை எடுத்துக்காட்டி திருப்பிரிதியின் சிறப்பினை விளக்குகிறார் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார்.

தொண்டை நாட்டுத் திருத்தலச் சிறப்புகள்

தொண்டை நாட்டுத் திருத்தலங்கள் இருபத்து இரண்டினையும் தமது திருத்தலப் பயணத்தில் கண்டு இன்புற்ற பேராசிரியர் இத்திருத்தலங்களில் ஆழ்வார்களின் பக்தியுணர்ச்சி, பாசுரங்களின் சொல்வளம் ஆகியவற்றினை விவரித்திருப்பதோடு நடுநாட்டுத் திருப்பதியும் தொண்டை நாட்டுத் திருப்பதிகளுடன் சேர்த்துக் கூறும் மரபினை 'நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை', 'நூற்றெட்டுத் திருப்பதி பெருமாள் கோவை', 'நாலாயிரப் பாசுரப்படி நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை' ஆகிய மூன்று நூல்களில் காணப்படும் மரபினைப் பின்பற்றி தனது தொண்டை நாட்டுப் பயணத்துடன் நடுநாட்டுத் திருப்பதிகளையும் இணைத்துக் கூறியுள்ளார். தொண்டை நாட்டுத் திருத்தலங்களில் நான்கு வகையான திருக்கோலங்களில் திருமால் எழுந்தருளியிருக்கும் 'திருநீர் மலை' தவிர திருவெஃகா, திருஎவ்வுள், திருவல்லிக்கேணி, திருக்கடல் மல்லை ஆகிய நான்கு திருத்தலங்களில் சயனக் கோலத்தில் திருமால் காட்சி தரும் சிறப்பினை எடுத்துரைக்கிறார்.

திருவெஃகா

இத்திருத்தலம் காஞ்சிபுரத்திலுள்ள திவ்ய தேசமாகும். அஷ்டபுயகரத்திலிருந்து வடக்கே சிறிது தொலைவிலுள்ள இத்திருத்தலத்து மூலவர் "யதோத்காரிப் பெருமாள்" என்று பெயர் பெற்றவர். 'யதோத்காரி' என்ற வடமொழிச் சொல்லுக்குச் "சொன்ன வண்ணம் செய்தவர்" என்று பெயர். திருவெஃகா, 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சந்நிதி' என்ற காரணப்பெயர் பெற்று விளங்கும் சிறப்பு இதனால்தான் என்பதை வலியுறுத்தும் பேராசிரியர் இத்திருத்தலச் சிறப்பு பற்றிக் குறிப்பிடுகையில் இத்தலத்து மூலவர் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் மேற்கு நோக்கியவாறு புயங்க சயனத்தில் பள்ளிகொண்டவராக சேவை சாதிக்கும் சிறப்பினைப் பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய ஐந்து ஆழ்வார்களும் மங்களாசாசனம் செய்து சிறப்பு செய்திருக்கும் தன்மையினை எடுத்துரைத்துள்ளார்.

இதனை, **"சொன்ன வண்ணம் செய்த பெருமாள் பிற திருத்தலங்களைப் போலன்றி, இங்கு மட்டும் வலமிருந்து இடமாகச் சயனித்துள்ளார். கலைமகள் பிரம்மாவின் யாகத்தைக் கலைக்க வேகவதியாறாகப் பெருக்கெடுத்து வந்தபோது, அதைத் தடுக்க குறுக்கே சயனித்தார் பெருமாள். அவசரத்தில் சயனித்ததால் வடமிருந்து இடமாகச் சயனித்துள்ளார்" (தொண்டை நாடும் வைணவமும், ப.135)** என்று எடுத்துரைப்பார் முனைவர் இரா.வ.கமலக்கண்ணன்.

"நின்ற தெந்தை ஊரகத்து
இருந்த தெந்தை பாடகத்து
அன்று வெஃக ணைக் கிடந்தது
என்னி லாத முன்னெலாம்

அன்று நான்பி றந்திலேன்

பிறந்தபின் மறந்தி லேன்

நின்றதும் இருந்த தும்கி

டந்த தும்என் நெஞ்சுகளே" **(திருச்., விருத்., 64)**

என்ற பாசுரத்தின் வழியாகத் தனது திருச்சந்த விருத்தத்தில் எடுத்துரைக்கும் திருமழிசையாழ்வார் இத்திருத்தலத்தின் சிறப்பினை நன்கு உணர்த்துகிறார். மேலும்,

"வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும அஃகாத

பூங்கிடங்கின் நிள்கோவில் பொன்னகரும் – நான்கிடத்தும்

நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே

என்றால் கெடுமாம் இடர்" **(முதல் திருவந்., 77)**

என்ற பாசுரத்தின் வழியாக இத்திருத்தலத்து திருக்குளத்தில் அவதரித்ததாகக் கருதப்படும் பொய்கையாழ்வாரும்,

"அன்றிவ் உலகம் அளந்த அசவேகொல்

நின்றிருந்து வேளுக்கை நீள்நகர்வாய் – அன்று

கிடந்தானைக் கேடில்சீ ரானை முன்கஞ்சைக்

கடந்தானை நெஞ்சமே காண்" **(மூன்., திருவந்., 34)**

என்ற பாசுரத்தாலும்,

"இசைந்து அரவமும் வெற்பும் கடலும்

பசைந்தங் கமுது படுப்ப – அசைந்து

கடந்த வருத்தமோ ? கச்சி வெஃகாவில்

கிடந்து இருந்து நின்றதும் ஆங்கு" **(மூன்., திருவந்., 64)**

என்ற பாசுரத்தாலும் பேயாழ்வார் உரைக்கும் சொன்ன வண்ணம் செய்த பெருமாளின் சிறப்புகளையெல்லாம் எடுத்துக்காட்டி, மலைகளின் நடுவில் நின்றும், நீர் நிலைகளில் மூழ்கியும், ஐந்து நெருப்பிடையே நின்று தவம் செய்ய வேண்டியதில்லை மாறாக திருவெஃகாவில் திருக்கண் வளர்ந்தருள்கின்ற செங்கண் மாலை மலர்கொண்டு வணங்கினாலே நம் தீவினைகள் அனைத்தும் அகன்று போய்விடும் என்ற கருத்தினால் இத்திருத்தலத்தின் சிறப்பு விளங்குவதை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் நம்மாழ்வாரின்
திருவிருத்தப் பாசுரமாகிய,

"நானிலம் வாய்க்கொண்டு நல்நீர்

அறமென்று கோது கொண்ட

வேனில் அம் செல்வன் சுவைத்துவயிற்

பாலை கடந்த பொன்னே !

கால்நிலம் தோய்ந்து, விண்ணோர் தொழும்

கண்ணன் வெஃகா உது; அம்பூற்

தேன் இளஞ் சோலைஅப் பாலது

எப்பாலைக்கும் சேமத்தே" (திருவிருத்., 26)

என்ற பாசுரத்தின் வழியே நம்மாழ்வாரும் திருவெஃகா எனும் இத்திருத்தலம் ஏனையத் திருத்தலங்களைவிட சிறப்பு பெற்றிருக்கும் தன்மையுடையதால்தான், 'எப்பாலைக்கும் சேமத்தே' என்ற கருத்தினை பதிவு செய்திருப்பதாக விளக்கியுரைக்கும் பேராசிரியர் திவ்விய கவியாரின்,

"உரைகலந்த நூலெல்லாம் ஓதி உணர்ந்தாலும்

பிரைகலந்த பால்போல் பிறிதாம் – தரையில்

திருவெஃகா மாயனுக்கே சீர்உறவாம் தங்கள்

உருவெஃகா உள்ளத்தி னோர்க்கு" (நூற்., திரு., அந்., 82)

என்ற திருப்பாசுரத்தின் படி "**சொன்ன வண்ணம் செய்த பெருமாளின் சீர்வணங்கி வாழ்பவர்கள், தங்களின் உள்ளத்தில் எவ்வித துன்பங்களுக்கும் இடம் கொடுக்க வேண்டியதில்லை" (தொண்., நாட், திருப்., ப.118)** என்று எடுத்துரைப்பதிலிருந்து இத்திருத்தலத்தின் சீர்மிகு சிறப்பானது புலப்படுகிறது என்பதனை குறிப்பிட்டிருக்கிறார்.

திருஎவ்வுள் (திருவெள்ளூர்)

சென்னைக்கு மேற்கில் 44 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இத்திருத்தலத்தின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர், 'திருஎவ்வுள்ளூர்' என்ற பெயர் மருவி 'திருவெள்ளூர்' எனத் திரிந்து வந்திருக்க வேண்டும் என்று கூறுவதோடு தற்சமயம் இஃது திருவள்ளூர் என்று வழங்கப்படுகிறது என்பதனையும் சுட்டிக்காட்டுகிறார்.

இத்திரு எவ்வுள் திருத்தலத்தினைப் பற்றிக் குறிப்பிடும் முனைவர் கு.முத்துராசன், "**உள் என்னும் சொல் ஊர்ப்பெயர்களில் மிக அரிதாக இடம் பெற்றுள்ளது. எம்பெருமான் கிழ அந்தணர் வேடம் பூண்டு காலிகோத்ர முனிவரிடம் அமுது செய்தருளினர். உண்ட களைப்புத் தொண்டனுக்கே இருக்கும் பொழுது பகவானுக்கு இல்லாமல் இருக்குமா? எம்பெருமான் முனிவரிடம் களைப்புத் தீரப் படுத்துறங்க வேண்டும் எவ்வுள்? என்றார். இப்பகுதியில் இந்நிகழ்ச்சி நடந்ததால் இவ்வூர் எவ்வுள்–எவ்வுள்ளூர் எனப் பெயர் பெற்றது. பாடல் பெற்ற பதியாதலால் திருஎவ்வுள்ளூர் ஆகி நாளடைவில் திருவுள்ளூர் என மருவி திருவள்ளூர் ஆயிற்று" (தெய்வீகத் திருத்தலங்கள், ப.294)** என எடுத்துரைப்பதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. இத்திருவெள்ளூருக்கு அருகிலுள்ள 'திருமழிசை' என்ற ஊரில் அவதரித்த பக்தி சாரரான திருமழிசையாழ்வார்,

"நாகத்(கு) அணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்

நாகத் (கு) அணை அரங்கம் பேர்அன்பில் – நாகத்(கு)

அணைப்பாற் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்

அணைப்பார் கருத்தன் ஆவான்"(நான்., திருவந்., 36)

என்ற பாசுரத்தின் வழியே ஏனையத் திருத்தலங்களைப் போன்றே திருவெள்ளூரிலும் அரவணைமீது கிடந்தருள்வது அன்பர்களுடைய இதயத்தில் புகுவதற்காகத்தான் என்று ஆழ்வார் காரணம் கற்பிப்பதிலிருந்து இத்தலத்தின் சிறப்பினை அறியலாமென்றும்,

“தலைமேல் புனைந்தேன் சரணங்கள், ஆலின்
இலைமேல் துயின்றான் இமையோர் வணங்க
முலைமேல் தான்நின்று, என் மனத்துள் இருந்தானை
நிலைபேர்க்கல் ஆகாமை நிச்சித்து இருந்தேனே” (திருவாய், 1.1)

என்ற பாசுரத்தால் நம்மாழ்வார் நித்திய சூரிகளும் தொழும்படி திருமலையில் காட்சியளிக்கும் எம்பெருமான் என் நெஞ்சுள்ளே புகுந்து தங்கியுள்ளான் என்று கூறுவது திருமலையாகிய ‘திருவெவ்வுள்’ என்ற திருத்தலத்தினைத்தான் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டும் பேராசிரியர், திருமங்கையாழ்வாரும் இத்திருத்தலத்தின் சிறப்பினை,

“வேயின் அன்ன தோள்மடவார்
வெண்ணெயுன் டானிவனென்று
ஏசநின்ற எம்பெருமான்
எவ்வுள் கிடந்தானே” (பெரிய., திரு., 2:2:1)

என்றும்,

“செய்த வெம்போ தன்னில் அங்கு ஓர்
செஞ்சரத் தால் வகுள
எய்த தந்தை எம்பெருமான்
எவ்வுள் கிடந்தானே” (பெரிய., திரு., 2:2:2)

என்றும் தமது பாசுரங்களின் வழியே இராமாவதார எம்பெருமான் வீரனாகவும் எளியவனாகவும் அருள்பாலிப்பது தான் இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பு என்பதனை ந.சுப்புரெட்டியார் எடுத்துரைக்கிறார். இப்பாசுரத்திற்கு விளக்கம் கூறும் ராதாகிருஷ்ணப் பிள்ளை, **“இப்பாசுரம் இராமபிரானது வீரச்செயல்களைக் கூறதலால் இப்பெருமானுக்கு வீர ராகவன் என்ற பெயர் பொருந்துவதாகும்” (தென்னாட்டு திருக்கோயில்கள், ப.53)** என்று சுட்டிக் காட்டுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. திவ்விய கவியாரின் திருப்பாசுரமான,

“நீர்மை கெட வைதாரும் நின்னோடு எதிர்ந்தாகும்
சீர்மைபெற நின்அடிக்கீழ் சேர்க்கையினால், நேர்மைஇலா
வெவ்உளத்த னேன்செய் மிகையைப் பொருத்தருளி
எவ்வுள்அத்த னே! நீ இரங்கு” (பெரிய., திருவந்., 90)

என்ற பாசுரத்தின் வழியே இத்திருத்தலத்து இறைவனின் கருணையுள்ளத்தை மறவாமல் போற்றும் நினைவினை அருளவேண்டும் என்று எடுத்துக் காட்டுவதிலிருந்தும் இத்திருத்தலத்தி சிறப்பினை உணரச் செய்கிறார்.

திருவல்லிக்கேணி

சென்னையிலுள்ள இத்திருத்தலத்தில் மூலவரான ரங்கநாதன் புயங்க சயன கோலத்திலும் மற்றொரு மூலவரான வேங்கடகிருஷ்ணன் நின்ற திருக்கோலத்திலும் காட்சி தருவது இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பாகும். "மா மயிலை மா அல்லிக் கேணி" என்று திருமழிசையாழ்வாரால் குறிப்பிடப்படும் மயிலாப்பூரும், திருவல்லிக்கேணியும் சென்னையில் பழம்பெருமை வாய்ந்த பகுதிகள் என்று கூறும் பேராசிரியர்,

"வந்து உதைத்த வெண்திரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்தி விளக்கும் அணிவிளக்காம் – எந்தை
ஒரு அல்லித் தாமரையாள் ஒன்றிய சீர்மார்வன்
திருவல்லிக் கேணியான் சென்று" (மூன்., திருவந்., 16)

என்ற பாசுரத்தின் வழியே பேயாழ்வார் மங்களாசாசனம் செய்திருக்கும் நிலையினாலும், 'எந்நாதன்' என்று வேதவல்லித் தாயார் இத்திருத்தலத்து அரங்கநாதனை மணந்து கொண்டதனால் சிறப்பு பெற்றது இத்திருத்தலம் என்பதனையும் சுட்டிக்காட்டுகிறார். (தெண், நாட்டு, திருப்., ப.108) இதனைப் பற்றிக் குறிப்பிடும் ராதாகிருஷ்ணப் பிளை, **"அல்லி மலரில் தோன்றிய வேதிவல்லித் தாயார் திருவல்லிக்கேணியானை, 'என்நாதன்' என்று கூறி திருமணம் புரிந்து கொண்டாள். அன்று முதல் பெருமாளுக்கு வடமொழியில் 'மந்நாதன்' என்றும், தமிழில் 'என்நாதன்' என்றும் பெயர் வழங்கலாயிற்று" (தென்னாட்டுக் கோயில்கள், பகுதி–1, ப.63)** என்று சுட்டிக் காட்டுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

இதனையே **"கண்ணபிரானுக்கென்று பல கோயில்கள் இருந்தாலும், பார்த்தசாரதி கோலத்தில் இருப்பது இக்கோயில் ஒன்றே! பார்த்தனுக்குத் தோரோட்ட அவசரமான சக்ராயுதம் இல்லை. வலத்திருக்கையில் சங்கு உண்டு. போரில் பெற்ற வெற்றியை ஊதி அறிவிக்கச் சங்கும் அவசியமாகிறது. இடத்திருக்கை வரத முத்திரையோடு இலங்குகின்றது" (தொண்டை நாடும் வைணவமும், ப.101)** என்கிறார் முனைவர் இரா.வ.கமலக்கண்ணன்,

"தாளால் உலகம் அளந்த அசைவே கொல்
வாளா கிடந்தருளும் வாயதிறவான்; – நீ ளோதம்
வந்த அலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்
ஐந்தலைவாய் நாகத் தணை" (நான்., திருவந்., 35)

என்ற பாசுரத்தின் வழியே திருமழிசையாழ்வார் இத்திருத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்ததையும் ந.சுப்புரெட்டியார் எடுத்துரைத்துகிறார். இத்தலத்தின் பெருமாள் சேவையானது, **"வேறெந்தத் திருப்பதியிலும் காணமுடியாத பார்த்தசாரதியின் சேவை. இம் மூர்த்தியின் திருவுருவமே பகவத் கீதையின் சொரூபம்" (தென்னாட்டுக் கோயில்கள், பகுதி–1, ப.65)** என்று ராதாகிருஷ்ணப் பிள்ளை சுட்டிக் காட்டியிருப்பதும் ஆராயத்தக்கதாய் அமைகிறது.

"வேதத்தை வேதத் தின்சுவைப் பயனை
விழுமிய முனிவர்கள் விழுங்கும்,

கோதுஇல் கனியை நந்தனார் களிற்றைக்

குவலயத் தோர்தொழு தேத்தும்,

ஆதியை அமுதை என்னை ஆளுடை

அப்பனை ஒப்பவரில்லா

மாதர்கள் வாழும், மாடமோ மயிலைத்

திருவல்லிக் கேணிக்கண் டேனே" (பெரிய., திரு., 2:3:2)

என்ற பாசுரத்தின் வழியே திருமங்கையாழ்வார், 'வேதத்தின் சுவைப்பயனாக' திருமாலைக் கூறியிருப்பதை எடுத்துரைத்துள்ளார். முனிவர்கட்கெல்லாம் இனிய கனி போல இருப்பவரென்றும், அத்தகைய சிறப்புடைய எம்பெருமான் கண்ணனாக அவதரித்த காலத்தில் நந்தகோபருடைய திருமாளிகையில் யானைக்கன்று போல் விளையாடி அனைவருக்கும் மகிழ்ச்சி தந்தவனாதலால், 'நந்தனார் களிறு' என்று குறிப்பிடப் பெற்றாரென்றும், வேதவல்லித் தாயார், 'என் நாதன்' என்று கூறியதை உட்கொண்ட திருமங்கையாழ்வாரும், 'என்னை ஆளுடை அப்பனே' என்று சுட்டுகின்றார் என்பதனையும், வேதவல்லித் தாயார் திருவவதாரம் செய்த இடமாதலால் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, 'ஒப்பவர் இல்லா மாதர்கள் வாழும் திருவல்லிக்கேணி' என்று சிறப்பித்திருப்பதனையும் எடுத்துக்காட்டி,

"இரவியின் கதிர்கள் நுழைதல் செய் தறியாத்

திருவல்லித் கேணிக்கண் டேனே" (பெரிய., திரு., 2:3:7)

"சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்

திருவல்லிக் கேணிக் கண் டேனே" (பெரிய., திரு., 2:3:1)

என்ற பாசுர வரிகளின் மூலமும் திருவல்லிக்கேணியென்னும் இத்திருத்தலத்தின் சிறப்பினை திருமங்கையாழ்வார் எடுத்துரைப்பதையும் சான்றாக்கி இத்தலச் சிறப்பைப் புலப்படுத்திக் காட்டியுள்ளார். திவ்விய கவியின் திருப்பாசுரமாகிய,

"திரிந்து உழலும் சிந்தைதனைச் செவ்வே நிறுத்தி

புரிந்து புகன்மின்; புகன்றால் மருந்துஆம்

கருவல்லிக்கு; ஏணிஆம் மாக்கத்திற்கு; கண்ணன்

திருவல்லிக் கேணியான் சீர்" (நூற்., திருப்., அந்., 94)

என்ற பாசுரத்தின் வழியாகத் திருவல்லிக்கேணி எம்பெருமானின் புகழைப் பக்தியுடன் கூறக்கூற அது நம் பிறவிப் பிணிக்கு மருந்தாவதோடு மட்டுமின்றி முக்தி உலகிற்குச் செல்லத் துணைபுரியும் ஒளி போன்றது என்பதனை வலியுறுத்துவதாய் இத்திருத்தலம் அமைந்திருப்பதை ந.சுப்புரெட்டியார் எடுத்துரைக்கிறார்.

திருக்கடல் மல்லை

சென்னையிலிருந்து 58 மைல் தொலைவிலுள்ள மகாபலிபுரம் என்று அழைக்கப்படும் நகரின் கடற்கரையோரம் அமைந்துள்ள இத்திருத்தலம் திருமங்கையாழ்வார் மற்றும் பூதத்தாழ்வார் ஆகிய இருவரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற சிறப்பு பெற்ற தலமாகும்.

“புண்டரீகள் எனும் முனிவருக்குத் இத்தலத்தில் சயனித்த கோலத்தில் காட்சியளித்ததினால், அம்முனிவர் பெருமானின் திருவடிகளில் தாமரை மலர்களைப் பணிந்தளித்தார். இதனால் மூலவர் திருவடி அருகில் புண்டரீகர் கைகூப்பிய வண்ணம் நிற்க, அவர் சமர்ப்பித்த தாமரை மலர்மீது தமது திருவடிகளை வைத்துள்ளார் பெருமான்” (தொண்டை நாடும் வைணவமும், ப.110) என்பார் முனைவர் இரா.வ.கமலக்கண்ணன்.

இத்திருத்தலத்தில் புயங்க சயனக் கோலத்தில் பள்ளி கொண்டிருக்கும் மூலவரான தலசயனத்துறைவாரைப் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர்,

“எம்மானைக் கண்டு கொண்டேன்

கடிபொழில்சூழ் கடல் மல்லைத் தலசய னத்தே” (பெரிய., திரு., 2:5:3)

என்ற பாசுரத்தின் வழியே திருமங்கையாழ்வார் பாடிப் பரவியுள்ள திறத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

நான்கு வகையானத் திருக்கோலங்களில் எம்பெருமானின் சயனத் திருக்கோலமே கண்டோர் மனதைக் கவரத்தக்கது என்பதை தன் கருத்தாகப் பதிவு செய்திருக்கும் பேராசிரியர் 108 வைணவத் திருத்தலங்களில் பலவகையான சயனக் கோலங்களில் எம்பெருமான் காட்சி தந்தாலும் அத்திருத்தலங்களில் கிட்டத்தட்ட இருபது திருத்தலங்களில் புயங்க சயனம் (பாம்பணைப் படுக்கை) ஏனைய திருத்தலங்களில் உத்தியோக சயனம், தர்ப்ப சயனம், (புல் படுக்கை), போக சயனம் (இன்பப் படுக்கை), மணிக்க சயனம், வடபத்திரச் சயனம் (ஆலிலைப் படுக்கை), வீர சயனம் போன்ற சயனக் கோலத்திலும் காட்சி தருவதாகக் கூறும் பேராசிரியர் திருக்கடல் மல்லையாகிய (மாமல்லபுரம்) இத்திருத்தலத்தில் எம்பெருமான் கொண்டுள்ள திருக்கோலம் மேற்கூறிய வகையுள் ஒன்றிலும் அடங்காது என்று கூறும் பேராசிரிய இத்திருதலத்து இறைவன் படுக்கப்பாயும் இன்றி தலைக்கு அணையும் இன்றி வெறும் தரையில் படுத்துக்கிடக்கின்றான் என்றும் இந்நிலையைத்தான் ‘தல சயனம்’ என்பர் என்பதனையும், அதனாலேயே இத்திருத்தலத்து எம்பெருமான் ‘தலசயனத்துறைவார்’ என்று அழைக்கப் படுவதையும் எடுத்துக்காட்டி விளக்குவதிலிருந்து இத்திருத்தலத்தின் சிறப்பு விளங்குகிறது. மேலும் திருத்தலத்தின்அருகிலுள்ள கடற்கரையானது மிகுந்த வனப்பு மிக்கதாய் இருந்தது என்பதனையும், திருமங்கையாழ்வார் காலத்தில் பொற்குவியல்களும் நவமணிக் குவியல்களும் குவிந்த வண்ணமாய் மாமல்லபுரத்துத் துறைமுகம் காட்சியளித்திருக்க வேண்டும் என்பதைத் திருமங்கையார்,

“புலன்கொள் நிதிக் குவையோடு

புழைக்கைமா கற்றினமும்

நலங்கொள் நவ மணிக்குவையும்

சுமந்தெங்கும் நான்றொசிந்து

கலங்களியங் கும்மல்லைக்

கடல்மல்லைத் தலசயனம்” (பெரிய., திரு., 2:6:6)

என்ற பாசுரத்தில் எடுத்துரைப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

மலைநாட்டுத் திருத்தலச் சிறப்புகள்

மலைநாட்டு வைணவ திவ்ய தேசங்கள் மொத்தம் பதின்மூன்று **(13).** இவற்றில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற பதின்மூன்று திருப்பதிகளும் நான்கு பிரிவுகளாக அமைந்துள்ளன என்று கூறும் பேராசிரியர் **"திருவண்பரிசாரம், திருவாட்டாறு, திருவனந்தபுரம் இம்மூன்றும் ஓரிடப் பிரிவென்றும், திருவாறன் விளை, திருச்சிற்றாரு, திருக்கடித்தானம், திருவல்லவாழ், திருவண்வண்டூர், திருப்புலியூர் ஆகிய ஆறும் மற்றொரு பிரிவென்றும் திருகாட்கரையும், திருமூழிக்களமும் வேறோரு பிரிவென்றும் திருவித்துவக் கோடும், திருநாவாயும் பிறிதொரு பிரிவென்றும் கூறுகிறார். இந்த நான்கு பிரிவுகளிலும் மங்களாசாசனம் செய்தருளினவர் நம்மாழ்வார்; மூன்று பிரிவுகளில் மட்டும் பாடிச் சிறப்பித்தவர் திருமங்கையாழ்வார்; ஒரு பிரிவில் மட்டும் போற்றியுரைத்தவர் குலசேகரப்பெருமான்" (மலை நாட், திருப்., நூல்முகம், ப.2)** என்பதனையும் எடுத்துரைக்கிறார். இம் மலைநாட்டுத் திவ்ய தேசங்களில் இரண்டு திருப்பதிகளில் மட்டும் (திருவாட்டாறு, திருவனந்தபுரம்) சயனக் கோலத்தில் திருமால் காட்சி தந்து சிறப்பு செய்திருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

திருவாட்டாறு

மலை நாட்டுத் திருப்பதிகளில் ஒன்றான இத்திருத்தலம் நாகர்கோவிலில் இருந்து பதினாறு கல் தொலைவில் உள்ளதென்றும், **"இவ்வூரைச் சுற்றிலும் சோலைகள், தோட்டங்கள், நெல் வயல்கள், ஆறுகள் மற்றும் அதன் கால்வாய்களால் சூழப்பட்டிருப்பதால் 'திருவட்டாறு' என்ற பெயர் திரிந்து 'திருவாட்டாறு' என்றாகியிருக்கலாம்" (மலை நாட்., திருப்., ப.16)** என்றும் கூறி அத்தலத்தின் பெயர்க்காரணத்தை எடுத்துரைத்துள்ளார். இத்திருத்தலத்தில் புயங்க சயனத்தில் பள்ளிகொண்டிருக்கும் மூலவரான, ஆதிகேசவப் பெருமாள் நித்திய சூரிகளிடம் காட்டும் அருளையெல்லாம் தன்னொருவன் பக்கம் மடைதிறந்து விட்டிருக்கும் தன்மையுடையவனென்பதை,

"அருள்பெறுவார் அடியார் தம்
ஆடியனேற்கு ஆசியான்
அருள் தருவான் அமைகின்றான்
அது நமது விதிவகையே" (திருவாய், 10:6:1)

என்ற நம்மாழ்வாரின் பாசுரத்தின் வழியாக எடுத்துரைப்பதிலிருந்தும்,

"இருள் தருமா ஞாலத்துள்
இனிப்பிறவி யான் வேண்டேன்
மருள் ஒழிநீ மடநெஞ்சே!
வாட்டாற்றான் அடிவணங்கே" (திருவாய், 10:6:1)

"வாட்டாற்றான் அடிவணங்கி
மாஞாலம் பிறப்பு அறுப்பான்

கேட்டாயே மடநெஞ்சே

கேவசன் எம்பெருமானைப்

பாட்டாய பலபாடிப்

பழவினைகள் பற்று அறுத்து

நாட்டா ரோடு இயல்பு ஒழிந்து

நாரணனை நண்ணினமே" (திருவாய், 10:6:2)

என்ற பாசுரங்களின் வழியாகவும் பொய்ந்நின்ற ஞானம், பொல்லா ஒழுக்கு, அழுக்குடம்பு ஆகிய விரோதிகள் கழிய வேண்டுமென்ற அளவிலேயே தன்னுடைய வேண்டுதல் இருந்ததாகவும் ஆனால் அவற்றையெல்லாம் கடந்து பெருமாள் திறந்த வெள்ளமாய்த் தனக்குப் பல பேறுகளை அளித்திருப்பதாய்க் கூறுவதை எடுத்துரைக்கிறார். அதோடு மட்டுமின்றி,

"வான் ஏற வழிதந்த

வாட்டாற்றன் பணிவகையே

நான் ஒறப் பெறுகின்றேன்

நரகத்தை நருநெஞ்சே" (திருவாய், 10:6:5)

என்ற பாசுரத்தின் வழியாகத் திருவாட்டாற்றுச் சிறப்பினை நம்மாழ்வார் சிறப்பித்திருப்பதனையும், இத்திருத்தலத்து எம்பெருமான் தனது உள்ளத்தில் புகுந்து என்றும் நீங்காதவனாய் அமைந்து விட்ட நிலையினை,

"உள்புகுந்து நீங்கான்

அடியேனது உள்ளத்து அகம்" (பெரிய., திருவந்., 68)

என்ற பாசுரத்தின் வழியாக உரைப்பதிலிருந்தும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் திவ்விய கவியாரின்,

"மாலை முடிநீத்து

மலர்பொன் அடிநோவப்

பாலை வனம் புகுந்தாய்

பண்டு என்று சாலவும் நான்

கேட்டால் துயிலேன்காண்

கேசவனே! பாம்பணைமேல்

வாட்டாற்றுக் கண்துயில்

கொள்வாய்" (நூற்., திருப்., அந்., 68)

என்ற பாசுரத்தின் மூலம் இந்த திவ்யதேச யாத்திரை (பயணம்) வெகுதொலைவில் நடக்கக்கூடியதாய் இருப்பதால் காலநிலைகளாலும், உடல்நிலைக் கோளாறுகளாகும் நடப்பது சில சமயங்களில் பெருந்துன்பமாகத் தோன்றினும் ஆதிகேசவப்பெருமாள் நடந்ததைவிட நாம் அதிகமாக நடந்துவிடப் போவதில்லை என்ற எண்ணத்தை விதைப்பதற்கான கருத்தினைப்

பரப்பி இத்திருத்தலத்தின் சிறப்பினை அறியச் செய்கிறார். மேலும் பக்தர்களுக்கு மோட்சநிலை அடைய உதவி செய்வதே இத்திருத்தலத்தின் முக்கிய திருக்குணம் என்பதை,

"மோட்ச ஸ்தானத்தில் பிரதை பாரதந்தர்யம்

வளம் மிக்க நதியிலே கரைபுரளும்" (ஆசாரிய ஹிருதயம், சூத்., 184)

என்ற ஆசாரிய ஹிருதயச் சூத்திரத்தின்படி சுட்டிக் காட்டி இத்திருத்தலத்தின் சிறப்பினை உணர்த்துகிறார்.

திருவனந்தபுரம்

நாகர்கோவிலில் இருந்து சுமார் ஐம்பது கல் தொலைவிலுள்ள திருவனந்தபுரம் எனும் திருத்தலத்தின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுகையில் ஆதிசேடன் மீது பெருமாள் அனந்த சயனனாக எழுந்தருளியிருக்கும் நகரென்பதால், 'அனந்தபுரம்' என்பது வைணவர்களின் கருத்து" (மலை நாட்., திருப்., ப.38) என்பதாகக் கூறும் ந.சுப்புரெட்டியார் திருவனந்தபுரம் ஓர் அழகிய சோலை சூழ்ந்த இடம் என்கிறார்.

"குன்றுநேர் மாடம் மாடே குருந்துசேர் செருந்தி; புன்னை;

மன்று அலர் பொழில் அனந்தபுர நகர்" (திருவாய், 10:2:2)

"பேசுமின் கூசும் இன்றிப் பெரியநீர் வேலை சூழ்ந்து

வாசமே கமலும் சோலை வயல்அணி அனந்தபுரம்" (திருவாய், 10:2:4)

"செறி பொழில் அனந்தபுரம்" (திருவாய், 10:2:5)

"எழில் அணி அனந்தபுரம்" (திருவாய், 10:2:8)

என்றெல்லாம் பாசுரங்கள் பாடிப் பரவி இவ்வனந்தபுரத்து நாயகனை 'கேசவா' என்ற மூன்றெழுத்துக்களைச் சொன்ன அளவிலேயே இடர் என்று பேர் பெற்றவை எல்லாம் கெடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

"நம்மன் போலே வீழ்ந்தழுக்கும்

நாட்டிலுள்ள பாவமெல்லாம்

சும்மெனாதே கைவிட்டோடித்

தூறுகள் பாய்ந்தன வே" (பெரிய., திரு., 5:4:3)

என்ற பாசுரத்தினால் இப்பொழுதே விரைந்து சென்று இத்தலத்து எம்பெருமானை வழிபட்டால் ஏழேழ் பிறப்பிலும் எந்த விதமான பொல்லாப்பும் நேரிடாது என்று பெரியாழ்வார் வலியுறுத்துவதை எடுத்துக்காட்டும் பேராசிரியர் இத்திருத்தலத்தில் சேவை சாதிக்கும் எம்பெருமானின் சிறப்புகளைக் கூறி அவனது திருநாமத்தை உச்சரிப்பதால் உண்டாகும் பலனைப் புலப்படுத்துகிறார். இத்திருத்தலத்து எம்பெருமான் கருடனை வாகனமாகக் கொண்டவன். அவனது கொடியும் கருடனேயாகும் என்பதை "ஊரும் புள்; கொடியும் அஃதே" (திருவாய், 10:2:3) என்பதோடு பிரளயத்தில் இவ்வுலகினைத் தன் வயிற்றில் அடக்கிக் காப்பாற்றியது இந்த எம்பெருமானே என்பதை முன்னிலைப் படுத்தி,

"ஓரா யிரமாய்

உலகுஏழ் அளிக்கும்

பேராயிரம் கொண்டது

ஓர்பீடு உடையவன்"   (திருவாய், 9:3:1)

என்றவாறு எண்ணற்ற பெயர்களையுடையவன் என்பதை வலியுறுத்தும் நம்மாழ்வார் 'ஆயிரம்' என்று கூறுவது கணித எண்ணிக்கையன்று; எண்ணற்றவை என்பதே பொருள் என்று உணர்த்துவதிலிருந்து இத்தலத்து எம்பெருமானின் சிறப்பினை விளக்கும் பேராசிரியர் எல்லா ஆழ்வார்களுமே இத்தலத்து எம்பெருமானையே, "பேராயிரம் உடைய பெம்மான்" எனக் குறிப்பிடுவதாகவும், கம்ப நாடன் கூட "ஆயிரம் பெயருடைய அம்மான்" (கம்ப., அயோத்தி, சித்ர., 1) என்று சுட்டிக்காட்டுவதிலிருந்து இத்திருத்தலத்து பெருமானின் சிறப்பு தெளிவாக விளக்கப்படுவதாகக் கூறுகிறார். (மலை நாட், திருப்., ப.38)

தொகுப்புரை

- மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு கூறாகப் பயணம் விளங்குகின்ற தன்மையும் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள பயணம் பற்றிய குறிப்புகளும் பக்தி இலக்கிய காலத்தில் அடியார்கள் மேற்கொண்ட திருத்தல பயணங்கள் குறித்த செய்திகளும் இவ்வியலில் ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளன.
- பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் மேற்கொண்ட தலப்பயணமும், அப்பயணத்தின்போது அவர் மனதில் தோன்றிய எண்ணங்களும் ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளன.
- தலப்பயணம் மேற்கொள்ளும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர் செல்ல இருக்கும் தலத்திற்கு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பாசுரங்களைச் சிந்தித்துக் கொண்டே செல்லும் வழக்கமுடையவர் என்பது சான்றுகளுடன் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.
- தான் வணங்கிய திருத்தலம் குறித்த வரலாற்றை நுணுகி ஆராய்ந்து எடுத்துரைக்கும் திறம்மிக்கவராகப் பேராசிரியர் விளங்கியதை இவ்வியலின் வழி கண்டுணர முடிகிறது.
- பயண நூல்களுக்குச் சுவை சேர்க்கும் வகையில் இறைவனின் சிறப்பையும் அடியார்களுக்கு அருளும் கருணைத்திறத்தையும் புராணங்களின் வழியாக எடுத்துரைத்து பக்தியுணர்வை மேம்படுத்தும் பேராசிரியரின் புராணப் புலமை இவ்வியலில் தெளிவுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.
- வைணவ திவ்விய தேசங்களில் எழுந்தருளியுள்ள திருமாலின் நின்ற கோலம், கிடந்த கோலம், இருந்த கோலம், நடந்த கோலம் எனும் நால்வகைக் கோலங்களின் சிறப்பையும் விளக்கியுரைத்து திருநீர்மலைத் திருத்தலத்தில் இந்நான்கு கோலங்களிலும் இறைவன் இருப்பதை நுணுகி ஆய்ந்துரைத்து பல்வறே சயனக்கோலங்களையும், அக்கோலங்களில் அருள் வழங்கும் திருமாலின் சிறப்புகளையும் நேரில் கண்டு சுவைபட பதிவு செய்துள்ள பேராசிரியரின் நுண்மான் நுழைபுலம் விளக்கப்பட்டுள்ளது.

- திருக்கோயில்கள் அமைந்திருக்கக்கூடிய அமைவிடம், அத்தலங்களுக்குச் செல்வதற்கான வழிகள், அங்கு உறையும் திருமால் மற்றும் திருமகளின் பெயர்கள் தீர்த்தச் சிறப்பு, வழிபட்டு பேறுபெற்றோர் ஆகியவற்றை எடுத்துரைத்து திருத்தலப் பயண இலக்கிய முன்னோடியாகப் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் திகழ்ந்துள்ளமை இவ்வியலின் வழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- திருத்தலங்கள் அமைந்துள்ள இயற்கைச் சூழலை பேராசிரியர் எடுத்துரைப்பதன் வாயிலாக இயற்கையின் மீது அவருக்கிருந்த ஈடுபாடு புலப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

இயல் 2

திருத்தல அமைப்பு முறைகளும் வழிபாட்டு முறைகளும்

திருத்தலங்கள் ஒவ்வொன்றும் வெறும் வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமில்லாமல் பரம்பொருளாகிய இறைவனின் சக்தி வெளிப்பட்டு நிற்கும் இடங்களாகவும் அமைந்திருக்கின்றன. வளிமண்டலம் முழுவதும் பரவியிருக்கும் வளியானது நமது சுவாசத்தின் மூலம் மட்டுமே உணரப்படுவதைப் போல சர்வ வியாபியான இறைவன் எல்லா இடங்களிலும் பரவி இருந்தாலும், அவ்விறைவன் வெளிப்பட்டு நிற்கும் இடங்களாகவே திருத்தலங்கள் அமைகின்றன. அதனால்தான் இறைவனை முழுதும் உணரும் பொருட்டு திருத்தலங்களை நேர்த்திபட அமைப்பதில் மன்னர்களும், மற்றவர்களும் அதிக அக்கறை காட்டினர். கலைத்திறன் மற்றும் திருத்தலங்கள் கட்டப்பெற்றிருக்கும் காலம் ஆகியவற்றினைக் கொண்டு திருத்தலங்கள் அனைத்தும் எவரால் கட்டப்பெற்றுள்ளது என்பதனைப் புரிந்துகொள்ள முடிகிறது. அனைத்துத் திருத்தலங்களும் பொதுவான வரையறைக்கு உட்பட்டே அமைந்திருந்தாலும் அமைப்பு முறையில் ஒவ்வொரு திருத்தலமும் தனித் தனியான சிறப்புகளைப் பெற்றிருக்கின்றன. இதனையே **"தமிழக கலை வரலாற்றில் கோயிற்கலை மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. சமூகத்தோடு மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ள இக்கோயில்கள் சமயத்தின் அடையாளச் சின்னங்களாக விளங்குகின்றன. கோயிற்கலை என்பது பொதுவான ஒரு கலையாக இருப்பினும் அதில் ஒவ்வொரு சமயத்திற்கென குறிப்பிட்ட சில வேறுபாடுகளுடன் கூடிய அமைப்புகள் உள்ளன" (சமய இலக்கியமும் கோயிற் கலையும், ப.65)** என்கிறார் முனைவர் அம்பை மணிவண்ணன்.

இதனைக் கருத்தில் கொண்டே வைணவத் திருத்தலங்களின் அமைப்பு முறைகள் பற்றிக் குறிப்பிடும் பேராசியர் இத் திருத்தலங்களின் சூழலமைப்பு மற்றும் மதிற்சுவர், கோபுரம், கருவறை, புஷ்கரணி ஆகியவற்றின் அமைப்புச் சிறப்பின் தனித்தன்மையினை எடுத்துரைப்பதோடு கோயில் கட்டுமானத்திற்கு ஆதாரமாகத் திகழும் தூண்கள், மண்டபம், விமானத்தின் தனிச்சிறப்பு, இறையுருவைச் சுற்றியுள்ள ஓவிய அமைப்புகள் ஆகியவற்றினையும் அதிக அளவில் விவரித்துள்ளார்.

ஆலயத்தின் பொதுவான அமைப்புகள்

பொதுவாகத் திருத்தலங்கள் 'ஆலயம்' என்றும் 'கோயில்' என்றும் அழைக்கப்படுகின்றன. 'ஆலயம்' என்பதற்கு ஆன்மா இறைவனோடு இலயிக்கும் இடம் என்பது பொருள். 'கோயில்' என்பதால் 'கோ' என்பது இறைவனையும் 'இல்' என்பது இருப்பிடத்தையும் குறிக்கிறது. அதாவது 'இறைவனின் இருப்பிடம்' என்பது இச்சொல்லின் பொருளாகும். வைணவ சமயத்தில் சிறப்பு பெற்ற 108 கோயில்களையும் வைணவத் திருத்தலங்கள் என்றும் திருப்பதிகள் என்றும் அழைக்கிறார்கள்.

பொதுவாக இத்திருத்தலங்களை ஏதாவது ஓரிடத்தில் அமைத்து வழிபட்டுவிட முடியாது. அவ்வாறு செய்யவும் கூடாது. ஆதலால் ஆலயங்கள் அமைய வேண்டிய இடங்களை முன்னோர்கள் மிக கவனத்துடன் தேர்ந்தெடுத்தனர்.

இறைவனுக்கும் ஆலயத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைப் போலவே ஆலயத்தினைச் சுற்றியுள்ள பகுதிகளும் இறையம்சத்துடன் இருக்கவேண்டும் என்பதில் முனைப்பு கொண்டு சோலைகள், ஆறுகள், மலைகள், ஊற்றுகள் ஆகிய சூழல்களில்தான் தெய்வாம்சம் நிரம்பி இருக்கும் என்றும், அம்மாதிரி இடங்களில்தான் ஆலயங்களினை அமைக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்ததோடு அதனை செயல்படுத்தியும் காட்டினர். இறையம்சத்துடன் கூடிய இடத்தில்தான் ஆலயங்கள் அமைய வேண்டுமென்பதை 'பிரும்ம சம்ஹீதை' என்ற நூலும் வலியுறுத்துகிறது.

இவ்வாறாக, ஆலயங்கள் மக்களின் ஆன்மாவை நெறிப்படுத்தும் சாதனங்களாகத் திகழ்வதால்தான் அனைத்து சமயங்களிலும் ஆலயங்களும் அதன் அமைப்பு முறைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தகைய அமைப்பு முறைகள் ஆலய அமைப்பு முறைகள் எனப்படும் உள்கட்டஅமைப்பு முறைகளான மண்டபங்கள், பிரகாரங்கள், இறைவனின் திருவுருவங்கள் ஆகியவையும், கோயிலின் வெளிப்புறம் காணப்படும் இயற்கையான சூழலமைப்புகள், ஆற்றங்கரையோர சிறப்புகள் ஆகியவையும், 'தரிசனமுறை' எனப்படும் வழிபாட்டு முறைகளும் கோவில் அமைப்பு முறைகளாகக் கருதப்படுகின்றன.

வைணவத் திருத்தலங்களில் இத்தகைய சிறப்புகள் விரவிக் காணப்படினும் இத்திருத்தலங்களின் அமைப்பு முறைகளில்,

1. கோபுரம்
2. விமானம்
3. கொடிமரம்
4. கருடத்தூண்
5. கால் மண்டபங்கள்
6. தீர்த்தம்
7. சிற்பங்கள்

ஆகியவற்றின் அமைப்பு முறைகள் பெரிதும் கருத்தில் கொள்ளப்பெற்றுப் போற்றப்படுகின்றன.

கோபுரம்

கோபுரம் என்பதை 'கோ + புரம்' என்று பிரித்து பொருள் கூறுவர். 'கோ' என்பது இறைவனையும், 'புரம்' என்பது இருப்பிடத்தையும் கூறிப்பதாகக் கூறுவர். இறைவன் இருக்குமிடமே கோபுரம் என்பதினால் எங்கிருந்து பார்த்தாலும் தெரியுமளவிற்குக் கோயிலைவிட உயர்ந்த (உயரமான) அமைப்பினைக் கொண்டதாகவே கோபுரங்கள் கட்டப்பெற்றன. இதனால்தான் 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்று சொல்லும் வழக்கமும் வந்தது. பொதுவாக இக்கோபுரங்களின் அமைப்பானது ஒற்றைப்படை இலக்க

எண்ணின்படியே அமைக்கப்பட்டிருக்கும். மூன்று நிலைகளில் கோபுரம் இருந்தால் மூன்றுவிதமான அவஸ்தைகளை நீக்குவதாகவும், ஐந்து நிலைகள் இருந்தால் ஐம்பொறிகளையும் அடக்குவதாகவும், ஏழுநிலைகள் இருந்தால் ஐம்பொறிகள், மனம், புத்தி ஆகியவற்றினை அடக்குவதாகவும், ஒன்பது நிலைகள் கொண்டிருத்தால் ஐம்பொறிகள், சித்தம், அகங்காரம், மனம், புத்தி ஆகியவற்றின் செயல்பாடுகளைத் திருத்துவதாகவும் முன்னோர் கருதினர். இத்தகு சிறப்பு வாய்ந்திருப்பதினால் இக்கோபுரங்கள் 'இராஜகோபுரம்' என்றும் 'ஸ்தூல லிங்கம்' என்றும் அழைக்கப்படுகின்றன.

பொதுவாக, திருக்கோயிலின் முதல் கட்ட அமைப்பினாலும், பக்தர்கள் திருக்கோயிலைக் காணும் முதற்கட்டமான காட்சியாலும், திருத்தலத்தினுள்ளே பல கோபுரங்கள் அமைந்திருந்தாலும் ஏனைய கோபுரங்களைவிட உயர்ந்து காணப்படுவதாலும், பல அடி தூரத்திற்கு அப்பால் நின்றபடியே தரிசிக்க உதவுவதாலும், 'இராஜகோபுரம்' மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

விமானம்

கோயிலின் தலைப்பகுதி கோபுரமென்றால் உடல்பகுதியாகக் (திருமேனியாக) கருதப்படுவது விமானம். கோயிலின் கருவறையின் மேற்புறம் காணப்படும் அமைப்புதான் விமானம். 'மானம்', என்பது 'அளவு' என்றும் 'வீ' என்றால் 'கடந்தது' என்றும் பொருள்படும். எனவே "அளவு கடந்த தெய்வீக சக்தி கொண்டது" என்ற பொருளை உணர்த்துவதாகவே கருதப்படுகிறது கோவிலின் விமானப் பகுதி. ஆனால் **"கட்டடக்கலை நூல்கள் கோயில் கருவறையின் அடி முதல் முடி வரையிலான மொத்தக் கூறுகளின் தொகுப்பையே விமானம் என்று கூறுகின்றன" (சமய இலக்கியமும் கோயிற் கலையும், ப.136)** என்பர்.

இந்த விமான அமைப்பானது பொதுவாக அதிஷ்டானம் (பாதம்), பிட்டி அல்லது சுவர் (கால்), பிரஸ்தரம் (தோள்), கண்டம் (கழுத்து), சிகரம் (தலை), ஸ்தூபி அல்லது கலசம் (முடி) ஆகிய ஆறு அங்கங்களைக் கொண்ட (ஷடங்க விமானம்) அமைப்பாகவே காணப்படுகின்றன.

ஷடங்க விமான அமைப்பு பொதுவான கோயில் அமைப்பாக இருந்தாலும், அனைத்துக் கோயில்களும் இவ்வமைப்போடு கூடியதாய் இல்லாமல் பல வேறுபாடுகளுடன் கூடியதாகவும் இருக்கின்றன. இவ்வேறுபாடுகள் விமானத்தின் உச்சியில் உள்ள சிகரத்தின் அமைப்பினை வைத்து கணக்கிடும் வகையில்,

- கூட விமானம்
- சால விமானம்
- கஜப்பிருஷ்ட விமானம்
- அஷ்டாங்க விமானம்

ஆகிய வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

கூட விமானம்

பொதுவாக 'கூட விமான' அமைப்பு முறையானது அடுக்குகளைக் கொண்ட விமானம் எனப்படும். தென்னிந்திய திரவிடப் பாணியைக் குறிப்பதாகும். இவ்வமைப்பு சதுரமான அடித்தளம் கொண்ட கூடு போன்ற சிகரத்தையும், ஒரே ஒரு கலசத்தினையும் கொண்டதாகும்.

சால விமானம்

'சால விமானம்' அமைப்பானது செவ்வக வடிவுடையது. இதன்மீது ஒன்றுக்கும் மேற்பட்ட கலசங்கள் இடம்பெற்றிருக்கும் தனிச் சிறப்பு பெற்றது. இவ்வகை விமான அமைப்பானது திருமாலின் சயனக் கோலத்திற்குப் பெரிதும் ஏற்புடையதாக இருப்பதால் திருவரங்கத் திருத்தலத்தில் இவ்வமைப்பு பின்பற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கஜப்பிருஷ்ட விமானம்

யானையின் பின்புறம் போன்ற சிகர அமைப்பினைப் பெற்று விளங்குவதால் இது கஜப்பிருஷ்ட விமானம் என்றழைக்கப்படுகிறது. இதனை, 'தூங்கானை மாடம்' என்றும் கூறுவர். இம்முறை விமான அமைப்பானது சாளுக்கியராலும், பல்லவர்களாலும், சோழர்களாலும் கட்டப் பெற்றது. பாண்டிய நாட்டில் பெரும்பாலும் காணப்படாத அமைப்பு முறை இவ்விமான அமைப்பு முறை.

அஷ்டாங்க விமானம்

வைணவக் கோயில்களுக்கே பெரிதும் உரியதாகக் கருதப்படுவது 'அஷ்டாங்க விமானம்' அமைப்பு முறையாகும். பொதுவாக ஆறு அங்கங்களைக் கொண்டிருக்கும் ஷடங்க விமானத்தின் அங்கங்களுடன் ஹர்மியம், பிரஸ்தரம் எனும் இரண்டு பகுதிகள் சேர்ந்த அமைப்பானது அஷ்டாங்க (எட்டு அங்கங்களைக் கொண்டது) விமானமாகும். இவ்வமைப்பானது தரையில் அமைந்த கருவறையின் மேலேயே செங்குத்தாக ஒன்றின்மேல் ஒன்றாக மேலும் இரண்டு கருவறைகள் அமைந்த நிலையில் அமைந்ததோடு இக்கருவறைகளில் நின்றகோலம், கிடந்தகோலம், அமர்ந்த கோலமாகிய திருமாலின் மூன்று நிலைகள் இடம்பெற்றிருக்கும். மதுரைக் கூடல்அழகர் கோயில், திருக்கோட்டியூர் சௌமிய நாராயணப்பெருமாள் கோயில் ஆகியத் திருத்தலங்கள் அஷ்டாங்க விமானத்தில் புகழ்பெற்றத் திருத்தலங்களாகும்.

கொடிமரம்

வைணவக் கோவில்கள் அனைத்திலும் பெரும்பாலும் 'சூட்சுமலிங்கம்' எனப்படும் கொடிமரம் அமையப்பெற்றிருக்கும். தேவர்களை அழைப்பதற்கும், பக்தர்களைப் பாதுகாப்பதற்கும் கொடிமரம் அமைக்கப்படுவதாக வைணவர்கள் நம்புகின்றனர். பொதுவாக இக்கொடிமரத்தினை வணங்கிய பிறகே கோவிலுக்குள் சென்று இறைவனை வழிபட வேண்டும். சூட்சுமம் என்பது இக்கொடிமரத்தின் மூன்று நிலைகளைக் குறிக்கிறது. கொடிமரத்திலுள்ள சதுரமான அடிப்பாகம் இறைவனின் படைப்பினை உணர்த்தும் 'பிரம்ம பாகம்' என்றும், அதற்கு மேலுள்ள எண்கோணமாயிருக்கும் பாகம் காத்தலைக் குறிக்கும் 'விஷ்ணு பாகம்' என்றும்,

மேற்பகுதியிலுள்ள உருண்ட, நீண்ட பாகமானது சங்காரத் தொழிலின் அறிகுறியான உருத்திரனைக் குறிக்கும் 'உருத்திர பாகம்' என்றும் அழைக்கப்படுகின்றன. ஆகமொத்தம் இம்மூன்று பாகங்களும் மும்மூர்த்திகளின் முத்தொழில்களையும் உணர்த்துவதாய் அமைகின்றன.

இறைவனுக்கும் மனிதருக்கும் உள்ள உறவின் தொடர்பினை விளக்குவதாய் நம் முதுகுத்தண்டில் உள்ள **31** எலும்புகளும் **2** குறுத்தெழும்புகளும் அமைந்திருப்பதனைப் போன்றே கொடிமரமும் பெரும்பாலும் **33** கணுக்கால்களைக் கொண்டதாக அமைந்திருக்கின்றன. அதனால்தான் நமது உடலினுள்ளே முதுகுத் தண்டின் வடிவம் போல ஆலயத்தினுள் அமைந்திருக்கும் கொடிமரம் இருக்கிறதென்றும், நமது உடலினை இயங்கச் செயும் முதுகுத்தண்டின் அடியில் தான் மூலதார பீடம் அமைந்துள்ளதினாலும், உயிர்ச் சக்தியையும் உணர்ச்சிகளையும் இயக்கும் குண்டலினி சக்தி இங்கே இருப்பதனையும் மூலதாரபீடம் உணர்த்துகிறது. பிற பீடங்கள் அறிவுநிலையும் தெய்வநிலையும் கொண்டதாய் நாம் இல்லறக் கடமைகளில் இயங்கும்போது உணர்வு நிலையில் இயங்குவதற்கும், இறைவழிபாடு மற்றும் தியானத்தின்போது அறிவு நிலையை அடைவதற்கும் காரணமாய் இருக்கின்றன.

கருடத்தூண்

வைணவத் திருத்தலங்களில் காணப்படும் பொதுவான அமைப்புகளில் கருடத்தூணும் முக்கிய இடம்பெறுகிறது. பெரும்பாலும் கோவில்களில் இடம்பெறும் கொடிமரத்தில் கருடன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். மேலும், கொடிமரத்தினை அடுத்து கருடனுடைய சிற்பம் அமைக்கப்பட்டிருக்கும். கருடன் திருமாலின் வாகனம் ஆவார். வைணவ சமயத்தில் அனுமனை சிறிய திருவடி என்றும், கருடனைப் பெரிய திருவடி என்றும் வழங்குவது வழக்கம். இதன் சிறப்பிற்கு ஏற்ப பேராசிரியர் தான் நேரில் கண்டுணர்ந்த திருத்தலங்களில் கருடத்தூண் அமைப்பினைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'கருடத்தூண்' என்று கூறாமல் 'பெரிய திருவடி' என்றே குறிப்பிடுவதிலிருந்து அவரது ஆழ்ந்த வைணவ ஈடுபாட்டினை உணர முடிகிறது.

"கி.மு.200–இல் வட இந்தியாவில் 'பெஸ்நகர்' என்ற இடத்தில் தேவாதி தேவனான வாசுதேவனுக்கு ஒரு கருடத்தம்பம் அமைக்கப்பட்டது. இதுவே கருடனுக்குத் தோற்றுவிக்கப்பட்ட முதல் கருடத் தம்பமாகக் கருதப்படுகிறது. இக்கருடத்தம்பமே பின்னாளில் கொடிமரமாக மாற்றம் பெற்றிருக்கலாம்" (திருக்கோயில் அமைப்பும் திருவுருவ அமைதியும், ப.203) என்ற கூற்றும் **"கிரேக்க மன்னன் அண்டியால் சிபஸ் என்றவரின் தூதரான 'ஹெலிய டோரஸ்' என்பவர் வாசுதேவ ஆலயத்தில் ஒரு தூணும் அதில் கருட உருவமும் அமைத்ததினால் அத்தூண் கருடத்தூண் என்று அழைக்கப்படும் செய்தியினை குவாலியரைச் சேர்ந்த 'பெஸ்நகர்' கல்வெட்டு அறிவிக்கின்றது" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.25)** என்ற கூற்றும் உறுதிப்படுத்துவதிலிருந்து வைணவத் திருத்தலங்களில் கருடத்தூண் அமைப்பு மிக முக்கியமானதென்பது தெளிவாகிறது.

கால் மண்டபங்கள்

வைணவத் திருத்தலங்களில் காணப்படும் மிகப் பிரசித்தி பெற்ற அமைப்பாகக் கருதப்படுவது, 'கால் மண்டபங்கள்' ஆகும். பொதுவாக, பெரிய கோயில்களில் அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவை பிரதானமாக அமைந்து, அம்மண்டபம் முழுதும் சிற்ப வேலைப்பாடுகளால் நிறைந்துள்ள கல்தூண் அமையப்பெற்ற மண்டபத்தினை 'கால் மண்டபங்கள்' என்பர். அவ்வாறு நூறுகல் தூண்கள் அமையப்பெற்ற மண்டபத்தினை 'நூற்றுக்கால் மண்டபம்' என்றும், ஆயிரம் கல் தூண்கள் இருந்தால் 'ஆயிரங்கால் மண்டபம்' என்றும் அழைப்பர்.

வைணவத் திருத்தலங்களில் மிக முக்கியத் திருத்தலமாகக் கருதப்படும் திருவரங்கத் திருத்தலத்தில் 'ஆயிரங்கால் மண்டபம்' அமைப்பு முறை உள்ளது குறிப்பிடத்தக்கது.

தீர்த்தம் (புஷ்கரணி)

தொல்காப்பியம் முதற்பொருள் என்றும், கருப்பொருள் என்றும் வகைப்படுத்தி பொருளிலக்கணம் வகுத்திருப்பதை நல்வாழ்விற்கு வளம் சேர்க்கும் நல்லறமாகக் கருத்தில் கொண்ட சமயப் பெரியோர்கள் இயற்கையோடு இயைந்து முதற்பொருளான நிலத்தையும், கருப்பொருளான அனைத்தைம் இறையெனப் போற்றினர். அனைத்து உயிரிலும் பொருளிலும் நானே இருக்கிறேன் என்று கண்ணபிரான் உரைத்ததை மதித்து அனைத்து உயிரையும், பொருளையும் போற்றி வணங்கினர். அவ்வாறு வணங்கியதில் முதன்மையானப் பொருளாகக் கருதப்படுவது 'நீர்' ஆகும். வைணவ வழிபாட்டில் மட்டுமின்றி பிற சமய வழிபாட்டிலும் முக்கியத்துவம் பெற்றிருந்த காரணத்தினால் 'நீரெல்லாம் கங்கை' என்று புகழ்ந்துரைத்தனர் சமயப் பெரியோர்கள்.

இயற்கை வாழ்வுக்கு வளம் சேர்க்கும் அடிப்படை ஆதாரங்களுள் மிக முக்கியமானதாகத் தண்ணீர் அமைந்திருப்பதினால் அதனைப் புனிதமெனப் போற்றி வணங்கினர். அதோடு தலங்கள் தோறும் தீர்த்தங்களை ஏற்படுத்தினர். இதனால்தான் ஒவ்வொரு புனிதத் தலங்களிலும் புனிதப் பொருளாக 'தீர்த்தங்கள்' வழங்கப்பட்டன. தீராத பல நோய்களையும் தீர்க்கக்கூடிய மகத்துவம் புனிதத்தலங்களில் உள்ள தீர்த்தங்களுக்கு உள்ளதாகத் தலபுராணங்கள் பலவும் எடுத்துரைத்ததினால் மக்கள் பக்தியுணர்வோடு கங்கை, காவிரி ஆகியவற்றில் மூழ்கி எழுந்து அக, புற அழுக்குகளைக் களைந்தனர். எனவே ஒவ்வொரு ஆலயத்திற்கும் தீர்த்தம் முக்கியமானதாகவே கருதப்படுகிறது.

பொதுவாகத் திருத்தலங்கள் ஒவ்வொன்றும் தீர்த்தம், மூர்த்தி, தலம் ஆகிய மூன்று சிறப்புகளையோ அல்லது இவற்றில் ஒன்றிரண்டு சிறப்புகளையோ பெற்று காணப்படுவது வழக்கம் இதில் ஒன்றிரண்டு சிறப்புகளையே பெற்று காணப்படுவது வழக்கமாயினும் ஒவ்வொரு திருத்தலங்களிலும் தீர்த்தம் முக்கியப் பங்கினை வகிக்கிறது. 'கங்கையில் குளித்தால் மோட்சம்' என்பதும் இத்தீர்த்தச் சிறப்பின் அடிப்படையே ஆகும். இவ்வடிப்படையில் நதிகள் மற்றும் குளங்களில் குளித்தால் தங்களுடைய பாவங்கள் எல்லாம் மறைந்து போகும் என்ற நம்பிக்கை

நெடுங்காலமாய் மக்களிடம் நிலவி வருகின்றது. இதனையே வள்ளுவர் 'புறத்தூமை நீரான் அமையும்' (குறள். 298), 'நீரின்றிஅமையா துலகு' (குறள். 20) என்றெலாம் கூறுவதிலிருந்து அறியலாம்.

சிற்பங்கள்

திருத்தலங்களின் புகழுக்கும், வளமைக்கும் வலுசேர்க்கும் விதமாக அமைந்து, திருத்தலங்களின் கால கட்டங்கள், வரலாறுகள், தலபுராணங்கள் ஆகியவற்றினை அறிந்து கொள்ள பெரிதும் காரணமாக அமைவது இச்சிற்பங்களே ஆகும். அக்காலத்தில் மூன்று வகையான சிற்பக்கலை மரபுகள் தோன்றி வளர்ந்தன. மதுரா சிற்பக் கலை, காந்தாரச் சிற்பக் கலை, அமராவதி சிற்பக் கலை என்ற மூன்று வகைகளில் தொடக்கத்தில் சமண சமயம் மற்றும் பௌத்த சமயம் சார்ந்த சிற்பங்கள் தோன்றின. அதன்பின் குப்தர்களது காலத்தில் தோன்றிய வேறுபட்ட பௌத்த சமயத்தின் சிற்பக்கலை, அக்குப்தர்களின் ஆட்சிக்காலத்திலேயே இந்தியா முழுதும், விரவிப்படர்ந்தது பெருஞ்சிறப்பாகும். இக்குப்தர் காலத்தினையே 'இந்தியச் சிற்பக் கலையின் பொற்காலம்' என்கின்றனர். **"குப்தர்களின் காலத்தில்தான் இச்சிற்பக் கலை சாளுக்கிய நாட்டிற்கும் அங்கிருந்து பல்லவ நாட்டிற்கும், பின்னர் பாண்டிய நாட்டிற்கும் பரவி வளர்ந்தது. இவ்வாறு வளர்ந்த சிற்பக்கலை தமிழ்ப் பண்பாட்டோடும், தமிழ்ச் சமுதாயத்தோடும் நெருங்கிய தொடர்புடையதாய் அமைந்திருந்தன. இக்காரணத்தினால் கோயில்களில் பண்பாட்டை விளக்கும் சிற்பங்களும், புராண இதிகாசச் சிற்பங்களும் பெருமளவில் இடம் பெற்றுள்ளன" (தமிழக கோயிற்கலை, ப.113)** என்பார் கூற்றிலிருந்து சிற்பக்கலையும் அதன் துணைக் காரணிகளான ஓவியக்கலை, கல்வெட்டுக்கள் ஆகியவை தமிழர்களின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் மட்டுமின்றி திருத்தலங்களை அழகுறச் செய்யும் அமைப்பாகவும் இருந்திருக்கின்றன என்பதை உணரமுடிகிறது.

மதில்களுக்கிடையேயான பிரகார அமைப்பு

இந்தியத் திருத்தலங்களின் அமைப்பு முறைகளில் திருத்தலங்களின் மதிற்சுவர்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. இன்றைய காலகட்டத்தில் கோயில் மதிற்சுவர்களில் கொடிகள் அமைப்பதில்லை. ஆனால் பண்டைய இலக்கியங்களில் மதிற்சுவர்களுக்கென்றே பெருஞ்சிறப்புகள் உண்டு. அன்றைய கோயில் மதிற்சுவர்களில் கொடிகள் கட்டப்பெற்றிருக்கும். அக்கொடிகள் காற்றில் அசைந்தாடுவதைச் சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆகியவை எடுத்துக் கூறுகின்றன. பெருங்கதையில் வரும் மதிற்சுவர் பற்றிய குறிப்புகளில்,

"பரூஉப்பணைப் பளிங்கிற் பட்டிகை கொளீஇ
வேற்றொழில் பொலிந்த மாற்று மருங்கமைத்துக்
காம்புங் கதிரும் கூம்புமணிக் குமுதமும்
பாங்குற நிரைத் பயிற்சித் தாகி"

(பெருங்கதை, இலாவாண காண்டம், தெய்வச்சிறப்பு, அடிஎண்.85–88)

என்ற வரிகளில் கோயில் மதிற்சுவரில் தண்டும் அதன்மேல் மணிகளால் இழைக்கப்பட்ட தாமரை வடிவத்தில் காணப்படும் வேல் போன்ற அமைப்புகளால் அம்மதிற்சுவர் கோயிலை அழகுணர்ச்சியோடு கூடியதாய்க் காட்டியிருக்கும் சிறப்பினை அறியமுடிகிறது.

மதிற்சுவர்களின் சிறப்பினை உணர்த்தும் விதமாகப் பேராசிரியர் திருவரங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'பெரிய கோவில்' என்றழைக்கப்பதற்கேற்ப இது உண்மையில் பெரிய கோயில்தான் என்று கூறியிருப்பதோடு, இத்திருக்கோயிலின் மதிற்சுவர் கிட்டத்தட்ட முக்கால் மைல் சதுரப் பரப்பளவினைக் கொண்டுள்ளது என்று கூறுவதிலிருந்து வைணவத் திருத்தலங்களில் அதிகளவு சதுரப்பளவினைக் கொண்டுள்ள மதிற்சுவரைப் பெற்றிருப்பது இத்திருத்தலம் தான் என்பதை அறியமுடிகிறது.

அதோடு அதிக பரப்பளவினைக் கொண்டிருக்கும் இம் மதில்கள் ஏழுவகையானதாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்று கூறி ஏழாவது மதிலின் நீளம் மட்டும் **3072** அடிகள் என்றும், அகலமானது **2521** அடிகள் என்றும் எடுத்துரைத்து 'நமோநாராயணாய' என்ற ஏழு எழுத்துக்களும் ஏழு மதில்களாக அமைந்துள்ளன என்று கூறுவதிலிருந்தும் திருவரங்கத் திருத்தலத்தில் அமைந்துள்ள மதிலின் சிறப்பு புலனாகின்றனது.

இத்திருவரங்கத் திருத்தலத்தின் தனிச்சிறப்பே இத் திருக்கோயிலில் மதில்களால் எழுப்பப்பட்ட ஏழு வீதிகளும், ஏழு திருச்சுற்றுகளாக அமைந்திருப்பதுதான் என்று கூறுவதோடு அவ்வேழு வீதிகளும் முறையே தர்மவர்மன் திருவீதி, இராச மகேந்திர சோழனது திருவீதி, குலசேகரன் திருவீதி, ஆலிநாடன் திருவீதி, அகளங்கன் திருவீதி, திருவிக்கிரமன் திருவீதி, மாட மாளிகைத் திருவீதி என்று பெரும்பாலும் மன்னர்களின் பெயரோடு தனிப்பெரும் அழகுபட திகழ்வதாகக் கூறுவதிலிருந்து திருவரங்கத்துக்கு மதிற்சுவர் எடுப்பித்த மன்னர்களைக் குறித்தும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், ஏழு உலகங்களும் இத்திருக்கோயிலின் ஏழு சுற்றுகளாக அமைந்துள்ளன என்றும் வைணவச் சான்றோர்களின் நம்பிக்கையையும் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார்.

அதோடு **'திருப்பேர் நகர்'** திருத்தலத்தில் மதில்கள் மிக நேர்த்தியாகவும், திண்மையாகவும் அமையப்பெற்றிருப்பதும், **'திருவாட்டாறு'** திருத்தலத்தில் கோயில் சிறிதாயினும் அதன் மதிற்சுவர் பெரிய சுவராக அமைந்திருப்பதும், **'திருக்காட்கரை'** எனும் திருத்தலமானது இரண்டு ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்தாலும் தாழ்ந்த மதிற்சுவரால் சூழப்பட்டிருக்கும் அமைப்பினைக் கொண்டிருப்பதும் மதில் சுவரின் தன்மை எவ்விதம் இருப்பினும் மதிற்சுவரென்பது கோயிலுக்கு மிகத் தேவையான ஒன்று என்பதைச் சுட்டிக்காட்டியிருப்பதை உணர்த்துகிறது.

வைணவத் திருத்தலங்களில் '**திருவண் பரிசாரத்தில்**' மட்டுமே திருமதில் சுவர்களிலும், உள்சுற்றுச் சுவர்களிலும் திருமண் காப்பிட்டிருப்பது இத்திருத்தலத்தினைத் தவிர வேறெந்தத் திருத்தலத்திலும் காண முடியாது என்கிறார். இவ்வாறு கூறுவதிலிருந்து 'திருமண்' பரிகாரம்

செயப்படுவதினால் இத்திருத்தலத்திற்கு 'திருமண் பரிகாரம்' என்ற பெயர் ஏற்பட்டு, பின்னர் அதுவே மருவி திருவண் பரிசாரம் என மாறியிருக்கலாம் என்பதை உய்த்துணர வைக்கிறார்.

மண்டபம் மற்றும் தூண் அமைப்புகள்

வைணவத் திருத்தலங்களின் மண்டபம் மற்றும் தூண் அமைப்புகள் மிகுந்த கவின் நயத்துடன் அமைக்கப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க அமைப்பாகும். மண்டபம் எனும் சொல்லுக்கு **"திருவிழாக் காலத்தில் உற்சவமூர்த்தி எழுந்தருளும் இடம்"** (தமிழ்ப் பேரகராதி, பகுதி –1, தொகுதி – V, பக்கம்.3037) என்று தமிழ்ப் பேரகராதி பொருள் கூறுகிறது. திருத்தலங்களின் மண்டபம் மெதுவாகக் 'கூடம்' எனப்படுகிறது. அனைத்து மண்டபங்களும் பெரிய உத்திரங்களுடன் கூடியதாக அமைந்திருக்கும். இம் மண்டபங்கள் பெரும்பாலும் திருத்தலத்தின் கருவறைக்கு அடுத்தபடியாக இடம்பெறுகின்றன. இம்மண்டபங்கள் கோயிலின் தன்மைக்கேற்ப அர்த்த மண்டபம், மகா மண்டபம், முக மண்டபம் எனப் பல பெயர்களைப் பெறுகின்றன. இவை தவிர வைணவத் திருத்தலங்களில் நடைபெறும் திருவிழாக்களோடு தொடர்புபடுத்தி பகற்பத்து மண்டபம், இராப்பத்து மண்டபம், வசந்த மண்டபம் எனவும், தூண்களின் அமைப்பினைப் பொருத்து நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் எனவும் அழைக்கப் பெறுகின்றன.

இதனைப் போலவே கோயில் அமைப்பில் தூண்களின் பங்கும் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. இத்தூண்கள் பொதுவாக, **"அரைத்தூண்கள், முழுத் தூண்கள் என இரண்டு விதமாக அமைகின்றன. அரைத்தூண்கள் என்பவை கருவறையின் சுவரில் புடைப்பாகத் தூண்களின் பகுதி அமைப்பு வெளியே தெரியும்படி அழகிற்காக அமைக்கப்படும். முழுத்தூண்கள் பயன்பாட்டளவில் கூரையினைத் தாங்குவதற்காகவே அமைக்கப்படும்" (சமய இலக்கியமும் கோயிற்கலையும், ப.68)** என்கிறார் முனைவர் அம்பை மணிவண்ணன். அவ்வாறு கோயிலின் அழகுணர்ச்சியினையும், கலையுணர்ச்சியினையும் எடுத்தியம்பும் தூண்களைக் கருத்தில் கொண்டே பேராசிரியர் இம்மண்டபம் மற்றும் தூண் அமைப்புகளில் திருவரங்கம் சிறப்பிடம் பெற்றிருப்பதனை வலியுறுத்துகிறார். திருவரங்கத்தில் காணப்படும் அரங்க மண்டபம், வசந்த மண்டபம், நாற்கால் மண்டபம், திருமாக மணி மண்டபம், நாயர் மண்டபம், கருட மண்டபம், திருப்பவித்ர மண்டபம், கொடியேற்று மண்டபம், ஊஞ்சல் மண்டபம், அர்ச்சுன மண்டபம், சந்தன மண்டபம், காயத்ரி மண்டபம் ஆகியவை தனிப்பெரும் சிறப்புடன் அமைந்திருப்பதோடு ஆயிரம் தூண்கள் கொண்ட 'ஆயிரங்கால் மண்டபம்' அமைந்திருப்பது இத்திருத்தலத்தின் தனிப்பெரும் தன்மையினை எடுத்துரைக்கிறது என்கிறார். அதோடு அரங்கநாதன் சந்நிதியின் திருவனுக்கன் திருவாயிலையொட்டியுள்ள 'திருமணத்தூண்' என்ற இருதூண்கள் பரவாசுதேவரின் இருகால்களாக அமைக்கப் பெற்றுள்ளதால் ஆதிகாலத்தில் இந்தக் தூண்களின் அருகிலிருந்துதான் பெருமாளை வணங்குவது வழக்கம் என்பதை குலசேகராழ்வார்,

"காயாம்பு மலர்ப் பிறங்கால் அன்ன மாலைக்

கடிஅரங்கத்து அரவணையிற் பள்ளி கொள்ளும்

மாயோனை மனத்துளே பற்றிநின்று என்

வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே"　　　　(பெரு., திரு., 1:2)

என்ற பாசுரத்தின்படி அறிவுறுத்துவதிலிருந்து புலனாகிறது என்கிறார். இதன்மூலம் திருத்தலங்களிலுள்ள மண்டபம் மற்றும் தூண்களுக்கு உள்ள முக்கியத்துவத்தினை உணர முடிகிறது.

கோபுரம் மற்றும் விமான அமைப்புகள்

திருத்தலங்களில் கோபுரம் மற்றும் விமான அமைப்புகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் குறிப்பிடும் பேராசிரியர், திருவரங்கத் திருத்தலத்தில் **"திருமதில் ஏழும் விமானமும், ஆகிச் சிறந்தனவே" (திருவரங்க மாலை–95)** என்ற பாசுரம் சுட்டிக்காட்டுவதனைப் போல திருவரங்கத்தில் சிறிதும் பெரிதுமாகிய 21 கோபுரங்கள் அமைந்திருப்பது தனிப்பெறும் சிறப்பாகவும், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கட்டப்பெற்ற அமைப்பினைக் கொண்டதாக இக்கோபுர சிற்ப நுணுக்கங்கள் இருக்கின்றன என்பதனையும் குறிப்பிடுகிறார். இக்கோபுரங்களுள் 13 கோபுரங்கள் மட்டும் தெற்கு–வடக்காக நேரான நிலையில் தோன்றுவதற்குக் காரணத்தெளிவும் தருகிறார். **"கோயிலின் வளர்ச்சி தெற்கு வடக்காகவும், அரங்கநாதன் தெற்கு நோக்கி பள்ளி கொண்டிருத்தலும் கோபுரத்தின் அமைப்பு சார்ந்தே அமைந்திருக்கின்றன" (சோழ நாட்., திருப்., ப.10)** என்று கூறுவதிலிருந்து கோபுரத்தின் அமைப்பினை விளங்கிக்கொள்ள முடிகிறது.

இத்திருவரங்கத் திருத்தலத்திலுள்ள பெரிய அளவிலான 21 கோபுரங்களில் வெள்ளைக் கோபுரமும் நான்முகன் கோபுரமும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் குறிப்பிடும் பேராசிரியர் வெள்ளைக் கோபுரத்தின் அமைப்பினை குறிப்பிடுகையில், வண்ணம் பூசாது வெள்ளைச் சாந்தின் நிறமாக இருப்பதால் வெள்ளைக் கோபுரம் என்று அழைக்கப்படுவதாகவும், இத்திருத்தலத்திலுள்ள 21 பெரிய கோபுரங்களும் மிக முக்கியமானதாகவும், அதிக உயரமுடையதாகவும் (144 அடி 2 அங்குலம்) ஒன்பது நிலைகள் கொண்டதாகவும் இருக்கிறது என்று கூறுவதிலிருந்து இறைவன் இருக்குமிடமே கோபுரமென்றும், ஐம்பொறிகள், சித்தம், அகங்காரம், மனம், புத்தி ஆகியவற்றினை நல்வழிப்படுத்தும் பொருட்டே கோபுரம் அமைந்திருக்கிறது என்பதும் புலனாகிறது. அதோடு மற்றொரு கோபுரமான இராயர் கோபுரத்தின் அமைப்பினைப் பற்றி கூறுகையில், **"கிருஷ்ண தேவராயரின் விஜய நகர ஆட்சியில் அமைந்த மிகப்பெரிய கோபுரமென்றால் அது இந்தக் கோபுரந்தான். அதனாலேயே இந்தக் கோபுரத்தினை இராயர் கோபுரம் என்கின்றனர்." (சோழ நாட்., திருப்., ப.10)** எனக் குறிப்பிடுவதிலிருந்து விஜய நகர மன்னர்களின் ஆளுமையும் பக்திக்கு அவர்கள் கொடுத்த முன்னுரிமையும் நன்கு புலனாகிறது.

திருவரங்கத் திருத்தலத்தின் விமான அமைப்புப்பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"இத்தலத்து விமானம் பகவானால் நான்முகனுக்கு அளிக்கப் பெற்றதென்றும் பின்னர் அதுவே**

சூரிய குலத்தைச் சார்ந்த இட்சுவாகு மன்னனுக்கு நான்முகனால் வழங்கப்பெற்றது எனப் புராணம் கூறுகின்றது. இட்சுவாகு காலம் வரையில் இது அயோத்தி அரசர்களின் குலதனமாகக் கருதப்பெற்று வந்தது. மனித உருவம் கொண்ட பெருமாளாகிய இராமபிரானால் வழங்கப் பெற்றதாலேயே அரங்கநாதனுக்கு 'பெரிய பெருமாள்' என்பது திருநாமம்" (சோழ நாட்., திருப்., ப.7) என்று கூறுவதிலிருந்து சாதாரணமாகவே கோயில் விமானமென்பது அளவு கடந்த தெய்வ சக்திகொண்டதென்பதும், இத்திருத்தலத்து விமானம் பகவானால் நேரிடையாக வழங்கப்பட்டிப்பதால் மிகுந்த தெய்வசக்தி கொண்டதாகவே அமைந்திருப்பதனையும் உணர முடிகிறது.

திருக்கண்டியூர் திருத்தலத்தின் இராசகோபுர அமைப்புப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"இத்திருத்தலத்தின் இராசகோபுரம் மூன்று தளங்களால் ஆனது. திருக்கோயிலின் விமானம் திறந்துள்ள தாமரை மலர் போல உள்ளதால் இது 'கமல கீர்த்தி விமானம்' என வழங்கப் பெறுகின்றது" (சோழ நாட்., திருப்., பக்.70–71)** என்று கூறுவதிலிருந்து இத்திருத்தலம் பக்தர்களின் மூவகை அவஸ்தைகளை நீக்குவதோடு தாமரை மலர்களின் விரிந்த இலைகள் திருமால் பூசைக்கு உகந்ததாகக் கருதப்படுவதால் இத்தலத்து விமானம் விரிந்த தாமரை இதழமைப்பினை ஒத்திருப்பதை நோக்கும்போது இத்தலத்து விமானம் வைணவத் திருத்தலங்களில் மிக முக்கியமான விமானமாகப் போற்றப்பட வேண்டிய ஒன்று என்பதை உணர்த்துகிறது.

திருக்குடந்தை எனும் திருத்தலத்தின் கோபுர அமைப்பினைப் பற்றிக் குறிப்பிடுகையில் கோயில் நகரமான கும்பகோணத்தில் உள்ள **"இத்திருக்கோயில் கும்பகோணத்திலுள்ள அனைத்துக் கோயில்களைவிடவும் மிகப்பெரியது; இக்கோயிலினைப் போலவே இதன் கோபுரமும் பதினோரு மாடங்களைக் கொண்டு மிகப் பெரியதாக அமைந்துள்ளது" (சோழ நாட்., திருப்., ப.76)** என்று கூறுவதிலிருந்து அக்காலத்திலேயே வைணவ சமயம் மிக உயர்ந்த சமயமாக இருந்தது என்பதும், சமயப் பெரியோர்கள் வைணவத்தினை உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றினர் என்பதும் உறுதியாகிறது.

திருநறையூர் எனும் திருத்தலத்தின் கோபுர அமைப்பினைக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் இத்திருத்தலத்தில் உள்ள 75 அடி உயரம் கொண்ட இராசகோபுரமானது திருவரங்கத்திற்கு அடுத்தபடியாக அமைப்பு முறைகளால் சிறப்புபெற்ற ஆதிரங்கம் என்றழைக்கப்படும் திருமெய்யத்து இராசகோபுரம் போன்றும், திருக்கச்சி, சீவைகுந்தம் ஆகிய திருத்தலங்களில் காணப்படும் இராசகோபுரங்களைப் போன்றும் தனிப்பெரும் அழகுடன் திகழ்கிறது என்று கூறுவதிலிருந்து இறைவன் இருக்குமிடத்தில் அழகு நிறைந்திருக்கும் எனும் கருத்து உண்மையாவதையும், இறையுணர்ச்சியும் அழகுணர்ச்சியும் கோபுரங்களில் நிரல்படக் கலந்திருப்பதையும் உணர முடிகிறது. மேலும் ஒரு தலத்தின் கோபுரத்தின் அமைப்பை எடுத்துரைக்கும்போது அதனோடு ஒப்புமையுடைய ஏனைய கோபுர அமைப்புகளையும்

ஒப்பிட்டுக் காட்டும் திறம் பேராசிரியாரின் ஆழ்ந்த அறிவுக்கும் சிறந்த நினைவாற்றலுக்கும் சான்றாய்த் திகழ்கிறது.

மேலும், திருநறையூர்த் திருத்தலத்தின் விமான அமைப்புப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் இத்திருத்தலத்தின் விமானம் 'சீனிவாச விமானம்' என்ற பெயரில் அழைக்கப்படுவது நறையூர் நம்பிக்கு சீனிவாசன் என்றொரு பெயருண்டு என்பதை உணர்த்துவதற்காகத்தான் என்று தெரிவிப்பதிலிருந்து அவருக்கு பெயராய்வில் இருந்த புலமையைக் காட்டும் வகையில் உள்ளது. இத்திருத்தலத்து விமானம் இறைவன் பெயரிலேயே அமைந்திருப்பதால் அளவு கடந்த இறை சக்தியானது இங்கு உள்ளது எனச் சுட்டுகிறார்.

திருநாகைத் திருத்தலத்தின் கோபுரம் மற்றும் விமான அமைப்பு முறைகள் பற்றி ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகையில் திருநாகையில் உள்ள பெரிய கோபுரமே நாகை அழகியாரின் கோபுரந்தானென்றும் அதுமட்டுமின்றி பதினைந்து விமானங்கள் அமையப்பெற்றிருப்பது இத்திருத்தலத்திற்கே உண்டான தனிச்சிறப்பு என்றும் கூறுவதிலிருந்து வைணவத் திருத்தலங்களில் இறைவியின் பெயரால் அமைக்கப்பெற்றுள்ள கோபுர அமைப்பினைப் பெற்றது இத்திருத்தலம்தான் என்பதும், அதிகப்படியான விமான அமைப்புகள் கொண்ட திருத்தலமும் இத்திருத்தலம் தான் என்பதனையும் உணர முடிகிறது. இதனால் நாச்சியாரின் பெயரிலும் கோபுரங்கள் அமைக்கப்படும் வழக்கம் வைணவ சமயத்தில் இருந்தது புலனாகிறது.

திருக்கண்ணபுரத் திருத்தலத்தில் தனிச்சிறப்பு பெற்ற அமைப்பாக விமான அமைப்புத் திகழ்வதை **"இத்தலத்து விமான அமைப்பானது நாம் எந்த வழியில் வந்தாலும் நம் கண்ணில் படுவதில்லை" (சோழ நாட்., திருப்., ப.58)** என எடுத்துரைத்து இத்தலத்து அனைத்து அகரங்களிலும் ஸ்ரீமன் நாராயணனின் சாந்தித்யம் இருக்கிறபடியால், 'ஸ்ரீமந்தஷ்டாகூர மஹா மந்த்தர சித்தி ஷேத்திரம்' என்று அழைக்கப்படுவதனைப் போல இத்தலத்தில் எங்கிருந்துப் பார்த்தாலும் கண்ணுக்குப் புலப்படாத விமான அமைப்பு 'கண்ணுக்குத் தெரியாத இறைவன் காரிய சித்தியில் இருக்கிறான்' என்பதை உணர்த்துவதற்காகத்தான் இத்தலத்து விமான அமைப்பு எங்கிருந்து பார்த்தாலும் கண்ணுக்குப் புலப்படுவதில்லை என்பதை உணர்த்துகிறது.

திருக்கோட்டியூர் எனும் திருத்தலத்தின் கோபுரம் மற்றும் விமான அமைப்புப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் இத்திருக்கோயில் நெடுந்தூரம் வரை உயர்ந்த திருக்கோபுரத்துடனும், அட்டாங்க விமானத்துடனும் அமைந்திருப்பதோடு, கோயிலின் முதன்மையானப் பகுதி இவ்வட்டாங்க விமானமே என்றும், இக்கோயிலின் விமானத்தின் நிழல் கீழே விழாத தனித்தன்மையான அமைப்பைப் பெற்றிருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். அதோடு கோயிலின் நான்கு மூலைகளிலும் மூலைக்கு இரண்டாக எட்டு விமானங்கள் அமைந்திருப்பதினால்தான் 'அட்டாங்க விமானம்' எனப் பெயர் வைத்திருக்கின்றார்களென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஒன்றன் மீது ஒன்றாக மூன்று தளங்களையுடைய இந்த விமானத்தின் மேல் தளத்தில் திசைக்கொன்றாய் எட்டு திசையிலும் உள்ள எட்டு விமானங்களும் திருமந்திரத்தின்

எட்டு எழுத்துக்கள் போலவும், விமானத்தின் மூன்று தளங்களும் திருமந்திரத்தின் மூன்று பதங்களாகவும் (ஓம்+நமோ+நாராயணாய), மூன்று எழுத்துக்களுடன் கூடிய 'ஓம்' (அ+உ+ம) பிரணவம் போலவும் அமைந்திருப்பதாகக் கூறுவதிலிருந்து இத்திருத்தலத்தின் சிறப்பமைவு வேறெந்த வைணவத் திருத்தலங்களிலும் காணப்படுவதில்லை என்பதை உணரமுடிகிறது. **"திருக்கோயிலின் பெருமைக்கான காரணத்தில் ஒன்றானது இந்த கம்பீரமான அட்டாங்க விமானம். திருமால் எழுந்தருளியிருக்கும் 96 வகையான விமான அமைப்பில் முக்கியமானதும், மிக அருமையானதும் இந்த அட்டாங்க விமான அமைப்புதான்" (இந்து சமயத்தத்துவங்கள் ஞான களஞ்சியம், ப.399)** என்ற கருத்திற்கிணங்க இத்திருத்தலத்தின் அட்டாங்க விமானத்தின் அமைப்புச் சிறப்பினை வலியுறுத்துவதிலிருந்து **"சமய நூல்களின் ஆசிரியர்கள் தங்கள் இறைவனின் பெருமையினையும், சமய மரபினையும் விளக்க முற்காலச் சான்றோர்களின் கூற்றுகளை எடுத்தாள்வர்" (வைணவ சமயம், ப.134)** என்ற கூற்று உறுதியாகிறது.

கருவறை அமைப்புகள்

சைவ, வைணவத் திருத்தலங்களில் கருவறை அமைப்பானது தனிச்சிறப்பு பெற்று திகழ்கிறது. வைணவத் திருத்தலங்களைப் பொருத்த வரையில் இறைவன் வீற்றிருக்கும் கருவறையானது பெரும்பாலும் கற்களால் மட்டுமே கட்டப்பெற்ற அமைப்புடையதாய் உள்ளது.

இத்தகு சிறப்பு வாந்த கருவறை அமைப்பு பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் பூலோக வைகுந்த மாகிய திருவரங்கத் திருத்தலத்தில் தாமோதரரான கண்ணபெருமான் சந்நிதி, சக்கரத்தாழ்வார் சந்நிதி, சீரங்க நாச்சியார் சந்நிதி உட்பட அனைத்து சந்நிதிகளின் கருவறைகளும் தனிச்சிறப்பான அமைப்புடன் கருங்கல்லால் அமையப் பெற்றிருப்பதை எடுத்துரைக்கிறார் (சோழ நாட்., திருப்., பகுதி–1, பக்.18–21).

திருவெள்ளியங்குடித் திருத்தலத்தின் மதில்கள், கோபுரங்கள் ஆகியவை செங்கற்களால் கட்டப்பட்டிருந்தாலும், இத்தலத்துக் கருவறை மட்டுமே கருங்கலால் கட்டப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இதன்மூலம் திருத்தலங்களின் கருவறை கற்களால் மட்டுமே கட்டப்பெற்றிருப்பது இறைவனின் புனிதத்தன்மையினைக் காப்பதற்காகவே என்பது புலனாகிறது.

ஆற்றங்கரையோரத் திருத்தல அமைப்புகள்

பெரும்பாலும் திருத்தலமும், தீர்த்தமும் சமய உணர்வில் பிரிக்க முடியாத கூறுகளாக அமைந்து விடுகின்றன. சமய வளர்ச்சியில் ஆற்றங்கரையோர (புஷ்கரிணி) அமைப்புடன் கூடிய திருத்தலங்கள் தனிச் சிறப்பினைப் பெற்றே திகழ்கின்றன. இதனை வலியுறுத்தும் ந.சுப்புரெட்டியார் திருவரங்கத் திருத்தலத்தினைப் பற்றிக் குறிப்பிடுகையில் திருவரங்கத் திருத்தலத்தின் தீர்த்தங்களாக அமைந்த சந்திர புஷ்கரணி மற்றும் காவேரி, கொள்ளிடம் ஆகிய ஆறுகளால் வளம் சூழ்ந்த பகுதியாக இத்திருத்தலம் அமைந்துள்ளதைப் புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

ஒரு சமயம் இமயமலையில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் தேவ கன்னிகையர் வடிவங்கொண்டு விளையாடிக் கொண்டிருந்த வேளையில், அவ்வழியே வந்த காந்தருவன் ஒருவன் இவர்கள் இருந்த திசை நோக்கி தொழுததால் அவன் யாரைத் தொழுதனன் என்று மூவருக்குள்ளும் சலசலப்பு ஏற்பட்டு அதில் கங்கையும் காவிரி மட்டும் இறுதிவரை வாதாடிக் கொண்டிருந்தனர். அவர்களின் சொற்போருக்கு முடிவு கிட்டாததால் அவர்கள் திருமாலை அணுகி முறையிட்டனர் என்று கூறும் ந.சுப்புரெட்டியார் அவர்களின் ஐயத்தைத் தீர்த்துவைக்கும் பொருட்டு பெருமாள் கங்கையை நோக்கி, 'உன் உரிமையை எங்ஙனம் நீ நிலைநாட்டுகிறாய்?' என வினவ அதற்கு கங்கையோ இறைவனின் திருவடியினைத் தொட்டு வணங்கி, 'இங்கிருந்துதான் தோன்றினேன் நான்' என்று கூற, அதில் மெய்சிலிர்த்த பெருமாள் கங்கையின் சார்பாகத் தீர்ப்பு கூற, அதில் மனவருத்தம் அடைந்த காவிரி சினம் கொண்டு, 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று புகழடைய வேண்டுமென்று உறுதியோடு தவத்தினை மேற்கொண்டதன் பயனாக மகிழ்வடைந்த திருமால் "நான் இங்குவந்து சயனித்துக் கொள்ளப் போகிறேன்; அப்போது நீ எனக்கு மாலையாய் அமையும் பேற்றினைப் பெறுவாய்" என்றும் அப்போது நீ கங்கையிலும் மேம்பட்டவள் என்று தொண்டரடிப் பொடியாழ்வார் உன்னைப் பாடப்போகிறார்" என்று வரம் அளித்ததைக் சுட்டிக் காட்டும் ந.சுப்புரெட்டியார் அந்த வரத்தின் விளைவாகவே திருவரங்கத் திருத்தலம் காவிரித் தீர்த்தத்திற்கு இடையே எழில்மிகுந்த அமைப்புடன் அமைந்துள்ளது என்று கூறி,

"கங்கையிற் புனிதம் ஆய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம்" **(திருமாலை – 23)**

என்ற பாசுரத்தினாலும்,

"குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமா கண்டு
உடல் எனக்கு உருகு மாலோ
என்செய்தேன் உலகத் தீரே" **(திருமாலை–19)**

என்ற பாசுரத்தினாலும் தொண்டரடிப்பொடியாழ்வார் கூறும் காவிரித் தீர்த்தச் சிறப்பினை ந.சுப்புரெட்டியார் எடுத்தியம்புவதிலிருந்து ஒரு திருத்தலத்தின் பெருமையான அமைப்பாக தீர்த்தம் இருக்கிறதென்பதனையும், தீர்த்தங்களினால் அத்திருத்தலம் புனிதம் பெறுகிறது என்பதனையும் உணரமுடிகிறது.

திருவண்பரிசாரத் திருத்தலத்தில் எப்போதும் நீர்வற்றாத திருக்குளம் அமைந்திருப்பதையும், திருச்சிங்கவேள் குன்றம் திருத்தலமானது கருடாத்திரி, வேதாத்ரி என்ற இரண்டு குன்றுகளுக்கிடையே 'பாவ நாசினி' என்ற நதியின் அருகிலே அமைந்திருப்பதால் தனிப்பெரும் அமைப்புடன் திகழ்கிறது என்று கூறுவதோடு இத்திருத்தலத்தில் நரசிம்மர் ஒன்பது இடங்களில் காட்சி தந்தாலும், அட்சய தீர்த்தத்திற்கு அருகே எழுந்தருளியிருக்கும் 'பார்கவ நரசிம்மர்' மிகவும் பிரசித்தி பெற்றவர் என்று கூறுவதிலிருந்தும் தீர்த்தங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை என்பதை உணர முடிகிறது.

'மணிமாடக் கோயில்' என்றழைக்கப்படும் திருநறையூர் எனும் திருத்தலத்தின் தீர்த்த அமைப்புப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் இத்திருத்தலத்தின் முன்புறம் இருக்கும் குளமொன்று இத்திருத்தலத்தினை அழகுவளம் மிக்கதாக ஆக்குவதாலும், திருக்கண்ணமங்கை மற்றும் திருவழுந்தூர் ஆகிய திருத்தலங்களின் தீர்த்தமாக 'தரிசன புஷ்கரிணி' மிக அழகுடன் அமைந்திருப்பதனாலும், திருக்கோட்டியூர் திருத்தலத்தின் முன்புறம் திருப்பாற்கடலும் அதன் வடகிழக்கில் நடுமண்டபத்துடன் கூடிய தெப்பக்குளமும் வடக்கிலுள்ள காவடிக்குளமும் மிக அழகுடன் அமைந்திருப்பதனாலும் இத்திருத்தலங்கள் சிறப்பு பெறுகின்றன என்கிறார்.

அதோடு திருமாலிருஞ்சோலை எனும் திருத்தலத்தில் மலையினைச் சூழ்ந்துள்ள புண்ணியச் சரவணம், பவகாரணி, இட்டசித்தி ஆகிய தீர்த்தங்கள் அமைந்திருக்கும் சிறப்பும், திருக்கச்சித் திருத்தலத்தின் 'சேஷ தீர்த்தம்' என்றழைக்கப்படும் அனந்த புஷ்கரிணியின் அமைப்புகளும், திருநீர்மலைத் திருத்தலத்தின் பின்புறமுள்ள 'மணிகர்ணிகா' புஷ்கரிணியின் நீராழி மண்டபத்தின் எழிலார்ந்த வனப்புகளினாலும் இத்திருத்தலங்களெல்லாம் சிறப்பு பெறுகின்றன என்று ந.சுப்புரெட்டியார் கூறுவதிலிருந்து இத் திருத்தலங்களின் தீர்த்தங்களின் சிறப்பு புலனாகிறது.

பொதுவாக, ஆற்றங்கரையோரத் திருத்தலங்களுக்குத் தனிச்சிறப்பு இருப்பதனை உணர்ந்த மக்கள் அத்திருத்தலங்களுக்குச் சென்று வழிபட்டுத் தம் மனஅழுக்குகளை நீக்குவதற்கு அத்தீர்த்தங்களில் நீராடித் தூய்மையடையும் வழக்கம் இன்றளவும் இருந்து வருகின்றது. இதனை எடுத்துக்காட்டும் ந.சுப்புரெட்டியார் திருவன்பில் எனும் திருத்தலம் கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்திருப்பதும், திருத்தஞ்சையில் மாமணிக் கோயில், தஞ்சையாளிக்கோயில், மணிக்குன்றம் பெருமாள் கோயில் ஆகிய மூன்று கோயில்களில் மாமணிக்கோயிலும், தஞ்சையாளிக்கோயிலும் வடதிசையிலுள்ள வெண்ணாற்றங்கரையில் அமைந்திருப்பதும் தீர்த்தங்களின் தனிச்சிறப்பினை உணர்த்துகிறது என்று கூறுவதிலிருந்து வைணவத் திருத்தலங்களில் தீர்த்தங்கள் பெற்றிருக்கும் இன்றியமையாத இடத்தினை அறியமுடிகிறது.

திருச்செங்குன்றூர் திருத்தலத்தின் தீர்த்தச் சிறப்பு பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்,

“செங்கயல் உகளும் தேம்பனை புடைசூழ்

திருச் செங்குன் னூத்திருச் சிற்றாறு”   (திருவா., 8:4:2)

என்று நம்மாழ்வார் குறிப்பிடும் பாசுரத்தின்படி நேரிடையாகத் தன் பயண அனுபவத்தின்படி ஆற்றின் அமைப்பினைக் கண்டு வியந்துரைக்கிறார். அவ்வாற்றினை நெருங்குவதற்கு முன்னரே சற்று உயரமான இடத்தில் அகலமான இடப்பரப்பில் இத்திருத்தலம் அமைந்திருப்பது தனிச்சிறப்பான எழிலார்ந்த அமைப்பாக விளங்குகிறது என்று கூறுவதிலிருந்து ஆழ்வார்களின் காலத்தில் ஆற்றங்கரையோரத் திருத்தலங்கள், மிக மதிப்புடையதாகவும், இறைவல்லமை பொருந்தியதாகவும் இருந்தனவென்பதைப் புலப்படுத்துகிறார் (மலை நாட்., திருப்., ப.85).

திருப்பிரிதி எனும் திருத்தலத்தின் தீர்த்தச் சிறப்பு பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் இத்திருத்தலமானது கடல் மட்டத்திலிருந்து 3000அடி உயரத்தில் அமைந்திருந்தாலும் அழகாநந்தா, மந்தாகினி என்ற இரண்டு நதிகளுக்கு இடையில் அமைந்திருப்பதுதான் இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பானதொரு அமைப்பாகுமென்பதையும், கண்ணன் அவதரித்த திருவடமதுரைத் திருத்தலம் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ள கோமுகி நதி கடலுடன் கலக்கும் இடத்தில் அமைந்திருக்கும் பெருஞ்சிறப்பினையும், ‘ஆதி சேது’ என்றழைக்கப்படும் திருப்புல்லாணி எனும் திருத்தலத்தின் தீர்த்தத் துறையில் மூழ்கி எழுவோர் ‘சேது மூலே புல்லாரண்ய சேத்திரே’ என்று சங்கல்பம் செய்து கொள்ளும் வழக்கம் இன்றுவரை பின்பற்றப்பட்டு வருவதினால் தீர்த்தச் சிறப்பு விளங்குகின்றதென்றும் குறிப்பிடுவதிலிருந்து தீர்த்தங்களின் பெருமை புலப்படுகிறது.

‘திருக்கூடல்’ என்றழைக்கப்படும் மதுரைக் கூடலழகர் திருத்தல நெடுமாலை ‘வையை நெடுமால்’ என்று சுட்டிக் காட்டும் ந.சுப்புரெட்டியார் சிலப்பதிகார ‘துன்ப மாலையில்’ மாதரி எனும் ஆயர் மகள் ஆச்சியர் குரவை முடிந்ததும் வையை ஆற்றின் கரையிலுள்ள நெடுமாலை பூசிப்பதற்காகச் சென்றாள் என்ற செய்தியினை,

“ஆயர் முதுமகள் ஆடிய காயலாள்

சீவும் புகையும் புனைசார்ந்தும் கண்ணியும்

நீடுநீர் வையை நெடுமால் அடியேத்தத்

தூவத் துறைபடியப் போயினாள்” (சிலப்பதிகாரம், துன்பமாலை, அடி 1–5)

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுவதனை எடுத்துரைத்து ‘வையை நெடுமால்’ என்பதற்கு ‘ஸ்ரீ இருந்தவளமுடையார்’ என்பதே பொருள் என்பதை உணர்த்துகிறார். மேலும் இந்த இருந்தவளமுடையானின் சிறப்பினை பரிபாடல்,

“வானார் எழிலி மழைவள நத்தத்

தேனார் சிமைய மழையின் இழிதந்து

நான்மாடக் கூடல் எதிர்கொள்ள ஆனா

மருந்தாளும் தீநீர் பலிதுறை மேய

இருந்தையூர் அமர்ந்த செல்வநின்

திருந்தடி தலையுறப் பரவுவதும் தொழுது" (பரிபாடல், பா.1–6)

என்ற அடிகளாலும் குறிப்பிட்டுக் காட்டுவதிலிருந்து 'இருந்தையூர்' என்பது மதுரையின் வையைக் கரையில் உள்ளதென்பதனையும், 'இருந்த வளம்' எனும் மதுரையின் மைப் பகுதிதான் 'இருந்தையூர்' என்று பரிபாடலில் குறிப்பிட்டுள்ளது என்றும் கூறித் தன் ஆய்வுப் புலமையைப் புலப்படுத்திக் காட்டுகின்றார். அதோடு இருந்தையூர், இருந்தவளம் என்ற பெயர்களுடன் மதுரை அருகே வேறு எந்த ஊர்களும் காணப்படுவதில்லை. எனவே இவ்விரு திருநாமங்களும் கூடலழகர் திருக்கோயிலினையே குறிக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்துகிறார் (பாண்டி., நாட்., திருப்., பக். 64–66). இதன் வாயிலாக அவரது தமிழ் நூல் அறிவும் தான் கூறக்கருதிய கருத்தைச் சான்றுடன் நிறுவும் திறமும் புலனாகிறது. மேலும்,

"பரங்குன்றம் சூழ்கொள

விருந்த கூடலெம் பெருமான்" (கலித்தொகை, பா. 62)

என்று கலித்தொகை கூறுவதிலிருந்து இன்றுள்ள 'வையை நெடுமால்' திருக்கோயில் மதுரைக்கு மேற்குபுறத்திலுள்ள வையை நதிக்கரையில் அமைந்திருக்க வேண்டும். ஆனால் தற்சமயம் இத்திருக்கோயில் மதுரைக்கு மேற்கு புறத்தில் அமைந்திருப்பதற்கும் சரியான காரண விளக்கம் காட்டுகிறார் ந.சுப்புரெட்டியார். அதாவது மதுரையின் இரண்டு புறங்களிலும் மாலைபோல் சூழ்ந்து வையை நதி சென்றதாகவே பழங்காலத்தில் வழக்கு இருந்தது ஆதலால் வையை நதியின் போக்கானது தென்பக்கத்திலும் இருந்ததாகவே கருத வேண்டும் எனக் கூறும் ந.சுப்புரெட்டியார் இந்த வையையின் பிரிவுதான் 'கிருத மாலை' என்று வழங்கப்பட்டு வருவதனையும் கூடலழகர் திருக்கோயிலின் புறத்தே மதுரைக் கோட்டையைச் சுற்றி வையை நதி ஒரு மாலைபோல் ஓடுதலால் வையையைக் 'கிருத மாலை' என்று வழங்குவதனையும் எடுத்துரைக்கிறார்.

"தார் முற்றியது போல

தகை பூத்த வையை தன்

நீர் முற்றி மதில்பொரூ உம்

பகையல்லா நேரா தார்

போர் முற்றொன் றறியாத

புனல் சூழ்ந்த வயலூரான்" (கலித்தொகை, மருதக்கலி, பா. 2)

என்ற அடிகளால் கலித்தொகையில் வையை நதி மாலை சூழ்ந்திருந்ததைப் போல் வருணிக்கப் பெற்றிருப்பதால் 'நீடுநீர் வையை நெடுமால்' எனும் தொடர் அமைப்பானது மதுரைக் கூடலழகர் சந்நிதியினைக் குறிக்கிறது என்பதனையும் வலியுறுத்துகிறார் ந.சுப்புரெட்டியார் (பாண்டி.,நாட்., திருப்., ப.68). அவ்வாறு அவர் எடுத்துரைப்பதிலிருந்து நீரும் இறைவனும் பிரிக்க முடியாத தன்மையில் அமைந்திருக்கும் திருத்தலங்கள் இறைவல்லமை பொருந்திய திருத்தலங்களாக இருந்திருக்கின்றன என்பது உறுதியாகிறது.

இயற்கை சூழலமைப்புகள்

திருத்தலங்கள் அமைந்திருக்கும் சூழ்நிலைகளும் அத்திருத்தலங்களுக்குச் சிறப்பினைப் பெற்றுத் தருவதை தனது பயண அனுபவத்தில் மறவாமல் பதிவு செய்கிறார்.

மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான 'திருவட்டாறு' எனும் திருத்தலத்தின் அமைப்புப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் "ஆறும் அதன் கால்வாய்களுமாக ஊரையும் கோயிலையும் சூழ்ந்திருப்பதால் 'திருவட்டாறு – திருவாட்டாறு' என்ற பெயரில் அழைக்கப்பட்டிருக்கக்கூடும் என்று தன் எண்ணத்தினை பதிவு செய்கிறார் (மலை நாட்., திருப்., ப.16).

சிங்கவேள் குன்றத்தின் அமைப்புச் சூழலை விளக்கும்போது இது ஆந்திரமாநிலத்தில் சென்னை–பம்பாய் இருப்பூர்தி வழியில் உள்ள கடப்பையிலிருந்து அர்லகட்டா வழியாகப் பேருந்தில் சென்று இவ்வூரை அடையவேண்டும். இந்தத் திருத்தலத்தின் சூழ்நிலை அச்சத்தை விளைவிக்கும் அடைவியாகும். சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகள் வாழும் இடம்போல் காட்சியளிக்கின்றது மலையிலுள்ள அடவி என்பதைப் பதிவு செய்கிறார் (வட நாட்., திருப்., ப.24)

திருப்புல்லாணி எனும் திருத்தலத்தின் சூழலமைப்பினைப் பற்றிக்குறிப்பிடுகையில் இராமநாதபுரத்திற்குத் தெற்கே கீழக்கரை என்ற ஊருக்குச் செல்லும் வழியில் அமைந்த இவ்வூர் கடற்கரையைச் சார்ந்த சிற்றூரதலின் மணற்குன்றுகள் எம்மருங்கும் மலிந்து காணப்படுகின்றன என்பதனைச் சுட்டிக்காட்டுகிறார் (பாண்டி., நாட்., திருப்., பக். 38–39).

திருமாலிருஞ்சோலைமலை எனும் திருத்தலத்தின் அமைப்புச் சூழலினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் மதுரைக்கு வடக்கே 12 கல் தொலைவிலுள்ள இத்திருத்தலத்திற்கு முன்புறமுள்ள பெரிய சாலையினைக் காணமுடிகிறது. இப்புறச்சூழ்நிலை ஆழ்வார்களின் மனதில் ஒருசேரப் பெற்றதால் படலம் படலமாகப் பல பாசுரங்கள் இயற்றுமளவிற்கு ஆழ்வார்களின் சிந்தையால் உந்துதலை ஏற்படுத்தியுள்ளன. இத்திருத்தலத்தில் ஆழ்வார்கள் காலத்திலிருந்த சூழ்நிலை இன்றும் நிலவுவதைக் கண்டு அதிசயிக்க முடிகிறது. இந்த சோலைக்கு வடக்கிலும் மேற்கிலும் நீண்டு உயர்ந்த மலைச்சிகரங்கள் இருப்பதையும் சோலையும் மரங்கள் அடர்ந்து இருண்டு இருப்பதையும் காண்கின்றோம் என்கிறார் (பாண்டி., நாட்., திருப்., ப.95).

பெரும்பாலும் சமயங்கள் அனைத்தும் இயற்கையும் இறைவனும் ஒன்றென்ற கருத்தாக்கத்தை எடுதுரைக்கின்றன. இயற்கையின் எழிலார்ந்த அமைப்புகள் அனைத்திலும் இறைவன் இருக்கிறான் என்பதை அனைத்துச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. இதனை மனதில் கொண்டே தனது திருத்தலப் பயண அனுபவத்தில் ஒவ்வொரு திருத்தலத்தின் (திருத்தலங்களின்) இயற்கையார்ந்த சூழலினையெல்லாம் மிக அழகாகவும், நேர்த்தியாகவும் தான் கண்டுணர்ந்த பாங்கிற்கேற்றவாறு மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார் ந.சுப்புரெட்டியார்.

திருவரங்கத் திருத்தலத்தின் இயற்கை சூழலைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

“முருகேனுறை குறிஞ்சித்தேன் முல்லை பாய

முல்லைநிலத் தயிர்பால் நெ மருதத்தோட

மருதநிலக் கொழும்பாடு நெய்தல் தேங்க

வருபுனல்கா விரிசூழ்ந்த வளம்” (சீரங்க நாயகர் ஊசல், பா. 29)

என்ற பாசுரத்தின் வழியே திருவரங்கத் திருத்தலத்தினை திவ்வியகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் வருணித்திருப்பதைச் சுட்டிக்காட்டும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் இத்திருவரங்கம் நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே பெற்றுச் சோலைகள் சூழ்ந்த வண்ணம் மிக அழகுடன் விளங்குகிறது (சோழ நாட்., திருப்., பகுதி–1, ப. 3) என்று கூறுகிறார்.

வடநாட்டுத் திருத்தலங்களில் முதன்மையான திருத்தலமாகக் கருதப்படும் திருவேங்கடத் திருத்தலத்தின் சூழலமைப்பினைப் பற்றிக் குறிப்பிடுகையில் எங்கெல்லாம் அழகு உள்ளதோ அங்கெல்லாம் இறைவன் இருக்கிறான் என்பதே இறைவனடியார்களின் தெளிந்த கருத்து எனக் கூறும் ந.சுப்புரெட்டியார் இத்தகைய அழகுவாய்ந்த திருத்தலங்கள் ‘திவ்விய தலங்கள்’ என்றும் ‘திருப்பதிகள்’ என்றும் மதிக்கப்பட்டு இத்தலத்து எம்பெருமான்களை வழிபடுவது முக்கிய நிகழ்வாகக் கருதப்பட்டதென்றும், அத்தகைய சிறப்பு வாய்ந்த தலங்களில் ‘திருப்பதி’ என்று வழங்கப்படுன்ற ‘திருவேங்கடமலை’ ஆழ்வார்களின் காலத்தில் மிகச் சிறந்த தலமாக இருந்ததோடு தற்போதும் புகழ்மிக்க திருத்தலமாக இருக்கின்றது என்ற கருத்தினைப் பதிவு செய்வதிலிருந்தும் அழகுணர்ச்சியுடன் கூடிய இயற்கை அமைப்புகளிலெல்லாம் இறைவன் இருக்கிறான் என்பதை தெளிவு படுத்தியுள்ளார்.

திருவண்பரிசாரத் திருத்தலத்தின் இயற்கைச் சூழலமைப்பினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் மலைநாட்டுத் திருப்பதிகளுக்கே உரித்தான வளமும், இயற்கைச் சூழலமைப்பும் இத்திருத்தலத்தில் மிக அதிகமாகவே காணப்படுகின்றது என்று கூறுவதிலிருந்தும், ‘திருவனந்தபுரம்’ திருத்தலத்தின் இயற்கையான அமைப்புகளாகச் சுற்றிலும் அடர்ந்த தோப்புகள், ஓங்கி உயர்ந்த மலைக்குன்றுகள், பாங்குடன் திகழும் மணல் மேடுகள், பூங்கொத்துகள் குலாவும் குளிர்சோலை ஆகியவற்றினால் நிரம்பப் பெற்று தனித்தன்மையான இயற்கை வனப்புடன் திகழ்கின்றனதெனக் கூறி,

“ஓங்கு மரண் ஓங்கிமலை

ஓங்கி மணல் ஓங்கிப்

பூங்குலை குலாவு குளிர்

சோலைபுடை விம்மித்

தூங்குதிரை யாது தவழ்

சூழலது ஓர் குன்று”

(கம்பராமாயணம், ஆரணிய காண்டம், அகத்தியப்படலம், பா. 57)

என்ற அடிகளால் கம்பன் காட்டும் இயற்கைச் சூழ்நிலை வருணனைக் காட்சிகளைத் தம் கண்களால் வியந்து அனுபவித்ததையும் சுட்டிக் காட்டுவதிலிருந்து (மலை நாட்., திருப்., ப. 34). இறை விருத்திப் பெற்றத் தலங்கள் இயற்கை சூழ்ந்த தலங்கள் என்பது தெளிவாகிறது.

மேலும், திருக்கடித்தானத் திருத்தலத்தினைப் பற்றி ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகையில் 'பூத்த பொழில்தன் திருக்கடித்தானம்' (திருவாய்., 8:6:6), 'கற்பகச் சோலைத் திருக்கடித்தானம்' (திருவாய்., 8:6:10) என்ற திருவாய்மொழிப் பாசுரங்கள் கூறுவதற்கேற்ப தேவர்கள் வாழும் திருக்கடித்தானத்துச் சோலையானது வானுலகில் உள்ள கற்பகச் சோலையினை ஒத்ததாகவே இருக்கிறது என்று சுட்டுகிறார். மணத்தையுடைய இடம் எனப் பொருள்படும் 'திருக்கடித்தானம்' என்ற பெயர் இவ்வூருக்கு மிகவும் பொருந்தும் என்று குறிப்பிட்டுள்ளார் (மலை நாட்., திருப்.,ப.91).

'திருக்காட்கரை' எனும் திருத்தலத்தின் சூழலமைப்பினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், மலைநாடு என்றழைக்கப்படும் இன்றைய கேரள நாட்டில் மலைத்தொடர்களுக்கு நடுவே இத்திருத்தலம் அமைந்திருப்பதோடு சுற்றிலும் அடர்ந்த காடுகளும், குன்றுகளும், தென்னந்தோப்புகளும், பள்ளத்தாக்குகளும், மைதானங்களும், வயல்களும், சோலைகளும் நிரம்பிய எழில்மிகு தலமாகத் திகழ்கின்றது என்பதோடு திருமூழிக்களம், திருப்புலியூர், திருநாவாய், திருவல்லவாழ், திரவண் வண்டூர், திருவித்துவக் கோடு, திரவாறன்விளை போன்ற மலைநாட்டுத் திருத்தலங்கள் அனைத்தும் நீர்வளமும், நிலவளமும் நிறைந்த இடங்களில் அமைந்து'மாயோன் மேய காடுறை உலகமாகத் திகழ்கின்றன என்று அத்தலங்களின் சிறப்பை எடுத்துரைத்துள்ளார்.

அழகர் கோயில் எனப்படும் திருமாலிருஞ்சோலை திருத்தலத்தின் இயற்கை எழிலைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

"குலமலை கோலமலை
குளிர்மாமலை தோற்ற மலை
நீலமலை நீண்டமலை
திருமாலிருஞ் சோலையதே" (பெரியாழ்., திரு., 4:3:5)

என்ற பாசுரத்தின் வழியாகப் பெரியாழ்வார் உணர்ந்து அனுபவித்த சோலைகளுக்கு நடுவே அமைந்திருக்கும் அமைப்பினால்தான் இத்திருத்தலம் 'திருமாலிருஞ்சோலை' என்று வழங்கப்படுகிறது என்பதனை எடுத்துரைத்துள்ளார். (பாண்டி., நாட்., திருப்., ப. 95) 'திருக்குறுங்குடி' திருத்தலமானது மலையினை ஒட்டிய பகுதியென்பதால் சுற்றிலும் சோலைகள் நிரம்பப் பெற்றிருப்பதால் தனிச்சிறப்பு பெற்றுள்ளதை "தென்நன் சோலைத் திருக்குறுங்குடி" (திருவா 5:1:2), "தேன்கொள் சோலைத் திருக்குறுங்குடி" (திருவாய்., 5:5:4) என்ற நம்மாழ்வாரின் வாக்கிற்கேற்பவும், "கொல்லை வளர் இளமுல்லை புல்கும் குறுங்குடி" (பெரிய., திரு., 9:5:6), "கொங்கு அலர் நண்பனை சூழ்புறவின் குறுங்குடி" (பெரிய., திரு., 9:5:7) என்ற திருமங்கையாழ்வாரின் வர்ணனைக்கேற்பவும் திருக்குறுங்குடித் திருத்தலம் சோலைகளால் சூழப்பெற்ற அமைப்பால் பெருஞ்சிறப்பு பெறுகிறது என்கிறார் (பாண்டி., நாட்., திருப்., ப.274).

இவை தவிர திருக்கடிகை, திருக்கோவலூர் எனும் திருத்தலங்களில் சோலைகள், மாஞ்சோலைகள், தென்னந்தோப்புகள், கமுகுத் தோட்டங்கள் ஆகிய அழகு சூழ்ந்த பரப்புகளுக்கு இடையில் அமைந்துள்ளன என்று எடுத்துரைப்பதிலிருந்தும் இயற்கையின் வனப்பு இறைவனையும் ஈர்க்கும் சிறப்பு பெற்றது என்பதை உணரமுடிகிறது.

கல்வெட்டுகள்

தமிழகத்தில் கல்லில் எழுத்துக்களைப் பதிவு செய்தல் என்பது பழங்காலந்தொட்டே பயன்படுத்தப்பட்டு வந்த ஒரு மரபாகும். தொடக்க கால கட்டத்தில் இக்கல்வெட்டுகள் வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கும் வகையில் தமிழ்ச் சமுதாயம், தமிழர்களின் பண்பாடு, தமிழர்களின் பழக்க வழக்கங்கள், தமிழரின் நாகரிகம் ஆகியவற்றினை அறிவித்து வந்தன. தமிழகத்துக் கோயில்களில் **“கி.மு.இரண்டாம் நூற்றாண்டு முதலே கல்வெட்டுக்கள் கிடைத்து வந்துள்ளன” (சமய இலக்கியமும் கோயிற்கலையும், ப.94)** என்பர். இவ்வாறு பரவலாகத் தமிழகக் கோயில்களில் கல்வெட்டுக்கள் இடம்பெறத் தொடங்கின. கோயிற்கல்வெட்டுக்கள் தொடக்க நிலையில் பெரும்பாலும் அக்கோயிலை நிறுவிய அரசனின் புகழ் பரப்பச் செயும் கீர்த்தனங்களாக (மெய்க் கீர்த்திகளாக) இடம் பெற்ற அமைப்பாகவே இருந்தன. பின்னர் இறைவனுக்கு நிகர் எவரும் இல்லை என்பதை உணர்ந்து கோயில் கல்வெட்டுக்களில் அத்திருத்தலத்தின் தலபுராணங்கள், இறைச் சிறப்புகள் ஆகியவையும் அந்நாட்டு அரசன் அத்திருத்தலங்களுக்குச் செய்த சிறப்புகளும் இடம்பெறத் தொடங்கின.

“முதலாம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று சோடகன் என்பவன் வாசுதேவரது மகாஸ்தானத்தில் ஒரு வாயிலும், கோபுரமும் தேவகுலமும் அமைத்தான்” என்றும் **(வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.24)** இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கோசுண்டிக் கல்வெட்டானது **“சங்கருடனுக்கும் வாசுதேவனுக்கும் அமைந்த கோயிலுக்குச் சுற்றுமதில் எழுப்பியதையும், வழிபாட்டுக்காகப் பூசைக்கல் ஒன்று நிறுவியதையும் குறிக்கிறது” (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.24)** என்றும் முனைவர் அரங்க. சீனிவாசன் கூறுவது இங்கு நோக்கத்தக்கது.

இவ்வாறாக கல்வெட்டுகள் இக்கோயில்களின் காலத்தை அறிய பெரிதும் பயன்படுகின்றன. ஒவ்வொரு கால கட்டத்திற்கும் ஏற்றவாறு கோயிற்கட்டுமானங்கள் புணரமைக்கும் போதும், புதுப்பிக்கப்படும் போதும் பழைய கட்டுமானத்தில் இருந்த கல்வெட்டுகளோ, அல்லது அக்கல்வெட்டுச் செய்திகளோ புதிய கட்டுமானங்களில் இடம்பெற்றுவிடுகின்றன. எனவே அக்கோயிலின் முழு வரலாற்றினையும் அறிவது எளிதாகிறது.

இத்தகைய சிறப்பு மிக்க கோயில் கல்வெட்டுகள் பற்றி ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகையில், திருத்தில்லைச் சித்திரக் கூடத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுகளின் பங்களிப்பு மிக முக்கியமானது என்கிறார். இத்திருக்கோயிலை **“எட்டாம் நூற்றாண்டில் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலை நிறுவிய இரண்டாம் நந்திவர்மப் பல்லவ**

மன்னன் (கி.பி.1777 – 1782) எடுப்பித்தார்; 12ஆம் நூற்றாண்டில் அநபாய சோழன் என்ற இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1133–1150) சிற்றம்பலத்தைப் பெருக்கி அமைக்கும் பொருட்டு கோவிந்தராசப் பெருமானை கடலில் எறிந்து விட்டான், அதன் பின்னர் இராமாநுசர் இந்தத் திருமேனியைத் திருப்பதியில் பிரார்த்தித்தார் என்ற செய்தியினைப் பல கல்வெட்டுகள் கூறுகின்றன" (சோழ நாட்., திருப்., பகுதி–2, ப.11) என்கிறார்.

இதுமட்டுமின்றி தில்லைச் சித்திரக்கூடத்தில் **"கிருஷ்ணதேவராயரின் தம்பி அச்சுதராயரது ஆட்சிக்காலத்தில் (கி.பி.1539இல்) கோவிந்தராசப் பெருமான் மீண்டும் பழைய இடத்திலேயே பிரதிட்டிக்கப்பெற்று வைகாசன முறைப்படி வைணவ பட்டாச்சார்யர்களால் வழிபாடுகள் செய்துவர நிவந்தங்கள் விடப்பெற்றுள்ளன என்ற செய்தியும் அதுமட்டுமின்றி இத்திருத்தலத்தின் பல பகுதிகளைக் கட்டிய செய்திகளனைத்தையும் கல்வெட்டுகள் எடுத்துரைப்பதனை இராயவேலூரிலிருந்து அரசோச்சிய விஜய நகர வமிச சீரங்கராயர் இக்கோயிலை முகமண்டபத்துடன் வனைந்ததும்; இக்கோயிலில் வழிபாடு செய்யும் வைணவர்கட்கு ஐந்து சிற்றூர்களை இறையிலியாக அளித்ததும் கல்வெட்டு செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது" (சோழ நாட்., திருப்., பகுதி–2, ப.11)** என்கிறார்.

இத்திருத்தலத்தினைப் போலவே 'திருவன்பில்' எனும் திருத்தலத்திலும் அதிகப்படியான கல்வெட்டுகள் அமைந்திருப்பது தனிச்சிறப்பான அமைப்பாக இருக்கிறது என்பதனை எடுத்துரைக்கிறார்.

சிற்பங்கள்

சமயச் சிந்தனையில் மேலோங்கி இருந்த மனிதனின் சமயம் சார்ந்த எண்ணங்களின் வெளிப்படையான கற்பனைப் படைப்பாக அமைந்தவைதான் கடவுளின் உருவச் சிற்பங்கள். சிந்து சமவெளி நாகரிக காலத்திலேயே இத்தகைய இறையுருவங்கள் இருந்ததற்குச் சான்றுகள் பல இருந்தாலும், அக்கால சிற்பங்களில் சமயச் சார்பு சிந்தனைகள் தோன்றப் பெறவில்லை. மாறாக, புராண காலத்தில் இறைவனை மையப்படுத்திய புராணக் கதைகளும் இதிகாசங்களும் இறைவனின் செய்திகளைக் குறிப்பிடும் சிற்பங்களாகவே அமைந்தன.

அவ்வாறு அமையப்பெற்ற இறைச் சிற்பங்கள் அனைத்தும் தமது சமயம் சார்ந்த கருத்துக்களை எடுத்துரைக்கும் விதமாய் அமையத் தொடங்கியதோடு, அச்சிற்ப அமைவுகள் தான் குறிப்பிடும் கருத்துக்குள் மற்றுமோர் உட்கருத்தினைக் கொண்டதாகவோ அல்லது புதியதொரு கருத்துருவாக்கத்திற்கு வழிவகுக்கும் சிற்பங்களாகவோ வளரத் தொடங்கின.

பெரும்பாலும் கோயிலில் இடம்பெரும் சிற்பங்கள் அவை உணர்த்தும் கருத்துக்களின் அடிப்படையோடு ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக அமைந்திருக்கும். இச்சிற்பங்கள் அனைத்தும் கருத்தமைப்பின்படி அருகருகிலோ அல்லது எதிரெதிரிலோ அமையப் பெற்றிருக்கும் தனிச்சிறப்பான அமைப்பினால் அச்சிற்பங்களை எளிதில் இனம் கண்டுகொள்வதோடு அதன் கருத்துச் செறிவினையும் அறிய முடிகிறது.

பொதுவாக ஒரு சிற்பத்தினை அடையாளம் கண்டு கொள்ள முடியாவிட்டாலும் அதனருகிலோ அல்லது எதிரிலோ உள்ள மற்ற சிற்பங்களைக் கொண்டு கருத்தமைவு கொள்ளும் வகையில் கோயில் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

தான் பயணம் மேற்கொண்டு வழிபாடு செய்த வைணவத் திருத்தலங்களில் அமைந்திருந்த சிற்பங்கள் மிகச் சிறந்த வகையில் மெய்ப்பாடுகளை வெளிப்படுத்துமானவாக இருந்தன என்பதைப் பேராசிரியர் பதிவு செய்துள்ளார்.

"எந்த ஒரு சிற்பமும் மெய்ப்பாடின்றி அமையாது, மெப்பாட்டை உணர்த்து போதுதான் அச்சிற்பம் உண்மையிலேயே அழகு பெறுகிறது" (சமய இலக்கியமும் கோயிற் கலையும், ப.110) என்ற கூற்றுக்கேற்ப தமிழகக் கோயில்களில் சிற்ப அமைப்புகள் மெய்ப்பாட்டை உணர்த்துகின்றன என்பதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் திருவனந்தபுரத் திருத்தலத்தின் சிற்ப அமைப்பினைப் பற்றிக் குறிப்பிடுகையில், **"திருவனந்தபுரத் திருத்தலத்தின் கோபுரத்திலும், மண்டபங்களிலும், தூண்களிலும் காணப்படும் பல்வேறு சிற்பங்கள் யாவும் தென்னிந்தியச் சிற்பங்களே என்று பெருமை கொள்ளும் விதமாய் அமைந்திருப்பதோடு, கேரள நாட்டிலுள்ள வைணவத் திருத்தலங்களில் இத்திருத்தலத்தில் மட்டும்தான் தமிழகச் சிற்பங்களைக் காண முடிகிறது" (மலை நாட்., திருப்., ப. 42)** என்று கூறுவதிலிருந்து அறிய முடிகிறது.

அதோடு மட்டுமின்றி திருவனந்தபுரத் திருத்தலத்தின் உள்சுவற்றில் கண்ணன், ஐயப்பன், சிவபெருமான், ஆனைமுகன், இலக்குவனுடன் சேர்ந்த சீதாராமன் இவர்களுக்குத் தனித்தனி சந்நிதிகள் இருப்பதோடு கருங்கல் சிற்பங்களைக் கொண்ட குலசேகர மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் போன்றவையும் 18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதற்குப் பல சான்றுகள் உள்ளனவென்றும் கூறுகிறார்.

இவை மட்டுமின்றி கண்ணன் சந்நிதிக்கு முன்னுள்ள நவக்கிரக மண்டபத்தின் தலைக்கு மேலுள்ள கரையில் (நெற்றிக்கண்) ஒன்பது கோள்களும் பொறிக்கப்பட்டிருக்கும் அமைப்பினை போற்றியுரைத்துள்ளார். **"இக்கோயிலின் கருவறையின் முன்புறமுள்ள அர்த்த மண்டபத்தின் அடித்தளக் கருங்கல் 20அடி சதுரத்தைக் கொண்டது; கல்லின் கனம் இரண்டறை அடி. இது கி.பி.1731இல் நிறுவப்பெற்ற இந்தக்கல் மண்டபம் 'ஒற்றைக்கல் மண்டபம்' என்று வழங்கப்படுவதோடு இது சிற்பக் கலையின் அர்த்தத்தை உணர்த்துகிறது" (மலை நாட்., திருப்., ப. 48)** என்றும் கூறுகிறார்.

அதோடு இத்திருத்தலத்தில் உள்ளது போன்றே திருவாட்டாற்று திருக்கோயிலிலும் இத்தகைய அடித்தளக்கல்லையுடைய மண்டபத்தினைக் கொண்டிருக்கும் அமைப்பினால் கிட்டத்தட்ட இரண்டு கோயில்களும் ஒரே மாதிரி அமைப்பினைக் கொண்டிருந்தாலும் சிற்பங்களைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கும்போது திருவனந்தபுரத்துக் கோயிலைவிட திருவாட்டாற்றுக் கோயில் பழமையானது என்ற கருத்தினைப் பதிவு செய்திருக்கிறார் ந.சுப்புரெட்டியார். இதன் வாயிலாகச் சிற்ப அமைதியைக் கண்டு காலக்கணிப்பைச் செய்வதில் பேராசிரியருக்கு அமைந்திருந்த அளப்பரிய ஆற்றல் நன்கு புலனாகிறது.

பொதுவாக நாயக்க மன்னர்கள் காலத்தில்தான் சமயச் சார்பற்ற சிற்பங்களும், இதிகாச சிற்பங்களும் கோயில்களில் அதிக அளவில் இடம்பெறத் தொடங்கின. இவர்கள் காலத்தில்தான் சுந்தரராசப் பெருமாள் கோயில் (அழகர் கோயில்), திருமோகூர் (காளமேகப் பெருமாள் கோயில்), ஸ்ரீவில்லிப்புத்தூர் (ஆண்டாள் கோயில்), நாங்குனேரி (வானமாமலை கோயில்), திருக்குறுங்குடி (நம்பி கோயில்), ஸ்ரீவைகுண்டம் (வைகுண்டநாதர் கோவில்), ஆழ்வார் திருநகரி (ஆதிநாதர் கோயில்), மன்னார் கோயில் (இராஜகோபாலசுவாமி கோயில்) ஆகிய திருத்தலங்களிலெல்லாம் பலவித சிற்பங்கள் பெருமளவில் செதுக்கப்பட்டன. இதனைக் கருத்தில் கொண்டே ந.சுப்புரெட்டியார் திருமோகூர், திருவில்லிப்புத்தூர், திருக்கோவலூர் ஆகிய திருத்தலங்களின் சிற்ப அமைவுகளில் நாயக்கர்களின் செல்வாக்குப் பெருமளவில் மிகுந்திருந்தது என்கிறார்.

திருமோகூர் திருத்தலத்தில் காணப்படும் கம்பந்தடி மண்டபத்தில், இம்மண்டபத்திற்குத் திருப்பணி செய்த சிவகங்கைச் சீமையின் பாளையக்காரர்களான சின்ன மருது, பெரிய மருது ஆகியோரின் சிலைகள் மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்டிருப்பதோடு 'கருட மண்டபம்' எனப்படும் மற்றொரு மண்டபத்தில் கண்கவரும் அழகுடன் மூன்று நான்கு சிலைகள் தூண்களை அணிசெய்கின்றன என்கிறார். **"ஒருதூணில் மிதிலைச் செல்வியை அணைத்தவாறு உள்ள கோதண்டராமன் சிலைச் சிற்பம், மற்றொரு தூணில் இலக்குவனன் சீதையுடன் காணப்படுகின்ற அமைப்பு, பிற தூண்களில் காணப்படும் காமவேள், இரதிதேவி ஆகியோருடைய சிலைவடிவ சிற்பங்கள் மிக அழகுடன் காட்சியளிக்கின்றன" (பாண்டி., நாட்., திருப்., ப.77)** என்று கூறுவதிலிருந்து சமயங்கள் சார்ந்த சிற்பங்கள் கோவில்களில் பெருமளவில், வடிக்கப்பட்டிருந்தது தெளிவாகிறது. அதே சமயத்தில் சமயங்கள் சாராத சிற்பங்கள் மனிதர்களின் வாழ்வியலோடு தொடர்புடைய, அன்பின் வழியது உயிர்நிலை என்ற வள்ளுவரின் வாக்கிகேற்ப ஆணும் பெண்ணும் அன்பு கொள்ளுதல் இறைநிலையாகக் கருதப்பட்டது என்ற கருத்தினை மானுடர்க்கு உணர்த்துவதற்காகத்தான் 'மன்மதன்–ரதி' ஆகியோரின் சிற்பங்கள் கூட கோயில்களில் இடம் பெற்றிருந்தன என்பதை உணர முடிகிறது.

இவை தவிர திருவில்லிப்புத்தூர் திருத்தலத்தின் திருப்பணியில் திருமலை நாயக்கர் முக்கிய பங்கு வகித்தார் என்பதை, **"ஆண்டாள் கோயிலின் சுக்கரவாரக் குறட்டில் ஒரு கம்பத்தில் இருக்கும் நாயக்கரின் சிலை இதனை அரண் செய்கின்றது" (பாண்டி., நாட்., திருப்., ப.131)** என்று கூறுவதிலிருந்தும், திருக்கோவலூர் திருத்தலத்தின் சிற்ப வடிவங்களின் அமைப்பினை உற்று நோக்கினால் நாயக்க மன்னர்களே இத்திருத்தலத்தின் பெரும் பகுதியைக் கட்டி இருக்கவேண்டும் என்பதை, "இத்திருத்தலத்தில் மிக அதிக அளவில் காணப்படும் நாயக்க மன்னர்களின் சிலைகளே இதற்கு அரண் செய்வதா அமைந்திருக்கின்றன" (தொண்., நாட்., திருப்., ப.154) என்று கூறுவதிலிருந்தும் சமயச் சார்பற்ற சிற்பங்கள், இதிகாசச் சிற்பங்களனைத்தும் தமிழகத்தில் நாயக்க மன்னர்களின் காலத்தில்தான் பரவலாகப் பரவின என்பதை உணர முடிகிறது.

ஓவியங்கள்

மாந்தரினம் தோன்றிய காலத்திலேயே அவ்வினத்து உள்ளத்துணர்வில் அழகுணர்ச்சியும் தோன்றிவிட்டது. அவ்வழகுணர்ச்சியின் அடிப்படையில் மானுடர்களின் கலையார்வம் பல்வேறு காலச்சூழ் நிலைக்கு ஏற்றவாறு பலவிதமான நிலைகளில் வளர்ந்து முழுமை பெற்றது எனலாம். ஆதிகாலத்திலேயே மனிதர்கள் கலையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டனர் என்பதற்கு ஓவியக்கலையே மிகச் சிறந்த முன்னுதாரணமாக இருக்கின்றது. இதனை வலியுறுத்தும் வகையில் ‘சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்’ என்ற முதுமொழி உருவாயிற்று. பண்டைய காலத்தில் ஓவியத்தை வட்டிகைச் செய்தி என்ற பெயரில் அழைத்தனர். வட்டிகை என்பதற்கு துகிலிகை (Brush) என்று பெயர். வண்ணம் தீட்டாமல் வரைந்த ஓவியத்திற்குப் புனையா ஓவியம் (out line Drawing) என்று பெயர். கி.பி.**600–**ல் வாழ்ந்த மகேந்திரவர்மன் என்னும் பல்லவ அரசன் தனிச் சிறப்புப்பெயர்களில் ஒன்றான சித்திரகாரப்புலி என்பது அவன் சித்திரக்கலையில் வல்லவவனாக விளங்கியதையும், அக்காலத்தில் ஓவியக்கலை பெற்றிருந்த சிறப்பினையும் உணர்த்துகிறது. காப்பிய இலக்கியமான மணிமேகலையில்,

“மனையக புகுந்து மணிமே கலைதான்
புனையா ஓவியம்போல நிற்றலும்”

(மணிமேகலை, ஆதிரை பிச்சையிட்ட காதை, பக்.130–131)

என்ற அடிகளாலும், நெடுநல்வாடையில் இப்புனையா ஓவியச் சிறப்பினை **“புனையா ஓவியம் கடுப்ப” (நெடுநல்வாடை, அடி எண். 147)** என்று சுட்டிக்காட்டுவதிலிருந்தும் உணரமுடிகிறது.

சங்க காலத்திலிருந்தே சுவரில் சித்திரங்கள் வரையப்படும் வழக்கம் இருந்ததென்பதை அக்கால அரண்மனை மற்றும் கோயில்களிலுள்ள ஓவிய மாடங்களின் அமைப்பு உணர்த்துகிறது. தொடக்க காலத்தில் குகைகளிலும், சுவரிலும் வரையப்பெற்ற ஓவியங்கள் கலைச்சிறப்பின் மிகுதியால் அரண்மனையிலும், கோவில்களிலும் பிரதிபலிக்கத் தொடங்கின.

“இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ஓவியக்கலை நமது நாட்டில் வளர்ச்சியடைந்திருந்தது என்பதற்குச் சங்க நூல்களிலே சான்றுகள் உள்ளன” (தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப.52) என்ற மயிலை சீனிவேங்கடசாமியின் கூற்றும் ஒப்பு நோக்கத்தக்கது.

பாண்டிய மன்னனாகிய நன்மாறன் தனது சித்திர மாடத்திலேயே தங்கி உயிர்நீத்ததால் அவன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் எனப் போற்றப்பட்டதை புறநானூறு எடுத்துரைக்கிறது. மாங்குடிமருதனார் எனும் புலவர் பாண்டியனின் சித்திர மாடத்தை,

“கயங்கண்ட வயங்குடை நகரத்துச்
செபியன் நன்ன செஞ்சுவர் புனைந்து” **(மதுரைக் காஞ்சி, அடி எண். 484–485)**

என்று சுட்டிக்காட்டுவதும் நக்கீரர் தனது நெடுநல்வாடையில் சித்திரமாடம் பற்றிக் குறிப்பிடுகையில் **“வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ” (நெடுநல்வாடை, அடி எண். 21)** என்ற பாடலில் சித்திர மாடத்தின் அழகினை வர்ணித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியமான பரிபாடலில் அகலிகை சாபத்தை விளக்கும் ஓவியங்கள் இடம் பெற்றிருந்த செய்தியை,

"இந்திரன் பூசை இவளகலிகை யாவன்

சென்ற கவுதமன் சினலுறக் கல்லுறு

ஒன்றிய படியிதென்று உரை செய்வோரும்

இன்ன பலபல எழுத்து நிலை மண்டபம்" (பரிபாடல், 19:48–53)

என்று கூறுவதிலிருந்தும் 'ஓவத் தன்ன வினைபுனை நல்லில்' (பதிற்றுப்பத்து, பா. 6) என்றும், 'ஓவத்தன்ன உருகெழுநகர்' (பதிற்றுப்பத்து, பா. 88) என்று பதிற்றுப்பத்து கூறுவதிலிருந்தும் சங்ககால தமிழகத்தில் ஓவியக்கலையானது சிறப்புற்று இருந்ததை அறியமுடிகிறது.

ஓவியக்கலையின் சிறப்பினை உணர்ந்து,

"உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழியாமல் எல்லாம்

என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி எழுதிக் கொண்டேன்" (பெரியாழ்., திரு. 68)

என்று பெரியாழ்வாரும்,

"கள்ளவிழ் பூங்கனைத் தொடுத்துக்கொண்டு

கடல்வண்ணன் என்பதோர் பேரெழுதி" (நாச்., திரு., 2)

"கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு

கோவிந்தன் என்பதோர் பேரெழுதி" (நாச்., திரு., 3)

என்று ஆண்டாளும் இன்பப் பாசுரங்களால் தங்களுடைய நெஞ்சமெனும் சுவரில் இறைவனை எழுந்தருளச் செய்ததனைக் கூறுவதினால் சுவரில் ஓவியம் வரைதல் பழங்காலத்திலிருந்தே வழக்கத்திலிருக்கிறது என்பதை உணர முடிகிறது.

இத்தகு சிறப்பு வாய்ந்த ஓவியங்களின் அமைப்புமுறைகள் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் திருவரங்கத் திருத்தலத்தில் **"திருவிண்ணாழியின் சுற்றிய முப்புறச் சுவர்களிலும் சுமார் நானூறு ஆண்டுகட்கு முற்பட்ட 108 வைணவத் திருத்தலங்களின் உண்மைத் தோற்றங்களை ஒளிப்படம் பிடித்துக் காட்டுவனபோல் அழகிய வண்ண ஓவியங்கள் உள்ளன" (சோழ நாட்., திருப்., பகுதி, ப.27)** என்று கூறுவதோடு **"ஸ்ரீவல்லிப்புத்தூர் திருத்தலத்திலுள்ள மாதவிப்பந்தலில் உள்ள பிரகாரத்தில் நூற்றியெட்டு எம்பெருமான்களும் பலநிற வண்ணங்களில் ஓவிய வடிவில் காட்சியளிக்கின்றனர்" (பாண்டி., நாட்., திருப்., ப.125)** என்றும் கூறுகிறார்.

இவை தவிர, திருக்குடந்தை எனும் திருத்தலத்தில் வைணவத் திருத்தலங்களை அதிக அளவில் மங்களாசாசனம் செய்திருக்கும் திருமங்கையாழ்வார் பாடியிருக்கும் 'திருஎழுக்கூற்றிருக்கை' எனும் இலக்கிய வகை ஓவியமாகத் தீட்டப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, **"இத்திருக்கோயிலின் மகா மண்டபத்தினைக் கடந்துள்ள உற்பகுதியில் இராமாயணக் கதைகள் முழுதும் இருநூறு (200) ஓவியங்களில் தீட்டி வைத்திருப்பது**

இத்திருத்தலத்திற்கு மிகவும் பொருந்தும்" (சோழ நாட்., திருப்., பகுதி–1, ப.84) என்றும் எடுத்துரைக்கிறார்.

திருத்தலங்களில் தலபுராணங்கள் ஓவிய வடிவில் இடம்பெற்றிருப்பதை திருஎவ்வுள் எனும் திருத்தலத்தில் காணமுடிகிறது எனக் கூறும் ந.சுப்புரெட்டியார், **"இக்கோயிலின் தலபுராணத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவும் ஓவிய வடிவில் தீட்டப்பெற்றிருக்கும் அமைப்பு அழகானதோர் அமைப்பாய் இருக்கிறது" (தொண்., நாட்., திரு., ப.74)** என்று எடுத்தியம்புவதினால் சங்க காலத்தில் சிறப்புற்றிருந்த ஓவியக் கலையானது சமயங்கள் வளர்ச்சி அடைந்த இடைக் காலத்தில் மேலோங்கிய நிலையிலேயே இருந்தது என்பதனையும், ஓவியக் கலையின் தனித் தன்மையினையும் உணர்த்துகிறது.

கடல் மல்லை காட்டும் மெய்ப்பாடுகள்

வைணவத் திருத்தலங்களில் கலையுணர்வின் அழகுச் சிறப்பினை உணர்த்தும் 'மெய்ப்பாடுகள்' அதிகளவில் இடம்பெற்றிருக்கும் திருத்தலமான 'திருக்கடல் மல்லை' கலைகளின் கலைகூடமாகத் திகழ்கிறது.

இத்திருக்கடல்மல்லை எனும் திருத்தலத்தின் அமைப்புச் சிறப்பு பற்றிக் குறிப்பிடுகையில் 'கடல்மல்லை' என வழங்கப்பட்டு வரும் இத்திருத்தலம் 'மகாபலிபுரம்' என்று அழைக்கப்படுவதனையும், பல்லவ மன்னர்களில் பெரும்புகழ் பெற்றவனான மகேந்திரவர்மன் சிற்பக் கலையின்மேல் அளவற்ற காதல் கொண்டவன், அவனது மகனான நரசிம்ம வர்மனோ தந்தையையும் மிஞ்சியவனாகி சிற்பிகளை ஆதரித்த கலைவள்ளல் என்று கூறும் ந.சுப்புரெட்டியார், **"மலைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களை உருவாக்கியவன் தந்தையென்றால், அம்மலைகளையே வெட்டிச் செதுக்கிக் கோயில், விகாரங்கள், இரதங்கள் முதலியவற்றையெல்லாம் அழகுற அமைத்தவன் மைந்தன்" (தொண்., நாட்., திருப்., ப.102)** என்கிறார்.

இதுதவிர சிற்பக்கலையினை ஆதரித்த நரசிம்மவர்மன் மற்போர் புரிவதிலும் சிறந்தவனாக விளங்கியதால், 'மாமல்லன்' என்ற விருதுப் பெயரையும் பெற்றவனாதலால் அவன் ஆதரவில் உருவாக்கி வளர்க்கப்பட்ட சிற்பக் கூடத்தைச் சிற்பிகள் யாவரும் மாமல்லபுரம் என்றே வழங்கினர் என்கிறார். இந்த மாமல்லபுரத்தை திருமங்கையாழ்வார் 'கடல் மல்லை' என்று குறிப்பிட்டு,

"எம்மானைக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தல சயனத்தே" (பெரிய., திரு., 2:5:3)

என்று தனது பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளதை எடுத்துக்காட்டும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் இத்திருத்தலம் முழுவதும் சிற்பங்கள் நிறைந்த வண்ணம் அழகுற காட்சியளிக்கிறது என்கிறார். மேலும் இத்திருத்தலத்தின் மூலவரான தலசயனத்துறைவார் சந்நிதிக்கு வெளிப்புறம் அமைந்துள்ள கிருஷ்ண மண்டபத்தில் சிறிய வயதுடைய கண்ணனாக இல்லாமல் எட்டடிக்கு

மேல் வளர்ந்த பால் கறக்கும் நிலையிலிருக்கும் கோபாலனின் சிற்பமானது மிகப்பெரிய பாறையில் செதுக்கப்பட்டிருப்பது எங்கும் காணமுடியாத அரிய சிற்ப அமைப்பு என்கிறார்.

இது தவிர 'அர்ச்சுனன் தவம்' எனும் சித்திரப் பாறையில் உள்ள அருச்சுனன் உருவ அமைப்பு, அந்த சித்திரப் பாறையின் அருகிலுள்ள இருபது அடி உயரமுள்ள நீண்ட இரண்டு பாறைகளில் பூனை முதல் யானை வரை, தேவர் முதல் முனிவர் வரை, மலைமகள் கொழுநன் எழுந்தருளி பாசுபதம் அளிக்கும் காட்சியமைவு போன்றவையெல்லாம் சிறப்பான அழகுணர்ச்சியுடன் அமைந்திருப்பதனை எடுத்துரைக்கிறார்.

இவ்விரு பாறைகளுக்கும் மேற்கே பேன் பார்க்கும் குரங்குகள், கண்ணன் வெண்ணெய் உண்ட காட்சிகள் ஆகியவற்றினை விவரிக்கும் சிற்பங்கள் மிக அழகுடன் அமைந்திருப்பதோடு தென்பகுதியில் உள்ள மேட்டின் மீது இலக்குமி மண்டபம், வராக மண்டபம், மகிஷாசுர மர்த்தினி மண்டபம் போன்ற பல அடுக்கான மண்டபங்கள் மலையினைக் குடைந்து உண்டாக்கப் பெற்றிருக்கும் அமைப்பு எழிலுடன் காணப்படுவதனையும், இதில் ஒரு மண்டபத்தில் வராக மூர்த்தியின் சிலைக்கு எதிரிலேயே உலகளந்த பெருமாள் காட்சியளிக்கும் அமைப்பும், பிறிதொரு மண்டபத்தில் மகிஷாசுரமர்த்தினிக்கு எதிரில் புயங்க சயனச் சிற்ப அமைப்பும், அர்த்த சித்திரச் சிற்பங்களாக (Bas relief) அமைந்திருக்கும் சிறப்பான காட்சிகளெல்லாம் மாமல்லபுரம் தமிழருடைய நாகரிகத்தின் சின்னமாக விளங்குவதற்கு அடையாளமாகக் காட்டியுள்ளார். சிற்பக்கலை வளர்த்த பேரரசர்களில் தலையாய மாமல்லனின் புகழ் அனைத்தும் இந்தக் கடல் மல்லையில் கற்பாறையில் இழைக்கப்பெற்ற கவின் உருவங்களில் அடங்கிக் கிடப்பதினால் இச்சிற்பங்களையெல்லாம் கல்லால் இழைத்த கவிதைகள் என்று புகழ்வதோடு தமிழ்நாட்டின் கலைச்செல்வம் நிறைந்த இடம் என்று உலகத்தினர் புகழ்ந்து போற்றும் கடல் மல்லையை மாமல்லன் பெயரால் 'மாமல்லபுரம்' என்று வழங்குவது மிகவும் பொருத்தமானது என்று ந.சுப்புரெட்டியார் எடுத்துரைத்திருக்கிறார்.

வழிபாடு – தோற்றம்

இயற்கையின் எழிலார்ந்த அழகு மற்றும் ஆற்றலைக் கண்டு வியந்த ஆதி மாந்தரினம் அவ்வியற்கையின் தோற்றப் பொழிவில் மாற்றத்தைக் காண முற்பட்டதன் விளைவாக இயற்கையின் அளப்பரிய ஆற்றலை இறைவனாக எண்ணி வழிபடத் தொடங்கியதால்தான் வழிபாடு என்பது வேரூன்றி வளரத் தொடங்கியது.

அவ்வாறு வளரத் தொடங்கிய வழிபாடுகள் மனிதனின் எண்ணமும் செயலும் வேறுபடுவதுபோல் அவரவரின் வாழ்க்கை முறைக்கு ஏற்பவும், அவ்விடங்களின் வளத்திற்கு ஏற்பவும் வேறுபடத் தொடங்கின. எனவே தான் பலதரப்பட்ட சமயங்களிலும், வகை வகையான வழிபாட்டு நிலைகள் தோன்றத் தொடங்கின. இதனை, **"ஒரு நாட்டின் பண்பாட்டு வரலாற்றோடு தொடர்புடையது அந்நாட்டு மக்களின் வழிபாட்டு முறைகளாகும். இந்திய பண்பாட்டு மரபில் பல்வேறு வகையான மதங்களையும், வழிபாட்டு முறைகளையும் காணமுடிகிறது" (தமிழர் வழிபாட்டு மரபுகள், ப.3)** என்கிறார் முனைவர் ஆறு. இராமநாதன். இவ்வாறு முதலில்

இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கிய வழிபாட்டு முறையானது பின்னர் அருவுருவ நிலையையும், உருவ நிலையையும் பெற்று வளரத் தொடங்கியது.

இயற்கையின் மேலுள்ள தீராக்காதலால் மனித மனங்களில் தூய்மையான எண்ணங்கள், அறிவார்ந்த சிந்தனைகள் ஆகியவை தோன்றியதால் ஒவ்வொரு வகையான மக்களும் தாம் வாழும் இடங்களுக்கு ஏற்ப தத்தம் தெய்வங்களைப் படைத்து வழிபட்ட வழிபாடுகள் பரவத் தொடங்கின. **"தொல்காப்பியம் குறிப்பிடும் மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை ஆகிய நிலத்தெய்வங்கள் இவ்வெண்ணத்தின் வெளிப்பாடாக அமைந்தவை" (தமிழ்நாட்டில் பைரவர் வழிபாடு, ப.7)** என்கிறார் முனைவர் நாகப்பா நாச்சியப்பன்.

இவ்வாறாக இயற்கைக்கு உருவம் கொடுத்த பண்டைத் தமிழர்கள் அவ்வியற்கையினையும் இயக்கும் சக்தி ஒன்று உள்ளதென்பதை உணர்ந்ததனால், இயற்கையின் சக்தியாக இறைவனை உருவகப்படுத்தி வணங்கத் தொடங்கினர். அதனால் **"சங்க காலத்தில் திராவிடர்களின் (தமிழர்களின்) இயற்கை வழிபாட்டு நெறிகளுடன் ஆரியர்களின் வழிபாட்டு நெறிகளும் வந்து கலந்ததனால் தமிழர்களின் கோயிற்கலை, வழிபாட்டு முறைகள் ஆகியவை ஆகமங்களில் இடம்பெறத் தொடங்கி சமய வழிபாடு வேரூன்றியதால் பண்டைத் தமிழர் வழிபாடும் சமய வழிபாடும் ஒன்றையொன்று இணைத்தவண்ணம் வளர்ந்தது. அத்தகைய பண்டைத் தமிழர்கள் வழிபாட்டில் இறைவனுக்கும் மக்களுக்கும் உள்ள உறவின் நெருக்கமே பெரிதும் பேசப்பட்டன" (தமிழ்நாட்டில் பைரவர் வழிபாடு, ப.9)**. எனவே வழிபாட்டின் மூலம் மட்டுமே இறைவனை நேரடியாக அடைய முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மக்களின் வழிபாட்டு முறைகள் செழித்தோங்கி வளரத் தொடங்கின.

அதோடு மட்டுமின்றி **"வழிபாடு என்பது முன்னோர்கள் காட்டிய வழியில் வழிப்படல் என்பதே பின்பு வழிபடல் என்றாயிற்று வழிபாடு என்ற சொல் இன்று தொழுதல், வணங்குதல் என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்படுகின்றது" (திருக்கோயில் வழிபாடு, ப.20)** என்றும் குறிப்பிடுவார் முனைவர் நாகப்பா நாச்சியப்பன். வளர்ந்த வழிபாட்டு நெறிகளுக்கு இடையில் கி.பி.ஆறாம் நூற்றாண்டிற்குப் பின் அகிலமெங்கும் அன்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, பக்திக் களத்தில் அன்பை விதைக்கும் விதையாகக் கொண்டு வளர்ந்த சமயமாக வைணவ சமயம் திகழ்கிறது. இவ் வைணவ சமயத்தில் இறைவனின் மேலுள்ள அளப்பறிய அன்பினால் ஆழ்வார்கள் பன்னிருவரும் தங்களது ஈடற்ற பக்தியால் இறைவனை வழிபட்டதனை நாலாயிரத் திவ்ய பிரபந்தம் எடுத்துரைக்கின்றது. அத்துடன் வைணவக் கடவுளான திருமாலை வழிபட்டு, வைணவ சமயத்தினை வளர்த்து வலுப்படுத்தியதில் இன்றியமையாத பங்கினை வகித்தவர்கள் ஆழ்வார்கள் என்பதனையும் உறுதிப் படுத்துகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த வைணவ சமயத்தில் வழிபாட்டு முறைகளும் தனிச்சிறப்பு பெற்றே திகழ்கின்றன.

எனவே வைணவத் திருத்தலங்களின் வழிபாட்டு முறைகளின் தனித் தன்மையினை விவரிக்கும் பொருட்டு அத் திருத்தலங்களின் வழிபாட்டு சிறப்புகளைத் தனது பயண அனுபவத்தின் வழியே எடுத்துரைக்கிருக்கிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்.

வைணவ வழிபாட்டின் தொன்மை

இயற்கை ஆற்றலை வழிபட்டால் இயற்கை நமக்கு நன்மை செய்யும் என்ற நிலையினைக் கருத்தில் கொண்டே தொடக்க கால வழிபாட்டு முறைகள் இருந்தன. இதனால், **"இயற்கை வழிபாட்டு நெறியே உலகின் தொன்மையான வழிபாட்டு நெறியாகக் கருதப்படுகிறது" (திருக்கோயில் வழிபாடு, ப.21)** என்பர்.

இவ்வாறு பண்டையத் தமிழர்கள் சமயப்பற்றில் மேலோங்கி இருந்த நிலையினைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. வைணவ சமயமும் வழிபாட்டு நிலைகளில் சிறப்புற்றே இருந்தது. மக்களால் போற்றப்படுகின்ற பொருள்களை முதற்பொருள், கருப்பொருள், உரிபொருள் என்ற மூவகைக்குள் அடக்கினார் தொல்காப்பியர். இதில் மனிதன் உயிர்வாழத் தேவையான நிலமும் காலமும் முதற்பொருள் என்றும் அப்பொருள்களின் சார்புத் தன்மையினைக் கருக்கொண்டு தோன்றுவதால்,

"தெய்வம் உணைவே மாமரம் புள்பறை
செய்தியாழின் பகுதியோடு தொகைஇ
அவ்வகை யாவும் கருவென மொழிப" (தொல்., அகத்., நூ.20)

என்று கருப்பொருளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

"அரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு
ஊர்நீர் பூ மரம் உணாப்பறை யாழ் பண்
தொழில் எனக் கரு ஈரேழு வகைத்தாகும்" (நம்பியகப்பொருள், நூ. 19)

என்று நம்பியகப்பொருள் என்று எடுத்துரைப்பதில் 'உயர்ந்தோர்' என்பது தெய்வத்தினைக் குறிப்பதாகக் கொள்வர். மக்களின் வாழ்வியலுக்கு வளம் சேர்ப்பவரை உயர்ந்தோர் என்பதைப் போல், தங்களின் அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளை நடத்துபவன் இறைவன் என்ற நம்பிக்கையில் மக்கள் இறைவனைத் தங்களது மனத்தின்கண் உயர்ந்த இடத்தில் வைத்து வழிபடத் தொடங்கினர். அவ்வாறு அவர்கள் வாழும் நிலத்திற்கும், வாழ்க்கை முறைக்கும் ஏற்ப அவர்களின் தெய்வக் கோட்பாடுகளும், வழிபாட்டு முறைகளும் அமைந்தன. இதனை,

"இக்காரணத்தினால்தான் தெய்வத்தைக் கருப்பொருளில் ஒன்றாகச் சேர்த்து, அவற்றில் சிறப்பு கருதி தெய்வத்தை முதலில் வைத்து இலக்கணம் செய்தார் தொல்காப்பியர்" (தமிழகக் கோயிற்கலை, ப.2) என்பார் கருத்தால் அறியமுடிகிறது.

இவ்வாறு கருப்பொருளில் முதலிடம் பெற்ற தெய்வம் தொல்காப்பியரால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு திணைகளுக்கும் சிறப்பாகக் காட்டப்பெற்றது. முல்லைக் கடவுளாக மாயோன் வழிபடப்பட்டான் என்பதைச் சங்க இலக்கியங்கள்,

"மண்ணுரு திருமணி புரையுமேனி" (புறநானூறு.56)

“நின்றவுருவு னெடியோன்” (பெரும்பாணாற்றுப்படை, அடி எண். 402)

என்று சுட்டிக்காட்டுவதிலிருந்து அறியமுடிகிறது.

இதனால் முல்லை நிலத்தின் ‘மாயோன்’ எனும் திருமால் வழிபாடு நானிலக் கடவுளர்களின் வரிசையில் முதலிடத்தில் வைத்துப் போற்றப்படுகிறது. ‘மாய்’ என்பதற்கு ‘பரம்பொருள்’ என்பது பொருளாகும். வடமொழியின் மாய் என்று அழைக்கப்பட்டவனே தமிழர்களால் ‘மாயோன்’ என்று வழங்கப்பட்டான். ‘மாயா’ என்ற சொல்லுக்கு ‘ஞானச் செறிவுடைய ஜீவாத்மாக்கள்’ என்று வடமொழி நிகண்டுகள் பலவும் பொருளுரைக்கின்றன. இந்த ஜீவாத்மாக்களைத் தம் உடலாகக் கொண்ட பரம்பொருளை ‘மாயோன்’ என்று வழங்கலாயினர்.

இந்த ‘மாயோன்’ என்ற சொல்லை ‘மாயன்’ என்றும் ‘மாயவன்’ என்றும் தமிழ் இலக்கியங்கள் பலவும் எடுத்துரைக்கின்றன. மாயோனின் பெருமையினை முன்னிலைப்படுத்தி பரிபாடலில் கடுவன் இளவெயினனார்,

“மா அயாயோ மா அயாயோ !

மறுபிறப்புக்கும் மாகில் சேவடி

மணிதிகழ் உருவின் மா அயாயோ !” (பரிபாடல், பா. 3)

என்று சுட்டிக்காட்டுகிறார். அதோடு ஆழ்வார்களில் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார் முதலியோர்,

“மாயவனை மது சூதனை மாதவனை” (பெரியாழ்., திரு., 4:10:10)

“மாயவனை மன்னும் வடமதுரை மைந்தனை” (திருப்பாவை, 5)

“மாயோனை மணத்தூணே பற்றிநின்று

என்றுகொலோ வாயார வாழ்த்தும் நாளே” (பெருமாள்., 1:2)

என்றெல்லாம் பாசுரங்களில் பரவி இருப்பதிலிருந்து வைணவ சமயத்தின் தொன்மையினை உணர முடிகிறது. அது மட்டுமின்றி மாயோன் என்ற சொல்லைத் தூய சொல்லாகக் கருத்தில் கொண்டால் ‘மா’ என்ற சொல்லுக்குக் ‘கருமைநிறம்’ என்ற பொருள் இருப்பதினால் ‘மாயோன்’ என்ற சொல் கரிய திருமேனியினை உடைய திருமாலைத் தான் குறிக்கிறது என்பதும் வைணவச் சான்றோர்களின் ஆழ்ந்த கருத்தாக இருக்கிறது.

இவ்வாறாக முழுமுதற் கடவுளான திருமாலை வழிபடுவதால் இம்மையிலும், மறுமையிலும் தங்களின் வாழ்வு செம்மையாக அமையும் என்ற அடிப்படையில் வைணவர்களின் வழிபாடு அமைந்திருக்கிறது. அதனால் முல்லை நிலக் கடவுளான திருமாலை எல்லா நிலங்களிலும் கோயில் எழுப்பி மக்கள் வழிபட்டனர். இதனை,

“தொல் கதிர்த் திகிரியோன் பரவுதும் ஒல்கா

உரும் உறம் முரசின் தென்னவற்கு

ஒருமொழி கொள்தும் இவ்வுலகு உடன் எனவே” (கலித்தொகை, முல்லைக் கலி, 4)

என்று கலித்தொகை கூறுவதிலிருந்து திருமால் தொன்மையான தெய்வமாகவும், திகிரியை உடையவனாகவும் இருந்த நிலையினை அறிய முடிகிறது.

உருவ வழிபாடு

பொதுவாக இந்து சமயத்தினைப் பொறுத்தவரையில் இந்துக்கள் பல்வேறு வகையான உருவங்களாலான தெய்வங்களை வழிபடுகின்றனர். வைணவ சமயம் இவ்வழிபாட்டில் குறிப்பிடத்தகுந்த முக்கிய இடத்தினை வகிக்கிறது. உருவ வழிபாடு வைணவத்தில் மிக உன்னதமான நிலையில் உள்ளது எனலாம். இறைவனை வைணவத்தில் பரப்பிரம்மம் என்று அழைக்கப்படுகின்றனர். இந்தப் பரம்பொருளுக்கு வடிவமில்லை. இந்தப் பரம் பொருளுக்கு இதுதான் குணம் என்று வரையறுத்துக் கூறிவிட முடியாது.

அவ்வாறு குணம் இல்லாத ஒன்றை வழிபடுவதைவிட, சில குணங்களையும் தன்மைகளையும் கொண்ட உருவத்தினை கற்பனை செய்து வழிபடுவது சுலபமென்பதால் கற்பனை செய்வதற்கு ஏற்ற வடிவங்களைத் தத்துவங்களின் அடிப்படையில் உருவாக்கி வழிபடத் தொடங்கினர். சைவ, வைணவக் கடவுள்களின் வடிவங்களும் இந்துத் தத்துவ அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டன.

மனிதர்கள் ஒவ்வொருவரும் அவரவர்களின் விருப்பத்திற்கும் மனப்போக்கிற்கும் ஏற்றவாறு உள்ள ஒரு வடிவத்தினை வழிபடும் போது அவர்களின் மனம் எளிதில் ஒருமைப் படுகிறது. அதோடு பரம்பொருளான இறைவனை உணர்வது கடினமான செயலென்பதால் தனக்குப் பிடித்தமான உருவத்தின் மீது மனம் ஒருமைப்பட்டால் பரப் பிரம்மம் எனும் பிரபஞ்ச பேராற்றலை உணர்வது எளிதில் சாத்தியமாகிய விடுகின்றது என்பது வைணவர்களின் மிகச் சிறந்த கொள்கையாகக் கருதப்பட்டதினால் உருவ வழிபாடு சிறப்புறத் தொடங்கியது.

இந்து மதத்தின் எந்தக் கடவுளாயினும் அதன் வடிவத் தோற்றத்திற்கு ஆழமான தத்துவம் இருக்கும். அவ்வகையில் வைணவக் கடவுளான திருமாலின் தோற்றத்திற்கும் ஆழமான தத்துவம் இருக்கிறது.

விஷ்ணுவின் கையில் உள்ள பாஞ்சஜன்யம் எனும் சங்கினை முழக்கி உலகத்தினைப் படைப்பதும், சுதர்சனம் எனும் சக்கரத்தினால் தீமைகளை அழிப்பதும், உலக உயிர்களைத் தன் கரங்கள் கொண்டு காப்பதும், அவர் கையிலுள்ள கதாயுதம் மனித குலத்தின் இன்னல்களைத் தடுப்பதும், நந்தகம் எனும் வாள் அஞ்ஞானத்தை அழிப்பதும், சாரங்கம் எனும் வில் அடியவர்களைப் பாதுகாப்பதும் இதன் அடிப்படையில்தான் என்பது வைணவத் தத்துவத்தின் உருவ வழிபாட்டுச் சிந்தனையாகக் கொள்ளப்படுகிறது.

வழிபாடு – சொற்பொருள் விளக்கம்

வழிபாடு எனும் சொல்லிற்கு **“வழியிற் செல்லுல், பின்பற்றுதல், வணக்கம், பூசை, வழக்கம், சமயக் கோட்பாடு” (தமிழ்ப் பேரகராதி, தொகுதி–6, ப.3545)** என்று தமிழ்ப் பேரகராதி விளக்கம் தருகிறது.

இதிலிருந்து இறைவனை அடைய அவனது வழியில் செல்லுதல், இறைவனின் கருத்துக்களைப் பின்பற்றுதல், இறைவனுக்கு மரியாதை செய்தல், இறைவனுக்குப் பூசனை செய்தல், தொன்றுதொட்ட காலத்திலிருந்தே நடைமுறைப்படுத்தப்பட்ட பழக்கத்தினை வழக்கமாகக் கொள்ளுதல், ஒவ்வொரு சமயத்திற்கும் உண்டான கோட்பாடுகளுள் மிக முக்கியமானதாகக் கொள்ளுதல் என்றெல்லாம் வழிபாட்டு நெறியினைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வித வழிபாட்டு நெறிகளுள் அனைவராலும் எளிதில் பின்பற்றப்படுவது இறைவனுக்குப் பூசனை செய்வதாகும். பூசனையின் சிறப்பு குறித்து வள்ளுவர், **"சிறப்போடு பூசனை" (குறள், 18)** என்று கூறுவதிலிருந்து அறியலாம். இந்த பூசனை என்ற சொல்லைத்தான் 'பூசை' என்று வழிபாட்டு நெறி குறிக்கிறது. இத்தகு பூசைகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது இறைவனுக்கு மலர்கள் கொண்டு செய்யப்படும் பூசையாகும். இறைவனை மலர்தூவி வழிபடுதல் என்பது தமிழர்களின் தொன்றுதொட்ட வழக்கமாகும்.

இம்மலர் வழிபாடு குறித்துத் திருவள்ளுவர்,

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" (குறள், 3)

என்று கூறுவதில், 'மலர்மிசை ஏகினான்' என்பது மலர்களால் பூசிக்கப்பட்டவன் இறைவன் என்பதைச் சுட்டுவதைக் காணலாம். அவ்வாறு இறைவனை மலர்களால் வழிபாடு செய்பவர்கள் இந்நிலவுலகில் நல்வளத்தையும், நீண்ட ஆயுளையும் பெறுவர் என்ற வழிபாட்டு நெறியானது மிகச்சிறந்த நிலையாகவே கருதப்பட்டிருக்கிறது என்ற உண்மை புலனாகிறது. இதனையே,

"நாழிகொண்ட நறுங் முல்லை
அரும்பு அவிழ் அலரி உய்" (முல்லைப்பாட்டு, அடி எண். 8)

என்ற முல்லைப்பாட்டு வரிகளாலும்,

"பூப்பலி விட்ட கடவுளை" (கலித்தொகை, பா.93)

என்ற கலித்தொகை வரியிலும் அறிய முடிகிறது. இதுமட்டுமின்றி மலர்களை இறைவன் மிகவும் விரும்புவதும் இதற்கு ஒரு காரணம் என்பதைப் பரிபாடல்,

"நாறிணர்த் இழாயோ னல்கி னல்லதை" (பரிபாடல், பா.15, அடிஎண். 15)

"வராவணர் கயந்தலைத் தம்முன் மார்பின்
மராமலர்த் தாரின் மாண்வரத் தோன்றி" (பரிபாடல், பா.15, அடிஎண்கள். 19–20)

என்றெல்லாம் எடுத்துரைப்பதிலிருந்து உணரமுடிகிறது. இவ்வாறு இறை வழிபாட்டில் மலர்களைக் கொண்டு வழிபடுதல் மிகச் சிறப்புடைய வழிபாட்டு நெறி என்பதை ந.சுப்புரெட்டியார்,

"அறிந்து ஐந்தும் உள்ளடக்கி
ஆய்மலர் கொண்டு" (இரண்., திருவந்., 6)

என்ற பூதத்தாழ்வாரின் பாசுரத்தினையும்,

“ஆர்வம் என்பதோர் பூஇட வல்லார்க்கு

அரவ தண்டத்தில் உய்யதும் ஆமே” (பெரியாழ்., திரு., 4:5:3)

என்ற பெரியாழ்வாரின் பாசுரத்தினையும் எடுத்துக்காட்டி விளக்குகிறார் (வைணவமும் தமிழும், ப.264–265). இதிலிருந்து பக்திநெறியில் சிறந்ததாகக் கருதப்படும் வழிபாடுகளுள் மலர் வழிபாடு மிக முக்கியமானது என்பதை உணர்த்துகிறார்.

இவ்வாறு இறைவனுக்குச் செய்யப்படும் வழிபாடுகள் அனைத்தும் நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடு என்ற இருவகைக்குள் அடங்கும்.

நாள் வழிபாடு

திருத்தலங்களில் இறைவனுக்கு நாள்தோறும் தவறாமல் நடைபெறுவது நாள் வழிபாடாகும். இதனை ‘நித்தியம்’ என்று குறிப்பிடுவர். இந்த நித்திய வழிபாடானது திருக்கோயில்களின் வருவாய்க்கேற்ப எட்டு காலம், ஆறுகாலம், நான்கு காலம், இரண்டு காலம், ஒரே காலம் என்ற வகையில் நாள்தோறும் நடைபெறும்.

சிறப்பு வழிபாடு

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் சிறப்பு வழிபாடுகள் எனப்படுகிறது. இதனை ‘நைமித்தியம்’ என்பர். இத்தகு சிறப்பு வழிபாடுகளுக்கு சங்க காலத்திலிருந்தே மிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதை,

“ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து

மாயிறுத் திங்கள் மனுநிரை ஆதிரை

விரிநூல் அந்தணர் விழவு தொடக்கம்” (பரிபாடல், பா.11)

என்ற பரிபாடல் அடிகள் குறிப்பிடுவதிலிருந்து திருவிழாக்கள் நடத்துவது நல்ல காரியங்களுக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்கிற செயலென்பதையும், இறைவனோடு தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமெனில் மனத்தூய்மை மிக அவசியம் என்பதையும், அதன் பொருட்டே திருவிழாக்கள் எனும் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன என்பது புலனாகிறது.

வழிபாட்டின் பயன்

இறைவனை உள்ளன்போடு நினைந்துருகி வழிபாடு செய்வதன் மூலம் அடைய முடியாத பொருள் ஒன்றுமில்லை என்பதைத் திருமூலர்,

“எய்தி வழிப்படில் எய்தா தனமில்லை

எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமும்

எய்தி வழிப்படில் என்சித்தி உண்டாகும்

எய்தி வழிப்படில் எய்திடும் முக்தியே” (திருமந்திரம், 1006)

என்று எடுத்துரைக்கிறார். இதிலிருந்து மனம் எய்த வேண்டிய நிலையினை அடைவதும், செல்வ வளங்களும், அறிவு வளங்களும் பெறுவதோடு உயிரானது இவ்வுடலை விட்டு பிரியும் முன்னரே ஞானநிலையான முக்தி நிலையினை அடைவதற்கும் வழிபாடானது துணை செய்கின்றது என்பது புலனாகிறது.

இது மட்டுமின்றி வழிபாடு என்பது அக இருளால் ஆன அழுக்குகளை நீக்கி மனதினை தூய்மைப்படுத்துவதற்கும், மன அமைதிக்காகவும் செய்யப்படுகின்றது.

இவ்வுலகில் வாழும்வரை எவ்வித மனத்துன்பமும் இன்றி வாழ்ந்து, இறுதியில் இறைநிலை எனப்படும் முக்தி நிலையினை அடைவதற்கு இறைவழிபாடு எனும் தூய்மையான வழிபாடே மிக முக்கியமாகின்றது. இத்தகைய வழிபாட்டின் வளர்ச்சி நிலைகள் பற்றிக் குறிப்பிடும் முனைவர் நாகப்பா நாச்சியப்பன், **"வழிபாட்டு வளர்ச்சியை வைத்துச் சங்க காலத்தை அச்சநெறிக் காலம் என்றும், இடைக்காலத்தை அன்பு நெறி காலம் என்றும், பிற்காலத்தை அறிவு நெறிக்காலம் என்றும் கூறுவர்" (திருக்கோயில் வழிபாடு, ப.29)** என்பதோடு சமயப் பெரியோர்கள் இத்தகைய வழிபாட்டு வளர்ச்சியை அருள்நெறிக்காலம் என்று வழங்குவதையும் வலியுறுத்துகிறார்.

இவ்வாறு வளர்ச்சியடைந்த வழிபாட்டு நெறியினை விளக்கும் முனைவர் நாகப்பா நாச்சியப்பன், **"வழிபாட்டு நெறியினை விளக்க வந்த சமயங்கள் இந்நெறியினைச் செயல்வழி, அறிவு வழி என இருவழிகளாக வகுத்துக் கொண்டன. இறைவழிபாடு எனும் எளிய வழியைக் கூறி உய்யவைப்பது செயல்வழி; தத்துவத்தை எடுத்துக்கூறி மெய்யறிவை உணரவைப்பது அறிவுவழி" (மேலது, ப.29)** என்பார்.

இதனை நன்குணர்ந்த ஆழ்வார் பெருமக்கள் தங்களது திருப்பாசுரங்களால் திருமாலைத் துதி செய்து வழிபட்டு அறிவுத் தூய்மை அடைந்தனர். அவ்வாறு அறிவுத்தூய்மையடைந்த வைணவப் பெரியோர்களால் அன்பு காட்டுதலும், தொண்டு செய்தலும் மிகுதியான அளவில் வலியுறுத்தப்பட்டன.

இதனைக் கருத்தில் கொண்டே வைணவப் பெரியோர்கள் இந்நிலவுலகில் வாழும்வரை மனக்கவலையின்றி வாழ விரும்பினால் திருமாலை வணங்க வேண்டும் என்றும், வேறு எந்த வகையிலும் மனத்துன்பம் போக்கி அமைதியுடன் வாழ முடியாது என்றும், நிலையான இன்பத்துடன் வாழ விரும்பினால், அது பரம்பொருள் எனும் திருமால் வழிபாட்டினால் மட்டுமே சாத்தியமாகும் என்றும் கருதினர்.

சோழ நாட்டுத் திருத்தலங்களின் வழிபாட்டு முறைகள்

வைணவத் திருத்தலங்கள் நூற்றியெட்டில் அதிகளவிலான திருத்தலங்களைக் **(40)** கொண்டிருப்பது சோழ நாடாகும். 'சோழநாடு சோறுடைத்து' என்பதைப் போல 'சோழ நாடு சமயமுடைத்து' என்று கூறுவது சாலப் பொருத்தமாகும்.

அதோடு மட்டுமின்றி ஆழ்வார்கள் மனந்தோய்ந்து உருகியதும் சோழநாட்டுத் திருத்தலங்களில்தான் என்பதை அவர்தம் பாக்களைக் கொண்டு அறியமுடிகிறது. அவர்களின் பாசுரங்களால் மட்டுமின்றி வைணவ சமயம் சோழ நாட்டு வைணவத் திருத்தலங்களில் செழித்தோங்கியது என்பதை முன்னிறுத்தும் விதமாக இத்திருத்தலங்களின் வழிபாட்டு முறைகளும் தனிச்சிறப்பு பெற்றுத் திகழ்வதை பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் நயம்பட எடுத்துரைக்கும் பாங்கு சிறப்பானதாய் உள்ளது.

பொதுவாக, "**வைணவ ஆலயங்களில் இறைவனை வழிபட்ட பின்னர் தீர்த்தம், திருத்துளாய், மஞ்சள், சந்தனம், குங்குமம் முதலான பிரசாதங்களைப் பெற்றுக் கொள்வதோடு ஸ்ரீ சடாரியைத் தலையில் ஏற்றுக்கொண்டால் தான் ஒவ்வொரு விஷ்ணு ஆலயங்களிலும் சிறப்பான வழிபாட்டு அம்சமாக இருக்கின்றன" (திருக்கோயில் அமைப்பும் திருஉருவ அமைதியும்,ப.229)** என்பார் கூற்று வைணவத் தலங்களில் மேற்கொள்ள வேண்டிய வழிபாட்டு நெறிகளைக் குறிப்பிடுகிறது.

திருவரங்கம்

108 வைணவத் திருத்தலங்களில் சிறப்பு பெற்றத் திருத்தலமாகக் கருதப்படும் திருவரங்கம் எனும் திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்பு பற்றி எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் இத்திருக்கோயிலினுள் தென்திசை பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருக்கோயிலினுள் தென்திசை நோக்கி, உறங்குவான் போல் யோகு செய்யும் அரங்கநாதனுக்கு நேராக உள்ள சித்திரை வீதியின் நான்கு திக்குகளிலும் உள்ள கோபுரங்களில் கிழக்கிலுள்ள மிக முக்கியமான தாமோதரன் கோபுர வாயிலுக்குள் காணப்பெறும் கண்ண பெருமானின் சந்நிதியில் நடைபெறும் வழிபாடுகள் தனிச்சிறப்பு பெற்றதென்கிறார்.

இச் சந்நிதியில் "**தேள் முதலிய நச்சுயிரிகளின் துன்ப நிவர்த்திக்காக மக்கள் வெண்ணெய் கொண்டுபோய் இப்பெருமானுக்குச் சாத்தும் வழிபாடு மிகவும் புகழுடையது. அத்துடன் இச்சந்நிதி வீதியில் பங்குனியில் நடைபெறும் பெருவிழாவிலும், சித்திரைத் திருநாளிலும் அரங்கநாதனை தேரிலும், பல்லக்கிலும், வீதி உலா எழுந்தருளச் செய்யும் வழிபாடும் தனித்தன்மை வாய்ந்ததாய் அமைகிறது" (சோழ நாட்., திருப்., 1, ப.18)** என்கிறார். இதைப் போன்றே ஆறாவது வீதியில் உள்ள (திருவிக்கிரமன் வீதி) அழகிய மணவாளப் பெருமாளுக்கு தை மாதம் நடைபெறும் திருத்தேரோட்டமும் மாசி மாதம் நடைபெறும் தெப்பத் திருவிழாவும் சிறப்பு வாய்ந்தது என்று பதிவு செய்துள்ளார். "**அரங்க மண்டபத்தின் வடகோயிலான அரங்கநாதனுடைய மகாபலிபீடத்தில் திருக்கார்த்திகை நாளன்று சொக்கப்பனை என்று ஒரு தென்னை மரத்துண்டை நட்டு அதைச் சுற்றி பனை ஓலைகள் கட்டி அரங்கநாதனுக்கு ஆரத்தி செய்து பந்தத்தினால் தீயை வைத்து கார்த்திகை தீபவிழா கொண்டாடப்படுவது பெருஞ்சிறப்பு பெற்றது" (மேலது, ப. 19)** என்பதையும் எடுத்துரைக்கிறார். மேலும், "**அகளங்கன் திருவீதியான ஐந்தாம் திருவீதியில் மூலத்திருமேனி முன் பக்கம் சக்கரத்தாழ்வார் எட்டுக் கரங்களுடன் சுதர்சன சக்கரமாக அருள் பாவிப்பதால் இவர் அனைத்துத் துன்பங்களையும் களையக் கூடியவர் என்ற கருத்து மக்களிடையே பெரும் நம்பிக்கையினை ஏற்படுத்துவதையும், இவருக்குச் செய்யப்படும் சிறப்பு வழிபாடே சனிக்கிழமை தோறும் மக்கள் நெய், எண்ணெய் விளக்கேற்றி இவரை வழிபடுவதுதான்" (சோழ நாட்., திருப்., 1, ப.20)** என்ற சிறப்பினையும் பதிவு செய்திருக்கிறார். மேலும் இச் சந்நிதியின் வடமேற்கு மூலையில் உள்ள படிதாண்டாப் பத்தினியான சீரங்கநாச்சியாருக்கு இவரது சந்நிதியிலேயே திருவிழாக்களும் வழிபாடுகளும் நடைபெறுவது தனிச்சிறப்பென்றும் "**இவருக்கு நடைபெறும்**

வழிபாடுகளில் நவராத்திரி ஆண்டு விழாவும், பங்குனி உத்தரத்தன்று நடைபெறும் ஊடல் உற்சவமும் (பிரணயகலக உற்சவம்) மட்டையடித் திருவிழா என்றும் அழைக்கப்படும் வழிபாடுகளும் மிகவும் புகழ்பெற்றது" (மேலது, ப.20) என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

அதோடு இத்திருத்தலத்தில் ஆதியில் சீரங்கநாதன் வசந்த மண்டபமாக இருந்த இடத்தில் அரங்கநாதனின் கட்டளைப்படி அவ்வசந்த மண்டபத்தில் அமையப் பெற்றிருக்கும் இராமாநுசரின் சந்நிதியில் நாள்தோறும் நடைபெறும் திராவிட வேத பாராயண வழிபாடுகள் தனிச்சிறப்பு பெற்றிருப்பதோடு இந்திருக்கோயில் திருவாயிலின் மேற்புறமுள்ள திருபவித்திர மண்டபத்தில் உள்ள பெருமாளுக்கு ஆண்டுதோறும் ஆவணியில் நடைபெறும் பவித்திர உற்சவ வழிபாடுகள், திருக்கோயிலின் கிழக்கிலிருக்கும் துவஜாரோகன மண்டபத்தின் வடமேற்கு மூலையிலுள்ள ஊஞ்சல் மண்டபத்தில் அமைந்துள்ள பெருமாளுக்கு ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் நடைபெறும் ஊஞ்சல் உற்சவ வழிபாடுகள் ஆகியவை தனிச்சிறப்புடன் நடைபெறுகின்றன என்று கூறுவதோடு **"திருக்கோயிலின் இரண்டாம் பிரகாரமாகிய இராஜமகேந்திர சோழன் திருவீதியில் நடைபெறும் ஐந்து உற்சவ வழிபாடுகள், மார்கழி மாதம் முதல் ஒன்பது நாட்கள் நடைபெறும் இராப்பத்து உற்சவ வாழிபாடுகள், 6 முதல் 9 நாட்கள் நடைபெறும் சித்திரைக் கோடைத் திருவிழா வழிபாடுகள், அர்ச்சுன மண்டபத்தில் நடைபெறும் பகல்பத்து திருவிழாவில் பத்தாம் நாள் மாலை பெருமாள் மோகனவதாரத்துடன் புறப்படும்போது செய்யப்பெறும் வழிபாடுகள் ஆகியவை மிகவும் பிரசித்தி பெற்றவை" (மேலது, பக். 22–23)** என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

திருஉறையூர்

திருஉறையூர் திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சோழ நாட்டின் தலைநகராக இருந்த சிறப்பு பெற்றது இந்த உறையூரென்றும் இதனை ஆண்ட சோழ மன்னனான நந்த சோழன் தான் அருட்பிரசாதமாகப் பெற்ற தன் மகள் கமலவள்ளியை அரங்கநாதனுக்குப் பல சீர்வரிசைகளுடன் திருமணம் செய்து கொடுத்து நாச்சியாருக்குத் திருக்கோயிலினையும் கட்டினான். அதனாலேயே இத்திருத்தலம் "நாச்சியார் கோயில்" என்று குறிப்பிடப்படுவதையும் குறிப்பிடுகிறார். அத்தகைய சிறப்புமிக்க இந்நாச்சியார் கோயிலின் சிறப்பு வழிபாடாக மக்கள் கொண்டாடுவது பங்குனித் திங்கள் ரேவதி நட்சத்திரம் தொடங்கி பத்து நாட்கள் நடைபெறும் வழிபாடுகளும், **"பங்குனி உத்தரத்தன்று நடைபெறும் அரங்கநாதன் வழிபாடுகளும், கமலவள்ளித் தாயாருடன் அரங்கநாதன் சேர்ந்து காட்சி தரும் நித்திய பூசை வழிபாடுகளும் புகழ்பெற்றவை" (சோழ நாட்., திருப்., 1, ப.33)** என எடுத்துரைக்கிறார்.

திருக்கரம்பனூர்

கதம்பவனம் என்றழைக்கப்படுகிற இத்திருத்தலத்தின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருத்தலத்தின் மூலவரான புருடோத்தமனுக்கும் பூர்வதேவி தாயாருக்கும் நடைபெறும் வழிபாடுகள் மட்டுமின்றி திருக்கோயிலின் மேற்குப்புறத்திலுள்ள சிவபெருமான்,

பிரிதொரு இடத்திலுள்ள நான்முகன் ஆகியோருக்காகவும் இங்கு மும்மூர்த்தி வழிபாடுகள் நடைபெறுகின்றதென்பதனை "இங்கு மும்மூர்த்தி வழிபாடு நடைபெறுகின்றது" **(மேலது, ப.29)** என்று எடுத்துரைப்பதோடு இவர்களைத் தவிர இத்திருக் கோயிலினுள் வேணுகோபாலன், இராமர், வரதராசப் பெருமாள், புருடோத்தமன், பூர்ணவல்லித் தாயார், அனுமன், சனி பகவான், தசரத லிங்கம், பிட்சாடன மூர்த்தி, சவுந்திர பார்வதி, நடராசர், கலைமகள் ஆகியோருக்குத் தனித்தனி சந்நிதிகள் அமையப்பெற்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறுவதையும் சுட்டிக்காட்டுகிறார். அதோடு ஆவணியிலும் சித்திரையிலும் நடைபெறும் திருவிழாக்களும் தனிச்சிறப்பு பெற்றவை என்கிறார்.

இக்கதம்பவனம் குறித்து விளக்கம் தரும் முனைவர் கு.முத்துரசன் **"இத்திருத்தலத்தில் சேவை சாதிக்கும் எம்பெருமான் கதம்ப முனிவருக்குச் சேவை சாதித்தமையால் கதம்பனூர் எனப்பெயர் பெற்றது. அப்பெயரே நாளடைவில் கரம்பனூர் ஆயிற்று" (பக்தி பரவசமூட்டும் இந்தியத் திருத்தலங்கள், ப.74)** என்று கூறுவதிலிருந்து கரம்பனூரைக் 'கதம்பவனம்' என்று கூறுவதும் சாலப்பொருந்தும் என்பதும் தெளிவாகிறது.

இத்தலம் வைணவ திவ்விய தேசங்களில் ஒன்றாகத் திகழ்ந்தாலும் சிவபெருமான், திருமால், நான்முகன் ஆகிய மூவருக்கும் இங்குத் தனிச்சன்னதிகள் அமைக்கப்பெற்று நாள்தோறும் நித்திய வழிபாடுகள் நடைபெறுவது இத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்புகளுள் தலையாயது என்பதை சுப்புரெட்டியாரின் கூற்று வழி தெளிவாக உணரமுடிகின்றது. இங்கு நடைபெறும் வழிபாடானது மக்களின் சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

திருவிண்ணகர்

இத்திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில் **"இத்திருத்தலத்து எம்பெருமானை துளசி இதழ்களால் அர்ச்சுனை செய்பவர் ஒவ்வோர் இதழுக்கும் அசுவமேத வேள்வியின் பயன்பெறுவர் என்கிறார். அதோடு இத்திருத்தலத்திற்கு நடந்து சென்று வழிபாடு செய்பவர்கள் ஒவ்வொரு அடிக்கும் மிக்க புண்ணியத்தையும், பசுவின் குளம்பளவு நிலத்தை இவ்வெம்பெருமானுக்குக் காணிக்கையாகத் தருபவர்கள் வீடுபேறு அடையும் பேற்றினையும் பெறுவர் என்பதனையும் எடுத்துரைக்கிறார். மேலும் இத்திருத்தலத்திற்கு சந்தனம், குங்குமம், மலர்கள் இவற்றை வழங்குவோர் பார்ப்பனரைக் கொன்ற பாவங்களிலிருந்து விடுபடுவர் என்பதனையும் தூபக்கால், தீபக்கால், அர்ச்சிய பாத்திரம், திருமஞ்சனப் பாத்திரம், வெண்கல மணி, ஆடை முதலியன வழங்குவோர் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர் என்பதனையும் எடுத்துக் கூறுவதோடு இத்திருத்தலத்து எம்பெருமானுக்கு ஏதாவது உற்சவத்தை நடத்தி வைப்போர் மக்கட் செல்வத்தை அடைவர்" (சோழ நாட்., திருப்., 1, ப.87)** என்பதோடு பங்குனிச் சிரவனத்தன்று இத்திருக்கோயில் திருக்குளத்தில் தீர்த்த நீராடி, தானங்களைச் செய்து மறையோர் ஐவருக்குத் திருக்கன்னலமுது (பாயாசம்) வழங்கி எம்பெருமானை வணங்கினால் எவ்வித பாதகங்களும் நேராது என்ற வழிபாட்டு நம்பிக்கைகள் இன்றளவும் வழக்கில்

இருப்பதனையும் சிறப்பான வழிபாட்டு நம்பிக்கைகள் என்கிறார். அதோடு உப்பும் மிளகும் கலந்த கலவையைக் கொண்டு சென்று இத்தலத்தில் அமைந்துள்ள கருடன் சந்நிதியின் முன்புறமாக உள்ள இரண்டு திருவடிகளில் சேர்ப்பதினால் எவ்வித சருமநோயும் அணுகாது என்ற வழிபாட்டு நடைமுறையும், ஐப்பசி மாதத்தில் திருவோணத்தில் தொடங்கி பத்து நாட்கள் நடைபெறும் திருக்கல்யாண உற்சவ வழிபாடும் சிறப்புபெற்ற வழிபாடாக வழங்கப்பட்டு வருவதோடு இத்திருத்தலத்தின் வேதாந்த தேசிகரின் சந்நிதியில் வடகலை (வைகாசன ஆகம முறைப்படி) வழிபாடுகளும், சிறப்பான உற்சவங்களும் நடைபெறுவது மிகச் சிறந்த வழிபாட்டு அமைப்பாக அமைந்திருப்பதனையும் சுட்டிக் காட்டுகிறார்.

திருவெள்ளியங்குடி

இத்திருத்தலத்து வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் வைகானச ஆகம முறைப்படி வழிபாடுகள் நடைபெறுவதனையும் இத்திருத்தலத்து எம்பெருமானை சேவித்து விட்டால் 108 எம்பெருமான்களையும் சேவித்த பலன் கிட்டும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு எடுத்துக்காட்டி வழிபடச் செய்கிறார். மேலும் இத்திருத்தலத்தில் பல மகான்களும், அகோபில மடத்து சீயர்களும், ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகளும், ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளும் பல நாட்கள் தங்கி சாதுர்மாஸ்யம், வியாக பூசை போன்ற வழிபாடுகளைப் பிறழாமல் செய்திருப்பதனையும் எடுத்துரைத்து இத்தலத்தில் உள்ள வழிபாட்டுச் சிறப்புகளுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்.

திருக்கண்ண மங்கை

இத்திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்பு குறித்துக் குறிப்பிடுகையில் எம்பெருமானைத் திருமகள் ஆலிங்கனம் செய்த தலமாதலால் இத்தலம் திருவாலி என்ற திருநாமத்தோடு வழங்கப் பெறுவதோடு, திருமங்கை மன்னனான திருமங்கையாழ்வார் அவதரித்த குறையலூர் திருத்தலம் ஆலிநகருக்கு அருகில் உள்ளதால் இத்தலத்தின் வழிபாடுகள் தனிச்சிறப்புடன் திகழ்கின்றன என்பதனையும் எடுத்துரைக்கிறார். அதோடு ஆண்டுதோறும் பங்குனி உத்தரத்தன்று நடைபெறும் 'வேடுபறி உற்சவம்' எனும் வழிபாட்டு விழாவானது, திருமங்கை மன்னன் வேடனாக நின்று வழிப்பறி செய்து பெற்ற செல்வத்தினைக் கொண்டு பாகவதர்கட்கு தகுதியாராதனம் செய்ததை நினைவூட்டும் வகையில் திருநகரிலிருந்து அருகிலுள்ள தேவராசபுரம் எனும் ஊரிலுள்ள ஒரு பெரிய மைதானத்தில் நடைபெறும் புகழ்மிக்க விழாவாக நடைபெறுவதைப் பதிவு செய்திருக்கிறார்.

திருந்தேவனார்த் தொகை

இத்திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுகையில் **"இத்திருத்தலத்திற்குத் திருமணமாகாதவர்கள் வந்து வழிபாடு செய்தால் திருமணம் செய்துகொள்ளும் வாய்ப்பு பெறுவர் என்ற வழிபாட்டு நம்பிக்கையும் அதோடு மகப்பேறு இல்லாதவர்கள் இத்திருத்தலத்தில் வந்து வழிபாடு செய்வதால் மக்கட்செல்வம் பெற்று**

மகிழ்வுறுவர்" (சோழ நாட்., திருப்., பகுதி–2, ப.138) என்ற வழிபாட்டு முறை நம்பிக்கையும் மிகவும் பிரசித்தி பெற்றவை என்பதனை எடுத்துரைக்கிறார்.

பாண்டி நாட்டுத் திருத்தலங்களின் வழிபாட்டுச் சிறப்புகள்

தமிழுக்குத் தனிப்பெருமை சேர்ந்த பாண்டியநாடு வைணவ சமயத்தினை வளர்த்ததிலும் தனிப்புகழ் சேர்த்திருப்பதனை வலியுறுத்தும் பேராசிரியர் பாண்டி நாட்டு வைணவத் திருத்தலங்களின் சிறப்பிற்கு ஏற்றவாறு அதன் வழிபாட்டு முறைகளும் தனிப்பெறும் சிறப்பு பெற்றவை என்கிறார்.

திருக்கோட்டியூர்

திருக்கோட்டியூர் எனும் திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுகையில் கி.பி. பத்தாம் நூற்றாண்டிலேயே புகழ்பெற்ற திருத்தலமாய் இருந்ததை மெய்ப்பிக்கும் வகையில் **"நாள்தோறும் ஆறுகால பூசைகள் நடைபெறுவது சிறந்த வழிபாடாக அமைந்திருக்கிறது" (பாண்டி., நாட்., திருப்., ப.16)** என்பதனை எடுத்துரைக்கிறார்.

திருமாலிருஞ்சோலை

திருமாலிருஞ்சோலை எனும் திருத்தலத்தின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருக்கோயிலின் காவல் தெய்வமான பதினெட்டாம்படி கருப்பருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுவதனை எடுத்துரைக்கிறார். இத்தலத்தின் காவல் தெய்வமாக விளங்கும் கருப்பண்ணசாமி சக்தி வாய்ந்த தர்மதேவனின் பிரதிநிதியாகச் செயல்படுவதாகப் பேராசிரியர் சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ளார். **"தினந்தோறும் கோயில் நடை திறக்கும்போதும், மூடப்படும் போதும் இக்கருப்பண்ணசாமியின் முன் வைக்கப்பட்ட திறவுகோலை எடுத்து சென்று நடைதிறப்பது இன்றும் வழக்கத்தில் உள்ளது" (108 வைணவத் திருப்பதிகள், ப.1)** என்னும் கூற்று அவர்தம் கருத்திற்கு அரணாக அமைந்துள்ளது. இந்தக் கருப்பண்ணசாமியின் சந்நிதி முன்பு யாரும் பொய் சொல்லத்துணிய மாட்டார்களென்றும் இவர் முன்பு சத்தியம் செய்து வழிபடும் வழிபாட்டு மரபுகள் இன்றளவும் நடைமுறையில் இருப்பதனை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார், **"அழகர் மீனாட்சி திருமணத்திற்காகப் புறப்படும்போதும், திரும்பும்போதும், இக்கருப்பண்ண சாமியிடம் படித்துக் காட்டும் வழக்கம் இன்றும் நடைமுறையிலிருப்பது நம்முடைய பழக்க வழக்கங்களையெல்லாம் எம்பெருமானின் பழக்க வழக்கங்களாகக் கருதும் மரபினை மக்கள் ஏற்படுத்தியுள்ளனர்" (பாண்டி., நாட்., திருப்., ப.100)** எடுத்துரைக்கிறார். மேலும் இவ்வழகர் மலை எம்பெருமான் சித்திராபவுர்ணமி அன்று வைகையாற்றில் இறங்கி வண்டியூர் வரை சென்று தேனூர் மண்டபத்தில் தங்கித் திரும்பும்போது நடைபெறும் பூப்பல்லக்கு சேவை சாத்தப்படும் வழிபாடு சிறப்புப்பெற்ற தன்மையாக அமைந்திருப்பதனையும் எடுத்துரைக்கிறார்.

திருப்புல்லாணி

பகவத் கீதையில் கண்ணன் விருட்சங்களில் நான் அரச மரமாக உள்ளேன் என்று கூறியிருப்பதனை வலியுறுத்தும் விதமாக இத்திருத்தலத்தில் திருமால் அரசமரமாக அவதரித்துள்ளதாகக் கருதுவர் வைணவச் சான்றோர். இதனைப் பற்றிக் குறிப்பிடும் முனைவர்

சிவ.சிற்றம்பலம் **"திருப்புல்லாணி என்னும் திவ்விய தேசத்தில் உள்ள அரசமரத்தை வலம் வருவோர் அனைத்து நோய்களும் தீர்ந்து பெறும்பயனை அடைவார்கள்" (வைஷ்ணவத் தொகையகராதியும் திருத்தலங்களும், ப.115)** என்று எடுத்துரைக்கிறார். ந.சுப்புரெட்டியார் திருப்புல்லாணி எனும் திருத்தலத்தின் வழிபட்டுச் சிறப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில் **"சேதுபதி மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இக்கோயில் திருவிழாக்களும், வழிபாடுகளும் சிறப்பாக நடைபெற இருப்பத்தேழு கிராமங்களைத் தானமாக வழங்கியுள்ளதினால் இன்றளவும் இத்திருத்தலத்தில் விழாக்களும், வழிபாடுகளும் வெகு விமரிசையாகத் திகழ்கிறது" (பாண்டி., நாட்., திருப்., ப.52)** என்பதனை நுணுகி ஆய்ந்துரைத்துள்ளார்.

மேலும் இத்திருத்தலத்திலுள்ள **"ஷேமதீர்த்தம், சக்கரதீர்த்தம் புகழ் பெற்றவை; எல்லாப் பாவங்களையும் போக்கவல்லவை" (மேலது, ப. 51)** என்பதனையும் இத்திருத்தலத்தின் தல விருட்சமாக வழங்கப்பட்டு வரும் 'அசுவத்த விருட்சம்' எனும் அரசமரத்தின் சிறப்பும் தனிப்புகழ் பெற்றிருக்கும் பாங்கினையும் சுட்டிக் காட்டுகிறார்.

இவை மட்டுமின்றி **"இத்திருத்தலத்தில் இரவில் எம்பெருமானுக்குப் படைக்கப்பெறும் திருக்கன்னலமுதான பால்பாயாசம் மிக்க சுவையுடையது. பகலில் எம்பெருமாளைச் சேவிக்க வரும் அடியார்கள் நினைவாக அர்ச்சகரைக் கேட்டால் அவரும் இதற்காகவே எடுத்து வைத்திருக்கும் திருக்கன்னலமுதினைத் தருவார்" (பாண்டி., நாட்., திருப்., ப.52)** என்று குறிப்பிடுவதிலிருந்து வைணவத் திருத்தலங்களில் ஏனையத் திருத்தவங்களைவிட திருப்புல்லாணித் திருத்தலத்தின் பிரசாதம் மிக சுவைமிக்கதாக இருக்கும் சிறப்பு புலப்படுகிறது.

திருவில்லிப்புத்தூர்

திருவில்லிப்புத்தூர் எனும் திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருத்தலத்தில் பங்குனி உத்திரத்தன்று நடைபெறும் ஆண்டாள் திருமணம் மிகச் சிறப்பு வாய்ந்த திருவிழாவாக ஆண்டுதோறும் நடைபெறுவதும் அத்திருவிழாவின் போது 'பெரிய தேரோட்ட வழிபாடு' மிகச் சிறப்பு வாய்ந்த வழிபாடாக அமைந்திருப்பதனையும் எடுத்துரைக்கிறார்.

திருப்பேரெயில்

திருப்பேரெயில் எனும் திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில், **"நான் மறையாளரும் வேள்வி ஓவா திருப்பேரெயில்" (திருவாய், 7:3:6)** என்ற பாசுரத்திற்கேற்ப இத் திருத்தலத்தில் நாள்தோறும் நடைபெறும் விழாக்கட்கும், திங்கள் தோறும் நடைபெறும் விழாக்கட்கும், ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கட்கும் குறைவில்லை என்று கூறுகிறார். அதோடு சிறுவர்கள் தெருவினையே ஆடுகளனாகப் பயன்படுத்தி ஏதாவது ஒரு விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைப் போல இத்திருத்தலத்தில் சிறார்கள் விளையாடும் இடம் கோயிலின் முன்பிருக்கும் சந்நிதித்தெருவாகவே அமைந்திருப்பதனையும் அதனால்தான் நம்மாழ்வார் தனது திருவாய் மொழியில், **"பிள்ளைக் குழாம் விளையாட்டொழியும் அறாத்திருப்பேரெயில்" (திருவாய்மொழி, 7:3:1)** என்று சிறப்பித்திருப்பதனையும்

எடுத்துரைக்கிறார். அதோடு இத்திருத்தலத்து எம்பெருமானும் அச்சிறார்கள் ஆடும் விளையாட்டின் சுவையினைக் கண்டு களிக்க ஆசைப்பட்டு, எதிரேயுள்ள பெரிய திருவடி மறைத்தபடி இடையூறாக இருந்ததைக் கண்டு வருந்தி, "கருடா! அப்பால் செல்க" என்று கூறியதால் இன்றளவும் இத்திருத்தலத்தில் கருடன் சந்நிதி சற்று ஒதுக்கமாக அமையப்பெற்று, அங்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது என்கிறார். **"வைணவக் கோயில்களில் இடம்பெறும் கொடிமரத்தில் கருடன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். மேலும் கொடி மரத்தினை அடுத்து கருடனுடைய சிற்பம் அமைக்கப்பட்டிருக்கும். கருடன் திருமாலின் வாகனம் ஆவார். வைணவ சமயத்தில் அனுமனைத் திருவடி என்றும், கருடனைப் பெரிய திருவடி என்றும் வழங்குவது வழக்கம்." (திருக்கோவில் அமைப்பும் திருவுருவ அமைதியும், ப.230)** என்ற முனைவர் அம்பை மணிவண்ணனின் கூற்றும் இங்குநோக்கத்தக்கது. அத்தகைய பெரிய திருவடியாகிய கருடனையே விலகச் செய்த தலம் திருப்பேரெயில் என்று எடுத்துரைத்து அதற்கான காரணத்தை பேராசிரியர் சுவைபட விளக்கியுள்ளார்.

ஸ்ரீ வைகுண்டம்

ஸ்ரீ வைகுண்டம் எனும் திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை சூரியன் ஆண்டுக்கு இருமுறை நேரிடையாக வழிபாடு செய்வது தனிச்சிறப்பு என்கிறார். சித்திரைத் திங்கள் ஆறாம் நாளும், ஐப்பசித் திங்கள் ஆறாம் நாளும் இளங்கதிரவனின் கிரணங்கள் கோபுரவாயில், மண்டபங்கள் இவற்றினையெல்லாம் கடந்து எம்பெருமானின் மேனியைத் தடவி பொன்னிறமாக்கும். அன்றைய நாட்களில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை என எடுத்துரைக்கிறார். அதோடு **"இத்திருத்தலத்தின் அர்த்த மண்டபத்தினைக் கடந்த பிரகாரத்தின் கன்னி மூலையில் அமைந்துள்ள வைகுந்த நாச்சியார் சந்நிதியும், அதற்கு எதிரே அமைந்துள்ள சோரநாத நாச்சியார் சந்நிதியும் தனிச்சிறப்பு பெற்றிருப்பதோடு ஆண்டுதோறும் வைகுண்ட ஏகாதசி அன்று மட்டும் இவ்விரு சந்நிதி வாசல்களும் திறக்கப்பட்டு சிறப்பு வழிபாடுகள் நடைபெறும் வழக்கத்தினைக் கொண்டிருக்கும் தன்மையுடையது" (பாண்டி., நாட்., திருப்., ப.210)** எனும் சிறப்பைப் புலப்படுத்துகிறார். மேலும் **"இச்சந்நிதிகளுக்கு அருகில் உள்ள இலக்குமி நரசிம்மர் சந்நிதியில் நரசிம்மருக்கு வாரந்தோறும் செவ்வாய் இரவில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகள் தனிச் சிறப்பு உடையன" (மேலது, ப.210)** என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

அதோடு இத்திருத்தலத்து வைகுந்த நாதனை 'பால்பாண்டியன்' என்று வழங்குவதற்கான காரணத்தினை விளக்கும் ந.சுப்புரெட்டியார் **"பண்டு நான்முகன் வழிபட்ட வைகுந்த நாதர் பின்னர் சிந்து காலம் எப்படியோ மண்ணுக்குள் மறைந்து விடுகிறார். அப்படி மறைந்திருக்கும் இடத்தில் அக்கம் பக்கங்களில் மேய்ந்து கொண்டிருக்கும் பசுக்கள் பால் சொரியத் தொடங்குகின்றன. ஆநிரைகளை மேய்க்கும் ஆயர்கள் இச்செய்தியை அரசனிடம் தெரிவிக்க, அரசனும் அதிசயத்துடன் அவ்விடம் போந்து ஆட்களை விட்டு மண்ணைத் தோண்டிப் பார்க்கிறான். மண்ணுக்குள் மறைந்திருந்த வைகுந்த நாதர் காணப்படுகின்றார்.**

அவரை வெளிக்கொணர்ந்து அவர் இருந்த இடத்தில் கோயில் எழுப்பி வழிபடுகிறான் அரசன். இது காரணமாகவே இன்றும் இவருக்கு பால் திருமஞ்சனம் நடைபெற்று வருவதை அறிகின்றோம்" (மேலது, ப.204) என்று சுட்டிக்காட்டி **"பாற்கமால் அறிதுயில் கொள்ளுகின்ற பரந்தாமன் பாலபிஷேகம் பெறுவதும், அதனால் பால் பாண்டியன் என்று திருநாமம் சூட்டப் பெறுவதும் இயல்புதானே" (மேலது, ப.204)** என்பதனை வலிவுறுத்துகிறார்.

ஸ்ரீ வரமங்கை

வானமாமலை என்றழைக்கப்படும் "ஸ்ரீவர மங்கை" எனும் திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்பு பற்றிக் குறிப்பிடுகையில் இத் திருத்தலத்தில் நாள்தோறும் நடைபெற்று வரும் எண்ணெய்க் காப்பு திருமஞ்சன வழிபாடே மிகச் சிறப்பு பெற்றது என்பதை எடுத்துரைக்கிறார். **"இச்சிறப்பு வழிபாட்டில் ஆறுபடி நல்லெண்ணையுடன் சிறிதளவு சந்தன எண்ணெய் சேர்த்து காப்பு நடைபெறுகின்றது. அந்தக் காப்பின்படி முதலில் மூலவர் தோத்தாதிரி நாதனுக்கு திருமஞ்சனம் செய்த எண்ணையைச் சேகரம் செய்து அதனை வீரப்ப நாயக்கர் மண்டபத்திற்குப் பின்புறம் உள்ள எண்ணெய்க் கிணற்றில் விட்டு விடுகின்றனர். பக்தர்கள் கால்படி நல்லெண்ணெய் கொணர்ந்தால் அதனை இக்கிணற்றில் ஊற்றி விட்டு அக்கிணற்றிலிருந்து கால்படி எண்ணெய் எடுத்துக்கொள்ளும் வழக்கம் இருக்கிறது. இந்த எண்ணெய் தீராத சரும நோய், குட்டம் (தொழுநோய்) முதலியவைகளையெல்லாம் தீர்க்கும் என்று பக்தர்கள் நம்புவதால் இன்றளவும் வடநாட்டுப் பக்தர்கள் கூட இந்த எண்ணெய்யை அதிகமாக வாங்கிச் செல்லும் பழக்கம் கொண்டிருக்கிறனர்" (பாண்டி., நாட்., திருப்., ப.268)** என்பதை எடுத்துரைக்கிறார். அதோடு இந்த எண்ணெயின் பெருமையினைக் குறுமுனியாகிய அகத்தியர் தன்னுடைய மருத்துவ முறையில் குறிப்பிட்டு இருப்பதனையும் எடுத்துரைக்கிறார்.

தொண்டை நாட்டுத் திருத்தலங்களின் வழிபாட்டுச் சிறப்புகள்

'தொண்டை நாடு சான்றோருடைத்து' என்பதோடு மட்டுமின்றி வைணவ சமயத்தினை வளர்த்ததிலும் தனிச்சிறப்பு பெற்றே திகழ்ந்தது என்பதனை தொண்டைநாட்டு வைணவத் திருத்தலங்களின் வழிபாட்டு முறைகளின் மூலம் அறியலாம் என்பதனை வலியுறுத்துகிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்.

திருக்கச்சி

இத்திருத்திலத்தின் முக்கிய வழிபாடாக **"இத்திருக்கோயிலில் புனித தீர்த்தத்தில் மூழ்கியிருக்கும் அத்திவரதர் 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியில் எடுக்கப்பட்டு காட்சி தரும் வழிபாடாகும்" (வைணவத் தொகையகராதியும் திருத்தலங்களும், ப.85)** என்பார் முனைவர் சிவ.திருச்சிற்றம்பலம். மேலும் **"இத்திருக்கோயிலின் பிரகாரத்தில் உள்ள தங்கப்பல்லியை விஷ்ணு தரிசனம் செய்த பின்னர் தொட்டு வணங்குபவர்களுடைய அனைத்து நோய்களும் விலகுகின்றன" (வைணவத் தொகையகராதியும் திருத்தலங்களும், ப.115)** என்பதனையும் சுட்டிக்காட்டுகிறார்.

திருக்கச்சியின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் இத்திருத்தலத்தில் மூலவரான வரதராசப் பெருமாளுக்கு நடைபெறும் வழிபாட்டு முறைகள் மிகவும் புகழ்பெற்றவை என்கிறார். 'பிரமோத்சவம்' என்றழைக்கப்படும் வரதராசரின் பெருவிழா ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் நடைபெறுமென்றும் அதைவிடப் பெரிய புகழ்பெற்றதான நிகழ்வாய் வைகாசிப் பவுர்ணமியில் நடைபெறும் கருடச் சேவையானது மிகச் சிறப்பானதொரு வழிபாட்டு விழாவாகவும் நடைபெறுவதனையும் எடுத்துரைக்கிறார். அதோடு அவ்வேளையில் அதிகாலையிலேயே வரதராசர் பெரிய திருவடியின் மீது ஏறிக்கொண்டு திருக்கோயிலை விட்டுப் புறப்படும் போது வீதிகளில் கடலெனக் காத்து நிற்கும் மக்கள் வெள்ளம் 'அஞ்சேல்' என்ற வண்ணம் அந்தகிரிநாதன் திருவாழித் திருச்சங்குடன் கருடன்மீது காட்சி தரும் அழகினை வழிபடுவதுதான் இத்திருத்தலத்தின் உயர்ந்த வழிபாடு என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

திருஊரகம்

திருஊரகம் எனும் திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருக்கோயிலின் கருவறையில் திரிவிக்கிரம வடிவில் காட்சிதரும் உலகளந்த பெருமாளுக்கு ஆண்டுதோறும் பெரிய திருவிழா வழிபாடுகள் தைத்திங்களில் நடைபெறும் என்பதனைச் சுட்டிக் காட்டும் பேராசிரியர் வைகுண்ட ஏகாதசியன்று திருப்பாடகம், திருப்பாவள வண்ணம், பச்சை வண்ணம், பரமேச்சுர விண்ணகரம் மற்றும் இத்திருஊரகம் ஆகிய திருத்தலங்களின் எம்பெருமான்கள் அனைவரும் பெரிய திருவடியின் மீது அமர்ந்து நான்கு இராஜவீதிகளிலும் உலாவரும் காட்சியானது தனிச்சிறப்பு பெற்றதென்றும் அவ்வேளையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இத்திருத்தலத்திலுள்ள கங்கை கொண்டான் மண்டபத்தருகே குவிந்து இக்கருடச் சேவைக்காகக் காத்திருத்தலே இத்திருத்தலத்தின் சிறந்த வழிபாடு என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

திருப்புட்குழி

இத்திருத்தலத்தின் புகழ்பெற்ற **"ஜடாயு தீர்த்தத்தில் பெண்கள் நீராடி, வறுத்த பயிரை மடியில் கட்டிக்கொண்டு படுத்திருந்து மறுநாள் அப்பயிறு முளைத்திருக்குமாயின் புத்திரபேறு கிட்டும் என்பது நம்பிக்கை" (வைஷ்ணவத் தொகையகராதியும் திருத்தலங்களும், ப.117)** என்பார் முனைவர் சிவ. திருச்சிற்றம்பலம். இத்தகு சிறப்புமிக்க திருப்புட்குழி எனும் திருத்தலத்தின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் இத்திருத்தலத்தில் தைத்திங்களில் நடைபெறும் தெப்பஉற்சவம் சிறப்பு வாய்ந்ததோடு மட்டுமின்றி பக்தர்களைப் பெரிதும் ஈர்ப்பது என்றும் குறிப்பிடுகிறார். இந்த உற்சவத்தின் போது வழங்கப்படும் 'சடாயு தீர்த்தம்' மிகவும் பிரசித்தமானதென்றும், இத்தீர்த்தம் வழங்கப்படும் புஷ்கரணியின் கரையில் பெரிய உடையாருக்கு உள்ள தனிச்சந்நிதியில் அமாவாசைதோறும் சிறப்பாக நடைபெறும் வழிபாடுகள் பெருஞ்சிறப்பு பெற்றவை என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

திருக்கடிகை

திருக்கடிகை எனும் திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்பு பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருத்தலத்திற்கு மிக அருகில் மணவாள மாமுனிகளின் முக்கிய சீடரான 'எறும்பியப்பா' என்பவர் பிறந்த 'எறும்பி' எனும் உள்ளது என்றும் வரதாச்சாரியார் என்பது இவரது இயற்பெயர். இவர் பிறந்த ஊரைச் சேர்ந்த மக்கள் இவரை 'எறும்பியப்பா' என்று வணங்கினார்களென்றும், அவர் இத்திருத்தல எம்பெருமானுக்கு கைங்கர்யம் புரிந்ததுடன் இவ்வெம்பெருமானுக்காக 'அமிர்த பலாவளி சதகம்' என்ற இனிய நூலையும் அருளியுள்ளார். ஆதலால் இவர் பெயரால் நிறுவப்பெற்றுள்ள 'எறும்பி' அறநிலையத்தின் (Erumbi Special Trust) கட்டளையொன்றால் 'ஹனும ஜெயந்தி' என்ற உற்சவம் பெரிய வழிபாடாகவே நடைபெறுகிறது என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

மேலும் 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொண்டைச்சாரியார் (தொட்டையாச்சாரியார்) என்பவர் வடமொழி நூல்களை அருளியதோடு காஞ்சி வரதராசனிடம் அளவற்ற பக்தி கொண்டவர். இவர் 'வையம் கண்ட கச்சித் திருநாள்' என்று பெரும்புகழ் பெற்ற காஞ்சி தேவப்பெருமாள் வைகாசித் திருநாளுக்கு ஒவ்வோர் ஆண்டும் தவறாது எழுந்தருள்வது வழக்கம். ஒருமுறை திருமேனி பாங்கின்மையால் அங்குச் செல்ல முடியவில்லை. மூன்றாம் திருநாள் காலையில் காஞ்சி எம்பெருமானின் கருட சேவையினை மனதில் எண்ணியவாறு தக்கான் குளக்கரையில் நித்திய கர்மானுஷ்டானம் செய்த வண்ணம் வரதராசனை ஐந்து சுலோகங்கள் கொண்ட 'தேவராஜ பஞ்சகம்' மூலம் துதித்து தம் ஆற்றாமையை வெளியிட்டதால் அவரது பக்தியின் தன்மையில் உருகிய எம்பெருமான் கருடன்மீது அவருக்குக் காட்சி அளித்த வரலாற்று உண்மையினை மெய்ப்பிக்கும் வகையில் இன்றும் காஞ்சி வைகாசித் திருநாள் கருட சேவையின்பொழுது தேவப்பெருமாள் கோபுர வாயிலில் சிறிது தாமதித்து நின்று கற்பூர ஆரத்தி பெறுவது சிறந்த வழிபாடாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது என்று எடுத்துரைக்கிறார்.

அதோடு இத்திருக்கடிகையில் பெரிய மலையிலுள்ள யோக நரசிம்மருக்கும் சின்ன மலையிலுள்ள யோக ஆஞ்சநேயருக்கும் நடைபெறும் வழிபாடுகள் மிகவும் சிறப்பு பெற்றவை என்கிறார். சின்ன மலையிலுள்ள அனுமந்தத் தீர்த்தத்தில் நீராடி யோக ஆஞ்சநேயர் சந்நிதியில் வழிபட்டால் பில்லி, சூனியம், பிசாசம், ஏவல், தீராத நோய், பைத்தியம், மகப்பேறின்மை ஆகியவற்றால் பீடிக்கப்பெற்றவர்கள் சிறிது நேரத்திலேயே அமைதியாக உறங்கி விடுவர். உறங்கி எழுந்த பின்னர் அவர்களுக்கு உண்டான நோயும் தீர்ந்து விடுகிறது. எனவே நாள்தோறும் இங்கு இத்தகைய பல நோயாளிகள் வந்திருந்து இங்குள்ள நரசிம்மதீர்த்தம், அனுமந்த தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் முதலிய திருக்குளங்களில் நீராடி நியமங்களை அனுட்டிப்பது சிறப்பான வழிபாடாக அமைந்திருப்பதனை இன்றும் காணமுடிகிறது என்கிறார். மேலும் இந்த ஆஞ்சநேயருக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகளும், இவர் கோயிலில் படுத்துறங்கினால் நற்கனவுகள் தோன்றி, அவை பலிக்கும் என்ற நம்பிக்கை வழிபாடுகளும் தனிச்சிறப்பு பெற்றவை என்கிறார். அதோடு ஆண்டில் பன்னிரெண்டு மாதங்களிலும்

இத்திருத்தலத்தில் ஏதாவது ஒரு திருவிழா நடைபெற்றுக் கொண்டே இருப்பதும், பெரிய மலையிலுள்ள தாயாருக்கு வெள்ளிக்கிழமை தோறும் பஞ்சாமிர்த திருமஞ்சன வழிபாடும், கார்த்திகை மாதத்தில் நடைபெறும் வழிபாட்டிற்கு மெய்யன்பர்கள் திரளாக வந்த வழிபாடு நடத்துவதும் தனிச்சிறப்பான வழிபாட்டு முறைகளாக இருக்கின்றன என்கிறார்.

திருஇடஎந்தை

திருஇடஎந்தை எனும் திருத்தலத்தின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருக் கோயிலில் நடைபெறும் வழிபாட்டு முறைகளை இங்குள்ள கல்வெட்டுக்கள் எடுத்துரைக்கும் வழிகளிலேயே இன்றளவும் நடைபெற்று வருவதனை எடுத்துக்கூறும் பேராசிரியர் இத்திருத்தலத்தில் பங்குனி உத்திரத்திலிருந்து ஒன்பது நாட்கள் திருவிழா நடைபெறுவதும், ஆவணிச் சதயம் ஈறாக ஏழுநாள் விழா நடைபெறும் நிகழ்வும், கும்ப ஞாயிறு முழுமையும் நடைபெறு வழிபாடுகளும் மிகச் சிறப்பான வழிபாட்டு முறைகளாக இருக்கின்றன என்கிறார்.

திருவல்லிக்கேணி

திருவல்லிக்கேணியின் வழிபாட்டு முறைகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது இத்தலத்து பார்த்தசாரதியைத் தரிசிப்பதற்கு முன்னரே ஏனைய பரிவார தெய்வங்களைத் தரிசித்துவிடும் சிறப்பான வழிபாட்டு முறைகள் பழங்காலத்திலிருந்தே வழிவழியாக நிலவி வந்து இன்றளவும் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்க வழிபாட்டு அமைப்பாக இருக்கிறதென்கிறார்.

திருவயிந்திபுரம்

இத்திருத்தலத்தின் சிறப்பு, வழிபாடுகளாலேயே மேலோங்கி நிற்கின்றது என்பதனை, **"கெடில நதியின் தென்கரையில் உள்ள இத்திவ்யதேசத்தின் தென்பிரகாரத்தில் உள்ள சேஷதீர்த்தக் கிணற்றில் பால், உப்பு, மிளகு ஆகியவற்றினைச் செலுத்தித் தங்கள் பிணிகளுக்கு நிவாரணம் வேண்டிப் பிரார்த்தனைகள் செய்து வருவார்கள்" (வைஷ்ணவத் தொகையகராதியும் திருத்தலங்களும், ப.116)** என்பார் முனைவர் சிவ. திருச்சிற்றம்பலம்.

இவை தவிர திருவயிந்திபுரம் எனும் திருத்தலத்தின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் ஆண்டுதோறும் சித்திரை மாதம் நடைபெறும் பிரமோத்சவம், மார்கழி மாதத்தில் 21 நாட்கள் நடைபெறும் திருமொழி–திருவாய்மொழி திருநாள் வழிபாடுகள் (பகல் பத்து–இராப்பத்து) ஆகியனவும் இவற்றைத் தவிர மிக முக்கியச் சிறப்புடன் நடைபெறும் வழிபாடானது 'மாசி மகம்' என்பதனையும் எடுத்துரைக்கும் பேராசிரியர் இத்திருக்கோயிலுக்கு சுமார் முந்நூறு ஏக்கர் நிலம் சொந்தமாக இருப்பதனால் அதன்மூலம் வரும் வருமானம், பக்தர்கள் வழங்கும் காணிக்கை இவற்றினால் இத்திருக்கோயிலில் அனைத்து வழிபாடுகளும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

மலைநாட்டுத் திருத்தலங்களின் வழிபாட்டு முறைகள்

மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றும் நான்கு பிரிவுகளாக அமைந்திருப்பதனைப் போலவே இத்திருத்தலங்களின் வழிபாட்டு முறைகளும் மிகச் சிறப்பானதாகவே அமைந்திருக்கின்றன என்கிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்.

திருவாட்டாறு

திருவாட்டாறு எனும் திருத்தலத்தின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் **"இத்திருக்கோயிலின் கருவறை, அர்த்த மண்டபம் இவ்விரண்டின் தளங்களும் ஒரே கல்லால் ஆனதினால் அர்த்த மண்டபத்தில் இருந்து பிரசாதம் பெற்றால் கருவறையின் தூய்மை கெட்டுவிடக் கூடும் என்பதால் அர்த்த மண்டபத்திலிருந்து இறங்கி தரையில் நின்றவாறு சந்தனம், திருத்துழாய் போன்ற பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்" (மலை நாட்., திருப்., ப.22)** என்ற வழிபாட்டு நியதி இன்றளவும் கடைபிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தகுந்தது என்கிறார்.

திருவனந்தபுரம்

திருவனந்தபுரம் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருத்தலத்தின் சிறப்பு சாதாரணமானதன்று இத்திருத்தலம் 'அயர்வரும் அமரர்களும்' வந்து அடிமை செய்யும் இடமாதலால் இத்திருவனந்தத் திருத்தலம் அமரர்களின் தலைவனான சேனை முதலியவர்களும் வந்து வழிபடுவதால் நித்திய சூரிகளும் வந்து வழிபட்டு பணிவிடை செய்திருப்பதனை எடுத்துக்காட்டும் பேராசிரியர்,

"அமரராய்த் திரிகின்றார் கட்(கு)
ஆதிசேர் அனந்தபுரத்து
அமரர்கோன் அர்ச்சிக்கின்று; அங் (கு)
அகப்பணி செய்வர் விண்ணோர்
நமர்களோ ! சொல்லக் கேண்மின்;
நாமும் போய் தனுக வேண்டும்" (திருவாய்., 10:2:6)

என்ற நம்மாழ்வாரின் பாசுரத்தினைக் கோடிட்டுக்காட்டி நித்திய சூரிகளும், நான்முகன் முதலிய தேவர்களும், நம்போலியரும் வழிபடுவதற்கென்றே இந்த எம்பெருமான் மூன்று திருவாயில்களை அமைத்துக்கொண்டு சேவை சாதிக்கின்றான் என்கிறார். முக்தர்கள், திருமுகத்திற்கு நேராகவுள்ள வாயிலின் முன்நின்றும்; அரன், அயன் முதலிய தேவர்கள் திருநாபிக்கு நேராகவுள்ள வாயிலின் முன் நின்றும், நம்போன்றவர் எம்பெருமானின் திருவடிக்கு நேரேயுள்ள வாயிலின் முன் நின்றும் வழிபடல் வேண்டும் என்ற அமைப்பில் இன்றளவும் இத்திருத்தலத்தின் கருவறை அமைப்பு மாறாமலிருப்பதையும் எடுத்துக்காட்டும் பேராசிரியர் இத்தலத்தின் வழிபாடுகள் அனைத்தும் தனிச்சிறப்பு வாய்ந்தவைகளாக அமைகின்றன என்பதனை **"இத்திருத்தலத்தில் ஆண்டுக்கு இரண்டு முக்கியமான விழாக்கள் நடைபெறுகின்றன. அதில் ஒன்று 'மீனத் திருநாள்' இது மார்ச்சு – ஏப்ரலில் நடைபெறுவது**

மற்றொன்று துலாத்திருநாள் இது அக்டோபர் – நவம்பரில் நடைபெறுவது. இவ்விழாக்களின்போது இறுதி நாளன்று எம்பெருமான் பத்மநராயணரை 'சங்கு முகம்' என்ற கடற்கரைக்குக் கொண்டு சென்று கடல்நீராட்டி ஊர்வலமாகக் கொண்டு செல்வதை 'ஆராட்டு' என்று அப்பகுதி மக்கள் வழங்கி வருவது வழிபாட்டின் உச்சகட்ட நிகழ்வாக நடைபெறுதோடு இவ்விழாவானது ஆயிரக்கணக்கான மக்களை ஈர்க்கும் விதமாய் அமைந்துள்ளது. மார்த்தாண்ட மன்னரால் ஆதியில் தொடங்கப்பெற்ற "பத்ரதீபம்" என்ற திருவிழா இன்றும் ஆண்டிற்கு இருமுறை ஒன்று மிதுனத்திலும் (சூன்–சூலை) மற்றொன்று தனுவிலும் (டிசம்பர் – சனவரி) நடைபெற்று வருகிறது. அதோடு மட்டுமின்றி ஆண்டுக்கொருமுறை நடைபெறும் முரஜயம் என்ற வழிபாட்டு முறையும் இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பு" (மலை நாட்., திருப்., பக்.50–51) என்று கூறுவதோடு இவ்வழிபாட்டு நடைமுறைகளை இன்றும் அரச குடும்பத்தினரே கண்காணித்து வருவது தனிச்சிறப்புடன் திகழ்வதையும் எடுத்துரைக்கிறார்.

திருவாறான் விளை

திருவாறான் விளை எனும் திருத்தலத்தின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் கோயிலைச் சுற்றி வலம் வருதல் என்பது பண்டைய காலத்திலிருந்து வழங்கிவரும் வழக்கம் என்பதை இத்திருத்தலம் மிகச் சிறப்பாக எடுத்துரைப்பதாகக் கூறுகிறார். தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களிலும் வழிபாடு செய்யும் மக்களிடையே இந்த வழக்கம் இருந்து வருவதனை எடுத்துரைக்கும் பேராசிரியர் **"திருவரங்கம், இராமேச்வரம், சிதம்பரம் போன்ற பெரிய திருக்கோயில்களில் பல திருச்சுற்றுகள் உள்ளனவென்றும் இத்தகைய கோயில்களில் உள் சுற்றுகள் முற்றிலுமே கல் பரப்பிய அமைப்பு பெற்று காட்சி தருவது திருக்கோயிலினை சுற்றி வலம் வந்து வழிபாடு செய்வதற்கே" (மலை., நாட்., திருப்., ப.59)** என்பதனையும் எடுத்துரைக்கிறார். அதோடு பெரும்பாலும் வெளிச்சுற்றுகளில், மதுரை மீனாட்சி கோயில் போன்ற ஒரு சில கோயில்களைத் தவிர இத்தகைய ஏற்பாடுகள் இருப்பதில்லையென்றும் கேரள மாநிலத்தில் திருவனந்தபுரம் போன்ற ஒருசில கோயில்களைத் தவிர ஏனைய கோயில்களில் ஒரே பிரகாரமே உள்ளதென்றும், அந்தப் பிரகாரத்திலும் கோயிலைச் சுற்றி வலம் வருவதற்கென்றே கல்பரப்பப் பெற்ற நடைபாதைகள் இருக்கின்றனவென்றும் எடுத்துக் கூறுவதோடு தமிழகத்தில் மட்டுமின்றி கேரளம் மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும் திருக்கோயிலினை வலம்வருவது என்பது வழிபாட்டு நடைமுறையாகக் கடைபிடிக்கப்பட்டு வருவதனை உறுதிப்படுத்துகிறார். இத்தலத்தை வலம் வந்து வழிபடுதல் மிகச் சிறப்பானது என்பதை நம்மாழ்வாரின்,

"மாகந்த நீர் கொண்டு தூவி
வலம்செய்து கைதொழ கூடுங்கோலோ ?" (திருவாய், 7:10:2)

என்ற பாசுரத்தினாலும்,

"கெழும் பொழில் சூழ்திரு வாறன்விளை
ஒன்றி வலம் செய்ய ஒன்றுமோ" (திருவாய், 7:10:8)

"பொழில்திரு வாறன் விளையதனை

மேவி வலஞ்செய்து கைதொழக் கூடுங்கொல் ?" (திருவாய், 7:10:8)

என்ற பாசுரங்களின் மூலமாகவும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

வடநாட்டு திருத்தலங்களில் வழிபாட்டு முறைகள்

வடநாட்டுத் திருத்தலங்களின் வழிபாட்டு முறைகளும் தனிச் சிறப்பு பெற்றவாறு திகழ்கின்றன என்பதை பேராசிரியர் வலியுறுத்துகிறார்.

சிங்கவேழ் குன்றம்

சிங்கவேழ் குன்றத்தின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடும் போது இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஒன்பது வகையான நரசிம்மர்களுள் ஜீவால நரசிம்மர் என்றழைக்கப்படும் பெருமாளுக்குக் கார்த்திகைத் திங்களில் நெய்யில் அல்லது எண்ணெயில் திருவிளக்கு ஏற்றுவது மிகச் சிறப்பான வழிபாட்டு முறையாக அமைந்திருக்கின்றது என்பதனை எடுத்துரைக்கிறார். அதோடு மலையடிவாரத்தில் எழுந்தருளியிருக்கும் மாலோல நரசிம்மர் என்றழைக்கப்படும் பெருமானுக்கு நடைபெறும் தீப ஆராதனை வழிபாடு மிகவும் சிறப்பு பெற்றதென்றும், இவரை ஆராதனைத் தெய்வமாகக் கொண்டு தான் பிற்காலத்தில் அகோபில மடம் தோற்றுவிற்கப் பெற்றதாகவும் தனது கருத்தினைப் பதிவு செய்கிறார்.

அயோத்தி

அயோத்தி திருத்தலத்தின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் இந்நகரில் இராம பக்தி உச்ச நிலையில் உள்ளதையும், இந்நகரில் **"இராமனைச் சிறப்பிக்கும் பொருட்டு இல்லங்கள் தோறும் இராமன் திருவுருவத்தினை வழிபடுவது தனிச்சிறப்பு பெற்ற அம்சமாக இருக்கிறது" (வடநாட்., திருப்., ப.44)** என்பதனையும் வலியுறுத்துகிறார். மேலும் இத்திருத்தலத்தில் அனுமனின் புகழும் தனிச்சிறப்பு பெற்று விளங்குகிறது என்ற காரணத்தினால் இத் திருக்கோயிலுக்குச் செல்லும் இராம பக்தர்கள் அனுமன் சீதாப் பிராட்டிக்கு அசோகவனத்தில் தன் பேருருவத்தினைக் காட்டிய சிறப்பினை உணர்ந்து துளசி இராமாயணத்தினைப் பாடியவாறு காணப்படுவது பெருஞ்சிறப்பு பெற்ற வழிபாடுகளுள் ஒன்றாகவும், இவ்வழிபாட்டின் மூலம் தாம் கோரிய அனைத்தையும் அளிக்க வல்லவன் மாருதி என்று மக்களின் தீரா நம்பிக்கையானது சிறந்த வழிபாட்டுக் கூறுகளாக அமைந்திருப்பதனையும் எடுத்துரைக்கிறார்.

திருவடமதுரை

திருவடமதுரையின் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் கண்ணன் அவதரித்த இடத்திலும், விச்ராந்தி கட்டத்திலும் மாலையில் நடைபெறும் பசனை வழிபாடுகள் தனிச் சிறப்பு பெற்ற வழிபாட்டு முறையாகும் என்கிறார். மேலும் இத்திருத்தலத்திலுள்ள துவாரகை நாதர் திருக்கோயிலில் முற்பகலில் நான்கு முறையும், பிற்பகலில் நான்கு முறையும் நடைபெறும் வழிபாடுகள் தனிச்சிறப்பு பெற்றவை என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

திருச்சாளக் கிராமம்

திருச்சாளக்கிராமத் திருத்தலத்தின் வழிபாட்டுச் சிறப்பு பற்றிக் குறிப்பிடுகையில் இத்திருத்தலம் மிக்க சிறப்பு பெற்ற திருத்தலமென்றும், இங்கு எம்பெருமானின் நித்திய சாந்நித்தியம் இருப்பதாக ஐதீகம் வழங்கப்பட்டு வருவதனையும் எடுத்துரைப்பதோடு இத்தகு சிறப்புமிக்க இத்திருத்தலத்தில் ஏதேனும் ஒரு காரணத்திற்காக பகவதாராதனம் நிறுத்தப்பெற்றால், பிற இடங்களைப் போல இத்திருத்தலத்திற்கு சம்புரோக்ட்சனம் செய்யத் தேவையில்லை என்றும், ஒவ்வொரு திருக்கோயிலிலும் பகவதாராதனத்திற்காக சாலிக்கிராமங்கள் இருக்க வேண்டியது இன்றியமையாதது என்பதனையும் எடுத்துரைக்கிறார். **"திருக்கோயிலைத் தவிர வேறு இடங்களிலும் சாளக்கிராமங்களை வைத்து வழிபாடு செய்யலாம். சாதாரணமாக சாளக்கிராமங்களை 2, 6, 8, 10, 12 என்றவாறு இரட்டை படை எண்களில் இருக்குமாறு வைத்து வழிபடுவதே வழக்கமாக இருந்து வருகின்றது" (வட நாட்., திருப்., ப.57)** என்பதனை எடுத்துரைக்கிறார். இவை மட்டுமின்றி உண்மையான வைணவர்கள் இல்லத்தில் செப்புப் பாத்திரத்தில் நீரில் சாளக்கிராமங்களை வைத்து வழிபாடு செய்வதை வழக்கமாகக் கொண்டு வழிபடுவது சிறந்ததென்றாலும், இரண்டு சாளக்கிராமங்களை வைத்து வழிபடுதல் ஆகாது என்ற போதிலும், உண்மையான சாளக்கிராமங்கள் கிடைப்பது அரிதாகையால் எவ்வித எண்ணிக்கையில் இருப்பினும் அவற்றினை வழிபடுவது குற்றமாகாது என்பதுதான் வைணவப் பெரியோர்களின் ஆழ்ந்த கருத்தாக இருக்கிறது என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

"ஸ்ரீ மகாவிஷ்ணு 'வஜ்ரகிட்ட' எனும் பூச்சியின் உருவெடுத்து கருப்பு கற்களுக்குள் புகுந்து, சுருள் சுருளாக சக்கரம் அமைத்து அதிலேயே உறைந்து விட்டதாய் புராணங்கள் கூறுகின்றன" (இந்துமத நன்னெறிகளும் சம்பிரதாயங்களும், ப.112) என்பார் அ.வெ.சுகவனேச்வரன்.

இந்தக் கருப்பு கற்களே சாளக்கிராமம் எனப்படுகிறது. அனுதினமும் இந்தச் சாளக்கிராமத்திற்குப் பூசை செய்பவர்கள் வைகுண்ட பதவியை அடைவார்கள். மகாவிஷ்ணு காக்கும் கடவுளாதலால் துன்பம் வராமல் காப்பார். அதோடு மட்டுமின்றி சாளக்கிராம தானம் திருமாலைத் திருப்தி படுத்துமென்பதும் சாளக்கிராமங்களுக்கு அபிஷேகம் செய்த நீரை அருந்தினால் கொடிய பாவங்களும் தீருமென்பதும் சாளக்கிராமம் ஒவ்வொரு வீட்டின் பூசை அறையில் இருந்தால் அது மிகவும் நல்லது என்பதும் வைணவர்களின் நம்பிக்கை.

பொதுவாக சாளக்கிராம வகைகள் பன்னிரண்டு என்று கூறினாலும் பத்தொன்பது வகையான சாளக்கிராம பெயர்கள் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- லட்சுமிநாராயண சாளக்கிராமம் – ஒரு துவாரத்தில் நான்கு சக்கரங்களைக் கொண்ட வனமாலையை அணிந்த வடிவம்.
- லட்சுமி ஜனார்த்தன சாளக்கிராமம் – நான்கு சக்கரங்களுடன் வனமாலை இல்லாமல் இருப்பது.

- ரகுநாத சாளக்கிராமம் – இரண்டு துவாரத்தில் நான்கு சக்கரங்களைக் கொண்டு ஏதாகாரமாக இருப்பது.
- வாமன சாளக்கிராமம் – இரண்டு சக்கரங்களை மாத்திரம் கொண்டிருப்பது.
- ஸ்ரீதர சாளக்கிராமம் – வனமாலையுடன் இரண்டு சக்கரங்களை மட்டும் கொண்டது.
- தாமோதர சாளக்கிராமம் – விருத்தாகரமாக இரண்டு சக்கரங்களை மட்டும் கொண்டிருப்பது.
- ராஜராஜேஸ்வர சாளக்கிராமம் – ஏழு சக்கரங்களையும், சாத்பூஷணமும் கொண்டிருப்பது.
- ரணராக சாளக்கிராமம் – விருத்தாகாரமாக இரண்டு சக்கரங்களையும் மற்றும் அம்பறாத் துணி, பாணத்தின் அடியும் கொண்டது.
- ஆதிசேச சாளக்கிராமம் – பதினான்கு சக்கரகாரமாக, இரண்டு சக்கரங்களைக் கொண்டது.
- மதுசூதன சாளக்கிராமம் – சக்கரகாரமாக இரண்டு சக்கரங்களாக் கொண்டது.
- சுதர்சன சாளக்கிராமம் – ஒரே சக்கரத்தினை மட்டும் கொண்டிருப்பது.
- கதாதர சாளக்கிராமம் – மாறுபட்ட சக்கரமாகத் தோன்றுவது.
- ஹயக்கீரிவ சாளக்கிராமம் – இரண்டு சக்கரங்களுடன் ஹயக்கீரிவ குதிரை உருவமாகக் காணப்படுவது.
- நரசிங்க சாளக்கிராமம் – இரண்டு சக்கரங்களையும், பெரிய வாளையும், வானமாலையையும் கொண்டது.
- லக்ஷ்மி நரசிங்க சாளக்கிராமம் – இரண்டு சக்கரங்களையும், பெரிய வாளையும், வானமாலையையும் கொண்டது.
- வாசுதேவ சாளக்கிராமம் – துவராக முகத்தில் இரண்டு சக்கரங்கைளயும் கொண்டு சமகாரமாக உள்ளது.
- பிரத்யும்ன சாளக்கிராமம் – சூசமமான சக்கரமும், ஓர் எந்திரத்திற்குள் பல எந்திரங்களையும் கொண்டது.
- சங்கர்ஷன சாளக்கிராமம் – துவாரத்தின் மத்தியில் இரண்டு சக்கரங்களையும் புருஷ்டபாகம் பருத்தும் காணப்படுவது.
- அதிருத்த சாளக்கிராமம் – விருத்தாகாரமாகவும், செம்பட்டு நிறம் கொண்டதாகவும் இருக்கும்.

(வைஷ்ணவத் தொகையகராதியும் திருத்தலங்களும், ப.74) என்றவாறு சாளக்கிராமங்களை வகைப்படுத்துவர்.

“இந்த சாளக்கிராமம் நேபாளத்தில் ஹரிபர்வத மலையடிவாரத்தில் சக்ர தீர்த்தமென்னுமிடத்தில் கிடைக்கிறது. கண்டகி நதிக்கரையில் கிடைக்கிறது. சாளக்கிராமம் உடைந்ததாக இருப்பினும், ஒன்றுக்கு மேற்பட்ட துவராங்களுடன் இருந்தாலும் தோஷம்

கிடையாது" (இந்துமத நன்னெறிகளும் சம்பிரதாயங்களும், ப.112) என்ற கூற்றும் இதனையே வலியுறுத்துவதிலிருந்து சாளக்கிராமம் வழிபாட்டின் முக்கியத்துவத்தினை உணரமுடிகிறது.

தொகுப்புரை

- இவ்வியலில் கோயிலின் அங்கங்களான கோபுரம், விமானம், மண்டபங்கள், கொடிமரம், சிற்பங்கள் ஆகியவை குறித்த பொதுவான விளக்கங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- திருவரங்கத்தில் உள்ள ஏழு மதில்களின் சிறப்பையும் திருவண்பரிசாரத் திருத்தலத்தில் உள்ள திருமதிலின் பெருமையைம் ந.சுப்புரெட்டியார் காரண காரிய இயல்புகளுடன் எடுத்துரைத்துள்ள பாங்கு இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.
- திருக்கண்டியூர் திருத்தலத்தில் அமைந்துள்ள மூன்று தள விமானங்களின் சிறப்பையும், அவ்விமானம் தாமரைவடிவில் இருப்பதற்காக காரணத்தையும் நுணுகி ஆராய்ந்து பேராசிரியர் எடுத்துரைத்துள்ள திறம் இங்கு விளக்கப்பட்டுள்ளது.
- திருமாலின் பெயரிலும் திருமகளின் பெயரிலும் விமானங்கள் அமைக்கும் முறை வைணவத் தலங்களில் இருந்துள்ளமையைத் திருநறையூர், திருநாகை ஆகிய தலங்களின் விமானங்களைச் சான்று காட்டி விளக்கியுள்ள தன்மை பேராசிரியரின் நுணுகி நோக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதை இவ்வியலின் வழி அறியமுடிகின்றது.
- திருமால் திருத்தலங்களில் புண்ணிய ஆறுகள் பாய்கிற இடங்களில் அமைந்துள்ள தலங்கள் மிகவும் சிறப்புடையன என்றும், அச்சிறப்புக்குக் காரணம் மூர்த்தியோடு புனித தீர்த்தங்களும் அங்கு அமைந்திருப்பதே என்றும் ந.சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ள செய்திகள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன
- கோயிலின் அமைப்பு முறைகளைச் சுட்டுவதோடு மட்டுமன்றி அங்குள்ள கல்வெட்டுகளின் வழி வெளிப்படும் கோயில் குறித்த செய்திகளை நிரல்பட எடுத்துரைப்பதன் வழி பேராசிரியருக்குக் கல்வெட்டுத்துறையில் இருந்த பயிற்சியும் புலப்படுத்திக் காட்டப்படுகின்றது.
- தமிழகத்தில் திருமால் வழிபாடு பண்டைய காலம் முதலே வழக்கில் இருந்து வந்துள்ளமை சான்றுகளோடு இவ்வியலில் காட்டப்பட்டுள்ளது.
- திருமால் கோயில்களில் நடைபெறும் நாள்வழிபாடு, சிறப்பு வழிபாடு, வழிபாட்டின் பயன் ஆகியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- திருவரங்கத்தில் வழக்கத்தில் உள்ள வழிபாட்டு முறைகளும் திருக்கரம்பனூர் தலத்தில் நடைபெறும் மும்மூர்த்தி வழிபாடும், திருமாலிருஞ்சோலை வழிபாடும், ஸ்ரீவரமங்கை திருத்தலத்தின் எண்ணெய்க்காப்பு திருமஞ்சன வாழிபாடும் திருக்கச்சியில் நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அத்திரவரதர் வழிபாடும் விளக்கியுரைக்கப்பட்டுள்ளன.

இயல் 3

வைணவ மெய்யியல்

இந்து சமயத்தின் பழமையும், சிறப்பும் அதன் சமயத் தத்துவத்தில் பொதிந்துள்ளது. இந்து சமயம் எவ்வளவு பழமையானதோ அந்த அளவிற்கு பழமையானது இந்து சமயத்தின் உட்பிரிவாகிய வைணவ சமயமும் அதன் தத்துவமுமாகும்.

வைணவத் தத்துவத்தின்படி இவ்வுலகில் அறிவுள்ள பொருள்கள் சேதனம் என்றும், அறிவற்ற பொருள்கள் அசேதனம் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த சேதன, அசேதன பொருள்கள் இரண்டையும் திருமேனியாகப் பெற்ற திருமாலே மெய்ப்பொருள் ஆவான்.

திருமால் பற்றிய செய்திகள் சங்க நூல்களிலும், சங்கம் மருவிய நூல்களிலும், உலகப் பொதுமறையான திருக்குறளிலும் இன்னும் பிற இலக்கியங்களிலும் தனிச் சிறப்பானதொரு இடம் பெற்றிருப்பதால் வைணவ சமயம் தொன்மையான சமயம் என்பது புலனாகின்றது. வேதம், உபநிடதங்கள், ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் ஆகியவற்றில் சிதறிக் கிடந்த வைணவத் தத்துவங்களை ஒழுங்குபடுத்தி வைணவ சமயத்தினை இராமநுசர் புத்தொளிப் பெறச்செய்தார்.

இதனைக் கருத்தில் கொண்டே வைணவப் பெரியோர்கள் வைணவ சமயத்தினை 'இராமாநுச தரிசனம்' என்பர். வைணவத் தத்துவங்களைத் தெளிய வைத்து 'விசிட்டாத்து விதம்' என்ற பெயரில் இராமாநுசர் உலகிற்கு அறிமுகப்படுத்தினார். இராமாநுசர் சூட்டிய விசிட்டாத்து விதம்என்ற பெயர் குறித்து ந.சுப்புரெட்டியார், **"விசிட்டாத்துவிதம் என்பது தத்துவநோக்கில் இதற்கு அமைந்த பெயர்" (முக்தி நெறி, ப.39)** என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சமயத் தத்துவம் பற்றிக் குறிப்பிடும் முனைவர் ச.சகுந்தலா **"தத்துவம் என்பதற்கு உண்மை என்பது பொருள். இவ்வுண்மை என்பதற்கு என்றும் உள்ளது என்பதே கருத்து. நம் உடல் உட்பட, நாம் பார்க்கும் பொருள்கள் யாவும் என்றும் உள்ளவையல்ல, என்றுமே உள்ள பொருள் எது? அதன் தன்மை என்ன? என்பனவற்றை ஆராய்வது தத்துவ ஞானமாகும்" (நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே, ப.146)** என்கிறார். அவ்வகையில் வைணவ மெய்யியல் குறித்து ந.சுப்புரெட்டியார் கூறியுள்ள கருத்துக்கள் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

விசிட்டாத்துவிதம்

பொதுவாக, உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு ஆன்மாவைக் கரையேற்ற ஏதேனுமொரு கடவுளை வணங்குதல் என்பது சமயக் கொள்கையாக இருக்கின்றது. இவ்வுலகில் தோன்றிய அனைத்து சமயங்களும் ஒவ்வொரு விதமான தத்துவ அமைப்புடன் திகழ்கின்றன. இத்தத்துவங்களெல்லாம் சமயத்திற்குச் சமயம் ஒன்றுபட்டும் மாறுபட்டும் காணப்படுகின்றன.

சமயத் தத்துவங்களுள் சைவ சித்தாந்தமும் மத்வருடைய துவைதமும், சங்கரருடைய அத்வைதமும், இராமானுசருடைய விசிட்டாத்துவிதமும் முக்கியத் தத்துவங்களாக அமைகின்றன.

துவைதம் என்பதற்கு இரண்டு என்பது பொருள். ஆன்மாவும் இறைவனும் ஒன்றெனும் நிலையினை ஆன்மா ஒருபோதும் அடைவதில்லை. ஆன்மா என்பது வேறு, இறைவன் என்பது வேறு. எனவே எப்பொழுதும் இரண்டும் இரண்டே என்பதைத் தவிர இரண்டும் ஒன்றல்ல எனக் கூறுவதால் மத்வரது தத்துவம் 'துவைதம்' எனப்படுகிறது.

ஆன்மாவும், இறைவனும் இரண்டல்ல இரண்டும் ஒன்றே என்று சங்கரர் கூறுவதால் அவரது தத்துவம் அத்வைதம் எனப்படுகிறது. இராமானுசருடைய 'விசிட்டாத்துவிதம்' சித்து, அசித்து, ஈசுரவன் ஆகிய முப்பொருள் உண்மையினை விளக்குவதாக அமைகிறது.

"விசிட்டம் + அத்வைதம் என்பதாகப் பிரிக்கப்பட்டு 'விசிட்டாத்வைதம்' எனப்படுகிறது. இதில் விசிட்டம் என்பதற்கு 'விசேடம்' என்பது பொருளாகின்றது. 'அத்வைதம்' என்பது 'அ+த்வைதம்' என்று பிரிக்கப்பட்டு தனக்கு அயலாக இரண்டாவது இல்லாதது என்பது பொருளாகின்றது. இது மட்டுமின்றி விசிட்டம் என்பதற்கு தனக்கு சரமாகிய சேதன, அசேதனங்களோடு கூடியிருக்கிற பரம்பொருள்" (வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், ப.39) என்று கூறுவதோடு, **"தனக்குச் சரீரமாகிய உயிர்ப்பொருள்கள், உயிரல்லாத பொருள்களோடு கூடியிருக்கின்ற இரண்டற்ற பொருள் எனவும், விசிட்டனது அத்துவிதம் எனும் ஆறாம் வேற்றுமைத் தொகையாக்கி சேதன, அசேதனங்களைச் சரீரமாகவுடைய பரம்பொருளில் இரண்டாவது இல்லாமையைச் சுட்டிக்காட்டும் சமயத் தத்துவமே விசிட்டாத்துவிதம்" (வைணவ தத்துவ ஞான அடிப்படை, ப.39)** என்றும் எடுத்துரைக்கிறார் முனைவர் அரங்க சீனிவாசன்.

எனவே உயிரையும் உலகையும் தனக்குச் சரீரமாகக் கொண்டுள்ள பரம்பொருள் இரண்டல்ல, ஒன்றுதான் என்பதை விசிட்டாத்துவிதம் எடுத்துரைக்கிறது. **"உயிரும் உலகமும் தன் சரீரமாகக் கொண்டுள்ள பரம்பொருள் இரண்டல்ல ஒன்றே என்பது தான் விசிட்டாத்வைதம்" (பிரும்ம இரகசியம், நல்லபெருமாள், ப.212)** என்கிறார் நல்ல பெருமாள்.

இதோடு இவ்விசிட்டாத்வைத நெறியானது தத்துவம் (மெய்ப்பொருள்), இதம் (நெறி), புருடார்த்தம் (பேறு) ஆகிய மூன்று பகுப்பினால் ஆனாது. இதில் தத்துவமான மெய்ப்பொருளானது சித்து, அசித்து. ஈசுவரன் ஆகிய மூன்று கூறுகளாக அமைகின்றது. இதனை,

"சித்து அசித்தொடு ஈசனென்று செப்புகின்ற மூவகைத்
தத்துவத்தின் முடிவுகண்ட சதுமறைப் புரோகிதன்" (வில்லிபாரதம், பா.626)

என்று வில்லிப்புத்தூரார் எடுத்தியம்புகிறார். இதில் சித்து என்பது உயிர்களின் தொகுதி; ஆன்மாக்களின் கூட்டம்; அதோடு இது சேதனம் என்றும் வழங்கப்படுகிறது. அசித்து என்பது மக்கள், விலங்கு முதலியவற்றின் உடல் முதலிய உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமான மூலப் பிரகிருதி ஆகும்.

ஈசுவரன் என்பவன் இறைவன். இம்மூன்று தத்துவங்களும் 'தத்வத்திரயம்' என்று வழங்கப்படுகின்றன (பரகாலன் பைந்தமிழ், ப.490) என்கிறார் ந.சுப்புரெட்டியார். விசிட்டாத்துவைதத்தின் தத்துவத் திரயமாகிய இம்மூன்றும் நிலையானவை. ஈசுவரனாகிய

இறைவனுக்கும் சித்து, அசித்து ஆகிய மற்ற இருபொருள்களுக்கும் இடையே உள்ள உறவு முறையினை விளக்குவதுதான் விசிட்டாத்துவிதத்தின் உயிர்க் கொள்கைகளில் ஒன்றான உடல் உயிர்க் கோட்பாடு என்ற சரீர–சரீரி உறவு (ஆத்மா–அத்மீய உறவு) எனப்படுகிறது.

இதனையே "**அறிவுள்ள பொருள் (சித்து), அறிவற்ற பொருள் (அசித்து), இறைவன் ஆகிய மூன்று பொருள்களில் அறிவுள்ள பொருளும், அறிவற்ற பொருளும் இறைவனுக்கு உடலாகின்றன என்பது தான் விசிட்டாத்துவைதம்"** என்கிறார் ஞானசுந்தரம் **(வைணவ உரைவளம், ப.286).**

சித்து (உயிருள்ள பொருள்)

ஞானத்திற்கு இடமான ஆன்மா அல்லது உயிர் சித்து எனப்படுகிறது. நிலைத்திருக்கும் வகையில் பேரின்ப வடிவான ஆன்மாவானது அன்பிற்கு இருப்பிடமாக அமைகிறது. அறிவும் அறியப்படும் பொருளும் தானாகவே இருந்து இறைவன் ஏவியபடி இறைவனுக்கு அடிமையாக இருப்பதினால் இது 'தர்மபூத ஞானம்' எனப்படுகிறது. இதன் பொருட்டே ஆழ்வார்கள் ஒவ்வொருவரும் இறைவனுக்கு அடிமையாக இருப்பதையே தர்மபூத ஞானமாகக் கருதினர்.

"நேர்தேன் அடிமை" (இரண்., .திருவந்., – 80)

என்று பூதத்தாழ்வாரும்,

"என்றேன் அடிமை இழிந்தேன் பிறப்பு இடும்பை" (நான்., திரு., – 99)

என்று திருமழிசையாழ்வாரும்,

"அவற்கு அடிமைப் பட்டேன்" (மூன்., திருவந்., – 37)

என்று பேயாழ்வாரும் கூறுவதிலிருந்து இறைவனுக்கு அடிமையாய் இருப்பதில்தான் ஆன்மாவானது முழு இன்பம் பெறுகிறது என்பதை உணரமுடிகிறது. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இந்த ஆன்மாவின் இயல்புகளை,

"மாத வங்களென் றோத வங்களின்
மருவு சீவனென் றொருவ! நீ பெரும்
பூத மில்லை; யிர்திரிய மல்லை; ஐம்
புலனும் அல்லைநற்; புந்தி யல்லை காண்;
சீத ரன்பரந் தாமன் வாமனன்
திருவ ரங்கனுக் கடிமை; நீயுனக்
கேது மில்லை யென்றறி; யறிந்தபின்
ஈதின் மாதவம் இல்லை எங்குமே" (திருவரங்கக் கலம்பகம், பா. 63)

என்ற பாசுரத்தில் தம் மனத்திற்குத் தாமே உபதேசிக்கும் முகத்தால் சீவான்மாவின் சொரூபம் என்பதை விளக்குகிறார் ந.சுப்புரெட்டியார் இதனையே, "**தன்னை நான் என்று அறியும்போது தர்மபூத ஞானம் உதவ வேண்டும் என்பதில்லை. ஆனால் சீவான்மா தன்னைத் தவிர வேறு எந்தப் பொருளையும் தர்மபூத ஞானத்தால் மட்டிலுமே அறிய முடியும். ஆன்மா இறைவன் ஏவியபடி நடப்பது; அவனால் தரிசிக்கப்பெற்று, அவனுக்கு அடிமையாகவே இருப்பது**

ஆகியவற்றால் தன் சொரூபத்தினை தர்மபூத ஞானத்தைக் கொண்டும் அறியலாம்" (பரகாலன் பைந்தமிழ், ப.491) என்கிறார்.

சித்தின் விளக்கமுறைப் பற்றிக் குறிப்பிடும் முனைவர் ஆ.இராமபத்திரன் "ஒரு மலருக்கு அகவிதழ், புறவிதழ் என்ற இரண்டும் இருந்தாலும் அகவிதழே இன்றியமையாததாய் இருத்தல் போன்று 'ஆன்மா' என்ற மலருக்குப் புறவிதழாக, ஞான ஆனந்தங்கள் இருந்தாலும், இறைவனுக்கு அடிமைப்படுதலாகிய அகவிதழே சிறந்தது என்பர் வைணவ அறிஞர்" என்று சுட்டிக் காட்டுவதோடு , **"மணத்தைக் கொண்டு மலரையும், ஒளியைக் கொண்டு மணியையும் விரும்புவது போல், ஆன்மாவை விரும்புவதன் காரணம் அடிமைத் தன்மையினை உடைமையால் தான்" (வைணவம் தந்த வளம், ப.111)** என்ற கருத்தினை வலியுறுத்துவதிலிருந்து சித்தின் தன்மையினை அறிய முடிகிறது.

சித்தின் வகை

சித்து எனப்படும் ஆன்மாவின் தொகுதியில் கணக்கற்ற சீவான்மாக்கள் உள்ளனர். இச் சீவான்மாக்களை,

- பக்தர்
- முக்தர்
- நித்தியர்

என்ற மூன்று வகைக்குள் வைணவ மெய்யியல் நூலார் அடக்கிக் காட்டுவர்.

பக்தர்

பக்தர் எனப்படுவர்கள் பகவானின் மெய்ப்பொருள்'எனும் மாயையில் மறைக்கப்பெற்ற சொரூபத்தை உடையவர்கள் "வானவர்தம் மெய்ப்பொருள்" (நான்மு. தி.அ.3), "அரு நான்கும் ஆனாய்" (நான்மு .தி.அ–5) என்றெல்லாம் திருமழிசையாழ்வார் கூறுவதற்கேற்ப பாவ, புண்ணியமாகிய வினைகளால் சூழப்பெற்று, அவரவர்களுடைய வினைக்கே தக்கபடி தேவர், மனிதர், விலங்கு, தாவரம் போன்ற வடிவங்களால் உடல்பெற்று அதன் பயனை அனுபவிக்கும் சம்சாரிகள் ஆகின்றனர். பக்தர் என்னும் வகைக்குள் அடங்கும் சீவான்மாக்கள் குறித்து ந.சுப்புரெட்டியார் **"பக்தர் என்பவர் மூலமும் நடுவும் இறுதியும் இல்லாதோர் மும்மைத்தாய காலமும் கணக்கும் நீத்த காரணனின், மாயையால் மறைக்கப்பெற்ற சொரூபத்தையுடையவர்கள்; அநாதி அஞ்ஞானத்தால் தேடிய புண்ணிய பாவங்கள் சூழப் பெற்றவர்கள்; இவர்கள் அவரவர்களின் வினைக்குத் தக்கவாறு மாறி தேவ, மனித, விலங்கு, தாவர வடிவங்களைப் பெற்றுத் தக்க பரம்பரைகளை அனுபவிக்கும் சம்சாரிகள் ஆவர்" (பரகாலன் பைந்தமிழ், ப.491)** என்கிறார். ஆழ்வார் பெருமக்களும், ஆச்சாரியர்களும் குறிப்பிடும் திருமால் பக்தர்களுக்குப் பேராசிரியர் அவர்கள் எளிமையான விளக்கத்தைக் குறிப்பிட்டுத் தெளிவுபடுத்தியுள்ளார். இதனால் பக்தர் என்னும் வகைக்குள் அடங்கும் சீவான்மாக்கள் அறியாமை வயப்பட்டவர்களாகவும் வினைக்கேற்ப பிறப்பெடுப்பவர்களாகவும் இருப்பர் என்பது புலனாகிறது.

முக்தர்

முக்தர் என்பவர்கள் "அறம் பாவம் இரண்டும் ஆவான்" (முதல் திருவந்தாதி, பா. 96) என்று பொய்கையாழ்வார் குறிப்பிடும்படி பகவானின் அருளால் பாவங்கள் நீங்கும் வண்ணம் இறையனுபவமும், இறைத்தொண்டின் இன்பமும் அடைந்து முக்தி நிலை கொண்டவர்களாகக் கருதப்படுகின்றவர்களாவர். இவர்களைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"முக்தர் என்பவர்கள், இவ்வுலகத் தளைகள் கழிந்து பரம பதத்தில் பகவதனுபவ கைங்கரிய போகரானவர்களாவர். முமுட்சு நிலையிலிருந்து மோட்சத்தை அடைபவர்கள் இக்குழுவில் அடங்குவர்" (பரகாலன் பைந்தமிழ், ப.491)** என்கிறார். இவர் தருகின்ற விளக்கத்தின் வாயிலாக முக்தர்கள், பக்தர்களைவிட மேம்பட்டவர்கள் என்பதை உணரமுடிகிறது.

நித்தியர்

திருமாலுடன் இணைபிரியாமல் இருந்து, வருகின்ற ஆதிசேடன், விஸ்வக்சேனர், பெரியதிருவடியான கருடாழ்வார் ஆகியோர் நித்தியர் எனப்படுவர். இதனை வேதாந்த தேசிகர்,

"தொல்வினை என்றுமில் லாச்சோதி
வானவ ருஞ் சுருதி
செல்வினை யோர்ந்தவர் சீவரென்
றோதச் சிறந்தனமே" (தே.பி. 26)

என்ற பாசுரத்தின் வழியே புலப்படுத்தியுள்ளார். அநாதியான கர்மபந்தம் இல்லாதவர்கள் நித்தியசூரிகள் என்று கூறுவதனை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் **"நித்தியர் என்பவர் ஒரு நாளும் சம்சார சம்பந்தம் சிறிதும் இல்லாத அனந்தன், விஸ்வக்சேனர், கருடன் ஆகியோரே நித்தியச் சூரிகளில் தொடக்கமானவர்கள்" (வைணமும் தமிழும், ப.187)** என்கிறார்.

அசித்து (உயிரற்ற பொருள்)

அசித்து என்பது அறிவில்லாத பொருளாகும். அறிவில்லாத இடத்தில் ஞானம் இருக்காது என்பதற்கேற்பவும், உயிரற்ற பொருள்களில் உணர்ச்சி இருப்பதில்லை என்பதற்கேற்பவும் அசித்துப் பொருளில் ஞானத்திற்கு இடமில்லை. அசித்திற்கான விளக்க முறைப் பற்றிக் கூறும் முனைவர் ஆ. இராமபத்திரன் **"சுருங்கச் சொன்னால், இறைவனை அடையும் பொருட்டு ஆன்மா கைவிட வேண்டிய அனைத்துப் பொருள்களையும் அசித்து எனக் கூறிவிடலாம்" (வைணம் தந்த வளம், ப.114)**என்று உணர்த்துவதிலிருந்து அசித்தின் தன்மை புலப்படுகிறது.

அசித்தைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"அசித்து என்பது விகாரத்திற்கு இடமானது, ஒரு பொருள் ஒரு நிலையினின்றுப் பிரிதொரு நிலையை அடைவதுதான் விகாரம் என்பதற்கேற்ப அசித்தானது முன்னைய நிலையை விட்டு வேறு வேறு நிலைகளை அடைவதாகின்ற வேறுபாட்டிற்கு இடமாக இருப்பதினால் அசித்தில் ஞானத்திற்கு சிறிதும் இடமில்லை" (வைணமும் தமிழும், ப.188)** என்கிறார். அவரது கருத்தின் வாயிலாக அசித்திற்கு ஞானம் இல்லை என்பதையும், வெவ்வேறு நிலைகளை அடைகின்ற நிலையே

ஞானமின்மைக்குக் காரணமாக அமைகின்றது என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த அசித்தானது மூன்று நிலைகளில் அமைகிறது.

- சுத்த சத்துவம்
- மிசிர சத்துவம்
- சத்துவ சூனியம்

சுத்த சத்துவம்

இன்பம், மெய்யறிவு, மென்மை ஆகியவற்றின் பிறப்பிடமாய் அமைவது சத்துவம். இந்த சத்துவ அமைப்பானது சுத்த சத்துவம், மிசிர தத்துவம் எனப்படும் கலப்புத் தத்துவம் என்ற இரு வகையானது.

முக்குணங்களான அசித்து, இராசச, தாமச குணங்கள் கலவாத சத்துவமாக இருப்பது சுத்த சத்துவமாகும். இது நித்திய விபூதியின் குணமாகக் கொள்ளப்படுகிறது. பொதுவாக இறைவனின் திருமேனி சுத்த சத்துவத்தினால் நிரம்பப் பெற்றிருப்பதால், தன் பக்தர்களுக்குச் சத்துவ குணத்தை வளரச் செய்யும் பணியை இறைவன் ஆற்றுகிறான். இக் காரணத்தினால் இறைவன் சுத்த சத்துவ குணத்தினன் என்றே அழைக்கப்படுகின்றான். இருப்பினும் **“சுத்த சத்துவ குணமானது பகவானின் திவ்விய ஆத்ம குணமன்று, மாறாக திவ்விய மங்கள விக்கிரகத்தின் குணமாகக் கொள்ளப்படுகிறது” (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.212)** என்கிறார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இத்தகு சிறப்பு வாய்ந்த சுத்த சத்துவத்தினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **“சுத்த சத்துவமென்பது இராசச, தாமச குணங்கள் கலவாமலும், ஆதல் அழிதல் இல்லாததாகவும்; என்றும் நிலைபெற்றிருப்பதாகவும்; ஞானத்தையும், ஆனந்தத்தையும் உண்டாக்கக் கூடியதாய் இருக்கும். அதோடு நித்திய விபூதியாகிய பரமபதத்தில் விமானம், கோபுரம், மண்டபம், உப்பரிகை முதலிய வடிவுடன் தோற்றம் கொள்ளும் தன்மையது” (வைணவமும் தமிழும், ப.188)** என்று உரைத்துள்ளார்.

மிசிர சத்துவம்

முக்குணங்களும் உலகில் தனித்தனியே இராமல் ஒன்றோடொன்று கலந்து காணப்படும் தன்மை, ‘மிசிர சத்துவம்’ எனப்படுகிறது. இதில் ‘மிசிரம்’ என்பது கலப்பு என்ற பொருள்படும் சொல்லாக அமைகிறது. சாத்துவிகம், இராசசம், தாமசமாகிய ஆகிய மூன்று பொருள்களைப் பிரகிருதிப் பொருளாகக் கொண்டிருப்பதினால் இது மூலப்பிரகிருதி எனப்படுகிறது. இதன் காரணத்தினாலேயே இத்தத்துவம் ‘திரிகுணம்’ என்ற திருநாமத்தால் வழங்கப்படுகிறது.

தத்துவ குணமென்பது ஞானத்தையும், சுகத்தையும் விரும்பி அந்த ஞான சுகங்களாகின்ற இரண்டிலும் ஆசையினை உண்டாக்குவதாகும். ஆசை, சுறுசுறுப்பு ஆகியவற்றிற்குக் காரணமான குணம் இராசச குணமாகும்.

தாமச குணமானது மயக்கம், மோகம், சோம்பல் முதலியவற்றால் முடங்கிக் கிடக்கும் தன்மையது. இதில் **"சத்துவகுணம் காப்பதற்கும், இராசச குணம் படைப்பதற்கும், தாமச குணம் அழிப்பதற்கும் காரணமாகின்றன. அதோடு ஈசுவர சங்கல்பம் முதலிய காரணங்களால் ஒன்றை ஒன்று விஞ்சியும் குறைந்தும் காணப்படும்" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.213)** என்கிறார் முனைவர் அரங்க சீனிவாசன். இதனைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"இந்த முக்குணங்களும் சமமான நிலையில் உள்ள போது பிரகிருதியின் விகாரங்கள் நாமரூப விசேடம் இல்லாமல் பிரமாணங்களால் காணக்கூடாதபடி அதி சூக்குமங்களாக இருக்கும். இந்தக் குணங்கள் ஏற்றத் தாழ்வை அடையுங்கால் இந்தப் பிரகிருதி பலவித தத்துவங்களாக மாறி நாமரூப விசேடத்தினை உடையனவாகும்" (வைணவமும் தமிழும், ப.189)** என்கிறார். அதோடு இந்த நிலையே மகாப்பிரளய நிலை என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

நல்லறிவு, இன்பம் முதலியவற்றுக்குக் காரணமான சத்துவம் முக்தியையும், ஆசை, சுறுசுறுப்பு, பற்று, துன்பம் இவற்றிற்குக் காரணமான இராசசம் சுவர்க்கம் பெறவு, அறியாமை, சோம்பல் ஆகியவற்றுக்கு காரணமான தாமசம் நரகம் செல்லவும் காரணமாகின்றன.

இந்த மூன்று குணங்களும் சம்சாரப் பகுப்பில் உயிர்களிடத்தில் வளர்க்கும் ஞானத்தைக் குறித்து எடுத்துக்காட்டும் பேராசிரியர் **"இம்மூன்று குணங்களும் சேர்ந்த நிலையில் கர்மவான்களாகிய சம்சாரியினுடைய ஞானம் அனந்தம் இவற்றிற்கு மறைவை உண்டாக்கும். அதுவல்லாததனை அதுவாக நினைக்கும் விபரீத ஞானத்தையும் உண்டாக்கும்" (வைணவமும் தமிழும், ப.189)** என்கிறார்.

இந்த மிசிர சத்துவம் இருபத்தி நான்கு வடிவங்களாகக் கலந்திருக்கும். இந்த இருபத்துநான்கு வடிவங்களும் இறைவனால் இருபத்துநான்கு தத்துவங்களாகப் பிரதிபலிக்கப்பட்டு உலகமாகப் படைக்கப்படுகிறது.

இதனைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"சீவான்மாவைப் பூரிக்கும்படிச் செய்ய வல்ல சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலன்கள் ஐந்தும்; மெய், வாய், கண், செவி, மூக்கு ஆகிய பொறிகள் ஐந்தும்; வாக்கு, கால், கை, எருவாய், கருவாய் ஆகிய கருமேந்திரியங்கள் ஐந்தும்; மண், நீர், எரி, கால், ஆகாயம் என்னும் பூதங்கள் ஐந்தும்; இதே ஆன்மாக்கள் பொருந்தியுள்ள மூலப்பிரகிருதி ஒன்றும்; மகத் தத்துவம் ஒன்றும்; அகங்காரத் தத்துவம் ஒன்றும்; மனம் ஒன்று ஆக மொத்தம் இருபத்து நான்கு" (வைணவமும் தமிழும், ப.190)** என்கிறார்.

அதோடு **"இந்த இருபத்து நான்கு தத்துவங்களையும் கலந்து தான் ஈசுவரன் தானாகவும், நான்முகன் மூலமாகவும் இந்த அகிலத்தைப் படைக்கிறான்" (வைணவமும் தமிழும், ப.190)** என்று வலியுறுத்துவதிலிருந்து இவ்விருபத்து நான்கு தத்துவங்களிலிருந்து உணரப்படும் மூலகாரணியான உயிர் எனும் அறிவுடைப் பொருள் இருபத்தைந்தாவது தத்துவம் ஆகவும், இவ்வனைத்தையும் வெவ்வேறு உடல்களில் படைப்பு, ஈர்ப்பு, அழிப்பில் இயங்கும் இறைவன் இருபத்து ஆறாவது தத்துவமாக இருக்கிறான் என்ற வைணவத் தத்துவக் கோட்பாட்டை பேராசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

இதனையே "**இருப்பதைந்தாவது தத்துவமாகிய உயிர் அறிவுடைப் பொருளாவான், இருப்பத்தாறாவது தத்துவமாக இவற்றை வேறு வேறு உடல்களில் படைத்தும், காத்தும், கரந்தும், விளையாடும் இறைவன் முழு ஞான அறிவினன்" (வைணவ உரைவளம், ப.282)** என்று தெ. ஞானசுந்தரம் கூறுவதிலிருந்து உணரலாம்.

சத்துவ சூனியம்

காலத்தத்துவம் எனக் கூறுப்பெறும் இத்தத்துவம் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களுக்கும் கருவியாக இருந்து இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்கால நிலைகளுக்கும் காரணமாக இருக்கிறது. இக்காரணத்தினால் இத்தத்துவத்தில் சத்துவம், இராசசம், தாமசம் ஆகிய பிரகிருதியின் மூன்று குணங்களும் இருப்பதில்லை.

இதனைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் "**அசித்தின் இரண்டாவது தத்துவ பகுதியான காலத்தத்துவத்தில் காலம் என்பது எங்கும் பரந்து நிற்கும் ஒரு திரவியம். இதில் சாத்துவிகம், இராசசம், தாமசம் என்ற முக்குணங்கள் இல்லை. எதிர், நிகழ்வு, கழிவு என்ற கால நிலைகளுக்கு இதுவே காரணமாகும்" (வைணவமும் தமிழும், ப.194)** என்கிறார்.

ஈசுரவன்

அனைவருக்கும் தலைவனாகவும், அனைவரையும் ஏவுகின்றவனாகவும், அனைத்துச் செயல்களாலும் வழிபடப்படுபவனாகவும், இருப்பவன் ஈசுரவன். அதோடு அனைத்து வினைகளுக்கும் பலன் தந்து, எல்லாச் செயல்களுக்கும் ஆதாரமாக இருந்து அனைத்துச் செயல்களையும் செய்பவன்; அனைத்துச் சொற்களுக்கும் பொருளானவன் தன்னையும், தன் தர்மபூத ஞானத்தையும் தவிர அனைத்துப் பொருள்களையும், உடலாகக் கொண்டு எங்கும் பரவி இருப்பவன்; ஞான மயமானவன்; முத்தொழிலும் செய்பவன்; இடத்தாலும் காலத்தாலும் பிறவற்றாலும் அளவிட முடியாதவன்; அனைத்துப் பொருள்களிலும் அந்தர்யாமியாக இருப்பதினால் உலகிற்கும், உலகிலுள்ள அனைத்திற்கும் துணைக் காரணமாய் இருப்பதே ஈசுவரனின் இயல்பு. ஈசுரவ தத்துவம் குறித்து விளக்கும் முனைவர் ஆ.இராமபத்திரன் "**சித்து, அசித்து என்ற இரண்டிலும் உள்ள குறைபாடுகள் சிறிதும் இல்லாதவனே ஈசுவரன் ஆவான்" (வைணவம் தந்த வளம், ப.114)** என்று வலியுறுத்தம் பாங்கு ஈசுவரத் தத்துவத்தின் சிறப்பை உணர்த்துகிறது.

இத்தகைய ஈசுவர தத்துவத்தினைக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் "**சீமந் நாராயணனே சர்வேசுவரன், இவன் எப்போதும் மாறுபடாத தன்மையுடையவன், சத்தியம், ஞானம், ஆனந்தம், இவற்றின் சொரூபமாக இருப்பவன். இடத்தாலும் காலத்தாலும் அளவிடப் பெறாதவன், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வித பலன்களையும் உயிர்களுக்கு நல்கி அவற்றின் புகலிடமாகத் திகழ்பவன். தன் சொரூபத்தாலும் திருமேனியாலும் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவனாய் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் முதலிய மங்கள குணங்களால் அலங்கரிக்கப்பட்டு, இக்குணங்கள் அதில் அழிதலின்றி எப்போதும் நிறைந்திருக்கும், இவற்றைத் தவிர வாத்சல்யம், சௌசீல்யம், சௌலப்பியம் முதலிய எண்ணற்ற குணங்களைக்**

கொண்டவன்" (வைணவமும் தமிழும், பக்.196–197) என்கிறார். இதிலிருந்து சீமந் நாராயணனே சர்வேசுவரன் என்பதும், சுவாமித்துவம் (தலைமை), வாத்சல்யம் (பரிவு), ஆர்வஜம் (செம்மை), சௌசீல்யம் (நீர்மை), சௌலப்பியம் (எளிமை) ஆகிய திருக்குணங்களைக் கொண்டிருக்கும் சிறப்புடையவன் என்பதும் புலனாகிறது.

பொதுவாக ஈசுவரன் (நாராயணன்) மூன்று வகைகளில் எங்கும் நிறைந்துள்ளான் என்பதும் இவ்வுலகில் கண்ணால் காண்பனவும், காதால் கேட்பதுமான அனைத்தின் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் என்பதும் வைணவப் பெரியோர்கள் கூறும் சிறந்த வைணவத் தத்துவமாக இருக்கிறது.

- ஈசுவரன் தன் திவ்விய மங்கள சொரூபத்தால் எங்கும் பரவியிருப்பது ஒரு வகை.
- ஆதவனின் கிரணம் எங்கும் பரவுவதுபோல் தன்னியல்பான அறிவின் மூலம் எங்கும் நிறைந்திருப்பது இரண்டாவது வகை.
- பிரகிருதி சம்பந்தப்படாத தன் அப்பிராகிருத திவ்ய மங்கள விக்கிரகத்தின் மூலம் பரவி இருப்பது மூன்றாவது வகை.

இவற்றில் சர்வ வியாபியாய்ச் சேதனனாக இருப்பது ஈசுவரனின் இலக்கணமாகும். இவற்றோடு தர்மபூத ஞானம், சக்தி, சௌசீல்யம், வாத்சல்யம் முதலான குணங்களும் நிருபிதஸ்வரூப விசேஷணங்கள் எனப்படும். இதனைக் குறிப்பிடுகையில் **"வாத்சல்யம், சௌசீல்யம், சௌலப்பியம் முதலிய எண்ணற்றக் குணங்களைக் கொண்டு, இந்தப் பூவுலகில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றின் காரண பூதனாகவும், அனைத்திற்கும் ஆதாரமாகவும் இருந்து அனைத்தையும் அடக்கி ஆள்பவன், தன்னை அடைந்தவருடைய எல்லா வினைகளையும் போக்குவதால் சகல வேதங்களாலும் போற்றப்படுபவன்" (வைணவமும் தமிழும், ப.197)** என்கிறார்.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் பகவான் தானே செய்வதோடு, பிறர்க்கு அந்தர்யாமியாக இருந்து கொண்டு தானே செய்விக்கிறான். அண்டத்தையும் பிரமனையும் உண்டாக்குகின்ற மொத்தப் படைப்பு, காரணப் படைப்பு ஆகிய இரண்டு படைப்புகளான சமஷ்டிப் படைப்பினைத் தானே செய்கின்றான். அதற்குப்பின் நான்முகன், தட்சன், பிரஜாபதிகள், காலம் முதலியவர்களுக்கு அந்தர்மியாக இருந்து கொண்டு தனித்தனியான படைப்பென்றும், காரியப் படைப்பென்றும் அழைக்கப்படும் வியஷ்டிப் படைப்பினையும் செய்கின்றான்.

பொதுவாக விஷ்ணு முதலான அவதாரங்களால் தானே இவ்வுலகினைக் காக்கிறான். மனு, காலம் ஆகியவற்றுள் அந்தர்யாமியாக இருந்துகொண்டு காக்கிறான். அதோடு பிரம்மன் முதலியவர்களைத் தானே அழித்து உருத்திரன், யமன், காலம் ஆகியவற்றிற்கு அந்தர்யாமியாக இருந்துகொண்டு பிரளய காலத்தில் உலகை அழிப்பது ஈசுவரனின் செயலாகும்.

இவ்வாறு உலகில் நடைபெறும் முத்தொழில்களும் யாரால் நடைபெறினும் பகவான் (விஷ்ணு) அவர்களுக்கு அந்தர்யாமியாக இருந்துகொண்டு செய்விக்கும் செயல்களே அவை

என்பது வைணவரின் நம்பிக்கை. இத்தகைய சிறப்புடையதாலேயே ஈசுவரன் நித்திய விபூதியாகிய பரமபதத்தில் இவனுக்கென்று தனியான திருமேனி கொண்டிருக்கிறான். அத்திருமேனி பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை எனும் ஐந்து நிலைகளோடு கூடியதாய் அமைகிறது.

பரத்துவம்

பரமபதத்தில் இருக்கும் பரவாசுதேவனின் நிலைதான் 'பரத்துவம்' எனப்படும். 'பரம்' நிலையாகும். இப்பரமபத நிலையானது இவ்வுலகினைக் காட்டிலும் மூன்று மடங்கு பெரியது. ஆதனால் இப்பரத்துவ நிலையானது 'திரிபாதி விபூதி' (திரி பாதம் = மூன்று +கால் = முக்கால்) எனப் பொருள்படும்.

"பரம் என்பது மேலான நிலையைக் குறிப்பதாகும். பரமபதத்தில் உள்ள வாசுதேவனே 'பரம்' என்று கருதப்படுகிறார். திருவைகுந்தத்தில் திருமகளோடு நித்திய சூரிகளும் முக்தர்களும் வழிபடும் நிலையே 'பரம்' என்று கொள்ளப்படுகிறது. மேலும் இதனை திவ்ய மங்கள சொரூபம் என்பர்" (சமய இலக்கியமும் கோயிற்கலையும், ப.2) என்கிறார் முனைவர் அம்பை மணிவண்ணன்.

இந்தப் பரமபதத்தில் ஸ்ரீவைகுந்த நகரம் உண்டு. அங்குக் குமுதன், குமுதாட்சன், புண்டரீசன், வாமனன், சங்குக் கர்ணன், சர்வ தேத்திரன், சுமுகன், சுப்பிரதிஷ்டிதன் போன்றோர் நகரக் காவலர்களாகவும், அங்குள்ள திருமாமணி மண்டபத்தில் சண்டன், பிரசண்டன், பத்திரன், சுபத்திரன், ஜயன், விஜயன், தாதா, விதாதா முதலான வாயில் காவலர்களும் சூழ்ந்திருக்கும் நிலையில் அத்திருமாமணி மண்டபத்தில் தர்மன் முதலான எட்டுக் கால்களுடன் கூடிய சிங்காசனத்தில் ஆதிசேட அரியணையில் இறைவன் கொலுவீற்றிருக்கும்போது அருகில் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி ஆகிய முப்பெரும் தேவியரும் இருப்பர்.

அவர்களுடன் பரவாசுதேவனான இறைவன் நான்கு கரங்களோடு, அக்கரங்களில் சங்கு, சக்கரம். கதை, வாள், வில் ஆகிய ஐம்படைகளோடு கூடியதாகவும், கிரீடம், மகுடம் தோள்வளை ஆகிய அணிகலன்களைத் தன் திருமேனியில் அழகுற அமையப்பெற்றவனாய்த் திருஅரையில் அரை நாணும் பொன்னாடையும் பொலிவு பெறும் வகையில் கொண்டு 'பரம்' என்ற நிலையில் வீற்றிருப்பான்.

இந்தப் 'பரம்' எனும் நிலையிலுள்ள வாசுதேவன் நித்திய விபூதி, லீலா விபூதி என்ற இரண்டு உலகங்களுக்கும் பொதுவானவன். இதனைப் பற்றிக் குறிப்பிடும் ந. சுப்புரெட்டியார் **"பரத்துவம் எனும் நித்திய விபூதியில் பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார், நீளாப்பிராட்டியார் என்ற மூன்று தேவிமார்களுடன் கொண்டிருக்கும் இருப்பாகவும், அதோடு ஞானம், சத்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் ஆகிய ஆறு திருக்குணங்களைக் கொண்டிருக்கும் அமைப்பினால் இவனைப் 'பரவாசுதேவன்' என்ற திருப்பெயரால் வழங்குகின்றனர்" (வைணவமும் தமிழும், ப.198)** என்கிறார்.

இந்தப் பரவாசுதேவனுக்கு **"நாராயணன், பரப்பிரம்மம், பரஞ்சோதி, பரமாத்மா, பரதத்துவம் என்ற வேறு பெயர்களும் வழக்கில் உள்ளன" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.197)** என்பதை அறியமுடிகிறது.

வியூகம்

பரமபதத்திலிருக்கும் பரவாசுதேவன் உலகினைப் படைத்தல், காத்தல், அழித்தலைச் செய்வதற்காகவும் சேதநர்கள் இவரை வணங்கி வாழ்வினைச் செம்மையாக்குவதற்கும் வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் என்ற நான்கு வடிவங்களைப் பெறுகின்றனர். இந்த வடிவங்கள் எல்லாம் 'வியூகங்கள்' எனப்படுகின்றன.

"தேவர்கள் பலரும் வழிபடும் திருக்கோலமாகத் திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட பரமனை வியூக நாராயணன் என்பர், மேலும் சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் ஆகிய மூன்று நிலைகளையும் வாசுதேவனோடு சேர்ந்து நான்கு நிலைகளாக வியூகநிலை பற்றிக் கூறும் வழக்கமும் உண்டு" (சமய இலக்கியமும் கோயிற்கலையும், ப.2) என்கிறார் முனைவர் அம்பை மணிவண்ணன்.

இதில் வாசுதேவனிடத்தில் சங்கர்ஷணனும் அவனிடமிருந்து பிரத்தியும்னனும் அவனிடமிருந்து அநிருத்தனும் தோன்றுவதாகக் கூறுவது வைணவத் தத்துவ வழக்கம். வைணவத் தத்துவத்தினை எடுத்துரைப்பதில் ந.சுப்புரெட்டியார் தனிச்சிறப்பு பெற்றே திகழ்கிறார். பரமபதத்தில் உள்ள வாசுதேவன் வேறு, வியூகத்தில் உள்ள வாசுதேவன் வேறு என்பதை உணர்ந்து வியூகத்தில் வரும் வாசுதேவனை 'வியூக வாசுதேவ' என்று குறிப்பிடுவதிலிருந்து அவரது தத்துவச் செறிவு புலனாகிறது.

இந்த வியூக வாசுதேவனிடம் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேசசு ஆகிய ஆறு குணங்கள் முழுமையாக நிரம்பி இருக்கும். மற்றைய மூன்று வியூகங்களிலும் இந்த ஆறுகுணங்களும் பொதுவாக இருப்பினும் சங்கர்ஷணனிடம் ஞானமும் பலமும் மட்டுமே முழுமை பெற்றிருக்கும். பிரத்தியும்னனிடம் ஐசுவரியமும் வீரியமும் நிறைவாக விளங்கும். அநிருத்தனிடம் சக்தியும், தேசசும் பூரணமாகத் திகழும்.

இதில் சங்கர்ஷணன் சிவனுக்கு உகந்த தேவதையென்பதால் சாஸ்திரங்களைப் படைப்பதும், உலகை அழிப்பதும் அவன் தொழில், பிரத்தியும்னன் மனதிற்கு உகந்த தெய்வமாதலால் (தேவதையானதால்) அற உபதேசம் செய்வதும், சுத்தவர்க்கங்களைப் படைப்பதும் அவன் தொழில், காக்கும் தொழிலும் தத்துவ ஞானமும் தருவதோடு கண்ட கால படைப்பும் அநிருத்தனுக்கு உரியதாக அமைகின்றன.

இந்த நான்கு வியூக மூர்த்திகளிடமிருந்தும் ஒவ்வொருவருக்கும் மூன்று வியூக மூர்த்திகள் விதம் பன்னிரண்டு வியூக மூர்த்திகள் தோன்றுவர். அவர்கள் விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், இருடிகேசன், பத்மநாபன், தாமோதரன் என்ற வரிசையில் அமைவர்.

இந்தப் பன்னிருவரின் வியூக வடிவங்களை **"நான்கு சுவர்களுக்கு நடுவே அமைந்த தண்ணீர் போல பரமபத நிலையில் அவனை அடைவது அனைவருக்கும் எளிதில்லாமல் போகவே, இக்குறையினைப் போக்க இறைவன் எடுப்பது வியூகம். இதனை வெளிப்பாட்டு வடிவநிலை" (வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், ப.88)** என்பர் . இதனை அணிவகுப்பு நிலை எனவும் குறிப்பதுண்டு .

இவ்வியூக நிலையின் சிறப்பு பற்றி ஆழ்வார்களான பொய்கையார், பேயாழ்வார் ஆகிய இருவரும்,

"கடல் ஓதம் சால் அலைப்பக் கண்வளரும்" (முதல் திருவந்., 16)

"உவர்க்குங் கருங் கடல் நீர் உள்ளான்" (மூன்., திருவந்., 37)

என்று பாசுரங்களால் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம். மேலும் அரவணையில் துயில்வதும், பாற்கடலில் பள்ளி கொள்வதுமான இறைவனின் வியூக நிலையினைத் திருமழிசையாழ்வார் வியூக நிலை மூர்த்திகளென்றும்,

"ஏக மூர்த்தி மூன்று மூர்த்தி நாலு மூர்த்தி நன்மை சேர்
யோக மூர்த்தி புண்ணியத்தின் மூர்த்தி எண்ணில் மூர்த்தியாய்
நாக மூர்த்தி சயனமாய் நலங்கடற் கிடந்து மேல்
ஆக மூர்த்தி யாயவண்ணம் என்கொலாதி தேவனே" (திருச்., விருத். பா. 17)

என்ற பாசுரத்தில் குறிப்பிடுவதிலிருந்து ஏகமூர்த்தி என்பது வாசுதேவனையும், மூன்று மூர்த்தி என்பது சங்கர்ஷணன், பிரத்தியும்னன், அநிருத்தன் ஆகிய மூன்று அவதாரங்களையும் நாலு மூர்த்தி என்பது பிரதானம், புருடன், அவயக்தம், காலம் என்ற தத்துவங்களையும், போக மூர்த்தி என்பது போகத்திற்கு தகுதியான வடிவமாகவும், புண்ணிய மூர்த்தி என்பது புண்ணியமே வடிவாய்க் கொண்ட உருவமாகவும், நாகமூர்த்தி என்பது பாம்பணையில் பள்ளி கொள்ளும் பெருமானையும் எடுத்துக் காட்டுவதை அறியலாம்.

இந்தப் பன்னிரு வியூக மூர்த்திகளும், 'வியூகாந்தரங்கள்' என்றும், 'அவதார வியூக மூர்த்திகள்' என்றும் அழைக்கப்படுகின்றனர். தமிழ் மாதங்கள் ஒவ்வொன்றிற்கும் இவ்வியூக மூர்த்திகள் ஒவ்வொரும் தனித்தனியே அதிதேவதை ஆகின்றனர்.

நம்மாழ்வார் தனது திருவாய்மொழியில் இந்தப் பன்னிருவியூக மூர்த்திகளையும் சிறப்பு செய்து இயற்றிய பாசுரங்கள் 'பன்னிரு திருநாமப் பாட்டு' எனப்படுகிறது.

"வண்ண மாமணிச் சோதியை, அமரர் தலைமகனை
கண்ணனை, நெடுமாலை, தென்குருகூர்ச் சடகோபன்
பன்னிய தமிழ் மாலை ஆயிரத்துள் இவை பன்னிரண்டும்
பன்னில் பன்னிரு நாமப்பாட்டு அண்ணல்கள் அனைவிக்குமே" (திருவாய், 2:7)

என்ற பாசுரம் இதனை உறுதி செய்கிறது. மேலும் வைணவர்கள் தம் திருமேனியில் பன்னிரு திருநாமங்கள் சாத்திக்கொள்வதும் இந்தப் பன்னிரு வியூக மூர்த்திகளின் அடையாளமாகத் தான் என்பது வைணவப் பெரியோர்களின் பொதுவான கருத்தாக இருக்கிறது.

அதோடு இந்த பன்னிருவரும் தனித்தனியே வர்ணம், ஆயுதம் ஆகியன கொண்டிருப்பர்.

பெயர்	**வர்ணம்**	**ஆயுதம்**
கேசவன்	பொன்னிறம்	நான்கு சக்கரங்கள்
நாராயணன்	கருநிறம்	நான்கு சங்கங்கள்
மாதவன்	மணிநிறம்	நான்கு கதைகள்
கோவிந்தன்	சந்திரன் நிறம்	நான்கு சர்க்கங்கள்
விஷ்ணு	தாமரையின் மகரந்த நிறம்	நான்கு கலப்பைகள்
மது சூதனன்	தாமரைப்பூ நிறம்	நான்கு மர உலக்கைள்
திரிவிக்கிரமன்	நெருப்பு நிறம்	நான்கு வாள்கள்
வாமனன்	இளஞ்சூரிய நிறம்	நான்கு வச்சிரங்கள்
ஸ்ரீதரன்	வெண்டாமரை நிறம்	நான்கு கோடாரிகள்
இருடிகேசன்	மின்னல் நிறம்	நான்கு இரும்புலக்கைகள்
பத்மநாபன்	சூரியனின் நிறம்	பஞ்சாயுதங்கள்
தாமோதரன்	இந்திரகோப வர்ணம்	நான்கு கயிறுகள்

இத்தகைய சிறப்பு வாய்ந்த வியூகநிலையில் பரவாசுதேவனுக்கும் வியூக வாசுதேவனுக்கும் செயல் குணங்களில் வேறுபாடுகள் இருப்பதில்லை. மாறாக சங்கர்ஷணன், பிரத்தியும்னன், அநிருத்தன் ஆகியோருக்கும் பரவாசுதேவனுக்கும் செயல் மற்றும் குணங்களில் வேறுபாடு உண்டு என்பதே வியூக நிலைத் தத்துவமாகின்றது.

இந்த வியூக நிலைத் தத்துவம் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், "**வியூக வாசுதேவர்" என்றழைக்கப்படும் வாசுதேவனிடம், பரத்துவத்தில் இருப்பதுபோல் இவரிடம் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேசசு ஆகிய ஆறு குணங்களும் நிறைந்திருக்கும் ஏனைய மூன்றில் அவரவர் மேற்கொண்ட செயலுக்குத் தக்கவாறு ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு குணங்கள் விளக்கமாக இருக்கும். சேதநர்கள் மற்றும் தேவர் முதலியவர்களைக் காப்பதற்காகவும், திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான் மீது உலகப் பாதுகாப்பில் சிந்தை செலுத்தி உறங்குவான் போல் யோகத்தில் ஆழ்ந்திருப்பான்" (வைணமும் தமிழும், ப.198)** என்று குறிப்பிடுகிறார்.

சங்கர்ணர் பற்றிக் குறிப்பிடுகையில் "**ஐசுவரியம், வீரியம் ஆகிய இரண்டு குணங்களும் பொருந்திய இவர் ஞானத்திற்கு ஊற்றுவாயான மனம் என்ற தத்துவத்திற்குத் தலைவராக இருப்பதோடு சாத்திர முறைப்படி ஒழுகவேண்டிய தர்மோபதேசத்தையும், சுத்தவர்க்க சிருஷ்டியையும் செய்பவராக இருக்கிறார்" (வைணமும் தமிழும், ப.199)** என்பதனைத் தெளிவுபடுத்துகிறார்.

அநிருத்தர் பற்றிக் குறிப்பிடுகையில் **"சக்தி, தேஜஸ் என்ற இரண்டு குணங்களுடன் கூடிய இவர், உலகப் பாதுகாப்பிற்கும் உயிர்கள் ஈடேறுவதற்குத் தகுதியான தத்துவ ஞானங்களைக் கொடுப்பதற்கும், காலப் படைப்பிற்கும், மிச்ரவர்க்க சிருஷ்டிக்கும் செய்பவராக இருக்கிறார்" (வைணமும் தமிழும், ப.199)** என்கிறார்.

இவ்வியூக நிலையில் வாசுதேவன், சங்கர்ணர், பிரத்யும்னன், அநிருத்தன் என்றழைக்கப்படும் திருமாலின் நான்கு வகையினையும் பரிபாடலில் கடுவன் இளவெயினனார் எனும் புலவர் வாசுதேவனை "செங்கண்ணார்" என்றும், சங்கர்ணனை "கருங்கண் வென்னா" என்றும், பிரத்யும்னனை "பொன்கட் பச்சை" என்றும், அநிருத்தனை, "பைங்கண் மால்" என்றும் (பரிபாடல்., பா.**3)** குறிப்பிட்டுள்ளதை சங்க காலத்தில் வாழ்ந்தவர்கள் திருமாலின் வியூக நிலைகளை அறிந்திருந்தமையைத் தன் ஆய்வுப் பார்வையில் விளக்கிக் காட்டியுள்ளார். அத்துடன் இவ்வியூகத்தின் கிளை வியூகங்கள் பற்றி பேராசிரியர் குறிப்பிடுகையில் **"கிளை வியூகங்களான நான்கு வியூகங்களும் மும்மூன்று பிரிவுகளாக மாறி பன்னிரண்டு கிளை வியூகங்களாகப் பிரிந்து நிற்பதோடு வியூக வாசுதேவனிடத்திலிருந்து கேசவன், நாராயணன், மாதவன் ஆகிய மூவரும் பிரிவர். சங்கர்ஷணரிடத்திலிருந்து கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன் ஆகிய மூவரும் தோன்றுவர். பிரத்தியும்னனிடத்திலிருந்து திரிவிக்கிரமன், வாமனன், சீரிதரன் ஆகிய மூவரும் பிரிந்து நிற்பர். அநிருத்தனிடத்திலிருந்து இருடிகேசன், பதுமநாபன், தாமோதரன் என்ற மூவரும் பிரிவர்" (வைணமும் தமிழும், ப.199)** என்று கிளை வியூகத் தத்துவத்தினை எடுத்துரைக்கிறார்.

விபவம்

பிறப்பு நிலை எனப்படும் 'விபவம்' என்பதற்குத் தோன்றி வந்த வடிவம் என்பது பொருள். பக்தர்களைக் காக்கவும், தீயவர்களை அழிக்கவும், தர்மத்தின் நியதியை நிலைநிறுத்தவும் ஊழிதோறும் அவதரிப்பதாக கண்ணன் கூறியதை விபவ நிலைக்குச் சான்றாகக் கொள்வர் வைணவர்.

சர்வேஸ்வரனான இறைவன் எங்கும் நிற்கும் தன்மையுடையவனாய் மனிதன், விலங்கு, பறவை, தாவரம், தேவர் போன்ற குலங்களில் பிறப்பது விபவமாகும். அவ்வாறு பிறக்கும் அவதாரங்களில் மிக முக்கியமான பத்து அவதாரங்களைத் 'தசாவதாரம்' என்பர்.

சோமுகாசுரன் என்பவன் பிரம்மனிடம் இருந்து வேதங்களைக் கவர்ந்து சென்று கடலுக்குள் ஒளிந்து கொண்ட நிலையில், அவனை அழித்து வேதங்களைக் கைப்பற்றியது மீனவதாரம். தேவர்கள் அமுதிற்காகப் பாற்கடலைக் கடைந்தபோது, மத்தாக இருந்த மந்தரமலை அழிந்து போகாமல் இருக்க தாங்குவதற்காக எடுத்தது ஆமை அவதாரம்; இரணியாட்சனால் பாதாளத்தில் ஒளித்து வைக்கப்பட்ட பூமியைப் பிரளய நீரிலிருந்து மீட்க வராக அவதாரம் எடுத்தார். பிரகலாதனைக் காத்து, இரணியனை அழித்தது நரசிம்ம அவதாரம். மகாபலியின் செருக்கினை அடக்கியது வாமன அவதாரம். தீமை செய்த அரசர்களை இருப்தோரு தலைமுறை வரை அழிப்பதற்காக எடுத்தது பரசுராமன் அவதாரம். அறம்

தலைத்தோங்கி நிலைபெறுவதற்காக சீதாப்பிராட்டியுடன் கானகம் சென்றது இராம அவதாரம். 'பிரலம்பன்' போன்ற அசுரர்களைக் கொல்வதற்காகவும் கண்ணபிரானின் விளையாட்டுத் துணைவனாகவும் எடுத்து 'பலராமன்' அவதாரம். உலகப் பற்றில் உழல்பவர்களின் துயர் துடைக்கும் பொருட்டு கார்மேகமாக அமுதப் பெருமழைப் பொழிந்தது கண்ணன் அவதாரம் கலியுகத்தின் இறுதியில் தீயவரை அழிப்பதற்காகக், குதிரைமேல் வாளேந்தி வரப்போகும் அவதாரம் கல்கி அவதாரம்! இப் பத்து அவதாரங்களும் சதுர்யுகங்கள் தோறும் மாறி மாறி வருவனவென்பதால் ஒவ்வோர் அவதாரமும் பலவாகுமென்பதும், இந்தப் பத்து அவதாரங்களைத் தவிர பத்மநாபன் தொடங்கி முப்பத்தாறு அவதாரங்கள் உண்டு என்பதும் வைணவர்களின் நம்பிக்கை.

இத்தகு சிறப்பு மிக்க விபவ அவதாரங்கள் முக்கிய அவதாரம் என்றும் முக்கியமல்லாதன (கௌணம்) என்றும் இருவகைப்படும். இவ்விபவ அவதாரங்கள் குறித்துக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் ஆவேச அவதாரத்தைக் 'கௌணாவதாரம்' என்றும், முக்கிய அவதாரத்தை 'சாட்சாத் அவதாரம்' என்றும் சுட்டுகிறார்.

பொதுவாக முக்கிய அவதாரம் என்பது இறைவன் தானே உடலெடுப்பது, மாறாக கௌணம் என்பது இறைவன் ஆவேச உருவ நிலையில் எடுக்கும் அவதாரமாகும். இவ்வாவேச அவதாரத்தில் இறைவன் தானே தனியாக உடலெடுக்காமல், முன்பே பிறந்துள்ள சேதனன் மேல் ஆவேசிக்கிறான் என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

"ஆவேச அவதாரம் என்பது ஒரு குறிப்பிட்ட செயலை நிறைவேற்றும் பொருட்டு ஆத்மாக்களிடத்தில் புகுந்து நிகழ்த்துவது" (வைணவம் தந்த வளம், ப.134) என்னும் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. . மேலும், **"ஆவேச அவதாரத்தில் (கௌணாவதாரம்) சீவகர்களை ஈசுவரன் ஒரு காரியத்தின் பொருட்டு ஆவேச முகத்தால் அதிட்டித்து நிற்பதாலேயே இவை புபுட்சுகளுக்கு (உலத்தாயர்) உபாசிக்கத் தக்கவையேயன்றி முமுட்சுகளுக்கு (மோட்சத்தில் விருப்பமுள்ளவர்கள்) உபாசிக்கத் தக்கவை அல்ல" (வைணவமும் தமிழும், ப.200)** என்கிறார்.

இதைப் போன்றே முக்கிய அவதாரத்தின் (சாட்சாத் அவதாரம்) நிலைபற்றி நம்மாழ்வார் எடுத்துக்காட்டும் பாடல்,

"சாது சனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு
ஆதி அம் சோதிவருவை அங்கு வைத்து இங்கு பிறந்த
வேத முதல்வனைப் பாடி, வீதிகள் தோறும் துள்ளாதார்
ஓதி உணர்ந்தவர் முன்னாஎன் கவிப்பார் மணிசரே!" (திருவாய், 3:5:5)
"மண்சரும் மற்றும் முற்றுமாய் மாயப்பிறவி பிறந்த
தனியன் பிறப்பிலி தன்னை, தடங்கல் சேர்ந்த பிரானை" (திருவாய், 3:5:6)

என்ற பாசுரங்களின்படி **"இராமன், கிருஷ்ணர், வாமன, திரிவிக்கிரமர் முதலான மனித அவதாரங்களும் மச்சம், கூர்மம், வராகம் போன்ற திர்யக் (விலங்கு) அவதாரங்களும், குட்ஜா**

மரம் (குட்டை மரம்) எனப்படும் தாவர வடிவங்களும் அடங்கும்" (வைணவமும் தமிழும், ப.**201)** என்கிறார்.

இவை மட்டுமின்றி இத்தகைய முக்கிய அவதாரங்கள் யாவும் "**ஒரு விளக்கிலிருந்து கொளுத்திய மற்றொரு விளக்கு தனக்குக் காரணமான விளக்கின் தன்மைகளைப் பெற்றிருப்பதனைப் போல அசாதாரண விக்கிரத்தின் தன்மையைக் கொண்டிருத்தலால் முமுட்சுகளுக்கு உபாசிக்கத் தக்கவையாக அமைகின்றன" (வைணமும் தமிழும், ப.201)** என்கிறார்.

மேலும், இவ்விரண்டு வகையான விபவ அவதாரங்களும் எம்பெருமானின் இச்சையாலேயே ஏற்பட்டதென்றும் பகவத் கீதை கூறுவதுபோல இவ்வதாரங்களின் பலன் அடைந்தாரைக் காத்தல், அவர்தம் விரோதிகளைப் போக்குதல், வைதிக தருமத்தை நிலை நிறுத்தல் ஆகிய மூன்று தன்மைகளையும் எடுத்துரைப்பதனை வலியுறுத்துகிறார்.

அதர்மம் தலைதூக்கும் சமயங்களிலெல்லாம் திருமால் அவதாரங்கொண்டு அவ்வதர்மத்தினை அழித்து தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டே இவ்வவதாரங்களை எடுத்திருக்கிறார் எனலாம்.

இலக்கியத்தில் அவதாரக் குறிப்புகள்

தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் அவதாரங்கள் பற்றிய செய்திகளுள் இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், பலராமவதாரம் பற்றிய குறிப்புகளே அதிகமாகக் காணப்படுகின்றன. சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் திருமாலுக்கு உரிய அவதாரச் செயல்களாகச் சோ என்னும் அரணை அழித்தமை, தாதை ஏவலின் தம்பியோடு காணம் சென்றமை, கன்று குணிலாக் கனியுதிர்த் தமை, குருந்து ஒசித்தமை ஆகியவற்றை இளங்கோவடிகள் எடுத்துரைத்துள்ளார்.

"கருத்தெறல் இராமனுடன் புணர் சீதையை
வலித்தொகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் பதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப் பொலிந்தா அங்கு
அறாஅ அருநகை இனிது வெற்றிகுமே" (புறநானூறு, பா.378)

என்ற புறநானூற்றுப் பாடலின் வாயிலாக சீதை வீசியெறிந்த அணிகலன்களைக் குரங்குகள் எடுத்து முறைமாற்றி அணிந்து கொண்டிருந்த செய்தி புலப்படுகிறது. இதன்வாயிலாக இராமாவதாரச் செய்திகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்களுக்கு நன்கு தெரிந்திருந்தமை புலனாகிறது.

"வென்வேற் கவுரியர்தென் முதுகோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்னுரை
வெல்போர் இராமன் அருமறை அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலி அவிந்தன்று இவ்வழுங்கல் ஊரே" (அகநானூறு, பா.70)

என்ற அடிகளால் தமிழகத்தின் தனுஷ்கோடியில் இராமன் மந்திராலோசனை செய்துகொண்டிருந்த வேளையில் ஆலமரத்தில் அப்பறவைகளின் ஒலி எழுப்பி இடையூறு செய்ததையும் இராமபிரான் அப்பறவைகளின் ஒலியை அடக்கியதையும் அறியமுடிகிறது.

"தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய் ஆதியாய்

மூவுரு வினிராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் குறளாய்" (பெரியாழ்., திரு., 4:9:9)

என்று பெரியாழ்வார் எடுத்துக்காட்டும் தசாவதார வரிசையும்,

"மீன அமர் பொய்கை நாள்மலர் கொய்வான்" (பெரிய., திரு., 2:3:9)

"மீனோடு ஆமைகேழல் அரிகுறளாய் முன்னும் இராமானாய்த்

தானாய் பின்னும் இராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும்

ஆனான் தன்னை" (பெரிய., திரு., 8:8:10)

என்று திருமங்கையாழ்வார் கூறும் தசாவதார வரிசையும் உணர்த்துவதிலிருந்தும், திருமாலின் அவதாரங்கள் அனைத்தும் அறத்தின் வழிநின்று தர்மத்தை நிலைநாட்டத்தான் மேற்கொள்ளப்பட்டன என்பது புலனாகிறது.

இவ்வாறு ஆழ்வார்கள் தசாவதார எம்பெருமான்களை அனுபவித்து இயற்றிய பாசுரங்களின் தன்மைகளை ந.சுப்புரெட்டியார் திறம்பட எடுத்துரைக்கிறார்.

மச்சாவதாரம்

தசாவதாரங்களில் முதல் அவதாரமாகக் கருதப்படும் மச்சாவதாரம் என்பது சோமுகன் எனும் அரக்கன் நான்முகனிடம் இருந்து திருடிச் சென்ற நான்கு மறைகளை மீட்பதற்காக, அவ்வரக்கன் ஒளிந்திருந்த கடலுக்குள் செல்வதற்கு திருமால் எடுத்தது மீன் அவதாரமாகும்.

திருமழிசையார் **"அம்புலாவு மீனுமாகி" (திருச்சந்., 35)** என்றும், **"மீனாய் உயிர் அளிக்கும் வித்து" (நான்முகன் திருவந்தாதி, பா. 22)** என்றும் மச்சவதாரத்தைப் போற்றிப் பாடியுள்ளார்.

இவ்வவதாரத்தினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் திருமங்கையாழ்வார் அனுபவித்த மச்சாவதாரத்தினை,

"கொழுங்கயலாய் நெடுவெள்ளம் கொண்ட காலம்

குலவரையின் மீதோடி அண்டத் தப்பால்

எழுந்தின்று விளையாடும் ஈசன் எந்தை" (பெரிய., திரு., 6:6:3)

என்ற பாசுரத்தினாலும்,

"வானோர் அளவும் முது முந்நீர்

வளர்ந்த காலம் வலியுருவின்

மீனாய் வந்து வியந்துய்யக்

கொண்ட தண்தார மரைக்கண்ணன்" (பெரிய., திரு., 8:8:1)

என்ற பாசுரத்தினாலும்,

"அலைகடல் நீர்கு ழம்ப அகடாட

ஓடி அகல்வான் உரிஞ்ச முதுகில்

மலைகளை மீது கொண்டு வரூமீனை

மாலை மறவா திறைஞ்சென் மனமே"　　(பெரிய., திரு., 11:4:1)

என்ற பாசுரத்தினாலும் எடுத்துக்காட்டியுள்ளார். மச்சவதாரத்தின் சிறப்பினை,

"ஒரு பிரமகல்ப முடிவில் பிரம சம்பந்தமான நைமித்திகப் பிரளயம் உண்டானபொழுது பூமி முதலிய உலகங்கள் கடலால் சூழப்பட்டு மூழ்கும் சமயத்தில் உறக்கம் தெளிந்தெழுந்து அந்த நீரில் படுக்க முயன்ற நான்முகனின் நான்கு மறைகளையும் அயக்கிரிவன் எனும் தானவன் அபகரித்துச் சென்று விட்டான். அப்பொழுது எம்பெருமான் இலட்ச யோசனை நீளமும், பதினாயிரம் யோசனை பருமனும், ஒற்றைக் கொம்பும், பொன் மயமான நிறமும் உள்ள மீன் வடிவமாக மக்கள் எல்லோரையும் கவரவல்ல உருவம் கொண்டு அண்ட கடாகத்தளவும் செல்லத் துள்ளி விளையாடி முன்பு தாவுவான் கவர்ந்து சென்ற மறைகளை மீட்டுக் கொடுத்தது மட்டுமின்றி மக்களையும் பிறவற்றையும் பிரளாயத்தினின்றும் காத்தது மச்சாவதார வரலாறு" (பரகாலன் பைந்தமிழ், ப.461) என்கிறார்.

இதிலிருந்து பிறவிப் பெருங்கடலில் நீந்திக் கரையேற வேண்டும் என்ற தத்துவத்தினையும், அழுக்குகளைத் தனக்கு ஆகாரமாக்கிக் கொண்டு கடலினை சுத்தப்படுத்தும் மீனினைப் போல தனக்கு வரக்கூடிய எப்பலன்களும் எவ்விதமாயினும், தன்னைச் சார்ந்தவர்களுக்கு அதனால் கிடைக்க கூடிய பலன் நற்பயனே என்ற உயர்ந்த தத்துவத்தினை விளக்கும் பொருட்டே மச்சாவதார நிலை அமைந்திருப்பதனை அறிய முடிகிறது.

கூர்மாவதாரம்

தேவர்களுக்கு அமிர்தமளிக்கும் பொருட்டு பாற்கடலை தேவர்கள் நின்று கடைவதற்கு ஏற்றதாய்ப் பெரியதொரு மலையினை தன்னுடைய முதுகில் சுமந்து நின்ற கூர்மையான வலிமை கொண்ட ஆமை வடிவெடுத்து எடுத்து உயிர்களைக் காத்த திருமாலின் சீர்மிகு இவ்வவதாரத்தினை,

"திகழொளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்திகழ்பெழ

வாங்கித் தஞ் சீர்ச்சிரத் தேற்றி

மகர மறிகடல் வைத்து நிறுத்து"　(பரிபாடல், பா.1: 64–66)

என்ற அடிகளில் பரிபாடல் சுட்டுகிறது. பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகியோர் இக் கூர்மாவதாரச் சிறப்பினை,

"ஆமை ஆகி ஆழ்கடல் துயின்ற ஆதி தேவ"　　(திருச்., விருத்., 14)

"பாசம் நின்ற நீரில் வாழும் ஆமையான கேசவா"　(திருச்., விருத்., 20)

"அம்பு உலாவு மீனுமாகி, ஆமையாகி"　　(திருச்., விருத்., 35)

என்ற பாசு அடிகளாலும்,

"மலை ஆமை மேல் வைத்து வாசுகியைச் சுற்றி

தலை ஆமை தான் ஒரு கை பற்றி அலையாமல்

பீறக் கடைந்த பெருமான் திருநாமம்

கூறுவதே யாவர்க்கு கூற்று" (நான்., திரு., 49)

என்ற பாசுரத்தினாலும் எடுத்துரைத்துரைத்து உள்ளனர்,

"ஆமையாய் சிங்கையாய் ஆழ்கடலாய்" (பெரியாழ்., திரு., 4:9:5)

என்ற பாசுரத்தில் பெரியாழ்வர் உணர்த்துவதிலிருந்தும்,

"மலைமுகடு மேல் வைத்து வாசுகியைச் சுற்றி

தலைமுகடு தான் ஒருகை பற்றி அலை முகட்டு

அண்டம்போய் நீர்தெறிப்ப அன்று கடல் கடைந்தான்

பிண்டமாய் நின்ற பிரான்" (மூன்., திரு., 46)

என்ற பாசுரத்தில் பேயாழ்வார் சுட்டிக்காட்டுவதிலிருந்தும் கடலைக் கடையும் வல்லமை இன்றி தேவர்களும் அசுரர்களும் தவித்த வேளையில் திருமால் ஆமையுருவுடன், தோன்றி பாற்கடலைக் கடைந்து அமிழ்தினை உண்டாக்கிய திறத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

ஆபத்துக் காலங்களில் ஆமையானது தனது ஐம்பொறிகளையும் உள்ளிழுத்துத் தனது முதுகுப் புறத்தினை மட்டும் வெளிகாட்டுவதைப் போல் இறைவன் தனது உறுப்புகளான சேதநர்களைக் காக்கும் பொருட்டு அவர்களை அரவணைத்துக் கொண்டு தனி ஒருவனாகவே ஆபத்தினை எதிர்கொள்ளும் தன்மையானவன் என்பதை வலியுறுத்துகிறது.

இது மட்டுமின்றி நன்னெறி வாழ்பவர்கள் ஐம்புலன்களையும் அடக்கி திருமாலாகிய இறைவனைச் சரணடைந்தால் அவர்களைக் காப்பதுதான் இறைவனின் நிலையான கடமை பொறுப்பென்பதை அனைவருக்கும் உணரச் செய்யத்தான் இக்கூர்மாவதாரம் எடுத்துக்காட்டப் பட்டது என்று வைணவர்கள் நம்புகிறார்கள். இதனையே வள்ளுவரின்,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்

எழுமையும் ஏமாப்பு உடைத்து" (குறள். 126)

என்ற குறள் உறுதிப்படுத்துவதிலிருந்தும் தெளிவு பெறலாம்.

வராக அவதாரம்

ஏனம், பன்றி, கேழல் என்றெல்லாம் குறிக்கப்படும் அவதாரம் வராக அவதாரம் ஆகும். சங்க இலக்கியமான பரிபாடலில்,

"கேழல் திகழ்வரைக் கோலமொடு பெயரிய ஊழி" (பரிபாடல், பா.2–16)

என்ற அடிகளிலும்,

"வாழி ஆழிக்கண் இருநிலம் உருகெழு

கேழாய் மருப்பின் உழுதோய் எனவும்" (பரிபாடல், பா.3:21–24)

என்ற அடிகளிலும் இவ்அவதாரம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. பன்றியினைப் பார்த்த மாத்திரத்தில் அதன் அருவருப்பான தோற்றத்தினைக் கண்டு முகம் சுழிப்பது அனைவரின் வழக்கம். மாறாக **"எப்பிறவியும் இழிந்ததன்று என்பதனையும், எதனையும் ஆழ்ந்து நோக்குதல் வேண்டும் என்பதனையும் விளக்குவதற்கு இறைவன் எடுத்த அவதாரமே வராக அவதாரம்" (தசாவதாரத்**

தத்துவங்கள், ப.56) பார் கூற்றால் அனைத்து உயிர்களையும் நேசிக்கும் மனப்பாங்கு மனிதர்களிடையே உருவாக வேண்டுமென்பதை உணர்த்துவதற்காகத்தான் திருமால் வராக அவதாரம் எடுத்தார் என்பது தெளிவாகிறது.

இவ்வராக அவதாரச் சிறப்பினை திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் தங்களின் பாசுரங்களினால் பரவிப் போற்றியுள்ளனர்.

"வராகத் தணியுருவம் பாதம் பணிமின்" (இரண்., திருவந்., 31)

"பன்றியாய் அன்று பாரகம் நீண்ட பாழியான்" (பெரிய., திரு., 1:1:3)

"பன்றி ஆய், மீனாகி, அரிஆய், பாரைப்
படைத்து, காத்து, உண்டு, உமிழ்ந்த பரமன்" (பெரிய., திரு.,7:8:10)

"பன்றியாய் அன்று பார் மகள் பயலை
தீர்த்தவன்; பஞ்சவர் பாகன்" (பெரிய., திரு.,9:1:4)

"அன்னமும் கேழலும் மீனும் ஆய" (பெரிய., திரு.,9:2:10)

"ஒன்று சென்ற ஏதான்றையுண்ட தோன்றிடந்து பன்றியாய்
நன்று சென்ற நாளவற்றுள் நல்லுயிர் படைத்தவர்க்கு" (திரு., சந்., 48)

"பள்ளி மாய! பன்றி ஆய வென்றி வீர" (திரு., சந்., 102)

"பண்பொருநாள் மாசூடம்பில் நீர்வாரா மானமிலப் பன்றியாம்" (நாச்., தி., 11:8)

"பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய பாற்கடல் வண்ணா" (பெரிய., திரு.,3:3:7)

என்றவாறு வராக அவதாரத்தினை எடுத்தியம்புவதிலிருந்தும், இத்தகைய சிறப்பு மிக்க வராகப் பெருமானை மனமுருகி நினைப்பவர்க்கே விண்ணாடு உண்டு, ஏனையவர்களுக்கு விண்ணாடு இல்லை என்பதை,

"ஊனக் குரம்பையின் உள்புக்கு இருள் நீக்கி
ஞானச் சுடர்கொளீஇ நாள்தோறும் ஏனத்து
உருவாய் உலகு இடந்த ஊழியான் பாதம்
மருவாதார்க்கு உண்டாமோ வான்" (முதல்., திருவந்., 92)

என்று பொய்கையாழ்வார் தனது பாசுரத்தினால் சுட்டிக் காட்டுவதிலிருந்தும் அறிய முடிகிறது. இவ்வாறாக அவதாரம் குறித்துக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் திருமங்கையாழ்வார் சுட்டிக்காட்டும்,

"சிலம்பின் இடைச் சிறுபரல் போல் பெரியமேரு
திருக்குளம்பில் கணகணப்ப தீருஆகாரம்
குலுங்க, நிலமடந்தை தனைஇடந்து புல்கிக்
கோட்டிடைவைத் தருளியஎம் கோமான் கண்டீர்" (பெரிய., திரு.,4:4:8)

என்ற பாசுரத்திலும்,

"சிலம்பு முதல் கலன் அணிந்து ஓர் செங்கண் குன்றம்

திகழ்ந்ததென, திருவுருவம் பன்றி ஆகி

இலங்குபுவி மடந்தைதனை இடந்து புல்கி

எயிற்றிடை வைத் தருளிய எம் ஈசன் காண்மின்" (பெரிய., திரு.,7:8:4)

என்ற பாசுரத்திலும் பூமிப்பிராட்டியைத் தனது பெரிய வராக அவதாரத்தின் பயனாகத் தனது கோட்டால் குத்தி எடுத்து அணைந்துத் தந்தத்தில் வைத்தருளிய சிறப்பு பெற்ற அவதாரமாகத் திகழ்வதையும் குறிப்பிட்டுள்ளார்.

"தீதறு திங்கள் பொங்கு சுடரும்பர்

உம்பர் உல கேழினொடும் உடனே

மாதிரம் மண்சு மந்தவிட குன்றும்

நின்ற மலையாளும் ஏழு கடலும்

மாதவர் சூழ்கு எம்பின் அகமண்ட

லத்தின் ஒரு பால் ஒடுங்க வளம்சேர்

ஆதிமுன் ஏன மாகி அரணாய

மூர்த்தி அது நம்மை ஆளும் அரசே" (பெரிய., திரு.,11:4:3)

என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார் "**சந்திரன், சூரியன் முதலிய அனைத்து அண்டங்களும் திருவடிக்குளம்பின் ஏகதேசத்தில் ஒடுங்கும்படியாக வளர்ந்த வராக நாயனார் நம்மை ஆளவந்த பிரபு என்று கூறி தம்மையே மறந்து அனுபவிக்கின்றார்" (பரகாலன் பைந்தமிழ், ப.459)** என்பதனை எடுத்துரைப்பதிலிருந்து நிலப்பிராட்டியைக் காத்த பெருமை மிக்க அவதாரமாகவும், உலக உயிர்கனைத்தையும் நிலப்பிராட்டியைத் தழுவிக் கொண்டதைப் போல தழுவிக் காப்பாற்றும் வல்லமை கொண்ட அவதாரம் வராக அவதாரம் என்பதை ந.சுப்புரெட்டியார் புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

நரசிம்ம அவதாரம்

வராகப் பெருமானால் தன் தம்பி இரணியாட்சன் கொல்லப்பட்டதை அறிந்த இரணியன் நான்முகனை வேண்டிக் கடுந்தவம் இருந்ததன் பயனாக அவன் முன்தோன்றிய நான்முகன், நின் வரம் யாது ? என வினவினான். அதற்கு இரணியன் தேவர்கள், அசுரர்கள், விலங்குகள், இரவு, பகல், பஞ்சபூதங்கள், வீட்டின் அகமும் புறமும், எவ்வித ஆயுதங்களாலும் தனக்கு மரணம் நேரக்கூடாது என வேண்டி வரம் பெற்றான்.

அவ்வரம் பெற்ற செருக்கினால் தானே கடவுளென்று அனைவரையும் துன்புறுத்த, அவன் மைந்தனான பிரகலாதன் 'நாராயணனே தெய்வம்' என்று வணங்கி வேறு எவரையும் வணங்காமல் வாழ்ந்து வந்ததினால் தன் மைந்தன் என்றும் பாராமல் அவனுக்குப் பல தண்டனைகள் கொடுக்கத் தொடங்கினான்.

ஆனால், தன் மகன் நாராயணியக் கொள்கையில் உறுதியாக இருப்பதைக் கண்டு உன் நாராயணன் எங்குள்ளான் ? என்று கேட்க உடனே பிரகலாதன் அவன் இல்லாத இடமே இல்லை தூணிலும், துரும்பிலும் இருப்பான் என்று கூற, இந்தத் தூணில் இருப்பானா ? என்று கேட்டு

இரண்டாகப் பிளக்க அதிலிருந்து சிங்கத் தலையும், மனித உருவும் கொண்ட நரசிம்ம அவதாரமாய்த் திருமால் வெளிப்பட்டு இராணியனை அவன் வாங்கிய வரம் பொய்க்காதபடி அவனைத் தன் மடிமேல் போட்டு, அந்தி வேளையில், வாசற்படியில் வைத்து கூரிய நகத்தின் மூலம் மார்பைப் பிளந்து கொன்றார்.

அனைத்து இடங்களிலும் அருள் வடிவான இறைவன் நிறைந்திருக்கும் தன்மையை வெளிப்படுத்திக் காட்டும் வகையில் நரசிம்ம அவதாரம் எடுக்கப்பட்டது என்பதை பேராசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

சங்க இலக்கியங்களில் நரசிங்கம் என்ற சொல்ல காணப்படவில்லை. எனினும் பரிபாடலில் பிருங்கலாதன் தாதை வதையானது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் பிரகலாதன் மீது சீற்றம் கொண்ட இரணியனது சினத் தீயால் அவனது மார்பில் பூசியிருந்த சந்தனம் உதிர்ந்ததால், அந்த வெற்று மார்பினையே திருமால் தன் காலால் தடிந்து உகிரால் கிழித்தெறிந்தார் என்கிறது பரிபாடல்.

ஆனால், ஆழ்வார்களின் பாசுரங்கள் இந்த நரசிம்ம அவதாரத்தினை சற்று வேறுபாடாகவும் விரிவாகவும் எடுத்துரைக்கின்றன.

"உரம் பற்றி இரணியனை உகிர்நுதியால்
ஒன்னிய மார்புறைக்க வூன்றி" (பெரிய., திரு.,4:9:8)
"அளந்து இட்ட தூணை அவன் தட்ட ஆங்கே
வளர்ந்திட்டு வாள்உகிர் சிங்க உருவாய்
உளந்தொட்டு, இரணியன் ஒண்மார்பு அகலம்
பிளந்திட்ட கையால்" (பெரிய., திரு.,1:7:9)

என்ற பாசுரங்களின் வழியே நரசிம்ம அவதாரத்தின் சிறப்பினைப் பெரியாழ்வார் கூறுவதிலிருந்து தெளிவாக அறிய முடிகிறது. மேலும் திருமால் இரணியனைக் கொன்றதன் மூலம் அவனது உயிரை மட்டுமின்றி இரணியனது ஆணவத்தினையும் சேர்த்தே அழித்தார் என்று கூறவந்த பேராசிரியர் அதற்குத் துணையாக,

"முன் நரசிங்க மதுஆகி அவுணன்
முக்கியத்தை முடிப்பான்" (பெரிய., திரு., 3:6:5)

என்ற பாசுரத்தைச் சான்று காட்டித் தன் கருத்தை நிறுவியுள்ளார். திருமழிசையாழ்வாருக்கு இவ் அவதாரத்தின் மீதிருந்த ஈர்ப்பினை, "சிங்கமாய தேவ தேவ" (திரு., சந்., வி.24) என்று புகழ்வதிலிருந்தும்,

"சிங்கம் அதுஆய் அவுணன் திறல் ஆகம் முன் கீண்டு உகந்த" (பெரிய., திரு.,7:6:1)
"ஆமை ஆகி, அரி ஆகி, அன்னமாகி" (பெரிய., திரு., 8:6:5)
"உளைந்த அரியும் மானிடமும் உடனாய்த் தோன்ற ஒன்று வித்து" (பெரிய., திரு.,8:8:4)
"மீனோடு, ஆமை கேழல், அரி குறளாய்" (பெரிய., திரு., 8:8:10)
"பரிய இரணியனது ஆகம் அணி உகிரால்

அரி உரவாய்க் கீண்டான்"   (பெரிய., திரு., 9:4:4)

என்ற பாசுரங்களின் வழியே போற்றிப் பாடுவதிலிருந்தும் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் சான்றுகளை எடுத்துரைத்துள்ளார். மேலும்,

"திண்ணியதோர் அரியுருவாய் திசையனைத்தும் நடுங்க

தேவரோடு தானவர்கள் திசைப்ப இரணியனை

நண்ணியவன் மார்பகலத் துகிர்மடுத்த நாதன்"   (பெரிய., திரு., 3:9:2)

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரத்தினை எடுத்துக்காட்டி, **"வலிமை மிக்க சிங்க உருவம் கொண்டு தேவர்களும் அசுரர்களும் கலங்கும் வண்ணம் தனது கூரிய நகத்தினால் ஊன்றிப் பிளந்து இரணியனைக் கொன்றான்" (பரகாலன் பைந்தமிழ், ப.461)** என்று தெளிவுபடுத்தி, மிருககுணம் கொண்டவர்களை அழிப்பதற்கு மனிதன் சில நேரங்களில் மிருகமாகவே மாற வேண்டியது இருக்கும் என்றும், அத்தகைய பண்பு இல்லையெனின் மனிதகுலம் தழைத்தோங்கி வாழ்வது கடினம் என்றும் தன் புதிய நோக்கினைப் பதிவு செய்கிறார். அது மட்டுமின்றி ஒவ்வொருவருக்குமான சத்தியென்பது இறைவன் அறிந்தது என்றும் அந்த அளப்பறிய சக்தியில் ஆணவம் புகுந்திட்டால் அந்த ஆணவமே அழிவிற்கும் காரணமாகின்றது என்றும் தன் கருத்தினை உணர்த்துகிறார்.

வாமனவதாரம்

திருமால் குள்ளமான வடிவில் தோன்றி மாவலியின் செருக்கினை அடக்கிப் பின்னர் பேருருவம் கொண்டு மூவுலகினையும் தம் இரண்டடியால் அளந்ததை வாமன அவதாரம் என்பர். இதனை பரிபாடல்,

"நின் சேவடி தொழாரும் உளரோ ? அவற்றுள்

கீழ் உலகமும் உற்ற அடியினை" (பரிபாடல், பா.3.20)

என்றும், கலித்தொகை (124), பெரும்பாணாற்றுப்படை (29), முல்லைப்பாட்டு (1–3), சிலப்பதிகாரம் (6:11:17) ஆகிய இலக்கியங்களும் வாமன அவதாரத்தின் சிறப்பினை எடுத்துரைப்பதும் இவ் அவதாரத்தைக் குறித்து அறிவதற்குத் துணை செய்கிறது.

மாபலி எனும் அசுரன் தன் வல்லமையால் மூவுலகங்களையும் அடிமைப்படுத்தி ஆண்டதினால் தேவர்கள் மிகவும் துன்புற்றனர். தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடி திருமாலிடம் முறையிட, திருமால் அதற்காக வாமன அவதாரம் எடுத்து, தான் தவம் செய்வதற்கு மாபலியிடம் மூன்றடி மண் கேட்க, மாபலியின் குருவான சுக்ராச்சாரியார் வந்திருப்பது குறுமுனிவன் அல்ல. உன்னைச் சோதிக்க வந்திருக்கும் திருமால் என்று எடுத்துக்கூறியும் திருமாலின் தோற்றத்தினை எள்ளி நகையாடி மூன்றடி மண் தர சம்மதித்தான்.

உடனே திருமால் வானுயர்ந்த நெடுந்தோற்றம் கொண்டு இரண்டடியால் மண்ணையும் விண்ணையும் அளந்து மூன்றாவது அடியால் மாபலியை பாதாளத்தில் ஆழ்த்தி அவன் ஆணவத்தை அடக்கினான்.

இத்தகு சிறப்பு மிக்க வாமனாவதாரம் குறித்து ஆழ்வார்கள் தங்களது பாசுரங்களில்,

“மாறடர்த்தும் மண்ணளந்ததும்” (பெரிய., திரு.,2:3)

“மச்சு அணி மாட மதிள் அரங்கன் வாமனனார்” (நாச்., திரு., 11.4)

“வன்புற்று அரவின் பகைக்கொடி வாமன தம்பீ” (பெரிய., திரு., 2:3:4)

“வாமனன், கல்கி. மதுசூதனன், மாதவன்

தார்மன்னு சாரதி ஆய தடமார்வன்” (பெரிய., திரு., 8:4:7)

“உவந்த உள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற

நிவந்த நீள்முடியன்” (அம., பிரான்., 2)

“அறிந்தறிந்து வாமனன் அடியினை வணங்கினால்” (திருச்சந்., 74)

“பொல்லாக் குறள் வருவாய் பொற்கையில் நீர் ஏற்று

எல்லா உலகும் அளந்து கொண்ட எம் பெருமான்” (நாச்., திரு., 11.5)

என்றவாறு எடுத்துரைப்பதிலிருந்து அறியமுடிகிறது. இவ்வாறு குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், ஆண்டாள் போன்றோர் வாமன அவதாரத்தின் சிறப்பினை போற்றிப்பாடியதை எடுத்துரைத்து இவ் அவதாரச் சிறப்பினை ந.சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ளார்.

“கண்டவர்தம் மனம்மகிழ மாவலிதன் வேள்விக்

கனவுஇல்மிகு சிவகுறளாய் மூவடி என்று இரந்திட்டு

அண்டமும் இவ் அலைகடலும் அவனிகளும் எல்லாம்

அளந்த பிரான்” (பெரிய., திரு., 3:10:5)

என்ற திருமங்கையாழ்வாரின் பாடலைச் சுட்டிக்காட்டி, **“அதுகூலர் பிரதிகூலர் என்ற வேற்றுமையின்றி எவர் பார்த்தாலும் அவருடைய நெஞ்சைக் கவரக்கூடியப் பேரழகு வாய்த்த வாமன மூர்த்தியாகி மாவலியின் வேள்வி நிலத்தில் எழுந்தருளி என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடி மண் தா என்று யாசித்து மூவடி மண் பெற்று உடனே விம்மி வளர்ந்து எல்லா உலகுங்களையும் கவர்ந்து கொண்ட எம்பெருமான்” (பரகாலன் பைந்தமிழ், ப.463)** என்றவாறு இவ்வவதாரத்தினை அனுபவிப்பதிலிருந்து வாமன அவதாரத்தின் தனிச்சிறப்பு புலனாகிறது. மேலும்,

“வானவர் தம் துயர்தீர வந்து தோன்றி

மாண்வரு ஆய் மூவடிமா வலியை வேண்டி

தானமர ஏழ்உலகும் அளந்த வென்றித்

தனிமுதல்சக் கரப்படைஎன் தலைவன்” (பெரிய., திரு., 7:8:6)

என்று திருமங்கையாழ்வாரின் வாக்குப்படி **“தேவர்களின் வருத்தம் தீர வாமன அவதாரமாய் அவதரித்து ஏழுலகமும் தன் காலடியின் கீழ் அடங்கும்படி தனதாக்கிக் கொண்ட வெற்றியானது ஒப்பற்றதும் முதலானதுமான சிறப்பு பெற்றது” (பரகாலன், பைந்தமிழ், ப.463)** என்ற கருத்தினைப் பதிவு செய்திருக்கிறார்.

இதிலிருந்து தானென்ற அகங்காரத்தினையும், ஆணவத்தினையும் கொண்டவர்களைச் செறுக்கடக்கி ஞானத்தைத் தரும் வல்லமை கொண்டவன் திருமால் என்பதும் ஒருவரின் உருவத்தினைக் கண்டு அவரை இழிவுபடுத்தக்கூடாது என்று ‘உருவு கண்டு எள்ளாமை வேண்டும்’ என்ற பழமொழி எடுத்துரைப்பதைப் போல வடிவத்தினை வைத்து எவரையும் மதிப்பிடக் கூடாது என்பதும்,

“பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பைத் தரும்” (குறள்., 892)
“எரியார் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார் பிழைத்தொழுகு வார்” (குறள்., 896)

என்ற குறள்கள் உணர்த்துவதனைப் போல் ஆற்றல் மிகுந்த பெரியாரான திருமாலினை மதித்து நடக்காமல் இருந்ததினாலும், தவறு செய்து நடந்ததாலும், மாவலியின் ஆணவம் அழிக்கப்பட்டது என்ற கருத்தைப் புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

அதுமட்டுமின்றி குருவாகிய பெரியோரின் சொற்கேளாமல் திரிபவர்களின் அலட்சியத்தினால் வரும் விழைவினை,

“அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்” (குறள்., 441)

என்ற குறள் விளக்குவதனைப் போல் தனது குருவான சுக்ராச்சாரியார் கூறியதைக் கேளாமல் செருக்கோடு நடந்து கொண்டதால் தனக்குண்டான அழிவினைத் தேடிக் கொண்டான் என்பதும் வாமன அவதாரத்தின் வழி தெளிவாகிறது.

பரசுராம அவதாரம்

பரசுராம அவதாரம் என்பது திருமால் ஆவேசகுணம் கொண்ட உருவாய் அமைந்த அவதாரமாகும். ஜமதக்னி என்ற முனிவருக்கும் ரேணுகா தேவிக்கும் மைந்தராய்ப் பிறந்த இவ்வவதாரத்தினால் தன் தாய் செய்த தவறுக்காகத் தந்தையின் ஆணைப்படி அத்தாயின் தலையினை வெட்டி தந்தை சொல் காத்த தனையனாக விளங்கினார்.

ஒரு சமயம் கார்த்த வீரியார்ச்சுனன் என்ற மன்னன் காட்டிற்கு வேட்டையாட வந்தபோது ஜமதக்னி முனிவர் ஆசிரமத்திற்கு வந்தான். அச்சமயம் பரசுராமர் அங்கு இல்லாததால் வந்த மன்னனை முனிவர் வரவேற்று அவனுக்கும் அவன் படைகளுக்கும் காமதேனுவைக் கொண்டு விருந்தளித்துச் சிறப்பித்தார். அவ்விருந்துக்குக் காரணமான காமதேனுவைக் கேட்க, ஜமதக்னி முனிவர் மறுத்ததினால் காமதேனுவை மன்னன் அவரிடமிருந்து அபகரித்துச் சென்றான். இதனை அறிந்த பரசுராமர் மன்னனுடன் போரிட்டு அவனது ஆயிரங்கரங்களையும் வெட்டிக் கொன்று காமதேனுவை மீட்டார்.

தன் தந்தை பரசுராமரால் கொல்லப்பட்டதை அறிந்த மன்னனின் மகன் பரசுராமர் இல்லாத நேரத்தில் ஜமதக்னி முனிவரைக் கொன்றுவிட அதனால் வெகுண்டெழுந்த பரசுராமர்

மன்னன் மகனைக் கொன்றதோடு நில்லாமல் அந்த மன்னரின் வம்சத்தையே இருபத்தோரு தலைமுறைகளையும் அழித்துக் கொல்வதற்காக முயன்று அதன்படி அழித்துக் கொன்றார்.

அறநெறியினை மறந்த மன்னர்களை அழிக்கும் அவதாரமாகவே இவ்வவதாரம் கருதப்படுகிறது. அகநானூறு இச்செய்தியினை,

"கடா அ யானைக் குழூஉச் சமம்ததைய

மன்மருங்கு அறுத்த மடுவாள் நெடியோன்

முன் முயன்று அரிதினின் முடிந்த வேள்வி" **(அகநானூறு, பா. 220)**

என்று அரசர் குலத்தினை வேரோடு ஒழிக்க முற்பட்ட பரசுராமருடைய செய்கையினை எடுத்துரைக்கிறது. இவ்வவதாரம் குறித்து மணிமேகலையும் (மணி–22) சுட்டிக் காட்டுகிறது.

இவ்வவதாரத்தின் சிறப்பினை திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் போன்ற ஆழ்வார்கள்,

"முன்னொரு நாள் மழுவாளி சிலை வாங்கி

அவன் தவத்தை முற்றும் செய்தாய்" **(பெரு., திரு., 92)**

"ஈசனை வென்ற

சிலை கொண்ட செங்கன்மால்" **(நான்., திரு., 8)**

"மழுவினால் அவனி அரசைமூ வெழுகால்

மணிமுடி பொடிபடுத்து உதிரக்

குழுவார் புனலூள் குளித்துவெங் கோபம்

தவிர்ந்தவன்" **(பெரிய., திரு., 9:1:6)**

என்றவாறு தங்களது பாசுரங்களில் சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வவதாரத்தின் தன்மை குறித்து எடுத்துரைக்குமிடத்து ந.சுப்புரெட்டியார் திருக்கண்ணங்குடி எம் பெருமானைச் சுட்டிக்காட்டி, **"கார்த்த வீரியனின் மக்கள் இயற்றிய குற்றம் காரணமாக அவர்களைக் கொன்றதனால் கோபம் தனியப்பெறாமல் சத்ரிய வம்சம் முழுவதையும் தன் மேலும் சினங்கொண்டு உலகிலுள்ள அரசர் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொழுது அழித்திட்டு அவர்களது குருதி வெள்ளத்தைப் பெரிய ஏரியாகத் தேக்கி அதில் தீர்த்தமாடித் தம் மூதாதையருக்குத் தர்ப்பணம் செய்த பெருமான் உறையும் இடம் திருக்கண்ணங்குடி" (பரகாலன் பைந்தமிழ், ப.466)** என்கிறார்.

இதன்மூலம் திருமாலின் கொடுமைகளை அழிக்கும் ஆவேச அவதாரம் புலப்படுகிறது. ஏனைய அவதாரங்களுக்கு உள்ள வழிபாட்டு நிலைகளினைப் போல இப்பரசுராம அவதாரத்திற்கு என்று தனிப்பட்ட வழிபாட்டு நிலைகள் மக்களிடையே காணப்படுவது இல்லை. ஏனெனில் வெறும் ஆவேச குணத்தினை மட்டுமே இவ்வவதாரம் நிலை நிறுத்துவதால் இருக்கலாம்.

இவ்வவதாரத்தினைப் பற்றிக் குறிப்பிடும் மாருதிதாசன் **"பரசுராமரைப் பூசித்து வணங்கும் நிலை வழக்கத்தில் இல்லை. பிற அவதாரங்களில் காணப்படும் அருள் சக்தி பரசுராமரிடம் இல்லாது ஆவேச சக்தி மட்டும் இருப்பதே இதன் காரணமாகும்" (துசாவதாரத்**

தத்துவங்கள், ப.56) என்று கூறுவதிலிருந்து அன்புள்ளமும், கருணையுள்ளமும் கொண்ட எவ்வுருவமும் இறை நிலைக்கு ஒப்பானதாகும் என்ற இயல்புநிலை மக்களிடையே நிலவி வருகிறது என்ற உண்மை புலப்படுகிறது.

இராமாவதாரம்

இறைவன் தன்னுடைய நிலையிலிருந்து மனித குலத்தில் தோன்றி உயர்ந்த குணப்பண்புகளைக் கொண்டு வாழ்ந்து, உலகில் அதர்மத்தினை அழித்து தர்மத்தினை நிலைநாட்டிய அவதாரமாகவும், மற்றைய அவதாரங்களிலும் சிறந்த அவதாரமாகவும் கருதப்படும் அவதாரம் இராமாவதாரமாகும்.

அனைத்து உயிர்களையும் நேசிக்கும் உன்னதப் பண்பினன் இராமன் என்பதை சிலப்பதிகாரத்தில் வரும் “அருந்திறல் பிரிந்த அயோத்தி” (சிலப்பதிகாரம்., 13:65) என்ற அடியால் அறியமுடிகிறது. ‘அருந்திறல்’ என்பது இவ்வவதாரத்தினையே குறிப்பதாய் அமைகிறது. அதோடு,

“சோ அரனும் போர் மடியத் தொல்லிலங்கைக் கட்டழித்த
சேவகன்சீர் கேளாதசெவி என்ன செவியே” (சிலப்பதிகாரம், 17:35)

என்ற அடிகள் இராவணனை அழித்ததோடு இலங்கையையும் அழித்த இராமாவதாரத்தின் சிறப்பினை எடுத்துரைக்கிறது.

ஆழ்வார்கள் இவ்வவதாரச் சிறப்பினை,

“இது – இலங்கை ஈடு அழியக் கட்டிய சேது
இது விலங்கு வாலியை வீழ்த்தது – இது இலங்கை
தான் ஒடுங்க வில் ஒடுங்கத் தண்தார் இராவணனை
ஊன் ஒடுங்க எய்தான் உகப்பு ” (நான்., திருவந்., 29)

“மின்னிறத்து எயிற்றாக்கன் வீழாவஞ்சரந்துரந்து
பின்னவற்கு அருள்புரிந்து அரசளித்த பெற்றியோய்” (திருச்., 33)

“குலைகொண்ட ஈரைந்தலையான்
இலங்கையை ஈடழித்த கூரம்பன்” (நான்., திருவந்., 3)

“மரம் பொதச் சரம் துரந்து, வாலி விழ முன்னோர் நாள்
உரம் பொதச் சரத் துரந்த உம்பர் ஆளி எம்பிரான்” (திருச்., 73)

என்ற பாசுர அடிகளால் அனுபவிக்கின்றனர். அதோடு குலசேகராழ்வார் தனது பெருமாள் திருமொழியின் பத்தாவது திருமொழியில் இவ்வவதாரச் சிறப்பினைப் பதினோரு பாசுரங்களால் அனுபவித்திருப்பதிலிருந்து இராமாவதாரத்தின் சிறப்பு புலனாகிறது.

இவ்வவதாரத்தின் பெருமை பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **“இந்த எம்பெருமான் மானிட யோனியில் அவதரித்து மக்களிடையே வாழ்ந்து, பன்னெடுங்காலம் அரசு செலுத்தி வந்ததினால் ஆழ்வார்கள் வாக்கில் அதிகமாக இடம் பெறுகிறான்” (பரகாலன் பைந்தமிழ், ப.467)** என்று விளக்கியுரைத்துள்ளார்.

அதோடு திருவரங்கப் பெருமானைப் பற்றிய பாசுரத்தில் திருமங்கையாழ்வார் இராவணன் முடிய இலங்கை பாழ்படும் வண்ணம் வானரங்களின் துணைக்கொண்டு கடலில் அணைகட்டி அமர்ந்த பெருமையினை,

"சுரிகுழல் கனிவாய்த் திருவினை பிரிந்த
கொடுமையிற் கடுவிசை அரக்கன்
எரிவிழித்து இலங்கும் மண்முடி பொடிசெய்து
இலங்கைபாழ் படுப்பதற்கு எண்ணி
வரிசிலை வளைய, அடுகரம் துரந்து
மறிகடல் நெறிபட மலையால்
அரிகுலம் பனிகொண்டு அலைகடல் அடைந்தான்" **(பெரிய., திரு., 5:7:3)**

என்ற பாசுரத்தின் வழியே எடுத்துரைப்பதிலிருந்து இராமாவதாரத்தின் சிறப்பு புலப்படுவதனை உணர்த்துகிறார்.

பலராம அவதாரம்

இராமாவதாரத்தில் தோன்றிய இலக்குவனன் ஆதிசேடனின் அம்சமாக இருந்ததோடு தனக்குச் செய்த அரிய பணிவிடைகளால் மகிழ்ந்த திருமால் இராமனுக்குத் தம்பியாகப் பிறந்த உடம்பை பூசிக்கும் வரம் அளித்ததன் விளைவாக ஆதிசேடன் வாசுதேவருக்கும் ரோகினிக்கும் முதல் மகனாகப் பிறந்த அவதாரமே பலராம அவதாரம் என்பர் வைணவச் சான்றோர்.

இப்பலராமன் வெண்ணிற வண்ணம் உடையவனாகவும் இருண்ட உடுக்கையும், ஒரு குழை அணிந்த காதினையும் நாஞ்சில் படையைக் கொண்டவனாகவும், பனைக் கொடியினை உயர்த்தியவனாகவும் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டள்ளான்.

திருமாலிருஞ்சோலையில் பலராமனுக்கும் கண்ணனுக்கும் கோயில் அமைந்திருந்ததைப் பரிபாடல்,

"எல்லாம் வேறுவேறு உருவின் ஒருதொழில் இருவர்த்
தாங்கு நீள்நிலை ஓங்கிருங் குன்றம்" **(பரிபாடல்,பா., 15: 65–66)**

என்ற அடிகள் சுட்டிக் காட்டுகின்றன. மேலும் நற்றிணையானது,

"மாயோன் அன்ன மால்வரை கவாஅன்
வாலியோன் அன்ன வலங்கு வெள்ளருவி" **(நற்றிணை, பா. 32)**

என்ற அடிகளினால் எடுத்துக் காட்டுகிறது. அதோடு சிலப்பதிகாரமும்,

"வால்வளை மேனி வாலியோன் கோயிலும்" **(சிலப்பதிகாரம், 5:1:1)**

என்ற அடிகளால் பூம்புகாரில் பலராமனுக்குக் கோயில் இருந்ததை உணர்த்துவதிலிருந்து எளிமையையும், தியாக உள்ளமும் கொண்ட ஆதிசேடனுக்குச் சிறப்பு சேர்க்கும் விதமாகவே பலராம அவதாரம் அமைந்திருந்தது என்பதை உணரமுடிகிறது.

கிருட்டிணாவதாரம்

தமிழ் இலக்கியங்களில் மிகவும் அதிகமாகப் போற்றப்படும் அவதாரம் கிருட்டிணாவதாரமே ஆகும். சிலப்பதிகாரம் இதனை உறுதிப்படுத்தும் விதமாக கண்ணனின் குழந்தைப் பருவத்துச் செய்திகள், குழந்தைப் பருவத்தில் உரலில் கட்டப்பட்டிருந்த கண்ணன் அவ்வுரலை இழுத்துக்கொண்டு போய் மருத மரங்களாக நின்ற அசுரர்களை அழித்தது, அநிருத்தனை வாணாசுரனின் கோட்டையிலிருந்து விடுவிக்க வாணாசுரனோடு போரிட்டு முடிவில் ஆடிய குடக்கூத்து செய்திகள், பாண்டவர்களுக்காக கண்ணன் தூது சென்றது, தேரோட்டியது போன்ற செய்திகளையெல்லாம் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

இவ் அவதாரம் துவாபரயுகத்தில் மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவால் சூதும், வாதும் அதிகமாகியதன் தீமையால் மக்களுக்கு ஏற்பட்ட பல இன்னல்களைக் களையும் பொருட்டே திருமால் எடுத்த அவதாரமாகும்.

கம்சன், சிசுபாலன் போன்ற கொடியவர்கள் மக்களுக்கு விளைவித்த துன்பத்தினைப் பொறுத்துக் கொள்ள முடியாத நிலமகள் பூமியின் பாரத்தினைக் குறைக்குமாறு நான்முகனிடம் சென்று வழிபட, ஏது செய்வதென்று அறியாத நான்முகனும் தேவர்களோடும் நிலமகளோடும் சென்று திருமாலிடம் முறையிட அவர்களுக்கு அருள்புரியும் விதமாய்த் திருமால் எடுத்த அவதாரமே கிருட்டிணாவதாரமாகும்.

தீயவர்களை அழித்து நிலமகளின் பாரத்தினைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட அவதாரமாகக் கருதப்பட்டாலும், இவ்வவதாரமானது மிக்க பொலிவும், காதலும் வீரமும் கலந்ததாகவும், கற்போருக்கு இன்பம் பயப்பதாகவும் அமைந்துள்ளது என்பதை, **“மோட்சத்துக்கு உபாயமாகிய அமுதப் பெருமழையை, உலகப் பற்றில் உழல்பவர்களின் தாபத்தைப் போக்கும் கார்மேகமாகப் பொழிந்த அவதாரம்” (வைணவ தத்துவஞான அடிப்படைகள், ப.201)** என்கிறார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இத்தகு சிறப்புமிக்க அவதாரமாகக் கருதப்படும் கிருட்டிணாவதாரம் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **“அவதாரங்களில் மானிட யோனியில் பிறந்து மக்களிடையே வாழ்ந்து சௌலப்பியம், சௌசீல்யம் போன்ற திருக்குணங்கட்கு எல்லை நிலமாகவும் இடையே சுவாமித்துவம் போன்ற திருக்குணங்களையும் பிரகாசப் படுத்தியது கிருட்டிணாவதாரமாதலால் ஆழ்வார் பெருமக்கள் இந்த அவதார சேஷ்டிதங்களைப் பேசித் தம்மையே மறக்கின்றனர்” (பரகாலன் பைந்தமிழ், ப.469)** என்கிறார்.

இக்கிருட்டிணாவதாரத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த பொய்கையாழ்வார்,

“அரவம் அடல்வேழம் ஆன்குருந்தும் புள்வாய்
குரவை குடமுலை மற்குன்றம் கரவின்றி
வீட்டிறுத்தி மேய்த்தொசித்தும் கீண்டு கோத்தாடி – உன்
டட்டெடுத்த செங்கண் அவன்” (முதல்., திருவந்., 54)

என்ற பாசுரத்தின் வழியே செந்தாமரைப் பெருமானாகியக் கண்ணன் கொடிய நாகத்தின் விடத்தை நீக்கி விரட்டியது, மதம் கொண்ட குவலயாபீடம் எனும் யானையின் தந்தத்தை ஒடித்து அடக்கியது, பராசுரனுடைய வாயினைக் கிழித்தது, பசுக்களை மேய்த்தது, மல்லர்களைக் கொன்றது, பூதனையின் தனத்தை உறிஞ்சி உண்டு கொன்றது, கோவர்த்தன மலையினை குடையாகப் பிடித்து இந்திரனின் அகந்தையினை அடக்கியது ஆகிய சிறப்புகளையெல்லாம் செய்த அவதாரமென வியந்துரைக்கிறார்.

இதுதவிர பெரியாழ்வார் கிருட்டிணாவதாரத்தின் பெருமையினைப் பறைசாற்றும் விதமாகத் தமது பெரியாழ்வார் திருமொழியினை ஒரு பிள்ளைத்தமிழ் இலக்கியமாகவே படைத்துள்ளது தனிச்சிறப்பு உடையதாகவே திகழ்கிறது.

இக்கிருட்டிணாவதாரத்தில் மனம் தோய்ந்த ந.சுப்புரெட்டியார், திருமங்கையாழ்வார் தனது பெரிய திருமொழியில்,

"வில்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னை புரம்எரி செய்த
சிவன்உறு துயர்களை தேவை
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
பார்த்தன் தன் தேர்முன்நின் றானை"   (பெரிய., திரு., 2:8:1)

என்று பாடிய பாசுரத்தில் "**கண்ணன் வில்பெரு விழாவை நடத்தின கம்சன், கானுரன், முஷ்டிகன் என்ற மல்லர்கள் மற்றும் குவலயா பீடம் ஆகியவர்களை அழித்த நிகழ்ச்சிகளையும், சிவனுக்கு நேர்ந்த பிரமஹத்தி சாபத்தினைப் போக்கிய செயலையும், பார்த்தனுக்குத் தேர் கடவி பகைவர்களை ஒழித்த வரலாற்றையும் அனுசந்தித்து கிருட்டிணாவதாரத்தில் ஈடுபடுகின்றனர்"** (பரகாலன் பைந்தமிழ், ப.469) என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அதோடு திருவல்லிக்கேணி பார்த்தசாரதியை மங்களாசாசனம் செய்யும்போது திருமங்கையாழ்வார் மனதில் இப்பாசுரம் வேறூன்றி எழுந்த நிலையினைப் புலப்படுத்துகிறார்.

மேலும் கடல்மல்லைத் தலசயனப் பெருமானை மங்களாசாசனம் செய்யும்போது,

"பேய்தாயை முலையுண்ட பிள்ளை தன்னைப்
பிணை மருப்பின் கருங்களிற்றை; பிணைமான் நோக்கின்
ஆய்த் தாயர் தயிர் வெண்ணை அமர்ந்த கோவை;
அந்தணர் தம் அமுதத்தை, குரவை முன்னே
கோத்தானை குடமாடும் கூத்தன் தன்னைக்
கோகுலங்கள் தளராமல் குன்றம் ஏந்திக்
காத்தானை எம்மானை கண்டு கொண்டேன்"   (பெரிய., திரு., 2:5:4)

என்ற பாசுரத்தின் வழியே "**பூசனையின் உயிர் உண்டது, யசோதைப் பிராட்டியின் வெண்ணெயில் ஊன்றி இருந்தது. இடைப்பெண்களுடன் இராசக்கிரிடை கோத்தது,**

குடமாடியது, கோவர்த்தனத்தைத் தூக்கி ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்தது போன்ற கண்ணனது திருவிளையாடல்களை அனுசந்தித்து அகம் மகிழ்கின்றார்" (பரகாலன் பைந்தமிழ், ப.470) என்பதை எடுத்துரைக்கிறார்.

இவை மட்டுமின்றி திருக்கோவலூர் திரிவிக்கிரமனை திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்யுமிடத்திலும் கிருட்டிணாவதாரச் சிறப்பினை,

"உறி ஆர்ந்த நறுவெண்ணெய் ஒளியால்சென்று அங்கு
உண்டானைக் கண்டு ஆய்ச்சி உரலோடு ஆர்க்க
தறிஆர்ந்த கடுங்குளிறே போல நின்று
தடங்கண்கள் பனிமல்கும் தன்மை யானை" (பெரிய., திரு., 2:10:6)

என்ற பாசுரத்தில் "உறிகளில் நிரம்பிய வெண்ணெயை வாரி உண்டது, உரலோடு கட்டுண்ட காலத்து கண்கள் குளமானது போன்ற கண்ணனது செயல்களை நினைந்து களிக்கின்றார்" (பெரிய., திரு., ப.471) என்பதை உணர்த்துகிறார். இதிலிருந்து திருமாலின் தசாவதாரங்களில் அனைவராலும் பெருமளவில் போற்றப்பட்டது கிருட்டிணாவதாரம் என்பதை பேராசிரியாரின் கூற்றின் வாயிலாக உணர முடிகிறது.

கல்கி அவதாரம்

திருமாலின் தசாவதாரத்தில் பத்தாவது அவதாரமாகக் கருதப்படுவது கல்கி அவதாரமாகும். திருமால் இவ்வவதாரம் எடுத்ததாகப் பக்தி இலக்கியங்கள் உட்பட ஏனைய இலக்கியங்களிலும் குறிப்புகள் இல்லை.

இந்த கலியுகத்தில் ஏற்படும் உலகியல் மாற்றங்களால் ஏற்படும் தீய விளைவுகளிலிருந்து உலக உயிர்கள் அனைத்தினையும் மீட்பதற்காகவும், அநீதியை அழித்து நீதியினை நிலைநாட்டவும், உலக அமைதியினை வலியுருத்தியும் திருமால் குதிரைமேல் ஏறியபடி வரப்போகும் அவதாரம் கல்கி அவதாரம் எனக் கருதுகின்றனர் வைணவப் பெரியோர்கள்.

இதனையே **"கலியுகத்தின் இறுதியில் தீயவரைக் கொல்வதற்காகவும் கிருதயுகம் கொணர்வதற்காகவும் குதிரைமேல் வாளேந்தி வரப்போகும் அவதாரம் கல்கி அவதாரம்" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.201)** என்பார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இவ்வவதாரம் குறித்துக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், இந்த அவதாரத்தினைப் பற்றிய குறிப்பு அரிதாகவே காணப்படுகிறது என்கிறார். அதோடு கடல் மல்லைத் தலசயனத்துப் பெருமாளைத் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்யும் பாசுரமொன்றில்,

"வையங் காக்கும்
கரும்பரிமேல் கற்கியை நான்
கண்டு கொண்டேன்" (பெரிய., திரு., 2:5:3)

என்று கூறுவதிலிருந்து **"அறங்கள் முற்றும் குன்றி மறங்கள் அதிகரித்துக் கலிமுற்றுங் காலத்தில் எம்பெருமான் குதிரைமீது ஏறி வந்து கல்கி எனும் திருநாமமுடையவனாய்த் துட்டர்களைத் தொலைத்து மண்ணின் பாரம் நீக்குவான் என்பது சிற்கொள்கை" (பரகாலன்**

பைந்தமிழ், ப.472) என்று வலியுறுத்துகிறார். அதோடு மட்டுமின்றி இவ்வவதாரமானது பவிஷ்யதவதாரம் எனப்படும் 'வரப் போகின்ற அவதாரம்' என்பதனையும் உணர்த்துகிறார்.

இக்கருத்திற்கு அரண்சேர்க்கும் விதமாக, **"கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கனுள் கலியுகம் கடைசியுகம். எனவே கிருதயுகத்தில் இருந்த தருமம் கலியுகத்தில் காணப்படாது யுகங்கள் தோறும் தருமம் மாறுபடும். கிருதயுகத்தில் தழைத்துக் காணப்படும் அது படிப்படியே குறைந்து கலியுகத்தில் தன் ஆற்றலை இழந்து நிற்கும். அப்போது இறைவன் எடுப்பது கல்கியவதாரம்" (குசாவதாரத் தத்துவங்கள், ப.170)** என்று விளக்கம் தருகிறார் மாருதி தாசன்.

இதிலிருந்து திருமால் எடுத்த பல அவதாரங்களும், இனி எடுக்கப்போகும் கல்கி அவதாரமும் பல வாழ்வியல் உண்மைகளை உணர்த்துவதற்காகவே எடுக்கப்பட்டிருக்கின்றன என்பது புலனாகிறது.

அந்தர்யாமித்துவம்

இறைவனாகிய திருமால் ஆன்மாவினுள்ளே புகுந்து அதன் அனைத்துச் செயல்களையும் ஏவுகின்றவனாய் இருக்கும் இருப்பை அந்தர்யாமித்துவம் என்பர். பொதுவாக இயங்குகின்ற, இயங்காத பொருள்கள் அனைத்திலும் ஊடுருவிப் பரந்து நிற்கும் நிலையுடன் இருப்பதால் இந்நிலை 'உள்ளுறை நிலை' என்படுகிறது. நாராயணன் என்ற சொல்லுக்கு உலகின் அனைத்துப் பொருள்களினுள்ளும் உறைந்து நிற்பவன் என்றும், அந்தர்யாமியாய் இருப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். இதனால் அந்தர்யாமித்துவ நிலையினை உள்ளுறை நிலை என்பர் அதாவது இயங்குகின்ற, இயங்காத பொருள்கள் அனைத்திலும் ஊடுருவிப் பரந்து நிற்கும் நிலையே உள்ளுறை நிலை எனப்படுகிறது.

இந்த அந்தர்யாமி நிலையினை ஸ்ரீலக்ஷ்மி நாராயண இராமானுச தாசன், **"நாரங்களுக்கு அயனமாய் இருப்பவன் நாராயணன், சித்து எனப்படும் அறிவுள்ள உயிர்கள், அசித்து எனப்படும் அறிவற்ற பொருள்கள் யாவும் நாரங்கள் எனப்படும். இவை யாவற்றுக்கும் அயனமாய் இருப்பவனும் இவற்றைத் தனக்கு ஆதாரமாகக் கொண்டிருப்பவனும் நாராயணன் ஒருவனே, இதுவே அந்தர்யாமி நிலை எனப்படும்" (நாராயணனைப் பாடிய நம் ஆழ்வார்கள், ப.17)** என்கிறார்.

மொத்தத்தில் பரம புருஷனாகிய எம்பெருமான் கட்டை விரல் பருமனளவே உள்ளவன் என்பது புருஷ சுக்தம் என்பர். யோகிகள் பக்தியோகத்தில் வழிபடத் தக்கவனும், பரம மங்களகரமானவனுமாகிய இறைவன் இவ்வுலக உயிர்கள் சுவர்க்க, நரகங்களை அனுபவிக்கும்போது அவர்களின் உள்ளத்திற்கு உற்ற தோழனாக விளங்கும் திவ்ய மங்கள விக்கிரகமே அந்தர்யாமித்துவ நிலை என்றும் கொள்ளப்படுகிறது.

இத்தகு சிறப்புமிக்க அந்தர்யாமித்துவம் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் **"நல்வினை காரணமாகத் துறக்கம் அடைதல் தீவினை காரணமாக நரகம் புகுதல் நல்வினை தீவினை இவ்விரண்டின் காரணமாகக் கருப்பத்தில் புகுதல் முதலிய எல்லா நிலைகளிலும் எல்லாச் சேதநர்களுக்கும் ஆன்மாவிற்குள்ளே தனது சொரூபத்தாலே வியாபித்து**

நின்று அவர்கட்குத் துணையாய் அவர்களை ஒருகாலும் விடாமல் அந்தராத்மாவாய் இருக்கும் இருப்பே இது” (முக்தி நெறி, ப.68) என்கிறார்.

அதோடு இந்நிலையில் இருக்கும் இறைவன் தன் “**சேதநர்கட்கு தியானருசி பிறக்கும் போது தியானத்திற்கு உரியவனாவதற்காகவும் அவர்களைக் காப்பதற்காகவும் அழகே வடிவெடுத்தாற்போல் மங்களகரமான திருமேனியுடன் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றவனாய்க் கட்டைவிரல் அளவாய் விக்கிரக வியாப்தி நிலையில் எழுந்தருளியிருப்பான்” (வைணவமும் தமிழும், ப.201)** என்றும் எடுத்துரைக்கின்றார்.

உலகிலுள்ள இயங்கும் பொருள், இயங்காப் பொருள் ஆகிய அனைத்திற்குள்ளும் நிறைந்தும், மறைந்தும் இருக்கும் இறைவனின் அந்தர்யாமி நிலையானது இவ்வுலகம் இயங்கவும், பெருகவும் காரணமாய் இருக்கின்றது என்பதனை,

“நின்றியங்கும் ஒன்றலா உருக்கன்தோறும் ஆவியாய்
ஒன்றியுள் கலந்து நின்ற நின்னதன்மை” (திருச்சந்., 5)

என்கிறார் திருமழிசையாழ்வார். அவர் கூறுவதற்கேற்ப ந.சுப்புரெட்டியார், “**அந்தர்யாமித்துவமானது சேதனர்களின் உள்ளே புக்கிருந்து அவர்களுடைய எல்லாச் செயல்களுக்கும் தான் ஏவுபவனாக இருக்கும் நிலையாகும்” (முக்தி நெறி, ப.68)** என்று எடுத்துரைப்பதிலிருந்து அந்தர்யாமித்துவத்தினை உணர முடிகிறது.

இவ்வந்தர்யாமித்துவ நிலையினைத்தான் பரிபாடல்,

“தீயினுள் தெறல் நீ பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்பு நீ மறத்தினுள் மைந்து நீ
வேதத்து மறை நீ பூதத்து முதலும் நீ
வெஞ்சுடர் ஒளியும் நீ திங்களுள் அறியும் நீ
அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ” (பரிபாடல், பா.3:64–69)

என்ற அடிகளால் திருமால் அனைத்திலும் உள்ளுறைந்துள்ள நிலையான அமைப்பினைச் சுட்டிக்காட்டி உள்ளுறை நிலையான அந்தர்யாமித்துவத்தினை உணர்த்துகிறது.

இந்நிலையிலிருந்து அனைத்துப் பொருள்களிலும் உள்ளுறைந்து கிடக்கும் இறைவன், அவ் அனைத்திலும் காரண, காரியங்களைத் தோற்றுவிப்பதோடு அவ்வனைத்தின் அர்த்த மூலமாகவும் இருக்கிறான் என்பது புலப்படுகிறது.

அர்ச்சை நிலை

இறைவன் தனக்கென ஓர் உருவமோ, பெயரோ இன்றித் தன் அடியார்கள் விரும்பிய வடிவத்தினை தன் உருவமாகவும், அடியார்கள் விரும்பிய பெயரைத் தன் பெயராகவும் கொண்டு காட்சியளிக்கும் நிலையானது, “அர்ச்சை”எனப்படுகிறது. இதனையே “**தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே என்றபடி அன்பர் விரும்பிய வடிவத்துடன் எழுந்தருளியிருப்பான்**

இறைவன்" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.204) என்கிறார் முனைவர் அரங்க சீனிவாசன்.

பரம், வியூகம், விபவம் ஆகிய நிலைகள் காலத்தாலும் இடத்தாலும் அடைய முடியாத தொலைவிலிருந்தாலும் அர்ச்சை நிலையானது காலத்தாலும் இடத்தாலும் தொலைவில்லாமல் அனைவரும் இறைவனை அடைவதற்கு எளிமையாக அருகிலேயே இருக்கும் நிலையாகும்.

அனைவரால் எளிதில் வழிபடக்கூடிய நிலையாகக் கருதப்படுவதால் இந்நிலை 'வழிபடு நிலை' எனக் கருதப்படுகிறது. அதோடு இவ்வர்ச்சை நிலையானது எளியோர், செல்வர் என வேறுபாடின்றி அனைவரும் இருந்த இடத்திலேயே கண்டு வணங்கும் தன்மைக்கு ஏற்றதாய் இருப்பதால் 'படிவ வடிவ நிலை' என்றும் கூறப்படுகிறது. இதனையே, **"வழிபடும் அன்பர்களுக்கு எளிதில் வந்து அருள் செய்வதன் பொருட்டு திருக்கோயில்களிலும் இல்லங்களிலும் அவர்களின் விருப்பதிற்கிசைந்த வடிவில் எழுந்தருளச் செய்துள்ள வடிவங்களில் இறைவன் தங்கியிருப்பது படிம வடிவ நிலையாகும்" (வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், ப.90)** என்பர்.

இத்தகு சிறப்புமிக்க நிலையில் திருக்கோயில்களிலும், அன்பர்களின் இல்லத்திலும் உகந்த வடிவுடையவனாய்த் திகழும் திருமாலை ஆழ்வார்கள் தங்களின் பாசுரங்களில்,

"தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமருகந்தது எப்பேர் மற்றப்பேர் தமருகந்தது
எவ்வண்ணன் சிந்தித்து இமையாது இருப்பரே
அவ்வணணன் ஆழியான் ஆம்" (முதல்., திருவந்., 44)

"உளன் எனில் வான்அவன் உருவம் இவ் உருவுகள்
உளன் அலன் எனில் அவன் அருவம் இவ் உருவுகள்" (திருவாய், 6:6:7)

"தானே தனக்கு உவமன் தன் உருவே எவ்வுருவம்" (மூன்., திரு., 38)

"அவரவர் தமதமது அறிவுவறி வகைவகை
அவரவர் இறையவர் என அடி அடைவார்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே" (திருவாய்., 1:1:5)

என்றவாறு பொய்கையாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர் இறைவனே இயற்கையாகவும் பிற உருவங்களாகவும், அன்பர்கள் மனதில் தோன்றும் வடிவங்களுக்கு ஏற்ப உருக்கொண்டு வந்து அருள்பாலிக்கும் தன்மையுடையவனாக இருக்கிறான் என்பதை அர்ச்சை நிலைகளாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்நிலைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"அன்பர்கள் எதைத் தனக்குத் திருமேனியாகக் கொள்கின்றனரோ அதனையே இறைவன் தனக்கு வடிவமாகவும் அவருகந்து வைத்தப் பெயரையே தனக்குப் பெயராகவும் கொண்டுள்ள நிலையாகும்" (முக்தி நெறி, ப.70)** என்கிறார்.

நீராடல், பூச்சூட்டல், ஆடை உடுத்தல் போன்ற செயல்களைச் செய்வதற்கு அருச்கனர்களின் வசப்பட்டிருக்கும் தன்மையோடு ஆசனம், சயனம், நீராட்டு, உண்டி முதலான எவ்வகைப் போகங்களையும் உடையதாக இருக்கும் சிறப்பினைப் பெற்றதாகவே இவ்வர்ச்சை நிலை அமைகிறது. இதனை,

"உள்ளுள் இறைவன் உறைவதை, யோகத்தால் தான் உணர்ந்து காண முடியும். யோக நெறியோ எளிதொன்றன்று, இக்குறையையும் போக்க, வீடுகளிலோ, கோவில்களிலோ விக்கிரக வடிவில் இறைமையானது காட்சி நல்குகிறது. மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் இங்கு வந்து நீராடல், பூச்சூடல், உடுத்தல் முதலிய அர்ச்சகர் இட்ட வழக்கால் இருப்பது அர்ச்சை நிலையாகும்" (ஸ்ரீ வைஷ்ணவம், ப.60) என்பார் கூற்றால் அறியமுடிகிறது.

இவ்வர்ச்சைக்குரிய அதீத தன்மையினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"இறைவன் இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்னாரிடத்தில் தோன்றி சந்நிதி பண்ண வேண்டும் என்கின்ற நியமமில்லாதபடி விரும்பிய எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் எவரிடத்திலும் தோன்றிச் சந்நிதி பண்ணி நீராட்டம், தளிகை, இருப்பு முதலிய எல்லாச் செயல்களையும் உடையவனாகக் கொண்டு திவ்ய தேசங்களிலும் அன்பர்களின் திருமாளிகையிலும் எழுந்தருளியிருக்கும் நிலையாகும்" (முக்தி நெறி, ப.70)** என்கிறார்.

தனதன்பர்கள் எவ்வகை குற்றம் புரியினும் அவர்களது குற்றங்களைப் பொருத்தருளும் குணக்கடலாகவே இறைவன் காட்சி தருவதால் இவ்வர்ச்சை நிலையானது கைங்கரியம் செய்ய விரும்புபவர்க்கு ஏற்றது என்பதைக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"உலகியலில் மண்டியிருப்போருக்குத் தன் பக்கல் ருசியை உண்டாக்கித் தன்னைத் துதிப்பவர்களின் கண்ணுக்கும் நெஞ்சுக்கும் இனியதான போக்கியத்திற்கு இடமாய் இருந்து, தன்னை உபாயமாகப் பற்றுவதற்குத் தகுதியாக இருந்தாலும், பரமபதத்தில் போய் அனுபவிக்காமல் இந்த அர்ச்சவதாரத்திலேயே அனைத்தும் முற்று பெறுகின்றது" (வைணவமும் தமிழும், ப.202)** என்கிறார்.

அதோடு ஈசுவரனின் இவ் ஐந்து நிலைகளான பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் ஆகியவற்றில் 'அகலகில்லேன் இறையும்' என்றவாறு அலர்மேல் மங்கை இறைவனுடன் பிரியாமல் இருப்பது வைணவத் தத்துவத்தின் மேலோங்கிய நிலையாகக் கருதப்படுகிறது.

இதனையே பிள்ளை லோகாச்சாரியார் தனது ஸ்ரீவசன பூசணத்தில்,

"பூதக ஜலம்போலே அந்தர்யாமித்துவம்; ஆவரண
ஜலம் போல பரத்துவம்; பாற்கடல் போலே
வியூகம் பெறுக்காது போலே விபவம்; அதிலே
தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்" (ஸ்ரீ வசன பூசணம், ப. 42)

என்று கூறியிருப்பதனைச் சுட்டிக்காட்டுகிறார் ந.சுப்புரெட்டியார். இதிலிருந்து ஈசுவரத் தத்துவம் பரத்துவம் முதல் அர்ச்சாவதாரம் வரையிலான தனிப்பெரும் சிறப்புகளைப் பெற்றத் தத்துவமாக இருக்கிறது என்பதும் புலப்படுகிறது.

ஐவகை நெறிகள்

இறைவனை அடையும் உபாயக் காரணிகளாக இருப்பவை,

- கரும யோகம்
- ஞான யோகம்
- பக்தி யோகம்
- பிரபத்தி யோகம்
- ஆசாரிய அபிமானம்

என்னும் ஐந்து வகையான நெறிகளாகும். இவ்வைந்து நெறிகளும் மோட்சம் எனப்படும் முக்தி நிலையினை அடைவதற்கான கருவிகளாகக் கொள்ளப்படுகின்றன.

இவ்வைந்து நெறிகளையும் பக்திநெறி, பிரபத்தி நெறி என்ற இரண்டினுள் அடக்குவர் வைணவச் சான்றோர். இதனை, "**கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம் ஆகிய யோகங்களைப் பக்திநெறி என்றும் பிரபத்தியோகம், ஆசாரிய அபிமானம் என்னும் இரண்டினையும் பிரபத்திநெறி என்றும் கூறுவது வைணவ மரபாகும்" (வைணவ சமயம், ப.52)** என்பார் மு. அருணாசலம்.

முக்தி நிலைகளில் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் ஆகிய மூன்றும் முக்கியமானதாகப் பேசப்பட்டாலும் கர்மயோகமும், ஞானயோகமும் நேரடியான முக்தி நிலைக்குக் கொண்டு செல்வதில்லை. மாறாக அவை பக்தியை உண்டு பண்ணும் கருவியாகவே இருக்கின்றன என்பதை, "**கர்மயோகம் முதிர்ந்து ஞானயோகமாகி, அந்த ஞானயோகம் பக்தியை உண்டு பண்ணுவது ஒரு வகை; ஆன்மாவைப் பற்றிய உண்மை அறிவை அங்கமாகக் கொண்ட கர்மயோகத்தாலேயே நேராகப் பக்தியோகம் உண்டாவது இன்னொரு வகை. இவ்விரு வகைகளிலும் கர்ம, ஞானங்கள் பக்திக்கு அங்கம் மட்டுமாவதைக் காணலாம்" (வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், ப.144)** என்கிறார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இத்தகு பக்திநெறியினைப் பற்றி ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகையில் ஆழ்வார்கள் இம்முக்தி நிலையினைத் தம் பாசுரங்களில்,

"அறிந்து, ஐந்தும் உள்ளடக்கி,
ஆய்மலர் கொண்(டு), ஆர்வம்
செறிந்த மனத்த ராய்,
செவ்வே அறிந்து அவன்தன்
பேர்ஓதி ஒத்தும் பெருந்தவத்தார் காண்பரே
கார்ஓத வண்ணன் கழல்" (இரண்., திருவந்., 6)

என்று பூதத்தாழ்வாரும்,

“மார்வம் என்பதோர் கோயில் அமைத்து

மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி

ஆர்வம் என்பதோர் பூ இட வல்லார்க்கு

அரவ தண்டத்தில் உய்யலும் ஆயே” (பெரியாழ்., திரு., 4:5:3)

என்று பெரியாழ்வாரும்,

“பூசும் சாந்து என்நெஞ்சமே,

புனையும் கண்ணி எனதுடைய

வாச கம்செய் மாலையே

வான்பட் டாடையும் அஃதே,

தேசம் ஆன அணிகலனும்

என்கை கூப்பும் செய்கையே” (திருவாய்., 4:3:2)

என்று நம்மாழ்வாரும் இப்பக்தி நெறியினை அனுபவிப்பதிலிருந்து முக்திக்கான வழிமுறைகளை உணரமுடிகிறது என்கிறார். அதோடு இப்பக்தி நெறியினை **“மெய்விளக்க அறிஞர்கள் இப்பக்தி நெறி கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்ற மூன்று நிலைகளில் பயிற்சி அடைய வேண்டிய நெறி என்றும் கூறுவர்” (அர்த்த பஞ்சகம், ப.94)** என்கிறார்.

கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தி யோகம், ஆசாரிய அபிமானம் ஆகிய ஐந்து தன்மைகளையும் பக்திநெறி மற்றும் பிரபத்தி நெறிக்குள் அடக்கி கூறினாலும் கருமம், ஞானம், பக்தி ஆகிய நெறிகள் யாவையும் சரணாகதி எனப்படும் பிரபத்தி நெறியில் கொண்டு சேர்ப்பதுதான் விசிட்டாத்துவிதத்தின் முக்கியக் கோட்பாடாக இருக்கிறது.

இதிலிருந்து பக்தி நெறியும், பிரபத்தி நெறியும், திருமால் அன்பர்களை மோட்சம் எனப்படும் முக்தி நிலையினை அடையச் செய்கின்றன என்பது புலனாகிறது.

கர்மயோகம்

ஆன்மாவைப் பற்றிய தெளிந்த அறிவுடையவருக்கு உரியதாகப் போற்றப்படுவது கர்ம யோகமாகும். இறைவன்பால் கொண்டுள்ள அதீத அன்பினால் அவ்வன்பினை வெளிப்படுத்த மனிதர்கள் தமது உடல் உழைப்பினால் அவ்விறைவனுக்குத் தொண்டு செய்யும் முறையையே கர்மயோகம் என்பார்.

‘கருமம்’ என்பதற்குச் ‘செயல்’ அல்லது ‘அன்றாட வழக்கம்’ என்றும் பொருள் கொள்ளலாம். மொத்தத்தில் எவ்வித எதிர் பலனையும் எதிர்பாராமல் தனது செயலினைத் தொடர்ந்து செய்துவரும் இயல்பே கர்மயோகம் எனப்படுகிறது.

இதனையே **“இறை வழிபாடு, தவம், வேள்வி, தீர்த்த யாத்திரை, தானம் முதலிய செயல்களில் பலனை எதிர்பாராமல் ஈடுபடுவதே கர்மயோகம்” (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.144)** என்கிறார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இறைவழிபாட்டின் வழியே இறைவனை எளிதில் எட்டிவிட முடியுமென்பதால் ஒவ்வொருவரும் தனக்கென நியமிக்கப்பட்ட செயல்களை எவ்விதக் குறைகளும் இல்லாமல்

செய்து கொண்டிருக்க வேண்டும். அச்செயல்களால் ஏற்படும் நன்மை, தீமைகளை எண்ணிப் பார்க்காமல் தான் செய்யும் செயலில் நம்பிக்கைக் கொண்டு இறைவனை வழிபடுவதே சிறந்த கருமயோகம் என்பர். இதனையே **"இறை வழிபாட்டின் ஒரு பகுதி கருமயோகம் எனக் கூறுவர்" (வைணவ சமயம், ப.49)** எனச் சுட்டிக்காட்டுகிறார் மு. அருணாசலம்.

இத்தகு சிறப்பு வாய்ந்த கர்மயோக நெறியினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"சாத்திரங்களைப் பயின்ற அறிவினால் சில சடங்குகளையும் கடமைகளையும் தவறாது செய்தல் வேண்டும். இவற்றுள் நித்திய கருமங்களும் நைமித்திய கருமங்களும் அடங்கும்" (அர்த்த பஞ்சகம், ப.94)** என்கிறார்.

அதோடு நித்திய கருமங்களையும், நைமித்திய கருமங்களையும் பற்றிக் குறிப்பிடுகையில், **"நித்திய கருமங்கள் என்பன சந்தியா வந்தனம், பகவதாராதனம் போன்ற நாடோறும் செய்யப்பெறுபவை; நைமித்திய கருமங்கள் என்பன கிரகணம், கார்த்திகை, சங்கராந்தி, ஆவணி அவிட்டம் போன்ற விசேட நாட்களில் மேற்கொள்ளப்பெறும் கருமங்களாகும்" (அர்த்த பஞ்சகம், ப.94)** என்கிறார்.

பெரியாழ்வார் மற்றும் ஆண்டாள், தொண்ரடிப்பொடியாழ்வார் போன்றோர்களும் இந்நெறியில் நின்றே இறையருளினைப் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் இறைவனைப் போற்றுதல், திருத்தலப் பயணம் செல்லுதல், அறம் புரிதல், வேள்வி செய்தல், மந்திரம் ஓதுதல், புண்ணிய நீர் நிலைகளில் நீராடுதல், விரதம் இருத்தல், இறைவனுக்கு மலரிட்டு வணங்குதல் போன்ற இறைத் தொண்டினால் மனதினை ஒருமுகப்படுத்தும் கருமச் செயல்களில் ஈடுபட்டதன் விளைவாகவே சிறந்த இறையனுபவத்தினைப் பெற்றிருக்கிறார்கள் எனலாம்.

இதனை உணர்ந்த வைணவப் பெரியோர்கள் முக்தி நெறியினை அடைய இவற்றினை பின்பற்றத் தொடங்கினர். இதனையே ந.சுப்புரெட்டியார் **"இறைவனை ஏத்தல், திருத்தலப் பயணத்தினை மேற்கொள்ளுதல், அறம் புரிதல் போன்றவை யாவும் கரும யோகத்தில் அடங்கும்" (அர்த்த பஞ்சகம், ப.94)** என்கிறார்.

அதோடு இக்கர்மயோக நிலையினை நம்மாழ்வார் தனது திருவாய் மொழியில்,

"பரிவது இல் ஈசனைப் பாடி
விரிவது மேவல் உறுவீர்!
பிரிவகை இன்றிநல் நீர்தூய்
புரிவதும் புகை பூவே" (திருவாய்., 1:6:1)

என்ற பாசுரத்தினால் பலனை எதிர்பாராமல் இறைவனுக்குச் செய்யப்பெறும் கருமம் கூறப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுவதோடு,

"ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும்
பாயப் பிரானை என் மாணிக்கச் சோதியை
தூய அமுதத்தைப் பருகி பருகி என்
மாயப் பிறவு மயர்வு அறுத்தேனே" (திருவாய்., 1:7:3)

என்ற பாசுரத்தில் இறைவன் வழிபடுவதற்கு எளியவனாக இருப்பதுடன் வழிபடுவோருக்கு இனியனாகவும் இருக்கிறான் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

மொத்தத்தில் கருமயோகம் என்பது, **“யாதொரு பலனையும் எதிர்பாராது செய்யப்பெறும் கருமத்தால் மனம் தூய்மையடைகிறது. இஃது ஆன்மா தியானத்தில் அழுந்த வழியாகவும் அமைகின்றது” (அர்த்த பஞ்சகம், ப.94)** என்பதை உறுதிபடுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்.

இதிலிருந்து வெற்று மாயைகளால் சூழ்ந்திருக்கும் ஆன்மாவினை கருமயோகத்தினால் நடைபெறும் தன்னை மறத்தல், மனதைக் கட்டுப்படுத்துதல், ஆன்ம அனுபவம் பெறல் போன்ற நிலைகள் தூய்மைப்படுத்துகின்றன என்பதை உணர முடிகிறது.

ஞானயோகம்

செயல்களால் செய்யும் கருமயோகத்திற்கு அடுத்த நிலையாகக் கொண்டு தூய்மை அடைந்த ஆன்மாவினைத் தியானத்தில் ஆழ்த்துவதே ஞானயோகம் எனப்படும். இந்நிலையில் இறைவனை அடைவதற்கு ஐம்புலன் அடக்கம் மிகவும் தேவை என்பதனையும், இறைவனுக்குச் செய்யும் புறச்சடங்குகளைவிட இடைவிடாத சிந்தையினால் தொழும் தியான நிலையே மேன்மையான ஞானநிலைக்கு வித்தாகின்றது என்பதனை ஆழ்வார்கள் தம் பாசுரங்களில்,

“இமையாத கண்ணால் இருளாகல நோக்கி
அமையாப் பொறிபுலன்கள் ஐந்தும்” (முதல் திருவந்., பா. 32)

“வாரி சுருக்கி மதக்களி நைந்தினையும்
சேரி திரியாமல் செந்நீற்று கூரிய
மெய்ஞானத்தால் உணர்வார் காண்பரே மேலொரு நாள்
கைந் நாகம் காத்தான் கழல்” (முதல் திருவந்., பா. 47)

“தோள் அவனை யல்லாள் தொழாஎன் செவியிரண்டும்
கேள் அவனதின்மொழியே கேட்டிருக்கும் – நாநாரும்
கோள்நா கணையான் குரைகழலே கூறுவதே
நாணாமை நள்ளேன் நயம்” (முதல் திருவந்., பா. 63)

“பொறி ஐந்தும் உள்ளடக்கிப் போதொடு நீரேந்தி
நெறி நின்ற நெஞ்சமே நீ” (முதல் திருவந்., பா. 85)

“ஓர்த்த மனத்தராய் ஐந்தடக்கி ஆராய்ந்து
பேர்த்தால் பிறப்பேழும் பேர்க்கலாம்” (மூன்., திருவந்., பா. 79)

என்றெல்லாம் ஐம்பொறிகளால் இவ்வுலக இன்பத்தினை நுகராமல் இறையின்பத்தினைத் தரக்கூடிய தியானத்தில் பயன்படுத்தி ஞானயோக நிலையினை அடையலாம் என்கின்றனர்.

இதனையே முனைவர் அரங்க சீனிவாசன், **“மனத்துக்கண் மாசிலன் ஆகி, பிரகிருதியோடு தொடர்புண்ட ஆன்மாவை பகவானுக்கே அடிமையாக எண்ணுவது ஞானயோகம்” (வைணவ தத்துவஞான அடிப்படைகள், ப.145)** என்கிறார்.

இந்த ஞானயோக நிலையினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் நம்மாழ்வார் மற்றும் பூதத்தாழ்வார் ஆகியோரின் பாசுரங்களைச் சுட்டிக்காட்டி இந்நான்கு யோக தருமத்தினை விளக்குகிறார்.

“ஞானத்தில் நன்குணர்ந்து

நாரணன்தன் நாமங்கள்

தானத்தில் மற்றுஅவன் பேர்

சாற்றினால் வானத்து

அணி அமரர் ஆக்குவிக்கும்” (இரண்., திருவந்., 2)

என்ற பூதத்தாழ்வாரின் பாசுரத்திற்கேற்ப **“கர்மயோகத்தில் தூய்மையடைந்த ஆன்மா இந்நிலையில் தியானத்தில் ஆழங்கால்படுவதினால் மனமானது அமைதி நிலையினை நாடுகின்றது. அலைந்து திரியும் மனத்தை அங்ஙனம் அலையவிடாமல் நிலைநிறுத்தும் நிலை உண்டாகின்றது” (அர்த்த பஞ்சகம், ப.96)** என்கிறார்.

இந் நிகழ்வினையே மெய்விளக்க அறிஞர்கள் ‘கைவல்ய நிலை’ என்பர் என்பதனையும் சுட்டிக் காட்டுகிறார். பொதுவாக, இந்த ஞானயோக நிலையில் தியானத்தினை மேற்கொள்பவர்கள் தன்னுடைய ஆன்மா இத்தன்மையுடையதென்று உணர்வதைப் போலவே அனைத்து சீவர்களிடமும் ஆன்மா இருப்பதனைத் தட்டுப்பட வைத்து அனைத்து ஆன்மாக்களும் சமம் என்ற உண்மையினை உணர்த்துகிறது என்பதைப் பேராசிரியர் புலப்படுத்திக் காட்டுகிறார்.

இது பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர், **“இந்த யோகத்தினால் தன் ஆன்மா இன்னது என்று தனக்குப் புலனாவது போல எல்லாச் சீவகர்களிடமும் ஆன்மா என்ற ஒன்று இருப்பது தட்டுப்படுகின்றது. அதோடு எல்லா ஆன்மாக்களும் சமம் என்ற உண்மையும் பளிச்சிடுகின்றது” (அர்த்த பஞ்சகம், ப.96)** என்கிறார்.

இறைவனாகிய திருமாலின் அன்பு மயமான வடிவத்தினை புறத்தில் காண்பதைவிட அகத்தில் காணக்கூடிய ஞானயோக நிலையின் தன்மையினை, **“தியானத்தின் மூலம் ஆன்மா தன் உண்மை நிலை உணர்ந்து தான் இறைவனைச் சார்ந்திருக்கும் நிலையை அறிகின்றது. அதன்பிறகு அஃது இறைவனை அடைய அவாக் கொள்கிறது” (அர்த்த பஞ்சகம், ப.96)** என்று தெளிவு படுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்.

மேலும், நம்மாழ்வார் தனது திருவிருத்தத்தில் பராங்குச நாயகி எம்பெருமானை நினைந்து தவிக்கும் நிலையானது இந்த ஞானயோகத்தினையே குறிக்கிறது என்பதனை,

“கையபொன் ஆழிவெண் சங்கொடும்

காண்பான் அவாவுவன் நான்

மைய வண்ணா! மணியே! முத்தமே!

என்றன் மாணிக்கமே!” (திருவிருத்., 84)

என்ற பாசுரத்தின் வழியே சுட்டிக் காட்டுகிறார் ந. சுப்புரெட்டியார்.

அதாவது பராங்குச நாயகி எம்பெருமானாகிய நாயகனையே நினைத்துக் கொண்டிருப்பதால் அந் நினைவு மிகுதியால் அவன் அருகிலில்லாத போதும் அவன் எதிரில் நிற்பதாகவே பாவித்து, 'மைய வண்ணா, மணியே, முத்தமே, மாணிக்கமே' என்று முன்னிலைப்படுத்திப் பேசுகின்ற நிலையானது மேலான அன்பினால் உண்டான ஆன்மா தியானத்தில் அழுந்தியிருக்கின்றதை வெளிப்படுத்துகிறது என்கிறார்.

மேலும், **"ஆன்மா தியானத்தில் அழுத்தப்படும் இந்த உயர் நிலையில் எல்லா உயிர்களிடையேயும் ஊடுருவி நிற்கும் பரமான்மாவின் சாயல் தோன்றுகிறது. இது திடீரென்று தோன்றி மறையும் நிலையாகும்" (அர்த்த பஞ்சகம், 97)** என்று தெளிவு படுத்துகிறார்.

இதனையே, **"பகவானுக்கே அடிமை என்ற எண்ணம், ஆன்மாவை உள்ளபடி அறிவதோடு நிறைவு பெறும். அந்த ஆன்மாவைப் பற்றிய அறிவு நேரே பக்தி யோகத்தை உண்டாக்கும்" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.145)** என்கிறார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இதிலிருந்து ஞானயோக நிலையானது பக்தியால் ஆழ்ந்திருக்கும் ஆன்மாவினை இடைவிடாத தியானத்தினால் முழுமை செய்யும்போது பரமான்வைக் காணச் செய்கிறது என்ற தத்துவத்தினை உணர முடிகிறது. அதோடு ஆன்மாவினை முழுமை அடையச் செய்யும் தன்மையினைக் கொண்ட சிறப்பினை இந்த ஞானயோக நிலையானது தன்னுள்ளே அடக்கியுள்ளதையும் அறிய முடிகிறது.

பக்தி யோகம்

ஞானயோகத்திற்கு அடுத்த நிலையாகக் கருதப்படுவது பக்தியோகமாகும். இந்நிலையும் தியானத்தில் திளைக்கச் செய்து பக்தி நிலையின் முதற்படியில் ஏறுவதற்கு உதவுகிறது. இறைவனை அறிந்து ஞானநிலை பக்தியாக உருமாறுவது இந்நிலையில்தான்.

பக்தியோகம் எனும் இந்நிலையில் உலகிலுள்ள அனைத்து உயிர்களின் மேலும் கருணை ஏற்படுகிறது. இறைவன் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருப்பவன் என்பதினால் மனத்தின்கண் இறைவனை இடையறாது சிந்திப்பதும் இறைவன் மீதுள்ள அன்பினால் பிறருக்கு உதவி செய்வதும், உலக உயிர்களிடத்தில் காட்டும் அன்பு இறைவனிடம் காட்டும் அன்பினை ஆழப்படுத்தும் என்ற நம்பிக்கையும் வலுப்படுகிறது.

இதனையே, **"தைலதாரை போல் இடைவிடாமல் இறைவனிடம் மனத்தை செலுத்துவது பக்தியோகம் எனப்படும்" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.146)** என்பார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இதனைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"ஞானயோகத்திற்கு அடுத்த நிலையான பக்தியோக நிலையிலும் தியான நிலை உண்டு. இந்தத் தியான நிலையில்தான் ஆன்மா தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினை அறிகின்றது. அதனால் இது ஞானநிலையின் இறுதிப் படியாகவும் பக்தி நிலையின் முதற்படியாகவும் இருக்கின்றது" (அர்த்த பஞ்சகம், ப.97)** என்கிறார். மேலும்,

“உய்த்துணர்வு என்னும்

ஒளிகொள் விளக்கேற்றி

வைத்து அவனை நாடி

வலைப்படுத்தேன்” **(மூன்., திருவந்., பா. 94)**

என்ற பேயாழ்வாரின் பாசுரத்தில் இந்நிலையினை அறியலாம் எனச் சுட்டிக்காட்டுகிறார். **“ஞானமே பக்தியாக முதிர்கின்ற இந்நிலையில் முமுட்சுகள் தம் முனைப்பை அகற்றி இறைவனுடைய சங்கற்பத்துக்கு அடிபணிந்து இறைவனுடன் நிரந்தரத் தொடர்பு கொள்வதற்குத் தயாராகின்றனர். இந்நிலையில்தான் நமக்கும் இறைவனுக்கும் அறுபடாத தைலதாரை போன்ற தொடர்பு ஏற்படுகின்றது. நாளாக நாளாக இந்நிலையில் ஒரு புதிய ஆற்றல் தோன்றுகின்றது” (அர்த்த பஞ்சகம், ப.98)** என்கிறார்.

இவ்வகையான பக்தியோகம் மூன்று வித வளர்ச்சிப் படிகளை உடையதாக அமைகின்றது. அதனை,

- பர பக்தி
- பர ஞானம்
- பரம பக்தி

எனச் சுட்டுகிறார்.

பரபக்தி – இறைவனை நேரில் காணத்தூண்டும் ஆவலுடையது

பரஞானம் – இறைவனை நேரில் காண்பது

பரம பக்தி – தொடர்ந்து மேலும் மேலும் இறையனுபவம் பெற நினைக்கும் ஆவல்.

இம்மூன்று வகையான பக்தியோக நிலைக்கு முதலாழ்வார்கள் மூவரும் எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றனர் என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவருக்கும் இம்மூன்று நிலைகளும் அமைந்திருப்பினும் பொய்கையாழ்வாரிடம் பரபக்தியும், பூதத்தாழ்வாரிடம் பரஞானமும், பேயாழ்வாரிடம் பரம பக்தியும் அதிகளவில் காணப்பட்டன என்று கூறுவதிலிருந்து அம்மூவரது வாழ்வியலையும் பாசுரங்களையும் நுணுகி ஆய்ந்த பேராசிரியாரின் பேரறிவு புலனாகின்றது.

பரபக்தி நிலையில் மேலோங்கிய பொய்கையாழ்வார் அந்நிலையில் மூழ்கித் திளைத்து,

“வையம் தகளியா வார்கடலே நெய்யாக

வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய

சுடராழியா னடிக்கே சூட்டினேன் சொல்மாலை

இடராழி நீங்குகவே யென்று” **(முதல் திருவந்., பா. 1)**

என்ற பாசுரத்தில் பூமியெனும் அகல் பகுதியினைச் சுற்றியுள்ள கடல்பரப்பே நெய்யாக அமைய, தனலாகக் கதிர்வீசும் சூரியன் விளக்காக இருக்க, செஞ்சுடர் வீசும் சக்கரத்தினை ஏந்திய திருமாலின் திருவடிகளில் சமர்ப்பிக்கும் இப்பாமாலையினைப் பூமாலையாகச் சாத்துவதினால்

பக்தியோகத்திற்குத் தடையாக உள்ள துன்பக்கடல் அனைத்தும் விலகி ஓடிவிடும் என்று கூறுவதால் பரபக்தியின் மேலோங்கிய நிலை புலப்படுகிறது. மேலும்,

"உளன் கண்டாய், நல் நெஞ்சே! உத்தமன்! என்றும்
உளன் கண்டாய், உள்ளுவார் உள்ளத்து, உளன் கண்டாய்,
வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்,
உள்ளத்தில் உள்ளான் என்றுஓர்" (முதல் திருவந்., பா. 99)

என்ற பாசுரத்தில் புருசோத்தமனாகிய எம்பெருமான் நம்மை ஒவ்வொரு வேளையிலும் பாதுகாப்பதால் பாங்கான நன்மை பெற்ற மனமே! எக்காலத்திலும் இப்பண்புகளால் அடியார்களுடைய மனத்திலே நித்திய வாசம் செய்யும் தன்மையுள்ளவனாகிறான். திருப்பாற்கடலிலே கண் வளர்ந்தருளியவன், திருமலையிலே நின்றவன் இப்போது நம்முடைய இதயத்திலே வந்து புகுந்து நித்திய வாசம் செய்யும் அழகினை உணர்ந்து கொள்! என்று கூறுவதும் பரபத்தி நிலையின் உன்னத நிலையில்தான் என்பதை உணர்த்துகிறது.

பரஞான நிலையெனும் பேரன்பால் இறைவனை முழுமையாகக் கண்டு அனுபவித்த பூதத்தாழ்வார்,

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்பு உருகுசிந்தை இடுதிரியா – நன்பு உருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன், நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்" (இரண்., திருவந்., பா. 1)

என்ற பாசுரத்தில் பரபக்தியின் தொடக்க வடிவமான அன்பே அகலாகவும், அவ்வன்பின் அடிப்படையாகப் பண்பட்டு எழுகின்ற ஆர்வமே நெய்யாகவும், பக்தி எனும் கருத்தின் இனிமையால் உருகுகின்ற மனமானது விளக்குக்கு இடப்படுகிற திரியாகவும் நினைத்ததினால் ஆன்மா உருகப்பெற்று பரஞானமாகிற ஒளிவிடும் விளக்கினை ஏற்றியதாகக் குறிப்பிடுவதிலிருந்து இறைவன்மீது தான் கொண்ட பேரன்பினால் பரஞான நிலை அடைந்ததை அறிய முடிகிறது. மேலும்,

"வகையால் அவனி இரந்து அளந்தாய் பாதம்
புகையால் நறுமலரால் முன்னே – மிக வாய்ந்த
அன்பு ஆக்கி ஏத்தி அடிமைப்பட்டேன் உனக்கு
என் பாக்கியத்தால் இனி" (இரண்., திருவந்., பா. 34)

என்ற பாசுரத்தில் முற்காலத்தில் மூவடியால் உலகளந்த காரணத்தினால் உனது திருவடிகளைத் தூபமிட்டும் மணமுள்ள மலர்களைக் கொண்டும் பக்தியெனும் மிகுந்த அன்பினால் துதித்ததினால் நீ எனக்கு அருளிய ஞானத்தின் பாக்கியத்தால் காலமெல்லாம் உனக்கு அடிமையாய் இருக்கும் தன்மையினை உண்டாக்கி விட்டாய் என்று கூறுவது அவரது பரஞான நிலையினைச் சுட்டிக் காட்டுகிறது.

இடைவிடாது இறைவனை நினைந்துருகும் பரமபக்தி நிலையில் மனம் தோய்ந்த பேயாழ்வார்,

“திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்

அருக்கன் அணிநிறமும் கண்டேன் – செருக்காரும்

பொன்ஆழி கண்டேன் புரி சங்கம் கைக் கண்டேன்

என் ஆழி வண்ணன்பால் இனி” **(மூன்., திருவந்., பா. 1)**

என்ற பாசுரத்தில் இடைவிடாத தொடர்ந்த இறை சிந்தனையினால் தான் பரமபக்தி நிலையினைக் கைக்கொண்டு அதன் பயனாக கடல் வண்ணனான எம்பெருமானின் அழகிய திருமேனியையும், சூரியன் போன்ற ஒளியினையும், திருக்கையிலே இருக்கும் திருவாழியையும், வலம்புரிச் சங்கினையும் முழுதாய்க் கண்டு வணங்கினேன் என்று கூறுவதோடு,

“இறையாய் நிலன் ஆகி எண் திசையும் தானாய்

மறையாய் மறைப் பொருளாய் வானாய் – பிறை வாய்ந்த

வெள்ளத்து அருவி விளங்கு ஒலிநீர் வேங்கடத்தான்

உள்ளத்தின் உள்ளே உளன்” **(மூன்., திருவந்., பா. 27)**

என்ற பாசுரத்தில் சர்வ இறைவனாகவும், பூமிக்கு அந்தர்யாமியாகவும், எட்டுத் திசைகளிலும் உள்ள அனைத்துப் பொருள்களையும் தனக்குள்ளே கொண்டு வேதங்களால் போற்றப்படுபவனும், அவ்வேதங்களின் பொருளாகவும் இருக்கும் திருமால் பரமபதத்தின் தலைவனாகவும், சந்திர மண்டலத்தினை நெருங்கியிருப்பதை ஒத்த அருவிகளின் ஒலியினையுடைய நீர்ப்பரப்பினைக் கொண்ட திருமலையில் வாழ்வதோடு என் நெஞ்சினுள்ளும் வியாபித்து இருக்கின்றான் என்று கூறுவதிலிருந்தும் அவரது பரம பக்தி நிலையினை அறியமுடிகிறது என்று பதிவுசெய்கிறார்.

இதிலிருந்து இறைவனை அடையும் வழிகளில் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் ஆகிய மூன்றனுக்கும் உள்ள முக்கியத்துவத்தினை உணர முடிகிறது. இம்மூன்று யோகங்களும் செயல் மற்றும் சிந்தையால் இறைவனை இடைவிடாது வந்தனை செய்யும் நிலையினை உணர்த்துகிறது.

இதனையே, **“பண்டைக் காலந்தொட்டு இரண்டு வழிகள் மக்களுக்கு உபதேசிக்கப்பட்டு வரப்பட்டிருக்கின்றன. ஒன்று ஞானத்தை அடைந்து இறைவனைக் காண்பது, மற்றொன்று உடம்பெடுத்தவரெல்லாம் உய்ய வேண்டுமெனில் ஏதாவது ஒரு தொழிலைச் செய்து கொண்டிருக்க வேண்டும். புலன்களைக் கட்டுப்படுத்தி, உறுதியான மனத்துடன் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். இதுவே முக்தி அடைய சிறந்த வழியாகும்” (பகவத் கீதை, ப.55–56)** என்பார் சுவாமி ஆத்மானந்தா.

இவ்வாறு பக்தியோக நிலையில் இறைவனைக் கண்டுணர்ந்து வீடுபேறு எனும் முக்தி நிலையினை எளிதில் அடைவதற்காகவே கர்மம், ஞானம், பக்தி ஆகிய மூன்று நிலைகள் அமைந்திருக்கின்றன என்பதனை ந.சுப்புரெட்டியார் இந்த பக்தியோக நிலையில், **“வானநூல்**

அறிஞர் பூமியின் சிறுமையையும் அதனை ஈர்த்து நிற்கும் கதிரவனின் பெருமையையும் உணர்வதுபோல் பக்தர்களும் சமுசாரத்தில் உழலும் தம் ஆன்மாவின் சிறுமையையும், எல்லா உயிர்களையும் புரக்கும் இறைவனின் பெருமையையும் பேராற்றலையும் உணர்கின்றனர். இந்நிலையில் சீவான்மா பரமான்மாவுடன் கலக்கிறது. அப்போது அது கடலில் கிடக்கும் பஞ்சு போன்ற நிலையினை அடைகின்றது. இந்த நிலையினைத்தான் பரபக்தி, பரஞானம், பரம பக்தி என்ற மூன்று பிரிவுகளாக வேறுபடுத்திக் காட்டுவர்" (அர்த்த பஞ்சகம், ப.98) என்று தெளிவுபடுத்துகிறார்.

இதிலிருந்து கர்மயோக, ஞானயோக நிலைகளைவிட இறைவன் மேல் கொண்ட அளப்பரிய, நிலையில்லாத அன்பினால் அவ்விறைவனையே முழுநேரமும் நினைந்துருகும் இயல்பினைக் கொண்டிருப்பதால் பக்தியோக நிலை தனிச் சிறப்பு பெற்றதாய்த் திகழ்வதை பேராசிரியர் புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

பிரபத்தி யோகம்

அளவு கடந்த பக்தியினால் திருமாலின் திருவடிகளே புகலிடம் என்று சரணடையும் நெறி, 'பிரபத்தி யோகம்' எனப்படுகிறது. கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தி யோகம், ஆசார்ய அபிமானம் ஆகிய ஐந்தில் ஆழ்வார்கள் சிறப்பாகச் சொல்லப்படும் நெறி, 'பிரபத்தி' என்ற சரணாகதி நெறியாகும். ஆதலால், **"இந்நெறியானது சரணாகதி பரநயாசும், பரசமர்ப்பணம், உபயாநுஷ்னம் என்ற பெயர்களால் வழங்கப்படுகிறது" (அர்த்த பஞ்சகம், ப.99)** என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

அதோடு வேறு பலனையும் வேறு தெய்வத்தினையும் நாடாத எவரும் இந்த நெறியால் பயனடையமுடியும் என்கிறார். இறைவனின் கருணையின் மேல் மிகுந்த நம்பிக்கை கொள்வதே இந்நெறியினை அடைய போதிய காரணிகளாகின்றன என்றும் **"பிரபத்தி என்ற சொல்லுக்கு, 'மனத்தால் சிறப்பாக அடைதல்', 'அடைக்கலம் புகுதல்' என்று பொருள்" (முக்தி நெறி, ப.105)** என்றும் இந்நெறிக்கு விளக்கமளிக்கிறார். இந்நெறியில் ஈடுபடுவர்கள் பிரபந்தர்கள் ஆவார்கள். இந்நெறி நின்றதாலேயே ஆழ்வார்கள் அனைவரும் பிரபந்தர்களாயினர்.

எவ்வித சக்தியுமற்ற இயலாமையினை உணர்ந்த உயிரானது, பரம்பொருளாகிய இறைவனின் பேரருளை அடைய வேண்டி அடைக்கலம் புகும் நெறியாகக் கருதப்படுவதால் இந்நெறி 'தீதில் நன்னெறி' என்று போற்றப்படும் பெருஞ்சிறப்பினை உடையது. அனைத்து உயிர்களும் கடைபிடித்து ஒழுக ஏற்றதாக எளிமையாகவும், இயல்பாகவும் இருப்பதோடு வீடுபேறு எனும் முக்திநிலையினை அடைவதற்கு ஏற்றதாக இருப்பதால் இந்நெறி 'வீடு பேற்றுக்குரிய நெறி' என்று விசிட்டாத்துவிதக் கொள்கை வலியுறுத்துகிறது.

இதனை நன்கு உணர்ந்த ந.சுப்புரெட்டியார் **"உயர்ந்தோர், தாழ்ந்தோர், கற்றவர், கல்லாதவர் என்ற வேறுபாடு இன்றி எல்லோராலும் மேற்கொள்ளக் கூடிய நெறியொன்றினைக் கண்டனர் மெய் விளக்கம் பெற்ற மேலோர். அதுவே பிரபத்தி நெறியாகும்" (அர்த்த பஞ்சகம், பக்.98–99)** என்கிறார். அதோடு வேதாந்த தேசிகரின்,

"அந்தணர் அந்நியர் எல்லையில்
நின்ற அனைத்துலகும்
நொந்தவரேமுத லாக
நுடங்கி அனன்னியராய்
வந்தடையும் வகை" (தே., பி., 56)

என்ற கூற்றினையும் சுட்டிக்காட்டி இந்நெறியானது, **"பாகவத மரபுப்படி ஆன்மா சம்சாரத்தினின்றும் விடுதலைப் பெறுவதற்குரிய செந்நெறியாகும். ஆழ்வார்கள் அதிகம் வலியுறுத்துவதும் இந்நெறியே ஆகும்" (சில நோக்கில் நாலாயிரம், ப.46)** என்று கூறி தெளிவு படுத்துகிறார்.

பிரபத்தியின் அங்கங்கள்

பிரபத்தியின் முடிவு நிலையான திருமாலைச் சரணடைதலில் ஆறு அங்கங்கள் உள்ளன. இவற்றினை சரணாகதி அங்கங்கள் என்பர்.

அனுகூல்ய சங்கற்பம்	–	சாத்துவிக உணர்வில் இறை சித்தத்தைப் பின்பற்றுதல்
பிரதிகூல வர்ஜனம்	–	இறை சித்தத்திற்கு வேறானவற்றைத் துறத்தல்
நாட்சஸ்ய திதி விசுவாசம் (மகா விசுவாசம்)	–	இறைவன் காப்பான் என்ற உறுதியுடன் நிற்றல்
கோபத்ருவரணம்	–	வீடுபேற்றிற்கு இறையருளையே நம்பியிருத்தல்
ஆன்ம நிட்சேபம்	–	தன்னையே நிவேதனமாக்கி தன்னை முழுமையாக இறைவனிடம் அடைக்கலமாக்குதல்
கார்ப்பண்யம்	–	தன்னால் ஆகாமையை வெளிப்படுத்துதல்

இவ்வாறு சரணாகதி அங்கங்களைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் 'ஆன்ம நிட்சேபம்' எனப்படும் இறைவனிடம் தன்னை அடைக்கலமாக்கும் அங்கத்தினைத் தவிர்த்து மீதமுள்ள ஐந்து அங்கங்களே முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை ஆசாரியப் பெருமக்கள் சுட்டிக் காட்டுவதாய் எடுத்துரைக்கிறார். இதில் **"அனுகூல்ய சங்கற்பம்' என்பது, எம்பெருமான் திருவுள்ளத்திற்கு உகந்தவற்றைச் செய்வதாக உறுதி கொள்ளலாகும். 'பிராதிகூல்ய வர்ஜனம்' என்பது இறைவனின் திருவுள்ளத்திற்குப் பொருந்தாதவற்றைச் செய்யாதிருக்க உறுதி கொள்ளல்; அல்லது அவற்றைச் செய்ய எண்ணம் கொள்ளாமை; அல்லது அவற்றைச் செய்யாது விடுதலாகும். 'மகா விசுவாசம்' என்பது இறைவன் நம்மைக் காக்க வல்லவன் என்று தேறி, தவறாது தம்மைக் காப்பான் என்று உறுதியாக நம்புதலாகும். 'கோபத்ரு வரணம்' என்பது பக்தியோகம் முதலிய உபாயங்களை அநுட்டிக்க ஆற்றலற்ற தம்மிடம் அருள்புரிந்து**

அவ்வுபாயங்களின் இடத்தில் நின்று பலன் தருமாறு அவனை வேண்டுகையாகும். 'கார்ப்பண்யம்' என்பது பக்தியோகம் முதலிய உபாயங்களில் தமக்கு அதிகாரம் இல்லாமையும், எம்பெருமானைத் தவிர வேறு தெய்வத்திடமோ வீடுபேற்றைத் தவிர, வேறு பலனிலோ பற்றில்லாமையே அனுசந்தித்தல்" (அர்த்த பஞ்சகம், ப.100) என்று தெளிவுபடுத்திக் காட்டுவதிலிருந்து ந.சுப்புரெட்டியாருக்கு மெய்யியல் நெறிகளில் இருந்த ஈடுபாடு புலனாகிறது.

இவை தவிர இப்பிரபத்தி யோகத்தில் ஆழ்வார்கள் தலைசிறந்தவர்களாக இருந்த நிலையை, "சரணாகதி தத்துவத்தின் தந்தை போன்றவர் பிரபந்தர்களின் தலைவரான நம்மாழ்வார் அவர் தம்முடைய திருவாய்மொழியில் "நம்பெருமான் அடிமேல் சேமங்கொள்" (திருவாய்., 5:9:11) என்றும், "கழல்கள் அவையே சரணாகக் கொண்ட குருகூர்ச் சடகோபன்" (திருவாய்., 5:8:11) என்றும், "எனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தேன்" (திருவாய்., 5:7:10) **"உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" (திருவாய்., 6:10:10) என்று தாம் எம்பெருமான் கழல் இணைகளில் சரணாகப் புகுந்தமையையும் புலப்படுத்துகிறார்" (அர்த்த பஞ்சகம், ப.102)** என்கிறார்.

நம்மாழ்வார் மட்டுமின்றி பொய்கையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரின் பாசுரங்களிலும் பிரபத்தி நெறியாகிய 'சரணாகதி நெறி' மேலோங்கி இருப்பதனைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார்,

"அடைந்த அருவினையோடு அல்லல்நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் – நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொரு நாள்
தன்னிலங்கை வைத்தான் சரண்" (முதல் திருவந்., பா. 59)

என்ற பொய்கையாழ்வாரின் பாசுரத்தில் பிரபத்தி நெறிக்கான குறிப்பு காணப்படுவதை **"வினை, நோய், பாவம் இவை வாசனையோடு நீங்க வேண்டுமானால் சக்கரவர்த்தித் திருமகனை சரணம் புகுதலே ஒரே வழியாகும் என்றக் குறிப்பைக் காணலாம்" (அர்த்த பஞ்சகம், ப.101)** என்கிறார்.

இதனைப் போன்றே திருமங்கையாழ்வாரும் திருநைமிசாரணியத்தும் பெருமானின் திருவடிகளில் சரண் புகுவதை பாசுரங்கள் தோறும் ஒருமுறைக்கு ஒன்பது முறையாகத் "திருவடி சரணடைந்தேன்" என்று கூறுவதை,

"தேன் உடைக் கமலத் திருவினுக்கு அரசே!
நான் உடைத் தவத்தால் திருவடி அடைந்தேன்" (பெரிய., திரு., 1:6:9)

என்ற பாசுரத்தாலும் திருவேங்கடமுடையானைச் சரணடைவதை,

"கல்தேன் பாய்ந்தொழுகும் கமலச் சுனை வேங்கடவா!
அற்றேன் வந்தடைந்தேன் அடியேனை யாட்கொண்டருளே" (பெரிய., திரு., 1:9:9)

என்ற பாசுரத்தாலும் சுட்டிக் காட்டி விளக்குவதோடு,

"சேஷிபக்கல் சேஷபூதன் இழியுந் துறை

பிரஜை முலையிலே வாய் வைக்குமாப் போலே" (முமுட்சுப்படி, 149)

என்ற முமுட்சுப்படியின் வாக்கியமும் சிந்திக்கத் தக்கது என்கிறார். அதாவது சரணாகதி தத்துவத்தின்படி இறைவனின் திருவடிகளைச் சரணடையும் நிலையானது, **"பாலுண்ணும் பச்சைக் குழவி எங்ஙனம் தாயினுடைய மற்ற அவயவங்கள் யாவையும் விட்டு விட்டு, தான் உயிர்வாழ்வதற்கிடனாய் உள்ள அவள் கொங்கையிலே வாய் வைக்கின்றதோ, அங்ஙனமே சேஷியாகின்ற எம்பெருமானுடைய பல உறுப்புகளையும் விட்டு விட்டு, தான் உய்த்தற்கு இடனாய் உள்ள அவன் திருவடிகளையே சேதநன் பற்றுகின்றான் என்பதை இந்த வாக்கியம் அழகாகப் புலப்படுத்துவதை அறியலாம்" (அர்த்த பஞ்சகம், ப.103)** என்கிறார்.

அதோடு மட்டுமின்றி **"முந்திய செயல் எவ்வாறு குழந்தைக்கு இயல்பாய் அமைந்ததோ, அவ்வாறே பிந்திய செயலும் சேதநனின் சொரூபத்திற்கு இயல்பாய் அமைந்துள்ளது" (அர்த்த பஞ்சகம், ப.103)** என்று கூறுவதிலிருந்து சேதநர்கள் இயல்பான பக்தியில் பரமனின் திருவடிகளைப் பற்றுதலே பிரபத்தியோகத்தின் உயர்நிலை என்பது நன்கு தெளிவாகிறது.

திருமந்திரம் காட்டும் உறவுகள் (சம்பந்த ஞானம்)

வைணவத் தத்துவத்தில் திருமாலாகிய பரம்பொருளுக்கும் சீவகர்களுக்கும் உள்ள உறவு அழிவற்றது. இந்த உறவு முறையை அறிவதைத்தான் 'சம்பந்த ஞானம்' என்பர்.

இந்த சம்பந்த ஞானத்திற்கு இடம் கொடுக்காததால்தான் நாம் நம் உடலையும் மனத்தையும் பற்றி வரும் துன்பங்களான ஆதியாத்மிகம், பிசாசம், தீய பிராணிகள், மனிதர், இராக்கதர் முதலியவர்களால் நேரிடும் ஆதிபௌதிகம், காற்று, மழை, வெயில், இடி, மின்னல் முதலியவற்றாலும், தெய்வ சங்கற்பமாய் உண்டாகும் துன்பங்களான ஆதி தைவிகம் ஆகியவற்றால் மிகுந்த இன்னலுக்கு உள்ளாகிறோம்.

இவை தவிர ஆதியாத்மிகத்தின் இருவகைத் தன்மைகளான 'சரீர ஆதியாத்மிகத்தினால்' உடலைப் பற்றிக் கொண்டு வரும் தலைவலி, காய்ச்சல், குட்டம், இருமல் முதலிய பிணிகளும், 'மன ஆதியாத்மிகத்தினால்' மனத்தில் மையம் கொள்ளும் காமம், குரோதம், பொறாமை முதலிய குணங்களும், 'சம்பந்த ஞானத்தில்' பற்றில்லாத காரணத்தினால் நம்மைப் பெருந்துன்பத்திற்கு ஆளாக்குகின்றன.

இந்த 'சம்பந்த ஞானம்' என்ற உறவு மட்டுமே நம் மனத்தையும், உடலையும் சீரான தீபமாய் விளங்கச் செய்யும் தன்மையுடையது. இதனையே ந.சுப்புரெட்டியார், **"இறைவனுக்கும் நமக்குமான 'சம்பந்த ஞானம்' இல்லாத காரணத்தினால் நாம் சர்வேசுவரான இறைவனை விட்டு பிரிந்து பிறவிப் பெருங்கடலில் நீந்த முடியாமல் ஆழ்ந்து ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்ற மூவகைத் துன்பங்களால் உழன்று கொண்டிருக்கிறோம். இவ்வகைத் துன்பங்களுக்குக் காரணம் சாத்திரங்களில் கூறப்பெறும் அர்த்த பஞ்சக ஞானம் இன்மையே ஆகும்" (நவவித சம்பந்தம், ப.2)** என்கிறார்.

இந்த சம்பந்த ஞானத்தின் தன்மையினை **"உயிர்கள் இறையனுபவம் இழந்து துன்புறுவதற்குக் காரணம் இந்த உறவினை அறிந்து கொள்ளாமையே ஆகும்" (வைணத் தத்துவ ஞான அடிப்படைகள், ப.45)** என்பார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இந்த 'சம்பந்த ஞானம்' உள்ள இடத்தையே திருமால் விரும்புவான். எனவே சம்பந்த ஞானமானது திருமாலின் மீது விருப்பம் கொள்வதற்கு உரியதாகின்றது என்பதை வழிமொழியும் ந.சுப்புரெட்டியார்,

"நின்ற தெந்தை ஊரகத்து
இருந்த தெந்தை பாட கத்து
அன்று வெஃக ணைக்கி டந்த (து)
என்னி லாத முன்னெ லாம்
அன்று நான் பிறந்தி லேன்
பிறந்த பின் மறந்தி லேன்
நின்ற தும்இ ருந்த தும்
கிடந்த தும்என் நெஞ்சுளே" (திருச்., விருத்.,பா. 64)

என்ற பாசுரத்தில் திருமழிசையாழ்வார் திருமாலுக்குக் காலமெல்லாம் அடிமைப்பட்ட கைங்கரியச் சிறப்பினை மிக அற்புதமாகப் புலப்படுத்துவதனைச் சுட்டிக் காட்டுகிறார். அதோடு உலகியல் நிகழ்வு ஒன்றினையும் எடுத்துக் காட்டுகிறார்.

"ஒருவன் கடன் பட்டிருக்கிறான். கடன் கொடுத்தவன் அக்கடனை வீட்டிலே வந்து கேட்கிறான். அப்படி வருகின்றவன் முதலில் சில நாட்கள் நின்ற வண்ணம் கேட்டுவிட்டுச் செல்வான். அடுத்து வருகின்ற சில நாட்களில் கடன் வாங்கியவன் வீட்டு திண்ணைமீது உட்கார்ந்து கடனைத் திருப்பித் தருமாறு நிர்பந்தித்துப் போவான். இவ்வளவிலும் அவன் இசையாவிடில், 'கடனைத் தீர்க்காவிடில் நான் போவதில்லை' என்று படுக்கையாகத் திண்ணையில் படுத்து நிர்ப்பந்திப்பான். இப்படியாக எம்பெருமானாகிய திருமாலும் நம்போன்ற ஆன்ம கோடிகள் செலுத்த வேண்டிய கைங்கரியக் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக ஓரிடத்தில் நின்று, மற்றோரிடத்தில் வீற்றிருந்து, இன்னுமோரிடத்தில் சாய்ந்தும் பார்க்கிறான்" (நவவித சம்பந்தம், ப.3) என்று சுட்டிக்காட்டி இறைவனுக்கு அடிமையாய்த் தொழில் செய்யும் கைங்கரியத்தினை இறைவன் மிகவும் விரும்புவதனையும், அக்கைங்கரியத்தினைத் தொடர்ந்து செய்வதால் இறைவனுக்கே நம் மனம் அடிமையாகிவிட நல்லதோர் சம்பந்த ஞானம் நமக்கு ஏற்படுகிறது என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

மேலும் தொடர்ந்த கைங்கரியச் செயலினால் இறைவன் மீது நமக்கு பக்தியுணர்வு தோன்றும் போது சம்பந்த ஞானம் உண்டாகி விடுகிறது. அதன்பின் திவ்விய தேசங்களில் நிற்றல், இருத்தல், கிடத்தல் நிலைகளையெல்லாம் தவிர்த்து இறைவனுடனான உறவுப் பரிமாற்றமெல்லாம் நமது நெஞ்சினுள்ளே நடைபெறுகின்றது என்பதை,

"அரவத்து அமளியி னோடும்

அழகிய பாற்கட லோடும்

அரவிந்தப் பாவையும் தானும்

அகம்படி வந்து புகுந்து" (பெரியாழ்., திரு., 5:2:10)

என்ற பெரியாழ்வாரின் பாசுரத்தினைச் சுட்டிக்காட்டி மிகத் தெளிவாக உணர்த்தியிருப்பதால் செய்திருப்பது சம்பந்த ஞானத்தினை எளிதில் புரிந்து கொள்ள வழிவகை செய்வதாய் அமைந்திருப்பது சிறப்புடையதாகவும் ஏற்புடையதாகவும் இருக்கிறது.

இறைவனாகிய திருமாலுக்கும் சீவகர்களுக்கும் இடையே சம்பந்த ஞான உறவுகள் ஒன்பது வகையானது என்பர். இந்த ஒன்பது வகையான உறவுகளையும் விளக்குவதற்கு ஏற்ற நெறியாகப் பிரபத்தி நெறி அமைகிறது.

- தந்தை – தனயன் உறவு
- இரட்சிக்கப்படுபவன் – இரட்சிப்பவன் உறவு
- சேஷ – சேஷி உறவு (அடிமை – அடிமை கொள்பவன்)
- நாயகன் – நாயகி உறவு
- அறிபவன் – அறியப்படும் பொருள் உறவு
- சொத்து – சொத்துக்குரியவன் உறவு
- சரீர – சரீரி பாவனை
- தாங்குகிறவன் – தாங்கப்படும் பொருள் உறவு
- போகத்தினை அனுபவிப்பவன் – போக்கியம் பொருள் உறவு

இந்த ஒன்பது உறவுகளும் 'நவவித சம்பந்தம்' எனப்படுகின்றன. இந்த 'நவவித சம்பந்த' உறவுகள் ஒன்பதும், 'ஓம் நமோ நாராயணாய' என்ற திருமந்திரத்தின் மூன்று பதங்களாக ஓம்+நம+நாராயணாய என்ற நிலையில் ஒவ்வொரு பதமும் ஒவ்வொரு பொருளை எடுத்துரைக்கின்றன.

இதனைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் இம்மூன்று பதங்களில் **"ஓம்' எனப் பிரணவம் சேதனனுடைய அடிமைத் தன்மையினையும், 'நம' எனும் பதம் ஈசுவரனுக்கு வசப்பட்டிருத்தலையும் (பாரதந்திரியத்தையும்), 'நாராயணாய' எனும் பதம் ஈசுவரனுக்குப் புரிய வேண்டிய அடிமைத் தொண்டையும் தெரிவிப்பவனவாக அமைகின்றன" (நவவித சம்பந்த, ப.7)** என்கிறார்.

தந்தை – தனயன் உறவு

"ஓம் நமோ நாராயணாய" என்ற திருமந்திரத்தின் முதல் எழுத்தான 'ஓம்' எனும் பிரணவம் ஓர் எழுத்தாகக் கருதப்பட்டாலும் அ+உ+ம என்ற மூன்றெழுத்துக்கள் சேர்ந்த கூட்டெழுத்தாகவே கருதப்படுவது இயல்பு. மொழியின் முதலிலுள்ள அகரம் அனைத்துச் சொற்களுக்கும் காரணமாக உள்ளதைப் போல, **"எல்லாப் பொருள்களுக்கும் காரணமாக உள்ள இறைவனுக்கு அகரம் என்ற பெயர் உவமையாகு பெயர் விதிப்படி பொருந்தும், சொற்களுக்குக் காரணமாக அகரம் இருப்பது போல், உலகத்துக்குக் காரணமாக இறைவன் இருப்பதால்,**

உயிர்களின் பிறப்புக்குக் காரணமான தந்தை என்று அவனைக் கூறலாம்" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.48) என்பார் முனைவர் அரங்க சீனிவாசன்.

குலசேகராழ்வாரின் பெருமாள் திருமொழிப் பாசுரமான,

"தருதுயரம் தடாயேல்உன் சரண்அல்லால் சரண்இல்லை

விரைகுழுவு மலர்பொழில்சூழ் விற்றுவக்கோட் டம்மானே

அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்

அருள்நினைந்தே அழும்குழவி அதுவே போன்றிருந்தேனே" (பெரு., திரு., 5:1)

என்ற பாசுரத்தில் தாய் தான் பெற்ற குழந்தையினை அடித்தாலும், வெறுத்தாலும் அக்குழந்தை தன் தாயிடமே பற்று கொள்ளும் நிகழ்வினைப் போல், என் மனமானது உன்னையே தொடர்ந்து சரணடைகிறது என்று கூறுவது இந்த தந்தை–தனயன் உறவு முறையின் சிறப்பு செய்வதாவகவே அமைந்திருக்கின்றது.

இதனைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"இந்நிலையில் பரமான்வாவுக்கும் சீவான்மாவுக்கும் உள்ள உறவுமுறை தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவு முறை போன்றது என்ற உணர்வினைப் பெற முடிகிறது" (நவவித சம்பந்தம், ப.21)** என்று கூறி தெளிவுபடுத்துகிறார்.

மேலும், ஆழ்வார் பெருமக்கள் திருமாலினைத் தந்தை நிலையில் சுட்டிக்காட்டும் இடங்கள் எண்ணற்றவை என்பதைத் தெளிவுபடுத்தும் பொருட்டு ந.சுப்புரெட்டியார் நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் திருவேங்கடமுடையானையும் திருக்குறுங்குடி, பெருமானையும் திருவிண்ணகர் பிரானையும் பற்றிக் குறிப்பிடும்.

"திருவேங்கடத்து என் ஆனை என் அப்பன்" (திருவாய்., 3:9:1)

"குறுங்குடி மெய்யம்மையே உளனாய எந்தையை" (திருவாய்., 3:9:2)

"எம்பிரானை எந்தை தந்தை தந்தைக்கும்

தம்பிரானைதன் தாமரைக் கண்ணனை" (திருவாய்., 1:10:3)

"என்சரண் என் கண்ணன் என்னை

ஆளுடை என் அப்பனே" (திருவாய்., 6:3:8)

என்றவாறு தந்தையாகக் பாவித்துப் பாசுரங்கள் பாடுவதையும், திருநெடுந்தாண்டகத்தில் திருமங்கையாழ்வார்,

"தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை" (திருநெடுந்தாண்டகம், பா. 1)

"மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை" (திருநெடுந்தாண்டகம், பா.5)

என்ற பாசுரங்களாலும் பெரிய திருமொழியில்,

"காம்புடைக் குன்றம் ஏந்தி கடுமழை காத்த எந்தை" (திருநெடுந்தாண்டகம், பா.4:5:2)

"வவ்விய இடும்பைதிரக் கடுங்கணை துரந்த எந்தை" (பெரிய., திரு.,4:5:2)

"பூங்குருத் தொசித்துப் புள்வாய்

பிளந்தெரு(கு) அடர்ந்த எந்தை" (பெரிய., திரு., 4:5:4)

"சேந் தொழில் சிதைத்துப் பின்னை

செவ்வித் தொள் புணர்ந்த எந்தை" (பெரிய., திரு., 5:5:3)

என்ற பாசுர அடிகளாலும் தந்தை–தனயன் சம்பந்த உறவினை எடுத்துரைக்கும் பாங்கினால் இவ்வுறவு நிலையின் சிறப்பு புலப்படுவதனைத் தெரிவிக்கிறார். மேலும் தந்தை நிலையோடு நில்லாது தந்தை–தாய் சேர்ந்த உறவினாலும் இந்த உறவு முறை விளக்கப்பட்டுள்ளதை,

"யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடு செய்யும்

மாதாவினைப் பிதுவை, திருமாலை வணங்குவனே" (திருவிருத்., 95)

என்ற பாசுரத்தினாலும்,

"மேலாத் தாய் தந்தையும் அவரே இனி ஆவாரே" (திருவாய், 5:1:8)

"தாயும் தந்தையும் ஆய்இவ் வுலகில்

வாயும் ஈசன் மணிவண்ணன் எந்தையே" (திருவாய், 1:10:6)

"தஞ்ச மாகிய தந்தை தாயோடு

தானுமாய்" (திருவாய், 3:6:9)

"அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய்" (திருச்சந்., 115)

"தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ்

திருவரங்கத்துள் ஓங்கும்

ஒளியுணர் தாமே யன்றே

தந்தையும் தாயும் ஆவார்" (திருமாலை, 37)

என்ற பாசுரங்களினாலும் நம்மாழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார் கூறும் தந்தை–தனயன் உறவு நிலையினை விளக்க முற்படும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் "**அன்பைக் காட்டி வேண்டியவற்றை ஈவதால் தாயும், கல்வி முதலியவற்றைப் பெறுவதற்குத் தந்தையும் பொறுப்பாக இருப்பதால் அவர்கள் உவமையாகக் கொள்ளப் பெற்றனர். நவவித சம்பந்தத்தினைக் கூறும் திருமந்திரம் தாய்–மகன் உறவைக் குறிப்பிடவில்லை. ஆனால் இந்தச் சிந்தனை சாதாரண மக்களிடமும் உள்ளது" (நவவித சம்பந்தம், ப.18)** என்று சுட்டிக்காட்டி இவ்வுறவு நெறியினைப் புலப்படுத்துகிறார்.

அதோடு தந்தையையும் தாயையும் ஒரே நோக்கில் சமநிலைப்படுத்தி ஒப்பிடும் பாங்கு ஆழ்வார்களிடத்தில் மட்டுமின்றி பெருங்கவிஞர்களிடமும் காணப்பட்ட நிலையினை,

"கன்றுபிரி காராவின்

துயருடை கொடி"

(கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், கங்கைப்படலம், பா. 67)

என்ற கம்பனின் வரிகளும், பாரதியார் கண்ணனைத் தாயாகவும், தந்தையாகவும் கருதி தனது பாட்டில் கண்ணன் –என் தாய், கண்ணன்–என் தந்தை என்றவாறு தனித்தனி தலைப்புகளில் பாடல்களை அமைத்திருப்பதும் இந்த நவவித சம்பந்த உறவான தந்தை–தனயன் உறவினை மையப்படுத்தித் தான் என்பதனையும் வலியுறுத்துகிறார்.

இதிலிருந்து தந்தை–தனயன் உறவு நிலையானது ஆழ்வார்கள் மட்டுமின்றி அனைவராலும் போற்றத்தக்கதாய் இருப்பதால் திருமந்திரம் காட்டுகின்ற நவவித சம்பந்த உறவுகளில் தந்தை–தனயன் உறவானது முதல் நிலை உறவாகவும் முக்கிய உறவாகவும் போற்றத் தகுந்தது என்பதை உணரமுடிகிறது.

இரட்சக – இரட்சய சம்பந்தம்

காப்பவன் மற்றும் காக்கப்படுவன் ஆகிய உறவும் ஓங்காரத்தின் முதற்பதமான அகரத்தினாலேயே அறியப்படுகிறது. உலக உயிர்கள் அனைத்தையும் இயக்கிக் காப்பவன் திருமால் ஆதலால் அவனுடைய காப்பு இல்லையேல் உயிர்கள் நிலைபெற்று இயங்காது.

அத்தகைய உயிரியக்கத்தின் தலைவனே இரட்சகன் என்றும், இறைவனின் காப்புக்காகக் காத்திருக்கும் சீவான்மாவே இரட்சயன் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களுக்கிடையேயான உறவு 'இரட்சக–இரட்சய சம்பந்தம்' எனப்படுகிறது.

இவ்வுறவு என்றும் நிலைத்திருக்கக் கூடியது. திருமாலாகிய எம்பெருமான் ஒருவனே இரட்சகன் என்பதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் ஆழ்வார்களின் பாசுரங்களில் இரட்சக–இரட்சய சம்பந்தத்தினை மிக அற்புதமாக வெளிப்படுத்தியிருக்கும் பாங்கினை எழிலுற விளக்குகிறார்.

திருமங்கையாழ்வார் தனது பெரிய திருமொழியில்,

"பெற்றார் பெற்றொழிந்தார்
பின்னும் நின்று அடியேனுக்கு
உற்றானாய் வளர்ந்து என்
உயிராகி நின்றானை
முற்றா மாமதிகோன்
விடுத்தானை எம்மானை
எத்தால் யான் மறக்கேன்
இதுசொல், என் ஏழை நெஞ்சே" (பெரிய., திரு., 8:9:7)

என்ற பாசுரத்தில் சுட்டிக்காட்டும் இரட்சக–இரட்சய உறவினைப் பற்றி விவரிக்கும் ந.சுப்புரெட்டியார், "சரீரமாகிய தசைப் பிண்டத்தை மாத்திரமே உற்பத்தி செய்கிறவர்களான தாய் தந்தையர் பெற்றுப் போய் விட்டார்கள். ஞானம், பக்தி முதலிய குணங்கள் என்னிடம் வளர்வதற்குரிய வழிகளில் எவ்வித முயற்சியும் செய்தார்கள் இலர். இவ்வாறு அவர்கள் கைவிட்ட காலத்தில் எனக்கு எல்லாவித உறவு முறையாய் நின்று என்னை வளரச் செய்து வருகின்ற எம் பெருமானை எப்படி மறப்பேன்" (நவவித சம்பந்தம், ப.26) என்று கூறுவது இறைவனைக்கும் சீவான்மாவுக்கும் இருக்கும் இரட்சக–இரட்சய சம்பந்தத்தினைச் சிறப்பாகக் குறிப்பிடுவதனை எடுத்துரைக்கிறார்.

மேலும், இந்த சம்பந்தத்தினால், **"திருமந்திரத்தில் தேறுகின்ற ஒன்பது வகையான உறவுகளையும் உடையவன் எம்பெருமான் என்பது "உற்றானாய் நின்று வளர்ந்து என் உயிராகி**

நின்றானை" என்ற அடிகளால் அறிய முடிகிறது" (நவவித சம்பந்தம், ப.26) என்று கூறி உறுதிப் படுத்துகிறார்.

இவை மட்டுமின்றி பெரியாழ்வார் தன்னுடைய திருமொழியில் "அல்லற்படா வண்ணம் காக்க வேண்டும்" (பெரியாழ்., திரு., 4:10:3) "அற்றைக்கு நீ என்னை காக்க வேண்டும்" (மேலது, 4:10:4) என்றெல்லாம் ஒருமுறை 'காக்க வேண்டும்' என்று எடுத்துரைப்பது இந்த இரட்சக– இரட்சய உறவினைத்தான் என்பதனையும் சுட்டிக் காட்டுகிறார் ந.சுப்புரெட்டியார்.

மேலும், இந்த உறவுநிலையில் மேன்மை நிலையாகக் கருதப்படுவது சிவான்மாக்களுக்குத் துன்பங்களைக் கொடுத்து பின்னர் அவர்களை இரட்சிக்கும் மாண்புதான் என்பதைக் குலசேகராழ்வார்,

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் விற்றுவக்கோட் டம்மா! நீ
ஆளா உனதருளே டார்பன் அடியேனே" (பெரு., திரு., 5:4)

என்ற பாசுரத்தில் மருத்துவன் வாளால் அறுத்து சுடுவது என்பது நோயினைப் போக்குவதற்கும், நோயாளிக்கு நன்மை விளைவிப்பதற்காகவும் தான். அந்த நோயாளானும் நோய் நீங்கும் பொருட்டு அந்தச் சிகிச்சையின் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதோடு தனக்கு அத்துன்பங்களை விளைவித்த மருத்துவனிடம், நீங்காத அன்புள்ளம் கொண்டவனாகவே இருக்கின்றான். இந்த அமைப்பானது 'இரட்சக – இரட்சய' உறவினை முன்னிலைப் படுத்துவதாகவே அமைந்திருக்கிறது.

இதனைப் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் "**துன்பங்களைக் கொடுத்தும் இறைவன் ஆன்மாக்களை உய்விப்பான் என்பது வைணவ சமயக் கொள்கை. இறைவனது கருணை வெள்ளம் துன்ப வடிவிலும் நம்மை வந்தடையும் இறைவனே அனைத்தையும் அருளிக் காப்பவன் என்ற துணிவு ஏற்பட்டபின் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொள்வதைத் தவிர தமக்கு வேறு வழி இல்லை" (நவவித சம்பந்தம், ப.37)** என்று கூறுவதிலிருந்து 'இரட்சக – இரட்சய' சம்பந்த நெறியின் தன்மையினை உணர்த்துகிறார்.

இதிலிருந்து இறைவனாகிய திருமால் நம்மை மாளாத துன்பத்தில் ஆழ்த்தி, அத்துன்பச் சூழலிலும் தம்மை மறவாத ஞான நெறியினை கற்பிக்கும் உறவுநிலையாக 'இரட்சக – இரட்சய' சம்பந்தம் அமைந்திருப்பதனை உணர்த்துகிறது.

சேஷ– சேஷி உறவு (அடிமை கொள்பவன்–அடிமை)

இந்த உறவு நிலையானது திருமந்திரத்தின் முதற்பதத்தின் அகரத்திலிருந்தே பிறக்கின்றது என்பர். 'ஓம்' என்ற பதத்தின் அ, உ, ம என்ற மூன்றெழுத்துக்களில் இறைவனைக் குறிக்கும் அகரத்தையும், தேற்ற ஏகாரத்தைக் குறிக்கும் உகரத்தையும், உயிரைக் குறிக்கும் மகரத்தையும் தொடர்புப் படுத்திப் பொருள் கொள்வதால் உலக உயிர்கள் அனைத்தும் இறைவனுக்கே உரியன என்ற தத்துவப் பொருள் கிடைக்கிறது.

இவ்வாறு அகரத்தில் ஏறி மறைந்துள்ள, 'ஆய' எனும் நான்காம் வேற்றுமை உருபால் அறிவிக்கப்படும் இவ்வளவு முறை, அடிமை கொள்பவன்–அடிமை என்ற உறவு நிலையாகக் கருதப்படுகிறது. இதனை ஆண்டான்–அடிமை சம்பந்தம் என்றும் கூறுவர்.

சீவான்மாவாகிய மனிதருக்கு கைகள், கால்கள் முதலான உறுப்புகள் கொண்ட உடலானது அடிமையாவதைப் போல, பரமான்மாவாகிய இறைவனுக்கு சீவான்மாவாகிய மனிதர்கள் அடிமையாகின்றனர்.

இந்நிலை பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"பகலவனின் ஒளி அதனைவிட்டுப் பிரியாமல் காணப்படுவதைப் போல, பரமான்மாவை விட்டுச் சீவான்மா பிரியாமல் காணப்படுவதால் அவனுடைய அமிச பூதனாகின்றான். அவ்வாறே சீவான்மாவை விட்டுப் பரமான்மா பிரியாமல் இருப்பதால் சீவான்மாவை அம்சமாக உடையவானகின்றான் பரமான்மா" (நுவவித சம்பந்தம், ப.38)** என்கிறார்.

இந்த ஆண்டான் – அடிமை உறவினைப் பற்றிக் குலசேகராழ்வார் தன்னுடைய பெருமாள் திருமொழியில்,

"செந்தழலே வந்து அழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரம் சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்
வெந்துயர் வீட்டாவிடினும் விற்றுவக் கோட்டம்மா உன்
அந்தமில் சீர்க்கல்லால் அகம் குழைய மாட்டேன்" (பெரு., திரு., 5:6)

என்ற பாசுரத்தில் சூரியன் நிலையில் எம்பெருமானையும், தாமரை நிலையில் தம்மையும் வைத்துக் கூறியதினால் இப்பாசுரத்தில் ஆண்டான்–அடிமை உறவு காணப்படுவதை சுட்டிக்காட்டுகிறார் ந. சுப்புரெட்டியார்.

சில வைணவப் பெரியோர்கள் இப்பாசுரம் நாயக–நாயகி பாவனையினைக் குறிப்பதாகக் கூறினாலும், **"ஒரு வகையில் நோக்கினால் ஆணுக்குப் பெண் அடிமை நிலையிலிருந்த பண்டைய வழக்கப்படி பார்த்தால் இவ்வுறவு ஆண்டான்–அடிமை உறவுதான். ஆண்–பெண் சமத்துவம் பேசும் இக்கால நிலையில் சில குடும்பங்கட்கு அது பொருந்தலாம்" (நுவத சம்பந்தம், ப.52)** என்று கூறி இவ்வுறவினைத் தெளிவு படுத்துகிறார்.

மேலும் நம்மாழ்வார் தனது திருவாய் மொழியில்,

"முட்டில்பல் போகத் தொருதனி
நாயகன் மூவுல குக்குரிய
கட்டியைத் தேனை அமுதைநன்
பாலைக் கனியைக் கரும்பு தன்னை
மட்டவிழ் தன்னந் துழாய்முடி
யானை வணங்கியவன் திறத்துப்
பட்டபின் னைஇறை யாகிலும்
யான்என் மனத்துப் பரிவலனே" (திருவாய்., 2:10:3)

என்ற பாசுரத்தில், **“இறைவனைத் ‘தனிநாயகன்’ என்பதால் ‘சேஷி’ என்ற நிலையும், தன்னை ‘பட்ட பின்னை’ என்பதால் ‘சேஷன்’ என்ற நிலையும் புலப்படுகின்றது” (நவவித சம்பந்தம், ப.49)** என்று விளக்குகிறார். அதோடு இதே திருவாய்மொழியின் மற்றொரு பாசுரத்தில்,

“உண்டும் உமிழ்ந்தும் கடந்தும்
இடந்தும் கிடந்தும் நின்றும்
கொண்ட கோலத் தொடுவீற்
றிருந்தும் மணங் கூடியும்
கண்ட வாற்றால் தனதே
உலகென நின்றான் தன்னை
வண்டமிழ் நூற்க நோற்றேன்
அடியார்க் கின்பமாரியே”(திருவாய், 4:5:10)

என்று கூறுவதில் **“தனதே உலகென நின்றான் தன்னை’ என்பதால் சேஷித்துவமும் ‘வண்டமிழ் நூற்க தோற்றேன்’ என்பதால் சேஷித்துவமும் தெளிவாகின்றன” (நவவித சம்பந்தம், 49)** என்று அறிவுறுத்துகிறார். இவைமட்டுமின்றி,

“தீரா வினைகள் தீர
என்னை ஆண்டாய்! திருக்குடந்தை
ஊரா! உனக் காட் பட்டும்
அடியேன் இன்னம் வதல்வேனோ ?” (திருவாய்., 5:8:10)

“தெரிதல் நினைதல் எண்ணல்
ஆகாத் திருமாலுக்கு
உரிய தொண்டர் தொண்டர்
தொண்டர் சடகோபன்” (திருவாய்., 6:9:11)

ஆகிய பாசுரங்களில் ‘ஆண்டாய், திருமாலுக்கு’ ஆகிய பதங்கள் சேஷித்துவத்தினையும், உனக்காட்பட்டும், தொண்டன் என்ற பதங்கள் சேஷத்துவத்தினையும் தெளிவாக விளக்குகின்றன (நவவித சம்பந்தம், ப.50) என்று குறிப்பிடுவதிலிருந்து ஆண்டான்–அடிமை (சேஷ–சேஷி உறவு) உறவானது எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய உறவாகவே இருப்பதைத் தெரிவித்திருக்கிறார் ந.சுப்புரெட்டியார்.

இதனையே, **“அனைத்துக் குணங்களுக்கும் கொள்கலமான ஆனந்த மயமான இறைவனின் குணநலன்களிலே ஈடுபட்டு அடிமையாக இருப்பது பெறும் பேறாகவே அமையும்” (வைணவ தத்துவஞான அடிப்படைகள், ப.53)** என்பார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இத்தகைய உறவு நெறியினை ஆழ்வார்கள் மட்டுமின்றி தேசியக்கவி பாரதியாரும் கண்ணனை ஆண்டானாகவும், தம்மை ஓர் அடிமையாகவும் கொண்டு தனது கண்ணன் பாட்டில், “கண்ணன்–என்–ஆண்டான்” என்ற தலைப்பில்,

“ஒன்பது வாயிற் குடியினைச் சுற்றி

ஒரு சில பேய்கள் வந்தே

துன்பப் படுத்துது மந்திரம் செய்து

தொலைத்திட வேண்டும் ஐயே! – பகையாகவும்

தொலைத்திட வேண்டும் ஐயே!”

(பாரதியார் கவிதைகள், கண்ணன் என்ஆண்டான், பா. 9)

என்று பாடிப் பரவசப்பட்டிருப்பதும் இந்த ஆண்டான்–அடிமை உறவினை முன்வைத்து தான் என்பதனையும் ந.சுப்புரெட்டியார் மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறார்.

இதிலிருந்து இவ்வுலகினைப் படைத்து, காத்து, செம்மைப்படுத்தும் இறைவனாகிய திருமாலுக்கு அனைத்து உயிர்களும் அடிமை என்று முமுட்சுப்படி கூறும், **“சேஷத்துவமே ஆன்மாவுக்குச் சொரூபம்” (முமுட்சுப்படி, 55)** என்ற தத்துவம் உணர்த்தப்படும் தன்மை புலப்படுகிறது.

நாயக–நாயகி சம்பந்தம்

திருமந்திரத்தின் முதற் பதமாகிய ‘ஓம்’ என்பதில் உள்ள மூன்று எழுத்துக்களில் ‘உகாரத்தினால்’ நாயக–நாயகி சம்பந்தம் என்ற உறவு நெறி விளக்கப்படுகிறது.

நாயக –நாயகி உறவு நிலையானது கணவன்–மனைவி, தலைவன்–தலைவி ஆகிய உறவுகளைக் குறிப்பதாய் அமைகிறது.

ஆண்டான்–அடிமை உறவிலேயே கணவன்–மனைவி உறவு நிலை அடங்கி விடுகிறது என்பது வைணவர்கள் சிலரின் கருத்தாக இருந்தாலும், நாயக–நாயகி சம்பந்தமானது. ஆண்டான்–அடிமை உறவுக்குள் வருவதில்லை என்பதை, **“பிறருக்கும் மனைவிக்கும் வேறுபாடு உண்டு. மனைவி கணவனுக்கு அடிமை அல்ல, அவனுடன் சமமாக அன்பு காட்டும் உரிமையுடையவள். ஆதலால் இவ்வுறவானது ஆண்டான்–அடிமை உறவில் சேராது” (வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், ப.54)** என்று கூறி தெளிவு படுத்துகிறார் முனைவர் அரங்க சீனிவாசன்.

நாயகனை இறைவனிடம் முழு உரிமை கொண்டு உறவு கொண்டாடும் நிலையில் நாயகி உறவு முறை அமைவதால் இவ்வுறவு மிகுந்த மேன்மையுடைய உயர்நிலை உறவாகவே கருதப்படுகிறது. ஏனைய உறவுகள் போல் அல்லாமல், **“உறவுக்குள் இது மிக மிகச் சிறந்த உறவு ஆகையாலேயே ஆழ்வார்கள் தம்மை நாயகிகளாகப் பாவித்து எம்பெருமானைக் காதலுக்கு இலக்காக்கிப் பாடியுள்ளனர்” (வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், ப.55)** என்கிறார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இதனையே பேராசிரியர் ந.சுப்புரெட்டியார், ‘ஞானத்தில் தம்பேச்சு பிரேமத்தில் பெண் பேச்சு’ என்று ஆசாரிய ஹிருதயம் சுட்டிக் காட்டுவதைக் குறிப்பிட்டு, **“ஞான நிலையிருக்கும்போது ஆழ்வார்கள் தாமான தன்மையிலிருந்து பேசுவர். பிரேம நிலையிலிருக்கும்போது பெண் தன்மையை அடைந்து வேற்றுவாயாலே பெண் பேச்சாகப் பேசுவர். அப்பொழுது நம்மாழ்வாருக்கு ‘பராங்குசர்’ என்ற ஆண்மைப் பெயர் நீங்கிப் ‘பராங்குச**

நாயகி' என்ற பெண்மைப் பெயரும், திருமங்கையாழ்வாருக்கு, 'பரகாலர்' என்ற ஆண்மைப் பெயர் நீங்கி, 'பரகால நாயகி' என்ற பெண்மைப் பெயரும் வழங்கப் பெறும்" (நவவித சம்பந்தம், ப.56) என்று கூறித் தெளிவுபடுத்துகிறார்.

அது மட்டுமின்றி தத்துவ நெறியின்படி, "**பரம்பொருளுக்கும் ஆன்மாவிற்கும் ஒன்பது வகையான தொடர்புகள் ஏற்பட்டுள்ளன என்று வைணவத் தத்துவம் கூறும், இவற்றுள் நாயகன்–நாயகி பாவனையும் ஒன்றாகும். இந்த உறவே ஏனையவற்றுள் சிறந்தது. உயர்வானது" (சில நோக்கில் நாலாயிரம், ப.195)** என்று சுட்டிக்காட்டி நாயக–நாயகி உறவின் சிறப்பினைப் புலப்படுத்துகிறார்.

அளவுக்கதிகமான அன்பினால் இறைவனை அடையத் துடிக்கும் உயிர் தன்னைப் பெண்ணாகப் பாவித்து இறைவன்மேல் அன்பு செலுத்தும் இவ்வுறவில் ஆன்மா இறைவனாகிய எம்பெருமானை அடைவதிலுள்ள உயிர்த்துடிப்பினை நிலை நிறுத்துவதாய் அமைகின்றன.

பிரிவுத் துயரில் தோய்ந்த பெண்ணின் நிலையினை ஒத்ததாய்ப் பக்தியில் உச்சநிலை அடைந்த ஆழ்வார்களின் நிலை இருந்ததால், சங்க இலக்கிய அகப்பொருள் மரபையொட்டியே நாயக–நாயகி பாவனையிலுள்ள அகப்பொருள் கூறுகள் ஆழ்வார்களின் பாசுரங்களில் மிகுதியாக விரவிக் காணப்படுகின்றன.

இதனைப் பற்றி விளக்கும் ந.சுப்புரெட்டியார் "**அகத்துறைப் பாசுரங்கள் பரமான்மாவைத் தலைவனாகவும் சீவான்மாவைத் தலைவியாகவும் கொண்டு பேசுவனவதாக அமையும். வைணவப் பெருமக்கள் சங்க கால அகப்பொருள் நெறியையொட்டிப் பிற்காலத் தத்துவ முறையைக் கலந்து புதியதோர் அகப்பொருள் நெறியை அமைத்துக் காட்டிய பெருமையைப் பெற்றனர்" (நவவித சம்பந்தம், ப.57)** என்று மிக நேர்த்தியாக விவரிக்கிறார்.

இவ்வாறு பெண் தன்மை ஏற்று பெருக்கெடுத்த பக்தியால் குலசேகராழ்வார்,

"கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலக் கொடிபோல்
விண்நோய் மதிள்புடைசூழ் விற்றுவக் கோட்டம்மா! நீ
கொண்டாளா யாகிலும்உன் குரைகழலே கூறுவனே" (பெரு., திரு., 5:2)

என்ற பாசுரத்தில் தம்மை மனைவி நிலையிலும் எம்பெருமானை கணவன் நிலையிலும் வைத்துப் பாடியுள்ளார். அவ்வாறு மனைவி நிலையிலிருந்து தன் கணவனானவன் காண்போர் அனைவராலும் இகழத்தக்க செயல்களைச் செய்திடினும், உயர்குலத்தில் பிறந்த நல்ல பெண்ணானவள் அக் கணவனையன்றி வேறு ஓர் ஆடவரை மனதளவிலும் நெருங்க மாட்டாள். அதனைப் போலவே உன்பால் மாறாத காதலால் என்றன் குறைகளைப் போக்கியாளாமல் போனாலும், வீரக்கழலையுடைய உனது திருவடிகளையே சரணமாகப் பற்றிக் கொள்வேன் என்று பரவசப்படுவது நாயக–நாயகி உறவு நிலையினைப் பெரிதும் போற்றும் விதமாய் அமைந்திருக்கிறது.

இப்பாசுரத்தின் தன்மை குறித்துக் கூறும் ந.சுப்புரெட்டியார் இப்பாசுரத்தால், **"பரமான்மாவுக்கும் சீவான்மாவுக்கும் உள்ள சம்பந்தம் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவு போல் தோன்றுகிறது. அதாவது, பரமான்மாவின் தலைமையும் சீவான்மாவின் அடிமையும், சீவான்மா பரமான்மாவுக்கே உரியதாயிருந்தாலும், சீவான்மா பரமான்மாவின் சேர்க்கையால் இன்புறுதலும், பிரிவினால் துயருருதலும், பரமான்மாவையே சீவான்மா கரணங்களெல்லாவற்றாலும் அனுபவித்து ஆனந்தப்படுதலும் முதலாயினவற்றைக் கண்டு மகிழ முடிகிறது" (நுவவித சம்பந்த, ப.81)** என்று கூறி நாயக–நாயகி சம்பந்தத்தினைத் தெளிவு படுத்துன்றார்.

இவை தவிர,

"தொக்கிலங்கி யாறெல்லாம்" (பெரு., திரு., 5:8)

"ஆயப்பாடிக்கே என்னை உய்த்திடுமின்" (நாச்., திரு., 12:2)

"திண் திமில் ஏற்றின் மணியும்" (பெரிய., திரு., 9:5:5)

"இன்னுயிர்ச் சேவலும் நீரும்" (திருவாய், 9:5:1)

"கண்டதுவே கொண்டேல் லாருக்கூடி" (திருவாய், 7:3:8)

"என்நெஞ்சினால் நோக்கிக் காணீர்" (திருவாய், 5:3:2)

"கரைகொள் பைம்பொழில் தண்பனை" (திருவாய், 6:5:3)

"இவளைப் பெரும்பரிசு இவ்வணங்கு" (திருவாய், 4:5:5)

எனத் தொடங்கும் பாசுரங்களிலெல்லாம் பெண் தன்மைகளான தோழி, தாய், மகள் என்ற நாயக–நாயகி உறவினைப் புலப்படுத்துவதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் ஆழ்வார்கள் இவ்விதம் பெண் பாவனையினை ஏற்றுக் கொள்வது, **"தாமாக ஏறிட்டுக் கொள்கின்றனரல்லர், இந்நிலை தானே பரவசமாக வந்து சேருகின்றது. புருசோத்தமனாகிய எம்பெருமானின் பேராண்மைக்கு முன்னர் உலகம் அடங்கப் பெண் தன்மையாதனாயிருக்கையாலும், சீவான்மாவுக்குச் சுதந்திரத் தன்மை வாசனையின்றிப் பிறருக்கு வசப்பட்டிருத்தலே வடிவாயிருப்பதாலும் இவ்வகைகளுக்கு ஏற்பப் பெண் பாவனை வந்தேறியது என்றே கொள்ளலாம்" (நுவவித சம்பந்தம், ப.57)** என்று கூறித் தெரிவுபடுத்தும் விதம் நேர்த்தியானதாய் அமைகிறது.

ஆழ்வார்கள் மட்டுமின்றி மகாகவி பாரதியாரும் தன்னுடைய கண்ணன் பாட்டில், 'கண்ணன் என் காதலன்' என்ற தலைப்பில் இயற்றிய ஐந்து பாடல்கள் மற்றும் 'கண்ணன் என் காந்தன்' என்ற தலைப்பில் இயற்றிய பாடலிலும் தம்மை நாயகி நிலையில் வைத்து, கண்ணனை நாயகனாகக் கொண்டு ஈடுபட்டு களிப்பதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் காதல் சுவையின் தொடர்பு சற்றுமின்றியே பக்திச் சுவையின் அடிப்படையிலேயே பாசுரங்கள் அருளிச் செய்யவேண்டும் அவ்வாறிருக்க காதல் சுவையும் கலந்து பாசுரங்கள் அருளிச் செய்யப் பெற்றிருப்பதற்கான காரணத்தினை,

"உடல் நலத்திற்குக் காரணமான வேப்பிலை உருண்டையை உட்கொள்ள வேண்டியவர்கட்கு வெல்லத்தைச் சேர்த்து உண்பிப்பது போலவும், கொயனா மாத்திரைகட்குச் சருக்கரைப் பாகு பூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் தின்பிப்பது போலவும், சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தை நிலைநாட்டுகின்றனர் என்று பெரியோர்கள் பணிப்பர்" (நவவித சம்பந்தம், ப.83) என்று சுட்டிக் காட்டுகிறார்.

மேலும், நாயக–நாயகி உறவு முறையானது அர்த்த பக்தியின் முக்கிய நிலையின் வெளிப்பாடுதான் என்பதை **"ஆழ்வார்களின் முறுகிய பக்தி நிலையை உணர்த்துவதற்கேற்ற ஓர் இலக்கிய மரபே இஃது என்று கொள்ளினும் இழுக்கில்லை என்று கொள்வதும் ஒரு சிறப்பாகும்" (நவவித சம்பந்தம், ப.83)** என்று கூறி நாயக–நாயகி பாவனையின் மேன்மையினைப் புலப்படுத்துகிறார்.

நாதா–நேயன் உறவு (அறிவன்–அறியப்படும் பொருள் உறவு)

திருமந்திரத்தின் முதற்பதமாகிய 'ஓம்' என்பதிலுள்ள மகாரத்தினால் 'அறிவன்–அறியப்படும் பொருள் உறவு' விளக்கப்படுகிறது என்பர்.

இந்த மகர எழுத்தானது வடமொழியில் இருபத்தைந்தாம் எழுத்தாகும். இவ்வெழுத்து ஞானத்தினைக் குறிக்கும் சொல்லாகவே கருதப்படுகிறது. ஆதலால் இது ஆன்மாவையே குறிக்கிறது என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

அதாவது **"வடமொழியில் 'க' இனம் ஐந்து; 'ச' இனம் ஐந்து; 'ட' இனம் ஐந்து, 'த' இனம் ஐந்து, 'ப' இனம் ஐந்து, இந்த ஐந்து இனங்களில் உள்ள இருபத்தைந்து எழுத்துக்களில் 'ப' கர இனத்திற்கு இறுதியாகவுள்ள எழுத்தான 'ம' காரம் ஆன்மாவைக் குறிக்கிறது" (நவவித சம்பந்தம், ப.92)** என்றவாறு இவ்வுறவு நிலைக்கான அடையாளத்தினைச் சுட்டுகிறார். இதனையே,

> **"மகாரம் இருபத்தைந்தாம் அட்சரமாய் ஞானவாசியு**
> **மாயிருக்கையாலே, ஆத்மாவைக் கொல்லுகிறது" (முமுட்சுப்படி, 66)**

என்று முமுட்சுப்படி எடுத்துரைப்பதனைச் சான்று காட்டுவதோடு இம்மகாரத்தின் பொருளாகிய சேதனன் அறிபவன் ஆகின்றான், அறியப்படும் பொருளாக இறைவன் இருக்கின்றான் என்பதை **"ஆன்மாவிற்கு சேஷத்துவம், ஞானத்துவம், ஞாத்ருத்வம் எனப்படும் அறிவுடையவனாய் இருக்கும் இருக்கை ஆகிய மூன்று தன்மைகள் உண்டு. ஈண்டு ஆன்மா ஞானமற்ற உடலைக் காட்டிலும் வேறுபட்டவன் என்பதும் சொல்லப்பெறுகின்றது" (நவவித சம்பந்தம், ப.85)** என்று எடுத்துரைப்பதிலிருந்து 'அறிவன்–அறியப்படும் பொருள்' உறவு நிலை புலப்படுவதை உணர முடிகிறது.

அதோடு ஆழ்வார்கள் தங்களது பாசுரங்களில் 'அறிபவன் – அறியப்படும் பொருள்' உறவினை முன்னிலைப் படுத்தி இயற்றியுள்ள நிலையினை,

> **"பெயரும் கருங்கடலே நோக்கும் ஆறு; ஒண் பூ**
> **உயரும் கதிரவனே நோக்கும் – உயிரும்**

தருமனையே நோக்கும்; ஒண்தாமரையாள் கேள்வன்

ஒருவனையே நோக்கும் உணர்வு" **(முதல், திருவந்., பா. 67)**

என்ற பொய்கையாழ்வாரின் பாசுரம் எடுத்துரைக்கும் தன்மையினை, **"ஆறுகள் மாக்கடல் நோக்கி ஓடுவதும், தாமரைப்பூ பகலவனை நோக்கி மலர்வதும், உயிர்கள் எமதர்மனை நோக்கிக் கிட்டுவதும் எப்படி நியதமாக நிகழ்கின்றனவோ, அப்படியே ஞானம் என்பதும் திருமாலைப் பற்றியல்லது இதர விஷயங்களைப் பற்றியுண்டாகும் அறிவு அறிவல்ல; அவை அறிவின்மைக்குச் சமமானவையே" (நவவித சம்பந்தம், பக். 87–88)** என்று விளக்குகிறார். இதிலிருந்து 'நான்' என்பதற்குப் பொருள் 'ஆன்மா' என்றும், அவ்வான்மா உடலினின்றும் வேறுபட்டது என்று கூறி 'அறிபவன்–அறியப்படும் பொருள்' உறவு நிலையினை மிக அழகாய்ப் பகுத்துணர்ந்து காட்டும் மாண்பானது ந.சுப்புரெட்டியாருக்கு செறிந்துள்ள தத்துவ அறிவை இனங்காட்டுவதாக அமைந்திருக்கின்றது.

இதனையே, **"இறைவனைத் தவிர இதர விஷயங்களில் செல்லும் அறிவு விவாசம் அடைவதாகக் கொள்ள இயலாது. ஏனெனில், அவை அழியும் இயல்பின. ஆதலால் அவற்றை அறியும் அறிவும் அழியக் கூடியதாகும். எம் பெருமான் ஒருவனே எந்நாளும் அழிவற்றவன். எல்லாக் குணங்களுக்கும் இருப்பிடமானவன். ஆதலால் அவன் குணங்களை அறிவுக்கு விஷயமாகக் கொள்வதே தகும்" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.57)** என்ற முனைவர் அரங்க சீனிவாசனின் கூற்றும் மெய்ப்பிக்கிறது.

அதோடு மட்டுமின்றி குலசேகராழ்வார் தனது பெருமாள் திருமொழியில்,

"எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்

மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவை போல்

மெய்த்துயர்வீட் டாவினும் விற்றுவக்கோட் டம்மா! என்

சித்தம்மிக உண்பாலே வைப்பன் அடியேனே" **(பெரு., திரு., 5:7)**

என்ற பாசுரத்தால் தம்மை பயிரின் நிலையிலும் இறைவனாகிய எம்பெருமானை மேகத்தின் நிலையிலும் வைத்தும் கூறுவதால் நாதா–நேயன் உறவான உலகத்து உயிர்கட்கெல்லாம் சீவாதாரம் பரமான்மாவே என்ற உண்மையினைத் தெளிவாக அறிய முடிகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார். இதிலிருந்து 'அறிபவன்–அறியப்படும் பொருள்' உறவு நிலையானது திருமால் எனும் பரம்பொருளை அறிகின்ற அறிவு ஒன்று தான் ஞானமாகும் என்ற உண்மையினை அறிய முடிகிறது.

சுவம் – சுவாமி சம்பந்தம்

திருமந்திரத்தின் நடுப்பதமாகிய 'நம' எனும் பதத்தால் சுவம்–சுவாமி சம்பந்தம் சொல்லப்பெறுகின்றது. இவ்வுறவினைச் 'சொத்து–சொத்துக் குரியவன் உறவு' என்றும் கூறுவர்.

இவ்வுறவினைப் பற்றிக் குறிப்பிடும் ந. சுப்புரெட்டியார் **"இந்த உலகில் பொருளுடையவன் அதனைத் தன் விருப்பப்படி அனுபவிப்பதும், பெட்டியில் வைத்துப் பேணுவதும் பிறருக்கு உதவுவதுமாக எப்படிச் சுதந்திரமாகப் பயன்படுத்துகிறானோ அப்படியே**

பரமான்மாவும் இந்தச் சீவான்மாவை சுதந்திரமாக வைக்கவும், தள்ளவும், எடுக்கவும் உரியவனாகின்றான். சீவான்மாவும் அப்பொருளைப் போலவே தனக்கு எந்தவித சுதந்திரமுமின்றிப் பரமான்மாவின் விருப்பத்திற்கே அவனது அனுபவிக்கும் பொருளாகக் கடமைப்பட்டு வாழ்பவனாக அமைகின்றான்" (நவவித சம்பந்தம், ப.92) என்று கூறுவதன் மூலம் 'சொத்து–சொத்துக் குரியவன்' உறவினை மிக எளிமையாக அறிந்து கொள்ள ஏதுவாகின்றது.

இந்த உறவு நிலையினைப் பற்றி எடுத்துரைக்கும் போது " **'நம' எனும் பதத்தில் 'ம' என்றால் எனக்கு என்று பொருள் 'ந' என்பதற்கு அல்ல என்பது பொருள். ஆக 'நம' என்பது 'எனக்கு அல்ல' என்றாகிறது. நான் பிறருக்கு உரிமையல்லன், எனக்கும் உரிமை அலன் என்பது திரண்ட பொருள். ஆதலால் நான் இறைவனுக்கே உடைமை என்பது உறுதியாகின்றது" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.58)** என்பார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இதனைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், "**மகாபாரதத்தில் சொல்லப்பெறும் ஆன்மாவுக்கும் அகாரத்தில் சொல்லப்பெறும் பரமான்மாவுக்கும் உள்ள உறவே 'உடைமை–உடையவன்' என்ற உறவாகும்." (நவவித சம்பந்தம், ப.93)** என்று கூறி இவ்வுறவு நிலையினை மிக எளிதாகத் தெளிவுபடுத்துகிறார்.

அதோடு மட்டுமின்றி ஆழ்வார்களின் பாசுரங்களில் காணப்படும் இவ்வகை உறவுகளையும் மிகத் தெளிவாக விளக்குகிறார்.

> **"யானே என்னை அறிய கிலாதே**
> **யானே என்தனதே என்று இருந்தேன்**
> **யானே நீ; என் உடைமையும் நீயே;**
> **வானே ஏத்தும்எம் வானவர் ஏறே!" (திருவாய், 2:9:9)**

என்ற பாசுரத்தில் நம்மாழ்வார் இறைவனாகிய உனக்கும் எனக்கும் உண்டான சம்பந்தம் அறியாதாக இருந்து வருவதை நெடுநாளாக மறந்து 'யான், எனது என்ற செருக்கிலேயே பாழாய்ப் போனேனே' என்றும் 'அவனும் அவனுடைமையும்' என்பதை மறந்து 'நானும் என்னுடைமையும்' என்று வாழ்ந்து வாழ்வினைத் தொலைத்தேனே என்றும் புலம்புவதைச் சுட்டிக் காட்டும் ந.சுப்புரெட்டியார்,

சொத்து–சொத்துக் குரியவன் சம்பந்தத்தினை உணர்ந்த பின்னர் தான் நம்மாழ்வார், **"யானே நீயே ஆவாய்; என் உடைமையும் நீயே ஆவாய்" (நவவித சம்பந்தம், ப. 94)** என்று உணர்வதையும் உறுதிப்படுத்துகிறார். **"இவ்வாறு கூறுவது அத்வைதம் போலிருக்கின்றதே என்று கருதலாகாது நான் உனக்கு அடிமைப்பட்டவன்; எனக்கென்று தனியே ஒரு பொருள் இல்லை என்பது கருத்தாவதால் சொத்து–சொத்துக்குரியவன் சம்பந்தம் தெளிவாகின்றது" (நவவித சம்பந்தம், ப. 94)** என்று கூறி இவ்வுறவின் தன்மையினை எளிதாக அறியச் செய்திருக்கிறார்.

அதோடு திருவள்ளுவரின் துறவு என்ற அதிகாரத்திலமைந்த,

> **"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு**

உயர்ந்த உலகம் புகும்" (குறள். 346)

என்று சுட்டிக்காட்டுவதிலிருந்தும் இவ்வுறவு நிலைக்கான உண்மையினை உணர முடிவதையும் வலியுறுத்துகிறார்.

இதனையே, **"நான், எனது என்கின்ற அகங்கார மமகாரங்களை வேர் முதல் மாய்ப்பதற்கு இந்த உடையவன்–உடைமை உறவே அடிப்படையாகும்" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.58)** என்பார் முனைவர் அரங்க சீனிவாசன்.

மேலும் பொய்கையாழ்வார் தனது முதல் திருவந்தாதியில்,

"நெறிவாசல் தானேயாய் நின்றானை ஐந்து

பொதிவாசல் போர்க்கதவம் சாத்தி – அறிவானாம்

ஆலமர நீழல் அறம் நால்வர்க்கு, அன்றுரைத்த

ஆலம்அமர் கண்டத்து அரண்" (முதல் திருவந்., 4)

என்ற பாசுரத்தில் எம்பெருமானுக்கே ஆன்மாவானது அடிமையாகின்றதென்ற ஆன்ம சொரூபத்தை உணர்ந்து, ஐம்புலன்கள் வழிச்செல்லாமல் எம்பெருமானிடத்திலே மனத்தினை வைத்து அகப்பற்று புறப்பற்றுகளை ஒழித்தலே மிகச் சிறந்த தவம்" என்று கூறுவதைச் சுட்டிக் காட்டும் ந.சுப்புரெட்டியார். இதனால் **"பரமான்மாவின் பெருமையும் சீவான்மாவின் சிறுமையும், முடிவில் சீவான்மா பரமான்மாவை அடைதலும் புலனாகி சொத்து–சொத்துக்குரியவன் உறவு தெளிவாக அறியக் கிடக்கிறது" (நவவித சம்பந்தம், ப.98)** என்று கூறுவதிலிருந்து சீவான்மா – பரமான்மா உடைமை, உடையவன் – உடைமை உறவு ஆகியவற்றின் தன்மை எளிதில் புரிந்துக் கொள்ளும் வகையில் தெளிவாக அமைந்துள்ளது.

சரீர – சரீரி பாவனை

திருமந்திரத்தின் மூன்றாவது பதமாகிய 'நாராயணாய' என்பதில் உள்ள 'நார' எனும் பதத்தால் சரீர–சரீரி பாவனையானது உரைக்கப்படுகிறது என்பர். இந்த சரீர–சரீரி பாவனையானது 'உடல் – உயிர் உறவு' என்றும் கருதப்படுகிறது.

"சித்து என்ற தொகுதியிலுள்ள மூன்று வகை ஆன்மாக்களும், அசித்து என்ற தொகுதியிலுள்ள மூன்று வகையும் எம்பெருமான் திருமேனியில் அடங்கியிருக்கும். அதாவது சித்தும், அசித்தும் எம்பெருமானுக்கு உடலாக இருக்கும்" (நவவித சம்பந்தம், ப.100) இதுதான் சரீர–சரீரி பாவனை என்று விளக்குகிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்.

இந்த சரீர–சரீரி உறவு நிலையினைப் பற்றிக் குறிப்பிடும் முனைவர் அரங்க சீனிவாசன் இவ்வுறவினை "ஆத்மா – ஆத்மீய உறவு" என்று கூறுவதோடு இந்த, **"ஆத்மா–ஆத்மீய உறவிலே சித்தாகிய சேதனன் இறைவனுக்கு ஆதாரமாக உள்ளான் என்று மேலெழுந்தவாரியாக நோக்கினால் தோன்றக் கூடும். உடலில் உயிர் இருப்பதால், உடல் உயிருக்கு உண்மையில் ஆதாரம் இல்லை. உள்ளிருக்கும் உயிரே உடலுக்கு ஆதாரம். உயிர் பிரிந்தபோது, உடலால் ஆதாரமிழந்து வீழ்ந்து கெடுகின்றது. உடல், உயிருக்கு ஆதாரமானால், உயிர் பிரிந்த பின்பும் அது நிலைத்திருக்க வேண்டும். ஆதலால் உயிரே உடலுக்கு ஆதாரம்;**

உடல் உயிருக்கு ஆதாரம் அல்ல. உயிரை உடலாகக் கொண்டு இறைவன் உள்ளான் எனில், உயிர் இறைவனுக்கு ஆதாரம் அல்ல. அந்த உயிரினுள் இருக்கும் இறைவனை உயிருக்கு ஆதாரம் என்பது தெரிவு" (வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், ப.60) என்று சுட்டிக் காட்டுகிறார்.

ஆக உடலும், உயிரும் எம்பெருமானாகிய இறைவனைச் சார்ந்ததே என்பதைக் கருத்தாகக் கொண்டு இவ்வுறவினை விளக்கும் ந.சுப்புரெட்டியார், **"உயிர்தான் உடலை இயக்குகின்றது. உயிர் உடலுக்குத் தலைவனாக உள்ளது. அங்ஙனமே இறைவன் எல்லாப் பொருள்களில் இருந்து அவற்றைத் தன் விருப்பம்போல் நடத்தி அவற்றிற்குத் தலைவனாகவும் இருக்கின்றான். ஆயினும், உடலினுள் உயிர் இருப்பதற்கும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. உயிர் அணு அளவினதாய் உடம்பினுள் ஓரிடத்திலிருந்து கொண்டுதன் ஞானத்தால் உடல் முழுவதும் பரவி இவ்வுடம்பைப் பற்றிய நிகழ்ச்சிகளை உணர்த்துகின்றது. இறைவன் அங்ஙனமின்றி ஒவ்வொரு பொருளுள்ளும் முழுவதும் தன் சொரூபத்தோடு வியாபித்துள்ளான்" (நவவித சம்பந்தம், ப.100)** என்று கூறி இவ்வுறவினை விளக்குகின்றார்.

இத்தன்மை மட்டுமின்றி உடலினுள் உயிர் இருப்பதற்கு வேறோரு காரண வேறுபாடும் உண்டென்பதைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"உயிர் உடலினுள் இருக்கும் வரை அவ்வுடலுக்குரிய வளர்ச்சி ஆய்வுகள் உயிருக்கு உண்டாவதில்லை. ஆனால் உடலைப் பற்றிய இன்ப துன்ப உணர்ச்சிகள், அறிவின் சுருக்கம், பெருக்கம் ஆகியவை உயிருக்கு உண்டு. உடலின் மீது தன்னிய காற்று வீசுங்கால் இன்புறுதலும், தீ சுடுங்கால் துன்புறுதலும் உடலினுள் இருக்கும் உயிருக்கு நேரிடுகின்றன. இவ்வாறே குழந்தைப் பருவத்தில் அதனுள் இருக்கும் உயிரின் அறிவு சுருங்கிய நிலையிலிருந்து பின்பு வளர்ச்சியுறுதலைக் காண்கிறோம். மற்றும் மக்கள் உடம்பினுள் உள்ள உயிர் ஐம்பொறி அறிவும் உடையதாக உள்ளது. அவ்வுயிரே மரம், எறும்பு முதலிய உடல்களில் புகுந்தால் ஐம்பொறியறிவுமின்றி சில குறையவும் பெறுகின்றன. உயிர் பருஉடலை பெறாத நிலையில் அறிவு சுருங்கியிருத்தலும், அறிவு விரிந்திருத்தலும் உண்டு. இங்ஙனமாக உடலைப் பற்றி நிற்கும் உயிர் அவ்வுடலுக்கு ஏற்ப இன்ப துன்ப உணர்ச்சிகளும் அறிவின் சுருக்கமும் பெருக்கமும் அடைதல் தெளிவாகும். ஆனால் உடல், உயிர் இரண்டினுள்ளும் கலந்து நிற்கும் இறைவனை இவ்வேறுபாடுகள் சிறிதும் அடைவதில்லை" (நவவித சம்பந்தம், ப.101)** என்று கூறுவது 'உடல்–உயிர்' உறவினைத் தெளிவாக உணர்த்துகிறது.

நம்மாழ்வார் மற்றும் திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் 'உடல் – உயிர் உறவுமுறை' மிகத் திறம்பட அமைந்துள்ள தன்மையினை,

"திடவிசும்பு எரிவளி நீர் நிலம் இவைமிசைப்
படர்பொருள் முழுவதும்ஆய் அவை தொறும்
உடர்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்

சுடர்மிகு சுருதியுள் இவை வண்ட சரணே" **(திருவாய்., 1:1:7)**

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் நம்மாழ்வார் இவ்வுறவினைச் சுட்டிக்காட்டுவதைக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"உலகிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் உடலில் உயிர் உறையுமாப் போலே மறைந்திருந்து எல்லாவற்றிலும் தனித்தனியே குறைவற வியாபித்திருப்பான் இறைவன். நம்முடைய உடலுக்கு ஆன்மாதான் தாரகமாய், நியா மகனாய், சேஷியாய் இருப்பது போல், உடல் ஆன்மாக்களுக்கு எம்பெருமான் தான் தாரகமாய் நியா மகனாய், சேஷியாய் இருப்பான். 'கரந்து' என்பதனால் ஒருவருக்குத் தெரியாமல் மறைந்து அந்தர்யாமியாய் இருப்பான் என்பதும், 'எங்கும் பரந்து' என்பதனால் உள்ளும் புறமும் வியாபித்து இருப்பான் என்பதும் பெறப்படுகின்றன" (நவவித சம்பந்தம், ப. 102)** என்று கூறித் தெளிவாக்குகிறார்.

மேலும், இவ்வுறவுமுறைத் தத்துவம் சித்து, அசித்து என்ற இரு நிலைகளையும் சேர்த்துக் கூறுவதை,

"நீர்ஆய் நிலன்ஆய் தீயாய் காலாய் நெடுவானாய்"(திருவாய்., 6:9:11)

"திடவிசும்பு எரிநீர் திங்களும் சுடரும்" **(பெரிய., திரு., 4:3:3)**

என்ற பாசுர அடிகளின் வாயிலாக சித்து, அசித்து அகிய இரண்டையும் எம்பெருமான் உடலாகக் கொண்டுள்ளான் என்பது விளக்கப்படுவதனையும் சுட்டிக் காட்டுகிறார். இவ்வுறவு நிலையினை விளக்கும் முனைவர் இரா.இராஜகோபாலன் **"ஆன்மா, ஆன்மாவை விட்டுப் பிரியாத உடலைப்போல் ஈசுவரனை விட்டும் தனித்திருப்பதில்லை" (நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் சரணாகதி நெறி, ப.42)** என்று கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

இதிலிருந்து பகவானே உயிரானவன் அதற்குச் சீவனாக இருப்பதுதான் உடல் என்ற உண்மையினை இந்த உடல்–உயிர் உறவுமுறையில் அறிய முடிகிறது.

ஆதார–ஆதேய சம்பந்தம்

திருமந்திரத்தின் மூன்றாவது பதமாகிய 'நாராயண' என்பதிலுள்ள 'அயன' என்பதால் ஆதார–ஆதேயசம்பந்தம் தெரிவிக்கப் பெறுகின்றது. 'அயனம்' என்பதற்கு 'தங்குமிடம்' என்று பொருள். சீவனுக்குத் தங்குமிடமாகவும், அச்சீவனைத் தாங்கியவனாகவும் இருப்பவன் நாராயணன் என்பர்.

இவ்வாறு இறைவனாகிய நாராயணன் தாங்குபவனாகவும் சீவகர்கள் தாங்கப்படுபவர்களாவும் இருப்பதால் இவ்வுறவானது, தாங்குபவன் – தாங்கப்படுவது என்ற உறவு முறையென்றும் பொருள் கொள்வர்.

இவ்வுறவு பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"ஆதாரமாவது பரமான்மா தன்னை விட்டு நீங்காமல், என்றும் தன்னையே ஆச்ரயித்து கொண்டிருக்கும் சித்து, அசித்து முதலிய அகிலம் அனைத்திற்கும் இடங்கொடுத்து நிலைத்து நிற்கும்படி செய்வதாக அமைந்திருப்பது. ஆதலால் அந்தப் பரமான்மா ஆதாரம் என்று சொல்லப்பெறும். ஆதாரம் –தாங்குவது அதேயமாவது சீவான்மா தனக்கு ஆதாரமாயிருக்கும் பரமான்மாவைப் பற்றி நிற்பதினால் தாங்கப் பெறுவது ஆகிறது. எனவே இந்தச் சம்பந்தம் தாங்குவது – தாங்கப் பெறுவது ஆகிறது.**

எனவே இந்தச் சம்பந்தம் தாங்குவது—தாங்கப் பெறுவது என்ற உறவாகின்றது" (நவவித சம்பந்தம், ப. 111) என்கிறார்.

இதனையே "**உயிர்கள் தம்மையும் இறைவனையும் மறந்து விடுகின்ற இயல்புடையவை. அவ்வாறு மறந்திருக்கும் போதும் இறைவன் அவற்றைப் பிரியாமல் இருக்கும் இருப்பே ஆதார—ஆதேய உறவு எனப்படும்" (வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், ப.59)** என்பார் முனைவர் அரங்க சீனிவாசன்.

இவ்வுறவு நிலையினை ஆழ்வார்கள் போற்றியுள்ள சிறப்பினைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார்,

"நினைந்த எல்லாப் பொருள்கட்கும்
வித்தாய் முதலில் சிதையாமே
மனஞ்செய் ஞானத்து உன்பெருமை
மாசுணாதோ ? மாயோனே" (திருவாய்., 1:5:2)

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் அனைத்துப் பொருளுக்கும் வித்தாக இருக்கும் இறைவனின் செயல் 'ஆதார— ஆதேய' உறவாக அமைந்துள்ள நிலையினை இறைவன், "**அனைத்திற்கும் முதற்காரணமாக இருப்பவன், ஆடைக்குப் பஞ்சு முதற் காரணம், இங்குப் பஞ்சு சிதைந்து ஆடையாகின்றது. உலகப் படைப்பிற்கு எம்பொருள் முதற்காரணம். படைப்பிற்கு பிறகு அவன் சிதையாமல் இருப்பது அவனது அற்புத ஆற்றல். ஆடைக்கு பஞ்சு ஆதாரமாக இருப்பதால் அப்பஞ்சு ஆதாரப் பொருள். அதிலிருந்து தோன்றும் ஆடை ஆதேயப் பொருள்" (நவவித சம்பந்தம், ப.112)** என்று கூறுவதால் இப்பாசுரத்தில் 'ஆதார—ஆதேய சம்பந்தம்' மிகத் தெளிவாகப் புலப்படுவதை உணர்த்துகிறார். மேலும்,

"தனிமாப் புகழே எஞ்ஞான்னும் நிற்கும் படியாத தான் தோன்றி" (திருவாய்., 8:10:7)
"எங்குவந்து றுகொ என்னையாள் வாளே ஏழுலகங்களும் நீயே" (திருவாய்., 8:1:6)
"தின்னூர் பலபலவாயில் இழைத்துச் சிலம்பி பின்னும்"
"நன்றாக நான் உன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே" (நான்., திருவந்., 7)

ஆகிய பாசுர அடிகளில் ஆதார—ஆதேய சம்பந்த உறவு முறை மிகத் தெளிவாகக் காட்டப் பட்டிருப்பதனையும் எடுத்துரைத்து இவ்வுறவுத் தன்மையால் மனம் தோய்கிறார். இவை மட்டுமின்றி குலசேகரப் பெருமாளின் பெருமாள் திருமொழியில்,

"வெங்கண்திண் களிது அடர்த்தாய்
விற்றுவக்கோட் டம்மானே!
எங்குப் போய் உய்கேன்
உன் இணையடியே அடையல் அல்லால்
எங்கும் போய்க் கரை காணாது
எறிகடல் வாய் மீண்டுஓயும்
வங்கத்தின் கூம்புஏறும்

மாப்பறவை போன்றேனே" (பெரு., திரு., 5:5)

என்ற பாசுரத்தில் காணப்படும் தாங்குபவன் – தாங்கப்படும் பொருள், உறவு நிலையினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், பெரிய கடலுக்குள் செல்லும் கப்பலின் பாய் மரத்திலுள்ள ஒரு பறவை கப்பல் நடுக்கடலுக்குள் சென்றதும், பறக்க ஆரம்பித்தால் அப்பறவையினால் கடலைத் தாண்டிய நிலப்பரப்பிற்கும் செல்ல முடியாது, கடலிலும் இளைப்பாற முடியாது, பறவையானது மீண்டும் கப்பலின் பாய் மரத்திற்கே வந்து சேர்வதைப் போல வாழ்க்கையெனும் கடலில் உள்ள நாமும் இறைவனாகிய கப்பலின் பாய்மரத்திலுள்ள பறவையின் நிலையில் இருப்பதை, **"எப்படி எப்படிப் பறந்தாலும் இறுதியில் இறைவனைத் தானே வந்தடைதல் வேண்டும். மரக்கலத்தின் நிலையில் எம்பெருமானையும், பறவையின் நிலையில் நம்மையும் கூறியதனால் சீவான்மாவுக்குப் பரமான்மாவேயின்றி வேறு புகல் அமையாது என்பதும், பரமான்மா சீவான்மாவிற்கு ஆதாரமாவதும், சீவான்மா பரமான்மாவிற்கு ஆதேயம் ஆதலும் தெளிவாகின்றன" (நவவித சம்பந்தம், ப.118)** என்று கூறி, "தாங்குபவன் – தாங்கப்படும் பொருள்" உறவு நிலையினைத் திறம்பட தெளிவு படுத்துகிறார்.

இதிலிருந்து உயிர்களுக்கு ஆதாரமாக இருந்து அனைத்தையும் தாங்குபவனாக இருப்பதற்காகவே எங்கும் பரந்துள்ளான் இறைவன் என்பது இவ்வுறவு முறையில் புலனாகிறது.

போக்தா – போக்கிய சம்பந்தம்

திருமந்திரத்தில் 'நாராயணாய' என்பதிலுள்ள 'ஆய' எனும் இறுதிப் பதத்தால் 'போக்தா–போக்கிய' என்ற சம்பந்தம் குறிப்பிடப்படுகிறது.

இவ்வுறவு முறை 'அனுபவிப்பவன்–அனுபவிக்கப்படும் பொருள் உறவு' என்றும் அழைக்கப்படுகிறது.

இவ்வுறவினைப் பற்றிக் குறிப்பிடும் முனைவர் அரங்க சீனிவாசன், **"போக்த்ருத்வம் என்பது உண்பது என்று பொருள் படும் சொல். உண்பவன் போக்தா எனப்படுவான். உண்ணப்படுவது போக்யம் எனப்படும். உண்ணப்படும் பொருள் உயிர். உண்பவன் இறைவன்" (வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், ப.62)** என்று இவ்வுறவு முறைக்கு விளக்கம் தருகிறார்.

இதனை மெய்பிக்கும் விதமாய் ந.சுப்புரெட்டியார், **"போக்கியப் பொருளை எவன் ஒருவன் தன் விருப்பப்படி அனுபவிக்கின்றானோ அவன் போக்தா. அனுபவிக்கும் பொருள் போக்கியம் ஆகின்றது. ஈண்டு ஈசுவரன் போகத்தை அனுபவிப்பவன்; ஆன்மா ஈசுவரனுக்குப் போகப் பொருளாய் இருக்கிறது. ஆகவே இது போக்தா–போக்கிய உறவு எனப்படுகிறது" (நவவித சம்பந்தம், ப.119)** என்று கூறித் தெளிவு படுத்துகிறார்.

இவ்வுறவின் தன்மையினை நம்மாழ்வாரின் பாசுரத்தால் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார்,

"தனக்கேயாக என்னைக் கொள்ளும் ஈதே;
எனக்கே கண்ணனை யான்கொள்ளும் சிறப்பே" (திருவாய்., 2:9:4)

என்ற திருவாய்மொழிப் பாசுரம் திருவாய்மொழிக்கு உயிரான பாசுரம் மட்டுமின்றி போக்தா–போக்கிய உறவினைச் சுட்டிக்காட்டும் சிறப்பான பாசுரம் என்பதை, **“சரீரம் சீவன் எனும் இருவகைப் பொருள்களுள் சரீரத்தின் குற்றங்களைப் போக்கி அதற்கு நன்மையினைத் தேடுகின்றவன் சீவனே ஆகின்றான். அதுபோல பரமான்மா, அவன் சரீரமாகிய சீவான்மா ஆகிய இருபொருள்களுள் சீவான்மாவின் குற்றங்களைப் போக்கி நன்மைகளைத் தேடுகின்றவன் பரமன்மாவேயாவான். ஆதலின், சீவன் எல்லாப் பாரத்தையும் அவனிடமே வைத்து அவனுடைய அருளைப் பார்த்திருத்தலே இவனுடைய அத்தியந்த பாரதந்திரியமாகும்” (நுவவித சம்பந்தம், ப.120)** என்று கூறித் தெளிவு படுத்துகிறார்.

இதனை, **“அசித்தாகிய மூலப்பிரகிருதியைக் காட்டிலும் பெரியது சீத்தாகிய சீவன் அதைக் காட்டிலும் பெரியவன் பரமன் அவனைக் காட்டிலும் பெரியது என் அவா என்கின்றார் நம்மாழ்வார்” (வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், ப.63)** என்று முனைவர் அரங்க சீனிவாசன் சுட்டிக்காட்டுவதிலிருந்து போக்தா–போக்கிய சம்பந்தத்தினை உறுதியாக வெளிப்படுத்தியிருக்கும் தன்மையினை உணர முடிகிறது.

போக்தா–போக்கிய உறவு முறையானது நம்மாழ்வாரின் பாசுரங்களில் அதிகளவில் காணப்படுவதை ந.சுப்புரெட்டியார்,

“திருவருள் செய்பவன் போலஎன் உள்புகுந்து” (திருவாய்., 9:6:4)
“உருவமும் ஆருயிரும் உடனே உண்டான்” (திருவாய்., 9:6:5)
“சிறிய என் ஆருயிர் உண்ட திருவருளே” (திருவாய்., 9:6:6)
“ஆட்கொள்வான் ஒத்துஎன் உயிர்உண்ட மாயன்” (திருவாய்., 9:6:7)
“கோளுண்டான் அன்றிவந்து என்னுயிர் தானுண்டான்” (திருவாய்., 9:6:8)
“ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது” (திருவாய்., 9:6:9)
“வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணில்” (திருவாய்., 9:6:10)

ஆகிய பாசுரங்களிலெல்லாம் தன்னை இறையன்பினால் விழுங்கி இறைவனைத் தானும் பக்தியெனும் அன்பினால் விழுங்க முற்படும் தன்மையினால் அறிய முடிகிறது என்பதைத் தெளிவாக்குகிறார்.

அதோடு குலசேகர ஆழ்வாரும் நம்மாழ்வாரைப் போல போக்தாவாக விருப்பப்பட்டே போக்தா–போக்கிய உறவை முன்னிலைப்படுத்தும் விதமாய்,

“நின்னையே நான் வேண்டி
நீள் செல்வம் வேண்டாதான்
தன்னையே தான் வேண்டும்
செல்வம்போல் மாயத்தால்
பின்னையே சேர்திகிரி
விற்றுவக் கோட்டம்மானே!
நின்னையே தான்வேண்டி

நிற்பன் அடியேனே" (பெரு., திரு., 5:9)

என்ற பாசுரத்தில் இவ்வுறவினை வலியுறுத்துவதை சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் **"செல்வத்துக்கு தம்மையும் வைத்துக் கூறியதினால் சீவான்மா பரமான்மாவின் உடைமை என்பது புலப்படும்" (நுவவித சம்பந்தம், ப.133)** என்று தெளிவு படுத்துகிறார்.

அதோடு மட்டுமின்றி இந்த போக்தா—போக்கிய உறவு முறையானது **"சீவான்மா பரமான்மாவின் உடைமையாதலால் அவன் தன் பொருளை எப்படி விரும்பினாலும் அனுபவிக்கலாம் என்பதை உணர்த்துகிறது" (நுவவித சம்பந்தம், ப.133)** என்பதனையும் சுட்டிக் காட்டுகிறார்.

மொத்தத்தில் இந்த ஒன்பது வகையான சம்பந்த ஞானத்தால் எல்லாவித ஐயங்களுள் அற்ற நிலை ஏற்படுவதால் ஆன்மா ஆனந்த சுபாவ நிலையை அடையுமென்பதும், பரமான்மா சொரூப நிலையில் ஆழங்கால்பட்டு எம்பெருமான் திருவடி நிழலை அடைந்து உய்யும் என்பதும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் ஆழ்ந்த கருத்தாக அமைகிறது என்பது தெளிவாகின்றது.

ஆசாரிய அபிமானம்

ஐவகை நெறிகளில் இறுதி நிலையில் வருவது ஆசாரிய அபிமானமாகும். வைணவ மந்திரங்கள் மூன்றினையும் உபதேசிக்கும் ஆச்சார்யன் தத்துவம், இதம், புருடார்த்தம் ஆகிய மூன்றனுள் இதமெனும் நெறியை உபதேசிப்பவனாகிறான். இத்தகு சிறப்பு வாய்ந்த ஆச்சார்யன் திருமந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகிய மூன்று மந்திரங்களையும் உபதேசிப்பதன் பயனாக தனது சீடனை புதிய பிறவி அடையச் செய்கிறான். ஆதலால் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தி யோகம் ஆகிய நான்கு உபாயங்களில் ஒன்றையும் செய்வதற்கு ஆற்றலில்லாத ஒருவனைக் கடைத்தேற்றுவதற்கு ஆசாரிய அபிமான நெறி வழிவகுக்கிறது.

இதனையே ந.சுப்புரெட்டியார் **"சேதனனானவன் ஈசுவரனை இழந்திருந்தாலும், இவனைப் பெற்றால் ஈசுவரனுக்கு விளையும் பிரீதியையும் திருவுள்ளத்தில் கொண்டு ஒரு தாய்போல் உதவுபவன் ஆசாரியன். முலையுன்னும் சிசுவுக்கு நோய் உண்டானால் அது தான் பத்தியம் காக்காமையினால் வந்தது என்று கருதி தாய் மருந்துண்ணுகிறாள். அதுபோலவே, ஆசரியனும் உபாய அநூட்டானம் பண்ணிக் காக்க வல்ல பரம தயாளுவான மகா பாகவதன் அபிமானத்திலே ஒதுங்கிச் செய்யவேண்டிய எல்லாவற்றையும், தவிர்க்க வேண்டிய எல்லாவற்றையும் அவன் இட்ட வழக்காகக் கொள்வான்" (அர்த்த பஞ்சகம், ப.105)** என்று எடுத்துக்காட்டுவதிலிருந்து ஆசாரிய அபிமான நெறியின் முக்கியத்துவத்தினை உணர முடிகிறது.

இந்த ஆசாரிய அபிமானத்தினாலேயே சடகோபனாகிய நம்மாழ்வாரின் சீடரான மதுரகவியாழ்வார் வடதிசையிலிருந்து தென்திசை வந்து இறைவனைப் பாடாமல் தனது ஆச்சார்யனாகிய நம்மாழ்வாரை மையப்படுத்தி, 'கண்ணி நுன் சிறுத்தாம்பு' என்ற தலைப்பில் பாசுரத்தினையும் அளித்திருப்பது ஆசாரிய அபிமானத்தில் தான். இந்த மரபினை கருத்தில்

கொண்டே நம்மாழ்வாரின் அருளிச் செயல்கள், "ஆசாரிய ஹிருதயம்" என்ற நூல் வடிவம் பெற்றது என்பர் வைணவச் சான்றோர்கள்.

மேலும், இந்த ஆசாரிய அபிமானம் ஐவகை நெறிகளுள் ஆச்சாரியனை மையப்படுத்துவதால் சிறப்பு பெறுகிறது என்பதை **"உண்டபோது ஒரு வார்த்தையும் உண்ணாதபோது ஒரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப்பேர் உண்டீறே; அவர்கள் பாசுரம் கொண்டன்று, இவ்வர்த்தம் அறுதியிடுவது அவர்களைச் சிந்தித்திருப்பார் ஒருவர் உண்டீரே; அவர் பாசுரம் கொண்டு இவ்வர்த்தம் அறுதியிடக் கடவோம்" (சரணாகதி நெறி, ஆய்வேடு, ப.208)** என்ற கருத்தால் முன்மொழிகிறார் இராசகோபாலன்.

இதிலிருந்து இறைவனை அனுபவிக்கும் போது ஒரு பேச்சும் இறையனுபவம் இல்லாதபோது ஒரு பேச்சும் பேசுவதைப் போலல்லாமல் ஆச்சாரியானே அனைத்திற்கும் உபாயமானவன் என்ற கருத்தினை ஆசாரிய அபிமானம் உறுதி செய்கிறது.

புருடார்த்தம் (வீடு பேறு)

வைணவ மெய்ப்பொருள் தத்துவ விளக்கத்தின் இறுதி நிலையான வீடுபேற்று நிலையினை புருடார்த்தம் என்பர்.

புருடார்த்தம் என்பதற்கு புருடனாகிய ஆன்மாவானது வீடுபேறு எனப்படும் முக்தி நிலையினை அடைவதைக் குறிக்கின்றது. உயிர்களின் இறுதிப் பயணமாகக் கருதப்படும். இந்நிலையில் உயிர்கள் அனைத்தும் இறைவனுக்கு அடிமையாய் நின்று சேவகம் செய்யும் நிலையாகக் கருதப்படுவது வைணவ மரபு.

இந்த புருடார்த்த நெறியினை எளிய முறையில் விளக்கும் ந.சுப்புரெட்டியார் **"உயிர்கள் இவ்வுலகத் தொடர்பறுத்து, பக்தர் நிலையிலிருந்து முக்தர் நிலை எய்தி, அர்ச்சிராதிகதி வழிச் சென்று நலம், அந்தம் இல்லாதோர் நாடாகிய பரமபதம் அடைந்து இறைவனின் திருக்கோலத்தினைக் கண்டு, அவன் முகமலர்த்திக்கேற்ற பணி புரிந்து மகிழ்வதே வீடு. இதுவே பரம புருடார்த்தம் என நிறைவு கொள்கிறது வைணவ மெய்ப்பொருள்" (முக்தி நெறி, ப.144)** என்று கூறி தெளிவு படுத்துகிறார்.

இதிலிருந்து உலக உயிர்கள் அனைத்தும் இறைவனின் அகமும், புறமும் இன்புறுமாறு இறைத்தொண்டுகள் செய்து, அச் சேவையின் வழியே புருடார்த்தம் எனப்படும் முக்தி நிலையான பேரின்ப வீட்டினை அடையலாம் என்பது தெளிவாகிறது.

தொகுப்புரை

- விசிட்டாத்துவிதத் தத்துவத்தின் விளக்கம் சித்து, சித்தின் வகையான பக்தர், முக்தர், நித்தியர் ஆகியோரின் தன்மை விளக்கப்பட்டுள்ளது. இம்மூவகையினரைப் பற்றி ஆழ்வார்களின் பாசுரங்களிலும், ஆச்சாரியர்களின் விளக்க உரைகளிலும் உள்ள செய்திகள் அனைவருக்கும் எளிதில் விளங்கும் வகையில் பேராசிரியர் எடுத்துரைத்துள்ளத் திறம் ஆராயப்பட்டுள்ளது.

- ஆசித்து எனப்படும் அறிவற்ற பொருளின் தன்மை அவற்றின் மூன்று நிலைகளான சுத்த சத்துவம், மிசிர அத்துவம், சத்துவ சூனியம் ஆகியவற்றின் இயல்பு விளக்கப்பட்டுள்ளது.
- ஈசுவரனான திருமாலின் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை ஆகிய ஐவகை நிலைகளை ஆழ்வார்களின் பாசுரங்கள் வழி பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் விளக்கியுரைத்துள்ள பாங்கு இவ்வியலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- திருமாலின் பத்து அவதாரங்களும், அவை எடுக்கப்பட்டதன் காரணமும் அவதாரச் சிறப்பும் அவ்வவதாரங்களின் வழியே வெளிப்படும் உள்ளார்ந்த தத்துவமும் இவ்வியலில் ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளது.
- திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றான பரசுராம அவதாரத்திற்கு தனிப்பட்ட வழிபாடுகளோ கோயில்களோ இல்லாமல் இருப்பதற்குப் பேராசிரியர் காட்டும் காரணம் அவரது புலமைக்குச் சான்றாகவும் வைண மெய்யியலில் அவருக்கிருந்த ஆழத்தையும் காட்டுகிறது.
- இறைவனை அடையும் நெறிகளாக கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தி யோகம், ஆசாரிய அபிமானம் ஆகிய ஐந்தையும் வைணவ மெய்யியல் குறிப்பிட்டாலும் அவற்றுள் முதல் மூன்று நிலைகளில் பயிற்சியடைவது அவசியமென்றும் அதன்பின்னரே ஏனைய இரண்டை மேற்கொள்ள வேண்டுமென்றும் ந.சுப்புரெட்டியார் விளக்கியுரைக்கின்றார்.
- எவ்வித பயனையும் எதிர்பாராமல் செய்யப்படும் செயலால் (கருமத்தால்) மனம் தூய்மையடைவதையும் தியானத்தில் அழுந்துவதையும் எடுத்துரைத்து கருமயோகத்தின் சிறப்பை விவரிக்கும் பேராசிரியர், பெரியாழ்வாரையும் தொண்டரடிப்பொடியாழ்வாரையும் இந்நெறி நின்றவர்களாகக் குறிப்பிட்டு அவர் தம் பாசுரங்களிலிருந்து சான்று காட்டும் தன்மை விளக்கப்பட்டுள்ளது..
- ஞானயோகத்தின் வழி நிற்பதன் பயன் தன் உயிரைப் பற்றி அறிவதும் அனைத்து உயிர்களும் சமம் எனக் கருதுவதுமாகும் என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ள கருத்து விளக்கப்பட்டுள்ளது.
- பக்தியோகத்தின் சிறப்பை எடுத்துரைத்து அதற்குள் அடங்கிய பரபக்தி, பரஞானம், பரமபக்தி ஆகியவற்றின் வழி நின்றவர்களுக்கு முறையே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோரை சான்று காட்டி விளக்கியுள்ள திறன் ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளது.
- கற்றவர், கல்லாதவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எவ்வித வேறுபாடுமின்றி அனைவராலும் இறைவனை அடைய மேற்கொள்ளப்படும் நெறியாகப் பிரபத்தி நெறியைக் குறிப்பிட்டு அவற்றின் அங்கங்களைப்பற்றி எடுத்துரைத்துள்ளமை விளக்கப்பட்டுள்ளது.

- பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வாரின் பாசுரங்களிலும் திருமங்கையாழ்வாரின் பாசுரங்களிலும் பிரபக்தி நெறியாகிய சரணாகதி குறித்த செய்திகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளதைச் சான்றுகளுடன் எடுத்துரைத்துள்ளமையால் பாசுரங்களில் இருந்த பயிற்சியும், மெய்யியலில் இருந்த ஆழமும் புலப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.
- திருமாலுக்கும் அடியார்களுக்குமான உறவினை அனைவரும் உணரும் வகையில் தெளிவாகவும், எளிமையாகவும் பேராசிரியர் வெளிப்படுத்தியுள்ள தன்மை ஆராயப்பட்டுள்ளது.

இயல் 4

ஆழ்வார்களின் அருளிச்செயல் அனுபவங்கள்

பரம்பொருளாகிய திருமாலினைத் துதி செய்யும் பொருட்டு ஆழ்வார்கள் அருளிச் செய்த நூல்கள் அனைத்தும் 'அருளிச் செயல்கள்' எனப்படுகின்றன. மணவாள மாமுனிகள் தனது உபதேச ரத்தின மாலையில் "ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி" (பா. 3) என்று சிறப்பித்துள்ளார். ஆழ்வார்களின் பாசுரங்கள் அனைத்தும் 'அருளிச் செயல்கள்' என்பதை,

"அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினான் அவ்அரு மறையின் பொருள்
அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்
அருள் கண்டீர் இவ் உலகினில் மிக்கதே" (க.நு.சிறு., 8)

என்ற மதுரகவியாழ்வாரின் பாடல் வழியில் அறிய முடிகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆழ்வார்களின் அருளிச் செயல்களான நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் மனம் தோய்ந்து அனுபவித்த பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் ஆழ்வார்களின் பாசுரங்களால் நெக்குருகி, அவற்றினை அனுபவிக்கும் இவ்வியலில் ஆராயப்படுகிறது.

ஆழ்வார்கள் பன்னிருவரும் அருளிச்செய்த பாசுரங்கள்,

1. முதல் திருவந்தாதி
2. இரண்டாம் திருவந்தாதி
3. மூன்றாம் திருவந்தாதி
4. நான்முகன் திருவந்தாதி
5. திருச்சந்த விருத்தம்
6. திருவிருத்தம்
7. திருவாசிரியம்
8. பெரிய திருவந்தாதி
9. திருவாய் மொழி
10. கண்ணிநுன் சிறுத்தாம்பு
11. பெருமாள் திருமொழி
12. திருப்பல்லாண்டு
13. பெரியாழ்வார் திருமொழி
14. திருப்பாவை
15. நாச்சியார் திருமொழி
16. திருமாலை
17. திருப்பள்ளியெழுச்சி
18. அமலனாதிபிரான்
19. பெரிய திருமொழி
20. திருக்குறுந்தாண்டகம்
21. திருவெழுகூற்றிருக்கை
22. சிறிய திருமடல்
23. பெரிய திருமடல்
24. திருநெடுந்தாண்டகம்

என்ற வகையில் ஆழ்வார்களின் காலவரிசையில் அடைவு படுத்தப்படுகிறது. ஆனால் தத்துவத்திரய மும்மறைப் பொருளின் அடிப்படையில் அடைவுபடுத்திய நாதமுனிகள் திருப்பல்லாண்டினை முதலிலும் திருவாய்மொழியினை இறுதியிலும் வைத்து அடைவு படுத்தியிருக்கிறார். அவ்வகையில் கண்ணிநுண் சிறுத்தாம்பு, திருவெழுகூற்றிக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய நான்கு நூல்கள் மட்டும் இருவகையான அடைவிலும் ஒரே நிலையில் இடம் பெற்றிருப்பது தனிச்சிறப்பான அமைப்பினைக் கொண்டிருக்கிறது.

இதில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார் ஆகிய அறுவரும் ஒவ்வொரு நூலை அருளிச் செய்துள்ளனர். திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகிய நால்வரும் ஆளுக்கு இருநூல்கள்வீதம் அருளிச் செய்துள்ளனர். நம்மாழ்வார் நான்கு நூல்கள் அருளிச் செய்தவராகவும், அதிக நூல்களாக ஆறு நூல்கள் அருளிச் செய்திருப்பவராக திருமங்கையாழ்வாரும் சிறப்பு பெறுகின்றனர். அவ்வகையில் பன்னிரு ஆழ்வார்களின் அருளிச் செயல் அனுபவங்களைத் தனது நூல்களில் மிக எழிலுற பதிவு செய்திருக்கிறார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்.

திருங்கையாழ்வாரின் அருளிச் செயல் அனுபவங்கள்

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் தனது பரகாலன் பைந்தமிழ் என்ற நூலில் "திருமங்கையாழ்வார் 108 திவ்விய தேசங்களில் 86 திவ்விய தேசங்களை மங்களாசாசனம் செய்தும், எவ்வித காரணமும் பற்றாமல் கிடைத்த திருமந்திர உபதேசத்தையும் அதற்கு உள்ளீடான சீமந் நாராயணனுடைய சொரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களையும், 'அருள்மாரி' என்னும்படியான பெரிய பிராட்டியாரின் அருளினால் இவற்றினையெல்லாம் கண்டு அனுபவித்து அதனால் உண்டான பெருங்களிப்பால், 1.பெரிய திருமொழி, 2.திருக்குறுந்தாண்டகம், 3. திருநெடுந்தாண்டகம், 4. திருவெழுக்கூற்றிருக்கை, 5. சிறிய திருமடல், 6. பெரிய திருமடல் ஆகிய ஆறு பிரபந்தங்களை அருளிச் செய்தார்" (பரகாலன் பைந்தமிழ், ப.342) என்று பதிவு செய்கிறார்.

அதோடு மட்டுமின்றி நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகிய நான்கு பிரபந்தங்கட்கு திருமங்கையாழ்வாரின் அருளிச் செயல்கள் ஆறும் ஆறு அங்கங்களாகக் கொள்ளப்படுகின்றன என்பதை, **"இங்கு எண்கள் ஒற்றுமையே யன்றி பொருள் ஒற்றுமை இல்லை என்பதை நாம் உளங்கொள்ளல் வேண்டும்" (பரகாலன் பைந்தமிழ், ப.342)** என்று கூறி தெளிவு படுத்துகிறார்.

திருமங்கையாழ்வாரின் இறையனுபவத்தினை அவரது ஆறு பிரபந்தங்களின் வழியே பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் எடுத்துரைக்கிறார்.

பெரிய திருமொழி

திவ்ய தேசங்களில் ஆழ்வார்கள் பன்னிருவரும் ஈடுபாடு கொண்டிருந்தாலும் அவர்களில் திருமங்கையாழ்வாரே மிகுதியான பாசுரங்களைப் பாடியுள்ளார். ஈடுபாடு கொண்டவர்களில் எனக் குறிப்பிடும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார், **"திவ்விய தேசங்களை அனுபவிப்பதற்கென்றே தோன்றியவர் இந்த ஆழ்வார். எம்பெருமானிடம் மந்திரோபதேசம் பெற்ற பின்னர் அத்திருமந்திரத்தையும் அதன் அரிய பெரிய பொருள்களையும் தாம் காணப்பெற்ற பேற்றினைப் பரமானந்தம் தோன்றப் பத்துப் பாசுரங்களாலே பேசி அனுபவித்து, அத்திருமந்திரம் விளைந்த திருப்பதியாகின்ற பதரிகாச்சிரமத்தை நாடிச் சென்று பாடி அங்கிருந்து வடநாடு, தொண்டை நாடு, நடு நாடு, சோழ நாடு, பாண்டி நாடு, மலை நாடுகளிலுள்ள திருப்பதிகள் பலவற்றையும் பாடிக் களிக்கின்றார். பெரிய திருமொழிப் பாசுரங்கள் யாவும் ஆழ்வாரின் அர்ச்சாவதார அனுபவங்களைக் காட்டுவனவாகும்" (பரகாலன் பைந்தமிழ், ப.343)** என்று எடுத்துரைத்து, பெரிய திருமொழி 1084 பாசுரங்கள் கொண்ட நீண்ட தொகுதியாகவும், பத்து பத்துப் பாசுரங்களைக்

கொண்டதோடு ஒவ்வொரு திருமொழியும் பதினொன்று பத்துக்களைக் கொண்டதாய் அமைந்திருப்பது தனிச்சிறப்பு என்பதை வலியுறுத்துகிறார்.

அதோடு திருமங்கையாழ்வார் தனது பெரிய திருமொழியில் அர்ச்சாவதார அனுபவத்தினைத் தவிர்த்து இராமாவதாரத்தினை இராட்சச பாவனையாலும், கிருட்டிணாவதாரத்தை யசோதைப் பிராட்டியின் பாவனையிலும் அனுபவிப்பதோடு, மற்ற அவதாரங்களின் மேன்மையோடு கிருட்டிணாவதாரத்தின் எளிமையைச் சேர்ந்து அனுபவித்தல் போன்ற அனுபவங்களை நுவலும் திருமொழிகள் சிறப்பிடம் பெற்றுள்ளன என்பதையும் குறிப்பிடுகிறார்.

இவை தவிர **"தாய்பாசுரமாகவும் மகள் பாசுரமாகவும் அனுபவித்த திருமொழிகளும், விபவாவதார மகிமையும் விபவாவதாரங்களில் எம்பெருமானுடைய சௌலப்பியம் மற்றும் பரத்துவமும் அனுபவநிலைப் பாசுரங்களும், இறுதித் திருமொழியாகிய உடல் உறவை அறுத்துத் தந்தருளமாறு வேண்டு பிரார்த்தனையாக முடிகின்றது" (பரகாலன் பைந்தமிழ், ப.344)** என்று தான் நுணுகி அனுபவித்த பாசுரங்களின் தன்மையைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

திருக்குறுந்தாண்டகம்

தாண்டகம் என்பது தமிழ் இலக்கியத்தில் ஒரு வகையானப் பிரபந்தமாகும். இது அறுசீர் கொண்ட அளவொத்த அடிகள் நான்கினாலாவது, எண்சீர் கொண்ட அளவொத்த அடிகள் நான்கினாலாவது தாம் வழிபடும் தெய்வத்தினைப் புகழ்ந்து பாடும் பிரபந்தமாகும்.

இத் திருக்குறுந் தாண்டகம் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"அறுசீர் கொண்டது குறுந்தாண்டகம், எண்சீர் கொண்டது நெடுந்தாண்டகம், முன்னதில் அடிதோறும் மெய்யெழுத்தும் உட்படப் பதினைந்து எழுத்துக்குக் குறையாமலும் இருபத்தாறு எழுத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். பின்னதில் அடிதோறும் இருபத்தாறு எழுத்துக்கு மேற்பட்டே இருத்தல் வேண்டும்" (பரகாலன் பைந்தமிழ், ப.344)** என்று கூறி குறுந்தாண்டகம், நெடுந்தாண்டகம் குறித்து பன்னிரு பாட்டியல் கூறும் இலக்கணத்தினை எடுத்துரைத்துள்ளார். தாண்டக இலக்கணத்தை மிக எளிமையாக உரைநடை வடிவில் கூறியிருப்பது பேராசிரியரின் தலைசிறந்த ஆசிரியப்பணிக்குச் சான்றாக அமைகிறது.

பசி அதிகமாகும் வரையில் சோறிடத் தாமதம் செய்யும் தாயைப் போல எம்பெருமானாகிய திருமாலும் அடியார்கள் தன்னை அனுபவிப்பதற்காகப் பெருந்தாகம் கொள்ளும்வரை தனது திருமுகம் காட்ட மறுப்பதை எண்ணி திருமங்கையாழ்வார் வாயால் பேசியும் தலையாலே வணங்கியும், நெஞ்சால் நினைந்தும் போற்றுவதை,

"நிதியினைப் பவளத் தூணை
நெறிமையால் நிறைய வல்லார்
கதியினைக் கஞ்சன் மாளக்
கண்டுமுன் அண்டம் ஆளும்
மதியினை மாலை வாழ்த்தி
வணங்கிஎன் மனத்து வந்த
விதியினைக் கண்டு கொண்ட

தொண்டனேன் விடுகு லேனே" (திருக்குறு., 1)

என்ற முதல் பாசுரத்தின் வழி எடுத்துரைத்து, **"எம்பெருமானுடைய பெருமைகளைப் பன்னியுரைத்து என் நெஞ்சிலே வந்து புகுந்த இப் பெருமானை இனி நான் ஒரு நாளும் விட மாட்டுகின்றிலேன்" (பரகாலன் பைந்தமிழ், ப.345)** என்று ஆழ்வார் பெற்ற அனுபவத்தைத் தன் அனுபவமாக வெளிப்படுத்தியுள்ளார். இது தவிர பிரிதொரு பாசுரத்தில்,

"தொண்டெலாம் பரவி நின்னைத்

தொழுதடி பணியு மாறு

கண்டு நான் கவலை தீர்ப்பான்

ஆவரே பணியாய் எந்தாய்!

அண்டமாய் எண்டிசைக்கும்

ஆதியாய் நீதி யான

பண்டமாம் பரம சோதி!

நின்னையே பரவு வனே" (திருக்குறு., 11)

என்று திருமங்கையாழ்வார் நெஞ்சுருகும் நிலையினை, **"என்னுடைய மனத் துயரங்களை நானே தீர்த்துக் கொள்ளப்போமோ ? நீயே அருள் புரிய வேண்டும் என்று எம்பெருமானை நோக்கிப் பிரார்த்திக்கின்றார்" (பரகாலன் பைந்தமிழ், ப.345)** என்பதை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் இக் குறுந்தாண்டகத்தின் இருபது பாசுரங்களும் மனமுருகச் செய்யும் விதமாக அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். **"சமய இலக்கியங்களில் குறுந்தாண்டகம் காண்பது அருமை" (பரகாலன் பைந்தமிழ், ப.345)** என்று எடுத்துரைத்து குறுந்தாண்டகத்தின் சிறப்பினை பதிவு செய்துள்ளார்.

திருநெடுந்தாண்டகம்

முப்பது எண்சீர் பாசுரங்களைக் கொண்டதாய் அமைந்திருப்பது 'திருநெடுந்தாண்டகம்' இவற்றினைப் பொருள் நெறியின் அமைப்பால் முதல் பத்து, இரண்டாம் பத்து, மூன்றாம் பத்து என்று மூன்று பகுதிகளாகப் பகுத்துக் கூறுவது வைணவர்கள் சிலரது வழக்கமாக இருக்கிறது என்று அன்றைக்கு இருந்த வழக்கத்தைச் சுட்டியுள்ளார்.

இத்திருநெடுந்தாண்டகத்தைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் பெரியவாச்சான் பிள்ளையின் கருத்தினை முன்னிலைப்படுத்தி, **"முதல் பத்து ஆழ்வார் தாமான தன்மையிலும், இரண்டாம் பத்து பிராட்டியின் தன்மையினை ஏறிட்டுக் கொண்டு தாய்ப் பேச்சிலும், மூன்றாம பத்து மகள் பேச்சிலுமாக அமைந்துள்ளதினால் பெரியவாச்சான் பிள்ளை இதனைச் சமரசப் பிரபந்தமாகக் கொள்வர்" (பரகாலன் பைந்தமிழ், ப.346)** என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இதன் வாயிலாக பாசுரத்தில் மட்டுமின்றி பெரியவாச்சான் பிள்ளையின் உரையிலும் ஆழங்கால் பட்டவர் பேராசிரியர் என்பது தெளிவாகிறது.

திருஎழுகூற்றிருக்கை

சித்திரக்கவி வகைகளுள் ஒன்றான திருஎழுக்கூற்றிக்கை 'இரதபந்தம்' அமைப்பில் அமைந்துள்ளதாகும். இரதபந்தமெனப்படுவது தேரின் உருவம் தோன்றுமாறு கட்டங்கள் போட்டு அவற்றில் எண் முறையில் பாசுரப்பகுதிகளை அடக்கி வருவதாகும்.

இந்த பிரபந்த அமைப்பினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"தேருக்கு மேற்பகுதி என்றும், கீழ்ப் பகுதி என்றும் இரண்டு பகுதிகளாக இருக்கும் நிலைகளில் ஒவ்வொரு படியிலும் ஏழு கூறுகள் மூன்று அறையும், இரண்டாம் கூறு ஐந்து அறையும், மூன்றாம் கூறு ஏழு அறையும், நான்காம் கூறு ஒன்பது அறையும், ஐந்தாம் கூறு பதினோரறையும், ஆறாம் கூறு பதிமூன்றரையும், ஏழாம் கூறும் அங்ஙனமேயாக, இப்படி ஒன்றற்கொன்று இரண்டறை மேற்பட்ட முறையே கீற வேண்டும். மேற்பகுதியில் தலையிலிருந்தும், கீழ்ப்பாகத்தில் அடியிலிருந்தும் இந்த முறை கொள்ளத்தக்கது" (பரகாலன் பைந்தமிழ், ப.347)** என்று கூறி வீரசோழியம் முதலிய இலக்கண நூல்கள் கூறும் இதன் இலக்கணத்தை நுட்பமாக எடுத்துரைத்துள்ளார்.

திருமங்கையாழ்வாரின் இச்சித்திரக்கவி பிரபந்த அமைப்பினைப் பற்றிக் குறிப்பிடும் முனைவர் இரா.வ.கமலக்கண்ணன், "**மறைந்து போயிருந்த திவ்யப் பிரபந்தம் வெளிவருவதற்குத் திறவுகோலைத் தந்த ஆராவமுதனிடம் இவர் பேரிலும் ஈடுபாடு கொண்டவர். பல பாசுரங்களில் அப்பெருமானைப் புகழும் இவர் திருஎழுக்கூற்றிருக்கை என்னும் சித்திரக்கவி பாடியும் அவனைப் போற்றுகிறார். (நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், மூலமும் தெளிவுரையும், ப.68)** என்று குறிப்பிட்டுக் காட்டுகிறார். அதோடு **"திருக்குடந்தையில் நகர் நடுவே உள்ள சாரங்கபாணித் திருக்கோயிலின் கோபுரம் நிலைகளை உடையது. பெருமாள் சந்நிதியும் முன் மண்டபங்களும் ஓர் இரதம் போல் அமைக்கப் பெற்றுள்ளன. மண்டபத்தின் நான்கு பக்கங்களிலு சக்கரங்கள், இரதத்தை இழுத்துச் செல்லும் குதிரைகள் இருக்கும். இந்த அமைப்பில் இரத பந்தமாக திருஎழுகூற்றிருக்கையைப் பாடியுள்ளார். இது சரணாகதி தத்துவத்தினை விளக்குவதாக அமைகிறது" (நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் மூலமும் தெளிவுரையும், ப.68)** என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

ஆழ்வார்களுள் திருமங்கையாழ்வார் மட்டிலுமே இத்தகு சிறப்பு வாய்ந்த சித்திரக் கவியினை அருளிச் செய்திருப்பதைக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"எழுகூற்றிருக்கையாகிய இப்பிரபந்தம் ஆசிரியப் பாவகையில் நிலைமண்டில ஆசிரியப்பாவாக அமைந்துள்ளதோடு திருக்குடந்தை ஆரா அமுதனை ஆர்த்தியோடு சரணாகதி செய்வதாக அமைந்த நேர்த்தியான பிரபந்தம்" (பரகாலன் பைந்தமிழ், ப.348)** என்று விளக்கியுரைக்கிறார்.

சிறிய திருமடல்

கலிவெண்பாவில் அமையப்பெற்ற இச்சிறிய திருமடல், 'மடலேறுதல்' என்னும் துறையில் அமைந்த சிறப்பினை உடையது. இந்தச் சிறிய திருமடல் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"இஃது ஆழ்வார் தாமான தன்மையிலிருந்து பேசும் பிரபந்தம் அன்று. கிருட்டிணாவதாரத்தில் குடக் கூத்தில் அகப்பட்டு அன்னவனை அனுபவிக்கப் பெறாது வருந்தி மடலெடுக்கத் துணிந்த ஒரு பிராட்டியின் தன்மையினை ஏறிட்டுக் கொண்டு அவளுடைய பாசுரத்தாலேயே தமது நிலையை வெளியிடும் பிரபந்தம்**

இது. இஃது அவதாரங்களில் உண்டான நீர்மையை அழிக்கின்றேன் என்று கூறுவதாக அமைந்தது" (பரகாலன் பைந்தமிழ், ப.348) என்று சுட்டிக் காட்டுகிறார்.

பெரிய திருமடல்

சிறிய திருமடலினைப் போலவே கலிவெண்பாவால் அமையப் பெற்று மடலூர்தல் என்ற துறையில் அமைந்த நீண்ட பிரபந்தமாகும். இப்பெரிய திருமடலில் திருமங்கையாழ்வாரின் கருத்தினை பதிவு செய்யும் ந.சுப்புரெட்டியார், **"இப்பெரிய திருமடலில் திருமங்கையாழ்வார் நீர்மைக்கு எல்லை நிலமான கோயில்களில் நின்ற நீர்மையையும் அழிக்கின்றேன் என்கிறார்" (பரகாலன் பைந்தமிழ், ப.348)** என்று கூறி பெரிய திருமடலுக்குச் சிறப்பு சேர்க்கிறார்.

மேலும் அகப்பொருள் துறைகளுள் ஒன்றான 'மடலேறுதல்' பற்றி ஆழ்வார்கள் குறிப்பிடும் கருத்தினையும் சிறந்த முறையில் பதிவு செய்கிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார். **"காமம் காய்க் கொள்ளும் காலத்தில் ஆடவன் தன் மார்பில் எலும்பு மாலையும், தலையில் எருக்கமாலையும் எற்றுக் கொண்டு பனங்கருக்காற் செய்யப்பெற்ற குதிரை மேலேறித் தெருவில் வருவது 'மடலூர்தல்' அல்லது 'மடலேறுதல்' ஆகும். ஆடவன் மகளிரைக் குறித்து மடலேறலாமேயன்றி பெண் ஆடவனைக் குறித்து மடலூரல் ஆகாது என்பது தமிழ் நெறியில் விதிக்கப்பெற்ற ஒரு வரம்பாகும்" (பரகாலன் பைந்தமிழ், ப.349)** என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். மடலூர்தல் ஆண்களுக்கே உரித்தானது என்பதை வள்ளுவர்,

"மடலூர்தல் யாமத்தும் உள்ளுவென் மன்ற
படல்ஒல்லா பேதைக்கென் கண்" (குறள். 1136)
"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்" (குறள். 1137)

என்ற குறக்களின் வாயிலாகவும்,

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான" (தொல். பொருள்., அகத்., 38)

என்ற தொல்காப்பிய நூற்பாவின் வழியாகவும் எடுத்துரைத்து தன் கல்விப் புலமையையும் ஆராய்ச்சி நுட்பத்தையும் பதிவாக்கியுள்ளார். மேலும் திருமங்கையாழ்வார் பிராட்டி தசையை அடைந்து பரகால நாயகி ஆன பின்னர் மடலூரப் புகுதல் பொருத்தமான செயலென்பதை திருமங்கையாழ்வாரின் பாசுரங்களின் வழியே சுட்டிக்காட்டி அவர் பிறப்பால் ஆணாக இருந்தாலும் நாயக–நாயகி பாவத்தால் தன்னைத் தலைவியாகப் பாவித்துப் பாடியதால் அவரது பாசுரங்களில் அகப்பொருள் செய்திகள் சுவையாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிறிய திருமடல் மற்றும் பெரிய திருமடல் ஆழ்வார் நாயகி மடலுறப்புகுவதாகக் கூறப்படுவது தமிழ் மரபினை மீறிய ஒரு நிகழ்வாக இருப்பினும் அதனை புரட்சிகரமான சிந்தனையாகக் கருதலாம் என்கிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்.

சிறிய திருமடலிலும், பெரிய திருமடலிலும் ஆழ்வார் நாயகி மடலூர்வன், மடலூர்வன் என்று சொல்லி திருமங்கையாழ்வார் அச்சமுறுத்தினாரே தவிர அச்செயலை முற்றும் நடத்தி முடித்ததாகக் கூறுவில்லை என்று குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் சிறிய திருமடலில்,

"பேரா யிரமும் பிதற்றிப் பெருந்தெருவே

ஊரார் இகழிலும் ஊராது ஒழியேன் நான்

வாரார் பூம் பெண்ணை மடல்" (சிறிய திருமடல், அடிஎண். 451–452)

என்ற பாசுரத்திலும்,

"உன்னி உலவா உலகு அறிய ஊர்வன்நான்

முன்னி முனைந்து எழுந்து ஓங்கி ஒளிபரந்த

பன்னியபூம் பெண்ணை மடல்" (சிறிய திருமடல், அடிஎண். 312 – 314)

என்ற பாசுரத்திலும் பெண் தன்மையில் மடலேறுதல் குறித்துக் கூறப்பட்டாலும் இவைகளில் மடலேறியதற்கான சான்றுகள் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதோடு திருமங்கையாழ்வாரின் இப்போக்கினை புரட்சிப்போக்கு என்று கொள்வது தகும் என்று வலியுறுத்துகிறார்.

திருமங்கையாழ்வாரின் இத்துணிவான போக்கானது தமிழ் நெறியினை ஆழ்வார் நன்கு அறிந்திருந்தாலும், வட நெறியினைப் பின்பற்றி இத்துணிவினை மேற்கொண்டதை,

"அன்ன நடையின் அலர் ஏச, ஆடவர் மேல்,

மன்னும் மடல் ஊரார் என்பது ஓர் வாசகமும்

தென்உரையில் கேட்டு அறிவது உண்டு – அதனை

யாம் தெளிவோம்

மன்னும் வடநெறியே வேண்டினோம்" (பெரிய திருமடல், அடிஎண். 76–80)

என்ற பெரிய திருமடல் பாசுரப்பகுதியினால் உணர முடிவதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் **"மடலேறுதல் என்பது ஆசை மிகுதியால் மேற்கொள்ளும் ஒரு செயல். ஆசையை வரம்பிட்டுக் காக்க யாராலும் இயலாது. அரசாணைக்கும் அது கடுப்படாது. வேலியடைத்தால் நிற்குமா வேட்கை ? அளவு கடந்த வேட்கையின் காரணமாகி விளைக் கடவதான மடலூருதலை ஆண்கள் தாம் மேற்கோள்ளலாம். பெண்கள் மேற்கொள்ளலாகாது என்று வரம்பு கட்டுவது காதலின் இயல்பை அறியாதவர்களின் செயலாகும் என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம் என்று கொண்டால் திருமங்கையாழ்வர் புரட்சியான போக்குடையவர் என்று கருதலாம்" (பரகாலன் பைந்தமிழ், ப.351)** என்ற கருத்தினை பதிவு செய்திருப்பது ஆழ்வார்களில் திருமங்கையாழ்வாரே மிக முற்போக்கான சிந்தனையைக் கொண்டவர் என்பதைத் தெளிவாக்குகிறது.

திருமங்கையாரின் இயற்கை வருணனை

எங்கெல்லாம் அழகு உள்ளதோ அங்கங்கெல்லாம் இறைவனும் இருப்பதாகக் கொள்வது தமிழரது கொள்கை. இக்கொள்கையே முருகன் என்ற தமிழ்க்கடவுளின் தத்துவம் என்பதைத் திரு. வி.க. போன்ற இறையன்பு கொண்ட பெரியார்கள் விளக்கியிருப்பதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார். **"இக்கொள்கையையொட்டியே பக்தர்களும் இயற்கையில் தோய்ந்து இறைவனை அனுபவிப்பதோடு காட்டிலும், நாட்டிலும், மண்ணிலும், விண்ணிலும் எல்லா இடங்களிலும் உள்ள கூறுகளில் மனத்தைப் பறிகொடுக்கின்றனர். இத்தகைய மன நிலையைக் கொண்ட திருமங்கையாழ்வாரும் இயற்கை அழகினைத் தமது உள்ளத்து அழகுடன் குழைத்துத் தம்மனம் விரும்பும் கடவுள் வடிவத்தின் தெய்வீக**

அழகாகக் காண்கின்றார் என்கிறார். அதோடு இத்தகைய இயற்கை அழகுகள் வாய்ந்த தலங்களைத்தாம் திவ்விய தலங்கள் என்றும், 'திருப்பதிகள்' என்றும் மதித்து அங்குள்ள திருக்கோயில்களில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான்களை வழிபடுவது முக்கியம் என்று கருதினர் பக்தர்கள். பெரும்பாலும் ஆழ்வார்களின் பாசுரங்கள் திருத்தல வருணனையும் அங்குக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானையும் கூறுவதாக அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம்" (கலியன் குரல், ப.68) என்கிறார். ஆகவே, நிலத்தின் இயற்கை எழில்களைக் காட்டும் வருணனைகளான திருமங்கையாழ்வார் காட்டும் நில வருணனைகளைப் போற்றிப் புகழ்கிறார்.

குறிஞ்சிநிலக் காட்சிகள்

குறிஞ்சி நில வருணனையைப் பற்றிச் சிந்திக்கும்போது இமயமலை, சிங்கவேழ் குன்றம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலைமாலை ஆகிய திருப்பதிகளின் இயற்கை அழகில் திருமங்கையாழ்வாரின் மனம் ஆழங்கால் பட்டிருப்பது தனிச்சிறப்பானது என்கிறார்.

இமயமலையில் ஆண் யானையொன்று தன் காதலியாகிய இளம் பெண் யானையை மகிழ்விக்க வேண்டி நெடுக ஓங்கி வளரும் மூங்கில் முளைகளைப் பெயர்த்து எடுத்து மலை முழஞ்சுகளில் மிகுதியாகவுள்ள தேனிலே தோய்த்து அதன் வாயில் ஊட்டும் நிகழ்வினை,

"வரைசெய் மாக்களிறு இளவெதிர்
வளர்முளை அளைமிகு தேன்தோய்த்துப்
பிரச வாரிதன் இளம்பிடிக்கு
அருள்செய்யும் பிரிதிசென் றடை நெஞ்சே" (பெரிய., திரு., 1:2:5)

என்ற திருப்பிரிதி பற்றிய பாசுரத்தில் திருமங்கையாழ்வாரின் இயற்கையின் மீதான ஈடுபாட்டைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

சிங்கவேழ் குன்றத்தின் சூழ்நிலை அச்சம் தருவது என்பதைத் திருமங்கையாழ்வார்,

"ஓய்ந்தமாவும் உடைந்த குன்றும்
அன்றியும் நின்றழலால்
தேய்ந்த வேயும் அல்லது இல்லாச்
சிங்கவேழ் குன்றமே" (பெரிய., திரு., 1:7:3)

என்ற பாசுரத்தில் அலைந்து திரிந்து களைத்துப் போன மிருகங்களை இங்குக் காணலாம் மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புப் பற்றி எரிந்து குறைகொள்ளியாக இருக்குமாற்றைச் சிறப்பாக இங்குக் காணலாம் என்கிறார். மேலும்,

"காய்த்தவாகை நெற்றொலிப்பக்
கல்லதர்வேய்ங் கழைபோய்
தேய்த்த தீயால் விண்சிவக்கும்
சிங்கவேழ் குன்றமே" (பெரிய., திரு., 1:7:8)

என்ற பாடலின் வழி வாகை நெற்றுக்கள் காற்று வீசுவதால் ஒலிக்கின்றன. மூங்கில் உராய்வதால் உண்டான செந்நீர் விண் முழுவதையும் சிவக்கச் செய்கின்றது என்கின்றார். சில சமயம் சுழல்காற்று

சிவந்த நெருப்பை வாரிக் கொண்டு விண்முழுதும் ஓடிப் பரவுகின்றது. மூங்கில்கள் நெருப்பில் வேகின்றபோது ஒலி உண்டாகின்றது அந்த நெருப்பில் கற்களும் வேகின்றன. மேலும் அந்தமலைச் சூழ்நிலையில் நெல்லி மரங்கள் கல்லிடைகளில் முளைத்து வளர்ந்து அவற்றினிடையே வேரோடுவதால் அந்தவேர்கள் பருந்துப் பாறைகளையும் பிளந்து தள்ளுகின்றன எனக் கூறி இந்தச் சூழ்நிலையினை தனது திருத்தல பயணத்தின்போது நேரில் கண்டு வியக்கும்படி அமைந்திருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால் அம்மலையில் மரங்கள் இருந்ததையும், அவை ஒன்றோடொன்று உராய்வதால் அடிக்கடி அங்கு நெருப்பு பற்றிக்கொள்ளும் என்பதையும் உணர முடிகிறது.

இந்தச் சூழ்நிலையில் மக்களின் நடமாட்டத்தையும் திருமங்கையாழ்வார்,

"மலைத்தசெல் சாத்தெறிந்த பூசல்
வன்துடி வாய்கடுப்ப
சிலைக்கை வேடர் தெழிப்பறாத
சிங்கவேழ் குன்றமே"   (பெரிய., திரு., 1:7:2)

என்ற கூறுவதிலிருந்து திருத்தலப்பயணமாகப் பலர் அந்த அடவியில் செல்வதையும் அவ்விடத்து வேடர்கள் அவர்களைத் தகைந்து போரிடுவதையும், அப்போரில் வேடர்களின் வில்லோசையும், பறையோசையும் இடைவிடாது இருந்து கொண்டே இருக்கும் என்பதையும் உணர முடிகிறது. **"இப்பொழுதும் மலையில் வாழும் வேடர்கள் செஞ்சு என்ற பெயர்களால் வழங்கப்பெறுகின்றனர். இவர்கள் மரபில் பிறந்த மங்கையொருத்தியை எம்பெருமான் உகந்து மணந்து கொண்டதாகத் தலவரலாறு கூறுகின்றது. இதனால் இன்றும் ஆந்திரத்தில் மகளிருக்குச் 'செஞ்சு, லட்சுமி' என்று பெயரிடும் வழக்கமும் இருந்து வருகின்றது" (கலியன் குரல், ப.74)** என்பதனையும் பதிவு செய்கிறார்.

அழகர் மலை என வழங்கப் பெறும் திருமாலிருஞ்சோலை மலையின் அழகில் மயங்கிய மங்கை மன்னன் இம்மலையைச் 'சினைவளர் பூம்பொழில் சூழ் திருமாலிருஞ்சோலை (பெரி., திரு., **9:9:2)** 'தேன்அமர் பூம்பொழில் சூழ் திருமாலிருஞ் சோலை' ((பெரிய., திரு., **9:9:5)**, 'தெள்அருவி கொழிக்கும் திருமாலிருஞ்சோலை' (பெரிய., திரு., **9:9:7)**, 'சிலம்பியல் ஆறுடை திருமாலிருஞ்சோலை' (பெரிய., திரு., **9:9:4)**, 'திங்கள் மாமுகில்சேர் திருமாலிருஞ்சோலை' (பெரிய., திரு., **9:9:4)** என்றெல்லாம் வருணித்திருப்பது தனிச்சிறப்புடன் அமைந்து தனது உள்ளத்தை கொள்ளை கொண்டதை பதிவு செய்துள்ளார்.

மருத நிலக் காட்சிகள்

மருத நிலமான தென்னார்க்காடு, தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலுள்ள திவ்விய தேசங்கள் யாவும் நீர்வளம் மற்றும் நிலவளமிக்க மருதநிலச் சூழலில் அமைந்துள்ளன எனக்கூறும் ந.சுப்புரெட்டியார் திருக்கோவலூர் தலத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

"பாவருந் தமிழாற் பேர்பெறு பனுவற்
பாவலர் பாதிநாள் இரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுதநன் னாடு"   (வில்லிபாரதம்., சிறப்புப் பாயிரம்–9)

என்று வரந்தருவார் புகழ்ந்து கூறும்படியான முதலாழ்வார் மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதி பாடின தலமாக இருப்பதோடு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பிறந்ததற்குக் காரணமான வரலாற்றுப் புகழ்பெற்ற திவ்வியதேசமாய், தென்பெண்ணையாற்றின் தென்கரையில் அழகான சூழ்நிலையில் அமைந்துள்ள அவ் ஊரின் சூழலைக் காட்சிப் படுத்தியுள்ளார்.

"எழுந்தமலர்க் கருநீலம் இருந்தில் காட்ட
இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட
செழுந்தட நீர்க்கமலம் தீவிகைபோல் காட்டும்
திருக்கோவலூர்" (பெரிய., திரு., 2:10:13)

என்பது திருமங்கையாழ்வார் உருவகித்துக் காட்டும் காட்சி. இதை ஒரு தட்டானின் பொற்களரியாக உருவகித்துக் காட்டுகின்றார். பொற்களரியில் கரிகள் கொட்டப் பெற்று நிரம்பியிருக்கும் பொன்களும் முத்துகளும் நிறைந்திருக்கும் நெருப்பு செந்நிறத்துடன் ஒளிர்ந்து கொண்டிருக்கும். இங்குக் கருநீல மலர்கள் கரித்துண்டுகளாகவும், புன்னை மொக்குகள் முத்தாகவும் புன்னைப் பூக்கள் பொன்னாகவும், தாமரைப் பூக்கள் **?** திகழ்ந்து தட்டானின் பொற்களரிபோல் காணப்பெறுகின்றது. இந்தக் காட்சி நெஞ்சில் நிற்பதாக அமைந்து இலக்கிய இன்பத்தை நல்குகின்றது என்பதை வலியுறுத்துகிறார். அதனுடன்,

"கோங் கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக்
குழாம் வரிவண் டிசைபாடும் பாடல் கேட்டுத்
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருக்கோவ லூர் அதனுள் கண்டேன் நானே" (பெரி., திரு., 2:10:4)

என்ற பாசுரத்தில் சோலைகளும் வயல்களும் சூழ்ந்த இடம் திருக்கோவலூர் என்கிறார். கோங்கு அரும்புகளும், சுரபுன்னைகளும், குரவமலர்களும் செறிந்து திகழும் சோலைகளில் வண்டுகள் கூட்டம் கூட்டமாக மது உண்டகளிப்பாலே இசைபாடுகின்றன. இத்தகைய சோலைகளினாலும் கண்கண்ணாகச் செழித்துவளரும் கரும்புகளையும் கொண்ட வயல்களினாலும் சூழப்பட்டது திருக்கோவலூர் எனக்கூறும் கலியன் இத்தலத்து எம்பெருமானை தீங்கரும்பாக உருவப்படுத்தும் பொழுது வண்டுகளை முதலாழ்வார்களாக எண்ண வேண்டியுள்ளது என்கிறார். அவர்கள் பாடும் பாசுரங்கள் முதல் மூன்று அந்தாதிகளிலுள்ளவை. ஆழ்வார்கள் இந்தப் பாசுரங்கள் பாடுவதைக் கேட்டு திருக்கோவலூர் தீங்கரும்பு (இறைவன்) கண் வளர்கின்ற நிகழ்ச்சியை நினைந்து வேதாந்த தேசிகர் தம் 'தேகளீஸ்துதி' என்னும் சிறுநூலை அமைக்கின்றார். இது வடமொழியான நூல். மூன்று ஆழ்வார்களும் மிருகண்டு முனிவர் இல்லத்துத் தேகளி (ரேழியில்) எம்பெருமானை மூன்று ஆலை உருளைகள் போல் நெருக்குதலால் திருக்கோவலூர்த் தீங்கரும்பினின்று பிழியப்பெறும் 'சௌலப்பியம்' என்னும் ரசத்தைப் பக்தகோடிகள் பருகி அனுபவிக்கின்றனர் என்று அற்புதமாகக் காட்டுகின்றார். இங்ஙனம் தமிழ் இலக்கியம் பல வடமொழிப் புலவர்கட்கு, அவர்கள் இயற்றும் நூல்கட்கு 'கருத்து தானம்' வழங்கியுள்ளது என்பதையும் சிந்தித்து மகிழ முடிகிறது என்பதனை ந.சுப்புரெட்டியார் வலியுறுத்துகிறார். அதோடு மட்டுமின்றி,

"இருங்கைமா கரிமுனிந்து, பரியைக் கீறி,

இனவிடைகள் ஏழடர்த்து, மருதம், சாய்த்து

வரும்சகடம் இறஉதைத்து மல்லை அட்டு

வஞ்சம்செய் கஞ்சனுக்கு நஞ்சா னானை,

கருங்கமுகு பசும்பாலை வெண்முத்து, ஈன்று

காய்எல்லாம் மரகதமாய் பவளம் காட்ட,

செருந்திமிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத்

திருக்கோவலூர் அதனுள் கண்டேன், நானே" (பெரிய., திரு., 2:10:7)

என்று பாசுரமானது **"இயற்கையில் தோய்ந்து இலக்கிய இன்பம் நுகர்வாருக்கும் இனிக்கும்; இறையநுபவத்தில் உள்ளதைப்பறி கொடுப்பார்க்குத் தித்திக்கும்; இரண்டிலும் ஈடுபடுவார்க்கும் பக்தி நெறியில் கொண்டு செலுத்தும் இஃது ஆழ்வார் பாசுர இயல்புக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு" (கலியன் குரல், ப.79)** என்பதனையும் வலியுறுத்துகிறார்.

நெய்தல் நிலக் காட்சிகள்

திருமங்கையாழ்வார் திருப்புல்லாணிப் பாசுரங்களால் அற்புதமான நெய்தல் நிலக்காட்சிகளை அனுபவிக்கின்றார் என்று கூறும் ந.சுப்புரெட்டியார் இராமேசுவரத்தில் கடல் அமைதியாக இருப்பதுபோல், திருப்புல்லாணிக்கடல் அமைதியாக இல்லை அங்குக் கடல் மிகக் கொந்தளிப்புடன் உள்ளது என்பதை,

"பொருது முந்நீர்க் கரைக்கே

மணியுந்து புல்லாணி" (பெரிய., திரு., 9:3:2)

என்று திருமங்கையாழ்வார் கூறுவது, தலைவியை விட்டுப் பிரிந்து செல்லும் தலைவன் நல்வாழ்க்கைக்கு உறுப்பாகவுள்ள அரும்பெரும் பொருள்கள் திரட்டிக் கொணர்வதற்காகத் தொலை நாடு செல்ல அவசியமில்லாதபடி திருப்புல்லாணியில் மனை வாயிலிலே மணியும் முத்தும் மலிந்து கிடக்கின்றனவாதலின், அங்குச் சென்று கூடினோமாயின் பொருள் வயிற்பிரிவும் நேரமாட்டாது என்பது குறிப்பு. மேலும் ஆழ்வார், "பொங்கு முந்நீர்க்கரைக்கே மணியுந்து புல்லாணி" என்றும் "புணரியோதடம் பணிலம் மணியுந்து புல்லாணி" என்றும் "புரவி என்னப் புதம் செய்யது வந்துத்துது புல்லாணி" என்றும் இங்குள்ள கடலை வருணித்திருப்பதைக் கண்டு மகிழலாம். இந்த ஊர்க்கடற்கு "பொன்னங்கழிகானல்" எனத் திருநாமம் இட்டு மகிழ்கின்றார் என்று கூறுவதோடு மேலும் இங்குள்ள கடற்கரைச் சோலைகள் கலியன் திருவாக்கில் மிக அற்புதமாக இடம் பெற்றுள்ளன என்பதை,

"இலங்கு முத்தும் பவளக்

கொழுந்தும் எழில் தாமரை

புலங்கள் முற்றும் பொழில் சூழ்ந்து

அழகாய புல்லாணி" (பெரிய., திரு., 9:3:10)

என்பது அவர் காட்டும் சோலை. 'ஒளிமல்குகின்ற முத்துகளையும் அழகிய பவளத்துளிர்களையும் மலர்ந்த தாமரைப் பொய்கைகளையும் உடைத்தான சோலைகளால் சூழப்பட்டது திருப்புல்லாணி என்கின்றார். அதோடுமட்டுமின்றி,

"கள்ளவி ழும்மலர்க் காவியும்

தூமடற் கைதையும்

புள்ளும் அள்ளற் பழனங்களும்

சூழ்ந்த புல்லாணி" (பெரிய., திரு., 9:3:6)

என்று அந்தத் திவ்விய தேசத்தின் சூழலை நெய்தல் நிலக் கருப்பொருளைக் கொண்டே வருணித்திருக்கும் எழில் நலம் கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது என்று கூறி கவி இன்பத்தில் ஊறித்திளைத்தவர் கலியன் என்பதைப் புலப்படுத்துகின்றார்.

பெரியாழ்வாரின் அருளிச் செயல் அனுபவங்கள்

கருடாம்சமாக அவதரித்தவர் என்று வைணவ உலகம் கொண்டாடும் பேறு பெற்றவர் பெரியாழ்வார். சிறு வயதிலேயே விஷ்ணுவை தம் சித்தத்தில் எப்போதும் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே பெற்றோர் இவருக்கு விஷ்ணு சித்தர் என்ற திருநாமமிட்டு வழங்கினர் என்பர்.

பெரியாழ்வார் பிறந்த ஊரான ஸ்ரீவில்லிப்புத்தூர் வடபெருங்கோயிலுடையானுடைய கடைக்கண் பார்வையினால் திருமாலுக்குக் தொண்டு செய்யும் அமுதம் உண்கையே இவரது இயல்பாக அமைந்தது என்பதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் எவ்வகையில் இறைவனுக்கு கைங்கர்யம் செய்யலாமென்று சிந்தித்த வேளையில் மலர் சமர்ப்பித்தலே எம்பெருமானுக்கு உகப்பு என்பதில் தெளிந்து திருமாலுக்கு மலர்களால் பூசனை செய்யும் நந்தவனக் கைங்கரியத்தினை மேற்கொண்டார் என்கிறார்.

இறைத் தொண்டில் மனம் மகிழ்ந்து வாழ்ந்து வந்த பெரியாழ்வர் நாள்தோறும் நந்தவனக் கைங்கர்யம் செய்ய மலர்கொய்யும் நந்தவனத்தில் துளசிச் செடியின் கீழ் கண்டெடுக்கப்பட்ட பெண்குழந்தையினை இறைவனே தனக்கு அருளியதாக பாவித்து அக்குழந்தைக்கு 'கோதை' என்று பெயரிட்டு வளர்த்தார். அக்குழந்தையே பின்னாளில் 'ஆண்டாள்' என்ற திருநாமத்தில் அழைக்கப்பட்ட ஆழ்வாராவார்.

மேலும், **"திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தமானால் பெரியாழ்வார் திருமொழியில் முதல் பத்து பத்தாகாது, ஒன்பதே யாகும் என்பதற்குக் கூறப்பெறும் சமாதானம் நூறு பாசுரங்களை ஒரு பத்தாக வழங்குவது ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம் அதன்படி 'வண்ண மாடங்கள்' முதலாக 'மெச்சூது' தொடங்கும் வரையில் நூறு பாசுரங்கள் குறையாமலிருப்பதால் முதற்பத்தின் பிரிவு குற்றமற்றதே திருப்பல்லாண்டைச் சேர்த்தால் நூற்றுப் பத்துப் பாசுரங்கட்கு மேற்படும். இதனால் திருப்பல்லாண்டு தனி நூலாகும் என்ற சமாதானம் சிறிதும் பொருத்தமற்றது" (விட்டு சித்தன் விரித்த தமிழ், ப.49)** என்பதைச் சுட்டிக் காட்டி விளக்குகிறார்.

அதோடு பெரியவாச்சான் பிள்ளை போன்ற வைணவப் பெருந்தகைகள் உரை செய்த போது பெரியாழ்வார் திருமொழியின் இறுதிப் பாசுரமாகிய 'வேயர் தங்குலத்து' **(5:4:11)** என்ற பாசுரத்தில், 'கோயில் கொண்ட கோவலன்' என்ற சொற்றொடருக்கு வியாக்கியானம் செய்யும் பெரியவாச்சான் பிள்ளை, **"திருப்பல்லாண்டு தொடங்கி இவ்வளவும் இவர் மனத்திலிருக்கின்ற கிருஷ்ணன் தான் பிறந்த படியையும் வளர்ந்த படியையும் கேட்டான்" (விட்டு சித்தன் விரித்த தமிழ், ப.51)** என்று

எடுத்துரைப்பதிலிருந்தும் திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தமன்று என்பது உறுதிப்படுகிறது என்பதை எடுத்துரைக்கிறார்.

வைணவ சீலர்கள் பலர் திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தமாகக் கொள்ளத்தக்கது என்று கூறினாலும் அசைக்க முடியாத பல காரணங்களினால் அதனை ஏற்க மறுக்கும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார், **"திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழியின் தொடக்கத் திருமொழியே யன்றித் தனிப்பிரபந்தமன்று என்பது தெளிவாகின்றது. இதன் ஒப்பற்றப் பெருமைக்கு தனிப் பிரபந்தம் என்ற நிலையின்மையால் எவ்வாற்றானும் குறை நேராது" (விட்டு சித்தன் விரித்த தமிழ், ப.51)** என்பதைச் சுட்டிக் காட்டித் தெளிவு படுத்துகிறார்.

அதோடு பெரியாழ்வார் திருமொழியில் பெரியாழ்வாரின் அருளிச்செயல் அனுபவங்களை விவரிக்கும் பேராசிரியர் அதில் கண்ணன் விளைத்த சிறு குறும்புகள், கண்ணனின் தீரச் செயல்கள், பிருந்தாவனத்தில் வைணவ கோபாலன் நிலை ஆகியவற்றில் தன் மனம் தோய்ந்து **"கண்ணன் தரிசனமளிக்கும் கோலங்களில் மூன்று கோலங்கள் பக்தர்களின் உள்ளங்களச் சிறப்பாகக் கவருகின்றன. ஆயர்பாடிச் சிறுவனாக வருவது ஒன்று; பசுக்களுக்கும் இடைப்பெண்களுக்கும் தோழனாகத் தோன்றுவது மற்றொன்று; வேணுகோபாலனாகத் தோற்றமளிப்பது பிறிதொன்று. இந்த மூன்று கோலங்களையும் பெரியாழ்வார் நேர் காட்சிகளாக அனுபவித்து மகிழ்பவர்" (மேலது, ப.174)** என்று விளக்கி அந்த அனுபவங்களின் தன்மையினை விளக்கியுரைக்கிறார்.

கண்ணன் விளைத்த சிறு குறும்புகள்

குழந்தைகளின் மழலைமொழி பெற்றோருக்கு இன்பம் தருவதைப் போல அக்குழந்தைகளின் சிறுசிறு குறும்புகளும் இன்பத்தையே தரும் என்பதை யசோதை பிராட்டியின் நிலையிலிருந்து பெரியாழ்வார் அனுபவித்து மகிழ்வதை,

"தன்முகத்துச் சுட்டி
தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய்
பொன்முகக் கிண்கிணி
யார்ப்பப் புழுதியளைகின்றான்
என்மகன் கோவிந்தன்" (பெரியாழ்., திரு., 1:5:1)

என்ற பாசுரத்தின் வழியே குழந்தையாகிய கண்ணன் புழுதியில் புரண்டு விளையாடும் அழகைக்கான அம்புலியை அழைக்கும் சிறப்பினைச் சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார். அதோடு மட்டுமின்றி,

"புட்டியிற் சேறும் புழுதியும் கொண்டுவந்து
அட்டி யழுக்கி அகம்புக் கறியாமே
சட்டித் தயிரும் தடாவினில் வெண்ணெயும் உண்
பட்டிக் கன்றே" (பெரியாழ்., திரு., 1:7:5)

என்ற பாசுரத்தில், **"கண்ணன் புழுதியில் விளையாடும்போது உடம்பில் வியர்வை நீர் உண்டாகும். அவ்வியர்வை நீரால் நனைந்து புழுதி படிந்த இடம் சேறாகவும், நனையாத இடம் புழுதி மண்ணாகவும்**

இருக்கும். அப்படியே ஓடிவந்து தாயை அணைத்துக் கொள்வான். அந்தச் சேறும் புழுதியும் தாயின் உடலின்மீது படிந்து விடும். பின்னர் அன்னைக்குத் தெரியாதபடி வீட்டினுள் புகுந்து சட்டியில் வைத்திருக்கும் தயிரையும் மிடாக்களிலிருக்கின்ற வெண்ணெயையும் உண்பான். அவன் பட்டி மேய்ந்து திரியும் கன்று போன்றவன்" (விட்டு சித்தன் விழித்த தமிழ், ப.105) என்று விளக்கியுரைக்கும் ந.சுப்புரெட்டியார் யசோதைப் பிராட்டி நிலையில் பெரியாழ்வார் அனுபவித்த நெகிழ்வினை தானும் அனுபவித்து மகிழ்கிறார்.

கண்ணனின் இத்தீராத விளையாட்டால் மனம் வெறுத்த திருவாய்ப்பாடியிலுள்ள அனைவரும் கண்ணனின் கண்ணுக்கெட்டாதபடி தம்வீட்டு தயிர், வெண்ணெய், பால் முதலியவற்றை உயரத்தில் உள்ள உறிகளில் சேமித்து வைப்பர். அதனையும் கண்ணன் ஒரு பொத்தலான உரலினைத் தேடிக் கண்டுபிடித்து உருட்டிக் கொண்டு வந்து அவ்வுரலைத் தலைகீழாகக் கவிழ்த்து அதன் மேலேறி உறியை எட்டி அதிலுள்ளவற்றை விழுங்கும் நிகழ்வினைப் பெரியாழ்வார்,

"பொத்த வுரலைக் கவிழ்த்து அதன் மேலேறி
தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
மெத்த திருவயி றார விழுங்கிய
அத்தன்" (பெரியாழ்., திரு., 1:10:7)

என்ற பாசுரத்தில் அனுபவித்து மகிழும் நிகழ்வினைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் **"நல்ல உரலானால் அதை நடுவே யாரேனும் சிலர் கார்யார்த்தமாகத் தேடிவந்து தன்னைப் பிடித்துக் கொள்ளக் கூடுமென்று பொத்தல் உரலைத் தேடிப்பிடித்தான் என்பது சிறப்புப் பொருளாகும்" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.106)** என்று கூறி குழந்தைக் கண்ணனின் அறிவுக் கூர்மையினை அனுபவித்து அகமகிழ்கின்றார்.

இவை மட்டுமின்றி கண்ணனின் குறும்புகளால் இன்னலுற்ற ஆய்ச்சியர் பலரும் பலவிதமாகக் குறை சொல்லியவாறு ஆயர்பாடியில் குடியிருக்க முடியாத நிலையினை கண்ணன் ஏற்படுத்தி வந்ததை,

"அருகிருந்தார் தம்மை அநியாயம்
செய்வது தான்வ ழக்கோ ? அசோதாய்
வருகவென் றுன்மகன் தன்னைக் கூவாய்
வாழவொட்டான் மதுசூதனனே" (பெரியாழ்., திரு., 2:9:5)

என்ற பாசுரத்தில் பெரியாழர்வார் எடுத்துரைக்கும் பாங்கில் தன் மனதினை பறிகொடுத்து அவரைப் போன்றே பெருங்களிப்பெய்துகிறார்.

ஆய்ச்சி ஒருவனின் முறையீட்டை கேட்ட யசோதனைப் பிராட்டி 'கண்ணா இங்கே வா' என்று அழைக்க அதற்கு அந்த ஆய்ச்சியோ நான் அவனைப் பற்றிக் குறை கூறிக்கொண்டிருக்கும் வேளையில், நீ அவனை இவ்வாறு புகழ்ந்து அழைக்கலாமா ? அச்சுறத்தியன்றோ அழைக்க வேண்டும் என்று கூற அதற்கு யசோதைப் பிராட்டி இவன் எனக்குச் செல்லப்பிள்ளை ஆயிற்றே என்று கூறி கண்ணனை நோக்கி, **"அஞ்சன வண்ணா, உன்னைப் பிறர் பழித்துக் கூறினால் என்னால் காது கொடுத்து கேட்டுக் கொண்டிருக்க முடியாது. ஆகவே அயலகத்தார் ஒன்றும் சொல்ல இடம் இல்லாதபடி நீ இங்கு வந்து**

சேர்க என்று அழைக்கின்றாள்" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.109) என்று கூறுவதாய் எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் தாய்மையுணர்வில் மேலோங்கிய பெரியாழ்வாரின் தனிச்சிறப்பினை,

"வருக வருக வருக இங்கே

வாமன நம்பி! வருக இங்கே

கரிய குழல்செய்ய வாய்மு கத்துக்

காகுத்த நம்பீ! வருக இங்கே

அரியன் இவனெனக் கின்று நங்காய்

அஞ்சன வண்ணா! அசல கத்தார்

பரிபவம் பேசத் தரிக்க கில்லேன்;

பாவியே னுக்கிங்கே போத ராயே!" (பெரியாழ்., திரு., 2:9:2)

என்ற பாசுரத்தில் வெளிப்படுத்துவதிலிருந்தும்,

"போதர் கண்டாய்; இங்கே போதர் கண்டாய்; போதரேன்

எண்ணாதே போதர் கண்டாய்

ஏதேனும் சொல்லி அகலகத்தார் ஏதேனும் பேச நான்

கேட்க மாட்டேன்

கோதுகலம் உடைக் குட்டனையோ! குன்று எடுத்தாய்!

குடம் ஆடு கூத்தா!

வேதப் பொருளே! என் வேங்கடவா! வித்தகனே!

இங்கே போதராயே" (பெரியாழ்., திரு., 2:9:6)

என்ற பாசுரத்தில் சுட்டிக் காட்டுவதிலிருந்தும் பெரியாழ்வார் தாயாக நின்று அனுபவிக்கும் கண்ணனின் சிறு குறும்புகள் தம் உள்ளத்தை கொள்ளை கொள்கின்றன என்பதை, **"அன்னையின் அன்பு ஆழங்காண முடியாத மாக்கடல், காதலர்களின் காதலைப் போல் கொந்தளித்து அலையெறியும் மாக்கடல் அன்று, சாந்தமான தூய்மையான ஒளிமயமான மாக்கடல், இந்த விதமான அன்புக் கடலில் விளைந்தவை விஷ்ணுசித்தரின் பல பாசுரங்களும், பக்தி அனுபவங்களும்" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.119)** என்று சுட்டிக் காட்டி அத்தகைய சீர்மிகு பாசுரங்களில் ஆழங்கால் பட்டு பக்திப் பயிரை வளர்த்து, அவ்வனுபவங்களில் திளைத்ததாக நெகிழ்கிறார்.

கண்ணனின் தீரச் செயல்கள்

திருமாலை அனுபவித்தல் என்பது பலவகைப்பட்டது. அவனுடைய திருநாமங்களைச் சொல்லியனுபவித்தல், அவனுடைய திருக்கல்யாண குணங்களைச் சொல்லியனுபவித்தல், அவனுடைய வடிவழகைச் சொல்லியனுபவித்தல், திவ்விய தேசங்களின் வளங்களைச் சொல்லியனுபவித்தல், அங்கே அபிமானமுள்ள ஸ்ரீவைணவர்களின் பெருமையினைப் பேசி அனுபவித்தல் என்ற பலவகையான அனுபவங்களில் 'அவனுடைய தீரச் செயல்களைச் சொல்லியனுபவித்தல்' என்பது சிறந்த பகவதனுபவமாகக் கொள்ளப்படுகிறது.

கிருஷ்ண பக்தியில் சிறந்தவரான பெரியாழ்வார் திருமாலின் தீரச் செயல்களைச் சொல்லியனுபவிக்கும் தன்மையில் தனிச்சிறப்பு பெற்றவர். குறிப்பாக அவன் சிறுவனாக இருந்தபோது ஆற்றிய தீரச் செயல்களில் ஆழங்கால் பட்டு மகிழும் ந.சுப்புரெட்டியார் **"இத்தீரச் செயல்கள் அனைத்தையும் அதிமாநுஷ்ய சேஷ்டிதங்கள்' என்று குறிப்பிடுவர் வைணவப் பெருமக்கள். தமிழர்கள் இதைச் 'சிறு சேவகங்கள்' என்று குறிப்பிடுவார்" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.120)** என விளக்கம் தருகிறார்.

இத்தகைய 'சிறு கேசவகங்கள்' பலவற்றில் தம் மனதினைப் பறிகொடுத்த பெரியாழ்வார் பூதனை அழித்த நிகழ்வு சகடாசுரனை அழித்த நிகழ்வு, சாந்து பெற்று கூன் நிமிர்த்த நிகழ்வு, விழ் விழவு அழித்த நிகழ்வு, குவலயாபீட வத நிகழ்வு, மல்லர்களை மாய்த்த நிகழ்வு, கம்ச வத நிகழ்வு, தேனுகன் மற்றும் பிரலம்பாசுரனை அழித்த நிகழ்வு, மருதம் இறுத்த நிகழ்வு, பகாசுரனை அழித்த நிகழ்வு, வையம் ஏழும் உண்ட நிகழ்வு, கன்றினால் விளவெறிந்த நிகழ்வு, மாதவத்தோன் புத்திரனை மீட்ட நிகழ்வு சீமாலிகனை அழித்த நிகழ்வு, குருந்தம் ஒசித்த நிகழ்வு, கோவர்த்தனத்தை குடையாக எடுத்த நிகழ்வு, ஏழ்விடை அடர்ந்த நிகழ்வு, பஞ்சவர்க்குத் தூதனான நிகழ்வு, பார்த்தன் தேரில் பாகனாய் நின்ற நிகழ்வு, நரகாசுர வத நிகழ்வு, கற்பகத் தருவைக் கொணர்ந்த நிகழ்வு, சிசுபாலனை சிரமறுத்த நிகழ்வு, பார்த்தனது தேர்க்காலில் குதிரைகளின் விடாயைத் தீர்த்தருளிய நிகழ்வு, மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பிடித்த நிகழ்வு, உத்தரையின் சிறுவனை உய்வித்த நிகழ்வு, குடக் கூத்து ஆடிய நிகழ்வு, வைதிகன் பிள்ளைகளை மீட்டுக் கொடுத்த நிகழ்வு ஆகியவற்றினையெல்லாம் திறம்பட அனுசந்தித்து மகிழ்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

பூதனையை அழித்த நிகழ்வு

கம்சன் தேவகியின் கருப்பத்தில் பிறக்கும் குழந்தையினால் தனது உயிருக்கு ஆபத்து என்பதை ஆகாயவாணி கூறக்கேட்டு தேவகியின் கருப்பம் பிறந்ததும் அப்போதைக்கப்போது அழித்து வந்தான். அவ்வேளையில் எம்பெருமானின் யோக நித்திரையில் பிறந்த கன்னிகையைக் கொல்ல முயன்றபோது அக் கன்னிகை உன்னைக் கொல்லப் போகின்றனவன் ஒளித்து வளர்கிறான் என்று கூறியதைக் கேட்டதிலிருந்து குழந்தைக் கண்ணன் மேல் சினங்கொண்டு பால்மனம் மாறாத அப்பாலகனைக் கொல்ல பூதனையெனும் பேய் மகளை ஏவிய நிகழ்வினைப் பெரியாழ்வார்,

"கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல்
கருநிறச் செம்மயிர்ப் பேயை
வஞ்சிப்பதற்கு விடுத்தான்
என்பதோர் வார்த்தையும் உண்டு" (பெரியாழ்., திரு., 2:8:6)

என்ற பாசுரத்தில் புலப்படுத்துவதோடு, ஆய்ச்சி உருவத்தில் வந்த பூதனை தூங்கிக் கொண்டிருந்தக் குழந்தைக் கண்ணனை எடுத்து தனது நஞ்சு தீற்றிய முலையைப் பாலுண்ணக் கொடுத்துக் கொல்ல முற்பட அப்போது அக்குழந்தைக் கண்ணன் பாலுண்ணும் பாவனையில் அவளின் உயிரை உறிஞ்சி அவளைப் பேரிரைச்சலிட்டுக் கதறி வீழ்ந்து இறக்கச் செய்த நிகழ்வை,

"கள்ளத்தி னால்வந்த

பேய்ச்சி முலைஉயிர்

துள்ளச் சுவைத்தானால்" (பெரியாழ்., திரு.,2:10:6)

"பேயின் முலை உண்ட

பிள்ளை இவன்" (பெரியாழ்., திரு., 2:5:2)

"பொல்லா வடிவுடைப் பேய்ச்சி

துஞ்சப் புணர்முலை வாய்மடுக்க

வல்லான்" (பெரியாழ்., திரு., 4:1:6)

"பேய்ப்பால் முலை உண்ட பித்தனே" (பெரியாழ்., திரு., 2:3:1)

"வஞ்ச மகளைச் சாவப் பாலுண்டு

சகடு இறப் பாய்ந்திட்ட தாமோதரா" (பெரியாழ்., திரு., 2:3:12)

என்ற பாசுரங்களிலெல்லாம் பேய் மகள் பூதனையை அழித்த வரலாற்றினைச் சுட்டிக் காட்டுவதால் கண்ணனின் தீரச்செயல் நிகழ்வுகளில் பூதனை வதையினை முதலிடத்தில் வைத்துப் போற்றுகிறார் ந.சுப்புரெட்டியார்.

தேனுகன் மற்றும் பிரலம்பாசுரனை அழித்த நிகழ்வு

தேனுகன் கம்சனின் ஏவலால் கண்ணனைக் கொல்வதற்காக கண்ணன் பலராமனுடனும் சில ஆயர் சிறுவர்களோடும் ஆநிரை மேய்த்துக் கொண்டிருந்த பனஞ்சோலைக்குள் புகுந்து கழுதை வடிவத்துடன் எதிர்த்துப் போர் புரியத் தொடங்க, கண்ணன்மிக எளிதாக அவனுடைய பின்னங்கால்கள் இரண்டையும் பற்றி அவ்வசுரக் கழுதையைச் சுழற்றி உயிர்ச்சாகும்படி ஒரு பனைமரத்தின் மீது வீசியெறிந்து அவனை அழித்த நிகழ்வினைப் பெரியாழ்வார்,

"தேனுகன் ஆவி செகுத்து பனங்கனி

தான்எறிந் திட்ட தடம்பெருந் தோளினால்

வானவர் கோன்விட மழைதடுத்து

ஆநிரை காத்தான்" (பெரியாழ்., திரு., 2:10:4)

என்ற பாசுரத்தில் அனுசந்தித்து மகிழ்வதைச் சுட்டிக்காட்டும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார், **"இப்பாசுரத்தில் இந்திரன் பசிக் கோபத்தினால் ஏவிய கல்மாரி தடுத்து ஆநிரைகளைக் காத்த வரலாறும் கலந்துள்ளது" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.127)** என்று கூறி கண்ணனின் தீரச்செயலினைப் பெருமைப்படுத்தி இருப்பது தனிச் சிறப்பாய் அமைகிறது என்கிறார்.

கண்ணன், பலராமன் ஆகியோர் ஆயர் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த பந்தாட்டத்தில் ஆயர் சிறுவனின் உருவங்கொண்ட பிரலம்பன் பலராமனைச் சுமந்து கொண்டு எல்லைக் கோட்டைத் தாண்டிச் செல்ல அதனை உணர்ந்த பலராமன் தனது ஆற்றலினால் பிரலம்பனுக்கு அதிக பாரமாக உடனே பிரலம்பன் தன் உண்மையான அரக்க உருவம் கொண்டு வான்வழி செல்ல முயல, பலராமன் மடக்கிய தன் கரங்களால் பிரலம்பனின் தலையில் ஓங்கிக் குத்தி அசுரன் தலை பிளந்து உயிர் ஒழித்த நிகழ்வினை,

"தேனுகன் பிலம்பன் காளியன் என்னும்

தீப்பப் பூடுகள் அடங்க உழக்கிக்

கான கம்படி உலாவி உலாவிக்

கடுஞ்சிறுக் கன்குழல் ஊதின போது" (பெரியாழ்., திரு., 3:6:4)

என்ற பாசுரத்தில் பெரியாழ்வார் அனுசந்தித்து மகிழும் சிறப்பினைக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"பரலாமனால் செய்யப்பெற்ற அசுரவதத்தைக் கண்ணன் செய்தருளியதான அனுசந்திப்பது ஒற்றுமை நயம் பற்றியதாகும்" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.128)** என்று சுட்டிக்காட்டுவது பெரியாழ்வாரின் அருளிச்செயல் அனுபவத்தின் தனித்தன்மையை விளக்குவதை உணர்த்துகிறது. மேலும் கண்ணனும் பலராமனும் பரம்பொருளான திருமாலின் அவதாரங்களே என்பதை இக்கதை விளக்குவதாகப் பதிவு செய்துள்ளார்.

வையம் ஏழும் உண்ட நிகழ்வு

தெருவில் விளையாடிக் கொண்டிருந்த கண்ணன் மண்ணைத் தின்றதாக பலராமன் மூலம் கேள்விப்பட்ட யசோதைப் பிராட்டி ஓடிப்போய் கண்ணனை வாரி எடுத்துக் கொண்டு ஏன் மண்ணைத் தின்றாய்? என அச்சுறுத்த, அதற்கு கண்ணனோ, 'அம்மா! நான் மண்ணைத் திண்ணவில்லை; அண்ணன் வேண்டுமென்றே கோள் சொல்லுகிறான்; வேண்டுமானால் என் வாயைப் பார்! என்றபடி வாயைத் திறந்து காட்ட, யசோதை அந்த வாய்வழியே கண்ணனின் திருவயிற்றில் வையம் ஏழினையும், கண்டு வியப்புற்று, இவன் ஆயர் மகன் அல்லன்; தெய்வம் என்று முடிவு கட்டினாலும் சிறிது நேரத்திலேயே அந்த மயக்கநிலை மாறித் தன்னுடைய மகனாகவே எண்ணிக் கொண்டாள் என்பதைப் பெரியாழ்வார்,

"கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்

பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்

ஐய நாவழித் தாளுக்கு அங்காந்தி

வையம் ஏழு கண்டாள் வாயுளே" (பெரியாழ்., திரு., 1:1:6)

என்ற பாசுரதில் கண்ணனாகிய குழந்தையை நீராட்டி நாவழிக்க முயலும்போது யசோதைப் பிராட்டி இக்காட்சியைக் கண்டதாக அனுசந்திக்கிறார். இந்நிகழ்வினை கண்ணன் முலைப் பாலுண்ணும்போது கொட்டாவி விடுவது போல் வாயைத் திறந்து தன் பேருருவம் காட்டியதாக சில புராணங்கள் கூறினாலும், கண்ணனின் இச்செயலினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"கண்ணன் பார்த்தவனுக்கு ஞானக் கண்ணைக் கொடுத்துத் தன் பேருருவத்தைக் காட்டியதைப் போல, யசோதைப் பிராட்டிக்குத் தன்னுடைய தெய்வத்தன்மையினை காட்ட வேண்டுமென்ற பேரவாவினால் இங்ஙனம் செய்தனன் போலும்" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.132)** என்று கூறி பெரியாழ்வாரின் அருளிச் செயலில் தான் ஆழங்கால்பட்ட தன்மையையும் தன் ஆராய்ச்சித் திறனையும் ஒருசேரப் புலப்படுத்துகிறார்.

மாதவத்தோன் வைதிகன் பிள்ளைகளை மீட்டுக் கொடுத்த நிகழ்வு

மாதவத்தோனாகிய பிராமணோத்தமரிடம் வேத அத்யயனம் கற்க விரும்பிய பலராமனும், கண்ணனும் அவந்தி நகரம் சென்று அனைத்து சாத்திரங்களையும் அறுபத்தி நான்கு நாட்களில் கற்றுத்தேர்ந்து குருதட்சணை சமர்ப்பிக்க வேண்டும்போது அந்த ஆசாரியர் கண்ணனின்

தெய்வத்தன்மையினை அறிந்தவராதலால் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு கடலில் மூழ்கி இறந்த தன் மகனை கொண்டு வந்து தருமாறு விருப்பம் தெரிவிக்க, கண்ணனும் அதற்கிசைந்து சங்கின் உருவங்கொண்டு மாக்கடலில் வசிக்கும் ‘பஞ்சஜநன்’ என்ற அசுரனே அவ்வந்தணச் சிறுவனைக் கொண்டு போனதை அறிந்து, அக்கடலில் இறங்கி அவ்வசுரனைக் கொன்று அவனது உடலாகிய பாஞ்ச சயத்தை எடுத்து வாயில் வைத்து முழங்கிக் கொண்டு யமபுரிக்கு எழுந்தருளி அங்கிருந்த அந்தச் சிறுவனை அவன் இறந்தபோது கொண்டிருந்த உருவம் மாறாதபடி கொண்டு வந்து குருதட்சணையாகக் கொடுத்த தீரச்செயலினை பெரியாழ்வார்,

“மாதவத்தோன் புத்திரன்போய்

மறிகடல்வாய் மாண்டானை

ஓதுவித்த தக்கணையா

உருவுருவே கொடுத்தான்” (பெரியாழ்., திரு., 4:8:1)

என்ற பாசுரத்தில் அனுசந்தித்து மகிழ்வதனைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **“கடலில் மூழ்கின குமாரனை மீட்டுக் கொடுத்தருளியது போல், சம்சார சாகரத்தில் மூழ்கிய என்னை மீட்டுப் பாதுகாத்தருள வேண்டும் என்பதே இப்பாசுரத்திற்குக் கருத்தாகக் கொள்ளப் பெறும்” (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.135)** என்று கதைக்குள் பொதிந்து கிடக்கும் உட்கருத்தை மிக நுட்பமாக ஆய்ந்துரைத்துள்ளார்.

அதோடு மட்டுமின்றி வைதிகன் எனும் அந்தணனுக்குப் பிறந்த முதல் மூன்று பிள்ளைகளும் பிறந்து, பூமியைத் தொட்டதும் காணாமல் போய்விட, நான்காம் பிள்ளை கருவுயிர்க்கும் நேரத்தில் அவ்வந்தணன் கண்ணபிரானிடம் வந்து இந்தப் பிள்ளையாவது தொலைந்திடாமல் பாதுகாத்து தந்தருளுமாறு வேண்ட கண்ணனும் அதற்கு சம்மதித்து வாக்கு தர, ஆனால் அன்றோ ஒரு வேள்வியால் தீட்சிதனாக இருக்க வேண்டிய சூழலில் கருவுயிர்க்கும் இடத்திற்கு எழுந்தருள முடியாத நிலையை உணர்ந்த பார்த்தன் தான் சென்று காப்பாற்றுவதாக வாக்குறுதி கொடுத்து அந்தணனை அழைத்துக் கொண்டு கருவுயிர்க்கும் இல்லத்தைச் சுற்றி காற்றுகூட நுழைய முடியாதவாறு சரக்கூடம் அமைத்து காத்து நின்ற போதிலும் அன்று பிறந்த குழந்தையும் காணாமல் போய்விடுகிறது. உடனே கோபங்கொண்ட அந்தணன், “கண்ணன் எழுந்தருளிக் காப்பதை நீயன்றோ தடுத்தாய்” என அருச்சுனனிடம் சினங்கொண்டு கண்ணபிரானிடம் அழைத்துச் செல்கின்றான். உடனே கண்ணன் முறுவலித்து, “அவனை விடு உனக்குப் பிள்ளைகளை நான் கொண்டு வந்து தருகிறேன்” என்று கூறி அருச்சுனன் தோரோட்ட அவ்வந்தணனையும் பரமபதத்திற்கு அழைத்துச் சென்று அங்கே நாச்சிமார்கள் சுவாதந்திரம் காட்டுவதற்காகவும், கண்ணபிரானது திவ்விய சௌந்தரியத்தினைக் கண்டு களிப்பதற்காகவும் அழைத்து வந்திருந்த அப்பிள்ளைகள் நால்வரையும் ஆதி உருவத்தில் ஒன்றும் குறையாமல் மீட்டுக் கொடுத்த தீரச்செயலினைப் பெரியாழ்வார்,

“தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுக

தனியொரு தேர்கடவித் தாயோடு கூட்டியஎன தப்ப” (பெரியாழ்., திரு., 1:6:7)

என்ற பாசுரத்திலும்,

"பிறப்பகத்தே மாண்டொழிந்த

பிள்ளைகளை நால்வரையும்

இறைப்பொழுதில் கொண்டு கொடுத்(து)

ஒருப்படுத்த உறைப்பன்" (பெரியாழ்., திரு., 4:8:2)

என்ற பாசுரத்திலும் அனுசந்தித்து மகிழும் தன்மையானது கண்ணனின் தீரச்செயல்களை எடுத்துரைக்கும் விதமாக அமைந்திருக்கிறது என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

இதிலிருந்து இறைவனாகிய கண்ணன் தன்மனதிற்கு உகந்தவர்களைப் பெரும் மனத்துன்பத்திற்கு உள்ளாக்கி முடிவில் அம்மனத் துன்பத்திற்கு மருந்தாகப் பேரின்ப மகிழ்ச்சியினைத் தரவல்ல சிறப்புடையவன் என்பதும் புலனாகிறது.

குருந்தம் ஒசித்த நிகழ்வு

கண்ணனின் தீரச் செயல்களில் குருந்தம் ஒசித்த நிகழ்வும் தனிச்சிறப்பு பெற்றது என்று குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் யமுனையில் நீராடி நின்ற கோபியரின் துகில்களை ஒருங்கே வாரிக்கொண்டு அந் நதிக்கரையில் இருந்த குருந்த மரத்தில் ஏறப்போவதை அறிந்த கம்சனால் ஏவப்பட்ட அசுரன் ஒருவன் கண்ணனுக்கு முன்பாக அம்மரத்தில் ஏறி கண்ணனைக் கொல்வதற்காகக் காத்துக் கிடந்தான். இதனையறிந்த கண்ணன் அம்மரத்தினை முறித்து போட்டான் என்ற புராண வரலாற்றைப் பெரியாழ்வார்,

"குருந்த மொன்றொசித் தானொடும் சென்று

கூடி யாடி விழாச் செய்து" (பெரியாழ்., திரு., 4:4:4)

என்று தீரச்செயலாகக் குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டுகிறார். மேலும் இந்நிகழ்வினை பண்டைய தமிழ் இலக்கியங்கள் பலவும் பலவாறாக சித்தரிக்கும் பாங்கினை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார், சிலப்பதிகாரத்தில் வரும்,

"கொல்லைப் புனத்துக்

குருந்தொசித்தாற் பாடுதும்

கொல்லையஞ் சாரற்

குருந்தொசித்த மாயவன்

கோகுல மேய்த்துக்

குருந்தொசித்தான்" (சிலப்பதிகாரம், ஆய்ச்சியர்குரவை, உள்வரி, வாழ்த்து, 1)

என்ற அடிகளும், அகநானூற்றில் வருகின்ற,

"வடா அது

வண்புனற் றொழுநை வார்மணல் அகன்றுறை

அண்ட மகளிர் தண்டலை யுடிஇயர்

மரஞ்செல மிதித்த மாஅல் போலப்

புன்றலை மடப்பிடி யுணீஇய ரங்குழை

நெடுநிலை யாஅமொற்றி நனைகவுட்

படஞ்மிறு கடியும் களிறே"   (அகநானூறு, பா.59: 4–9)

என்ற பாடலடிகளும் நீராடி நின்ற கோபியர்கள் தங்களின் மானத்தை காத்துக்கொள்ளும் பொருட்டு குருந்த மரத்தை திருமால் வளைத்துக் கொடுத்தாதகக் கூறுவதாக அமைந்திருப்பதால் இதுவும் ஒருவகைத் தீரச் செயல்தான் என்பதை, **"கோபியர் துகில்களைக் கண்ணன் கவர்ந்த பின் எதிர் வந்த பலதேவன் காணாவகை அம்மகளிர் ஒருங்கு மறையும்படி அவன் குருந்த மரக்கொம்பை வளைத்துக் கொடுத்தான் என்பதே சங்க காலத்தில் வழங்கிய சரிதமாதல் தெரியலாம். இங்ஙனமே சிலப்பதிகாரம், சிந்தாமணியில் வரும் தொடர்களும் இக்கதையையே கொள்ளும்படி பொருள் கோடல் வேண்டும்" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.141)** என்று சுட்டிக்காட்டித் தெளிவாக்குகிறார்.

இதிலிருந்து பெரியாழ்வாரின் கூற்றுப்படி பார்த்தாலும், தமிழ் இலக்கியக குறிப்புகள் வழியே நோக்கினாலும், 'குருந்தம் ஒசித்த நிகழ்வு' ஒரு தீரச்செயல் நிகழ்வாகவே அமைவதை உணர முடிகின்றது.

பிருந்தாவனத்தில் வேணுகோபாலன்

கண்ணனின் வளர் பருவத்தில் மிக முக்கிய இடம் பெறுவது பிருந்தாவனமாகும். பிருந்தாவனம் என்பதற்கு நெருஞ்சிக்காடு என்று பெயர். ஆயர்பாடியில் கண்ணனுக்கு நேர்ந்த பேரிடர்களையெல்லாம் உற்பாதங்கள் என்று கருதிய நந்தகோபன் முதலான ஆயர்கள் அனைவரும் அவ்விடத்தினை விட்டுக் கன்றுகாலி முதலிய அனைத்துப் பொருள்களுடனும் பிருந்தாவனத்தில் குடியேறியதால் அவ்விடம் வளம் கொழிக்கும் 'விரஜபூமி' யாக மாறியது என்று கூறும் ந.சுப்புரெட்டியார் கண்ணனின் தீரச்செயல்களாலும், திருவிளையாடல்களாலும் பிருந்தாவனம் தனிச்சிறப்பு பெற்றிருப்பதை, **"இதயத்தில் ஆன்மா இருப்பதுபோல் விராக பூமியின் இதயமான பிருந்தாவனத்தில் கண்ணன் என்றும் மகிழ்ந்து இனிது மருவியுள்ளான் என்று கூறுவர் பெரியோர்" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.160)** என்று சுட்டிக்காட்டுகிறார்.

அதோடு இத்தகு பெருமைவாய்ந்த பிருந்தாவனத்தின் நிகழ்வுகளில் மனதினைப் பறிகொடுத்துப் பெரியாழ்வார் அருளிச் செய்த பாசுரங்கள் தனிச்சிறப்பு பெற்றிருப்பதனையும் வலியுறுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்.

வேணுகானத்தின் சிறப்பு

பிருந்தாவனம் என்றதும் அனைவரின் சிந்தையிலும் மின்னி மிளிர்வது கண்ணனின் குழலோசையாகிய வேணுகானந்தான் என்பது வைணவப் பெருமக்களின் ஆழ்ந்த கருத்தாக இருப்பதனைப் பதிவு செய்வித்தவர் பெரியாழ்வாரே எண்ணுமளவிற்கு கண்ணனின் வேணுகானத்தின் சிறப்பினை தமது பல பாசுரங்களில் அருளிச் செய்து மகிழ்வதைச் சுட்டிக் காட்டுகிறார் ந.சுப்புரெட்டியார்.

"நாவ லம்பெரிய தீவினில் வாழும்

நங்கை மீர்கள் இதோர் அற்புதம் கேளீர்" (பெரியாழ்., திரு., 3:6:1)

என்ற பாசுரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் பெண்களையெல்லாம் தங்கள் கட்டுப்பாடுகளை எல்லாம் கடந்து கண்ணனின் வேணுகானமாகிய குழலிசைக்கு மயங்கி, அக்கானம் ஒலிக்கும் இடத்திற்கு வரச்செய்யும் தன்மையுடையது எனப் பெரியாழ்வார் எடுத்துரைப்பதைக் காட்டியுள்ளார்.

“இட அன ரைஇடத் தோளோடு சாய்ந்து

இருகை கூடப் புருவம்நெறிந் தேறக்

குடவயி றும்பட வாய்கடை கூடக்

கோவிந்தன் குழல்கொ(டு) ஊதின போது”   (பெரியாழ்., திரு.,3:6:2)

என்று பெரியாழ்வார் கண்ணன் குழலோசை எழுப்பும் அழகினை, **“கண்ணன் குழலோசை எழுப்பும் போது அவனது மேல்வாய் கட்டையின் இடப்பக்கம் இடத்தோள் பக்கமாகத் திரும்புகின்றது; இரண்டு கைகளும் குழலோடுகூடி துளைகளைப் புதைத்துப் புதைத்துத் திறக்கின்றன; புருவங்கள் தெறித்து மேலே களிர்கின்றன; கண்கள் துளைகள் தோறும் ஓடுவதுபோல் நோக்குகின்றன; வயிறு குடம் போல குமிழ்த்துத் தோன்றுகிறது; வாய் குவிகின்றது” (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.167)** என்று அவ்வழகின் மெய்ப்பாடுகளைச் சுட்டிக்காட்டி விளக்குகிறார் ந.சுப்புரெட்டியார்.

மேற்கண்ட வரிகளைப் படிக்கு போது கண்ணன் குழல் ஊதும் அழகு உயிரோவியமாய் மனக்கண்முன் விரிவதைப் போல பேராசிரியர் அவர்கள் சுவைபடக் கூறியிருப்பதை உணர்ந்து இன்புறமுடிகிறது.

மேலும், இந்நிகழ்வினை ஆழ்ந்து அனுபவித்த பெரியாழ்வார் கண்ணன் குழலூதும்போது கண்ணனின் கைககள் அக்குழலின் துளைகளை மூடவும் திறக்கவும் செயற்படும் போது குறுவியர்வை அரும்பின புருவங்கள் மேல் கிளர்ந்து வளைகின்ற தன்மையும், கண்ணனின் திருப்பவளம் பூரிப்பாலே குமிழ்கின்ற தன்மையும் அழகுணர்ச்சியின் சிறந்த மெய்ப்பாடுகள் என்பதைப் பெரியாழ்வாரின்,

“சிறுவி ரல்கள் தடவிப் பறிமாறச்

செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்ப

குறுவெ யர்ப்புரு வங்கூட லிப்பக்

கோவிந்தன் குழல்கொ (டு) ஊதின போது”   (பெரியாழ்., திரு., ப.3:6:8)

என்ற பாசுரத்தின் வழியே எடுத்துரைத்து கண்ணனின் அழகுணர்ச்சி மெய்ப்பாடுகள் தனித்துவம் பெற்றிருப்பதனை விளக்குகிறார்.

காட்டில் பல இடங்களில் மேய்ந்துகொண்டிருக்கும் பசுக்கள் வெகுதூரம் விலகிப் போய்விடாமல் இருப்பிடம் வந்து சேர்வதற்காக எழுப்பப்படும் கண்ணனின் குழலோசையில் மயங்கிய பாவையர்கள் பசுக்களுக்கு முன்பாக கண்ணன் இருப்பிடம் வந்து சேர்ந்து, ஓடி வந்த வேகத்தில் குலைந்த கூந்தலைக் கட்டிக் கொள்ளவும் தோன்றாமல், ஆடையினை ஒரு கையால் பற்றிக்கொண்டு ஒதுங்கி நிற்கும் அழகினைப் பெரியாழ்வார்,

“மடம யில்களோடு மாண்பிணைப் போலே

மங்கை மார்கள் மலர்க்கூந்தல் கவிழ

உடைநெ கிழஓர் கையா துகில் பற்ற

ஒல்கி யோடரிகண் ஓடநின் றனரே”   (பெரியாழ்., திரு., 3:6:2)

என்ற பாசுரத்தில் மிக அழகாக வெளிப்படுத்தியிருக்கும் தன்மையினை விளக்கும் ந.சுப்புரெட்டியார் கண்ணனின் குழலோசையில் மயங்கி நிற்கும் பாவையரின் கண்களோ நாணத்தைக் கடந்து

கண்ணனின் வடிவத்தின் மேல் ஓடுகின்றது. அப்போது இசைக்கும் இசையோ இனிய இசை, பெறப்படும் உண்மையோ தத்துவ உண்மை என்பதை, **"கோபாலன் பசுக்களைத் தேடுகின்றான்; பரமான்மா சீவான்மாவைத் தேடுகின்றது என்பது தான் ஆழ்வார் பெறவைக்கும் குறிப்பு" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.169)** என்று மெய்யுருகிப் புகழ்கின்றார்.

மேலும் வேணுகானமாகிய குழலோசையில் பெரியாழ்வார் நெக்குருகி லயித்துக் கிடந்த பாசுரங்களில் தன் மனதினையும் பறிகொடுத்த ந.சுப்புரெட்டியார் இந்திரலோகத்தில் உள்ள தேவர்களும், தேவியரும் மட்டுமின்றி அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி போன்றோர்களும், கான வித்தைக்குப் பேர் பெற்ற நாரதர், தும்புரு போன்றவர்களும் கண்ணனின் குழலோசைக்கு அடிமையான நிலையினை,

"செவியுணாவின் சுவைகொண்டு மிகழ்ந்து
கோவிந்த னைத் தொடர்ந் தென்றும் விடாரே" (பெரியாழ்., திரு., 3:6:7)

என்ற பாசுரத்தில் தேவரும், தேவியரும் குழலோசைக்கு அடிமைப்பட்டிருந்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

"மேனகை யோடு திலோத்தமை அரம்பை
வருப்பசி யர்அவர் வெள்கி மயங்கி
வானகப் படியில் வாய்திறப் பின்றி
ஆடல் பாடலவை மாறினர் தாமே" (பெரியாழ்., திரு., 3:6:4)

என்ற பாசுரத்தில் கண்ணனின் நடையழகு மற்றும் குழலோசையின் முன் மேனகை, திலோத்தமை, அரம்பை, ஊர்வசி ஆகியோரின் நடையழகும், பாட்டழகும் தோற்றுப்போக, அக்கன்னிகையர்கள் இனி நாம் ஆடுவதும், பாடுவதும் வீண் என நாணங்கொண்டு அத்தொழில்களைத் துறந்ததையும் அதோடு,

"அம்பரமும் திரியும் காந்தர்ப்ப ரெல்லாம்
அமுத கீதவலை யால்சுருக் குண்டு
நம்பரம் அன்றென்று நாணி மயங்கி
நைந்து சோர்ந்துகை மறித்துநின் றனரே" (பெரியாழ்., திரு., 3:6:6)

என்ற பாசுரத்தில் நாரதர், தும்புரு மற்றும் கின்னர மிதுனங்கள் என்று புகழ்வாய்ந்தவர்களும் கண்ணனின் குழலோசையைக் கேட்டு அவ்வின்ப வலையில் கட்டுண்டு விடுகின்றனர். அதோடு அவர்களின் கலைச்செருக்கெல்லாம் மறைந்து, இத்தனை நாளும் நாம் வெட்கமின்றிப் பாடித்திரிந்ததை நினைந்து மனம் நொந்து இனி இசைக்கருவிகளைத் தமது கைகளால் தீண்ட மாட்டோம் என்று சங்கற்பம் செய்து கொள்ளும் அழகினைப் பெரியாழ்வார் எடுத்துரைப்பது பெருஞ்சிறப்பு பெறுகிறது என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

அதோடு இத்தகு சிறப்புமிக்க கண்ணனின் வேணுகானத்தால் பிருந்தாவனம் எங்கும் கண்களாய் அவனது அழகைப் பருகிக் கொண்டுள்ளது. அந்த அழகும் குணமும் கீதமாக ஓடி இயற்கை அனைத்தையும் தன்வயமாக்கி விடுகின்றது என்பதில் பெரியாழ்வார் ஆழ்ந்து அனுபவித்திருக்கிறார் என்பதைக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"நாக்கின் சுவையைச் செவியிலே பிறப்பித்துப்**

பகுத்தறிவில்லாத பிராணிகளையும் வசிகரித்து விடுகின்றது கண்ணனின் வேணுகானம், அதோடு உயிர்க் குலத்தைச் சகோதர தர்மம் என்னும் தெய்வீக பாசத்தால் பிணித்து விடுகின்றது. அன்புக் கண்ணனது அருட்கீதம், சராசரங்களையெல்லாம் ஒருங்கே தழுவி அருள் செய்கின்றது. பரலோகத்தையும் இந்த இகலோகத்திலே கொண்டு வந்து விடுகின்றது. இந்த அற்புதத்தில் வேற்றுமைகள் யாவும் மறைந்தொழிகின்றன. வேற்றுமைகளிலும் ஒற்றுமையை உணர்த்தி விடுகின்றது என்று விஷ்ணு சித்தர் உபதேசிப்பது நம் சிந்தனைக்கு விருந்தாக அமைந்து விடுகின்றது" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.174) என்று சுட்டிக் காட்டுகிறார்.

இத்தகு காரணத்தினால் தான் பெரியாழ்வார் தனது அருளிச் செயல்களில் வேணு கோபாலனின் குழலோசைக்கு முக்கியத்துவம் கொடுத்து, இசையுலகின் தத்துவங்களும் வேதாந்தத்தின் அரிய பெரிய தத்துவங்களும் கண்ணனின் குழலோசைக்குள் அடங்கி விடுகின்றன என்பதை வலியுறுத்துவதை, **"இசையுலகின் அதிசயமான தத்துவங்களோடும் வேதாந்தத்தின் பெரிய பெரிய தத்துவங்களும், சரித்திர முடிவுகளான சித்தாந்தங்களோடும் பல்வேறு கலைகளிலும் பொருளும் கவிஞர்களின் புதிய புதிய கனவுகளும், வேணுகோபாலனின் குழலிசையிலே, விதையில் அடங்கிய ஆலமரம் போல அடங்கியுள்ளன என்பது கண்ணன் அடியார்களின் கொள்கையாக மலர்ந்துள்ளது என்று கருதலாம்" (விட்டுசித்தன் விரித்த தமிழ், ப.174)** என்று சுட்டிக்காட்டி பெரியாழ்வார் அருளிச் செயல்களுக்குப் பெருமை சேர்க்கிறார்.

திருமழிசையாழ்வாரின் அருளிச்செயல் அனுபவங்கள்

அத்திரி, வசிட்டர், மருகு, பார்க்கவர், புலத்தியர், அங்கிரசு முதலான முனிவர்கள் நான்முகனை வேண்டி பூலோகத்தில் தாங்கள் தவம் செய்வதற்குத் தகுதியான இடத்தினை உறுதி செய்யுமாறு வேண்ட, நான்முகன் அதற்கு உடன்பட்டு தேவ சிற்பியான விசுவகர்மாவை வரவழைத்து துலாக்கோல் நாட்டி ஒரு தட்டில் பூமியையும், மறு தட்டில் திருமழிசை எனும் ஊரினையும் வைக்க பூமி வைத்த தட்டு இலேசாக, திருமழிசை வைக்கப்பட்ட தட்டு களம் பெற்று தாழ்ந்த நிலையினைச் சுட்டிக்காட்டி திருமழிசைக்கு 'மஹிஸார உத்திரம்' என்ற காரணப் பெயரிட்டு, அங்குச் சென்று தவம் செய்யுமாறு அம்முனிவர்களை அனுப்பினான்.

இந்த வரலாற்றினை விளக்கும் பொருட்டே திருக்கச்சி நம்பிகள்,

"உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து, தம்மில்
புலவர் புகழ்க் கோலால் தூக்க – உலகு தன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது" (திருச்., விருத்., தனியன்)

என்று பாசுரம் அமைத்துப் பாடியுள்ளதை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் இத்தகு சிறப்பு வாய்ந்த திருமழிசையில் அவதரித்ததால்தான் பக்திசாரரான ஆழ்வார் ஊர்ப் பெயரின் சிறப்புக் கருதி திருமழிசையாழ்வர் என்று அழைக்கப்படுவதனை சுட்டிக்காட்டுகிறார்.

மாமுனிவர்கள் அனைவரும் ஐம்பொறிகளையும் அடக்கி தவம் புரிகையில் 'பார்க்கவர்' மட்டும் 'தீர்க்கசத்ரம்' என்ற பெருவேள்வி இயற்றி வாசுதேவனை வணங்குகிறார். அது கண்டு பொறாமை

கொண்ட தேவர்கள் இத்தவத்தினை சீர்குலைக்க வானுலக மங்கையரான அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி ஆகியோர்களை அனுப்பி பார்க்கவரின் தவத்தினை கலைக்க முற்பட தவம் கலைந்தபாடில்லை. அச்சமயம் திருமாலைப் போல் வேண்டிய உயிர்களை மோகிப்பிக்க வல்லமையுடையவரான, 'கனகாங்கி' எனும் கட்டழகி மன்மதன், வசந்த காலம், தென்றல், திங்கள் இவற்றின் துணையால் பார்க்கவருக்கு மோகம் உண்டாக்கி அவரின் தவத்தினைக் கலைக்கிறாள்.

அச்சமயத்தில் சூழ்கொண்ட அம்மங்கையின் திருவயிற்றிலிருந்து தைத்திங்கள் மக நட்சத்திரத்தில் 'சுதர்சனம்' எனம் திருவாழியின் அம்சமாய் உறுப்புகளற்ற ஒரு தசைப்பிண்டம் ஆண் குழந்தை வடிவமாய் உயிர் பெறுகிறது. உறுப்புகளற்ற அக்குழந்தையினை அத்தேவ மங்கை பிரப்பம் எனும் புதரில் வீசியெறிந்து சென்றுவிட அக்குழந்தை பசி, நீர் தாகத்தினால் அழுது கொண்டிருப்பதைக் காணசகிக்காது அவ்விடத்தில் இருந்த திருக்கோயிலில் எழுந்தருளியிருந்த சகந்நாதப் பெருமாள் தனது பிராட்டியுடன் எழுந்தருளி அக்குழந்தையினைக் குளிரச் செய்து அதன் பசி தாகம் இரண்டையும் போக்கி தன் திருமேனியைக் காட்டி மறைந்தனர். அப்பிரிவினைத் தாளாமல் குழந்தை தேம்பி அழத் தொடங்கியது.

அச்சமயம் அப்பகுதிக்கு பிரம்பறுக்க வந்த திருவாளன் என்னும் குறவன் குழந்தையினை வாரி எடுத்து மக்கட்பேறு இல்லாத தன்குறை போக்க மகவாகக் கருதி தன் இல்லத்திற்கு எடுத்துச் சென்று தனது மனைவி 'பங்கயச் செல்வி'யிடம் தந்து இருவரும் அதிக அன்போடு வளர்க்கின்றனர். அக்குழந்தையின்பால் கொண்ட பேரன்பினால் பங்கயச் செல்விக்கு பால் சுரக்கின்றது. அவரும் தன் முலைப்பாலைக் கொடுக்க முற்படும்போது அக்குழந்தை தெய்வப் பிறவியானதால் அதனை உண்ண மறுக்கிறது. மாறாக, பகவத் குணானுபவத்தையே தாரமாகக் கொண்டு பசி, தாகமின்றி அழுதல், அரற்றுதல், கூவுதல், பேசுதல் இன்றி திருமேனி ஒளி விளங்க வளர்ந்து ஆழ்வாரான பிறகு பாடிய பாசுரத்தில்,

"குலங்க ளாயஈரி ரண்டில்
ஒன்றி லும்பி றந்திலேன்"(திருச்., விருத்., 90)

என்று தமது வாக்கினாலேயே **"நான்கு வருணங்களுக்கும் உட்படாத ஒரு வகுப்பில் பிறந்ததாக ஒப்புக் கொள்கிறார்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.156)** என்று கூறுவதைச் சுட்டிக்காட்டும் ந. சுப்புரெட்டியார் எவ்வருணத்திலும் பிறவாதச் சிறப்புடைய பிறப்பு திருமழிசையாழ்வாரின் பிறப்பு என்பதை வலியுறுத்துகிறார். அத்துடன் இவரது பிறப்பினைப் போலவே இவரது அருளிச் செயல்களும் தனிச்சிறப்பு உடையனவாய்த் திகழ்வதைச் சுட்டிக்காட்டுகிறார்.

திருமழிசையாழ்வார் அருளிச் செய்த நூல்கள் இரண்டு. ஒன்று திருச்சந்த விருத்தம் மற்றொன்று 'நான்முகன் திருவந்தாதி' ஆகியனவாகும்.

இவற்றுள் திருச்சந்த விருத்தம் என்பது சந்த விருத்தத்தால் ஆன 120 பாசுரங்களைக் கொண்டது. அதோடு **"ஓதுவார் உள்ளத்தில் உணர்ச்சியைக் கிழந்தெளச் செய்யும் பான்மையது" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.172)** என்கிறார் ந.சுப்புரெட்டியார். மேலும் இது நாலாயிரத் திவ்வியப்

பிரபந்ததில் தனிச்சிறப்பு பெற்ற நிலையில் முதலாயிரத்தில் பெருமாள் திருமொழியினை அடுத்து இடம்பெற்றுள்ளது என்பதனையும் சுட்டிக்காட்டுகிறார்.

இவரின் அடுத்த நூலான "**நான்முகன் திருவந்தாதிப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், 96 வெண்பாக்களால் அமைந்ததோடு 'இயற்பா' தொகுதியில் முதலாழ்வார் பிரபந்தங்களையடுத்து இடம் பெற்றிருக்கும் சிறப்புடையது" (ஆழ்வார்களின், ஆராஅமுது, ப.172)** என்ற கருத்தினையும் பதிவு செய்கிறார்.

ஆக மொத்தம் **216** பாசுரங்களால் அமைந்த திருமழிசையாழ்வாரின் அருளிச் செயல்களுள் தாம் அனுபவித்து மகிழ்ந்த பாசுரங்களின் தன்மைகளை மிக அழகாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்து திருமழிசையாழ்வாரின் சிறப்பியல்புகளைப் போற்றுகிறார்.

திருவேங்கடத்தின் சிறப்பு

திருமழிசையாழ்வார் வைணவத் திருத்தலங்கள் பலவற்றினை மங்களாசாசனம் செய்திருந்தாலும் திருவேங்கடத்தினை மங்களாசாசனம் செய்து அனுசந்திக்கும் நயம் மிக அற்புதமானது என்பதை,

"வெற்பென்று வேங்கடம் பாடினேன் வீடாக்கி
நிற்கின்றேன்" (நான்., திரு., 40)

என்ற பாசுரத்தில் பசு, மலை, குருவி மலை என்றெல்லாம் பல மலைகளின் பெயர்களைச் சொல்லும் அடைவிலேயே திருவேங்கட மாமலை என்பதும் திருமழிசையாழ்வாரின் வாயில் வந்து விட்டதென்றும், அதன் காரணமாகவே அவருக்கு பரமபதமும் சிந்தித்து விட்டது என்பதனையும் சுட்டிக்காட்டுகிறார் ந. சுப்புரெட்டியார்.

திருமழிசையாழ்வாரின் இந்த அனுபவமே தம்மையும் அம்மலைக்குச் சென்று வணங்குமாறு ஆற்றுப்படுத்தியதை,

"சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை
நின்று வினைகெடுக்கும் நீர்மையால்" (நான்., திரு., 42)

என்ற திருமழிசையாழ்வாரின் பாசுரத்தால் அனுபவித்து உணர்ந்ததையும் உறுதிப்படுத்துகிறார். இவை மட்டுமின்றி,

"வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதும்" (நான்., திரு., 81)

"வேங்கடம் அமைந்த மால்பதமே அடைந்து
நாளும் உய்மினோ" (திருச்., விருத்., 81)

"தண்ணருவி வேங்கடமே
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" (நான்., திரு., 45)

ஆகிய பாசுரங்களில் திருவேங்கடத்தினை அனுபவித்து அருளிச் செய்திருப்பதிலிருந்து திருவேங்கடத்தின் சிறப்பை உணர்த்துகிறார்.

கிருஷ்ணாவதார மகிமை

திருமாலின் தசாவதாராத்தில் அனைத்து ஆழ்வார்களும் கிருஷ்ணாவதாரத்தில் ஆழங்கால்பட்டிருந்தாலும் திருமழிசையாழ்வார் இவ்வவதாரத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார் எனக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் வான்மீகி கூறாத கூனியின் முதுகில் உருண்டை கொண்டடித்த நிகழ்ச்சி இவர் பாசுரங்களில் மட்டும் காணப்பெறுவது தனிச்சிறப்பு என்பதை,

“கூன் அகம் புகத்தெறித்த

கொற்றவில்லி அல்லையே” **(திருச்., விருத்., பா. 30)**

என்ற பாசுரத்திலும்,

“கொண்டை கொண்ட கோதைமீது

தேனுலாவு கூனிகூன்

உண்டை கொண்டு அரங்க ஒட்டி

உள்மகிழ்ந்த நாதன்” **(திருச்., விருத்., பா. 49)**

என்ற பாசுரத்திலும் சுட்டிக்காட்டியிருப்பது திருமழிசையாழ்வாரின் அருளிச் செயல்களுக்குப் பெருமை சேர்ப்பதாய் அமைந்திருப்பதை வலியுறுத்துகிறார்.

தமிழ்ப் பற்றில் சிறந்தோங்கிய நிலை

திருமழிசையாழ்வார் திருமால் பற்றினை ஒப்பவே தமிழ் மொழியின் மீது பற்றுள்ளவாராய் இருந்ததைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார்,

“நற்றமிழை வித்தியென் உள்ளத்தை நீவிளைத்தாய்

கற்றபொழி யாகிக் கலந்து” **(நான்., திருவந்., 81)**

என்ற பாசுரத்தில், **“நெஞ்சில் நினைக்கவும் முடியாத ஞானச் சக்திகளையுடையவனான நீ என்னுடைய வாக்கில் வரும் சொற்களுக்குப் பொருளாய் இருந்து கொண்டு என்னுடைய நெஞ்சமாகிய நிலத்திலே தமிழாகின்ற விதையை விதைத்துப் பக்தியாகின்ற பயிர் செழித்து விளையும்படி செய்தனையாதலால் நான் நிலமுடையேனாயினேன் என்கிறார்” (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.178)** என்று திருமழிசையாழ்வாரின் மொழிப்பற்றைப் பதிவு செய்துள்ளார். அதோடு மட்டுமின்றி இத்தன்மையால்தான் திருமழிசையாழ்வார் எம்பெருமானை ‘பக்தியுழவன்’ என்ற திருநாமமிட்டு,

“வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விடையடர்த்த

பக்தியுழவன் பழம் புனத்து” **(நான்., திருவந்., 23)**

என்ற பாசுரத்தில் அனுபவித்து மகிழ்வது அவரின் ஆழ்ந்த தமிழ்ப் பற்றினை உணர்த்துகிறது என்று கூறித் தெளிவுபடுத்துகிறார்.

திருமால் பெருமை

திருமாலே முழுமுதற்கடவுள் என்பதைத் தனது அருளிச் செயல்களில் பரக்கப் பேசுவதால் திருமழிசையாழ்வார் தனிச்சிறப்பு பெறுகிறார் என்பதை ந.சுப்புரெட்டியார் **“ஆதிதேவன், தேவதேவன், பூமிநாதன், ஆழிமேனி மாயன், புண்டரீகன், பற்பநாபன், மேக வண்ணன் (திரு., சந்., விரு–17, 22, 24, 33,**

39, 43, 48, 55, 57, 75) என்றெல்லாம் குறிப்பிட்டு திருமாலே முழுமுதற் கடவுள் என்று நிலை நாட்டுகின்றார்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.180) என்று கூறித் தெளிவு படுத்துகிறார்.

அதோடு தனது நான்முகன் திருவந்தாதியிலும் இக்கருத்தையே வலியுறுத்தும் பாங்கினை,

"தேருங்கால் தேவன்

ஒருவனே என்றுரைப்பர்

ஆகும் அறியார் அவன் பெருமை" (நான்., திருவந்., 2)

"நிற்கின்ற தெல்லாம்

நெடுமால் என்று ஓராதார்

கற்கின்ற தெல்லாம் கடை" (நான்., திருவந்., 54)

என்ற பாசுரங்களிலெல்லாம் புலப்படுத்துவதால் அறிய முடிகிறது என்று கூறும் ந.சுப்புரெட்டியார்,

"நீயே உலகு எல்லாம்;

நின் அருளே நிற்பனவும்

நீயே தவத்தேவ தேவனும்" (நான்., திருவந்., 20)

"கல்லா தவர்இலங்கை

கட்டழித்த காகுத்தன்

அல்லால் ஒருதெய்வம்

யான் இலேன்" (நான்., திருவந்., 53)

ஆகிய பாசுரங்களிலெல்லாம் அனைத்தும் கடவுள் மயம் என்பதனை வலியுறுத்தி திருமாலின் பெருமையினை எடுத்தியம்பியுள்ளார்.

"நின்றதும் இருந்ததும்

கிடந்ததும் என் நெஞ்சுகளே" (திருச்., விருத்., பா. 64)

என்ற பாசுரத்தில் ஊரகத்தில் நின்ற கோலத்திலும், பாடகத்தில் இருந்த கோலத்திலும், வெஃகாவில் சயனக் கோலத்திலும் இருந்த திருமால் தனது நெஞ்சத்தினையே திருமலையாகவும், பரமபதமாகவும், பாற்கடலாகவும் கொண்டு நிற்பதும் இருப்பதும் கிடப்பதுமாகக் காட்சி தருகின்றான் என்றெல்லாம் திருமாலைத் துதிப்பதிலிருந்து அவரது அருளிச் செயலின் மகத்துவத்தினை உணர முடிகிறது என்று தெளிவுபடுத்துகிறார்.

ஆண்டாளின் அருளிச் செயல் அனுபவங்கள்

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளான ஆண்டாளுக்கு பெரியாழ்வாரைக் காட்டிலும் திருமாலின் மீது இருந்த அதிக ஞானப் பக்தி வியக்கத் தகுந்தது என்று கூறும் ந.சுப்புரெட்டியார் இளம் வயதிலேயே **"கோதைப்பிராட்டியின் பக்தி காதலாக பரிணமித்து, வயது ஏறயேற இவளுடைய பக்திக் காதல் அதிகரித்துக் கொண்டே வந்தது" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.6)** என்று சுட்டிக்காட்டுவதோடு பெரியாழ்வாரே நற்றாய் நிலையில் இருந்தவாறு,

"காறை பூணும்; கண்ணாடி காணும், தன்

கையில் வளைகு லுங்கும்;

கூறை உடுக்கும்; அயர்க்கும்; தன்

கொவ்வைச்செவ் வாய்தி ருத்தும்;

தேறித் தேறிநின்(று) ஆயிரம் பேர்த்

தேவன் திறம்பி தற்றும்;

மாறில் மாமணி வண்ணன் மேலிவள்

மால்உறு கின்றாளே" (பெரியாழ்., திரு., 3:7:8)

என்ற பாசுரத்தில் சுட்டிக்காட்டுவதிலிருந்து அறிய முடிகிறது என்கிறார்.

திருமாலின் மீதுள்ள பக்திக் காதலால் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் மிக்க சிறப்பு வாய்ந்தனவாய்த் திகழ்கின்றன என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

திருப்பாவை

ஆண்டாள் அருளிய திருப்பாவையில் உள்ள மொத்த பாசுரங்களின் எண்ணிக்கை முப்பது. இப்பாசுரங்கள் அனைத்தும் தனிச்சிறப்பு பெற்றிருக்கும் நிலையினை விளக்கும் ந.சுப்புரெட்டியார் இத்திருப்பாவையினை மூன்று பகுதியாக விளக்கி, "**முதற்பகுதியாகிய முதல் ஐந்து பாசுரங்களும் பாயிரமாக அமைந்து நூலில் உயிர்நிலை மற்றும் நூற்பொருளைத் தெளிந்து காட்டும் ஆடி போன்றது. இரண்டாம் பகுதியாகிய ஆறு முதல் பதினைந்து வரையுள்ளப் பாசுரங்கள் ஆழ்வார்கள் பன்னிருவருக்கும் ஊக்கமூட்டி உள்ளுறைப் பொருள் அமைந்தவண்ணம் இருக்கிறது. மூன்றாம் பகுதியான பதினாறு முதல் முப்பது வரையிலான பாசுரங்கள் ஆய மகளிரை எம்பெருமானின் கையங்கரியத்திற்குத் தகுதியுடையவராகச் செய்யும் சிறப்பு மிக்கது" (ஆழ்வார்களின் ஆராஅமுது, பக்.19–20)** என்றவாறு காட்சிப்படுத்துகிறார்.

அதோடு இத்திருப்பாவையின் முப்பது பாசுரங்களிலும் வைணவத் தத்துவத்தினை ஆண்டாள் மிகச் சிறப்பாகக் கையாண்டிருப்பது தனிப்பெருமை மிக்கதாய் அமைந்துள்ளதனையும் ந.சுப்புரெட்டியார் எடுத்துரைக்கிறார்.

அர்த்த பஞ்சக நெறியினை எடுத்துரைக்கும் விதமாக "**திருப்பாவையின் முதல் ஐந்து பாசுரங்கள் இறைவனின் இயல்புகளை பாசுரத்தில் பரத்துவமும், இரண்டாவது பாசுரத்தில் வியூகமும், மூன்றாவது பாசுரத்தில் விபவமும், நான்காவது பாசுரத்தில் பரத்துவமும், ஐந்தாவது பாசுரத்தில் விபவமும் காட்டப்பெறுகின்றன" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.22)** என்று எடுத்துரைக்கிறார். அதோடு இரண்டாம் பாசுரத்தில் பகவானை மனதில் பாவித்துக் கொண்டிருக்கும் அந்தர்யாமித்துவமும், அர்ச்சை செய்யும் கிரியைகள் ஆகியவற்றால் ஏனைய இரண்டு தெரிவிக்கப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார், "**இவற்றில் ஐந்து திருமேனிகள் காட்டப் பெற்றதால் ஈசுவர சொரூபம் விளக்கமாயிற்று" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.22)** என்று எடுத்துக்காட்டித் தெளிவுபடுத்துகிறார்.

ஆறாம் பாசுரத்திலிருந்து பதினைந்தாம் பாசுரம் வரையில் ஆன்ம சொரூப நிலையானது விளக்கப்படுவதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார். இப்பாசுரங்களில், "**பகவானை மறந்து, அவனை அடைவதற்குச் செய்ய வேண்டிய முயற்சிகளையும் மறந்து கிடக்கும் ஆன்ம சொரூபமும், சீவகர்கள்**

மாயையினால் பிரகிருதி நிஷ்டையில் உறங்கிக் கிடப்பதால் உபாய விரோதி சொரூபம் தெரிவிக்கப் பெறுகின்றன" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.22) என்பதை வரையறை செய்வதோடு அவற்றினை வரிசைப்படுத்தி,

"புள்ளும் சிலம்பின் காண், புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ ?" (திருப்பாவை–6)
"கீசு கீசு என்று எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து
பேசின பேச்சு அரவம் கேட்டிலையோ ?" (திருப்பாவை–7)
"கோதுகலம் உடைய பாவாய் எழுந்திராய்" (திருப்பாவை–8)
"மாமீர் அவளை எழுப்பீரோ" (திருப்பாவை–9)
"கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகர்ணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயில் தான் தந்தானே ?" (திருப்பாவை–10)
"எற்றுக்கு உறங்கும் பொருளே" (திருப்பாவை–11)
"இனித்தான் எழுந்திராய், ஈதென்ன பேருறக்கம்" (திருப்பாவை–12)
"பள்ளிக் கிடந்தியோ ? பாவாய் நீ!" (திருப்பாவை–13)
"எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய்" (திருப்பாவை–14)
"எல்லை ! இளங்கிளியே ! இன்னம் உறங்குதியோ !" (திருப்பாவை–15)

ஆகிய பாசுரங்களிலெல்லாம் உறங்குகின்ற விரோதி சொரூப தன்மை காட்டும் ஆண்டாளின் அருளிச் செயல்கள் தனித்துவம் வாய்ந்திருப்பதனை தெளிவாக்குகிறார்.

பதினாறாம் பாசுரத்திலிருந்து இருபதாம் **(16–20)** பாசுரம் வரை உள்ள பாசுரங்களால் இரட்சகத்துவம் உணர்த்தப்படும் நிலையினைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார், **"சம்சாரக் கடலில் மூழ்கித் தம்மை மறந்து கிடக்கும் சீவகர்களை மறந்து பகவான் தன்னை அடைந்த நித்திய மூக்தர்களிடையே மயங்கியவனாய் உறங்கிக் கிடப்பதை உணர்ந்து அவனை எழுப்புவது உணர்த்தப் பெறுகின்றது" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.23)** என்று கூறி ஆண்டாள் தனது பாசுரங்களால்,

"ஓங்கி உலகளந்த உம்பர் கோமானே
உறங்காது எழுந்திராய்" (திருப்பாவை–17)
"கொத்து அலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா ! வாய் திறவாய்" (திருப்பாவை–19)
"செற்றார்க்கு வெப்ப கொடுக்கும் விமலா துயிலெழாய்" (திருப்பாவை–20)

என்றெல்லாம் சிறப்பித்திருப்பதினால் இறைவனாகிய திருமாலை எழுப்பி அவனுடைய இரட்சகத்துவத்தை அவனுக்கு நினைவூட்டும் சிறப்பாய் அமைந்திருப்பதனை காட்டிக் காட்டித் தெளிவுபடுத்துகிறார்.

இருபத்தொறாம் பாசுரத்திலிருந்து இருபத்தைந்தாம் பாசுரம் வரையுள்ள பாசுரங்களில் பிரபத்தி நிலை உணர்த்தப்படுவதனைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார்,

“மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற்கண்

ஆற்றாது வந்து உன்அடி பணியுமா போலே

போற்றியாம் வந்தோம்” **(திருப்பாவை–21)**

“அங்கன் மாஞாலத்து அரசர் அபிமான

பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற் கீழே

சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்” **(திருப்பாவை–23)**

ஆகிய பாசுரங்களால் ஆன்மாக்களின் கையற்ற நிலை உணர்த்தப்படுவதனையும்,

“என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்” **(திருப்பாவை–24)**

“அருந்தித்து வந்தோம்” **(திருப்பாவை–25)**

ஆகிய பாசுரங்களில் பிரபத்தி நிலையினைச் சுட்டிக் காட்டியிருப்பதும் தனிச்சிறப்புப் பெறுகின்றன என்கிறார்.

இப்பிரபத்தி நெறி குறித்துக் குறிப்பிடும் முனைவர் இரா.இராஜகோபாலன், **“இறைவனை ஆன்மா அடையும் ஐந்து நெறிகளில் விசிட்டாத்துவைதம் சிறப்பாகப் பெரிதும் போற்றுவது பிரபத்தி என்ற சரணாகதி நெறியே” (நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் சரணாகதி நெறி, ப.109)** என்று சுட்டிக்காட்டுவதற்கேற்ப ஆண்டாளின் திருப்பாவையில் காணப்படும் பிரபத்தி நிலையினை உணர்த்தும் பாசுரங்களை விளக்கிக் காட்டும் தன்மையினால் ந.சுப்புரெட்டியார் ஆண்டாளின் அருளிச் செயல்களுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் என்பதும் புலனாகிறது.

திருப்பாவையின் இருப்பத்தாறு முதல் முப்பது வரையிலான பாசுரங்கள் மோட்ச பிராப்தி நிலையான கைங்கர்யத்தினைச் சுட்டிக்காட்டுவதாய் எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார்,

“சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே

பாடகமே, என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்” **(திருப்பாவை–27)**

என்ற பாசுரத்தில் கண்ணனைக் காண்பதே மோட்சமாகும். அவ்வாறு கண்ணனைக் காணும் நோன்பிற்குத் தேவையான சூடகம் முதலானப் பொருட்களை ஆண்டாள் பட்டியலிட்டுக் காட்டி இருப்பது ‘மோட்ச பிராப்தி’ நிலையினை உணர்த்துவதற்காகத்தான் என்றும்,

“அறிவு ஒன்றும் இல்லாத ஆய்குலத்து உன்றன்னைப்

பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்” **(திருப்பாவை–28)**

“உற்றாமே ஆவோம்! உனக்கே நாம் ஆட்செய்வோம்” **(திருப்பாவை–29)**

ஆகிய பாசுரங்களினால் ஆண்டாள் திருமாலுக்கு கைங்கர்யம் செய்யும் மோட்ச பிராப்தி நிலையில் முன்னிலை வகிப்பதனை சுட்டிக்காட்டித் தெளிவு படுத்துகிறார்.

நாச்சியார் திருமொழி

ஆண்டாளின் அருளிச் செயல்களில் 143 பாசுரங்கள் கொண்டதாய் அமைந்திருப்பது நாச்சியார் திருமொழியாகும். இத்திருமொழியில் திருமாலைத் தவிர வேறெவரையும் கலவாதிருத்தல், இறைவனின் ஆண்மையிலும் தம் பெண்மையிலும் இடையறாது மனத்தைச் செலுத்துதல், தன் ஆன்மாவின் பெண்மை நிலைக்குத் தவச்செயல் புரிதல் ஆகிய பண்புகள் திகழ்வதைக் காணமுடிகிறது எனக்கூறும்

ந.சுப்புரெட்டியார் ஏனைய ஆழ்வார்கள் திருமாலை நாயகனாகக் கொண்டும் தம்மை நாயகியாகக் கொண்டும் பாசுரங்கள் இயற்றியிருந்தாலும் அவை இயற்கைக்கு மாறானது. அவ்வாழ்வார்கள் திருமாலிடம் செலுத்திய அன்பு மேட்டு மடைநீர் போன்றது. ஆனால் பெண்பாலராய்ப் பிறந்த ஆண்டாள் வேறெதனையும் ஏறிட்டுக் கொள்ளாமல் அழகிய மணவாளனான திருமாலைத் தம் நாயகனாக வரித்துக் கொண்டு அவன்பால் உள்ளுருகிச் செலுத்தும் இயற்கையான காதலுணர்வு பள்ளமடை நீர் போன்றதென்று வைணவப் பெரியோர்கள் கூறுவதை எடுத்துரைத்து நாச்சியார் திருமொழியின் சிறப்பினை, **“இஃது உபாய நூல் ஆயினும், திருப்பாவையில் உபாயமும், நாச்சியார் திருமொழியில் உபாயமும் இல்லாமல் போகாது. இரண்டிலும் மிகுதியான பகுதியைக் கொண்டே இங்ஙனம் வரையறுத்துக் கூறப்பெற்றது” (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.29)** என்று அறிதல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

ஆண்டாள் அளப்பறிய காதலினால் திருமாலைத் தவிர வேறு எவரையும் கலவாதிருக்கும் நிலையுணர்த்தும் அருளிச் செயல்களினை வரிசைப்படுத்தும் ந.சுப்புரெட்டியார்,

“என்னாகத் திளங் கொங்கை
விரும்பித்தாம் நாடோறும்
பொன்னாகம் புல்குதற்கு
என்பிரிவுடைமை செப்புமினே” (நாச்., திரு., 8:4)

என்ற பாசுரத்தில் ஆண்டாள், **“சிறுபிள்ளைகள் ஒரு பொருளின் மீது விருப்பம் கொள்ளும்போது பெற்றோர்கள் எவ்வளவு சமாதானப்படுத்தினாலும் அவர்கள் விரும்பிய பொருள் கிடைக்கும் வரை சமாதானமாவதில்லை. அதனைப் போலவே என் இளங்கொங்கைகள் எம்பெருமானுடன் அணைய வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கின்றன”** என்று கூறுவதனைச் சுட்டிக்காட்டி, **“சொற்கேளாத பிள்ளைகள் போலே பாய்ந்து முலைகளின்படி என்பது வியாக்கியான வாக்கியம்” (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.40)** என்று கூறி தெறிவு படுத்துகிறார். அதோடு மட்டுமின்றி,

“உலங்குண்ட விலங்கனிபோல்
உள்மெலியப் புகுந்தென்னை
நலங்கொண்ட நாரணற்குஎன்
நடலைநோய் செப்புமினே” (நாச்., திரு., 8:6)

என்ற பாசுரத்தில், உலங்கு எனப்படும் பெருங்கொசுக்கள் விளாம்பழத்தில் மொய்த்தால் அப்பழத்தின் சாறெல்லாம் துவறிப்போய் விடுவதனைப்போல் என் உடம்புடன் அணைந்து என் ஆற்றல் முழுவதையும் கொள்ளை கொண்ட பெருமானுக்கு நான் இங்ஙனம் நோவு பட்டுக் கிடக்கும் நிலையை எடுத்துக் கூறுங்கள் என்று கூறுவதாலும்,

“கொங்கைமேல் குங்குமத்தின்
குழம்பழியப் புகுந்து ஒரு நாள்
தங்குமேல் என்ஆவி
தங்குமென்று உரையீரே”(நாச்., திரு., 8:7)

என்ற பாசுரத்தில், திருமாலாகிய எம் பெருமான் தன்னுடன் கலவி செய்ய வருவாரென்று நம்பி முலைத் தடங்களில் குங்குமக் குழம்பு பூசி அணி செய்து வைத்துள்ளேன்; அதனைப் பயனுடையதாகும்படிச் செய்வாராகில் தரிக்கலாம் என்று சொல்லுங்கள் என்று கூறுவதாலும் சுட்டிக் காட்டும் ந.சுப்புரெட்டியார், "ஆவி தங்கும்" என்ற சொல்லின் நயத்தினையும் விவரிக்கிறார்.

"ஒருநாள் அணைவது போகத்துக்கும் போதாது; அஃது உயிர் தரிப்பிற்கே சாலும்" (ஆழ்., ஆரா அமுது., ப.41) என்ற குறிப்பு அறிந்து மகிழத்தக்கது என்று கூறி, ஆண்டாள் திருமாலிடம் கலந்திருக்க விரும்பும் நிலையினைத் தெளிவாக்குகிறார்.

இறைவனின் ஆண்மையிலும் தம் பெண்மையிலும் மனத்தை ஒருமைப்படுத்தும் பண்பில் மேலோங்கி இருக்கும் ஆண்டாளின் அருளிச்செயல் அனுபவத்தினை விளக்கும் ந.சுப்புரெட்டியார்,

"கர்ப்பூரம் நாறுமோ ? கமலப் பூ நாறுமோ ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச் சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே" (நாச்., திரு., 7:1)

என்ற பாசுரத்தில் ஆண்டாள் தமது பெண்மை நிலையிருந்து, காதல் மெருகேறிய நிலையில் ஆற்றாமை உணர்வால் சங்கிடம் வினவியிருக்கும் மாண்பும்,

"தான்கொண்ட சரிவளைகள்
தருமாகில் சாற்றுமீனே" (நாச்., திரு., 8:5)

என்ற பாசுரத்தில் திருமாலின் மன ஈடுபாட்டை அறிந்து கொண்டு தன் நிலையைத் தெரிவிக்குமாறு வேண்டுதல் விடுக்கும் குறிப்பும் புலனாவதிலிருந்து, **"அவன் தரிலும் தருகின்றான், தவிரிலும் தவிர்க்கின்றான் என்ற வியாக்கியான வாக்கியம் அனுபவித்து மகிழத் தக்கது" (ஆழ்வார்களின் ஆரா அமுது, ப.40)** என்று தெளிவுபடுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்.

இதிலிருந்து இறைவனாகிய திருமாலின் ஆண்மைக்கு மட்டும் மனமுவந்து அடிபணிந்த ஆண்டாளின் பெண்மை நிலையின் மகத்துவத்தினைப் புரிந்து கொள்ள முடிகிறது.

தன் ஆன்மாவின் பெண்மை நிலைக்குத் தகுந்த செயல்புரிந்த தன்மையில் சிறந்தோங்கி விளங்கும் ஆண்டாளின் அனுபவத்தினை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் திருமாலுக்காக ஏங்கி நிற்கும் ஆண்டாள் திருமாலிருஞ்சோலைப் பெருமானைக் குறித்த பாசுரமொன்றில்,

"மதயானை போல் எழுந்த
மாமுகில் காள் ! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள் !
பாம்பணையான் வார்த்தை என்னே
கதியென்றும் தானாவான்
கருதாதோர் பெண் கொடியை
வதை செய்தான் என்னும் சொல்
வையகத்தார் மதிவாரே" (நாச்., திரு., 8:9)

என்றவாறு பெண்மைக்கு உண்டான இடித்துரைக்கும் நிகழ்வினைப் பறை சாற்றிப் பாம்பணையைக் கைவிட்டுத் திருமதுரையில் வந்து பிறந்த கண்ணபிரான் தேர்த்தட்டில் நின்று சொன்ன சரமசுலோகத்தை உண்மையென்று நம்பி மோசம் போய்விட்டேன். பாம்பினோடு அணைந்து கிடப்பதாலேயே பாம்பினைப் போலவே இரட்டை நாக்கு பெற்ற பொய்யனாகி விட்டான் என்று உரிமையோடு இடித்துரைக்கும் பண்புடையவளாகின்றாள் என்பதனைச் சுட்டிக் காட்டுவதோடு திருமாலிருஞ்சோலை மலைத் திருமாலை பற்றிய பாசுரமொன்றில்,

"நாறு நறும்பொழில்மா

லிருஞ்சோலை நம்பிக்கு நான்

நூறு தடாவில் வெண்ணெய்

வாய் நேர்ந்து பராவி வைத்தேன்

நூறு தடா நிறைந்த

அக்கார வடிசில் சொன்னேன்

ஏது திருவுடையான்

இன்று வந்திவை கொள்ளுங்கொலோ" (நாச்., திரு., 9:6)

என்றவாறு சோலைகளாலே சூழப்பெற்ற திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு அக்கோரவடிசிலும் வாசிக கைங்கரியமாகச் சமர்ப்பிக்கிறேன். அவற்றை அவ்வெம்பெருமான் திருவுள்ளம் பற்றுவானோ? என்று தனக்காக உண்டான பெண் தன்மையில் உணர்த்துவதனைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார், கோயில் அண்ணன் என்ற அழைக்கப்படும் இராமாநுசருக்கும், இப்பாசுரத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதனையும் விளக்குகிறார்.

நாச்சியார் திருமொழி காலச்சேபம் நடத்தும்போதும் இப்பாசுரச் சிறப்பினை உணர்ந்து, **"ஆண்டாளுடைய எண்ணம் சொல்லளவில் நின்றதேயொழிய செயலில் முடிந்ததாக இல்லை. அதனை நாம் தலைகட்ட வேண்டும் என்ற ஆவலில் திருமாலிருஞ்சோலை மலைக்கு எழுந்தருளி நூறு தடா நிறைந்த வெண்ணெயும், நூறு தடா நிறைந்த அக்கார வடிசிலும் அழகருக்கு அமுது செய்தருளினார். அங்கிருந்தவாறே சீரிவில்லி புத்தூருக்கும் எழுந்தருளி ஆண்டாளை வணங்கி நிற்க, தன் நினைவறிந்து இவர் ஆற்றிய செயலுக்கு மனமுகந்து நம் அண்ணரே! என்று சொல்லி அர்ச்சாவதார சமாதியையும் கடந்து ஏழடி நடந்து உடையவரைத் தழுவிக் கொண்டாள் என்று பெரியோர் பணிப்பர்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.43)** என்று கூறி தெளிவாக்கி அப்பாசுரத்தில் தம் மனதினைப் பறிகொடுக்கிறார் ந.சுப்புரெட்டியார்.

இவ்வாறாக நாச்சியார் திருமொழியின் முதல் திருமொழியிலிருந்து இறுதித் திருமொழியான பதினான்காம் திருமொழி வரையிலும் ஆண்டாளின் அருளிச்செயல் அனுபவங்கள் வியக்கத்தக்கத்தாய் இருக்கிறது என்பதனைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் இறுதித் திருமொழியாகிய பதினான்காம் திருமொழியில் ஆண்டாள் பெண்மை நிலையில் இருந்து பட்ட வருத்தமெல்லாம் தீரும்படி கண்ணபிரான் வந்து சேவை தந்தருளிய நிலையினைக் கருத்தாக்கம் கொண்ட தன்மையில் நம்மாழ்வாரின் "என் அவவறச் சூழ்ந்தாயே" (திருவாய்–10:10:10) என்ற பாசுரத்தில் நம்மாழ்வார் அனுபவித்த பேற்றினை இந்

நாச்சியார் திருமொழியின் இறுதித் திருமொழியாகிய பிருந்தாவனத்தில் கண்ணனைக் கண்ட நிகழ்வாக ஆண்டாள் எடுத்துரைத்த பாசுரங்கள் விளங்குகின்றன என்கிறார்.

திருப்பாணாழ்வாரின் அருளிச் செயல் அனுபவங்கள்

பாணர் குலவிளக்கு என்று போற்றப்படும் திருப்பாணாழ்வார் திருவரங்கத்திற்கு அருகிலுள்ள காவிரியின் தென்கரையில் சோழநாட்டின் தலைநகரான உறையூரில் பிறந்தவர். பெரும்பாலும் பாணர் குலத்தினர் நகருக்கு வெளியே ஒதுக்குப்புறமாகக் குடில்கள் அமைத்து வாழும் தன்மையுடையவர். அக்காலத்தில் இக்குல மக்களைத் தீண்டத் தகாதவர் என நகரினர் ஒதுக்கியே வைத்திருந்தாலும், தன் குலத்திற்கே பெருமை சேர்க்கும் விதமாய் யாழையே தெய்வமாகப் போற்றி வாழ்ந்த மரபை மீறித் திருமாலைத் தெய்வமாகக் கொண்டு அவர் மீதுள்ள பேரன்பினால் அக்கால சமூக நிலைப்படி இவர் மனம் தாழ்வுணர்ச்சியால் பீடிக்கப் பெற்றிருந்தாலும் திருவரங்கப் பெருமானுக்குத் துதி செய்வதிலேயே காலம் கழித்துத் தனிச்சிறப்பு பெற்று விளங்கினார். அவ்வாறு இவர் திருமாலுக்கு அருளிச் செய்த 'அமலனாதி பிரான்' என்ற பிரபந்தம் மிகச் சிறப்புடையதாக அமைந்திருக்கிறது என்பதை ந.சுப்புரெட்டியார்,

"கரு அரங்கத் துள்கிடந்த
கைதொழுதேன்; கண்டேன்
திருவரங்க மேயோன் திசை" (முதல் திருவந்., 6)

என்ற பாசுரத்தில் பொய்கையாழ்வார் கூறுவதுபோல் **"திருவரங்கப் பெருமானே இவருக்கு தாரக, போசக, போக்கியமாக அமைந்துவிட்டான்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.51)** என்று கூறி பாணர் குலத்திற்கு மட்டுமின்றி பக்திக் குலத்திற்கும் பெருமை சேர்த்தவர் திருப்பாணாழ்வார் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

அமலனாதி பிரானின் சிறப்பினைப் பற்றிக் குறிப்பிடும் முனைவர் இரா. வ.கமலக்கண்ணன் ஆசிரியத் துறையில் அமைந்த இப்பிரபந்தத்தின் பத்து பாசுரங்களும் தனிச்சிறப்பு பெற்றிருக்கும் நிலையினை **"முதல் பாசுரம் 'அமலன்' என்றும், இரண்டாம் பாசுரம் 'உவந்த' என்றும், மூன்றாம் பாசுரம் 'மந்தி பாய' என்று தொடங்குவதால் இம்மூன்று பாசுரங்களின் முதல் எழுத்துக்கள் 'அ.உ.ம.' என்ற பிரணவத்தை ஒலிக்கச் செய்கின்றன. ஐந்தாம் பாசுரம் 'பாரமாய' என்றும், ஆறாம் பாசுரம் 'துண்டவெண் பிறையன்' என்றும், ஏழாம் பாசுரம் 'கையினார்' என்று தொடங்கி இம்மூன்று எழுத்துக்களும் 'பாதுகை' எனப்படும் பிரணவத்தால் அடைகின்ற பேற்றினைக் குறிப்பதாய் அமைகிறது." (நாலாயிரத் திவ்யப் பிரபந்த மூலமும், தெளிவுரையும், ப.64)** என்று எடுத்துக்காட்டி, மற்ற பாசுரங்களிலும் பெருமாளின் பெருமையைப் பாடிச் சிறப்பு செய்திருப்பதனை வலியுறுத்துகிறார்.

அமலனாதி பிரான்

திருப்பாணாழ்வார் அருளிச் செய்த அமலனாதி பிரான் எனும் பிரபந்தம் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்பரெட்டியார், **"இப்பிரபந்தம் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் முதலாயிரத்தின் இறுதியில் மதுரகவிகள் அருளிச் செய்த 'கண்ணி நுண் சிறுத்தாம்புக்கு' முன்னர் இடம் பெற்றுள்ளது. இத்திவ்யப் பிரபந்தத்திற்கு பெரிய வாச்சான் பிள்ளையும், அழகிய மணவாளப் பெருமாள்நாயனாரும் மணிப்பிரவாள**

நடையில் சிறந்த வியாக்கியானங்கள் அருளிச் செய்துள்ளனர்." (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.60) என்று கூறுவதோடு இப்பிரபந்தம் வேதாந்திகள் கூறும் அனைத்துப் பலன்கட்கும் விதையாக நின்று பலன் தரும் சிறப்புடையது என்பதை,

"வேதியர் தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம்

விதையாகும் இதுவென்று விளம்பினோமே" (தே.பி., 131)

என்ற பாசுரத்தில் வேதாந்த தேசிகர் எடுத்துரைப்பதிலிருந்து இக்கருத்து புலனாகிறது என்பதைச் சுட்டுகிறார். அதோடு மட்டுமின்றி திருப்பாணாழ்வார் அருளிச் செய்த இப்பிரபந்தம் 'தமிழ் வேதம்' எனப்படும் நாலாயிரத்தின் சாரம் முழுவதும் அடங்கிய பெருமை பெற்றது என வைணவச் சான்றோர்கள் கூறுவதற்கேற்ப,

"பாவளரும் தமிழ் மறையின் பயனே கொண்ட

பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்து" (தே.பி., 130)

என்ற வேதாந்த தேசிகரின் பாசுரத்தினைச் சுட்டிக் காட்டி திருப்பாணாழ்வாரின் அருளிச் செயல் சிறப்பினை வலுப்படுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்,

இத்தகு சிறப்பு மிக்க அமலனாதி பிரானினின் பாசுரங்களில் திருப்பாணாழ்வாரின் அனுபவத்தில் தம் மனம் தோய்ந்து அனுபவித்த நெகிழ்வுகளை விமரிசையாக எடுத்தியம்பும் ந.சுப்புரெட்டியார் முதற் பாசுரம் பெருமாளின் திருவடியிலிருந்தே தொடங்கும் சிறப்பு பெற்ற நிலையினை,

"கமல பாதம் வந்து என்

கண்ணின் உள்ளன ஒக்கின்றதே" (அம., பிரான்–1)

என்ற பாசுரத்தில் பெருமாளின் திருவடியழகே திருப்பாணாழ்வாரின் மீது அலைபாய்ந்து அவரைப் பரவசமாக்கிய நிலையிலைச் சுட்டிக்காட்டுவதால், **"வைணவக்கட்டு எம்பெருமானின் திருவடிப் பேறே அடையத் தக்க குறிக்கோள் பொருள் என்பது ஈண்டு அறியத்தக்கது" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.63)** என்று மிகத் தெளிவாக அனுபவித்து மகிழ்கிறார் ந.சுப்புரெட்டியார்.

இரண்டாவது பாசுரத்தில் "சிவந்த ஆடையின் மேல், சென்ற தாம் என் சிந்தனையே" (அம., பிரான்–2) என்று கூறுவதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் திருப்பாணாழ்வார் முதல் பாசுரத்தில் 'கமல பாதம்' என்பதையும், இரண்டாவது பாசுரத்தில் 'சென்றதாம் என் சிந்தனை' என்பதையும் நன்கு கவனித்தால் முதலில் எம்பெருமான் ஆழ்வாரை அடிமை கொள்ள மேல் விழுந்த நிலையும், பிறகு ஆழ்வார் பக்தி சுவை கண்டு தாம் எம் பெருமான் மேல் விழுகின்ற நிலையும் தோன்றுவதைக் காணலாம் என்பதை, **"புதிதாக ஈன்ற பசு முலைச் சுவை அறியாத தன் கன்றுக்கு முதலில் தன் முலையை அதன் வாயில் கொடுக்கும்; பின்பு சுவையறிந்தால் பசு உதைத்துக் கொண்டாலும் கன்று தானே அதன்மேல் விழும். அவ்வாறே முதற் பாசுரத்தில் திருவடிகள் தாமே வந்து போக்கியமானவாறு கூறினார். இரண்டாம் பாசுரத்தில் தம்முடைய நெஞ்சு சுவையறிந்து, மேல் விழுமாறு கூறுகின்றார் என்பதை அனுபவித்து மகிழ வேண்டும்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, 63)** என்று சுட்டிக்காட்டி அனுபவித்து மகிழ்கிறார்.

மூன்றாவது பாசுரத்தில் படைப்பிற்கெல்லாம் மூலகாரணமான திருமாலின் உந்திக் கமலத்தினை,

“அந்தி போல் நிறத்து ஆடையும் அதன்மேல்

அயனைப் படைத்த ஓர்எழில்

உந்தி மேலன்றதோ அடியேன்

உள்ளது இன்னுயிரே” (அம., பிரான்–3)

என்ற பாசுரத்திலும் அனுபவித்துக் கொண்டிருக்கும் போதே திருமாலின் உதர பந்தத்தின் மீது திருப்பாணாழ்வாரின் கண்கள் தாவிச் சென்ற நிலையினை,

“மதுரமா வண்டு பாட

மாமதில் ஆடரங்கத் (து)

அம்மான் திருவயிற் (று)

உதர பந்தம் என் உள்ளத்துள்

நின்(று) உலாகின்றதே” (அம., பிரான் –4)

என்ற பாசுரத்தின் மூலம் “**பசுஞ்சோலையில் கடல் வண்ணனாகக் காட்சியளித்து அடியவர்களின் சிரமத்தைப் போக்கும் எம்பெருமானின் ‘உதர பந்தம்’ (waist girdle) என்ற அரைக்கச்சு ஆழ்வாரின் நெஞ்சில் நின்று உலவத் தொடங்குகின்றது. இந்தத் திருமேனி அழகில் இராமனாக அவதரித்து இராவண வதம் செய்தபோது ஏற்பட்ட வீரப் பொலிவும் கலந்து காணப்பெறுகின்றதைக் குறிப்பிடுகின்றார் திருப்பாணாழ்வார்” (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.65)** என்று சுட்டிக்காட்டி விளக்குகிறார் ந.சுப்புரெட்டியார்.

அடுத்த பாசுரத்தில் திருமாலின் மார்பழகினை,

“ஆர மார்பு அது அன்றோ

அடியேனைஆட்கொண்டதே” (அம., பிரான்–5)

என்று அனுபவிப்பதும், அதற்கடுத்த பாசுரத்தில் திருமாலின் திருமார்பின் அழகு அண்டங்களையெல்லாம் திருவமுது செய்தருளின திருக்கழுத்தின் அழகிலே முட்டுவது தனிச் சிறப்பென்பதை,

“அண்ட ரண்ட பகிரண்டத் (து) ஒரு

மாநிலம் எழுமால்வரை, முற்றும்

உண்ட கண்டம் கண்டீர்!

அடியேனை உய்யக் கொண்டதே” (அம., பிரான்–6)

என்ற பாசுரத்தின் வழியாக அனுபவிக்கும் திருப்பாணாழ்வார் அடுத்த பாசுரத்தில் அனைவருக்கும் பாதகமின்றி அபயம் அளிக்கும் பவள வாயின் அழகினை,

“செய்யவாய் ஐயோ! என்னைச்

சிந்தை கவர்ந்ததுவே” (அம., பிரான்–7)

என்றபடி சுட்டிக்காட்டுவதோடு பவள வாயால் சொல்ல முடியாததையும் பேசாத பேச்சாக உணரச் செய்து வருகின்ற திருமாலின் கண்களின் அழகினை,

“கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து

செவ்வரியோடி நீண்ட அப்

பெரியவாய கண்கள் என்னைப்

பேதமை செய்தனவே!" (அம., பிரான்–8)

என்ற பாசுரத்தில் திரப்பாணாழ்வார் வருணித்திருக்கும் கண்ணழகு அற்புதமான கெழுந்தமிழாக வடிவெடுத்திருக்கிறது என்று கூறும் ந.சுப்புரெட்டியார், **"ஓதி, ஓதி, உணர்ந்து உணர்ந்து, இன்புற்று அனுபவித்தால் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு படித் தேனாக இனிக்கும். 'அந்தக் கண்களின் அழகு என்னைப் பைத்தியமாக்கி விட்டதே!' என்பதில் கடல் போலப் பெருகிவரும் இவரது பக்திக் காதலை நாமும் உணர்ந்து அனுபவிக்க முடிகிறது" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.79)** என்று கூறுவதிலிருந்து திருமாலின் அழகில் தமது உள்ளத்தினைப் பறிகொடுத்துப் பாசுரங்களை மிக நேர்த்தியாக அனுபவித்திருப்பதும் புலனாகிறது.

இவ்வாறு திருப்பாணாழ்வார் தனித் தனியாக திருமாலின் ஒவ்வொரு உறுப்பிலும் உள்ளத்தைப் பறிகொடுத்த நிலையில் அனைத்து உறுப்புகளையும் சேர்க்கும் அழகினை ஒருங்கே அனுபவித்துத் தமது நெஞ்சு பரவசமாகப் பெற்ற பெருமையினைப் பற்றி,

"ஆலமா மரத்தின்

இலைமேல் ஒரு பாலகனாய்

ஞாலம் ஏழும் உண்டான்

அரங்கத்து அரவின் அணையான்

கோலமா மணி ஆரமும்

முடிவு முத்துத் தாமும் இல்ல தோர்எழில்

நீலமேனி ஐயோ!

நிறைகொண்ட (து) என் நெஞ்சினையே!" (அம., பிரான்–9)

என்ற பாசுரத்தில் சிறப்பித்திருக்கும் அழகினைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் இப்பாசுரத்தில் **"எல்லா அழகுகளையும் சேர்த்துக் கொண்டு, திருமேனி என்ற நீலச்சோதி ஆழ்வாரைப் படுத்திய பாடு வெளிப்படுகின்றது" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.72)** என்கிறார்.

அதோடு மட்டுமின்றி **"நீலமேனியின் மாசற்ற அழகு கடலாக வெள்ளமிட்டு வர, அதனை நெஞ்சால் அனுபவிக்கப் பாரிக்கின்றார்; அந்த அழகினை, 'முடிவில்லதோர் எழில்' வெள்ளத்தில் சுருட்டிய பேரலையொன்று இவர் நெஞ்சை இழுத்துக் கொள்ள 'ஐயோ! என் நெஞ்சையும் இழுத்துக் கொண்டதே என்று ஏங்குகிறார். 'ஐயோ!' என்பதற்கு பெரியவாச்சான் பிள்ளை, 'பச்சைச் சட்டை உடுத்துத் தனக்குள்ளதை அடையக் காட்டி எனக்குள்ளதை அடையக் கொண்டானே' என்பர். 'நான் எல்லாவற்றையும் நின்று நின்று அனுபவிக்க வேண்டும் என்றிருக்க அது பவபரிகரமான என் நெஞ்சைத் தன் பக்கலிலே இழுத்துக் கொள்வதே! ஐயா! என்கின்றார்' என்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.72)** என்று விளக்கம் தரும் ந.சுப்புரெட்டியார் திருப்பாணாழ்வாரின்அருளிச் செயலுக்குப் பெருமை சேர்ப்பதோடு, இந்த அனுபவத்தின் எதிரொலியாகத் தான் கம்பனும்,

"ஐயோ! இவன் வடிவென் பதோர்

அழியா அழ குடையான்"

(கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், கங்கைப் படலம், பா.1)

என்ற பாடலின் வரிகளால் இராமபிரானின் அழகை உணர்த்தியிருப்பதைச் சுட்டிக்காட்டித் திருப்பாணாழ்வார் அனுசந்திக்கும் அனுபவத்தினைக் கண்டு தானும் மருகுகிறார் ந.சுப்புரெட்டியார்.

இவ்விதம் திருமாலின் எழிலை அகக் கண்ணாலும், புறக் கண்ணாலும் அனுபவித்த திருப்பாணாழ்வார் இறுதிப் பாசுரத்தில் "கொண்டல் வண்ணனாகவும், வெண்ணெய் உண்ட வாயனாகவும் இருந்து தன் உள்ளம் கவர்ந்தோடும் திருவரங்கத்து அமுதமாகிய திருமாலை,

"அண்டர்கோன் அணி

அரங்கன்என் அமுதினைக்

கண்ட கண்கள் மற் (று)

ஒன்றினைக் காணாவே" (அம., பிரான்–10)

என்று பாடிப் பரவசமடைந்திருப்பதினால் இப்பாசுரம் முக்கியச் சிறப்பு பெறுகிறது என்பதனைத் தெளிவுபடுத்துகிறார். இப்பாசுரத்தில் 'கொண்டல் வண்ணன்' என்று திருப்பாணாழ்வார் குறிப்பிடுவதிலிருந்து அவரது தாபம் தீர, விடாய் தீர அருள்புரிந்த குறிப்பினைக் காண முடிவதோடு ஏனையப் பாசுரங்களிலெல்லாம் திருமாலின் திருமேனிப் பொலிவைக் கண்ட ஆழ்வார் வெண்ணெயையும், வெண்ணெய் போன்ற உள்ளங்களையும் களவாடிய கண்ண பிரானின் அழகினை உற்று நோக்கினால் வெண்ணெய் உண்ட திருப்பவளமாகக் காணப்படுகிறது என்கிறார். இதனால், **"என்னைச் சிந்தை கவர்ந்த வாயில் இப்போது வெண்ணெய் மணக்கிறது என்பது தான் குறிப்பு" (ஆழ்வார்களின் ஆரா அமுது, ப.73)** என்று எடுத்துரைக்கிறார் ந.சுப்புரெட்டியார்.

இவ்விறுதிப் பாசுரத்தின் சிறப்பு குறித்து உணர்த்தும் பாங்கில், **"இறைவனுடையப் பேரழகைக் கண்டு தன்னை மறந்து ஈர்க்கும் அனுபவம் சரணாகதிக்கு அடிப்படை என்பது திருப்பாணாழ்வாரின் இப்பாசுர வாக்கில் புலப்படும்" (நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் சரணாகதி நெறி, ப.90)** என்று முனைவர் இரா.இராஜகோபாலன் கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாய் அமைகிறது.

திருமங்கையாழ்வாரின் 'அமலனாதி பிரான்' எனும் பிரபந்தத்தில் முதல் ஒன்பது பாசுரங்கள் திருப்பாணாழ்வார் தம் அகக்கண் கொண்டு அருளியவை என்றும், பத்தாவது பாசுரமாகிய இறுதிப் பாசுரம் புறக்கண்ணால் நேரில் கண்டு அருளியது என்பது வைணவப் பெருமக்களின் நம்பிக்கையாக இருந்தாலும், திருப்பாணாழ்வாரின் அருளிச் செயல்களில் ஆழங்கால் பட்ட ந.சுப்புரெட்டியார் **"இவர் பாடிய பாசுரங்கள் பத்தும் இவரது உருக்கமும் உண்மையுமான அடிமைத் தளத்தை விளக்க வல்லன. இராமாநுசர் போன்ற மெய்ஞ்ஞானியரும், கம்பன் போன்ற பெருங்கவிஞர்களும் உச்சிமேல் கொள்ளத்தக்க சிறப்பு வாய்ந்தது இந்த ஆழ்வாரின் பிரபந்தம்" (ஆழ்வார்களின் ஆரா அமுது, ப.75)** என்று கூறுவதிலிருந்து திருப்பாணாழ்வாரின் அருளிச் செயலின் பெருமையை உணர முடிகிறது.

முதலாழ்வார்களின் அருளிச் செயல் அனுபவங்கள்

ஆழ்வார்கள் பன்னிருவரில் முதலாழ்வார்கள் என அழைக்கப்படுபவர்கள் பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் ஆகியோராவர்.

இம்மூன்று ஆழ்வார்களும் திருக்கோவலூரில் ஓரிரவு ஒன்றாகச் சந்தித்தன் பயனாக பொய்கையாழ்வாரால் 'வையம் தகளியா' எனத் தொடங்கும் முதல் திருவந்தாதியும் பூதத்தாழ்வாரால் 'அன்பே தகளியா' எனத் தொடங்கும் இரண்டாம் திருவந்தாதியும் பேயாழ்வாரால் 'திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன்' என்று தொடங்கும் மூன்றாம் திருவந்தாதியும் நுவலப்பெற்று அவை திருமாலின் சிறப்பினை உணர்த்துவனவாய் அமைகின்றன.

இவ்விதம் இவ்வாழ்வார்களின் தனிப்பெருமை மிக்க அருளிச் செயல்களினை பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், "**ஆழ்வார்கள் மூவரும் எம்பெருமானைக் கண்டது பக்திப் பெருக்கில் திளைத்துப் போகின்றனர். பொய்கையாழ்வார் தமது பாடலைத் தொடர்ந்து முதல் திருவந்தாதியை நூறு பாசுரங்களாகப் பாடி முடிக்கின்றார். பூதத்தாழ்வார் தமது பாடல் தொடங்கி இரண்டாம் திருவந்தாதியை நூறு பாசுரங்களாகவும், பேயாழ்வார் தமது பாடல் தொடங்கி, மூன்றாம் திருவந்தாதியைத் தலைக்கட்டுகின்றார். இந்த மூன்று திருவந்தாதிகளும் நாலாயிரப் பிரபந்தத்தில் இயற்பாப் பகுதியில் முதலாவதாக இடம் பெற்றுள்ளன. இப்பிரபந்தங்களால் அஞ்ஞான இருள் அகலப்பெறின் இறைவன் காட்சியளிப்பான் என்ற உண்மையை முதலாழ்வார்களின் வரலாற்றால் அறிகின்றோம் (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.82)** என்று தெளிவு படுத்துகிறார்.

பொய்கையாழ்வார் பற்றிக் குறிப்பிடுகையில் இவர் "**காஞ்சி மாநகரில் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சந்நிதியின் வடபுறத்தில் உள்ள பொற்றாமரைப் பொய்கையில் பூத்ததொரு நற்றாமரை மலரில் ஐப்பசித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் திருவவதரித்தார். இவருடைய பெருமையைக் கண்ட அனைவரும் இவரைத் தேவிற் சிறந்த திருமாலின் பாஞ்ச சன்னியம் என்னும் திருச்சங்கின் அம்சமாக அறுதியிட்டனர். பொய்கையில் அவதரித்தது காரணமாகப் பொய்கையாழ்வார் என்று திருநாமம் பெற்றார்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.84)** என்று குறிப்பிடுகிறார்.

பூதத்தாழ்வார் பற்றிக் குறிப்பிடுகையில், "**திருக்கடல் மல்லையில் குருக்கத்திப் பந்தரில் ஒரு குருக்கத்தி மலரில் ஐப்பசித் திங்கள் அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்தார். வடமொழியில் பூ சத்தாயாம் என்ற தாது வடிவாகப் பிறந்தது பூதம் என்ற சொல். இது சத்தைப் பெற்றது என்று பொருள்படும். எம்பெருமானின் திருக்குணங்களை அனுபவித்தே சத்தைப் பெற்றார் என்னும் காரணம் பற்றியே பூதத்தாழ்வார் என்று திருநாமம் ஆயிற்று" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.84)** என்று எடுத்துரைக்கிறார்.

பேயாழ்வார் பற்றிக் குறிப்பிடுகையில், "**திருவல்லிக்கேணி என்னும் திவ்விய தேசத்திற்குத் தெற்கிலுள்ள மயிலாப்பூரில் ஆதிகேசவப் பெருமாள் கோயில் திருக்கிணற்றில் உண்டானதொரு செவ்வந்தி மலரில் ஐப்பசித் திங்கள் சதய நட்சத்திரத்தில் திருமாலின் நந்தகம் எனும் வாளின் கூறாக அவதரித்தார். இவர் ஒப்புயர்வற்ற பகவத் பத்தியையுடையவராய், பார்ப்பவர்கள் கண்ணில், 'இவர் பேய்**

பிடித்தவர்' என்று என்னும்படி நெஞ்சழிந்து, கண் கழன்று அழுதும் சிரித்தும் தொழுதும் எழுந்தாடியும் மகிழ்ந்து பாடியும் அலறியுமே பொழுது போக்கிக் கொண்டிருந்தமையால் பேயாழ்வார் என்ற திருநாமம் பெற்றார்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.85) என்று கூறித் தெளிவிக்கிறார்.

முதலாழ்வார்கள் மூவரின் சிறப்பிற்கொப்பவே அவர்களது அருளிச் செயல்களும் அமைந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டும் ந. சுப்புரெட்டியார் இவ்வாழ்வார்களின் அருளிச் செயல்கள் முதல் மூன்று திருவந்தாதிகளைத் தவிர வேறெதுவும் இல்லாததால் அவ்வந்தாதிகளின் தன்மைகளையும், தனித் தன்மைகளையும் மிக நேர்த்தியாக அனுபவித்து மகிழ்கிறார்.

பொதுத்தன்மைகள்

முதலாழ்வார்களின் பாசுரங்களில் திருவரங்கம், திருவெஃகா, திருக்கோவலூர், திருவிண்ணகர், திருவேங்கடம், திருக்கோட்டியூர், திருமாலிருஞ்சோலை, திருத்தண்கால், தஞ்சை மாமணிக் கோயில், திருக்குடந்தை, திருவந்தியூர், திருப்பாற்கடல், திருவல்லிக்கேணி, திருவேருக்கை, திருப்பாடகம், திருவட்ட புயகரம், பரமபதம் ஆகிய திவ்விய தேசங்கள் குறிப்பிடப் பெற்றுத் தனிச்சிறப்பு பெற்றிருப்பதனை வலியுறுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்,

"வேங்கடமும் விண்ணகரும்
வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல்
பொன்னகரும் நான்கு இடத்தும்
நின்றான் இருந்தான்
கிடந்தான் நடந்தானே
என்றால், கெடுமாம் இடர்" (முதல் திரு., 77)

என்ற பாசுரத்தில் பொய்கையாழ்வார், திருவேங்கடத்தில் நின்ற திருக்கோலத்திலும், திருவிண்ணகரில் இருந்த திருக்கோலத்திலும், திருவெஃகாவில் கிடந்த திருக்கோலத்திலும், திருக்கோவலூரில் உலகளந்த திருக்கோலமாகச் சேவை சாதிக்கும் இடத்தை நடந்த திருக்கோலமாக அனுசந்திப்பது உண்டாதலால் 'பூங்கிடங்கின் நடந்தான்' என்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் **"இந்த நான்கு திருக்கோலங்களை அனுசந்தானம் செய்தால் இடரெல்லாம் நீங்கிவிடும் என்பது பொய்கையாழ்வாரின் கொள்கை" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.87)** என்பதை எடுத்துரைக்கிறார்.

இதனைப் போன்ற ஒப்புமையுடன் பூதத்தாழ்வாரும் தமது பாசுரமொன்றில்,

"பயின்றது அரங்கம் திருக்கோட்டி; பலநாள்
பயின்றதுவும் வேங்கடமே, பல நாள் பயின்றது
அணி திகழும் சோலை அணிநீர் மலையே
மணி திகழும் வண் தடக்கை மால்" (இரண்., திரு., 46)

என்று கூறி அடியவர்கள் திருந்துவதற்காக இலாப நட்டங்களில் உகப்பும் வெறுப்புமின்றி இருப்பதற்காக எம்பெருமான் உகந்து கோயில் கொண்டிருக்கும் திருப்பதிகள் பலவாக இருப்பினும் அவற்றுக்கு ஒரு வரையறை இல்லை. அவற்றுள் திருவரங்கம், திருக்கோட்டியூர், திருவேங்கடம், திருநீர்மலை ஆகிய

நான்கு திவ்விய தேசங்களை மட்டிலும் இப்பாசுரத்தில் குறிப்பிட்டு அவ்விடங்களில் எம்பெருமான் நெடுங்காலமாக வாழ்கின்றான் என்று ஆழ்வார் குறிப்பிடுவதை சுட்டிக்காட்டுகிறார். பேயாழ்வாரின் பாசுரமாகிய,

"விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்

மண்ணகரம் மாமாட வேளுக்கை – மண்ணகந்த

தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி

தன் குடங்கை நீரேற்றான் தாழ்வு" (மூன்., திருவந்., 62)

என்ற பாசுரத்தில் பேயாழ்வார் இறைபாடியாகவுள்ளத் திருப்பதிகளாகத் திருவிண்ணகர், திருவெஃகா, திருமலை, திருவேளுக்கை, திருக்குடந்தை, திருவரங்கம் ஆகிய திருப்பதிகள் அமைந்துள்ளதாகக் குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டுவதோடு இப்பாசுரத்தின் இறுதியில் 'தன் குடங்கை நீரேற்றான் தாழ்வு' என்று பேயாழ்வார் அருளிச் செய்திருப்பதின் கருத்தினை, **"மாவலி பக்கல் யாசகனாகப் போகும்போது எவ்வளவு சௌலப்பியமும் சௌசீல்யமும் தோன்றிற்றோ அவ்வளவு சீலம் இத்திருப்பதிகளிலும் தோன்றும்படி இருக்கின்றான் என்பதைக் காட்டுவதற்காக" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.88)** என்று தெளிவாக விளக்குகிறார் ந.சுப்புரெட்டியார்.

தனித்தன்மைகள்

முதலாழ்வார் மூவரும் அருளிய பிரபந்தங்களில் தனித்தன்மை பெற்று விளங்குவது திருமலையின் சிறப்புகள் என்பதை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் திருமலையின் தனித்தன்மைகளைச் சுட்டிக்காட்டும் முதலாழ்வார்களின் பாசுரங்களில் தம் சிந்தை ஆழ்ந்த நிலையில் அனுபவித்த நிகழ்வுகளையெல்லாம் நயம்பட விளக்குகிறார்.

வைணவத் திருத்தலங்கள் பெரும்பாலும் இயற்கைச் சூழ்நிலையில் மிக அழகாக அமைந்திருக்கும். அங்குள்ள கருப்பொருளை வைத்துக்கொண்டே அழகிய காட்சிகளைச் சித்தரித்துக் காட்டுவது கவிஞர்களுக்கு எளிதானது. அவ்வகையில் முதலாழ்வார்களின் பாசுரங்கள் வழியே திருவேங்கடம் எனப்படும் திருமலையின் சில காட்சிகளைக் காண்பதும் இறையனுபவம் பெறுவதாகவே அமைகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் ந.சுப்புரெட்டியார். முதலாழ்வார்கள் மூவரும் திருமலையின் பல அழகிய காட்சிகளைச் சொல்லோவியமாக எடுத்துரைத்திருப்பது தனிச்சிறப்பான அனுபவமாகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

பொய்கையாழ்வார் காட்டும் திருமலைக் காட்சிகளின் சிறப்பினைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

"ஊரும் வரிஅரவம் ஒண் குறவர் மால்யானை

பேர எறிந்த பெருமணியைக் –காருடைய

மின்னென்று புற்றடையும் வேங்கடமே மேலசுரர்

எம்மென்னும் மாலது இடம்" (முதல் திருவந்., 38)

என்ற பாசுரத்தில் திருவேங்கட மலையில் வாழும் குறவர்கள் தங்களது தினைப் புனங்களில் வந்து மேயும் யானையைத் துரத்துவதற்காகப் பரண்களிலிருந்தபடி தங்கள் கையிலிருந்த பெரிய மாணிக்கக் கட்டிகளை யானையின்மீது எறிகின்றதால் அங்குத் திரியும் மலைப்பாம்புகள் இரத்தினங்களை

மின்னலாகவும் எண்ணி மயங்கி, மின்னலுடன் இடிதோன்றும் என்றஞ்சி பாம்புகள் எல்லாம் புற்றினுள் புகுந்து கொள்கின்றன என்று கூறுவதும்,

“பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ

வெருவிப் புனந்துறந்து வேழம்–இருவிசும்பில்

மீன்விழக் கண்டஞ்சும் வேங்கடமே மேலசுரர்

கோன்விழக் கண்டுகந்தான் குன்று” (முதல் திருவந்., 40)

என்ற பாசுரத்தில் புனங்களில் மேயும் யானையைத் துரத்தும் குறவர்கள் ஒருகையில் அம்பு தொடுக்கப்பெற்ற வில்லையும் மற்றொரு கையில் கொளுத்தின தீவட்டியையும் கொண்டு யானையை அதட்டிச் செல்லுகையில் யானை பயந்து ஓடும்போது விண்ணிலிருந்து விழும் மீன் தானாக அதன் வழியில் பேரொளியுடன் விழுவதைக் கண்டு அதனைக் குறவர்களின் கைத் தீவட்டி என மயங்கி மேல் செல்லாது அப்படியே திகைத்து நின்று விடுகின்றது என்று கூறுவதும் சிறந்த சொல்லோவியங்களாக இருக்கின்றன என்பதை எடுத்துரைக்கிறார் ந.சுப்புரெட்டியார்.

பூதத்தாழ்வார் காட்டும் திருமலைக் காட்சிகளின் தனித்துவம் பற்றிக் குறிப்பிடுகையில்,

“பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்நின்று

இருகண் இளமூங்கில் வாங்கி – அருகிருந்த

தேன்கலந்து நீட்டும் திருவேங் டங்கண்டீர்

வான்கலந்த வண்ணன் வரை” (இரண்., திருவந்., 75)

என்ற பாசுரத்தில் திருமலையில் மதச்செருக்கால் திரிகின்ற களிறானது வழியில் தனது சிறந்த பிடியானையைக் காணும்போது அதனை மீறி அப்பால் செல்ல முடியாமல் அதற்கு இனிய உணவு தந்து அதன் மனதினை நிறைவிக்க விரும்பி அதன் முன் நின்று இரண்டே கணுக்களையுடைய மூங்கில் குருத்தொன்றை பிடுங்கி அருகில் ஒரு மலை முழைஞ்சிலிருக்கும் ஒரு தேனடையில் தோய்த்து அப்பிடியின் வாயில் ஊட்டுகின்றது என்று கூறுவதும் பிரிதொரு பாசுரத்தில்,

“போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக்கு ஆங்கலர்ந்த

போதரிந்து கொண்டேத்தும் போது உள்ளம்–போதும்

மணிவேங் கடவன் மலரடிக்கே செல்ல

அணிவேங் கடவன்பேர் ஆய்ந்து” (இரண்., திருவந்., 72)

என்று கூறுவதில் திருவேங்கடமலையிலுள்ள முனிவர்கள் அதிகாலையில் துயில் விட்டெழும்போதே அவ்வனத்திலுள்ள குரங்குகளும் எழுந்து மலர்கள் பூத்த சுனைகளிலே நீராடி அங்குள்ள செவ்விய மலர்களைக் கொய்துகொண்டு போய் தனக்கேற்றவாறு ஏதேனும் ஒன்றைச் சொல்லி துதி செய்து பணியா நிற்கும் என்று கூறிச் சிறப்பித்திருப்பதனை அடியொற்றியே கம்பனும் தனது கம்பராமாயணத்தில்,

“இடுகு கண்ணினர் இடருறு

மூப்பினர் ஏக

நெடுகு கூனல்வால் நீட்டின

உருகுனு நெஞ்சக்

கடுவன் மாதவர்க்(கு) அருநெறி

காட்டுப காணாய்"

(கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், சித்திரக்கூடப்படலம், பா. 30)

என்றவாறு சித்திரக் கூடக் குரங்குகள் மூப்படைந்து கண் இடுகிப் போய் வழியறியாது வருந்தும் மாதவர்க்கு அவர்கள் செல்ல வேண்டிய அருநெறிகளைக் காட்டுகின்றன எனக் குரங்குகளின் செயல்களை எடுத்துக் காட்டுவதினால், இவ்வாழ்வாரின் பாசுரங்கள் **"புதிய புதிய கற்பனைப் போக்குகளுடன் இலக்கியங்களில் காட்டப்பெற்று அறிவுக்கு விருந்தாக அமைகின்றன" (ஆழ்வார்களின் ஆராஅமுது, 106)** என்று சுட்டிக்காட்டி பூதத்தாழ்வாரின் தனித் தன்மையினை ந.சுப்புரெட்டியார் உணர்த்துகிறார்.

குரங்கினம் கடைபிடித்த துதி நெறியினைப் போலவே பேயாழ்வார் திருமலையில் ஆண்யானையொன்று இந்நெறியினை பின்பற்றிய செய்தியினை,

"புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து அருவி

உருமதத்தால் கால்கழுவிக் கையால்–மிகுமதத்தேன்

விண்ட மலர்கொண்டு விறல்வேங் கடவனையே

கண்டு வணங்கும் களிறு" (மூன்., திருவந்., 70)

என்ற பாசுரத்தில் வழிபாட்டுக்குச் செல்லும் அடியார்கள் வாய் கொப்பளித்துக் கைகால்களை நீரால் தூய்மை செய்து கொண்டு மலர்களை எடுத்துச் செல்லும் வழக்க நெறியினை திருமலையிலுள்ள யானையொன்று அருவி போல் கால் வரை பெருகி வழியும் மத நீரால் கால் கழுவுவதும், மிக அழகுற அமைந்திருக்கும் செயலென்பதைச் சுட்டிக் காட்டும் ந.சுப்புரெட்டியார், **"திருமலையிலுள்ள ஐயறிவு விலங்குக்கும் தன்னை வழிபடும் ஞானத்தை தரக்கூடியவன் திருமலையப்பன் என்பது ஆழ்வார் நமக்கு உணர்த்தும் செய்தியாகும்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.106)** என்று உறுதிப்பட மொழிகிறார்.

"களிறு முகில்குத்தக் கையெடுத் தோடி

ஒளிறு மருப்பொசிகை யாளி–பிளிறி

விழக்கொன்று நின்றதிரும் வேங்கடமே! மேனாள்

குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று" (மூன்., திருவந்., 71)

என்ற பாசுரத்தில் திருமலையிலுள்ள யானை கரிய மலைமுகட்டில் படிந்திருந்த முகிற் படலத்தை எதிரியான யானை என்று பெரிய வேகத்துடன் சென்று துதிக்கையால் குத்தும் நிகழ்வும்,

"புரிந்து மதவேழம் மாப்பிடியோ டூடி

திரிந்து சினத்தால் பொருது–விரிந்த சீர்

வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே! மேலொருநாள்

மண் கோட்டு கொண்டான் மலை" (மூன்., திருவந்., 45)

என்ற பாசுரத்தில் திருமலையிலுள்ள களிறொன்று தன் பிடியுடன் ஊடல் நிகழ்த்திப் பின் அப்பிடியை விட்டுப் பிரிந்து இங்குமங்கும் திரிந்து சினத்தின் காரணமாக தன் கொம்பினை மணிப் பாறைகளில்

குத்துவதால் அதன் கொம்பிலிருந்து முத்துகள் உதிர்கின்ற நிகழ்வும் சிறந்த சொல்லோவியங்களாக அமைந்திருப்பதனை ஆழ்ந்து அனுபவிக்கிறார்.

இவை தவிர திருவேங்கட மலையின் உயர்ச்சியைக் காட்டும் சிறப்பாக ஓங்கி வளர்ந்த மூங்கிலின் அழகினை "தீங்கழை போய் வென்று, விளங்குமதி கோள் விடுக்கும் வேங்கடமே!" (மூன்., திருவந்., 72) என்ற பாசுரத்தில் வருணித்திருப்பதும் பேயாழ்வார் உணர்த்தும் தனித்தன்மை என்பதைச் சுட்டிக்காட்டித் தெளிவுபடுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்.

தொண்டரடிப் பொடியாழ்வாரின் அருளிச்செயல் அனுபவங்கள்

விப்ரநாராயணர் என்ற இயற்பெயர் கொண்ட தொண்டரடிப் பொடியாழ்வார் திருமங்கையாழ்வரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற 'திருப்புள்ளம் பூதங்குடி' எனும் திருத்தலத்தின் அருகிலுள்ள திருமண்டங்குடியில் மார்கழி மாதம் கேட்டை நட்சத்திரத்தில் அவதரித்தவர். இவரைத் திருமாலியின் வனமாலை அம்சமாகக் கருதுவது வைணவர்களின் மரபு.

விப்ர நாராயணரின் தந்தையான வேத விசாரதர் பிராமணராகையால் உரிய காலங்களில் உபநயநம் முதலிய வைதீக நெறிகளைச் செய்வித்துத் தாமே வேத சாத்திரங்களைப் பயிற்றுவிக்கின்றார். இதனால் விப்ர நாராயணரும் முறையே நான்கு வேதங்கள் ஆறு சாத்திரங்கள் ஆகியவற்றினை கசடறக்கற்று சத்துவகுணம் தழைத்தோங்க ஞான பக்தியுடனும் வைராக்கியத்துடனும் அரங்கநாதன் மேல் கொண்ட அளப்பறிய அன்பினால் பாகவதர் தொண்டே பகவான் தொண்டை விட, மேலானது என்ற உண்மையினை உணர்ந்து, அரங்கநாதனுக்கு கைங்கர்யம் செய்யும் பாகவதர்களின் திருவடிகளுக்குத் தொண்டு செய்தால் கங்கை நீரில் கலந்தாட வேண்டிய அவசியமில்லை என்பதை வேத வாக்காய்க் கொண்டு வைணவப் பாகவதர்களின் பாத தூளியாய் இருந்து அவர்களுக்குக் கீழ்படிந்து ஒழுகி வந்ததால், 'தொண்டரடிப்பொடி' என்ற திருநாமம் பெருகின்றார் என்பதை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் இதனால்தான் **"வைணவ உலகம் பெற்றோர் இட்ட பெயரை மறந்து விடுகின்றது; இந்தச் சிறப்புத் திருநாமமே அவர்கள் மனத்தில் நிலைத்து விடுகிறது" (ஆழ்வார்களின் ஆரா அமுது, ப.211)** என்பதைச் சுட்டிக்காட்டி விளக்குகிறார். இவரின் அருளிச்செயல்களாகக் கொள்ளத் தக்கவை திருமாலை மற்றும் திருப்பள்ளி எழுச்சி ஆகிய இரண்டு பிரபந்தங்களாகும்.

இதில் திருமாலை நாற்பத்தைந்து (45) பாசுரங்களாலும், திருப்பள்ளியெழுச்சி பத்து (10) பாசுரங்களாலும் அமையப் பெற்ற சிறப்புடையது என்று கூறும் ந.சுப்புரெட்டியார். இப்பிரபந்தங்களில் ஆழ்வார் திருமாலைத் தவிர வேறு தெய்வமில்லை என்ற கருத்தில் ஊன்றியவராய்ப் பிற சமயங்களை எதிர்த்தல், திருமாலை வெறுப்பவர்களைச் சாடுதல் ஆகிய தன்மையில் முனைப்புத் திறனோடு இருந்து ஆழ்ந்து அனுபவித்த சிறப்பினைச் சுட்டிக்காட்டுகிறார்.

"புலையற மாகி நின்ற
புத்தொடு சமண மெல்லாம்
கலையறக் கற்க மாந்தர்
காண்பரோ கேட்ப ரோதாம்
தலையறுப் புண்டும் சாவேன்

சத்தியம் காண்மின், ஐயா!

சிலையினால் இலங்கை செற்ற

தேவனே தேவ னாவான்" (திருமாலை–7)

என்ற பாசுரத்தில் திருமாலைத் தொழுபவர்கள் அனைத்துக் கலைகளும் கைவரப் பெற்றவர்கள். அவர்கள் தனியே எவ்வித கலைகளும் கற்கத் தேவையில்லை. அவ்விதம் அவர்கள் கலைகளைக் கற்க முற்படுவதினால், 'காண்பரோ கேட்பரோதான்' என்று உணர்த்தியிருப்பதிலிருந்தும், 'சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான்' என்று கூறுவதில் இராமனையே தெய்வமாகக் கொண்ட ஆழ்வாரின் உறுதிப்பாடு தெளிவாகிறது என்கிறார்.

திருமாலை வெறுப்பவர்களைப் பற்றிக் குறிப்பிடும் தொண்டரடிப் பொடியாழ்வார்,

"வெறுப்பொடு சமணர் முண்டர்

விதியில்சாக் கியர்கள், நின்பால்

பொறுப்பரி யனகள் பேசில்

போவதே நோய தாகி,

குறிப்பெனக் கடையு மாகில்

கூடுமேல் தலையை ஆங்கே

அறுப்பதே கருமங் கண்டாய்

அரங்கமா நகரு ளானே" (திருமாலை–8)

என்ற பாசுரத்தில் **"திருமாலைப் பற்றிய வசவுகளைக் கேட்டால், அதுவே நோயாகி முடிந்து போவது உத்தமம். அப்படி இல்லாவிடில், சந்தர்ப்பம் வாய்த்தால், தனக்கு ஆற்றலும் இருந்தால், நிந்தித்தவன் தலையை அறுத்துத் தள்ளுவதே என் இலட்சியம் என்கிறார்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.215)** என ந.சுப்புரெட்டியார் சுட்டிக் காட்டுவதிலிருந்து திருமால் பக்தியில் தொண்டரடிப் பொடியாழ்வாருக்கு இருந்த அதி தீவிரத்தினை உணர்ந்து கொள்ள முடிகிறது.

திருமால் பக்தியில் ஊறித் திளைத்ததோடு திருமாலைத் தவிர வேறு தெய்வமில்லை என்பதில் உறுதியாக இருந்தவர் தொண்டரடிப்பொடியாழ்வார் என்பதை,

"மற்றுமோர் தெய்வம் உண்டோ

மதியிலா மானி டங்காள்

உற்றபோ தன்றி நீங்கள்

ஒருவனென் றுணர மாட்டீர்

அற்றமே லொன் றறியீர்

அவனல்லால் தெய்வ மில்லை

கற்றினம் மேய்த்த எந்தை

கழலிணை பணமி னீரே" (திருமாலை–9)

என்ற பாசுரத்தில் பெறுதற்குரிய மானிடப் பிறப்பைப் பெற்றிருந்தும் ஈடேறுதற்குரியதான பரமான்மாவைப் பற்றிய தத்துவஞானம் இல்லாதவர்களை 'மதி இலா மானிடங்காள்' என தொண்டரடிப் பொடியாழ்வார்

அழைப்பதை, **"பரன்மாவைப் பற்றிய அறிவே அறிவெனப் படுமாதலால், அறிவைப் பெறாத இவர்கள் மதியிலா மானிடங்காள் ஆயினர். இது பற்றியே 'மானிடர்காள்' என்ற உயர்திணை வாய்ப்பாட்டால் கூறாது, 'மானிடங்காள்' என்ற அஃறிணை வாய்ப்பாட்டால் கூறியதையும் காணலாம்" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.216)** எனச் சுட்டிக் காட்டும் ந.சுப்புரெட்டியார் தொண்டரடி பொடியாழ்வாரின் அருளிச் செயல்வழி வெளிப்படும் பக்தித் திறத்தைப் போற்றியுரைத்துள்ளார்.

குலசேகர ஆழ்வாரின் அருளிச் செயல் அனுபவங்கள்

கேரள மாநிலத்தின் கோழிக்கோடு என்னும் பகுதியை ஆண்டு வந்த 'திடவிரதன்' எனும் அரசனுக்கும் அவனுடைய மனைவியான அரச மாதேவி நாத நாயகிக்கும் மக்கட்பேறு இல்லாத குறை தீர்க்கும் பொருட்டு அவர்கள் திருமாலுக்குச் சிறப்பு வழிபாடுகள் பல செய்து வழிபட்டதன் காரணமாக மாசித் திங்களில் புனர்பூச நட்சத்திரத்தில் இளவரசராக அவதரித்தவரே குலசேகர ஆழ்வாராவார்.

இவருக்கு 'குலசேகரன்' என்று பெற்றோர் பெயரிட்டனர். இளமையிலிருந்தே திருமால் பக்தியில் தலை சிறந்தவராய் விளங்கினார். இவரைத் திருமாலின் மார்பிலுள்ள கௌத்துவ மணியின் அவதாரமாகக் கொள்வது வைணவர்களின் மரபாகும் என்பதை எடுத்துரைக்கும் ந.சுப்புரெட்டியார் நான்கு வேதம் ஆறு சாத்திரம் முதலியவற்றினைக் கற்றுத் தேர்ந்ததோடு அரசருக்கு வேண்டிய வில் வித்தை, நீதி நூல்கள், யானை ஏற்றம், குதிரை ஏற்றம், படைக்கலப் பயிற்சி முதலியவற்றையும் கற்று வல்லவரானதால் சிறிய வயதிலே இவருக்கு இளவரசு பட்டமும் சூட்டப்பெற்றது என்பதனையும் சுட்டிக் காட்டுகிறார்.

அதீத வலிமை கொண்டு விளங்கிய குலசேகரன் மூவேந்தர்களில் சோழ, பாண்டியர்களை எளிதில் வென்று மூன்று தமிழ்நாட்டுப் பகுதிக்கும் தலைமை பூண்ட சிறப்புடையவனானான். இதனால் மனமுவந்த அவன் தந்தை 'திடவிரதன்' இவருக்குத் திருமுடி சூட்டித் தான் தவம் செய்து உயர்கதி பெறும் பொருட்டு தவவனம் சென்றதாக வரலாறு உணர்த்துவதனையும் சுட்டிக்காட்டுகிறார்.

தந்தைக்குப் பிறகு நாட்டை நடுநிலை தவறாது ஆட்சி செய்ததுடன் ஓர் அரசகுமாரியை மணந்து ஓர் ஆண் மகவும், ஒரு பெண் மகவும் பெற்று, ஆண் மகவிற்குத் தன் தந்தையின் பெயரான 'திடவிரதன்' என்ற பெயரும், பெண் மகவிற்கு 'இளை' என்ற பெயரும் சூட்டி மகிழ்ந்தான். இந்நிலையில் அரச போகங்களில் பற்றற்றநிலை ஏற்பட்டு இராமாயண காலாட்சேபத்தை எப்போதும் கேட்டு வருவதும், வைணவர்களைக் கண்டால் சிறப்பாக உபசரிக்கும் பாகவத நிட்டை உடையவராகவும் விளங்கிய சிறப்பினைப் பெற்றார்.

இதனைப் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"இந்நிலையில் இம்மை, மறுமை, வீடுபேறு என்னும் மும்மை இன்பங்களையும், தரவல்ல, முதலும் முடிவுமற்ற முழுமுதற் கடவுள் யாரென்ற பரத்துவ விசாரத்தில் ஈடுபட்டு, கற்றத்துறை வித்தகர் பலருடன் வேதம், புராணம், இதிகாசம் முதலிய நூல்களைப் பரிசோதித்துப் பார்த்து, கருணாமூர்த்தியாகிய கமலக் கண்ணனின் திருவருள் நோக்கு அவன் மேல் படவே, சீமன் நாராயணனே முழுமுதற்கடவுள் என்ற உண்மை அவனது ஞானக் கண்ணுக்குப் புலனாயிற்று" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.237)** என்கிறார்.

அதோடு திருமாலே தெய்வமென்பதில் தெளிவுபெற்று எம்பெருமானது அனந்த கல்யாண குணங்களாகிய பெருங்கடலில் ஆழ்ந்து நெஞ்சுருகி நின்று குலசேரகராழ்வார் என்ற நிலைக்கு உயர்ந்து இவர் பாடிய பாசுரங்கள், ‘பெருமாள் திருமொழி’ என்ற அருளிச் செயலாக வடிவங்கொண்டு திகழ்வதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார், இப்பெருமாள் திருமொழியில் பத்துத் திருமொழிகளிலும் அடங்கியுள்ள **106** பாசுரங்களும் குலசேகராழ்வார் திருமாலின் விபவ அவதாரங்களான இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் ஆகியவற்றில் ஆழங்கால் பட்ட நிலையும் திருவரங்கம், திருவேங்கடம், திருவித்துவக்கோடு ஆகிய திவ்விய தேசத்து எம்பெருமான்களிடத்திலும் மிக்க பக்தி கொண்டிருந்த நிலையைத் தெளிவாக அறிய முடிகின்றது என்கிறார்.

இராமாவதார அனுபவம்

தசரதச் சக்கரவர்த்தி இராமனைப் பிரிந்த அளவில் மனம் உருகிப் பேசுவதாய் அமைந்த ஒன்பதாம் திருமொழியில் குலசேகராழ்வார் தம்மை தசரதனாகவே உருவகிக்கும் தன்மையினை,

“கொல்லனைவேல் வரிநெடுங்கண் கௌசலை தன்
குலமதலாய் ! இனி வில் ஏந்தும்
மல்லணைந்த வரைத்தோளா ! வல்வினை யேன்
மனம் உருக்கும் வகையே கற்றாய்;
மெல்லணைமேல் முன்துயிலக் கற்றனையோ ?
காகுத்தா ! கரிய கோவே !” (பெருமாள், திரு., 9:3)

என்ற பாசுரத்தில் இராமனின் திருமேனியின் மென்மையை நோக்காமல் வெவ்விய காட்டில் அவனைப் போகவிட்ட கொடுமையைத் தாளாமல் தன்னைத்தான் சாடிக் கொள்ளும் தசரதனின் தந்தையுள்ளத்தினை நேர்த்தியாக அனுபவித்து மகிழ்கிறார் குலசேகராழ்வார் என்பதை **“இந்தப் பாசுரத்தில் உள்ளம் கனிந்து பாடுங்கால் நாமும் ஆழ்வாரைப் போல் தசரதனாகி விடுகின்றோம்; ஆழ்வாரின் உணர்ச்சியை நாமும் பெறுகின்றோம்” (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப. 243)** என்பதைச் சுட்டிக்காட்டி சுவைநயத்தோடு அனுபவித்து மகிழ்கிறார் ந.சுப்புரெட்டியார்.

இவை தவிர இராமனைப் பிரிந்த துக்கம் தாளாமல் தசரதன் அடைந்த உச்ச கட்ட வேதனையினை,

“என் பெற்றாய் ? கைகேசீ! இருநிலத்தில்
இனிதாக இருக்கின் றாயே !” (பெருமாள், திரு., 9:8)
“நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன்
ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே” (பெருமாள், திரு., 9.9)
“கானகமே மிகவிரும்பி நீ துறந்த
வளநகரைத் துறந்து, நானும்
வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்
மறுகுலத்தார் தங்கள் கோவே” (பெருமாள், திரு., 9.10)

என்ற பாசுரங்களிலெல்லாம் குலசேகராழ்வார் எடுத்துக் காட்டுவது தனிச் சிறப்பாக இருப்பதுடன் **"இம்மூன்று பாசுரங்களையும் படிக்கும் போது இராம காதையில் தோய்ந்த ஆழ்வாரின் உள்ளத்தைக் காண முடிகின்றது" (ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.245)** என்கிறார் ந.சுப்புரெட்டியார். அதோடு மட்டுமின்றி குலசேகராழ்வார் பெற்ற இராமானுபவத்தை நாம் பெறும்போது ஒவ்வொரு பாசுரமும் ஒருபடி அமுதமாக இனிப்பதை உணரலாம் என்பதனையும் வலியுறுத்துகிறார்.

கிருஷ்ணாவதார அனுபவம்

குலசேகராழ்வாரின் அருளிச் செயலில் கிருட்டிணாவதார அனுபவம் பற்றிக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், பெருமாள் திருமொழியின் ஆறாம், ஏழாம் திருமொழிகளில் இத்தகைய அனுபவத்தினைக் காணலாம் என்கிறார். அதோடு அதில் ஒன்று கண்ணனைப் பெற்றெடுத்தத் தேவகி அனுபவமாகவும், மற்றொன்று கண்ணனைக் காதலித்த கன்னியரின் அனுபவமாகவும் நடைபெறும் சிறப்புடையது என்பதனையும் சுட்டிக்காட்டித் தேவகி நிலையில்,

"நந்தன் பெற்றனன் நல்வினையில்லா
நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே" (பெருமாள், திரு., 7:3)
"இன்பத்தை இழந்த
பாவியேன் எனது ஆவி நில்லாதே" (பெருமாள், திரு., 7:4)
"திருவி லேன்ஒன்றும் பெற்றிலேன்; எல்லாம்
தெய்வ நங்கை யசோதை பெற்றாளே" (பெருமாள், திரு., 7:5)
"எழில் கொள்நின் திருக் கண்ணினை நோக்கந்
தன்னையும் இழந்தேன், இழந்தேனே" (பெருமாள், திரு., 7:7)

என்ற பாசுரங்களிலெல்லாம் புலம்பலை வெளிப்படுத்தும் குலசேகராழ்வார், தேவகியின் காணக்கரிய புத்திரனை இழந்து துன்பப்படும் சூழலை மிக நேர்த்தியாக விவரிக்கும் பாங்கினால் 'தெய்வமாது' என்று கூறுவதற்குத் தகுதியான யசோதைப் பிராட்டி கண்ணபிரானுடைய அதிமானுட சக்திகளனைத்தினையும் காணப் பெற்றமையால் அவள் 'தெய்வ நங்கை' எனச் சிறப்பிக்கப் பெற்றாள் என்பதை இப்பாசுரங்களால் நினைந்து நினைந்து அனுபவிக்க வேண்டும் என்பதை ஆழ்வாரின் வழியில் வலியுறுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்.

பெருமாள் திருமொழியின் முதல் மூன்று திருமொழிப் பாசுரங்களில் திருவரங்கத்தின் சிறப்பும் நான்காம் திருமொழியில் திருவேங்கடத்தின் சிறப்பும் ஐந்தாம் திருமொழியில் திருவித்துவக்கோட்டின் பெருமையும் குலசேகராழ்வாரால் அருளப்பெற்றுத் தனித்தன்மை வாய்ந்திருக்கும் சிறப்பினைச் சுட்டிக்காட்டித் தன் மனம் உருக அப்பாசுரங்களை அனுபவித்து மகிழ்ந்திருக்கிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்.

நம்மாழ்வாரின் அருளிச்செயல் அனுபவங்கள்

பன்னிரு ஆழ்வார்களுள் தலைசிறந்தவராகவும், முதன்மையானவராகவும் கருதப்படுபவர் நம்மாழ்வார். இவர் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பாண்டி நாட்டின்கண் உள்ள திருநெல்வேலி

மாவட்டத்திலுள்ள தாமிரவருணி எனும் பொருநையாற்றின் தீரத்திலுள்ள திருநகரி எனப்படும் திருக்குறுகூரில் அவதரித்தவர்.

இத்திருக்குறுகூரில் திருமால் சேவையில் சிறந்து விளங்கிய வைணவப் பெருஞ்செல்வரான காரியார் என்பவருக்கும் அவருடைய மனைவியான உடைய நங்கை என்பவருக்கும் பலகாலம் குழந்தைப் பேரின்மையைப் போக்கும் பொருட்டு திருக்குவங்குடி நம்பிப்பெருமாளின் ஆசியால் அவதரித்தவர் நம்மாழ்வார் என்பது வைணவர்களின் நம்பிக்கை என்பதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் திருமாலே நேரிடையாக வந்துப் பிறந்தமையால் ஏனைய ஆழ்வார்களிலிருந்து முன்னிலைப் படுத்திப் போற்றப்படுகிறார் நம்மாழ்வார் என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

'மாறன்' எனப் பெற்றோர் இட்ட பெயரினைத் தவிர சடகோபன், பராங்குசர், வகுளாபரணர் ஆகிய பெயர்கள் இவரின் சிறப்பினை உணர்த்துவதாய் அமைந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார், **"நம்மாழ்வாரின் பெயர்களில் ஒன்றாகிய சடகோபன் என்பது திருவிருத்தத்தின் இறுதிப்பாசுரத்திலும், திருவாய் மொழியின் பலச்சுருதிப் பாசுரங்களிலும் பெருவழக்காக உள்ளது. மற்றொரு பெயராகிய மாறன் திருவாய் மொழியில் ஆறு இடங்களில் வருகின்றது. தாம் பிறந்த நாடு வழுதி நாடு என்பதனையும் பல பாசுரங்களில் குறிப்பிடுகின்றார் ஆழ்வார்" (சடகோபன் செந்தமிழ், ப.4)** என்று கூறித் தெளிவாக்குகிறார்.

நம்மாழ்வாரின் பிறப்பினை ஒப்பவே அவரது அருளிச் செயல்களும் பெருஞ்சிறப்பு பெற்றவையாகும். இவர் அருளிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகிய நான்கு பிரபந்தங்களும் பெரும்புகழ் பெற்றவை. இப்பிரந்தங்கள் நான்கும் முறையே ரிக், யசூர், அதர்வண, சாம வேதங்களாகக் கருதப்படுகின்றன என்பது வைணவர்களின் நம்பிக்கை.

நம்மாழ்வாரின் பெருமையினை உணர்ந்த கம்பர் நூறு கட்டளைக் கலித்துறைப்பாக்களால் அமைந்த சடகோபர் அந்தாதியினை இயற்றி, 'தருதை நீண்ட தயரதன் தான் தரும்' எனத் தொடங்கும் பாடலில் நம்மாழ்வாரைச் சிறப்பித்திருப்பதனை சுட்டிக்காட்டும் நாகர்கோவில் கிருஷ்ணன் **"கவிச்சக்ரவர்த்தி கம்பர் இராமகாதையைப் பாட புகுந்தபோது நம்மாழ்வாரையே முதற்கண் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்" (பக்தி வளர்த்த பன்னிருவர், ப.81)** என்று கூறி சிறப்பித்துள்ளதும் இங்கு நோக்கத் தக்கது.

நம்மாழ்வாரின் அருளிச் செயல்களுக்கு உண்டான தனிச்சிறப்பினை உணர்த்தும் ந.சுப்புரெட்டியார் **"உயர்வற உயர்நலம் உடையவனால் மதி நலம் அருளப்பெற்ற சடகோபன் என்னும் நம்மாழ்வார் அருளிச் செய்த பிரபந்தங்கள் நான்கு. அவை திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பவை" (சடகோபன் செந்தமிழ், ப.135)** எனச் சுட்டிக்காட்டி நம்மாழ்வாரின் அருளிச் செயல்களுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்.

இவை தவிர நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தின் நான்கு பிரிவினுள் இயற்பா தொகுதியில் வைக்கப்பட்டுள்ள திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகிய பிரபந்தங்களை முதல் மூன்று வேதங்களின் தானத்தில் கொள்ள வேண்டும், திருவாய் மொழியினை சாம வேதத்தின் தானத்தில் கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"பண்ணார் பாடலாகிய**

திருவாய்மொழியைப் பண்புரை வேதம், இசை கொள்வேதம் என்னும் தொடர்கள், 'பண்ணார் பாடல்' என்கிறபடியே திருவாய்மொழி பண்ணையும் இசையையும் உடையதாகையாலே சாமவேதத்திற்குப் பண்ணும் இசையும் உண்டு என்பதை அறிவிக்கின்றன" (சடகோபன் செந்தமிழ், ப.135) என்று கூறி நம்மாழ்வாரின் அருளிச் செயலின் சிறப்பினை வலுப்படுத்துகிறார்.

திருவிருத்தம்

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் இயற்பா பகுதியில் இடம்பெற்றுள்ள திருவிருத்தம் கட்டளைக் கலித்துறையில் அமைந்த நூறு பாசுரங்களைக் கொண்டது; பாசுரங்கள் அந்தாதித் தொடையால் அமைந்தவை.

வடமொழியிலுள்ள 'வ்ருத்தம்' என்ற சொல் தமிழில் விருத்தம் எனத் திரிந்து பல பொருள்களையுடைய இச்சொல் 'செய்தி' எனும் பொருளைப் பெற்றது எனக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் ஆழ்வார் தமது அன்பு மிகுதியால் பல செய்திகளை எம்பெருமான் முன்னிலையில் விண்ணப்பம் செய்தலால் திருவிருத்தம் எனும் திருநாமம் பெற்றது என்பதை, **"ஆழ்வார் தமது ஞானக் கண்ணுக்கு இலக்கான எம்பெருமானை நோக்கி 'தேவரீரை அனுபவித்தற்கு விரோதியான உடல் தொடர்புகளைப் போக்கியருள வேண்டும்' என்று சம்சார சம்பந்த நீக்கத்தை விரும்பும் முகத்தால் இவ்விருள் தருமாஞாலத்தில் தம் இருப்பு தமக்கு மிகவும் வெறுக்கத் தக்கதாய் இருக்கும் செய்தியையும், எம்பெருமானுடைய நித்தியானுபவத்திலேயே தமக்குக் காதல் கிளர்ந்து நிற்கும் செய்தியையும் சொல்லுகின்றதாக அமைகின்றது" (சடகோபன் செந்தமிழ், ப.156)** என்றவாறு எடுத்துரைக்கிறார்.

அதோடு மட்டுமின்றி 'திரு'என்ற சொல்லானது வடமொழியில் 'ஸ்ரீ' எனப்படுவது போல தமிழில் மேன்மையுடைய அனைத்துப் பொருட்களுக்கும் சிறப்புச் சொல்லாகி அவற்றிற்குப் பெருமைப் பொருளைக் காட்டும் எனக்குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் **"விருத்தம் என்னும் சொல் செய்தியைக் கூறும் நூலை உணர்த்துகின்றது" (சடகோபன் செந்தமிழ், ப.156)** எனச் சுட்டிக்காட்டி விளக்கமளிக்கிறார்.

இத்தன்மையினால் சிறப்புபெற்ற திருவித்தம் வெளிப்படைப் பொருளையும், உள்ளுறைப் பொருளையும் கொண்டதாய்ச் சொற்செறிவு, பொருட் பொலிவு, ஆழ்ந்த கருத்து, தொனிப்பொருள், கற்பனை, அலங்காரம் முதலிய சிறப்புகளால் உயர்ந்து விளங்கி எம்பெருமானை அகப்பொருள் நெறியில் அனுபவிப்பதற்கு ஏற்றதாய் அமைந்திருப்பதனை சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் தூது போகுமாறு சொன்னவிடத்தும் போகாத மேகங்களைக் குறித்து தலைவி நிலையில் நம்மாழ்வார் பேசும் பாசுரமான,

"இசைமின்கள் தூதென் றிசைத்தால்
இசையிலம்; என் தலைமேல்
அசைமின்கள் என்றால் அசையும்கொலாம்
அம்பொன் மாமணிகள்
திசைமின் மிளிரும் திருவேங்
கடத்தவன் தாள் சிமயம்
மிசைமின் மிளிரிய போவான்
வழிக்கொண்ட மேகங்களே" (திருவிருத்தம், 31)

என்ற பாசுரத்தில் திருமலை நோக்கிப் போகும் மேகங்களை நோக்கித் தமக்காகத் தூது போகச் சொன்னால் போக மறுத்து விடுகின்ற நிலையில், அம்மேகங்களின் கால்களைத் தமது தலையில் படும்படி வைத்து வேண்டினால் அம்மேகங்கள் தூது செல்ல முற்படக்கூடும் என்பதை உணர்த்தியிருப்பதனைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் இவ்வாறு பலவாறாகக் கூறி நம்மாழ்வார் அலற்றுவதன் பயனினை **"மூடியிருந்து வேவதோர் கொள்கலம் மூடிதிறந்த விடத்து ஆவி எழுந்து முன்னின்ற வெப்பம் நீங்கினாற் போல, ஆற்றாமையால் உள்ளே மிக்கு நின்ற தாபத்தை வாய்விட்டு வெளியிட அது சிறிதளவு குறைதலாகும்" (சடகோபன் செந்தமிழ், ப.159)** என்றவாறு அனுபவித்து மகிழ்கிறார்.

திருவாசிரியம்

நம்மாழ்வாரின் இரண்டாவது பிரபந்தமாகக் கருதப்படும் இத்திருவாசிரியமும் அந்தாதித் தொடையில் அமையப் பெற்றிருக்கிறது. நாலாயிரத்தில் இயற்பாத் தொகுதியில் ஆறாவதாக அடைவுபடுத்தப் பட்டுள்ளது. இப்பிரபந்தத்தின் மொத்த பாசுரங்களின் எண்ணிக்கை ஏழு ஆகும். இவ்வேழு பாசுரங்களும் ஆசிரியப்பாவினால் அமையப் பெற்றிருப்பதால் 'திருவாசிரியம்' எனப்படுகிறது.

திருவாசிரியத்தின் இரண்டாம் பாசுரம் எம்பெருமானின் இணைத் தாமரை அடிகளைப் பேசி அனுபவிக்கும் நிலையினையும், மூன்றாம் பாசுரம் பாகவதத்தின் பெருமையினையும், நான்காம் பாசுரம் எம்பெருமானின் திருவடிகட்கு மங்களாசாசனம் செய்யும்போது தனக்கு வாய்க்காத ஏக்க நிலையினையும், ஐந்தாவது பாசுரம் எபெருமான் உலகளந்த சரிதையினை அனுசந்தித்துத் தம் மனம் அதில் மூழ்கிய நிலையினையும், ஆறாம் பாசுரம் உலகளந்த எம்பெருமானின் திருவடிகளை வணங்காமல் சிறுதெய்வங்களைக் கொண்டாடும் மக்களின் மீது கழிவிரக்கம் கொள்ளும் நிலையினையும், ஏழாம் பாசுரம் சம்சாரிகள் தமது நிலையில் இருந்து திருந்தாத வகையில் தாம் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருத்தலை நினைத்து மகிழும் நிலையையும் மிகத் திறம்பட அமைந்திருப்பதனைச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் முதல் பாசுரமாகிய "செக்கர் மா முகிலுடுத்து" (திருவாசிரியம் – 1) என்ற பாசுரத்தில் எம்பெருமானின் திருமேனிப் பேரெழிலை நம்மாழ்வார் ஆழ்ந்து அனுபவிக்கும் தன்மையினை, **"எம்பெருமான் திருவரையில் திருப்பீதாம்பரம் சாத்திக் கொண்டும், திருமுடியில் திருவபிடகேம் அணிந்து கொண்டும், இப்படியே பலபல திருவாபரணங்களைப் பூண்டு கொண்டும், செந்தாமரை போன்ற திருவாயும் திருக்கண்களும் விளங்கவும், பச்சையான திருமேனி நிறமானது மற்ற சோலைகளெல்லாவற்றையும் விடச் சிறப்பாக விளங்கவும் கடலிடை திருவனந்தாழ்வான் என்னும் திருவணையின் மீதேறி திருக்கண் வளர்ந்தருள்கிறபடிக்கு எடுத்துக்காட்டாக வருணிக்கப் பொருத்தமான உவமையொன்றில்லாமையால் இப்பொருள் உவமையொன்றைக் கையாளுகின்றார். மரகதப் பச்சையான ஒருமலை செந்நிறமான மேகத்தைப் பீதக ஆடையாக உடுத்திக் கொண்டும், கண்டிகை இடத்தில் சந்திரனை அணிந்து கொண்டும், முத்துச்சரம் முதலான மற்றும் பல திருவாபரணங்களின் இடத்திலே நட்சத்திரங்களைப் புனைந்து கொண்டும், திருவதரம் திருக்கண்களின் இடத்தில் பவளமயமான பிரதேசங்களைக் கொண்டும் ஒரு கடலில் பள்ளி கொண்டிருந்தால் எப்படியிருக்குமோ அப்படி யிரா நின்றது எம்பெருமான் திருக்கோலத்துடன் பள்ளி**

கொண்டிருக்கும் நிலை. இங்கு எம்பெருமான் – உபமேயம்; மலை –உவமானம், பீதாம்பரம் – உவமேயம்; செக்கர் மாமுகில் – உவமானம். திருமேனியழகிலும் அறிதுயில் கொண்ட அழகிலும் இந்த ஆழ்வார் நெஞ்சைப் பறிகொடுத்து விட்டாராகையாலே ஒரு வினை முற்றுடன் பாசுரத்தை முடிக்க முடியாமல் 'மூவுலகளந்த சேவடி யோயே!' என்று கண்ணாஞ் கழலையிட்டுக் கிடக்கின்றார்" (சடகோபன் செந்தமிழ், ப.164–165) என எடுத்துக்காட்டித் தெளிவாக்குகிறார்.

பெரிய திருவந்தாதி

நாலாயிரத்தின் இயற்பாத் தொகுதியில் ஏழாவது பிரபந்தமாக அடைவு செய்யப்பட்டிருக்கும் இப்பிரபந்தமும் அந்தாதித் தொடையிலேயே அமைந்து முதற்பாசுரத்தின் முதற்சீரும் இறுதி பாசுரத்தின் இறுதிச்சீரும் மண்மாத்தும் அமைந்திருக்கும் தன்மையதாகும்.

எண்பத்து ஏழு பாசுரங்கள் கொண்ட பெரிய திருவந்தாதி நம்மாழ்வார் எம்பெருமானை அனுபவித்த திருவிருத்தத்திலிருந்தும், எம்பெருமானின் திருமேனிப் பேரெழிலில் ஈடுபடும் திருவாசிரிய நிலையிருந்தும் மாறுபட்டு பெரிய திருவந்தாதியில் பக்தி, பிரபத்தி ஆகிய சரணாகதிகளைக்காண முடிகிறது என்பதை,

"நாளால் அமர்முயன்ற வல்லரக்கன் இன்உயிரை
வாழா வகைவலிதல் நின்வலியே ஆழாத
பாரும் நீ; வானும் நீ; காலும் நீ; தீயும் நீ
நீரும் நீ யாய் நின்ற நீ" (பெரிய., திருவந்., 11)

என்ற பாசுரத்தில் தான் யார்க்கும் தலை சாய்ப்பதில்லை என்ற செருக்கிலிருந்த இராவணனை அழித்த செயலினை அனைவரும் மெச்சினாலும் தசமுகனின் உறுதியைக் காட்டிலும் வலிதான எனது உறுதியைச் சிதைத்து என்னை வாய்திறந்து பாடும்படி செய்த பெருமானுக்கு இது ஓர் அரிய செயலல்ல என்று நம்மாழ்வார் கூறுவதும்,

"பூவையும் காயாவும் நிலமும் பூக்கின்ற
காவிமல ரென்றுங் காண்டோறும் – பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
எல்லாம் பிரானுருவே யென்று" (பெரிய., திருவந்., 73)

என்ற பாசுரத்தில் **"மலர்கின்ற பூவைப் பூவைப்பூ, காயாம்பூ, நீலோற்பலம், கழுநீர்ப்பூ இவற்றைக் காணும்போதெல்லாம் நம்மாழ்வாருக்கு எம்பெருமான் உருவைக் கண்டதாக அனுபவம் ஏற்பட்டு உள்ளமும் பூரிக்கின்றது" (சடகோபன் செந்தமிழ், ப.170)** என எடுத்துரைக்கும் ந. சுப்புரெட்டியார் இவ்வாறு பூரித்தாலாகிய செயலில் நம்மாழ்வார் தாம் கண்டு பூரித்தது பூக்களேயொழிய எம்பெருமானது திருவுருவமல்ல என்று தெளிந்து கொண்டாலும் அடுத்த கணத்திலே இது மறந்துபோய் பழைய பிரமமே திரும்பவும் ஏற்பட்டுப் பிரமிப்பது தெளிவதுமாய் நித்தியம் செல்லுவது சரணாகதியின் அடிப்படைய என்பதை உணர்த்துவதனை **"போலியான பொருள்களைக் கண்ட மாத்திரத்திலே ஆவியும் உடலும் பூரிக்கும் படியான பேறு எனக்கல்லவா உள்ளது என்றவாறு கொள்ளவேண்டும்" (சடகோபன் செந்தமிழ், ப.171)** என்று கூறி தெளிவுபடுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்.

திருவாய்மொழி

ஏனையவற்றினைப் போன்றே இத்திருவாய்மொழிப் பிரபந்தமும் அந்தாதித் தொடையால் அமைந்து, முதற் பாசுரத்தின் தொடக்கச் சீரும் இறுதிப் பாசுரத்தின் ஈற்றுச்சீரும் மண்டலித்து அமைந்த நிலையில், ஒவ்வொரு திருவாய்மொழியின் பலச் சுருதி பாசுரத்தி ஆழ்வாரின் முத்திரை அமைந்துள்ளது தனிச்சிறப்பானது எனக்கூறும் ந.சுப்புரெட்டியார் திருவாய்மொழியின் நூறு பதிகங்களும் நம்மாழ்வாரின் தனித்தன்மை ஓங்கிய நிலையினை உணர்த்துவதைப் பற்றிக் குறிப்பிடுகையில், **“இவர்தம் பாசுரங்கள் தானான தன்மையில் நின்று ஆழ்வார் பேசுவதாக அமைந்த பாசுரங்களாக 73 பதிகங்களுள் பிராட்டியின் நிலையை ஏறிட்டுக்கொண்டு பேசும் பாசுரங்களாக அமைந்தவை 27 பதிகங்கள் என்று இருவகையில் அமையும். முன்னவற்றை புறத்துறை பாடல்களென்றும், பின்னவற்றை அகத்துறை பாடல்கள் என்றும் கருதலாம்” (சடகோபன் செந்தமிழ், ப.172)** என்கிறார்.

அகத்துறைக் கூறுகள்

பரம்பொருளாகிய இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடையே ஒன்பது வகையான தொடர்புகள் உள்ளதென்பதை வைணவத் தத்துவம் எடுத்துரைக்கிறது. இத்தொடர்புகளை அறிந்து கொள்வதே சம்பந்த ஞானம் எனப்படுகிறது. அகப்பொருள் தத்துவம் இந்த சம்பந்த ஞானத்தைத் தழுவியே அமைகிறது.

திருவாய்மொழியின் அகப்பொருள் துறையாகக் கருதப்படும் பாசுரங்களில் இந்தச் சம்பந்த ஞானத்தின் பெருமை பற்றி நம்மாழ்வார்,

“அடங்கெழில் சம்பத்து
அடங்கக் கண்டு ஈசன்
அடங்கெழில் அஃது என்று
அடங்குக உள்ளே”   (திருவாய்–1:2:7)

என்ற பாசுரத்தில் சுட்டிக்காட்டுவதை உணர்த்தும் ந.சுப்புரெட்டியார் **“நவ்வித சம்பந்த உறவுகளில் நான்காவது சம்பந்தமாக வரும் நாயக–நாயகி உறவே அகப்பொருள் தத்துவமாக விரிகின்றது. இந்த உறவே ஏனையவை எல்லாவற்றுள்ளும் சிறந்தது; உயிராயது” (சடகோபன் செந்தமிழ், ப.183)**

அதோடு மட்டுமின்றி பரமான்மாவைத் தலைவனாகவும், சீவான்மாவைத் தலைவியாகவும் வைத்து விளக்கும் பாடல்கள் நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்திலும், தேவராத்திலும் நிரம்பக் காணப் பெற்றாலும் **“வைணவப் பெருமக்களே சங்க கால நெறியியையொட்டி பிற்காலத் தத்துவ முறையைக் கலந்து ஓர் அகப்பொருள் நெறியினை அமைத்துக் காட்டிய பெருமையினைப் பெற்றனர்” (சடகோபன் செந்தமிழ், ப.183)** எனச் சுட்டிக்காட்டும் ந.சுப்புரெட்டியார் ஆழ்வார்களுள் குறிப்பாக நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் பெண் தன்மை எய்தி பல திருக்கோயிலுள்ள எம்பெருமான்களையெல்லாம் பாடி அனுபவித்து மகிழ்ந்ததை அவர்களுடைய பல திருப்பாசுரங்களில் காண முடிகிறது என்பதனையும் வலியுறுத்துகிறார்.

திருவாய்மொழியிலுள்ள அகத்துறைப் பாசுரங்களான இருபத்தியேழும் தாய், தோழி, மகள் ஆகிய பாவனையில் பெண் நிலையிலிருந்து நம்மாழ்வாரால் பாடப்பட்டிருப்பது தனிச்சிறப்பு பெற்றிருப்பதனையும் வலியுறுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்.

திருவாய்மொழியின் பெருமை

ஆழ்வார்களுள் நம்மாழ்வார் மிகவும் போற்றப்படுவதைப் போல அவர் அருளிச்செய்த பிரபந்தங்களுள் திருவாய்மொழியானது மிக உயர்ந்ததாகப் போற்றப்படுகின்றது.

திருவாய்மொழியின் சிறப்பினை விவரிக்கும் ந.சுப்புரெட்டியார் பல முன்னுதாரணங்களை எடுத்துக்காட்டுகிறார்.

- திருவாய்மொழியினைப் பாராட்டித் தமிழிலும் வடமொழியிலும் பல நூல்கள் தோன்றியுள்ள சிறப்பு.
- நம்மாழ்வார் காலத்திலேயே அவருடைய சீடரான மதுரகவி ஆழ்வார் "நண்ணித் தென்குரு கூர்நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறுமென் நாவுக்கே" என்று தொடங்கும் பத்து பாசுரங்கள் கொண்ட கண்ணி நுண் சிறுத்தாம்பு எனும் பிரபந்தத்தின் முதல் பாசுரத்திலேயே தமது குருநாதரான நம்மாழ்வாரின் பெயரைச் சொன்னாலே தன் நாவுக்கு மிகவும் இனிக்கும் என்று கூறுவது.
- கம்பநாடன் சடகோபனாகிய நம்மாழ்வாரைச் சிறப்பித்து 'சடகோபர் அந்தாதி' என்ற இனிய நூலை இயற்றியது.
- மணவாள மாமுனிகள் திருவாய்மொழியின் மீதுள்ள அளவற்ற பற்றினால், 'திருவாய்மொழி நூற்றந்தாதி' என்ற அருளி திருவாய்மொழியினைச் சிறப்பித்துள்ளது.
- வேதாந்த தேசிகர் 'திராவிடோபநிஷத் சங்கதி', 'திராவிடோப நிஷத் தாத்தபரியரத் நாவளி' ஆகிய சிறந்த இரு வடமொழி நூல்களால் திருவாய்மொழியின் சிறப்பை பாராட்டியுள்ளது.
- திருக்குருகூரில் நம்மாழ்வார் குடிவழி வந்த, கவி பாடுவதில் சிறந்து விளங்கிய புலவர்களால் நம்மாழ்வாரின் பெருமைகளையும், அவரது நூற் சிறப்புகளையும் விளக்கும் விதமாக மாறனலங்காரம், மாறன் பாப்பாவினம், மாறன் திருப்பதிக் கோவை, 'மாறனிகப் பொருள்' போன்ற பல நூல்களை இயற்றியுள்ளதும், திருவேங்கடத் துறைவான் கவிராயர் இயற்றிய 'மாறன் கோவை' என்ற நூல் ஓர் அரிய படைப்பாக இருப்பது.
- திருவாய்மொழி அனைத்து செய்திகளாலும் சிறந்ததொரு நூலாக இருப்பதால் தமிழ் நூல்களின் உரையாசிரியர்கள் திருவாய்மொழியிலிருந்து இலக்கியக் கருத்துகளுக்கும், இலக்கணக் குறிப்புகளுக்கும் பல மேற்கோள்கள் எடுத்துக் காட்டியுள்ளது.
- பரிமேலழகர் தனது திருக்குறள் உரையில் "அற்றது பற்றெனில் உற்றது வீடு" (திருவாய்–1:2:5) என்ற பகுதியை,

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்" **(குறள். 349)**
"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே

பேரா இயற்கை தரும்" (குறள். 370)

என்ற குறளின் விளக்கவுரையில்,

"களிப்பும், கவர்வு மற்றுப்

பிறப்புப் பிணி மூப்பிறப்பற்று

ஒளிக்கொண்ட சோதியு மாய்

உடன்கூடுவ தென்றுகொலோ" (திருவாய்–2:3:10)

என்ற திருவாய்மொழியின் பாசுரப்பகுதியை 'களிப்பும் கவற்சிகளும் பிறப்பிறப்பும் பிணி முப்பிறப்புக்களும்' முதலியன இன்றி உயிர் நிரதிசய இன்பத்தாய் நிற்றலின் வீட்டினைப் 'பேரா இயற்கை' என்றார் என்று உரைநடைப்படுத்தி விளக்கும் தன்மை.

- சேனாவரையர் 'நீட்டும் வழி நீட்டல்' என்ற இலக்கணக் குறிப்பிற்கு 'விடுமின் முற்றவும்' என்ற பாசுரப்பகுதியாகிய 'விழுமின்' என்பதை எடுத்துக்காட்டியுள்ள பாங்கு.
- நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் செய்யுளில் நூற்பாவில் 'தரவின்றாதித் தாழிசை பெற்றும்' (நூற்பா. 149) என்பதன் உரையில் திருவாய்மொழியினை எடுத்துக் கூறுவதோடு, திருவாய்மொழியின் பாசுரங்கள் ஒவ்வொன்றும் 'தாழிசைகள்' என்றும், எழுத்தெண்ணி வரும் கட்டளைக் கலித்துறையைத் 'தரவுக் கொச்சம்' என்று உணர்த்தும் பாங்கு.

இவையனைத்தும் (சடகோபன் செந்தமிழ், பக்.173–177) நம்மாழ்வாரையும், திருவாய்மொழியினையும் மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றும் தன்மையினை அரிய ஏதுவான காரணிகளாகின்றன என்பதை வலியுறுத்தும் ந.சுப்புரெட்டியார் **"திருவாய்மொழி பல வகையிலும் சிறப்புற்று விளங்குவதனால் உரையாசிரியர் பலரும் பிற்கால நூலாசிரியர்களும் அதிலிருந்து இவ்வாறு பல மேற்கோள்கள் காட்டித் தம் படைப்புகளைச் சிறப்பித்து கொள்ளலாயினர்" (சடகோபன் செந்தமிழ், ப.178)** என்று சுட்டிக்காட்டுவது நம்மாழ்வாரின் அருளிச் செயலுக்கு உண்டான தனி முக்கியத்துவத்தினை உணர்த்துவதாய் அமைகிறது.

தொகுப்புரை

- பன்னிரு ஆழ்வார்களும் திருமால் எழுந்தருளியுள்ள திவ்ய தேசங்களில் ஈடுபாடு கொண்டு பாடி இருப்பினும் அவர்களுள் திவ்ய தேசங்களை அனுபவிப்பதற்கு என்றே தோன்றியவர் திருமங்கையாழ்வார் என்று அவரது சிறப்பையும், அவர் அருளிச் செய்த பாசுரங்களின் பக்தித் திறத்தையும் போற்றியுரைத்துள்ளார்.
- பரம்பொருளாகிய திருமால் தன்நெஞ்சில் வந்து புகுந்து அருள் செய்ததை உருகிப்பாடிய திருமங்கையாழ்வாரின் பாசுரங்களைப் படிக்கும்போது தன் நெஞ்சிலும் இறைவன் குடிபுகுகிற அதிசயத்தை உணர முடிகிறத என்று பேராசிரியர் குறிப்பிடுவதிலிருந்து திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் அவருக்கு இருந்த ஈடுபாடு புலப்படுத்திக் காட்டப்படுகின்றது.
- திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் இடம்பெற்றுள்ள இயற்கை வருணனைகளில் ஈடுபட்ட பேராசிரியர் அவற்றை அனுபவித்த விதம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

- பெரியாழ்வாரின் அருளிச் செயல்களில் திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தம் ஆகாதென்பதை சான்றுகளுடன் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளமை விளக்கப்பட்டுள்ளது.
- திருமாலின் அவதாரங்களில் ஒன்றான கண்ணன் அவதாரத்தில் பெரியாழ்வாருக்கு இருந்த ஈடுபாடும் கண்ணனின் சிறுகுறும்புகளில் பெரியாழ்வார் தம் மனதைப் பறிகொடுத்த நிலையும் புலப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.
- கண்ணன் குழலூதுவதைக் காட்டும் பெரியாழ்வாரின் பாசுரத்தில் ஈடுபட்ட ந.சுப்புரெட்டியார் அப்பாசுரத்தினை விவரிக்கும் பாங்கு சுவைபட அமைந்திருப்பது பெரியாழ்வாரின் பாசுரங்களில் அவருக்கிருந்த எல்லையற்ற அன்பையும், அனுபவத்தினையும் காட்டுகிறது.
- வைணவத் திருத்தலங்கள் பலவற்றையும் மங்களாசாசனம் செய்த திருமழிசையாழ்வார் திருவேங்கட மலையைப் பாடும் நயம் அவருக்கே உரிய தனிச்சிறப்பு என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ள கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- கூனியின் முதுகில் இராமபிரான் உருண்டை கொண்டடித்த செய்தி திருமழிசையாழ்வாரின் திருப்பாசுரங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளதென்று சான்று காட்டி பேராசிரியர் எடுத்துரைப்பதிலிருந்து திருமழிசையாழ்வாரின் பாசுரங்களில் அவருக்கிருந்த ஆழ்ந்த வாசிப்பும், அக்கருத்திற்கு அரண் சேர்க்க அவருக்கிருந்த பன்நூல் பயிற்சியும் புலனாகிறது.
- இறைவனையே மணக்கவேண்டுமென்ற விருப்பத்தோடு ஆண்டாள் நாச்சியார் திருவாய் மலர்ந்த திருப்பாவைப் பாடல்கள் முப்பதும், வைணவத் தத்துவத்தினைச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளமை விளக்கப்பட்டுள்ளது.
- பாணர்குலத்திற்கு மட்டுமின்றிப் பக்தி குலத்திற்கும் பெருமை சேர்த்தவர் திருப்பாணாழ்வாரென்றும் திருவரங்கப் பெருமானே இவருக்குத் தாரக, போசக, போக்கியமாக அமைந்துவிட்டான் என்றும் அவர்தம் அருளிச் செயல்களை ஆழ்ந்துக் கற்றுத் தேர்ந்த பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.
- முதலாழ்வார்கள் மூவரும் பாடிய திருவந்தாதிகளில் மனதைப் பறிகொடுத்த பேராசிரியர் அவற்றில் இடம்பெற்றுள்ள இயற்கை வருணனைகளில் பெரிதும் ஈடுபட்டு அனுபவித்த திறம் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.
- தொண்டரடிப் பொடியாழ்வாருக்குத் திருமாலின் மீதிருந்த பக்தியையும், குலசேகர ஆழ்வாருக்கு திருமாலின் விபவ அவதாரங்களின் மீதிருந்த பற்றினையும் அவர்தம் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட ந.சுப்புரெட்டியார் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.
- நம்மாழ்வார் செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகிய பிரபந்தங்களை முதல் மூன்று வேதங்களின் இடங்களில் கொள்ள வேண்டுமென்றும், திருவாய் மொழியினை சாமவேதத்தின் இடத்தில் வைத்துப் போற்ற வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் வைணவப் பற்றையும் அவர்தம் நுண்ணியத் திறனாய்வுப் போக்கையும் ஆழ்வார் பெருமக்கள் அருளிச் செய்த அருளிச் செயல்களில் அவருக்கு இருந்த ஈடுபாட்டையும் வெளிப்படுத்திக் காட்டும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் இயல்தோறும் கண்டறியப்பட்ட மெய்மைகள் இப்பகுதியில் முடிவுரையாகத் தரப்பெற்றுள்ளன.

மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு கூறாகப் பயணம் விளங்குகின்ற தன்மையும் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள பயணம் பற்றிய குறிப்புகளும் பக்தி இலக்கிய காலத்தில் அடியார்கள் மேற்கொண்ட திருத்தல பயணங்கள் குறித்த செய்திகளும் ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் மேற்கொண்ட தலப்பயணமும், அப்பயணத்தின்போது அவர் மனதில் தோன்றிய எண்ணங்களும் ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளன. தலப்பயணம் மேற்கொள்ளும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர் செல்ல இருக்கும் தலத்திற்கு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பாசுரங்களைச் சிந்தித்துக் கொண்டே செல்லும் வழக்கமுடையவர் என்பது சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

தான் வணங்கிய திருத்தலம் குறித்த வரலாற்றை நுணுகி ஆராய்ந்து எடுத்துரைக்கும் திறம்மிக்கவராகப் பேராசிரியர் விளங்கியதை இவ்வியலின் வழி கண்டுணர முடிகிறது. பயண நூல்களுக்குச் சுவை சேர்க்கும் வகையில் இறைவனின் சிறப்பையும் அடியார்களுக்கு அருளும் கருணைத்திறத்தையும் புராணங்களின் வழியாக எடுத்துரைத்து பக்தியுணர்வை மேம்படுத்தும் பேராசிரியரின் புராணப் புலமை இவ்வியலில் தெளிவுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. வைணவ திவ்விய தேசங்களில் எழுந்தருளியுள்ள திருமாலின் நின்ற கோலம், கிடந்த கோலம், இருந்த கோலம், நடந்த கோலம் எனும் நால்வகைக் கோலங்களின் சிறப்பையும் விளக்கியுரைத்து திருநீர்மலைத் திருத்தலத்தில் இந்நான்கு கோலங்களிலும் இறைவன் இருப்பதை நுணுகி ஆய்ந்துரைத்து பல்வறு சயனக்கோலங்களையும், அக்கோலங்களில் அருள் வழங்கும் திருமாலின் சிறப்புகளையும் நேரில் கண்டு சுவைபட பதிவு செய்துள்ள பேராசிரியரின் நுண்மான் நுழைபுலம் விளக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்கள் அமைந்திருக்கக்கூடிய அமைவிடம், அத்தலங்களுக்குச் செல்வதற்கான வழிகள், அங்கு உறையும் திருமால் மற்றும் திருமகளின் பெயர்கள் தீர்த்தச் சிறப்பு, வழிபட்டு பேறுபெற்றோர் ஆகியவற்றை எடுத்துரைத்து திருத்தலப் பயண இலக்கிய முன்னோடியாகப் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் திகழ்ந்துள்ளமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. திருத்தலங்கள் அமைந்துள்ள இயற்கைச் சூழலை பேராசிரியர்

எடுத்துரைப்பதன் வாயிலாக இயற்கையின் மீது அவருக்கிருந்த ஈடுபாடு புலப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

கோயிலின் அங்கங்களான கோபுரம், விமானம், மண்டபங்கள், கொடிமரம், சிற்பங்கள் ஆகியவை குறித்த பொதுவான விளக்கங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. திருவரங்கத்தில் உள்ள ஏழு மதில்களின் சிறப்பையும் திருவண்பரிசாரத் திருத்தலத்தில் உள்ள திருமதிலின் பெருமையைம் ந.சுப்புரெட்டியார் காரண காரிய இயல்புகளுடன் எடுத்துரைத்துள்ள பாங்கு விளக்கப்பட்டுள்ளது.

திருக்கண்டியூர் திருத்தலத்தில் அமைந்துள்ள மூன்று தள விமானங்களின் சிறப்பையும், அவ்விமானம் தாமரைவடிவில் இருப்பதற்காக காரணத்தையும் நுணுகி ஆராய்ந்து பேராசிரியர் எடுத்துரைத்துள்ள திறம் விளக்கப்பட்டுள்ளது. திருமாலின் பெயரிலும் திருமகளின் பெயரிலும் விமானங்கள் அமைக்கும் முறை வைணவத் தலங்களில் இருந்துள்ளமையைத் திருநறையூர், திருநாகை ஆகிய தலங்களின் விமானங்களைச் சான்று காட்டி விளக்கியுள்ள தன்மை பேராசிரியரின் நுணுகி நோக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதை அறியமுடிகின்றது.

திருமால் திருத்தலங்களில் புண்ணிய ஆறுகள் பாய்கிற இடங்களில் அமைந்துள்ள தலங்கள் மிகவும் சிறப்புடையன என்றும், அச்சிறப்புக்குக் காரணம் மூர்த்தியோடு புனித தீர்த்தங்களும் அங்கு அமைந்திருப்பதே என்றும் ந.சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ள செய்திகள் ஆராயப்பட்டுள்ளன. கோயிலின் அமைப்பு முறைகளைச் சுட்டுவதோடு மட்டுமன்றி அங்குள்ள கல்வெட்டுகளின் வழி வெளிப்படும் கோயில் குறித்த செய்திகளை நிரல்பட எடுத்துரைப்பதன் வழி பேராசிரியருக்குக் கல்வெட்டுத்துறையில் இருந்த பயிற்சியும் புலப்படுத்திக் காட்டப்படுகின்றது.

தமிழகத்தில் திருமால் வழிபாடு பண்டைய காலம் முதலே வழக்கில் இருந்து வந்துள்ளமை சான்றுகளோடு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. திருமால் கோயில்களில் நடைபெறும் நாள்வழிபாடு, சிறப்பு வழிபாடு, வழிபாட்டின் பயன் ஆகியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன. திருவரங்கத்தில் வழக்கத்தில் உள்ள வழிபாட்டு முறைகளும் திருக்கரம்பனூர் தலத்தில் நடைபெறும் மும்மூர்த்தி வழிபாடும், திருமாலிருஞ்சோலை வழிபாடும், ஸ்ரீவரமங்கை திருத்தலத்தின் எண்ணெய்க்காப்பு திருமஞ்சன வாழிபாடும் திருக்கச்சியில் நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அத்திரவரதர் வழிபாடும் விளக்கியுரைக்கப்பட்டுள்ளன.

விசிட்டாத்துவிதத் தத்துவத்தின் விளக்கம் சித்து, சித்தின் வகையான பக்தர், முக்தர், நித்தியர் ஆகியோரின் தன்மை விளக்கப்பட்டுள்ளது. இம்மூவகையினரைப் பற்றி ஆழ்வார்களின் பாசுரங்களிலும், ஆச்சாரியர்களின் விளக்க உரைகளிலும் உள்ள

செய்திகள் அனைவருக்கும் எளிதில் விளங்கும் வகையில் பேராசிரியர் எடுத்துரைத்துள்ளத் திறம் ஆராயப்பட்டுள்ளது.

அசித்து எனப்படும் அறிவற்ற பொருளின் தன்மை அவற்றின் மூன்று நிலைகளான சுத்த சத்துவம், மிசிர அத்துவம், சத்துவ சூனியம் ஆகியவற்றின் இயல்பு விளக்கப்பட்டுள்ளது. ஈசுவரனான திருமாலின் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை ஆகிய ஐவகை நிலைகளை ஆழ்வார்களின் பாசுரங்கள் வழி பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் விளக்கியுரைத்துள்ள பாங்கு இவ்வியலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. திருமாலின் பத்து அவதாரங்களும், அவை எடுக்கப்பட்டதன் காரணமும் அவதாரச் சிறப்பும் அவ்வவதாரங்களின் வழியே வெளிப்படும் உள்ளார்ந்த தத்துவமும் ஆய்ந்துரைக்கப்பட்டுள்ள.

திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றான பரசுராம அவதாரத்திற்கு தனிப்பட்ட வழிபாடுகளோ கோயில்களோ இல்லாமல் இருப்பதற்குப் பேராசிரியர் காட்டும் காரணம் அவரது புலமைக்குச் சான்றாகவும் வைண மெய்யியலில் அவருக்கிருந்த ஆழத்தையும் காட்டுகிறது.

இறைவனை அடையும் நெறிகளாக கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தி யோகம், ஆசாரிய அபிமானம் ஆகிய ஐந்தையும் வைணவ மெய்யியல் குறிப்பிட்டாலும் அவற்றுள் முதல் மூன்று நிலைகளில் பயிற்சியடைவது அவசியமென்றும் அதன்பின்னரே ஏனைய இரண்டை மேற்கொள்ள வேண்டுமென்றும் ந.சுப்புரெட்டியார் விளக்கியுரைக்கின்றார். எவ்வித பயனையும் எதிர்பாராமல் செய்யப்படும் செயலால் (கருமத்தால்) மனம் தூய்மையடைவதையும் தியானத்தில் அழுந்துவதையும் எடுத்துரைத்து கருமயோகத்தின் சிறப்பை விவரிக்கும் பேராசிரியர், பெரியாழ்வாரையும் தொண்டரடிப்பொடியாழ்வாரையும் இந்நெறி நின்றவர்களாகக் குறிப்பிட்டு அவர் தம் பாசுரங்களிலிருந்து சான்று காட்டும் தன்மை விளக்கப்பட்டுள்ளது..

ஞானயோகத்தின் வழி நிற்பதன் பயன் தன் உயிரைப் பற்றி அறிவதும் அனைத்து உயிர்களும் சமம் எனக் கருதுவதுமாகும் என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ள கருத்து விளக்கப்பட்டுள்ளது. பக்தியோகத்தின் சிறப்பை எடுத்துரைத்து அதற்குள் அடங்கிய பரபக்தி, பரஞானம், பரமபக்தி ஆகியவற்றின் வழி நின்றவர்களுக்கு முறையே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோரை சான்று காட்டி விளக்கியுள்ள திறன் ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளது. கற்றவர், கல்லாதவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எவ்வித வேறுபாடுமின்றி அனைவராலும் இறைவனை அடைய மேற்கொள்ளப்படும் நெறியாகப் பிரபத்தி நெறியைக் குறிப்பிட்டு அவற்றின் அங்கங்களைப்பற்றி எடுத்துரைத்துள்ளமை விளக்கப்பட்டுள்ளது.

பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வாரின் பாசுரங்களிலும் திருமங்கையாழ்வாரின் பாசுரங்களிலும் பிரபக்தி நெறியாகிய சரணாகதி குறித்த செய்திகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளதைச் சான்றுகளுடன் எடுத்துரைத்துள்ளமையால் பாசுரங்களில் இருந்த பயிற்சியும், மெய்யியலில் இருந்த ஆழமும் புலப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. திருமாலுக்கும் அடியார்களுக்குமான உறவினை அனைவரும் உணரும் வகையில் தெளிவாகவும், எளிமையாகவும் பேராசிரியர் வெளிப்படுத்தியுள்ள தன்மை ஆராயப்பட்டுள்ளது.

பன்னிரு ஆழ்வார்களும் திருமால் எழுந்தருளியுள்ள திவ்ய தேசங்களில் ஈடுபாடு கொண்டு பாடி இருப்பினும் அவர்களுள் திவ்ய தேசங்களை அனுபவிப்பதற்கு என்றே தோன்றியவர் திருமங்கையாழ்வார் என்று அவரது சிறப்பையும், அவர் அருளிச் செய்த பாசுரங்களின் பக்தித் திறத்தையும் போற்றியுரைத்துள்ளார். பரம்பொருளாகிய திருமால் தன்நெஞ்சில் வந்து புகுந்து அருள் செய்ததை உருகிப்பாடிய திருமங்கையாழ்வாரின் பாசுரங்களைப் படிக்கும்போது தன் நெஞ்சிலும் இறைவன் குடிபுகுகிற அதிசயத்தை உணர முடிகிறத என்று பேராசிரியர் குறிப்பிடுவதிலிருந்து திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் அவருக்கு இருந்த ஈடுபாடு புலப்படுத்திக் காட்டப்படுகின்றது.

திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் இடம்பெற்றுள்ள இயற்கை வருணனைகளில் ஈடுபட்ட பேராசிரியர் அவற்றை அனுபவித்த விதம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பெரியாழ்வாரின் அருளிச் செயல்களில் திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தம் ஆகாதென்பதை சான்றுகளுடன் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளமை விளக்கப்பட்டுள்ளது. திருமாலின் அவதாரங்களில் ஒன்றான கண்ணன் அவதாரத்தில் பெரியாழ்வாருக்கு இருந்த ஈடுபாடும் கண்ணனின் சிறுகுறும்புகளில் பெரியாழ்வார் தம் மனதைப் பறிகொடுத்த நிலையும் புலப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

கண்ணன் குழலூதுவதைக் காட்டும் பெரியாழ்வாரின் பாசுரத்தில் ஈடுபட்ட ந.சுப்புரெட்டியார் அப்பாசுரத்தினை விவரிக்கும் பாங்கு சுவைபட அமைந்திருப்பது பெரியாழ்வாரின் பாசுரங்களில் அவருக்கிருந்த எல்லையற்ற அன்பையும், அனுபவத்தினையும் காட்டுகிறது. வைணவத் திருத்தலங்கள் பலவற்றையும் மங்களாசாசனம் செய்த திருமழிசையாழ்வார் திருவேங்கட மலையைப் பாடும் நயம் அவருக்கே உரிய தனிச்சிறப்பு என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ள கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கூனியின் முதுகில் இராமபிரான் உருண்டை கொண்டடித்த செய்தி திருமழிசையாழ்வாரின் திருப்பாசுரங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளதென்று சான்று காட்டி பேராசிரியர் எடுத்துரைப்பதிலிருந்து திருமழிசையாழ்வாரின் பாசுரங்களில் அவருக்கிருந்த ஆழ்ந்த வாசிப்பும், அக்கருத்திற்கு அரண் சேர்க்க அவருக்கிருந்த பன்நூல் பயிற்சியும்

புலனாகிறது. இறைவனையே மணக்கவேண்டுமென்ற விருப்பத்தோடு ஆண்டாள் நாச்சியார் திருவாய் மலர்ந்த திருப்பாவைப் பாடல்கள் முப்பதும், வைணவத் தத்துவத்தினைச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளமை விளக்கப்பட்டுள்ளது. பாணர்குலத்திற்கு மட்டுமின்றிப் பக்தி குலத்திற்கும் பெருமை சேர்த்தவர் திருப்பாணாழ்வாரென்றும் திருவரங்கப் பெருமானே இவருக்குத் தாரக, போசக, போக்கியமாக அமைந்துவிட்டான் என்றும் அவர்தம் அருளிச் செயல்களை ஆழ்ந்துக் கற்றுத் தேர்ந்த பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாழ்வார்கள் மூவரும் பாடிய திருவந்தாதிகளில் மனதைப் பறிகொடுத்த பேராசிரியர் அவற்றில் இடம்பெற்றுள்ள இயற்கை வருணனைகளில் பெரிதும் ஈடுபட்டு அனுபவித்த திறம் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. தொண்டரடிப் பொடியாழ்வாருக்குத் திருமாலின் மீதிருந்த பக்தியையும், குலசேகர ஆழ்வாருக்கு திருமாலின் விபவ அவதாரங்களின் மீதிருந்த பற்றினையும் அவர்தம் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட ந.சுப்புரெட்டியார் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். நம்மாழ்வார் செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகிய பிரபந்தங்களை முதல் மூன்று வேதங்களின் இடங்களில் கொள்ள வேண்டுமென்றும், திருவாய் மொழியினை சாமவேதத்தின் இடத்தில் வைத்துப் போற்ற வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால ஆய்வுக்களங்கள்

இவ்வாய்வினை முன்னோடியாகக் கொண்டு எதிர்காலத்தில் மேற்கொள்ளத்தக்க ஆய்வுக்களங்கள் இங்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

1. பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் உரைநடைத்திறன்.
2. தமிழ்ப் பயண இலக்கிய வளர்ச்சியில் பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் பங்கு.
3. பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் நூல்களும் சைவப்பற்றும்

துணைநூற்பட்டியல்

முதன்மைச் சான்றாதாரங்கள்

1. சுப்புரெட்டியார் . ந., – சடகோபன் செந்தமிழ்
வேங்கடம் பப்ளிகேஷன்ஸ்
அண்ணா நகர்
சென்னை – 600 040
முதற் பதிப்பு – 1989

2. சுப்புரெட்டியார் . ந., – பரகாலன் பைந்தமிழ்
வேங்கடம் பப்ளிகேஷன்ஸ்
அண்ணா நகர்
சென்னை – 600 040
முதற் பதிப்பு – 1992.

3. சுப்புரெட்டியார் . ந., – சோழநாட்டுத் திருப்பதிகள் (பகுதி–1)
அவ்வை பதிப்பகம்
அசோக் நகர்
சென்னை – 600 083
முதற் பதிப்பு – 2004

4. சுப்புரெட்டியார் . ந., – சோழநாட்டுத் திருப்பதிகள் (பகுதி–2)
அவ்வை பதிப்பகம்
அசோக் நகர்
சென்னை – 600 083
முதற் பதிப்பு – 2004

5. சுப்புரெட்டியார் . ந., – ஆழ்வார்களின் ஆரா அமுது
வேங்கடம் பப்ளிகேஷன்ஸ்
அண்ணா நகர்
சென்னை – 600 040
முதற் பதிப்பு – 1987

6. சுப்புரெட்டியார் . ந., – விட்டுச்சித்தன் விரித்த தமிழ்
வேங்கடம் பப்ளிகேஷன்ஸ்
அண்ணா நகர்
சென்னை – 600 040
முதற் பதிப்பு – 1987

7. சுப்புரெட்டியார் . ந., – நவவித சம்பந்தம்
வேங்கடம் பப்ளிகேஷன்ஸ்
அண்ணா நகர்
சென்னை – 600 040
முதற் பதிப்பு – 1994

8. சுப்புரெட்டியார் . ந., – பாண்டி நாட்டுத் திருப்பதிகள்
வேங்கடம் பப்ளிகேஷன்ஸ்
அண்ணா நகர்
சென்னை – 600 040
முதற் பதிப்பு – 1977

9.	சுப்புரெட்டியார் . ந.,	–	வைணவ உரைவளம் வேங்கடம் பப்ளிகேஷன்ஸ் சென்னை – 600 040 முதற் பதிப்பு – 1985
10.	சுப்புரெட்டியார் . ந.,	–	அர்த்த பஞ்சகம் வேங்கடம் பப்ளிகேஷன்ஸ் அண்ணா நகர் சென்னை – 600 040 முதற் பதிப்பு – 1994
11.	சுப்புரெட்டியார் . ந.,	–	வைணவமும் தமிழும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 154, டி.டி.கே.சாலை சென்னை – 600 040 முதற் பதிப்பு – 1987
12.	சுப்புரெட்டியார் . ந.,	–	மலைநாட்டுத் திருப்பதிகள் வேங்கடம் பப்ளிகேஷன்ஸ் அண்ணா நகர் சென்னை – 600 040 முதற் பதிப்பு – 1971
13.	சுப்புரெட்டியார் . ந.,	–	வடநாட்டுத் திருப்பதிகள் வேங்கடம் பப்ளிகேஷன்ஸ் அண்ணா நகர் சென்னை – 600 040 முதற் பதிப்பு – 1980
14.	சுப்புரெட்டியார் . ந.,	–	தொண்டை நாட்டுத் திருப்பதிகள் அவ்வை பதிப்பகம் அசோக் நகர் சென்னை – 600 083 முதற் பதிப்பு – 2006
15.	சுப்புரெட்டியார். ந.,	–	சிலநோக்கில் நாலாயிரம் வேங்கடம் பப்ளிகேஷன்ஸ் அண்ணா நகர் சென்னை – 600 040 முதற் பதிப்பு – 1998
16.	சுப்புரெட்டியார். ந.,	–	முக்தி நெறி வேங்கடம் பப்ளிகேஷன்ஸ் அண்ணா நகர் சென்னை – 600 040 முதற் பதிப்பு – 1982
17.	சுப்புரெட்டியார். ந.,	–	கலியன் குரல் அண்ணாமலைப் பல்கலைகழகம் சிதம்பரம் முதற் பதிப்பு – 1989

துணைமை ஆதாரங்கள்

1. அங்கமுத்து முதலியார். தி.நா., – தமிழகத் திருத்தலங்கள்
பாரத் புக் பீரோ, தி.நகர்
சென்னை – 600 017
முதற் பதிப்பு – 2001

2. அங்கமுத்து முதலியார். தி.நா., – தமிழகத் தெய்வத் திருத்தலங்கள்
இலக்குமி நிலையம்
சென்னை – 600 014
முதற் பதிப்பு –2004

3. அரங்கராஜன். இரா., – தமிழகக் கோயிற்கலை
கௌரி பிரிண்டர்ஸ்
மதுரை – 625 003
முதற் பதிப்பு –2000

4. அரிகேசவன். பெ., – வைணவம் அறிவோம் வாரீர்
இளங்கோ பதிப்பகம், வேலூர்
முதற் பதிப்பு –1996.

5. அருணாசலம். ப., – வைணவ சமயம்
பாரி புத்தக நிலையம்
தி. நகர், சென்னை – 600 017
முதற் பதிப்பு – 1982

6. அருணாசலம். மு., – வைணவ சமயம்
எண்.9, பாரதி நகர்,
முதல் தெரு, தி.நகர்.,
சென்னை – 600 017
முதற் பதிப்பு – 2002

7. ஆறுமுகம். பி., – தேனூரும் அழகர் விழா கட்டமைப்பும்
பாரதி புக்ஹவுஸ்
மதுரை – 625 001
முதற் பதிப்பு – 2009

8. இராமசாமி இராமநுசதாசர்., – ஸ்ரீ வைஷ்ணவம்
ஆழ்வார்கள் அமுத நிலையம்
சென்னை
முதற் பதிப்பு – 1983

9. இராமபத்திரன். ஆ., – வைணவம் தந்த வளம்
கங்கை புத்தக நிலையம்
தி.நகர்., சென்னை – 600 017
முதற் பதிப்பு – 1997

10. இராமநாதன். ஆறு., – தமிழர் வழிபாட்டு மரபுகள்
மெய்யப்பன் பதிப்பகம்
சிதம்பரம், முதற் பதிப்பு – 2006

11.	இராதாகிருஷ்ணப் பிள்ளை. எம்.,	–	தென்னாட்டுக் கோயில்கள் (பகுதி–1) வாசன் பதிப்பகம், சென்னை – 4 ஏழாம் பதிப்பு – 2013
12.	இராதாகிருஷ்ணப் பிள்ளை. எம்.,	–	தென்னாட்டுக் கோயில்கள் (பகுதி–2) அல்லையன் கம்பெனி சென்னை – 600 004 முதற் பதிப்பு – 1957
13.	இராஜகோபாலன். இரா.,	–	நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் சரணாகதி நெறி என்னெஸ் பப்ளிகேஷன்ஸ் உடுமலைப் பேட்டை 641 128 முதற் பதிப்பு – 1998
14.	இராஜகோபாலன். எம்.,	–	ஏழுமலையானின் எழில்மிகு கோயில்கள் ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் தி. நகர், சென்னை – 600 017 முதற் பதிப்பு – 1996
15.	கண்ணன். ரா.,	–	ஆழ்வார்கள் அருளிச் செயல் திரட்டு திருப்பதி தேவஸ்தான வெளியீடு முதற் பதிப்பு – 1984
16.	கிருஷ்ணவேணியம்மையார்.எஸ்.,	–	முமுட்சுப்படி திருமலை – திருப்பதி தேவஸ்தான வெளியீடு, திருப்பதி முதற் பதிப்பு – 1952
17.	குன்றக்குடி அடிகளார் (பதிப்பாசிரியர்)	–	திருக்குறள் உலகத் திருக்குறள் பேரவை குன்றக்குடி, முதற்பதிப்பு – 2016
18.	கோபாலகிருஷ்ணமாசாரியார்.வை.மு.,	–	வில்லிபாரதம் பதிப்பகமும் பதிப்பாண்டும் தெரியவில்லை
19.	கோவிந்தராச முதலியார். கா.ரா., (உரையாசிரியர்)	–	அகப்பொருள் விளக்கம் கழக வெளியீடு, சென்னை ஐந்தாம் பதிப்பு – 1980
20.	சகுந்தலா. ச.,	–	நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே பல்லவி பதிப்பகம், ஈரோடு முதற் பதிப்பு – 2017
21.	சம்பத்குமார்.,	–	தமிழ்நாட்டில் வைணவம் சஞ்சீவியார் பதிப்பகம் சென்னை – 600 015 முதற் பதிப்பு – 2006

22. சிவராமன். என்., – கோயில் திருத்தலங்கள் வரலாறு
விநாயகா பப்ளிகேஷன்
இராயப்பேட்டை
சென்னை – 600 014
முதற் பதிப்பு – 2003

23. சீனிவாசன். அரங்க., – வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள்
பாரி நிலையம்
சென்னை 600 108
முதற்பதிப்பு –1984.

24. சீனிவேங்கடசாமி. மயிலை., – தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
நாம் தமிழர் பதிப்பகம்
சென்னை – 600 014
முதற் பதிப்பு – 2003

25. சுகவனேச்வரன், அ.வெ., – இந்துமத நன்னெறிகளும் சம்பிரதாயங்களும்
கலா நிலையம், சென்னை – 600 004
முதற் பதிப்பு – 1996

26. சுப்பிரமணியன். ச.வே., சிவகாமி. ச., (பதிப்பாசிரியர்கள்) – தமிழ் இலக்கியக் கொள்கை (பகுதி 9)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை – 600 113
முதற் பதிப்பு – 1984

27. சுப்பிரமணியப் பிள்ளை. க., – தமிழர் சமயம்
கழக வெளியீடு, சென்னை
இரண்டாம் பதிப்பு – 1953

28. சுவாமி ஆத்மானந்தா., – பகவத் கீதை
கீதாஞ்சலி பிரசுரம்
வட பழனி, சென்னை
முதற் பதிப்பு – 2000

29. சோமசுந்தரனார். பொ. வே., (உரையாசிரியர்) – மதுரைக்காஞ்சி
கழக வெளியீடு, சென்னை
முதற் பதிப்பு – 1962

30. சோமசுந்தரனார். பொ. வே., (உரையாசிரியர்) – நெடுநல்வாடை
கழக வெளியீடு, சென்னை
முதற் பதிப்பு – 1962

31. சோமசுந்தரனார். பொ. வே., (உரையாசிரியர்) – பரிபாடல்
கழக வெளியீடு, சென்னை
முதற் பதிப்பு – 1964

32. சோமசுந்தரனார். பொ. வே., (உரையாசிரியர்) – பெருங்கதை
கழக வெளியீடு, சென்னை
பதிப்பாண்டு தெரியவில்லை

33.	ஞானசுந்தரம். தெ.,	–	வைணவ உரைவளம் ஆழ்வார்கள் அமுத நிலையம் சென்னை, முதற் பதிப்பு – 1981
34.	ஞானசம்பந்தன், அ.ச.,	–	தத்துவமும் பக்தியும் கங்கை புத்தக நிலையம் சென்னை – 600 024 முதற் பதிப்பு –1994
35.	தண்டபாணி. துரை., (உரையாசிரியர்)	–	மணிமேகலை உமா பதிப்பகம், சென்னை– 600 001 இரண்டாம் பதிப்பு – 1997
36.	தமிழண்ணல்	–	தொல்காப்பியம் மீனாட்சி புத்தக நிலையம், மதுரை– 625 001. இரண்டாம் பதிப்பு – 2009
37.	திருச்சிற்றம்பலம். சிவ.,	–	வைஷ்ணவத் தொகையகராதியும் திருத்தலங்களும் கங்கை புத்தக நிலையம் தி. நகர், சென்னை – 600 017 முதற் பதிப்பு – 2004
38.	திருச்சிற்றம்பலம். சிவ.,	–	தஞ்சை மாவட்டத் திருத்தலங்கள் திருவரசு புத்தக நிலையம் தி. நகர், சென்னை – 600 017 முதற் பதிப்பு – 2004
39.	துரை இராசாராம்.,	–	திருமழிசையாழ்வார் வாழ்வும் வாக்கும் நற்பவி பிரசுரம் தி. நகர், சென்னை – 600 017 முதற் பதிப்பு – 2000
40.	துரைசாமிப் பிள்ளை. ஔவை.சு.,	–	புறநானூறு கழக வெளியீடு, சென்னை மறுபதிப்பு – 1964.
41.	நரசிம்மன். பி.ஆர்.,	–	வைணவ மரபும் மெய்ப்பொருளியலும் விஷ்ணு பதிப்பகம் சென்னை – 600 007 முதற் பதிப்பு – 1987
42.	நல்ல பெருமாள். ப.,	–	பிரும்ம இரகசியம் சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் சென்னை – 600 014 முதற் பதிப்பு –1989

43. நாகப்பா நாச்சியப்பன், – திருக்கோயில் வழிபாடு
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை – 600 001
முதற் பதிப்பு – 1991

44. நாகப்பா நாச்சியப்பன்., – தமிழ்நாட்டில் பைரவர் வழிபாடு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை – 600 113
முதற் பதிப்பு – 1999

45. நாகர்கோவில் கிருஷ்ணன்., – பக்தி வளர்த்த பன்னிருவர்
மகேஸ்வரி பிரசுரம்
மயிலாப்பூர், சென்னை
முதற் பதிப்பு – 1989

46. நாராயண வேலுப்பிள்ளை., – ஆழ்வார்களும் பிரபந்தங்களும்
ராஜேஸ்வரி புத்தக நிலையம்
தி. நகர், சென்னை – 600 017
முதற் பதிப்பு – 2000

47. பாலச்சந்திரன். சு., – இலக்கியத் திறனாய்வு
சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம்
சென்னை – 600 014
முதற் பதிப்பு – 1982

48. பாலசுந்தரன். ஆ.தி., – சங்க இலக்கியங்கள் உணர்த்தும்
வழிபாட்டு வரலாறு
மணிமேகலைப் பிரசுரம்
தி. நகர்., சென்னை – 600 017
முதற் பதிப்பு – 2002

49. பாலசுப்ரமணியம். கோ., – நலந்தரும் தமிழகத்
திருக்கோயில்கள்
கழக வெளியீடு, சென்னை
முதற் பதிப்பு – 1998

50. பிள்ளை லோகாசாரியார் – ஸ்ரீவசன பூசணம்
பதிப்பகமும் பதிப்பாண்டும்
தெரியவில்லை

51. புருசோத்தம நாயுடு. பி., – ஆசாரிய ஹிருதயம் மூலம்
(மணவாள மாமுனிகள்
வியாக்கியானம்)
சென்னைப் பல்கலைக் கழகம்
முதற் பதிப்பு – 1965

52. மங்களா முருகேசன். ந.க., – திருவரங்கம்
தென்றல் பதிப்பகம்
தி. நகர், சென்னை – 600 017
முதற் பதிப்பு – 2004

53.	மணிவண்ணன். அம்பை.,	–	சமய இலக்கியமும் கோயிற்கலையும் ஜெ.ஜெ. பப்ளிகேஷன்ஸ் மதுரை –625 007 முதற்பதிப்பு – 2006
54.	மணிவண்ணன். எல்.,	–	பாண்டிய நாட்டு வைணவக் கோயில்களின் கலையும் கட்டடக் கலையும் ஜெ.ஜெ.பதிப்பகம், மதுரை – 625 007 இரண்டாம் பதிப்பு – 2000
55.	மாருதிதாசன்.,	–	தசாவதாரத் தத்துவங்கள் நர்மதா பதிப்பகம், தி. நகர், சென்னை – 600 017 முதற் பதிப்பு – 1982
56.	மீனாட்சி சுந்தரம். கா.,	–	சிலப்பதிகாரத்தில் பாத்திரங்களின் பங்கும் பண்பும் ருக்மணி இராமநாதன் அறக்கட்டளை காரைக்குடி , முதற் பதிப்பு – 2007
57.	முத்துராசன். கு.,	–	தெய்வீகத் திருத்தலங்கள் முல்லை அச்சகம் திருவண்ணாமலை – 04 முதற் பதிப்பு – 1993
58.	முத்துராசன். கு.,	–	பக்தி பரவசமூட்டும் இந்தியத் திருத்தலங்கள் சொர்ணவள்ளி பிரசுரம் சென்னை – 600 033 முதற் பதிப்பு – 2005
59.	லட்சுமணன். இராம., (பதிப்பாசிரியர்)	–	பாரதியார் கவிதைகள் உமா பதிப்பகம், சென்னை – 600 001 ஐந்தாம் பதிப்பு – 2002
60.	விவேகானந்தன். மு.,	–	இலக்கியத்தில் இந்து சமயம் பசுபதி புத்தக நிலையம் சென்னை – 600 094 முதற் பதிப்பு – 1999
61.	விஜயலக்ஷ்மி. ஆர்.,	–	வைணவர்களின் 108 திவ்ய தேசங்கள் மெர்குரிசன் பதிப்பகம் சென்னை 600 073 முதற்பதிப்பு – 2012
62.	வேங்கடசாமி நாட்டார். ந.மு., வேங்கடாசலம் பிள்ளை. ரா., (உரையாசிரியர்கள்)	–	அகநானூறு கழக வெளியீடு, சென்னை மூன்றாம் பதிப்பு – 1954

63.	வேதாந்த தேசிகர்	–	தேசிகப் பிரபந்தம் லிஃப்கோ பதிப்பகம், சென்னை பதிப்பாண்டு – 2009
64.	ஸ்ரீராமலு தேசிகன். ஏ.,	–	கோதையும் கோவிந்தனும் ராம்குமார் பப்ளிகேஷன்ஸ் சென்னை – 600 015 முதற் பதிப்பு – 1981
65.	ஸ்ரீராமலு தேசிகன். ஏ.,	–	தசாவதாரத் தத்துவங்கள் ஆழ்வார்கள் அமுத நிலையம் சோமனேசுரன் பேட்டை சென்னை முதற் பதிப்பு – 1985
66.	ஸ்ரீலஷ்மி நாராயண ராமானுஜதாசன்	–	நாராயணனைப் பாடிய நம் ஆழ்வார்கள் ஆழ்வார்கள் அமுத நிலையம் சோமனேசுரன் பேட்டை சென்னை முதற் பதிப்பு – 1979

அகராதிகள்

1.	------------	–	தமிழ்ப் பேரகராதி, தொகுதி–V சென்னைப் பல்கலைக்கழகம் முதற்பதிப்பு 1934.
2.	------------	–	தமிழ்ப் பேரகராதி, தொகுதி–VI சென்னைப் பல்கலைக்கழகம் திருத்திய மறுபதிப்பு – 1982

First Paper: என்ன ஆச்சரியம்? "Enna Aacharyam !" [1949]

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்



Books Published : 135 + 1 = 136
Papers Published : 200 [Tamil 173 + English 27]
Endowments established: 10
Endowment Lectures : 12
Awards received: 8
Prizes won : 14
Titles conferred : 8

Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)
C] Bharathiyar University - 2019 (leading to PhD)

ISBN 978-81-948697-6-4
9 788194 869764 >

பேராசிரியரின் நூல்கள்

https://archive.org/details/@centenary1916nsr2016

எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]